2000

பெப்ரவரி February

'மிலேனியம்' மலர்

Millennium Edition

இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி

a monthly information digest

தமிழர் தகவல்

TAMILS' INFORMATION

ஒன்பதாவது ஆண்டு பூர்த்தி

Ninth Anniversary



050
தமிழ
SL/PR

எங்கள் சுவடுகளை ஆழமாகவும் நேர்த்தியாகவும் பதிப்போம்!

Growing with the Community ESTD-1991

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

பிரதம ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
நந்தி திரு

உதவி ஆசிரியர்கள்
அன்ரன் கனகசூரியர்
சதி பத்மநாதன்

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல்
நிலையம் - ரொறன்ரோ
&
கத்தோலிக்க
பல்கலாசார சேவைகள்
நிலையம்

வெளியீடு
அகிலன் அசோசியேற்ஸ்
&
தமிழர் தகவல்
ஆய்வுப் பிரிவு

தொழில்நுட்ப உதவி
ஜோன் கிறாப்

ஒளி அச்சு
வடிவமைப்பு
அச்சுப்பதிப்பு
அகிலன் அசோசியேற்ஸ்
(416) 920-9250

பொது முகாமையாளர்
எஸ். ரீ. சிங்கம்

தயாரிப்பு உதவி
விஜய் ஆனந்த்

விநியோக முகாமையாளர்
ப. சிவசுப்பிரமணியம்

விநியோக உதவி
நா. விமலநாதன்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்

Produced by
Eelam Tamil
Information Centre
(ETHIC) of Toronto
&
Catholic
Cross-Cultural Services

Published by
Ahilan Associates
&
Tamil Information
Research Unit (THIRU)

மாதாந்த வெளியீடு
4000 பிரதிகள்

ஆண்டு மலர்
5000 பிரதிகள்

Editor in chief
Thiru S. Thiruchelvam

Associate Editor
Ranji Thiru

Assistant Editors
Anton Kanagasooriyar
Sasi Pathmanathan

General Manager
S.T. Singam

Production Asst.
Vijay Ananth

Circulation Manager
P. Sivasubramaniam

Circulation Assts.
N. Vimalanathan
Pon. Sivakumaran
N. Kumaradasan

Typesetting
Layout & Design
Ahilan Associates

Technical Support
Haran Graph

Printers
Ahilan Associates
(416) 920-9250

PUBLISHED
MONTHLY
4000 Copies

Anniversary Issue
5000 Copies

உங்களிடமிருந்து உங்களுக்கு

To You From You

புத்தாயிரம் ஆண்டின் புலர்வு, கனடாவில் தமிழர் தகவலின் பத்தாவது ஆண்டின் பிறப்பாகவும் அமைந்துள்ளது.

மட்டற்ற மகிழ்வான செய்தி இது.

ஈழத்தமிழர்களின் புலப்பெயர்வு கால் நூற்றாண்டினைக் கொண்டது.
உலகில் எங்கெங்கெல்லாம் மனிதர்கள் வாழக்கூடிய வசதிகள் இருக்கின்றதோ, அங்கெல்லாம் ஈழத்தமிழர்கள் வாழுகின்றார்கள்.

ஒரு வரலாற்றுச் சாதனை இது.

சுமார் ஆறு லட்சம் ஈழமக்கள் வெளிநாடுகளில் புகலிடம் பெற்றுள்ளனர்.
இவர்களுள் சுமார் ஐந்திலொரு பங்கினர் கனடாவில் வாழுகின்றனர்.
இதனால் புலம்பெயர் தமிழர்களின் தலைநாடாக, அல்லது இரண்டாவது தாயகமாக கனடா மாற்றம் பெற்றுள்ளது. 'குட்டித் தமிழீழம்' என்றாலும் தவறில்லை.

கனடிய அரசாங்கங்களினதும், கனடிய மக்களினதும் தாராள மனசுக்கு நாம் நன்றி கூற வேண்டும்.

கடந்த 'ஆண்டு மலரில்' குறிப்பிட்டது போன்று, புதிய புத்தாயிரம் ஆண்டினை வரவேற்க நாம் கனடாவில் இருப்போம் என்று கனவிலும் நினைத்திருக்கவில்லை.
இன்று - எங்கும் எல்லாவற்றிலும் ஈழத்தமிழர் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.
எங்கள் கலை, கலாசாரம், பண்பாடு, சாப்பாடு, சம்பிரதாயம், பழக்க வழக்கங்கள் என்று அனைத்துமே சர்வதேசமும் வியாபித்து நிற்கின்றன.

'நாம்' -
யார் நாம்?
இரண்டு அல்லது மூன்று பேரின் தகவற் கட்டுரைகளுடன் பத்தாண்டுகளுக்கு முன்னர் பிரசவமான தமிழர் தகவல், இன்று நூறுக்கும் அதிகமானவர்களின் களமாகி ஒரு பரந்த விருட்சமாகியுள்ளது. விழுதுகளும், கிளைகளும் அதன் வளர்ச்சியின் சின்னங்கள்.

டாக்டர்கள், வழக்கறிஞர்கள், பத்திரிகையாளர்கள், பல்கலைக் கழகத்தினர், இலக்கியவாதிகள், கல்விமான்கள், வர்த்தக சமூகத்தினர், சமூக சேவகர்கள், இளம் பராயத்தினர் என்று அனைவருமே தமிழர் தகவலைத் தங்கள் வசமாக்கி, மக்களின் பயன்பாட்டுக்கு வளமாக்கி வருகின்றனர்.

மொத்தத்தில், சமூகத்திலிருந்து பெறுபவைகளைச் சமூகத்துக்கே தருகின்றோம். சமூகத்தின் உதவியுடன் சமூகத்துக்கான உதவியாக தமிழர் தகவல் மலர்கின்றது. இல்லையா?

பத்தாவது ஆண்டில் பாதம் பதித்துள்ளோம் என்பது ஆழமான மகிழ்வினைத் தருகின்ற போதிலும், எங்கள் எதிர்காலம் புதிய

The new millennium has begun with Tamils' Information celebrating its 10th year of publication. This is indeed an occassion of great joy.



The emigration of Eelam Tamils has been going on for almost a quarter century and they have inhabited almost every country in the world today. This is of historic significance.

Almost 600,000 Eelam Tamils now live outside our homeland and one fifth of them live in Canada. This has resulted in Canada becoming the primary refuge or second homeland of us. We can even call it a mini 'Tamil Eelam'.

We owe a deep debt of gratitude to the Canadian governments for their generosity. As I mentioned in the last anniversary issue we did not even dream of living in Canada at the turn of the millennium.

The name Eelam Tamils is found in every sphere of activity around the world. Our arts, culture, traditions, norms, and even food are now internationally well known.

"We" - Who are we?
Tamils' Information which was born ten years ago with a few contributors, as today grown to accomodate more than one hundred. This is now a big tree with branches all over the Tamil homes.

Tamils' Information is now a forum for doctors, lawyers, educators, journalists, writers, academicians, community workers, business entrepreuners and youth. The community is immensely benefited.

What is received from the community is given back to the community. Tamils' Information is of the community for the community.

Although we are glad to be in the tenth year, we are well aware of the challenges ahead in the new century.

நூற்றாண்டில் பல சவால்களைக் கொண்டது என்பதையும் நாம் உணராமலில்லை.

இதனால், எங்கள் பாதை புதிய நெடுஞ்சாலைக்குத் திருப்பப்பட்டுள்ளதை உங்களால் அவதானிக்க முடியும். பக்கங்களைத் தட்டினால். இதனைத் 'தகவல் நெடுஞ்சாலை' (Information Highway) என்பதே சரி.

இது ஒட்டகத்தின் பயணம்.
பாதையைச் சரியாகச் செப்பனிட்டு நேரான இலக்குடன் ஆரம்பிக்கப்பட்ட பயணம். அதனால்தான் அனைவரையும் எங்களுடன் வாருங்கள் என உரக்க அழைக்கின்றோம்.
கதவுகள் திறந்திருக்கின்றன.
புதிய காற்றுக்காக ஜன்னல்களையும் திறந்து வைத்துள்ளோம்.
மலரின் உள்ளே புகுந்தால் அதனை நுகர்வீர்கள்.

'மிலேனியம்' எனப்படும் புத்தாயிரத்தின் முதல் ஆண்டான இந்த வருடம், 'சர்வதேச நன்றி கூறும்' ஆண்டு.
வாருங்கள்! எமக்குப் புகலிடம் தந்து வாழ்வளித்த கனடாவுக்கு நன்றி கூறுவோம்.

எங்கள் சுவடுகளை நேர்த்தியாகவும் ஆழமாகவும் பதிப்போம்.
இன்றைய பாதப் பதிவு சரித்திரத்தில் முத்திரையாகட்டும்.
அதற்காகவாவது எங்கள் கரங்களை இணைப்போமா?

திரு எஸ். திருச்செல்வம்
பிரதம ஆசிரியர்

When surfing our pages you will notice that we are already at the turning point in our path. You can consider this as our 'Information Highway.'

Ours is a Caravan journey.
The path has been well planned and constructed to move smoothly.
We invite everyone to join us.
The doors are always open.
The windows are also opened for fresh air.
You can feel the breeze once you get in.

The first year of this millennium - year 2000 - is the "International year of thanksgiving". Please join us to say a 'big thank' to Canada.

Let us print our steps deep and strong.
Let today's foot prints be a giant leap in history.
Shall we hold our hands together?

Thiru S. Thiruchelvam
Editor in Chief

வெளியீட்டுக் குழு Publishing Team











நஞ்சி திரு
அன்ரன் கனகசூரியர்
சசி பத்மநாதன்
எஸ். ரி. சிங்கம்
விஜய் ஆனந்த்
பரமு சிவசுப்பிரமணியம்
நா. விமலநாதன்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாசன்
Ranji Thiru
Anton Kanagasooriyar
Sasi Pathmanathan
S.T. Singam
Vijay Ananth
N. Vimalanathan
Pon. Sivakumaran
N. Kumaradasan

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
Iswarah Kumar
திகதி 08.05.2002

தகவல் விருதும் தமிழர் கௌரவமும்

இந்த நூற்றாண்டின் முடிவும் அடுத்த நூற்றாண்டின் ஆரம்பமும் அதனைத் தொடர்ந்து வரும் அடுத்த சில நூறு ஆண்டுகளும் தமிழின் பெருமையையும் தமிழர்களின் சாதனைகளையும் - திறமைகளையும் உலகிற்கு எடுத்துச் செல்லும் புது யுகமாகவே அமையும் என்ற நம்பிக்கையின் வெளிப்பாடாகக் கனடாவில் கடந்த எட்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வரும் "தமிழர் தகவல்" விருது வழங்கும் சிறப்பு விழா நிருபித்து வருகிறது.

இலங்கையிலிருந்து உயிர் வாழ்தல் வேண்டி உலக நாடுகளைப் புகலிடமாகக் கொண்டு புறப்பட்ட தமிழர் கூட்டம் உலகப் பந்தின் பரந்துபட்ட அத்தனை நாடுகளிலும் வாழ்ந்து வருகிறார்கள். அவ்விதம் வாழும் நாடுகளுள் கனடியத் தமிழர்கள் ஏனைய பிறநாட்டுத் தமிழர்களுடன் ஒப்பீடு செய்யும் போது பல்வேறு வகையிலும் முன்னணித் திலகங்களாகவே பரிணமித்து வருகிறார்கள்.

'தமிழர் தகவல்' இதழில் குறிப்பிட்டது போல் சுமார் இரு நூறு இனங்கள் உலகின் மூலை முடுக்குகளிலிருந்தும் இங்கு வந்துள்ளனர். 130க்கும் அதிகமான மொழிகள் கனடாவில் பேசப்படுகின்றன. இந்த மொழிகளுக்குள்ளும் இனங்களிற்குள்ளும் தொன்மையும் பெருமையும் வாய்ந்த மொழி பேசும் இனமாகிய தமிழினம் மெல்ல மெல்ல தனது தனித்துவத்தை இங்கு தடம் பதிக்க ஆரம்பித்துள்ளது.

கல்வி, கலை, இலக்கியம், தொழில் நுட்பம், அறிவியல், தொழில் வளர்ச்சி, அரசியல், ஆன்மீகம், பொருளாதார முன்னேற்றம், வெகுஜனத் தொடர்பு, விளையாட்டு என்று இன்ன பிற துறைகளிலும் மாநில அளவிலும் தேசிய அளவிலும் அடையாளம் காணக் கூடியதாக வளர்ச்சியுறுகிறார்கள்.

'கனடியன் தமிழ்' (Canadian Tamils) என்று ஒரு புதிய சந்ததி இங்கு உருவாகிறது. அவர்களுடைய சமூகப் பங்கு தேசிய நீரோட்டத்தில் சங்கமமாவதற்கு எவ்வளவு அவசியம் என்றும் - எங்களுடைய கட்சியின் ஸ்திரமான ஆட்சிக்கு அல்லது அரசியல் மேம்பாட்டிற்கு "உங்கள் பங்கு" மிக மிக முக்கியம் என்றும் மாநில- மத்திய உள்ளூர் ஆட்சிப் பிரதிநிதிகள் அக்கறை காட்டத் தொடங்கியுள்ளனர்.

இத்தகைய கவனிப்பிற்கும் - சமூக அந்தஸ்திற்கும் அடிகோலிய முதலாவது அறிமுக விழாவாக எட்டு ஆண்டுகளுக்கு முன் தோற்றுவிக்கப்பட்டதே "தமிழர் தகவல் விருது" வழங்கும் விழாவாகும்.

"....இப்படியெல்லாம் நடக்குமென்று பத்தாண்டுகளுக்கு முன்னர் நாம் நினைத்திருப்போமா? என்று ஆண்டு மலரில் தகவல் ஆசிரியர் ஆச்சரியத்துடன் கேட்பது ஆச்சரியமாகத்தான் உள்ளது.

நாங்களே எங்களைப் பார்த்து ஆச்சரியப்படத் தக்க வகையில் வளர்ந்து வருகிறோம்.

கனடிய அரசும் - ஏனைய பிற இன மக்களும் எங்கள் தகைமைகளை - திறமைகளை - வளர்ச்சிகளைப் பார்த்துப் பெருமைப் பட்டும் - அங்கீகாரம் வழங்கியும் கௌரவிப்பதைப் பார்க்கும் போது,

....இதற்கெல்லாம் அத்திவாரம் இட்டு தமிழர்களின் தன்னம்பிக்கையைத் தட்டிக் கொடுத்து 'தலை நிமிர்ந்த இனம் தமிழினம்' என்று புகலிட மண்ணிலும் புகழ் பரப்ப வைத்த தமிழர் தகவல் நிறுவனத்தைத் தமிழரெல்லாம் பெருமையுடன் பாராட்டுவோம்.

சுருக்கமாகச் சொல்வோமாகில் இங்கு கனடாவில் வாழும் தமிழர்களின் உயர்விற்கும் வளர்ச்சிக்கும் அளவுகோலாகத் திகழ்வது 'தமிழர் தகவல்' ஆண்டு விழாவாகும்!

தமிழர்கள் மாத்திரமல்ல பிறமொழி இன மக்களும் கூட இன்று 'தமிழர் தகவல் விருது' பெறுவதை மிகக் கௌரவமாக மதிக்கத் தொடங்கியுள்ளார்கள் என்பது தேசிய அளவில் எமது இனத்தின் கௌரவத்தை மேன்மேலும் உயர்த்தியுள்ளது என்பது தெளிவாகின்றது.
எனவே தான் தமிழர்களின் கௌரவத்தின் அடையாளச் சின்னமே 'தகவல் விருது' என்று நாம் பெருமை கொள்கிறோம்.

நன்றி: 'வாசகன்', பெப்ரவரி 1999
ஆசிரிய தலையங்கம்

"Information" Award and "Tamils" Honour

The Annual "Tamils' Information" Awards Ceremony, which is in its eighth year now, has served, and will continue to serve as a beacon for, not just during the latter part of this century or the beginning of the next, but for many more centuries to come, the pride, achievements, and talents of the Tamil people.

Tamil people who had to flee for their lives from Ceylon are now domiciled in almost all the countries in the world. When compared to the Tamils settled down in other countries, Canadian Tamils are shining like stars in various fields.

According to "Tamils' Information" about two hundred different races of people from almost all the corners of the world have made this country their home. More than 130 different languages are spoken here. The Tamil race, which has the most ancient culture and heritage among these groups, is well on its way in establishing its uniqueness in this country.

The Tamils have established their presence in all the fields like education, art, literature, technology, commerce, politics, spirituality, economic advancement, mass media, and sports at the regional and national levels.

Politicians from all three levels of government - municipal, provincial and federal - are now seriously engaged in soliciting the support of this new generation of "Canadian Tamils" to strengthen their political base and form stable governments.

It was with this object in mind, to attract attention and increase our profile, that the first "Tamils' Information Award" ceremony was hosted eight years ago. "Would we have thought ten years back, that this situation would have been possible?" asked the Chief Editor in the Anniversary Issue of "Tamils' Information." It is surprising, but true, we have grown to the extent that we ourselves are surprised at our own growth.

The extent to which the Canadian government and other ethnic groups have come to recognise our leadership qualities, talents, and advancement, places an onus on us to praise with pride "Tamils' Information" for laying the foundation stone for our selfconfidence, which, in turn, make it possible for our community to stamp its presence in this adopted country of ours. In short, "Tamils' Information Award" ceremony serves as the instrument to measure the growth and advancement of the Tamil community living in Canada.

The extent to which the prestige of our community had increased can be judged from the finding that even members of other racial groups consider it an honour to receive the "Tamils' Information Awards." For these reasons, we take pride in calling "Tamils' Information Awards," the symbol of prestige of the Tamils.

Courtesy: *Vaasakan*
Editorial, Febuary 1999

Thanksgiving, Peace & Culture

There are two words I often reflect on: *peace* and *thanksgiving*. It is interesting to note that the United Nations has declared the year 2000 as both the International Year for Thanksgiving and the International Year for the Culture of Peace.

I find the term "Culture of Peace" interesting. When I ask people how they define peace, the usual response is "the absence of war". In a recent discussion with some newcomers they repeated that they are extremely grateful to be in Canada because it is such a peaceful country. There are numerous awards nationally and internationally given to people who promote peace. Usually these people have contributed to bringing two opposing sides together to negotiate the ability of communities to live together harmoniously, or they have defended the rights of those who are oppressed. I admire these leaders (both famous and not so famous) for the wonderful contributions they have made, but still the question remains if this is all peace is about.

Further reflection leads to the idea that peace should not be addressed as the absence of war or the negotiation of agreements to treat each other with respect. The United Nations message perhaps is an attempt to help us think differently. A culture denotes a whole way of being both personally and collectively. It challenges us to address our value systems, our attitudes and our beliefs. It puts responsibility on each one of us.

A personal culture of peace calls each of us to look at the way we live, at our relationships with those around us - our family, friends, neighbours, people with whom we work, and even total strangers.



Miranda Pinto
Regional Director
Catholic Cross-Cultural Services

If Canada is to be a place where a culture of peace thrives, each person must play an active role in promoting collective responsibility, access and equity principles, and antiracism. This would include looking within our own families to see if women, seniors and children are being treated with dignity. It would also mean that as community people we find ways to truly address the common good (socially and economically) and find time to listen to one another, to hear the other side of the story, and courageously make the changes necessary.

Yes, as with many people, I too am grateful to be in Canada, a country where there is such great potential to truly show the world what a national culture of peace could look like. It would be thanksgiving

....to the First Nations and Inuit people who continue to teach us that heritage is important to our identity, as well as to remind us to be one with, and care for, the land and environment,

....to the immigrants who have come from every corner of the world, with their talents and their dreams which they bring to share in the building of this nation,

....for freedom of speech and gathering without fear of persecution,

....for the right to vote and in this way participate in decision making regarding our way of life,

....for the full participation of every person in the social, economic, political aspects of life in Canada

....for the richness of diversity within our communities where differences are respected and sharing of cultural practices and value systems are encouraged.

....and for so much more.

As we begin a new century it is my dream that every one of us, regardless of where we have come from, or how long we have been in the country, find real ways in which we will take personal responsibility for ensuring that we help build a culture of peace in Canada, and that our thankfulness for this will help us to look beyond Canada and contribute to the development of a culture of peace in lands that have been and continue to be fragmented by violence.

சர்வதேச நன்றி கூறும் ஆண்டு
சர்வதேச சமாதான கலாசார ஆண்டு

ஒவ்வொரு ஆண்டினையும் ஒவ்வொரு பெயரில் சர்வதேச ஆண்டாகப் பிரகடனம் செய்வது ஐக்கிய நாடுகள் சபையின் வழமை. அனைத்துலக மக்களும் ஒரு அணியில் திரண்டு வாழவேண்டும் என்ற நோக்கத்துடனேயே இந்தப் பிரகடனம் செய்யப்படுகின்றது. கடந்த நூற்றாண்டின் இறுதி வருடமான 1999ம் ஆண்டினைச் சர்வதேச முதியோர் ஆண்டாகப் பிரகடனம் செய்தமையையும், உலகெங்கும் இந்த விழா மிகச் சிறப்பாக நடைபெற்றமையையும் நாமறிவோம். இந்தத் தொடரில் புதிய புத்தாயிரம் ஆண்டின் (மிலேனியம்) முதல் வருடமான இந்த ஆண்டினை - 2000ம் ஆண்டு - இரண்டு கொண்டாட்டங்களுக்குரிய ஆண்டாக ஐக்கிய நாடுகள் சபை பிரகடனம் செய்துள்ளது. அவை, சர்வதேச நன்றி கூறும் ஆண்டு, சர்வதேச சமாதான கலாசார ஆண்டு (International Year of Thanksgiving & International Year of Peace & Culture) என்பவை. உலகெங்கும் சமாதானமும், கலாசார ஒற்றுமையும் திகழ வேண்டும் என்பதுடன், ஒருவருக்கொருவர் நன்றி சொல்பவர்களாகவும், சர்வதேச சமூகத்தில் ஒருவரையொருவர் மதித்து நன்றியுடன் வாழப் பழக வேண்டுமென்பதற்காகவுமே இந்த ஆண்டு இரண்டு கொண்டாட்டங்களுக்குரிய ஆண்டாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. தமிழினம் நனறி மறவாத இனமென்பதை அனைத்துச் சமூகத்தனருக்கும் தெரிவித்துக் கொள்ளவும், புகுந்த நாடுகளுக்கு விசுவாசத்தைத் தெரிவிக்கவும் இந்த ஆண்டு அருமையான ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது.

மானிட வாழ்க்கையில் எந்த ஒரு செயலையும் திறம்பட நடத்துவதற்கு தலைமைத்துவம் முக்கிய பங்கினை வகிக்கின்றது. தூர நோக்குடைய தலைமைத்துவம் இருந்தால் தான் குடும்பமோ, சமுதாயமோ, நாடோ நல்ல நிலைக்கு முன்னேற முடியும். இதை நாங்கள் கடந்த காலங்களிலிருந்து தெளிவாக அறிய முடியும். குறிப்பாக மேற்கு நாடுகளில் பொதுவாக எல்லா விடயங்களிற்கும் தலைமைத்துவத்திற்கு முன்னுரிமை கொடுக்கின்றார்கள். இதை நாங்கள் அவர்களின் பொருளாதார நிலையின் மூலம் அறிந்து கொள்ளலாம். இரண்டாம் உலக யுத்தத்தின் பொழுது ஜப்பான் பாரிய அணுகுண்டுத் தாக்குதலுக்கு உள்ளாகியது. இருந்தும் தற்பொழுது அவர்களின் பொருளாதாரம் தொழில்நுட்பம் எல்லாம் மற்ற நாடுகளிலும் பார்க்க மேலோங்கி நிற்கின்றது. அவர்களது சிறந்த தலைமைத்துவமும் கடின உழைப்பும் தான் இதற்கு மூலகாரணங்கள். பொதுவாக கனடாவில் எங்கு வேலை தேடி நேர்முகப் போட்டிக்குச் சென்றாலும் அவர்கள் எதிர்பார்க்கும் பலம், பலவீனங்களில் தலைமைத்துவம் முதல் பட்டியலில் இருக்கின்றது. இதனால் இத் திறனை நாங்கள் சிறுவயதில் இருந்தே வளர்த்துக் கொள்ளுதல் வேண்டும். ஏனெனில் இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள்.

மாணவர்களுக்கு நல்ல தலைமைத்துவம் இருந்தால் தான் அவர்களது குறிக்கோளை சுலபமாக அடையலாம். பொதுவாக தலைமைத்துவம் வீட்டிலேயே தொடங்குகின்றது. குடும்பத்தின் நலன், சந்தோஷம், முன்னேற்றம் போன்றவற்றுக்குத் தந்தை அல்லது தாய் குடும்பத் தலைவர்களாக செயற்படுகின்றனர். கல்லூரி வாழ்க்கையிலும், சமூக வாழ்க்கையிலும் பலதரப்பட்ட நிலைகளில் இத் தலைமைத்துவம் முக்கிய பங்கை வகிக்கின்றது.

தற்கால நவநாகரிக உலகில் பல்லாயிரக் கணக்கானோர் வெவ்வேறு நிலைகளில் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள் அல்லது நியமிக்கப்படுகின்றார்கள். இப்படியான தலைவர்கள் நல்ல குணாதிசயங்களை பின்பற்றுபவராக இருத்தல் மிக முக்கியம். ஒரு தலைவனுக்கு அல்லது தலைவிக்குக் கீழ்வரும் திறன்களும் குணாதிசயங்களும் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தன்னைப் பற்றிய அறிவு (Self Knowledge), செய் தொழில் சார்ந்த அறிவு (Knowledge relating to his work), சமூகத்தைப் பற்றிய அறிவு (Knowledge of social environment) போன்ற அறிவுகளும், தன்னலமற்றவனாக சமூக நலனுக்காகவும், நாட்டிற்காகவும் தன்னை அர்ப்பணிப்பவனாக இருத்தல், அவர்கள் தலைமையில் நடைபெறும் எல்லா வைபவங்களுக்கும் பின்னால் நின்று அதிகாரம் செய்வதை தவிர்த்து முன்னின்று தலைமை வகித்தல், அவரது நடவடிக்கைகள் செயல்கள் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக இருத்தல், ஒரு சிறந்த தலைவன் மக்களது சமூக நலனை கருத்தில் கொண்டு செய்யும் சேவையின் மூலம் நன்மதிப்பை பெறுதல் போன்ற திறன்களும், ஒரு தலைவனுடைய சிந்தனைகளும், செயல்களும் ஆசாபாசம், கோபம், ஆணவம், பொறாமை அற்றனவாக இருத்தல் போன்ற குணாதிசயங்களும் நல்ல தலைவனாக நடுநிலைமை வகிக்க உதவி புரியும்.

90 சதவீதமான தலைமைத்துவம் சுய பழக்கவழக்கத்திலேயே தங்கியுள்ளது. "மன்னன் எவ்வழி, மக்களும் அவ்வழி" என்பதற்கிணங்க மன்னன் சரியான பாதையில் சென்றால் தான் மக்களும் சரியான பாதையில் செல்வார்கள்.

தலைமைத்துவம்
Leadership

அடுத்து தலைவன் செய்யும் காரியங்களுக்குரிய ஒழுங்குகளை முற்கூட்டியே ஒழுங்கு செய்வது அவசியம். மேலும் அத் திட்டங்களை நிலைநாட்டுவது மிக மிக அவசியம். ஒரு தலைவன் ஒரு தனி மனிதனாக இயங்கினால் அவருக்கு அளித்திருக்கும் வேலை பற்றித் தெள்ளத் தெளிவாக அறிந்திருத்தல் வெண்டும். கொடுத்திருக்கும் வேலையின் குறிக்கோளுக்கு ஏற்றவாறு தேவையான மூலதனங்களை ஒழுங்கு செய்தல் அவசியம். நடந்து கொண்டிருக்கும் வேலையின் தராதரங்களைக் கையாள்வதும் ஒரு தலைவரின் கையில் தான் உள்ளது. ஒரு குழாமிற்குத் தலைவனாக இருந்தால் அத் தலைவன் அக் குழாமிற்கு ஒரு முன்னுதாரணமாக இருத்தல் வேண்டும். ஒழுக்கங்களை நிலைநாட்டுவதும் பிழைகளை கண்டிக்கக் கூடியவராகவும் ஊக்கம், உற்சாகம் ஊட்டி, தக்க உப தலைவர்களை நியமித்து, தேவையான பயிற்சியளித்து அங்கத்தவர்களுக்கிடையேயான

அமிதா செல்வநாயகம்
Amitha Selvanayagam
யோர்க் பல்கலைக் கழகம்



தொடர்புகளை ஒருங்கமைத்தல் வேண்டும்.

இவ்வாறான திறன்களும் குணாதிசயங்களும் கொண்ட தலைவர்களால் மட்டும் தான் குடும்பத்தை, சமூகத்தை நாட்டை முன்னேற்ற முடியும். உதாரணமாக காந்தியை எடுத்துக் கொண்டால் அவருடைய வாழ்க்கை தேசபற்றும், ஆன்மீகத் தொடர்புடையதாகவும், மற்றவர்களுக்கு இன்னா செய்யாததாகவும், அகிம்சையை கடைசிவரை கடைப்பிடித்ததனாலும் அவர் இந்தியாவிற்குச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தார். அவரின் குறிக்கோள் இந்தியாவின் சுதந்திரம். அதற்காகப் பாடுபட்டார். பெற்றுக் கொண்டார். இவரின் செயல் ஓர் நல்ல தலைமைத்துவத்திற்கு எடுத்துக் காட்டு.

சிலர் தலைமைத்துவத்தையும், முகாமைத்துவத்தையும் ஒன்று சேர்ப்பதுண்டு. ஆனால் இவ்விரண்டும் இருவேறு விடயங்கள். முகாமைத்துவம் ஒரு வேலையின் கடைசி நிலையை நோக்குவது, தலைமைத்துவம் ஒரு வேலையின் முதன்மை நிலையை நோக்குவது. முகாமைத்துவம் ஒரு வேலையைச் சரியாகச் செய்வது. ஆனால் தலைமைத்துவம் ஒரு சரியான வேலையைச் செய்வது. (Management is doing the things right, but the leadership is doing the right things" said by Peter Ducker)

"I want you to be leaders to protect the world. Leaders like lions - self reliant, courageous, majestic and just. Lion is the king of animals and I want you to be king among men" said Sai Baba.

இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள். இப்படியானவர்கள் நல்லவர்களாகவும் நேர்மையானவர்களாகவும் இருந்தால் தான் ஒற்றுமையும் அமைதியும் சந்தோஷமும் இச் சமுதாயத்தில் ஏற்படும் என்பது திண்ணம்.

Manivillie Kanagasabapathy
1st Year student, York University



Lessons for Life

When I was first asked to write this article I did not know what to write about. I asked everyone, from my father to friends, for ideas until someone told me to write about what I know. The only thing I know really well is... my history and myself. So, I thought that I would write about a few lessons that life has taught me during the short time I have been on Earth.

The first thing I ever learned in this life-time is that nothing is constant and unchanging, everything eventually comes to an end. So, do what you always wanted to do without regrets and never wonder "what-if." I always believed that if you knew the world was ending tomorrow could you look at yourself in the mirror and say I accomplished everything I wanted to do. Can you honestly say that you will die with no regrets, because for all you know today, could be your last day (God forbid). Also tell those you love how you feel about them or show them through your actions, because you never know when they will be taken from you. The next lesson I learned is that everyone gets his or her just desserts, sooner or later. This philosophy keeps me from getting bitter and wanting to get revenge on those who have harmed my family and me. It is the only way to keep your soul free of resentment and pain, to keep your heart clean and happy. Even though you might not be able to see it or feel vindicated, nature has a way of balancing the good and the bad. that is, returning to you what you have given to others, whether it is love or hate, pain or laughter.

Another lesson I learned is that the same respect you give to others is the respect that is returned to you. Never assume that you are due respect just because of your station is life. That kind of respect is fleeting and is only defined by your bank balance. True respect is given to you as a person and not to your notoriety. The best way to test this is to see how a stranger you have just met treats you, before they know who you are. This way you will know if you are a person who has earned respect in the eyes of others. The next thing I learned is about the principle, Keep your friends close and you enemies closer. For me, this theory is twisted around. Surround yourself with your friends and family and as for your enemies...well...send them to Antarctica...New Zealand...Anywhere that is away from your thoughts. What kind of life do you have if you can't trust those closest to you and are forever worrying who is going to back-stab you next. You only have a short time on Earth and that should not be spent worrying about what your so-called friends are planning now. Your friends should lessen the burdens you carry and help you with your worries not increase them.

Another lesson is that though hard work and commitment can get you a country, a little bit or risk can get you the world. If you are committed enough and willing to work for what you want you will get it. However if you want better that what you ever dreamed then you have to take chances and take a risk. I mean where would Microsoft be if Bill Gate hadn't taken a chance and struck out on his own. One of the most important lessons I learned is to have a sense of humour about life. Don't take yourself seriously and be able to sit back and enjoy life without making it a chore. If you have the ability to laugh about yourself and your mistakes then you are well ahead of everyone else in the world.

Now, the next few lessons are perhaps the most important lessons that I have learned. The first of which is to surround yourself in love. Let others worry about things like hate, worry, pain and fear. If you are loved and willing to open your heart to other, you have accomplished the greatest gift that god ever, and I mean ever bestowed on mankind. Don't let suspicion and mistrust ruin your life. If you can love totally and completely nothing will cause you pain. Shakespeare once said that in love, death has no domain. Those you love and open your heart too will live inside you forever; you will always carry a piece of them in your heart. Respect your parents and others but know when to stand up for yourself. Don't let anyone tell you who you are and what you should be. Treat others with courtesy but that does not mean you let them walk all over you. All of these lessons are useless if you don't believe in yourself and respect yourself. Also know when to say, "I'm sorry," when to forgive and when to forget. Those who hold are grudge are those who are doomed to go through life alone and bitter. These are the things that will help you the most through life.

The reason I wrote this is not to force my philosophy on you or to sound as if I know all the answers...I don't even know all the questions. However these things have helped me whenever I felt frustrated and backed into a corner and so I thought I would share them with you. In this modernistic era of the new millennium it is important to remember the lessons of our past. Read this and remember this article or read it and immediately put it down, and forget about it, It doesn't matter because in the end it is your choice, your life and your lessons.

புதிய பிரஜாவுரிமை சட்டம் ஏப்ரலில் அமலாகும்?

கனடிய புதிய பிரஜாவுரிமைச் சட்டத்தினை இந்த வருடம் ஏப்ரல் மாதத்திலிருந்து நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கைள் எடுக்கப்பட்டுள்ளது. சட்ட நகல் ஏற்கனவே முதலாம் வாசிப்புக்காக நாடாளுமன்றத்தில் அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சகல அரசியல் கட்சிகளும் இந்தச் சட்டத்தற்கு ஆதரவாக வாக்களிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

Why you need to get involved in politics!

Harini Sivalingam
Second year Political Science student
University of Toronto

"The people reign in the American political world as the Deity does in the universe. They are the cause and the aim of all things; everything comes from them, and everything is absorbed in them." Alexis De Tocqueville in *Democracy in America*

Although Tocqueville was commenting on American democracy in 1837, his observations are relevant to Canada heading into the 21st century. In any free democracy it is the people that ultimately rule. Government is created for the people to govern their lives peacefully. However, we seldom think of ourselves at the forefront of politics. People often ask themselves why should I get involved in politics, it has nothing to do with me? They figure that what goes on in meetings among typically rich, powerful white men, has no effect on their daily lives. More severely they feel that they have no say or control over what happens. It is precisely for this reason that we must become involved in politics. It's one of these catch 22 circles, because not feeling affected cause on to not be involved, yet not being involved causes one to feel like one will not be affected. We must break this cycle and take control of how our lives are governed.

Move importantly, the tendency to feel that politics is not relevant to our lives is wrong and misplaced. Politics is everywhere and all around us, greatly affecting every aspect of our lives, from fundamentals like education and healthcare to daily life situations like driving and shopping. To not be affected by politics, one must try very hard to be secluded and isolated from the real world, and even then politics cannot be completely abolished from one's life. It is almost impossible to not be effect by politics as politics is engrained in our society and the way of life. Then why is it that so little of us actually pay attention to politics, and even less of us an active participants in politics?

Governments in liberal democracies are heavily invest in the lives of their citizens, but in most cases their citizens are not as interested in what is happening in public administration. Participation in politics is essential to a healthy democracy. In order to understand the role that government plays in our lives we must pay attention to what the government is doing. What our children learn in school, how our elderly parents are treated, how much on our paycheck remains in our pockets at the end of the day and how our bills will be paid at the end of the month if God forbid we loose our job, are all decided by publicly elected and accountable officials. So much of the quality of our lives depend on the decision that are being made in Ottawa, Queens Park and City Hall.

It is especially important for minority groups to be represented and involved in politics. Based on the 1996 Census from Statistic Canada, visible minorities represent 11% of the national population, 10% of the population of Ontario and 32% of the population of Toronto. More striking is that visible minorities represent 50% of the eligible voters in the GTA area (Toronto Star, May 17,1999). Yet, minority groups are severely and constantly under represented in the political sphere, despite the amount of potential political power they have. This is not because of a lack of political power, but rather a lack of morale and a feeling that we not a part of the political process.

The Tamil community is vastly growing and becoming the fastest growing ethnic community in the GTA. There are over 100,000 Tamils living in the GTA alone, and Tamil is the 14th most spoken language in Toronto. Thus, the amount of political clout, we as a group, hold is immense and needs to be exercised. It is time to realize that we are a political power to contend with. As Tamil Canadians it is our duty to become involved in the politics of our nation and represent our fundamental interests. Issues that are of concern to us will not be heard unless we are actively involved in the political process. We must have access to the politicians, and the only way to do that is to become actively involved in politics. Our voice must be heard and it is up to each one of us to ensure that our voice is loud and carried forward.

Becoming involved in politics has many degrees from simply writing a letter to the editor to running for office. It doesn't matter what an individual chooses to do, as long as you are intellectually and actively engaged in politics. At the very least we should be communicating with our MP's, MPP's, city council members and school board trustees. They are a valuable resource to us as citizens. they can assist you with problems you may be having with the various levels of government. Even if you don't have any pressing problems, it is still important to talk to you political representatives about the issues that are of concern to you. It is their job to listen to you and carry your voice further, and if you feel that your voice is not being represented, then remember that during election time when you exercise your voting power.

Voting is the most fundamental aspect of participation in politics and probably the most important and least time consuming. It is a way for you to ensure that your voice is heard and that your views are represented. Voting gives you the power, and armed with public opinion, you call the shots. It is your time to evaluate the political situation and make a difference. You may be only one vote, but every single vote counts in the end. It is this kind of participation that is essential to the healthy workings of democracy.



Joining a political party is another way to get involved in politics. Local riding associations often seek members to help organize events and run campaigns. Often members have considerable say in discussing policy issues that make up the political party's platform. Political parties also have social elements to them, where you can mix and mingle with people of various backgrounds and ranks. There are a number of activities that you can do in political parties. Attending policy conventions, volunteering on campaigns, and most importantly selecting the leaders of the party.

Campaigning in elections is a fulfilling way of becoming involved in the political process. You are helping to promote a deserving person to be elected into office to represent your needs and interests. If you really feel like you want to get into the heart of politics, the greatest contribution one can make is to actually run in an election, whether it be school board trustee, municipal councilor, provincial MPP or federal MP.

The most important job that we all have is that of being a citizen. To be a responsible citizen, we must each be actively involved and participate to our fullest extent in the politics of our country. Only by being aware of what is going on in the world around us are we able to fulfill this responsibility. In order to stop being marginalized by the political system, we need to become a part of it. The survival of democracy depends on the extent of our participation in democracy. Every citizen's involvement is essential to the ongoing health of society. Stand up, be heard and be counted! The future of our country, and our community depends on it!

நேரத்துக்கு மதிப்பளித்தல்
Thoughts at the threshold of a new Millennium

அகஸ்தின் ஜெயநாதன்

புதிய நூற்றாண்டைத் திருப்திகரமான முறையில், என் குடும்பத்தோடும் சிநேகிதரோடும் வரவேற்பதற்கு நான் திட்டமிட்டிருந்தேன். ஆனால் இறைவன் சித்தம் வேறாகவிருந்தது. மாறாக நூற்றாண்டின் முதல் நாளை நான் ஒரு மருத்துவசாலையில் வைத்தியர்களின் கண்காணிப்பில் தங்கிக் கழிக்க வேண்டியிருந்தது. புதிய அனுபவத்தின் பலனாக எனக்கு எதிர்பாராத விதத்தில் நன்மைகள் கிடைத்தன. புதிய உணர்ச்சிகள், கருணை நிறைந்த சிந்தனைகள் என் மனத்தைக் கவர்ந்தன. அவற்றில் சிலவற்றைப் பரிமாறுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

பல மாதங்களாக நாம் அச்சத்துடன் எதிர்பார்த்திருந்த 'கம்பியூட்டர் கோளாறுகள்' நூற்றாண்டின் முதல் நாளில் நடைபெறவில்லை. நாமே வளர்த்தெடுத்து, நமக்கே ஊதியம் புரியப் பயிற்சியளித்த தொழில்நுட்பக் கருவி நமக்குத் துரோகம் செய்யவில்லையென்பதில் நமக்கு ஒரு மகிழ்ச்சி. அதே நேரத்தில் புதிய ஆண்டின் முதல் நாளிலேயோ, அல்லாவிடில் அதைப் பின்பற்றி வந்த இரு வாரங்களிலேயோ, நம் தாயாகிய இயற்கை நமக்குத் தவறாமல் அளித்து வரும் கொடைகளாகிய கதிரவன் ஒளி, காற்று, வெப்பம், குளிர் போன்றவற்றை நாம் நன்றி உணர்ச்சி அதிகம் காட்டாமல் ஏற்றுக் கொள்ளுகிறோம். பத்திரிகைகள் மூலம் நமக்குக்கிடைத்த படங்களில், உலகில் சில நாடுகளில் மட்டும் தான் இயற்கைக்கு வணக்கம் செலுத்தும் மனப்பான்மையை மக்கள் பகிரங்கமாக ஏற்றார்கள். அபிவிருத்தியடைந்த மேற்கு நாடுகளில், அந்த வணக்கம், இயற்கை நமக்கு அளித்துக் கொண்டேயிருக்கும் நன்மைகளுக்கு நன்றி நினைக்கும் எண்ணங்கள் இல்லாமை வருந்தக் கூடிய ஒரு நிலைமை.

இத் தருணத்தில் நான்காம் நூற்றாண்டில் சீவித்த கவிஞர் காளிதாசாவின் காவியங்களில் ஒன்று என் கையில் கிடைத்தது. அது ஒரு சிறப்பு வாய்ந்த காவியம், எல்லாக் காலங்களுக்கும், எல்லா மக்களுக்கும் பொருந்தியது. ஆனால் புதிய ஆண்டின் முதல் நாட்களில் அது மிகவும் பொருத்தமாயிருந்தது.

அது ஆங்கிலத்தில் 'Salutation to Dawn' என்ற தலையங்கத்தின் கீழ் பின்வருமாறு கூறுவது.

Look to this Day
For it is life
The very life of life
In its brief course lie
All the realities and
Verities of existence
The bliss of growth
The splendour of action
The glory of power

For yesterday is but a dream
And tomorrow is only a vision
But today, well lived
Makes every yesterday a dream of happiness
And every tomorrow a vision of hope
Look well therefore to this day.

முதல் பார்வையில், இக் காவியத்தில் நம் மனங்களைத் தொடும் கருத்து, நாம் இன்றைய நாளை, இன்றைய நேரத்தைச் சிறந்த முறையில் பாவிக்கவேண்டுமென்ற வற்புறுத்தல் தான். ஒரு மனிதன் வல்லபம் நிறைந்த செயல்களையும் துணிச்சல்களையும் நிறைவேற்றுவது அவனுக்கு அளிக்கப்பட்ட இந்த நாளில், இந்த நேரத்தில் தான். ஆதலால் கவிஞரின் நோக்கத்தில், சென்ற கால நிகழ்ச்சிகளைப் பற்றி யோசித்துக் கவலைப்படுவதோ, அல்லது அங்கலாய்ப்பதோ; அல்லாவிடில் எதிர்நோக்கும் காலத்தைப் பற்றிக் கனவு காண்பதோ பொருத்தமற்றவை. ஆனபடியால் இன்றைய நாளை சிறப்பாக்குவதில் உன் ஆற்றலைச் செலவிடு. இக் கொள்கையைப் பின்பற்றினால் உன் சென்ற கால நினைவுகள் உனக்கு மகிழ்ச்சி தரும். வரும் காலம் உனக்கு நம்பிக்கை பொங்கி வரும் காலமாக மாறும்.

ஆனால் இக் காவியத்தில், ஒரு ஆழ்ந்த சிந்தனையும் உண்டு. அதாவது, மனிதனுக்கு அவன் சீவியத்தில் கிடைக்கின்ற முக்கிய ஆதாரங்களில் ஒன்று அவனுக்கு அளிக்கப்பட்ட நேரம். அதைக் கௌரவித்து, அதை மதித்து நடந்தால் தான், மனிதன் அதன் மூலம் சீவியத்தில் வெற்றி பெறுவான்.

புதிய நூற்றாண்டு தொடங்கி, அதி வேகத்துடன் மக்களின் நேரத்தையும் காலத்தையும் விழுங்கிக்கொண்டு போகிறது. வழக்கம் போல் இந் நாட்டில் எல்லாத் திசையில் இருந்தும் ஒரு புலம்பல் எழும்பும் "எமக்கு நேரமில்லையே." அல்லாவிட்டால் "நம் கடமைகள் யாவற்றையும் நிறைவேற்ற எமக்கு நேரம் காணாது." நேரத்தை சரியான முறையில் கையாளுவதற்கு சென்ற முப்பது ஆண்டுகளில் பல்வேறு கருத்தரங்குகளும் பட்டிமன்றங்களும் நடத்தப்பட்டிருக்கின்றன. அதாவது நேரத்தைச் சரியான முறையில் கையாளுவது ஒரு "திறமை"யென்றும், அந்தத் திறமையை நாம் கற்றுக் கொண்டால் நாம் எமக்கு உரிய நேரத்தை பூரணமாய் பாவித்து வாழ்க்கையில் முன்னேறலாம் என்ற கருத்தே அநேகர் ஏற்றுக் கொள்ளும் வழியாகவிருக்கிறது.

இக் கருத்தில் அதிக உண்மையுண்டு. நேரத்தைக் கையாளுவதில் நம் "திறமைகள்" எமக்கு உதவி புரியலாம். ஆனால் சமீப காலத்தில் வேறு அபிப்பிராயங்களும் தோன்றியிருக்கின்றன. ஒரு அபிப்பிராயமென்னவென்றால் "நேரத்தைக்கையாளுவதற்கு முன் ஒருவன் தன்னைக் கையாளக் கற்க வேண்டும். தன்னைக் கையாள முடியாதவன் ஒருபோதும் தன் நேரத்தைச் சரியான முறையில் கையாள மாட்டான். இது ஒரு உண்மை தான். அடுத்ததாக, இந்தக் கட்டுரையில் முன்கூறிய சில கருத்துக்களையும் நாம் மனதில் வைக்க வேண்டும். அதாவது,

அ) நேரத்தைக் கையாளுவதற்கு அதி முக்கியமாக நாம் மனதிலே நேரத்தை மதிக்க வேண்டும். (We must value time). இந்த மதிப்பு நம் மனதில் வளர்வதற்கு நேரம் நமக்கு அளிக்கப்பட்ட நன்கொடை என்ற கொள்கையை ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.

ஆ) அடுத்ததாக, இயற்கை நமக்கு அளிக்கும் கொடைகள் சில நிபந்தனைகளைக் கொண்டே நமக்குக்கிடைக்கின்றன. நமக்குக் கிடைக்கும் நேரமும் அப்படித்தான். அதனால் நமக்குச் சிறந்த பலன் வேண்டுமானால் நாம் அதன் நிபந்தனைகளை அறிய வேண்டும். இயற்கை நமக்குக் கற்றுக் கொடுக்கும் பாடம், நம்முடைய நேரத்தை நாம் கட்டாயமாக, உழைப்பதற்கும், இளைப்பாறுவதற்கும் பாவிக்க வேண்டும். இந்த சமநிலையிலிருந்து நாம் விலகினால் கஷ்டப்படுகிறோம்.

இ) ஆனால், உழைப்பதற்கும், இளைப்பாறுவதற்கும் மட்டுமல்ல நமக்குக் கிடைத்த நேரம். ஆதி தொடக்கம் எல்லா நாடுகளிலும், எல்லாக் கலாசாரங்களிலும், அநேக மக்கள் தினந்தோறும் சில மணிநேரத்தை தியானத்திலும் செபத்திலும் செலவழித்து வந்திருக்கிறார்கள். இன்றும் அநேகர் இப் பழக்கத்தில் ஈடுபடுகிறார்கள். இப் பழக்கத்தினால் அவர்கள் பெறும் நன்மைகளைப் பற்றி அறிவார்கள். ஆனால் அவர்கள் ஏகமனதாய் அறிவிக்கும் அபிப்பிராயம்: தியானம், செபம் இவற்றில் ஒழுங்காய் செலவழிக்கும் நேரத்தின் பலன், தாங்கள் செய்யும் மற்ற வேலைகளில் கூடிய சக்தியையும் சிறந்த மனோநிலையையும் அளிக்கிறது.

ஈ) வரும் ஆண்டுகளில், தங்களுடைய நேரத்தைத் தியானம், செபம் முதலிய முயற்சிகளில் ஈடுபடுவோர் தொகை கூடிவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வெகு துரிதமாக சீவிக்கும் சமுதாயத்தில் இவர்களின் முன்மாதிரி கட்டாயமாக அதிக நன்மையைக் கொண்டு வரும் என்று நாம் நம்பிக்கை கொள்ளலாம். விசேடமாக நம் இளைஞர் மத்தியில் இது பரவினால், சமூக மாற்றங்களைக் கொண்டு வரலாம்.

நாம் போகும் பாதை சரியானதா?
Are we on right path?

நாகா இராமலிங்கம்

அண்மையில் வாசித்த இந்த வரிகள் என் மனதில் பதிந்தன. "If we do not know where we are going, it does not matter how fast we travel" இதன் அர்த்தம் நாம் எங்கே போகிறோம் என்று தெரியாதவிடத்து நாம் எவ்வளவு வேகத்தில் போகிறோம் என்பது முக்கியமல்ல என்பதாகும்.

இந்தப் புது நூற்றாண்டு உதயமாகியுள்ள வேளையில் எமது சமூகம் எங்கு நோக்கிப் போகிறது, சரியான பாதையில் போகிறதா என்று சிந்திப்பது உசிதம் என்று நினைக்கிறேன். கனடாவில் சுமார் ஒன்றரை இலட்சம் தமிழ் மக்கள் பல வழிகளில் வேகமாக முன்னேறி வருகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்பதையே நோக்கமாக வைத்து பொருளாதாரம் தேடும் பணியில் பலர் முன்னேறியிருக்கிறார்கள். கல்வியில் எமது பிள்ளைகள் சாதனைகள் புரிகிறார்கள். பல்கலைக்கழகங்களில் அவர்களது எண்ணிக்கை வருடா வருடம் உயர்ந்து கொண்டு போகிறது. இயல், இசை, நாடகத்துறையில் கணிசமான அக்கறையை எமது மக்கள் காட்டுகின்றனர். ஏதாவது ஒரு நடனம், இசை பயிலாத பிள்ளைகளே இல்லை என்னும் அளவுக்கு பிள்ளைகளை எமது பாரம்பரிய இசை, நடன வகுப்புகளில் பங்குபெறச் செய்கிறோம். வர்த்தகத் துறையில் கடைகளைக் கணக்கெடுத்தால் மற்றைய பல்லின கலாசாரச் சமூகங்களை விட எம்மவர்கள் வேகமாக முன்னேறி வருகிறார்கள். நகைக் கடைகள், புடவைக் கடைகள், அங்காடிகள், தளபாடச் சந்தைகள், சினிமா கொட்டகைகள், கடுகதி பணமாற்றுக் கடைகள் என்று பலப்பல.

ஆனால், இவை எல்லாவற்றையும் வைத்து எமது மக்கள் உளவியல், சமூகரீதியிலும், கலாசார ரீதியிலும், நேர்மைத்துவரீதியிலும் (Ethical) முன்னேறியிருக்கிறார்களா என்பது ஒரு பெரிய கேள்விக்குறி. நாம் போகும் பாதை, எமது கலாசாரம், பாரம்பரியம், விழுமியங்கள், குடும்ப வாழ்க்கை முறைகள் ஆகியவற்றுடன் இசைந்து போகின்றனவா என்பது சந்தேகமே. சில மாதங்களுக்கு முன்பு ரொறன்ரோ வைத்தியசாலை ஒன்றில் தாதிமார்களுடன் ஒரு சம்பாஷணையில் பங்குபற்றியிருந்தேன். எமது மக்களின் கலாசாரம் விழுமியங்கள், சுகாதார பழக்க வழக்கங்கள், குடும்ப வாழ்க்கை ஆகியன பற்றி அவர்களுக்கு விளக்குவது இதன் நோக்கமாய் இருந்தது. எமது குடும்ப வாழ்வின் அந்நியோன்னியம், விவாக முறைகள், பிள்ளை வளர்ப்பு ஆகியன பற்றி சம்பாஷித்த பின்பு, கடைசியில் பிரசவ வாட்டில் வேலை பார்க்கும் தாதி ஒருவர் எழுப்பிய கேள்வி இது! உங்கள் குடும்ப வாழ்க்கை, விவாகம், விவாகரத்து போன்றவை இங்கே சிறிது சிறிதாக மாற்றமடைந்து போகக் கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா.... இவை பற்றி உங்கள் கருத்து என்ன? என்று ஒரு கேள்வியை மிக நாசூக்காகக் கேட்டார். இந்தக் கேள்விக்கு எமது விழுமியங்களை பாதிக்காத வகையில் பதில் கொடுத்து நான் சமாளித்துக் கொண்டேன். எனினும் இக் கேள்வியின் காரணத்தையும் உட்கருத்தையும் என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. பல குடும்பங்களில் இப்படியான மாற்றம் ஏற்பட்டு கொண்டு வருவதை நாம் காணக்கூடியதாக இருப்பது உண்மை. இவை உண்மையிலேயே சந்தர்ப்ப சூழ்நிலைகளினால் ஏற்படுகின்றனவா அல்லது சந்தர்ப்ப வாதத்தால் ஏற்படுத்துகின்றனவா என்பது ஒரு சர்ச்சைக்குரிய விடயம். பல இளம் குடும்பங்கள், ஏன் வயதான தம்பதிகள் கூட எமது பாரம்பரியம் குடும்ப கட்டுக்கோப்பு ஆகியவற்றைப் பொருளாதாரக் காரணங்களுக்காக உதாசீனம் செய்வது உண்மையிலேயே துரதிர்ஷ்டவசமானது.

பிள்ளை வளர்ப்பைப் பற்றி எமது கலாசாரத்திலே எவ்வளவோ வழிமுறைகளை எம் நாட்டில் பின்பற்றியிருக்கிறோம். இங்கே நடப்பது என்ன? அண்மையில் ரொறன்ரோ பிள்ளைகள் பாதுகாப்பு சேவைகள் சங்கம் (Children's Aid Society) நடத்திய ஒரு கூட்டத்துக்குச் சென்ற போது கிடைத்த தகவல்கள் மிகவும் கவலைக்குரியது. கடந்த ஆண்டு CAS இன் சேவையில் இணைக்கப்பட்டிருக்கும் தமிழ் குடும்பங்களின் தொகை 109 ஆகவுயர்ந்துள்ளது. இது இன அடிப்படையில் மூன்றாவது எண்ணிக்கையாக உள்ளது. கனடிய வெள்ளை இனத்தவர்கள் சீனா, வியட்நாமிய இனத்தவர்களுக்கு அடுத்ததாக கூடிய எண்ணிக்கை தமிழ் குடும்பங்களின் பிள்ளைகள். குழந்தைகளுக்காகவே எல்லாவற்றையும் விட்டு விட்டு இந்த நாட்டுக்கு வந்த பல குடும்பங்கள் பிள்ளை வளர்ப்பதில் ஏற்படும் முரண்பாடுகளினால் தமது பிள்ளைகளையும் இழந்து தத்தளிக்கும் விபரீதங்கள் ஏராளம். கடைசியில் வழக்கு, கோடு என்று பணத்தை விரயமாக்குவது மட்டுமன்றி தமது பிள்ளைகளுடனான உறவையும் பறிகொடுக்க வேண்டிய நிலை பலருக்கு ஏற்பட்டிருக்கிறது. மரத்தால் விழுந்தவரை மாடு மிதித்த கதை போல எமது பாஷை, கலாசாரம் குடிவரவின் அகதி வாழ்வின் பின்னணி ஆகியவற்றைச் சரிவர உணரக்கூடிய சேவையாளர்கள் CAS ல் இல்லாமை இன்னுமொரு பிரச்சனை. பிள்ளைகளைத் தற்காலிகமாக பராமரிக்கும் பராமரிப்பு வீடுகள் (Foster Home) எமது சமூகத்தைச் சேர்ந்தவர்களால் நடத்தப்படாமை அல்லது அதற்கு முன்வராமை ஒரு பெரிய தடையாகவே இருக்கிறது. குளிக்கப் போய் சேறு பூசிய கதையாக, பல "நல்ல" பிள்ளைகள் வேறு கலாசாரச் சூழலில் நடத்தப்படும் பராமரிப்பு இல்லங்களில் சில காலம் வாழ்ந்த பின்பு இரண்டும் கெட்டான் நிலைமைக்குத் தள்ளப்பட்டு பின்பு இவர்கள் திரும்பவும் தமது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டாலும், பெற்றோர் பிள்ளைகளிடையே பிளவு விரிவடைந்து கொண்டு போகுமேயன்றி சுமுகநிலைக்கு திரும்புவதில்லை.

பெற்றோர் பிள்ளைகளுக்கிடையே ஏற்பட்டுக் கொண்டு வரும் இந்த முரண்பாடுகளுக்கு பல கோணங்களிலே, பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. எனினும் எமது சமூகத்திலே காணப்படும் சிலரின் முன்னுக்குப் பின் முரணான, உண்மைக்குப் புறம்பான இரட்டை வாழ்வு ஒரு காரணமாக இருக்கிறது. சில பெற்றோர் கலாசாரம், பண்பாடு என்று ஒருபக்கம் பறைசாற்றிக் கொண்டு மறுபுறம் கலாசாரம் விழுமியங்களுக்கு மாறான செயல்களில் ஈடுபடுவது குடும்பப் பிரச்சனைக்கும், குழந்தை வளர்ப்பில் முரண்பாடுகளுக்கும் வழிகோலுவதை மறுக்க முடியாது. சொல்லுக்கும் செயலுக்கும் முரணாக இரட்டை வாழ்வு வாழ்வது எமது பிள்ளைகளின் உணர்வு ரீதியான வளர்ச்சியையும் அவர்கள் வாழ்க்கை பற்றித் தமக்குள் வளர்க்க விரும்பும் விழுமியங்களையும் பாதிக்கின்றன. எம்முடன் வளரும் பிள்ளைகள் எமது ஒவ்வொரு செயல்களையும் உன்னிப்பாகக் கவனிக்கிறார்கள் என்பதை நாம் மறக்கக் கூடாது. அப்பொழுது தான் அவர்களும் தமது வெளிக் கட்டுப்பாட்டை விட தமது மானசீக உள்கட்டுப்பாட்டை மதித்து வாழ்வார்கள்.

அண்மையில் எமது சமூகத்தில் நடந்த சில பரிதாபகரமான தற்கொலைகள் எமது சமூகத்தில் இருக்கும் பல்வேறு வாழ்க்கைப் பிரச்சனைகளின் ஒரு சிறு பிரதிபலிப்பே. ரொறன்ரோவில் பிரபல மனோவைத்திய நிபுணரும் ஆராய்ச்சியாளருமான பேராசிரியர் மோட்டன் பைசர் (Dr. Morton Beiser) அண்மையில் Toronto Star பத்திரிகைக்குத் தந்த பேட்டியில் சொன்னதாவது "சில வருடங்களாகத் தமிழ்ச் சமூகம் தமது உளநல பிரச்சனைகளை இப்படியான அபாய மணிகள் மூலம் அறிவித்துக் கொண்டிருக்கிறது. தமிழ் சமூக முக்கியஸ்தர்களும் ஸ்தாபனங்களும் இணைந்து இவற்றுக்கான காரணங்களை ஆராய்ந்து சமூகத்திலுள்ளவர்களுக்கு உதவி புரிதல் மிகவும் அவசியம்".

இதை நாம் ஒவ்வொருவரும் ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

கனடா தமிழர்களின் முன்னுரிமைகள் மாறிவிட்டனவோ?

குளிர்காற்று அடித்துக் கொண்டேயிருக்கிறது. பெரும் புயலாக மாறிவிடுமோ என்ற பயம். வன்கூவர் முழுவதும் இரவு பெய்த பனியால் மூடப்பட்டிருக்கிறது என்பது வானொலி அறிவித்தல். சாதாரணமாக, தை மாதத்தில் மற்றும் இடங்களைவிட குளிர் குறைந்த இடமாக வன்கூவர் இருக்குமென்று, அங்கு நத்தார் விடுமுறைக்கு ஓடிச் சென்றவர் பலர். இப்போது என்ன ஏமாற்றம்! Millennium தொடங்கிப் பல நாட்களாகியும் ஒரு வித்தியாசமும் இல்லை. ஒன்ராறியோ மாகாணத்தில் Barrie போன்ற இடங்களில் 5-6 வினாடிகளுக்கு பூமி அதிர்ச்சி மாதிரி இருந்ததாம். Richmond Hill போன்ற இடங்களில் வசிப்பவர்கள் சாதாரண அதிர்ச்சியை அனுபவித்தார்களாம். பெரிய பூகம்பமும் இல்லை. சூறாவளியும் இல்லை. மின்சாரத் தடையும் இல்லை. தண்ணீர் குழாயில் வந்துகொண்டேயிருந்தது. Light ஒவ்வொரு அறைக்குள்ளும் சாதாரணமாக பிரகாசிப்பது போல் பிரகாசித்துக் கொண்டேயிருந்தது. Y2K என்பது என்ன மர்மம். சாப்பாடுகள் அதிகம் சேமித்து வைத்தவர்கள் தற்போது அவற்றை Food bank இற்குத் தானமாகக் கொடுத்திருப்பார்களோ என்ற எண்ணம் சிலருக்கு வருகிறது. 3 வருடங்களாக Y2Kக்கு ஆயத்தங்கள் செய்து கொண்டிருந்தவர்கள் எவ்வளவு ஏமாற்றம் அடைந்திருக்க வேண்டும் என்றும், லட்சக் கணக்கான பணத்தை வீணாகச் செலவழித்து விட்டோமோ என்றும் பலர் பலவிதமாகவும் யோசிப்பது ஆச்சரியமல்ல.

நானும் என் கணவரும் இந்த ரொறன்ரோ குளிரிலே இருந்து தப்புவதற்கு ஒரு வழியைக் கண்டோம். 40-43 வருடங்களாக இங்கே வசித்து விட்டோம். எங்கள் தாய்நாட்டிலே அனுபவிக்கும் கோடை காலத்தைப் பற்றி நினைவு கூர்வது மன ஆறுதலாக இருக்கும் என்று மனப்பால் குடித்துக் கொண்டு கடந்த பல ஆண்டுகளாக நாங்கள் அனுபவித்த சந்தோஷங்கள், கவலைகள், அதிர்ச்சிகள், ஏமாற்றங்களைப் பற்றிக் கலந்து உரையாடினோம்.

அவர் வந்து இறங்கியது Feb 1958 இல் Halifax துறைமுகத்தில். இலங்கையில் இருந்து London, U.K. சென்று அங்கிருந்து Saxonia என்ற கப்பலில் 4-5 நாட்களாகப் பிரயாணம் செய்து Pier வந்து சேர்ந்தார். கனடிய Immigration பெரிய வரவேற்பு. ஒரு Welcome package தயாரித்து (Socks, gloves, tooth paste, brush, wash cloth, etc.) வந்து இறங்குபவர்களின் Luggage ஐ ஒரு இடத்தில் கட்டி வைத்தார்களாம். Halifax இல் இருந்து விரும்பினவர்களை Montreal க்கு Train இலே அனுப்பி வைத்தார்களாம். கொழும்பிலே பழக்கமான ஒருவர் Montreal வந்திருக்கிறார் என்று அறிந்து U.K. யில் இருந்து தொடர்பு கொண்டிருந்தாராம். அவர் தமிழரும் இல்லை சிங்களமும் இல்லை. Eurasian என்றே கூறலாம். அவர் Montreal Railway Station க்கு வந்து என் கணவரைச் சந்தித்து Y.M.C.A க்கு கொண்டு போய் விட்டு விட்டுப் போய்விட்டாராம். அவ்வளவு தான் அந்த நாள் உபசாரம். தன்னோடு பிரயாணம் செய்த 2 French Canadian ஆட்களோடு பழகி அவர்களோடு அறை ஒன்று எடுத்து தங்கி, வேலை தேடி மறுநாள் Employment Office க்குப் போன போது "கஷ்டமான பனியாலும் குளிராலும் இன்று இந்தக் காரியாலயம் மூடியிருக்கும். அடுத்த நாள் திரும்பி வாருங்கள்" என்றிருந்ததாம். அடுத்த நாள் கடவுள் புண்ணியமாக St. Lawrence Seaway காரியாலயத்தில் Field work (mopping) surveying வேலை கிடைத்தது. உழைத்த பணமெல்லாம் தகுந்த உடுப்புகளுக்கும், Boots, Leggings உம் செலவாகப் போய்விட்டது.

முதற் சம்பளத்தில் தன் தாயாருக்கு ஒரு பகுதியை தன்னுடைய Taped message உடன் அனுப்பி, "அம்மா என் குரலைக் கூடக் கேட்க கொழும்புக்குப் பயணம் அனுப்ப

றொசலின் இராசநாயகம்

முடியவில்லையே என்று கவலைப்பட்டீர்களே. இச் செய்தியைக் கேட்டுச் சந்தோஷப்படுங்கள்" எனச் சொன்னார். ஐந்து மாதங்கள் இங்கே வேலை செய்தாலும் தமிழர் ஒருவரைக் காணக் கிடைக்கவில்லை. ஐந்து மாதங்களுக்குப் பிறகு ரொறன்ரோவுக்கு மாற்றம் கிடைத்தது. வேலைக் கஷ்டம் குறைவென்றாலும் தமிழரோ இல்லை. இருந்தாலும் எங்கேயென்று தேடுவது. Telepone yellow pages ஐப் பார்த்து India/Ceylon Mission இன் கீழ் கண்ட Telephone number ஐ அடித்து இலங்கையர் யாரும் இருக்கிறார்களா என்று விசாரித்த பொழுது "இலங்கை Mission இப்போ மூடப்பட்டுவிட்டது. ஆனால் தமிழ் நாட்டில் ஊழியம் செய்து இப்போ Furlough இல் இங்கு வந்திருக்கும் Reo Sinclair குடும்பத்தோடு பேசினால் அவர்கள் உதவியாக இருப்பார்கள்" என்றனர். அப்படியே செய்தார் என் கணவர். Bruce Sinclair உடனே பேசி, தயவு செய்து எங்கள் வீட்டிற்குச் சாயந்தரம் வாருங்கள். என் மனைவி சோறு, கறி சமைத்து வைத்திருப்பா, நாங்கள் சாப்பிட்ட பின் கலந்துரையாடலாம் என்றார். என் கணவரின் சந்தோஷம் எம்மாத்திரம். அன்று தொடங்கின நட்பு 43 வருடங்களாக தொடர்ந்திருக்கின்றது. கவலைக்கு மேல் கவலை 1999 Dec 2ம் திகதி Bruce Sinclair இறைவனடி சேர்ந்தார். Sinclair குடும்பம் போல் ஆரம்பத்தில் இருந்து எங்களுக்கு உதவிய இன்னொரு குடும்பம் Rev. I. G. Perkins குடும்பம். அவரே எங்கள் கல்யாணத்தை Donlands United Church இல் செய்து வைத்தார். பிள்ளைகள் இருவரையும் தூக்கி அணைத்து ஞானஸ்நானம் கொடுத்தார். அவர் வீட்டில் என்ன விசேஷம், கொண்டாட்டம் இருந்தாலும் எங்கள் இருவருக்கும் இடமிருந்தது. அன்பு, ஆதரவு ஆரம்பத்தில் காட்டிய கனடியரில் இவ்விரண்டு குடும்பங்களும் விசேஷித்தவர்கள். அவரும் ஐந்து வருடங்களுக்கு முன் இறைவனடி சேர்ந்தார். இப்படிப்பட்ட அன்பானவர்கள் போகும் பொழுது எங்கள் சொந்த குடும்பத்தவரை இழந்து தவிப்பது போல் தான் இருக்கின்றது.

நான் 40 வருடங்களுக்கு முன் வந்த போது, பத்து முதல் பதினைந்து இலங்கைக் குடும்பங்களிருந்தன. அவற்றில் தமிழர் மிகக் குறைவு. தமிழ் பேசுவதற்கு ஒருவருமில்லை. சோறு, கறி சமைப்பது சங்கடத்திலும் சங்கடம். Saree, blouse வாங்கித் தைத்து எடுப்பதற்கு இடமில்லை. Blouses, sample colours அனுப்பி Mrs. Sinclair இந்தியாவிலிருந்து தைத்து அனுப்புவா. வரும் பொழுது 10-15 Sarees அங்கே வாங்கிக் கொண்டு வருவா. வீட்டிலிருந்து கொண்டு வந்த Curry powder முடிந்து விட்டால், வாய்க்கு ருசியாகச் சாப்பாடு செய்ய முடியாது. Tomato Paste ஐ பாவித்து மீன் குழம்பு செய் மகளே என்பா Mrs. McHeyzer இவர் ஒரு Ceylon நர்ஸ். இலங்கையிலிருந்து எவராவது இங்கு Visitors ஆக வருவதென்றால் நாங்கள் வீட்டிற்கு எழுதுவது அரிசி மா, கோப்பித்தூள், வறுத்த கறித்தூள், மாசிக் கருவாடு, பப்படம், மோர் மிளகாய் போன்ற பொருட்களே.

இப்பொழுது இருக்கும் தமிழ்க் கடைகள், சாப்பாட்டு வசதிகள், Wedding receptions போன்ற காரியங்கள் எம்மாத்திரம் வாங்கக் கூடிய சாமான்கள். எடுத்துக் கூற முடியாது. வீட்டிலே Party வைப்பதென்றால் 100-150 பேர் வருவது ஆச்சரியமில்லை. ஏன் groceries வாங்கிச் சமைக்காமலே கடையில் பல விருந்துச் சாப்பாட்டுகளை வாங்கி அருந்தலாம். 40 வருடங்களுக்குள் ஏற்பட்ட மாற்றங்களைச் சொல்ல முடியாது; சந்தோஷந்தான். ஆனால் அந்த நாட்களில் அனுபவித்த சந்தோஷம் உண்மையான சந்தோஷம். இப்பொழுது நாளாந்த வாழ்க்கை இலேசாக இருந்தாலும், உண்மையான அன்பு, ஆதரவு, சகோதர பாசம் பெரிதாகத் தோன்றவில்லை. இதற்குக் காரணம் என்ன? எங்கள் ஊரார் பலர் வந்ததோ, அல்லது இங்கே வந்ததின் நிமித்தம் எங்கள் முன்னுரிமைகள் (Priorities) மாறிவிட்டனவோ. ஒற்றுமையான மனப்பான்மையை இழந்து போட்டி மனப்பான்மையைக் கடைப்பிடித்தோமா? இவற்றிற்கு மறுமொழி வெளிப்படையாக இருக்கும் குளிர், பனி போன்றவற்றினால் இல்லை. யாவரும் எங்கள் மனத்தைச் சோதித்து அறிந்து குறை குற்றங்களைத் திருத்த முயல்வதே Millennium இன் அறிகுறியாகவிருக்கும். Y2K விளைவுகள் எதற்காக? ஆழ்ந்த எங்கள் இருதயத்திலும், சிந்தனையிலும் பிறக்கும் சுத்தாவியின் கனிகளே எங்கள் எதிர்காலத்தில் வழிநடத்தும் சின்னங்களாகும்.

கனடியத் தமிழில் காணப்படும் சில தவறான சொற்பிரயோகங்கள்

தமிழர் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் கனடாவிலேயே அதிக தமிழர்கள் வாழ்கின்றனர். கனடாவிலேயே அதிக தமிழ்ப் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் வெளிவருகின்றன. கனடாவிலேயே அதிக தமிழ் நூல்கள் வெளியிடப்படுகின்றன. கனடாவிலேயே அதிக தமிழ் வானொலிகள் இயங்குகின்றன. இவற்றையெல்லாம் பார்க்கும் போது தமிழை உலகளாவிய நிலையில் வளர்க்க வேண்டிய ஒரு பாரிய பொறுப்பும் தமிழ்க் கனடிய மக்களிடமே உள்ளது என்பதும் தெரிய வருகின்றது.

எனினும் இந்தப் பொறுப்பை எமது பத்திரிகை உலகமும் எழுத்துலகமும் சரியாகப் புரிந்து கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. எழுத்துப் பிழைகள், வசனப் பிழைகள் என்று பிழைகள் விடுவது இங்கு மிகச் சாதாரணமாகி விட்டது. அவற்றுள் பொருத்தமற்ற ஒரு சில சொற்பிரயோகங்கள் மட்டும் இங்கு எடுத்துக் காட்டப்படுகின்றன.

1. உடைமை - உடமை:
இவ்விரண்டினுள் உடைமை என்பதே சரியானது. ஒன்று, உள்ளதாந் தன்மை உடைமை எனப்படும். உடையார் - குறிப்பு வினை; பொருளை உடையவர் - செல்வந்தர் என்பதைக் குறிப்பால் உணர்த்துவது.

அன்புடையார் - அன்பினை உடையவர். அன்புடைமை, அடக்கமுடைமை, அருளுடைமை, அறிவுடைமை, ஒழுக்கமுடைமை போன்ற திருக்குறள் அதிகாரங்களையும் நோக்குக. உடைய என்பது ஆறாம் வேற்றுமைச் சொல்லுருபாகவும் வரும். உதாரணம்: என்னுடைய மகன், சேரனுடைய நாடு, பாண்டியனுடைய படை.

உடமை என்றொரு சொல் இல்லை.

2. காய்ச்சல் - காச்சல்:
காய்ச்சல் என்பதே சரியான சொல். காய்தல் என்னும் தொழிற் பெயரால் வந்தது. பாய்தல் - பாய்ச்சல். தோய்தல் - தோய்ச்சல் என வருதலையும் காண்கின்றோம். காய்தல் - உலர்தல், சுடுதல், எறித்தல், வெகுளல், வெறுத்தல், வருத்தல் முதலாய பல பொருள்களையுடையது. உடல் சுரநோயால் வருந்துதலைக் காய்ச்சல் காய்கிறது என்று சொல்வது வழக்கம். காச்சல் என்பது பிழை.

3. கேளிர் -கேளீர்:
கேளிர் என்றால் உறவினர் என்று பொருள். கேளீர் - கேட்பீர்களாக என்னும் பொருளில் ஏவல் வினையாக நிற்பது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது சங்கப் புலவர் கணியன் பூங்குன்றனார் பாடிய பாடல் ஒன்றின் முதல் அடி. இதன் பொருள் 'எமக்கு எல்லா ஊரும் சொந்த ஊர் போன்றதே. எல்லா மக்களும் என் சுற்றத்தவரே' என்பது. சுற்றத்தவர் என்ற பொருளில் வரும் 'கேளிர்' என்னும் சொல்லைக் கனடாவில் 'கேளீர்' எனப் பலர் எழுதி வருகின்றனர். அறிஞர்கள் சரியாக கேளிர் என்று எழுதிக் கொடுத்தாலும் அவர்கள் தவறுதலாகப் பிழை விட்டு விட்டார்கள் போலும் என்று கருதிப் பிரசுரிப்பவர்கள் அல்லது எழுத்தமைப்புச் செய்பவர்கள் கேளீர் என்று மாற்றும் பரிதாப நிலையும் உள்ளது.

4. சடலம் - உடலம்:
சடலம் உயிர் அற்ற உடம்பு. உடலம் உயிர் உள்ளது. அதனால் சடலத்துக்கு உடலம் என்ற சொல்லை உபயோகிப்பது உயிருள்ளவனைச் சாகடிப்பதற்குச் சரியானது.

5. திரு - உயர்திரு:
தமிழ் மொழியிலே மதிப்பும் உயர்வும் மிகுந்த ஒரு சொல் உண்டேல் அது 'திரு' வாகத்தான் இருக்க முடியும். திரு என்றால் செல்வம், சிறப்பு, அழகு, தூய்மை, பொலிவு, மேன்மை, தெய்வத் தன்மை என்றெல்லாம் பொருள். திரு - திருமகளையும் குறிக்கும். பொதுவாகத் தெய்வத் தன்மை என்னும் பொருளிலே பல இடங்களுக்கும் நூல்களுக்கும் 'திரு'வை அடையாகப் பயன்படுத்துவது தமிழில் ஒரு மரபு. அந்த மரபிலே வந்தவை தாம் திருப்பெருந்துறை, திருத்தணிகை, திருக்குறள், திருவாசகம், திருமுறை, திருமணம், திருவிடம், திருமடம் முதலியன. 'திரு' கடவுளுக்கும் சிறப்புப் பெயராகும்.

தெய்வத் தன்மை பொருந்திய பெரியோர்களின் பெயருக்கு முன்னால் 'திரு'வைச் சேர்த்து எழுதும் வழக்கமும் தமிழர் மத்தியில் நெடுங்காலமாகவே இருந்து வந்திருக்கின்றது. வள்ளுவர் - திருவள்ளுவர் என்றும் ஞானசம்பந்தர் - திருஞானசம்பந்தர் என்றும் நாவுக்கரசர் - திருநாவுக்கரசர் என்றும் அழைக்கப்படுவதை யாவரும் அறிவர்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் Mister, Mistress என்னும் சொற்களைத் தமிழர் ஸ்ரீமான் என்றும் ஸ்ரீமதி என்றும் எழுதத் தொடங்கினர். ஸ்ரீ வட எழுத்தாக இருப்பதால் அச்சொற்கள் திருவாளர் என்றும் திருமதி என்றும் தனித்தமிழ் விரும்பிகளால் நாளடைவில் மாற்றப்பட்டன.

சிலர் ஒரு பிரதம விருந்தினருக்கோ, பேச்சாளருக்கோ அல்லது வேறு மதிப்புக்குரிய பெரியார்களுக்கோ அதிக மதிப்பு அளிக்கும் விருப்புடன் 'உயர்திரு' என்னும் சொல்லைப் பயன்படுத்தி வருகின்றனர். திரு என்னும் சொல்லுக்கு மேலான சொல் ஒன்று இல்லையாதலால் 'உயர்திரு' என்ற சொல்லுக்கு இடம் இல்லை.

6. நடத்தல் - நடாத்தல்:
நடத்தல், நடத்துதல் என்பவையே சரியான வழக்கு. நடத்துதலை நடாத்துதல் என்று எழுதுவது எழுத்துப் பிழை மட்டுமல்லாது இலக்கண மரபுப் பிழையுமாகும். நடத்தல் நடாத்தல் என வருமாயின் கடத்தலை - கடாத்தல், கிடத்தலை - கிடாத்தல், எடுத்தலை - எடாத்தல் என்றெல்லாம் எழுதித் தமிழைக் குழப்ப வேண்டிவரும்.

7. நாகரிகம் - நாகரீகம்:
நாகரிகம் என்பதே சரியான வழக்கு.

பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்

என்பது திருக்குறள்.

8. மங்கலம் - மங்களம்:
இவ்விரு சொற்கள் பற்றி அறிஞர்கள் மத்தியிலேயே குழப்பம் நிலவி வருகின்றது.

Some words often misused in Canadian Tamil

கவிநாயகர் வி. கந்தவனம்

அகராதிகளிலும் இரு சொற்களும் ஒரு பொருட் சொற்கள் என்னும் வகையில் பொருள் கூறப்பட்டுள்ளன. எனினும் நன்மை, நன்னிமித்தம் முதலிய பொருள்களை உணர்த்துவது இலக்கிய வழக்கின்படி மங்கலம் என்ற சொல்லேயாகும். சங்க இலக்கியங்களில் மங்கலம் என்ற சொற்பிரயோகமே காணப்படுகின்றது.

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு

என்னும் திருக்குறளும் நல்ல ஆதாரம். சிலப்பதிகாரத்தில் பல இடங்களில் இந்தச் சொல் வருகின்றது. எந்த இடத்திலும் மங்களம் என்று எழுதப்படவில்லை.

மங்களம் என்ற சொல் பெரிதும் முடிவு, இறுதி என்னும் பொருளில் வழங்கப்பட்டு வருகின்றது. இசைக் கச்சேரி முடிவில் மங்களம் பாடுதல் இந்த அர்த்தத்திலேயே வருகின்றது. மங்களமும் உண்மையில் வாழ்த்துப் பாட்டு ஆதலால் அதற்கும் மங்கல வாழ்த்து என்பதே சரியானதாகும். உண்மையில் மங்களம் என்னும் சொல்லை மங்கலத்தின் போலியாகவே கொள்ளுதல் வேண்டும். ஈழத்து வழக்கில் ஆன்றோர் மங்கலம் என்ற சொல்லையே நன்மைக் காரியங்களுக்குப் பயன்படுத்தியுள்ளனர்.

(மறுபக்கம் பார்க்க)

நூற்றாண்டு மாற்றமும் தமிழர் கடமையும்

'தமிழர் தகவல்' இதழின் ஒன்பதாவது ஆண்டு பூர்த்தி மலரில், அதாவது பத்தாவது ஆண்டின் முதலாவது இதழில் இக்கட்டுரையை எழுதுகின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தமைக்கு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

20ம் நூற்றாண்டைக் கடந்து 21ம் நூற்றாண்டில் நாம் பிரவேசிக்கும் இவ்வேளையில் சரித்திரத்தில் மிக முக்கியமான காலமொன்றில் ஈழத் தமிழர்களாகிய நாம் கனடாவில் வசித்து வருகிறோம். கனடிய தேசம் எமது பிரதான வசிப்பிடமாக மாறிவிட்ட நிலையில் இந் நாட்டுப் பிரஜைகளாக நாம் சகல விதமான மனித உரிமைகளோடும் இங்கு வாழ்கின்றோம்.

கடந்த இருபத்தைந்து ஆண்டு காலத்தில் ஈழத் தமிழர்கள் கனடியத் தேசத்தில் தமது முத்திரையைப் படிப்படியாகப் பதித்து வந்துள்ளனர். இதில் 1983ம் ஆண்டுக்குப் பிந்திய காலகட்டம் மிக முக்கியமானதாக அமைந்துள்ளது என்பதை நாம் எல்லோரும் நன்கறிவோம். இக் காலகட்டத்தில் கனடாவில் பெரும்பாலான ஈழத் தமிழர்கள் தமது வாழ்க்கையையும் தமது சமூகத்தையும் நிலைப்படுத்தும் (Establish) முயற்சிகளில் ஈடுபட்டு வந்துள்ளனர். அதில் பல துறைகளில் வெற்றியும் முன்னேற்றமும் கண்டுள்ளனர்.

இன்றைக்கு ரொறன்ரோ பெருநகரின் பல பாகங்களில் ஈழத் தமிழர்களை கனடிய சமூகத்தினர் இலகுவாக அடையாளம் காணக்கூடிய வகையில் நமது சமூகம் வளர்ச்சியடைந்துள்ளது.

ஐரோப்பிய, ஆசிய, தென்னமெரிக்க நாடுகளைச் சேர்ந்த பல்லின மக்களைப் போன்று ஈழத் தமிழர்களும் கனடிய தேசத்தின் ஒரு பிரதான அங்கமாக விளங்குகின்றனர்.

இந்நிலையில் கனடிய தேசத்தில் நமது பொறுப்புகளும் கடமைகளும் அதிகரித்துள்ளன. இவ்வளவு காலமும் கனடிய தேசத்தின் நன்மதிப்பையும், ஆதரவையும், உபசரிப்பையும், விசேஷ சலுகைகளையும் நமது சமூகம் தாராளமாகப் பெற்றுள்ளது. இதற்காக நாம் கனடாவிற்கு பல விதங்களில் நன்றிக் கடன் செய்யக் கடமைப்பட்டுள்ளோம். இனி வரும் எதிர்காலத்தில் கனடிய தேசத்திற்கு நாம் ஆற்றப் போகும் சேவைகளும் கடமைகளுமே நமக்கு அடுத்து வரும் ஈழத் தமிழர் சந்ததியின் நிலையை இந் நாட்டில் நிர்ணயிக்கும்.

தற்போது கனடாவில் வாழுகின்ற நாம் இந்த நாட்டில் ஈழத் தமிழர்களின் முதலாவது சந்ததியினர் (first generation). இதே வேளை இன்று எம்மத்தியில் வளர்ந்து வரும் மாணவ சமூகமும் சிறுவர் சமூகமும் இரண்டாவது சந்ததியினர் (second generation).

முதலாவது சந்ததியினர் பதிக்கின்ற முத்திரையைப் பொறுத்துத் தான் இரண்டாவது சந்ததியின் வளர்ச்சியும் சீர்பாடும் தங்கியுள்ளது. கனடாவில் வாழ்கின்ற பல்லின மக்களின் சரித்திரத்தைப் பார்த்தால் முதலாவது சந்ததியினர் தேடி வைத்த பெயரும் புகழுமே, இரண்டாவது சந்ததியின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியுள்ளது.

இந் நிலையில் முதலாம் சந்ததியினரான நாம் எவ்வாறு நிலையான, ஆக்கபூர்வமான, பெருமைப்படக் கூடிய முறையில் நமது சமூகத்தின் முத்திரையை இந்தக் கனடிய மண்ணில் பதிக்கலாம் என்பதை ஆராய சமூக ரீதியாக முன்வர வேண்டும். இந்த முயற்சிகளை மேற்கொள்வதற்கு நம் மத்தியில் பல துறைகளைச் சார்ந்த வல்லுனர்கள் பலர் உள்ளனர். இவர்களின் சிந்தனைத் திறன்களையும் செயற் திறன்களையும் ஒன்றிணைத்து அவற்றிற்கு, ஒரு சமுதாய ரீதியிலான வடிவம் ஒன்றைக் கொடுப்பதற்கு ஈழத் தமிழர்கள் மத்தியில் ஒரு சிந்தனைத் தடாகம் (Think tank) விரைவில் அமைக்கப்பட வேண்டும்.

இதை அத்திவாரமாகக் கொண்டு கனடாவில் நமது சமூகத்தின் நிலைப்பாடு, வளர்ச்சி, கண்ணோட்டம், கலாசாரம், பங்களிப்பு போன்ற பல விடயங்களைநெறிப்படுத்தப்படலாம். நெறிப்படுத்தப்பட்ட சமூக வளர்ச்சியே நிலையான பெருமை கொள்ளக் கூடிய சமூக வளர்ச்சியாக அமையும். இதைப் பற்றிச் சற்று ஆழமாக சிந்தித்துச் செயல்படுவது அத்தியாவசியம்.

நூற்றாண்டு மாற்றத்தோடு இந்த முயற்சியை மேற்கொள்வது சமூகத்திற்குப் பல நன்மைகளை நிச்சயம் கொண்டு வரும்.

கனடிய தேசத்திடமிருந்து நாம் கற்றுக் கொண்டதும், பெற்றுக் கொண்டதும் ஏராளம். இப்போதுள்ள காலகட்டம் நாம் திருப்பிக் கொடுக்க வேண்டிய காலகட்டம். திருப்பிக் கொடுப்பதையும் தாராளமாக ஏராளமாகத் திருப்பிக் கொடுப்போம். இதனால் நமது அடுத்த சந்ததியின் வழியாக கனடிய தேசமும் அதன் மூலம் ஈழத் தமிழர்களும் பெருமை கொள்ளட்டும்.

அன்ரன் கனகசூரியர்

கனடியத் தமிழில்...

9. மடயர் - மடையர்:
மடம் அறியாமையைக் குறிப்பது. அதனால் மடயர் என்றால் அறிவீனர் அல்லது பேதையர் என்று பொருள். மடையர் சமையற்காரரைக் குறிப்பது. மடைத் தொழில் - சமையல் தொழில். மடை - உணவுப் படையல். மடை வைத்தல், கோயில் மடை, எட்டாம் மடை எனப் பலவாறு தமிழீழத்தில் வழக்கில் உள்ள அருமையான சொல் இது. மடைப்பள்ளி என்ற சொல் எமது நாட்டிலும் தமிழ் நாட்டிலும் கோயில் சமையல் அறையைக் குறிப்பது.

10. முயலுதல் -முயற்சித்தல்:
முயல் என்னும் வினையடியாகப் பிறந்தது முயற்சி என்னும் தொழிற் பெயர். முயல் - ஊக்கமுடன் செய், வருந்திச் செய், முனைப்புடன் ஓர் அலுவலை மேற்கொள் என்ற பொருளையுடைய ஏவல் வினை. இது தெரிநிலை வினைமுற்றாகும் பொழுது முயல்கின்றான், முயன்றான், முயல்வான் என்றே வரும். இம்முறையிலேயே பெண்பால், பலர்பால், பலவின்பால் வினைகளும் வடிவம் கொள்ளும். ஒரு போதும் முயற்சித்தான், முயற்சித்தாள் என்று வராது. தொழிற் பெயர்கள் தம்மளவில் நின்றவாறே வினையாகமாட்டா. புகழ்ச்சி புகழ்ச்சித்தான் என்றோ பெயர்ச்சி பெயர்ச்சித்தார் என்றோ வினையாகா.

11. மைத்துனர் - மைத்துணர்:
மைத்துனன், மைத்துனி, மைத்துனர் என்று எழுதுவதே முறையாகும்.

12. விநாயகர் - வினாயகர்:
வி+நாயகர் = விநாயகர். மேலான தலைவர் என்ற பொருளில் இது பிள்ளையாரைக் குறிப்பது. பிள்ளையாரை வினாயகர் என்று எழுதுவது சரியன்று.

சிலப்பதிகாரம் செய்த இளங்கோவடிகள் காலத்திலே சீத்தலைச் சாத்தனார் என்ற புலவர் ஒருவர் வாழ்ந்தார். ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையை ஆக்கிய பெரும் புலவர். நூல்களில் பிழைகளைக் காணின் ஆக்கியோர்களைக் குற்றம் சொல்லாது 'ஐயகோ, ஐயகோ இப்படியும் பிழைகள் விடுகிறார்களே" என்று வருந்தி எழுத்தாணியால் தமது தலையில் இவர் குத்திக் கொள்வாராம் அதனால் தலை புண்பட்டமையின் இவருக்குச் சீத்தலை (சீழ்+தலை) சாத்தனார் என்று பெயர் வந்ததாக ஒரு கதை. ஒன்றில் அவருக்குப் பிழைகளைச் சுட்டிக் காட்டும் துணிவு இல்லாதிருக்க வேண்டும் அல்லது சுட்டிக் காட்டினாலும் பயன் ஒன்றும் இருக்காது என்று அவர் எண்ணியிருத்தல் வேண்டும்.

எனக்குக் கொஞ்சம் துணிவு இருப்பதனாலும் தமிழர் தகவல் மூலம் தெரிவித்தால் நிச்சயம் பயன் இருக்கும் என்னும் நம்பிக்கையாலும் சிலவற்றைச் சுட்டிக் காட்டியுள்ளேன். வாழ்க எழுத்தாளர்! வளர்க தமிழ்!

கனடாவுக்குள் நுழைந்துள்ள யாழ்ப்பாணம்; பல சுதந்திரங்களை அனுபவிக்க சம உரிமை

மொழி, சமயம், கலைகளை வளர்க்கத் துடிக்கும் உத்வேகம் பிரவாகிக்கிறது. ஈழத் தமிழர்கள் அதிக எண்ணிக்கையில் வாழும் வெளிநாடு கனடா. அந்த நாட்டுக்குச் சென்ற மூத்த பத்திரிகையாளரும் எழுத்தாளருமான செல்லப்பா நடராசா அங்கு வாழும் யாழ்ப்பாணத் தமிழர்களையும் அவர் தம் வாழ்க்கையையும் நுணுக்கமாக அவதானித்து உதயனுக்கென விசேடமாக எழுதியுள்ளார். அங்கு குடியேறியவர்களின் உணர்வுகளையும் விருப்பங்களையும் கட்டுரையாளர் தமது எழுத்தினூடாக யாழ்ப்பாண வாசகர்களுக்குப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

பல இன மக்கள் வாழும் ஒரு நாட்டிற்குச் சமஷ்டி அரசியலமைப்பே மிகச் சிறந்தது என்பது ஈழத்துக் காந்தி தந்தை எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களது அரசியற் சித்தாந்தமாகும். அத்தகைய ஓர் அரசியலமைப்புத் தான் இலங்கைத் தமிழ் பேசும் மக்களுக்கும் சிறந்ததென அவர் நீண்ட காலமாகவே வாதாடி வந்தார். இதற்கு முன்மாதிரியாக அவர் கனடாவை உதாரணம் காட்டியதுண்டு.

ஆனால் இலங்கைத் தமிழ் மக்களில் ஒரு பகுதியினர், தாம் கனடா நாட்டுக்குள்ளேயே பெரும் எடுப்பில் அகதிகளாகப் புகும் நிலை வரும் என்று கனவிலும் கருதியிருக்க மாட்டார்கள். மூன்று கோடி சனத்தொகையையுடைய கனடாவில் இன்று ஒன்றரை இலட்சம் ஈழத் தமிழ் மக்கள் வாழ்கிறார்கள். இந்த எண்ணிக்கை மிக விரைவில் இரண்டு இலட்சத்தைத் தொட்டு விடுமென எதிர்பார்க்கப்படுகின்றது. உலகில் இலங்கைக்கு வெளியே இலங்கைத் தமிழ் மக்கள் அதிகமாக வாழும் நாடு கனடா என்பது வரலாறாகி வருகிறது.

இலங்கைத் தமிழ் மக்கள் 1983ம் ஆண்டிற்குப் பின்னரே பெரும் அளவில் கனடாவைத் தஞ்சம் அடைய ஆரம்பித்தனர். இதற்கு அந்த நாட்டின் மனித நேயப் பண்பே காரணம். எந்த நாட்டு மக்களாயினும் சரி தமது நாட்டில் வாழ வழியின்றித் தவித்துப் போன அகதிகளுக்கோ அல்லது அடித்து விரட்டப்படுபவர்களுக்கோ அன்புக் கரம் நீட்டும் நாடுகளின் வரிசையில் முதலிடம் வகிக்கும் கனடாவை ஒரு புண்ணிய பூமியாகவே நான் பார்க்கிறேன்; பல விடயங்களில்.

கனடாவுக்கு நிகராக இன்னொரு நாட்டை ஒப்புவமை காண்பது மிக அரிதாகின்றது. மகிமைகள் மிக்க இந்த நாட்டில் சுமார் இருநூறு நாடுகளைச் சேர்ந்த பல்வேறு இனமொழி பேசும் மக்கள் வாழ்கிறார்கள். ரொறன்ரோ நகரில் மட்டும் நூற்றி ஐம்பதுக்கு மேற்பட்ட இன மக்கள் வாழ்வதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. உலகின் பல்வேறு வகையான கலை, கலாசாரங்களையும், பண்பாடுகளையும், நடையுடைகளையும் ஒரே இடத்தில் காண வேண்டும் என்றால் அது ரொறன்ரோ மாநகரத்தில் மட்டும் தான் சாத்தியமாகும்.

சம உரிமை

கனடாவைத் தமது வாழ்விடமாகக் கொண்டுள்ள அனைத்து மக்களும் மொழி, மத, கல்வி, பொருளாதாரச் சுதந்திரங்களைச் சமமாக அனுபவிக்கும் உரிமைகளை உடையவர்கள். இங்குள்ள தமிழ் மக்கள் அனுபவிக்கும் சுதந்திரங்களுக்கோர் உதாரணமாக ரொறன்ரோவிலும் மொன்றியலிலும் நிறுவப்பட்டுள்ள திருக்கோயில்களைக் குறிப்பிடலாம். ரொறன்ரோவில் ஒன்றேகால் இலட்சம், மொன்றியலில் இருபதினாயிரம் என்ற கணக்கில் தமிழ் மக்கள் உள்ளனர். இதுவரை பத்துக்கு மேற்பட்ட கோயில்கள் நிறுவப்பட்டு அவை சிறப்பாக இயங்கியும் வருகின்றன. இந்த வரிசையில் நயினாதீவு நாகபூஷணி அம்மன் அடியார்கள் கனடாவில் "நயினாதீவு நாகபூஷணி அம்மன்"

செல்லப்பா நடராசா

கோயிலொன்றை நிறுவத் திட்டமிட்டுள்ளதுடன் இதன் பொருட்டு விக்கிரகங்களைத் தமிழகத்திலிருந்து தருவித்தும் விட்டனர். மத சுதந்திரம் இவ்வாறு இங்கு போற்றப்படுகின்றது.

திருவிழாக்கள்

ரொறன்ரோ றிச்மன்ட் ஹில் பிள்ளையார் கோயிலில் அண்மையில் நடைபெற்று முடிந்த வருடாந்த திருவிழாவன்று பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் பங்கு பற்றியிருக்கிறார்கள். அடியார்களுக்கு அன்னதானம் அளிக்கப்பட்டது. மொன்றியல் துர்க்கை அம்மன் வருடாந்த உற்சவமும் வெகு விமரிசையாக பூர்த்தியாகியுள்ளது. மொன்றியல் அருள்மிகு திருமுருகன் கோயிற் கொடியேற்றம் ஆவணியில் நடைபெறுவது வழக்கம். இக் கோயிற் திருவிழாக்களைக் கண்டு களிக்கவெனக் கனடாவின் பல பாகங்களிலிருந்தும் பக்தர்கள் வருவதுண்டு.

அந்தக் காலத்தில் யாழ்ப்பாணக் கோயிற் திருவிழாக்களுக்குத் தமிழ் நாட்டிலிருந்து பிரபல நாதஸ்வர தவில் வித்துவான்கள் வரவழைக்கப்படுவது போன்று, கனடாவுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து பிரபல நாதஸ்வர தவில் வித்துவான்கள் அழைக்கப் பெறுவது இந்தக் கால வழக்கமாகி வருகின்றது. இந்த வருடம் கனடாவில் சிறப்புக் கச்சேரிகள் செய்வதற்கென யாழ்ப்பாணம் பிரபல நாதஸ்வர வித்துவான்களான தெட்சணாமூர்த்தி உதயசங்கர், கே.நித்தியானந்தம் ஆகியோர் வந்துள்ளனர். இவர்களது கச்சேரிகளை அனுபவிப்பதற்கென்றே மக்கள் பெருமளவில் திரள்கிறார்கள். யாழ்ப்பாணம் போல் வடக்கு வீதியிற் தவிற் சமா கனடாத் திருக்கோயில்களிலுமுண்டு. புலம் பெயர்ந்து வந்துள்ள நிலையிலும் கனடாவில் தமிழ் மக்கள் தமது சில பாரம்பரியங்களைப் பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் வைகாசி மாதத்தில் பல திருக்கோயில்களில் வருடாந்தப் பொங்கல் உற்சவங்கள் நடைபெறுவதைப் போன்று மொன்றியல் மலை உச்சியில் வல்மொறின் ஸ்ரீமுத்துமாரியம்மன் வருடாந்த பொங்கல் விழா கடந்த ஜூன் மாதத்தில் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

தமிழ் விழாக்கள்

கனடாவில் இசை, நடனக் கல்லூரிகளுக்குக் குறைவில்லை. இத்துறைகள் சார்ந்த நிகழ்ச்சிகளும் அரங்கேற்றங்களும் ஏராளம். வாரந் தவறாது எங்கோ ஓர் இடத்தில் சதங்கை ஒலி கேட்கும். முத்தமிழ் விழாக்களும் சர்வ சதாரணம். யாழ்ப்பாணத்துப் பிரபல பாடசாலைகள் அனைத்திற்கும் கனடாவில் பழைய மாணவர் சங்கக் கிளைகள் உள்ளன. இவற்றின் வருடாந்தக் கொண்டாட்டங்கள் அனைத்தும் முத்தமிழ் விழாக்களாக மக்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்துவனவாக அமைகின்றன. யாழ்ப்பாணத்துக் கிராமங்கள், தீவுகளின் பெயர்கள் விளங்க எடுக்கப்படும் விழாக்களுக்கும் குறைவில்லை. இத்தகைய அனைத்து விழாக்களிலும் பட்டிமன்றங்கள், கவியரங்கங்கள், மலர் வெளியீடுகள் ஆகியவற்றையும் நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.

தவத்திரு யோகர் சுவாமிகள், குடைச் சுவாமிகள் எனப் போற்றப்படும் கோண்டாவில் கந்தையாச் சுவாமிகள் போன்றோருக்குக் குருபூசை விழாக்கள் கொண்டாடும் தொண்டர்கள் பலரும் கனடாவில் இருக்கிறார்கள். ஸ்ரீசத்ய சாயி பாபாவின் பஜனை மன்றங்களும் பல நூற்றுக் கணக்கில் செவ்வனே இயங்கி வருவதையும் இவ்விடத்தில் குறிப்பிடுவது பொருத்தமானது.

திருக்குறள், திருவாசகம், சைவ சித்தாந்த மகாநாடுகளுக்கும் இன்று கனடா பிரசித்தி பெற்ற இடமாகியுள்ளது.

கனடா வாழ் தமிழ் மக்களுக்கென இரு தமிழ் வானொலிகள் இருபத்து நான்கு மணி நேரமும் தமது சேவைகளை வழங்கி வருகின்றன. வார, மாத இதழ்களாகப் பத்துக்கும் மேற்பட்ட தமிழ்ப் பத்திரிகைகளைப் படிக்கும் வாய்ப்புகளையும் மக்கள் பெற்றுள்ளனர்.

எங்கும் எதிலும் தமிழ்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த புகழ் பெற்ற நல்லாசிரிய சமூகத்தினர்கள், கவிஞர்கள், புலவர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், ஒலிபரப்புத் துறையாளர்கள், சமயப் பிரமுகர்கள், கர்நாடக சங்கீத வித்துவான்கள், பரத நாட்டிய வல்லுனர்கள், வைத்திய கலாநிதிகள், சட்டத்தரணிகள், கணக்காளர்கள், பொறியியலாளர்கள் பலரை இன்று கனடாவிலும் சந்திக்க முடியும். இத்தகையோரது சேவைகள் கனடாவில் தமிழ் மக்களைத் தலை நிமிர வைத்துள்ளன எனலாம்.

யாழ்ப்பாண மண்வாசனை

கனடாவிற் குடியேறியுள்ள இலங்கைத் தமிழ் மக்களிற் பெரும்பான்மையானவர்கள் யாழ்ப்பாண மக்களேயாதலால் இங்கு யாழ்ப்பாண மண்வாசனையே மிகுந்துள்ளது. தமிழ் மொழியையும் தமிழ்க் கலைகளையும் வளர்க்கத் துடிக்கும் ஆர்வலர்களுக்கும் இந்த நாட்டில் எதுவித பஞ்சமுமில்லை. தமிழ் வியாபார நிலையங்களைப் பெரிய அளவிலான தமிழ்ப் பெயர்ப் பலகைகள் அலங்கரிக்கின்றன. ரொறன்ரோ ஸ்காபரோவில் சங்கானைச் சந்தை என்னும் பெயரில் சந்தை ஒன்று கூட நிறுவப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் யாழ். நகரில் பிரசித்தியாக விளங்கிய 'மொக்கன் கடை'யும் கனடாவிற்கு இடம் மாறிவிட்டது.

அனைத்து இன மக்களும் கனடாவில் தத்தமது தாய் மொழியைக் கற்பதற்கு வசதிகள் உள்ளன. ரொறன்ரோவில் பதினைந்துக்கு மேற்பட்ட கல்விச் சபைகளால் ஆரம்ப, இரண்டாம் நிலைகளில் பாடசாலைகளில் தமிழ்ப் பாடப் போதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன. வருடா வருடம் ரொறன்ரோ பல்கலைக்கழகங்களில் மருத்துவம், பொறியியல், விஞ்ஞானம், கட்டடக் கலைப் பீடங்களுக்குப் பெருமளவு தமிழ் மாணவர்கள் தெரிவாகி வருவதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

பொருளாதார தொழிற் துறைகளில் முன்னேறி வரும் ஓர் இனமாகத் தமிழ் மக்கள் இன்று கனடாவில் இனம் காணப்பட்டுள்ளனர். தமது பழைய கிராமங்களில் விவசாயத்தில் பயிற்சியாயிருந்தவர்கள் கோடை காலங்களில் வீட்டுத் தோட்டங்களில் கீரை, காய்கறி வகைகளைப் பயிர் செய்து இன்புறுகிறார்கள். சுருங்கச் சொல்லின் யாழ்ப்பாண மக்கள் தமது அன்றாட வாழ்வில் எவை எவற்றையெல்லாம் கைக்கொண்டு இன்புற்று வாழ்ந்தனரோ, அவை அவைகளை அவர்கள் தமது கனடா வாழ்க்கையிலும் கைவிடத் தயாராக இல்லை. பூக்களாலான மணவறை கூட ஒழுங்கு செய்து கொள்ள முடியும் எனில் மற்றும் பல அம்சங்களை வாசகர்களின் கற்பனைக்கு விட்டு விடுகின்றேன்.

இலங்கை நாணய மதிப்பில் ஒரு கிலோ முருங்கைக்காய் 350 ரூபாவாகவும், கறி முருங்கை இலை ஒரு கிலோ 650 ரூபாவாகவும் கனடாவில் விற்பனையாகின்றன. இந்தியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதியாகின்றன. யாழ்ப்பாணத்து அனைத்துக் காய்கறி வகைகளுக்கும் பஞ்சமில்லை. ஆனால் இவை யாழ்ப்பாணத்திலிருந்து இறக்குமதியாவதில்லை என்பதே எனது கவலை.

தமிழ் அரசுக் கட்சியின் ஊர்காவற்றுறைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர்களாக விளங்கியவர்களுள் ஒருவர் வி.ஏ. கந்தையா அவர்கள். பொதுக் கூட்டங்களில் யாழ்ப்பாணப் பொருளாதாரம் பற்றிப் பேசுகையில், கறி முருங்கை மரங்களைப் பற்றியும் அவர் பேசத் தவறுவதில்லை. வளவு வேலிகள் தோறும் பத்துக் கறிமுருங்கை மரங்களை நட்டு வளர்த்தால் அவற்றின் பெறுமதி என்ன என்று ஒரு கேள்வியைக் கேட்டு அவை கூடத் தமிழ் மக்களின் பொருளாதார நலன்களுக்கு உறுதுணையாக நிற்கவல்லவை தான் என விளக்கமும் கொடுப்பார். கனடாவில் கறி முருங்கை இலை இறக்குமதியாவதை அறிந்தவுடன் வி.ஏ. கந்தையா அவர்களின் நினைவே உடன் என் மனதில் எழுந்தது.

இன்றெல்லாம் யாழ்ப்பாணத்தில் வாங்க முடியாத மிகத் தரம் வாய்ந்த வரகு அரிசியைக் கனடாவில் தாரளமாகப் பெற முடிகின்றது. சுத்தமான குரக்கன், ஒடியல் மா ஆகியவற்றையும் வாங்க முடியும். கூழுக்குத் தேவையான பொருட்களைத் தம்மிடம் பெறலாம் எனும் விளம்பரங்களை வர்த்தக நிலையங்கள் பத்திரிகைகளில் வெளியிடுவதைப் பார்த்து ஒடியற்கூழ் குடிப்பதைப் போல நன்கு ரசிக்க முடிந்தது.

குருக்கள், மணவறை, மண்டபம், மங்கள வாத்தியம், மிக உவப்பான சைவ போசனம். பூ அலங்காரம், உற்றார் உறவினரின் வசதிகள் அனைத்தையும் கருதி அமெரிக்க நாடுகளைச் சேர்ந்த தமிழ்த் திருமணங்கள் பல கனடாவில் நடத்தப்படுவதைப் பார்த்து என்னால் வியப்படையாமல் இருக்க முடியவில்லை. கோயில் குருக்கள்மார் பலர் திருமணப் பதிவுகாரர்களாகவும் கடமையாற்றுகிறார்கள்.

கோடை காலத்தில் யாழ்ப்பாணக் கிராமங்களுக்கிடையிலான உதை பந்தாட்டம், கிரிக்கெட் விளையாட்டுக்களும் உற்சாகமாக நடைபெறுவதும் வழமையாகி விட்டதொன்றாகும்.

கனடாவில் சீரும் சிறப்பும் மிக்க ஒரு இனமாக வாழவும் வளரவும், பலமாகக் காலூன்றவும் தமிழ் மக்கள் ஆரம்பித்து விட்டனர். இவ் வேளையில் தமிழ் மக்கள் கனடாவில் குடியேறியுள்ளனர் என்ற சிந்தனையை விட கனடாவுக்குள் யாழ்ப்பாணம் நுழைந்து விட்டது போன்ற ஒரு தோற்றமே எனது மனதிற்படுகின்றது.

தமிழர் தகவல் இதழ்கள் தபால் மூலம் விநியோகம்

தமிழர் தகவலின் இதழ்களை நூற்றுக் கணக்கானவர்கள் மாதாமாதம் தபால் மூலமும் பெற்று வருகின்றனர். விநியோக நிலையங்களுக்குச் சென்று குறிப்பிட்ட திகதிகளில் பெற முடியாதவர்களே தபால் மூலம் பெறுகின்றனர்.

தபால் மூலம் பெற விரும்புபவர்கள் தபாற் கட்டணத்துக்கான செலவினைத் தாமே பொறுப்பேற்க வேண்டும். ஆண்டு மலர் உட்பட ஒரு வருடத்துக்கான பன்னிரண்டு இதழ்களைத் தபாலில் பெற பதினைந்து (15) டாலர்கள் செலுத்த வேண்டும். வருடத்தின் எந்த மாதத்திலிருந்தும் தபால் மூலம் பெறுவதை ஆரம்பிக்கலாம்.

இதற்கான காசுக் கட்டளை அல்லது காசோலை TAMILS' INFORMATION என்ற பெயருக்கு எழுதப்பட்டிருக்க வேண்டும். அத்துடன், ஒரு கடதாசியில் உங்கள் பெயர், தபால் முகவரி ஆகியவற்றை ஆங்கிலத்தில் தெளிவாக எழுதி வைக்க வேண்டும். உங்களுடன் தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம் தவறாது குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

முக்கியமான அறிவிப்பு: தமிழர் தகவலைத் தொடர்ந்து பெறவிரும்புபவர்கள், தாங்கள் முன்னர் அனுப்பிய பணம் எப்போது முடிவடைகின்றது என்பதை நினைவில் வைத்திருந்து, கடைசி மாதத்துக்கு முன்னராக பணம் அனுப்பினால் தொடர்ந்து தகவலைப் பெறமுடியும். தவறும் பட்சத்தில், பன்னிரண்டு இதழ்களுடன் தபால் மூலம் அனுப்பப்படுவது நிறைவுபெறும். தபாற்செலவு முடிவடைவதை நினைவூட்டும் கடிதங்கள் எதுவும் அனுப்பப்பட மாட்டாது என்பதை ஞாபகத்தில் வைத்திருக்கவும்.

தபால் மூலம் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
Tamils' Information,
P. O. Box: 3,
Station - F,
Toronto, Ontario.
M4Y 3L4.

மலரின் எழுத்தாளர்கள்
Our Contributors



அகஸ்தின் ஜெயநாதன்
முன்னாள் தலைவர், 'சேக்கம்'



நாகா இராமலிங்கம்
சமூக உத்தியோகத்தர்



றொசலின் இராசநாயகம்
முன்னாள் தலைவர்
'முது தமிழர் மன்றம்'



கவிநாயகர் வி. கந்தவனம்
தலைவர்
'தமிழர் எழுத்தாளர் இணையம்'



அன்ரன் கனகசூரியர்
சமூக சேவையாளர்



செல்லப்பா நடராஜா
மூத்த ஈழப் பத்திரிகையாளர்

Immigration plans for the new century

Canada's Immigration Act requires that, each year, after consultation with the provinces and other individuals and organizations deemed appropriate, the federal minister of immigration shall by November 1, introduce immigration plans for the following year to Parliament. This article outlines Citizenship and Immigration Minister Elinor Caplan's plans for the year 2000.

Why Does Canada Need Immigrants?
Since 1867, over 14 million people have emigrated to Canada. These immigrants and their descendants have contributed to Canada's economic growth and social development and have helped define the country's collective identity. The decline in the rate of natural population means Canada needs immigrants if it wants to continue to develop and grow in the future.

How Many People will be admitted in 2000?
The Year 2000 Immigration Plan reflects the Canadian Government's belief in the social and economic benefits of immigration while maintaining Canada's long-standing humanitarian tradition. The plan maintains the current balance between the economic and family class components, ensuring that immigration provides significant economic benefits while at the same time giving priority to family reunification. The plan also maintains the current planning range for refugees. The response to the crisis in Kosovo, which saw Canada accept over 7,000 refugees, is a concrete example of the government's commitment to a humanitarian policy of providing refuge to those in need of protection. CIC is committed to taking all possible measures to ensure that the overall planning range of 200,000 to 225,000 established in the plan, including 177,900 to 195,700 immigrants and 22,100 to 29,300 refugees, is met.

How Many Family Class Immigrants will be admitted?
Family reunification remains an integral part of Canada's immigration policy. The family component will account for nearly 32 percent of the Immigration Plan in 2000. Family immigration includes immediate family members (spouses, fiances, dependent children under the age of 19, and parents and grandparents). Within this component, however, priority is given to reuniting spouses and children sponsored by family members already in Canada.

The plan estimates the arrival of 42,000 to 45,000 spouses, fiances and children, and 15,000 to 16,000 parents and grandparents. Since 1998, the number of applications submitted to sponsor family members from overseas has increased. This increase in interest has resulted in an increase in the number of family class arrivals in 1999, especially in the immediate family class categories of spouses and dependent children.

How Many Economic Immigrants Will be Admitted?
Economic immigrants are selected on the basis of their ability to contribute to Canada's economic and social well-being. Immigrants in this component bring with them the skills, entrepreneurial spirit and business knowledge that allow them to contribute to Canada's economy soon after arrival. The plan establishes a range of 116,900 to 130,700 for this component. This includes 100,500 to 113,300 skilled workers, 15,000 to 16,000 business immigrants, including entrepreneurs, investors and self-employed, and 1,400 provincial nominees.

Refugees Arrival and Family Reunification

Citizenship and Immigration is working to modernize its selection process to ensure economic immigrants have the skills and business experience to allow them to adapt to a rapidly developing economy such as Canada's, ensuring the dynamism of our economy by attracting the best and the brightest. Part of this process includes providing the means for provincial and territorial governments to participate directly in the selection of immigrants destined for their regions. To day, agreements have been completed with five provincial governments.

How Many Refugees will be admitted?
Canada protects refugees by resettling them from abroad and by assessing the validity of asylum claims made by those who make their requests for protection in Canada. Refugees selected for resettlement from abroad come to Canada either with government assistance or through private sponsorship. The number of refugees landed in Canada depends on two primary factors: the number of refugee claims submitted before the Immigration and Refugee Board and the acceptance rate of the Board. Both these numbers have remained relatively unchanged since 1998. As a result, total landings for the year will be around the same as in 1998: in the area of 10,200. Citizenship and Immigration is committed to achieving the 1999 target of 7,300 government-assisted refugees and to maintaining this target in 2000.

The Year 2000 Plan maintains the 1999 overall range of 22,100 to 29,300 for refugees. This is broken down by category as follows: government-assisted, 7,300; privately sponsored, 2,800 to 4,000; refugees landed in Canada, 10,000 to 15,000 and dependents abroad, 2,000 to 3,000.

Will Temporary Foreign Workers be allowed in 2000?
In addition to the selection of skilled workers as immigrants, Canada receives a growing number of skilled temporary workers. Foreign workers, who have skills that are in short supply in the Canadian labour market and whose presence in Canada offers a net benefit, are issued employment authorizations and admitted on a temporary basis. Employment authorizations are also issued to temporary foreign workers under the terms of multilateral or bilateral trade agreements or to promote reciprocal opportunities for Canadian workers abroad. The entry of skilled workers on a temporary basis to respond to skill shortages in the short term enhances Canada's productivity and competitiveness in the global economy.

'நீங்கள் கனடாவிற்கு எப்ப வந்தனீங்கள்?'
'1987ல்'
'அதுக்கு முன்னாலயும் இங்க ஆக்கள் வந்திட்டினம்!'
'எப்ப இருந்து?'
'1980 இலேயே வந்திட்டினம்..'
'அப்ப 87 இலிருந்து மொன்றியாலில தான் இருக்கிறியளே..?'
'ஓம்..'
'ஏன் ரொறன்ரோவுக்கு மாறேல்ல..?
'இங்க... கியூபெக்கில இருந்தா கெதியா 'அக்ஸெப்ற்' பண்ணுவினம் என்று இங்க இருக்கிற ஆக்கள் சொல்லிச்சினம்...அப்பிடியே அவை சொன்னபடி நாங்கள் இங்க இருந்திட்டம்'
'அப்ப பன்னண்டு வருஷமாய் இங்க தான் இருக்கிறியளோ!'
'சரியாய்ச் சொன்னியள்'
'பிள்ளையளின்ரை படிப்பு...'
'இங்க தான் படிக்கினம்'
'பிரஞ்சிலயோ...?'
'பிரஞ்சும் இங்கிலீசும் தான். இங்கை படிக்கிற புள்ளையள் கட்டாயம் பிரஞ்சும் - இங்கிலீசும் படிக்க வேணும்'
'கனடாவில இருக்கிறதெண்டால் இரண்டு பாஷையும் படிக்கிறது நல்லது தானே...!'

அகதிநிலை கோரி வந்த புதியவர் ஒருவருக்கும் அகதிநிலை விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டுக் கனடிய குடியுரிமையும் பெற்ற நபர் ஒருவருக்குமிடையே நடந்த உரையாடலின் ஒரு பகுதியையே மேலே நீங்கள் படித்தீர்கள். உண்மையும் அது தான். கனடிய எல்லைக்குள் கால் மிதித்த பெரும்பான்மைத் தமிழர்கள் தங்கள் வருகையின் நுழைவாயிலாகக் கால் பதித்த இடம் மொன்றியால் நகரமேயாகும்.

எண்பதுகளில் நூற்றுக்கும் குறைவாக வருகை தந்து அகதிநிலை விண்ணப்பம் கோரியவர்களின் தொகை 83க்குப் பின் படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கியது.

கனடிய மாநிலங்களில் பிரஞ்சு மொழியைத் தாய்மொழியாகக் கொண்டு அதிக அளவில் வாழும் பிரஞ்சுக் கனடியர்களைக் கொண்ட மாநிலமே கியூபெக் மாநிலம். கியூபெக் மாநிலத்தின் முதன்மை நகரமாக விளங்கும் மொன்றியால் பெருநகருக்கே பெருந் தொகையான தமிழர்கள் அகதிநிலை கோரி வந்தனர். கியூபெக் மாநிலத்தின் அரசியல் தலைநகர் 'கியூபெக் நகர்' என்பதாகும்.

85 இலிருந்து மொன்றியால் பெருநகரில் அகதிநிலை கோரி வந்தவர்களுக்குச் சட்ட ஆலோசனை வழங்கிவரும் சொலிசிற்றர் திரு. லிங்கா தியாகராஜா கூறுகிறார்...(இவர் இலங்கையில் சட்டத்தரணியாகப் பயிற்சி பெற்று - லண்டனில் சொலிசிற்றர் பரீட்சையில் சித்தி பெற்றவராவார்) "இப்போதும் கூட மாதம் ஒன்றுக்குச் சராசரி ஐம்பது இலங்கைத் தமிழர்கள் (ஆண்-பெண்-குழந்தைகள் என்று) கியூபெக் மாநில எல்லைக்குள் வந்ததும் மொன்றியால் நகரிலேயே அகதிநிலை கோரி விண்ணப்பம் செய்ய உதவி கேட்டு வருகிறார்கள்."

விண்ணப்பம் செய்யும் ஐம்பது பேரில் குறைந்தது நாற்பது பேராவது அகதிகளாக அங்கீகரிக்கப்படுகிறார்களென்றும் இத்தொகை கனடிய பிற மாநிலங்களோடு ஒப்பிடுகையில் நூறு வீதம் என்றும் புள்ளி விபரம் காட்டுகிறார்.

Fast track என்று சொல்லப்படும் 'விரைவாக அகதிநிலைக் கோப்புகளைத் தீர்மானித்தல்' கியூபெக் மாநிலத்தில் விண்ணப்பம் செய்தால் இரு மாதங்களுக்குள் முடிவாகும்.

கடந்த ஒன்றரை ஆண்டுகளாக Photo Identity புகைப்பட அத்தாட்சி (அறிமுக அட்டை - கடவுச் சீட்டு) கேட்டு இல்லாதவிடத்து விண்ணப்பதாரிகளின் கோரிக்கைகள் பின்போடப்பட்டதாகவும்...இப்போது பழையபடி வேகமாகத் தீர்மானம் செய்யப்படுவதாகவும் கூறுகிறார். கடந்த நவம்பர் 29இலிருந்து அகதிநிலை கோரப்படும் விண்ணப்பங்கள் "கட்டாயம் இரு மாத கால எல்லைக்குள்" முடிவு செய்யப்பட வேண்டும் எனச் சுற்றறிக்கை சம்பந்தப்பட்ட இலாகாவிற்கு அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் விளக்கம் அளிக்கிறார்.

தாயகத் தமிழர்களின் நுழைவாயில்

(1980 முதல் 1999 வரை தமிழர்கள் வாழ்வியல்)

கே.ரீ.சண்முகராஜா

கோன்வால், ரொறன்ரோ, வன்கூவர் போன்ற கனடிய நகரங்களில் வாழ்ந்து வரும் பெருந் தொகையான தமிழர்களுள் ஐம்பது வீதத்திற்கும் அதிகமானோர் மொன்றியால் நகரை நுழைவாயிலாகக் கொண்டு வெளியேறியவர்களே என்பது பதிவான தகவல்.

இன்று மொன்றியால் பெருநகர் எல்லைக்குள்ளும் எல்லைப்புறக் கிராமங்களிலும் பரந்து வாழும் தமிழர்கள் தொகை சுமார் இருபதினாயிரம் என்பது அறியப்படுகின்ற தகவலாகும்.

வாழ்வியல் - பொருளாதாரம்

பெரும்பான்மை ஆண்களும், பெண்களும் உழைக்கும் வர்க்கம். மத்திய தரக் குடும்பநிலை. குடும்பத்தில் ஒருவர் உழைத்தால் பற்றாக்குறை. நூற்றுக்குப் பத்து வீதமானோர்களே தொழில் நுட்ப உயர் உத்தியோகங்களில் உள்ளனர். சுயதொழில் செய்பவர்கள் (வர்த்தகம்) ஒரு வீதம் என்று கூறலாம். ஆனால் அமைதியான வாழ்வு வாழ்பவர்கள் இங்கு வாழக் கூடிய தமிழ் மக்கள் என்பது எனது கணிப்பீடு.

கல்வி - தொழில்

இங்குள்ள பெற்றோர்களினது பிள்ளைகள் இரு மொழிக் கல்வித் திட்டத்தில் பயின்று வருபவர்களானபடியால் விரைவில் இளைய தலைமுறையினர் அவரவர் படிப்பிற்கேற்ற வேலை வாய்ப்புகளைப் பெறுவார்கள் என்று நம்பலாம்.

நூற்றுக்கும் அதிகமான இளைய தலைமுறையினர் கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் படிப்பைத் தொடர்கின்றனர்.

கனடியப் பிற மாநிலங்களில் கல்வி பயிலும் மாணவர்களுடன் ஒப்பிடும் பொழுது கியூபெக் மாநிலத்தில் கல்வி பயிலும் (மொன்றியால்) தமிழ்ப் பிள்ளைகள் தாய்மொழியான தமிழுடன் பிரெஞ்சு, ஆங்கிலம் என மும்மொழிகள் அறிந்தவர்களாக விளங்குவது தனிச் சிறப்பு.

பிரெஞ்சு, ஆங்கில அறிவுடனும் பட்டப்படிப்புடனும் வெளி மாநிலங்களிலும், அமெரிக்கத் தொழில் நகரங்களிலும் வேலை வாய்ப்புத் தேடுபவர்கள் இலகுவில் தெரிவு செய்யப்படுவார்கள்.

அது மாத்திரமன்றி, அமெரிக்க, கனடிய மற்றும் ஏனைய மாநிலக் கல்விக் கூடங்களிலும் பார்க்க கியூபெக் மாநிலக் கல்விக் கூடங்களில் பயில்வது நிதி அளவில் குறைந்த செலவுடையதாகும்.

கியூபெக் கல்வி அமைச்சு வழங்கும் உதவிகள் வசீகரமானவை. கனடாவின் பிற மாநிலங்களிலிருந்தும், அமெரிக்க நகரங்களிலிருந்தும் இங்கு வந்து உயர்கல்வியைத் தொடரும் மாணவர்கள் தொகையைப் பார்த்தால் இந்த உண்மை தெரிய வரும்.

அண்மையில் (அமெரிக்காவிலிருந்து) நோர்த் கரோலினாவிலிருந்து மொன்றியால் கொன்கோடியா பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பை முடித்துக் கொண்டு ஊர் திரும்பிய மாணவி ஒருவரைச் சந்திக்க நேர்ந்தது. "எங்கள் நாட்டில் உயர் கல்வியைத் தொடருவதாயின் வசதி படைத்தவர்களினாலேயே முடியும். சாதாரண, மத்திய தரக் குடும்பங்களிலிருந்து வரும் வருவாயில் தங்கியுள்ளவர்களுக்கு அது இயலாத காரியம். ஆனால் மொன்றியாலில் வந்து வாடகை அறையில் தங்கி, பகுதி நேர வேலையும் செய்து அப்பா அம்மா அனுப்பும் பணத்தில் (குறைந்தளவு) படிப்பை முடிப்பது இலகுவாக உள்ளது. இங்கு படிப்பது செலவு குறைவு" என்கிறார் அந்த அமெரிக்க மாணவி.

(மறுபக்கம் பார்க்க)

இவ்வளவு வசதி வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கல்வி, தொழில் நுட்ப அறிவுகளை வளர்த்துக் கொண்டு, அந்த அறிவை சொந்த மாநிலத்திலே பயன்படுத்தாமல் பல கியூபெக் மாநிலக் குடிமக்கள் வேறு இடங்களுக்குப் புலம்பெயர்ந்து செல்கிறார்கள் என்றும் மாநில அரசு மனம் வருந்துகிறது. அதிக சம்பளமும், எதிர்கால சுபீட்சமும் கருதி மாணவர்கள் வேறு இடங்களுக்குப் போவது தவிர்க்க முடியாதது.

எது எப்படியிருந்தாலும் எமது தமிழ்ப் பிள்ளைகளுக்குக் கியூபெக் மாநிலம் வழங்கும் கல்வி வசதிகள் அவர்களது எதிர்காலம் பிரகாசமாக அமைவதற்குக் கிடைக்கும் வரப் பிரசாதமேயாகும்.

சமயம் - வழிபாடு

மொன்றியாலில் வாழும் தமிழர்களில் 90 வீதமானோர் சைவ சமய மக்களேயாவர். கிறிஸ்தவ சமய மக்களுக்கு இங்குள்ள தேவாலயங்களே போதுமானது; சைவ சமய மக்களது மத நம்பிக்கை, வழிபாட்டு முறைகளைப் பேணிப் பாதுகாப்பது என்பது எமது பண்பாடு, கலாசாரத்தோடு ஒன்றிய விடயமாகும். சைவத் தமிழர்கள் எந்த நாட்டில் இடம் பெயர்ந்து வாழ்ந்தாலும் அவர்களது கலாசார அடையாளங்களை இழக்காமல் காப்பாற்றக் கூடிய இடம் திருக்கோயில்களேயாகும்.

அந்த வகையில் மொன்றியலில் வாழகின்ற சைவத் தமிழ் மக்கள் ஆன்மீகப் பற்றும், மத நம்பிக்கையும் நிரம்பப் பெற்றவர்கள். அதன் வெளிப்பாடாக, மூன்று கோயில்களை நகரின் வெவ்வேறு பகுதிகளில் நிர்மாணித்துள்ளார்கள்.

பொதுமக்கள் அதிக அளவில் நிர்வாகத்தோடு தொடர்புள்ளதாக அருள்மிகு திருமுருகன் ஆலயமும், ஸ்ரீ துர்க்காதேவி ஆலயமும், தனி ஒருவரது முயற்சியின் பயனாக 'ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயமும்' மக்களின் வழிபாட்டு மையங்களாக விளங்கி வருகின்றது.

ஆண்டுதோறும் ஆவணி மாதத்தில் அருள்மிகு திருமுருகன் கோயிலில் நடைபெற்று வரும் அலங்காரத் திருவிழா நிகழ்ச்சிகள் பிரசித்தமானவை. குறிப்பாக தேர்த் திருவிழா எமது தாயக மண்ணின் புண்ணியத் தலங்களை நினைவூட்டுவது போன்று மிகச் சிறப்பாகவும், பக்தி பூர்வமாகவும் நடைபெற்று வருகிறது. கனடா, அமெரிக்க நகரங்களிலிருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் இத் தேர்த் திருவிழா நாளின் போது கூடுவார்கள். தமிழ் மக்களை ஒன்றுபடுத்துவது இறை நம்பிக்கையே என்பது எக்காலத்திற்கும் பொருந்தும்.

மொன்றியால் நகரிலிருந்து ஒரு மணி நேரப் பயணத்தின் பின் சென்று வழிபடக் கூடியதாக விளங்கும் 'ஸ்ரீ சுப்பிரமணிய

தமிழர்கள் வாழ்வியல்
80 முதல் 99 வரை

ஐயப்ப சுவாமி கோவில்' பல்லின மக்களும் சென்று வழிபடும் யாத்திரைத் தலமாக மாறி வருகிறது.

'வல்மொறின்' என்று சொல்லப்படும் மலையும் மலை சார்ந்த குறிஞ்சி நிலப் பரப்பில் இவ்வாலயமும், அதனுடன் இணைந்த ஆச்சிரமமும் அற்புதமாக அமைந்துள்ளது.

கதிர்காமக் கந்தவேளை நினைவூட்டும் விதத்தில் ஆண்டுதோறும் ஆனி மாதத்தில் நடைபெறும் காவடி உற்சவமும், பொங்கல் படையலும் வட அமெரிக்காவில் முக்கியமான திருவிழாவாகக் கருதப்படுகிறது.

வல்மொறின் சுப்பிரமணிய ஐயப்ப சுவாமி கோயில் வளர்ச்சிக்கு உறுதுணையாகப் பணிபுரிந்து தொண்டாற்றுபவர்கள் மொன்றியால் வாழ் இளைஞர்களேயாகும்.

வாழையடி வாழையாகத் தொடரும் மத நம்பிக்கையையும் திருவிழாக் காட்சிகளையும் முன்னெடுத்துச் செல்லும் புதிய தலைமுறைத் தமிழ் மக்களையும், தொண்டர்களையும் எத்தனை தடவை பாராட்டினாலும் தகும். 'எமது வாழ்வு நாளை மலரும்' எனும் நம்பிக்கையைத் தமிழர்களுக்குத் தருவது கடவுள் நம்பிக்கையே ஆகும்.

அந்த வழியில் மொன்றியால் நகரம் ஆலயங்கள் நிறைந்த ஆன்மீகப் பற்று மிகுந்த புனித நகரம் (City of Sheriene) என்று சொன்னால் கூட மிகையில்லை.

அது மாத்திரமல்ல உலகம் முழுவதும் பல்கிப் பெருகி வரும் பல்லின வழிபாடாகிய சாயி வழிபாட்டு நிலையங்களும் கிறிஸ்தவர்களுக்கென்றில்லாமல் சைவ மக்களும் நம்பிக்கையுடன் போய் வழிபடும் "புனித சூசையப்பர் மலைக் கோயிலும்" மொன்றியால் நகரைப் புனிதப்படுத்துகிறது.

விளையாட்டு - கலை கலாசார நிகழ்ச்சிகள்

மொன்றியால் வாழ் தமிழர்களை அதிக அளவில் கவனிக்க வைப்பது அவர்களது விளையாட்டு நிகழ்வுகளேயாகும் என்பது பிற மாநிலத் தமிழர்களது கருத்தாகும். இது முற்றிலும் உண்மையானதேயாகும். மொன்றியால் நகரில் உலகத் தமிழர் அமைப்பின் விளையாட்டுப் பிரிவினரால் கோடை கால விடுமுறையின் போது நடத்தப் பெற்றுவரும் விளையாட்டுப் போட்டிகளை அவதானித்து வருவோர்க்கு முன் கூறிய கூற்று எத்தகைய உண்மை வாய்ந்தது என்பது தெளிவாகும். முக்கியமாகப் பெற்றோர்கள் பிள்ளைகளிடத்துக் கொண்டுள்ள அக்கறையும் ஆர்வமும் மெச்சந் தகுந்ததாகும். பல்வேறு விதமான தட-களப் போட்டிகளிலும், பயிற்சிகளிலும் பிள்ளைகளுடன் பெற்றோர்களும் இணைந்து பங்கேற்பார்கள்.

வல்வெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. பாலசுப்பிரமணியம் என்பவர் 40 வயதுக்கு மேற்பட்டோர் கலந்து கொள்ளும் போட்டிகளில் பங்கு பற்றி கடந்த ஐந்து ஆண்டுகளாக நீளப் பாய்ச்சலிலும், நூறு யார் ஓட்டத்திலும் சாதனை படைத்து வருகிறார். அவரது மகன் செல்வன் பிரசாந்த் பாலசுப்பிரமணியம் 13 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கிடையேயான நீச்சல் போட்டியில் தொடர்ந்து வெற்றியீட்டி வருகிறார். இப் போட்டி மொன்றியால் பாடசாலைகளுக்கிடையே நடைபெறுவது. அது போல் தாய்க்குலத்திலிருந்து திருமதி, ஜெயந்தி ரஞ்சன் கடந்த பல வருடங்களாகத் தட-களப் போட்டிகளில் பங்குபற்றிச் சாதனை புரிந்தமைக்காக உலகத் தமிழர் அமைப்பு இவ்வாண்டு அவரைப் பாராட்டிக் கௌரவித்தது.

அதே போன்று மாநில அளவிலும் தேசிய அளவிலும் உயரம் பாய்தலில் தேசிய சாதனை படைத்த செல்வன் ஜெயஹரன் திருச்செல்வம் மொன்றியாலின் தமிழீழ மகன் என்பது மெய்சிலிர்க்க வைப்பதாகும். தந்தையார் திருச்செல்வம் அனுபவம் வாய்ந்த விளையாட்டு வீரரும், சிறந்த உதைபந்தாட்ட, கரப் பந்தாட்ட நடுவரும் கூட.

கியூபெக் மாநில அங்கீகாரம் பெற்றதுடன் பல்வேறு சாதனைகளை வெவ்வேறு போட்டிகளில் நிலைநாட்டிய 'மொன்றியால்-சிலோனிஸ் விளையாட்டுக் கழகம்' கிரிக்கெட், உதைபந்தாட்டப் போட்டிகளில் வெற்றிக் கொடி நாட்டிவரும் கழகமாகும். அதே போல் உதைபந்தாட்ட, கரப் பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளை ஆண்டு தோறும் சிறந்த முறையில் நடத்தி எமது விளையாட்டுப் பிரியர்களை ஊக்குவித்தும், கௌரவித்தும் வருகின்ற மொன்றியால் விக்ரோறியா விளையாட்டுக் கழகம், மொன்றியால் புளூஸ், சோவோ விளையாட்டுக் கழகம், ஜீன்தலோன் கழகம், சன்சைன் விளையாட்டுக் கழகம் என அனைத்தும் விளையாட்டுத் துறைக்குப் புகழ் சேர்த்து மொன்றியால் வாழ் தமிழர்களை தனித்துவம் மிக்கவர்களாக உயர்த்தியுள்ளது.

எம்மை சுதந்திரமாக வாழ வைக்கும் கனடிய மண்ணின் தலைவாயில் நகரமாக விளங்கும் மொன்றியால் நகர் மக்கள் கனடியத் தமிழர் வரலாறு எழுதும் போது முதலிடத்திலேயே வைக்கப்படுவார்கள் என்பதற்கு இக் கட்டுரைக் குறிப்புகள் ஆதாரமாக விளங்கும் என நம்புகின்றேன்.

பால்ய நெறிப் பிறழ்வு
Juvanile Delinquency

எஸ். பத்மநாதன்

வயது வந்தவர்கள் அதிகளவில் குற்றச் செயல்களில் ஈடுபடும் நிலை மாறுதலடைந்து வயதில் குறைந்த பால்யர் அல்லது இளம் வயதினர் பாரதூரமான குற்றங்கள் புரியும் ஒரு சூழ்நிலை இன்று தோன்றியுள்ளது. எந்த வெகுசனத் தொடர்புச் சாதனங்களைப் பார்த்தாலும் கொலைச் சம்பவங்கள், பாலியல் வல்லுறவுகள், குழு மோதல்கள், வன்முறைகள், சொத்துகளை நாசம் புரிதல் போன்றவை 12-18 வயதிற்கு இடைப்பட்டவர்களால் அதிகம் நடத்தப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. ஒரு புறத்தில் சிறுவர் நலனில் அக்கறை காட்டும் நிறுவனங்கள் உருவாகும் சூழ்நிலையில் மறுபுறத்தில் இளம் குற்றவாளிகளை திருத்துவதெப்படி என்று ஆய்வு நடத்துகின்றனர். புலம்பெயர்ந்துள்ள எம்மவர்கள் மத்தியிலும் இளம் வயதினர்கள் குற்றச் செயல்களில் ஈடுபட்டு புதியதொரு வன்முறைப் பாரம்பரியத்தைத் தோற்றுவிப்-பதனையும் காண முடிகிறது. பொதுவாக இன்று எல்லா இனங்களிலும் இவ்வாறான இளங் தற்றவாளிகள் உருவாகினாலும் சில இனங்களுக்கிடையில் தீவிர வளர்ச்சி கண்டுள்ளது. நுணுக்கமாக இவை பற்றி ஆராய்ந்தால் பல உண்மைகள் புலனாகும்.

சமூகவியலாளர்கள், உளவியலாளர்கள் அனைவருக்கும் ஒரு பிரச்சனையாகவுள்ள இப் பால்ய 'நெறிப் பிறழ்வு' என்பது சமூகத்திற்கும் தனிப்பட்டவர்களுக்கும் இடையில் பல பிரச்சனைகளைத் தோற்றுவிக்கின்றன. பல்லின கலாசார ரீதியில் மேலும் வலுப்பெறும் இப்பிறழ்வு சட்டம், நடத்தை, குற்றம் என்பவற்றை உள்ளடக்கியது. வன்முறை தொடக்கம் குழு மோதல்கள் வரை பல நிகழ்வுகளை உண்டாக்கும் இச் செயல் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் போன்ற உயர் கல்வி நிலையங்களிலும் வலுப்பெற்று வருகின்றது. இதனால் பாடத் திட்டத்தில் பால்ய நெறிப்பிறழ்வு பற்றிய கல்வியையும் உள்ளடக்கி கற்பித்து வருகின்றனர்.

குற்றம் (Crime) என்பது பற்றித் தெரிந்து கொண்டால் மட்டுமே குற்றவாளிகள் (Criminals) பற்றியும் தெரிந்து கொள்ளலாம். பொதுவாக எது குற்றம்? யார் குற்றவாளிகள் என்பதனைச் சட்டமே தீர்மானிக்கும். சட்டரீதியாக சமூக நியமங்களை மீறிச் செயல்படுபவர்கள் (Violators) உள்ளனர். தற்றங்களை (Offences) சட்டக்கோவை தீர்மானிக்கலாம். எனவே, பொதுவாக கனடிய குற்றவாளி பற்றிய சட்டக்கோவை சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு தீர்மானிக்கும் இயல்பினது. பொதுவாக இளம் குற்றவாளிகள் ஏனைய வயது வந்த குற்றவாளிகள் போன்று நடத்தப்படுவதில்லை. 18 வயதுக்கு மேற்பட்டவர்களது சட்டம் வேறாகவும் கீழ்ப்பட்டவர்களது சட்டம் வேறாகவும் உள்ளது. இளம் வயதினர்கள் குற்றம் புரிந்தால் அதனை 'Young Offenders Act' முறையில் விசாரிப்பர். 1908ல் பால்ய நெறிப்பிறழ்வு சட்டம் 1984ல் இளம் குற்றவாளிகள் சட்டமாக மாற்றமுற்றது. பொதுவாக இளம் குற்றவாளிகள் பெயர்கள் வெளியிடப்படுவதில்லை. தற்போது இவ் இளம் தற்றவாளிகள் செய்யும் மீறுதல்களை பார்த்தால் சட்டங்களை மாற்றி தீவிர நடவடிக்கை எடுக்கலாமா என்று அரசுகள் சிந்திக்கின்றன.

இன்றைய சூழ்நிலையில் இளம் வயதினர்கள் பல குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளார்கள். களவு (Theft), கொலை (Killing), பாலியல் குற்றம் (Sexual assault), பயமுறுத்தல் (Threat), போதைவஸ்து பாவனை (Illegal Drug Use), வன்முறை (Violence) போன்ற பல்வேறு சம்பவங்களையும் அன்றாடம் காணமுடிகின்றது. இவை அனைத்துமே சமூகத்திற்கு ஊறுவிளைவிப்பவையாகும். மக்களுக்கும் சொத்துக்களுக்கும் எதிரான நடவடிக்கைகளே இவைகளாகும். தினசரி உலகெங்கும் நடைபெறும் இவ்வன்முறைகளுக்கு அளவேயில்லை. தற்போது கனடாவில் இதுபற்றி அறிய பல பொலிஸ் நிலையங்கள் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளன. புள்ளிவிபரங்கள் சேகரிக்கப்பட்ட பின்பே உண்மை நிலையை அறிந்து கொள்ள முடியும்.

பால்ய நெறிப்பிறழ்வுள்ள பல்வேறு நாடுகளில் ஐக்கிய.அமெரிக்கா முன்னிலை வகிக்கின்றது. தெரிவு செய்யப்பட்ட 20 கைத்தொழில் நாடுகளில் முதலாவது நிலையில் உள்ள இந்நாடு மற்றைய இரண்டாவது நாட்டை விட பல மடங்கு குற்றச் செயல்களில் இடம்பிடித்துள்ளது. 1960-1990 வரையில் நடை-பெற்ற கொலைச் சம்பவங்கள் 3 மடங்கு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளன. ஒளிபரப்புச் சேவைகளால் பாதிப்புற்ற இளைஞர்கள் யுவதிகள் பல்வேறு கொலைகளை புரிகின்றனர் என அறிக்கைகள் கூறுகின்றன. பல்வேறு பாடசாலைகளில் திடீரென்று கொலைச் சம்பவங்கள் இளம் வயதினரால் நிகழ்த்தப்படுவது அண்மைய காட்சிகளாக உள்ளன. ஐக்கிய அமெரிக்காவின் தாக்கத்தால் கனடாவிலும் இவ்வாறான இளம் குற்றவாளிகள் உருவாகி வருகின்றனர். இந்தச் சூழ்நிலையில் புலம்பெயர்ந்துள்ள பல இனக்குழுக்களும் பாதிக்கப்பட்டுள்ளன. இவர்களும் இவ்வாறான இளம் குற்றவாளிகளாக மாறி வருகின்றனர். பாடசாலையில் கொலை, கத்திக் குத்து, பெண் கடத்தல், வாகன கடத்தல், பயமுறுத்தல், உடலூறு செய்தல், கொலை செய்தல் போன்ற பல சம்பவங்களை நிகழ்த்த இளம் சமூகம் தலைப்பட்டுள்ளது. எம்மவர்கள் மத்தியிலும் இச்சம்பவங்கள் மிகவும் அதிகமாக அவதானிக்கப்பட்டுள்ளது.

இளம் குற்றவாளிகள் உருவாகுவதற்கு அவர்களது உளச் சீர்குலைவு (Psychological Disorder) முக்கிய காரணியாக அவதானிக்கப்பட்டுள்ளது. பல்வேறு காரணிகளால் ஏற்படும் இயல்பூக்கமும், மிகைச் செயற்பாடும் சேரும்போது இளையவர்கள் வன்செயல்களில் ஈடுபடுகின்றார்கள் எனக் கருதப்படுகின்றது. மிதமான பாலூக்கம், தன்னெடுப்பூக்கம், மனமுறிவு, நிறைவேறாத ஆசைகள் என்பவற்றால் தூண்டப்பட்டவர்கள் பலர் உள்ளனர். பெரியவர்களாகி குற்றம் புரிபவர்கள் இளம் வயதிலேயே ஆரம்பித்து விடுகின்றனர். பாடசாலைகள் என்பவை முக்கிய நெறிப்பிறழ்வு மையங்களாக திகழ்ந்து வருகின்றன. பாடசாலைகளில் பல மாணவர்கள் ஆயுதங்களுடன் வருகின்றனர் என அறிக்கைகள் கூறுகின்றன. தாராளமாக துப்பாக்கிகளை இவ் உளச் சீர்குலைவு உள்ளவர்கள் பாவிக்கின்றனர். எம்மவர்களும் துப்பாக்கி, பேஸ்போல் மட்டை, கத்தி, சுருள் வாள், கம்பி போன்றவற்றைப் பயன்படுத்தி சாகசங்களைப் புரிகின்றனர். இதனை உளவியல் ரீதியில் வீரதீர செயலாகக் கருதியே செய்கின்றனர்.

பால்ய நெறிப்பிறழ்வுக்கு குழுக்கள் (Gangs) உருவாகுவதும் முக்கிய காரணியாக கருதப்படுகின்றது. இளம் வயதினர்கள் பல சமூக காரணங்களுக்காகக் குழுவாக உருவாகும் பொழுது அது பின்பு வன் குழுக்களாக மாறலாம். விளையாட்டுக் குழுக்கள் வினையான குழுக்களாக மாறலாம். சமய குழுக்கள் சபல புத்தி குழுக்களாகலாம், தொண்டர் குழுக்கள் தொந்தரவுக் குழுக்களாக-லாம். எனவே, குழுக்கள் உருவாகும் போது மிகவும் கவனம் வேண்டும். இன்று நடைபெறும் பல குற்றச் செயல்கள் குழுக்களினால் நடத்தப்படுகின்றன. தனிப்பட்டவர்கள் நடத்துவதினை விட குழுவாக நடத்துவது இலகுவாகும். எமது வாலிபர்களும் குழு மோதலில் மிகவும் ஈடுபட்டுள்ளது அவதானிக்கப்பட்டுள்ளது. சில இடங்களில் போதை வஸ்து பாவனை, மது பாவனை முக்கியம் பெறலாம். பல குழுக்கள் சிறுவர்களை கவர்கின்றனர். இக் குழுக்களுக்கு எழுத்துக்கள், உடைகள், அடையாளங்கள் தனியாக உள்ளன. பல பெண்களும் இக் குழுக்களில் இணைந்து பல குற்றங்களைப் புரிகின்றனர்.

பால்ய நெறிப்பிறழ்வுக்கு குடும்ப சிறப்பியல்புகள் (Family Characteristics) இன்னொரு காரணமாகும். இன்று குடும்பம் என்பது வன்முறைகளின் தொட்டிலாகி வருகிறது. பெற்றோர்கள் குற்றவாளிகளாக அல்லது வன்முறையாளர்களாக இருப்பின் பிள்ளைகளும் அவ்வாறே இருப்பர். குடும்பத்தினைப் பிரிந்து வாழ்பவர்கள், பிரச்சனையுள்ளவர்கள், ஒற்றைப் பெற்றோர்கள் போன்றவர்களிடையே வளரும் பிள்ளைகளும் பிரச்சனையாளர்களாகின்றனர். இப் பிள்ளைகள் யாருக்கும் கட்டுப்பட மாட்டார்கள். எமது இளவயதினர்களுக்கு பெற்றோர்கள் இங்கு இல்லாமையாலும், பல இளவயதினர்கள் உறவினர்களுடன் வாழ்வதாலும் கட்டுப்பாடு குலைந்துள்ளது. வழிகாட்டிகள் இவர்களுக்கு இல்லை. பயமற்ற தன்மை, விரக்தி, நாட்டுச் சூழ்நிலை, கேள்விக்குரிய எதிர்காலம், பணப்பிரச்சனை, மனச்சுமை போன்றவை

(மறுபக்கம் பார்க்க)

வளமான எதிர்காலத்துக்கு துணிவே துணை

அதிகாலை மார்கழி மாதக் கடும் குளிர்.
காது மூக்கு முதலியவற்றைத் தொட்டுப் பார்க்கிறேன்.
விறைத்துப் போயிருந்தன.
ஆனாலும் தங்கள் தங்கள் தொழில்களைச் செய்து கொண்டுதானிருந்தன.
முதன் முதலாக Buffalo வில் காலடி எடுத்து வைக்கிறேன்.
எங்களை வா! வா! என வரவேற்கும் கனடிய நாட்டுக் குளிரை எப்படித் திட்ட முடியும்!!

பதின்மூன்று வருடங்கள் காற்றாய் பறந்து போயின!
குளிர் வந்தால் எங்கள் தாய் நாட்டை நினைக்காமல் இருக்க முடியாது.
கோடை வந்தால் OH! HO!! கனடா என வாழ்த்தாமல் இருக்கவும் முடியாது.

அன்று செய்வதறியாது இருந்த பல தமிழர்கள் இன்று பல துறைகளிலும் முன்னேறி பல்லின மக்களின் வியப்பையும் அன்பையும் பொறாமையையும் கூட பெற்று இருக்கிறார்கள்.

1986ம் ஆண்டு ஓரிரு பலசரக்குக் கடைகளுடன் சுயதொழில் செய்ய ஆரம்பித்த எம்மவர் இன்று செய்யாத தொழிலே இல்லை என்று சொல்லுமளவுக்கு முன்னேறியிருக்கிறார்கள்.

ராஜ் இராஜதுரை

"செய்யும் தொழிலே தெய்வம்" என்றனர் எம் சான்றோர்.
இதை எங்களில் சிலர் மறந்து குறுகிய காலத்தில் "லாபம் தான் வியாபாரம்" என்று எண்ணி வியாபாரத்தில் இறங்கி இருந்த இடமே தெரியாமல் மறைந்து விடுகிறார்கள்.

முக்கியமாக உணவுத் துறையில் உள்ளோர் அதிக கவனம் எடுக்க வேண்டிய நிலைக்கு உள்ளாகியுள்ளார்கள்.

இலங்கையில் இருந்து தருவிக்கப்படும் பொருட்களை இரு கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும்.
1. அதனால் வரும் வெளிநாட்டு செலாவணிப் பணத்தை இலங்கை அரசாங்கம் எதற்காகப் பாவிக்கிறார்கள்.
2. ஈழத்தில் அழிக்கப்பட்ட ஊர்களின் பெயரோடு இலங்கையில் கலப்படம் செய்யப்பட்ட பல பொருட்கள் இங்கு இறக்குமதியாகின்றன. பல பொருட்களை இதற்கு உதாரணம் சொல்லலாம். சில இறக்குமதிப் பொருட்களில் குறிக்கப்பட்டிருக்கும் தொழிற்சாலைகள் ஈழத்தில் இல்லாது போயே பல வருடங்களாகி விட்டன.

இது மட்டுமா? இங்கு தமிழ் மக்கள் அல்லாதவர்கள் மிருகங்களுக்காகத் தயாரிக்கும் சில உணவுப் பொருட்களை, உணவுப் பொருட்களுக்கு உகந்ததல்லாத மலிவான Poly Bags இல் அடைத்து. தமிழ் மக்களுக்கு விற்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

கனடிய சுகாதாரத் திணைக்களமும், கனடிய சந்தையில் சந்தைப்படுத்தாத பொருட்களில் அதிக அக்கறை எடுப்பது இல்லை என்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

தமிழ் மக்கள் இன்று உண்ணும் உணவுகளில் அதிக கவனம் எடுப்பது அவசியம். Fitness Centre களில் பல தமிழ் மக்களையும் காணும் போது இப்படியான கலப்பட வியாபாரத்திற்கு வெகு விரைவில் முற்றுப் புள்ளி வரும் என்பது நன்கு புலப்படுகின்றது.

தமிழ் மக்களின் வியாபாரத்தை எடுப்பதற்கு எல்லா இன மக்களும் பல முயற்சிகள் எடுக்கிறார்கள். தமிழர்களின் மத்தியில் உள்ள பத்திரிகைகளின் விளம்பரங்கள், வானொலி விளம்பரங்கள் இதற்கு தக்க சான்றாகும். இது ஒரு விதத்தில் தமிழ் மக்களின் சேவைத் தரத்தை உயர்த்த உதவுகின்றது. அதே நேரத்தில் இது சில தமிழ் மக்களைப் பாதிக்கின்றது.

வேறு நாட்டவருடன் வியாபாரம் செய்து ஏமாற்றப்பட்டோர் எம்மவரில் பலர். "மக்கள் சேவையே மகேசன் சேவை". அதை வியாபார நோக்குடனும் செய்யலாம். உதாரணமாக, தற்போது வேகமாக வளர்ந்து வரும் E-Commerce இன் அரிய நன்மைகளை எம்மவர்க்கு எடுத்தியம்பி வியாபாரத் துறையில் உள்ள தமிழ் மக்களை அதில் புகுத்த வேண்டிய கடமை Computer துறையில் முன்னேறிய எம் இளம் சந்ததியினரது கடமையாகும்.

கனடாவில் மாத்திரமன்றி தமிழீழத்திலும் நான்கு சுவர்களுக்கும் குண்டுகளுக்கும் இடையில் அல்லற்படும் எம் உடன் பிறவா சகோதர சகோதரர்களைக் கூட Internet மூலம் பயிற்றுவித்து அவர்களுக்கு வேலை வாய்ப்புப் பெற்றுக் கொடுப்பதையே வியாபார ரீதியாகச் செய்யலாம். இது Computer Internet வல்லுனர்களுக்கு ஒரு அரிய சந்தர்ப்பம். இது நாம் எம் இன மக்களுக்குச் செய்யும் ஒரு பெரிய சேவையாகும்.

2000ம் ஆண்டில் கால் எடுத்து வைத்திருக்கும் போது பல இன்னல்கள் ஏற்படுமோ என எச்சரிக்கையாக இருந்தோம்.
இறைவனின் திருவருளால் இனிதே தொடங்கிய இந்த இரண்டாயிரமாம் ஆண்டில் சிறு வியாபாரங்கள் எல்லாம் "அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு" என்பதற்கிணங்க ஒன்று சேர்ந்து பெரிய வியாபார நிறுவனங்களுக்கு எங்கள் ஒற்றுமையின் வல்லமையைக் காட்டுவோம்.

பாரெல்லாம் பரந்து வாழும் எம்மவர் ஒரு புது வேகத்தில் புதுத் தென்புடன் செயற்பட்டு ஒரு புது சகாப்தத்தை உருவாக்க எம்பெருமான் அருளோடு ஆசியும் தருவார் என்ற நம்பிக்கையுண்டு.

பால்ய நெறி...

யாவும் 'இழப்பதற்கு ஒன்றில்லை' என்ற உணர்வினை தூண்டுகின்றதா? என்ற கேள்வி எழுகின்றது. பாடசாலைகளில் நடைபெற்ற பல சம்பவங்கள் எமது இனத்தின் பண்பையும் பாதித்துள்ளது.

அடுத்து, பால்ய நெறிப்பிறழ்வுக்கு இளைஞர்களின் மனப்பாங்கு முக்கிய காரணியாக உள்ளது. மரபு ரீதியாக அல்லது பரம்பரை ரீதியாக இவ்வாறான சீர்குலைவு ஏற்படலாம் என்று ஆய்வு கூறுகிறது. குறிப்பிடக்கூடிய உயிரணு இவ்வாறான செயல்களைத் தூண்டாது விட்டாலும் சிலரிடம் மாற்றங்கள் அவதானிக்கப்பட்டுள்ளது. மற்றவர்களுக்கு கீழ்ப்படிய மாட்டார்கள், பயமற்றவர்கள், தீவிரமாக செயல்படுவர் இவர்களாவர். வீரதீரச் செயல்களில் இவர்கள் நாட்டம் செலுத்துவார்கள்.

பாடசாலைகள் இளைஞர்களின் நெறிப்பிறழ்வுக்குரிய முக்கிய இடங்களா? என்ற வினா எழுந்துள்ளது. பாடசாலைகள் சிறந்த கல்வித் திட்டத்தை அல்லது - ஆசிரியர்களை கொண்டிருக்கவில்லையா? மாணவர்களை சிறப்பாக்கும் தன்மை இவைகளுக்கு இல்லையா? என்ற கேள்விகள் எழுகின்றன. பொதுவாக படிப்பு குறைந்த மாணவர்கள் விரக்தியால் பாடசாலைகளை விட்டு நீங்குகின்றார்கள் என்ற அபிப்பிராயம் உள்ளது. இவர்களில் பலர் ஒன்று சேர்ந்து படிப்பவர்களுக்கு எதிராக வன்செயல்கள் செய்கிறார்கள். காதலில் தோற்றவர்கள் பெண்களைத் தீர்த்துக் கட்டுகின்றார்கள். சோதனையில் குறைந்த புள்ளிகளிட்ட ஆசிரியரை சுட்டுத் தள்ளுகின்றார்கள். தண்டித்த அதிபர்களைத் தாக்குகின்றார்கள். மற்றைய சக மாணவர்களைப் படிக்க விடாது தடுக்கின்றார்கள். இனத் துவேஷத்தால் ஆசிரியர்களை பயமுறுத்துகின்றார்கள். பாடசாலை சொத்துக்களை அழிக்கின்றார்கள், கட்டிடங்களுக்குத் தீ மூட்டுகின்றார்கள். இப்படிப் பல அனர்த்தங்கள் பாடசாலையில் உருவாகின்றன. ஆய்வுகள் செய்யப்பட வேண்டிய முக்கிய பிரச்சனைகள் இவைகளாகும்.

பால்ய நெறிப்பிறழ்வுள்ளவர்களுக்கு இன்று பல சேவை மன்றங்கள் ஆலோசனை வழங்குகின்றன. வயது வந்தவர்களைப் போன்று இவர்களைத் தண்டிக்காது சீர்திருத்தவே அரசுகள் பல முயல்கின்றன. சீர்திருத்த நிலையங்கள், முகாம்கள், மாநகர ஆலோசனை சபைகள், நடிப்பு முறைகள் போன்ற பல சீர்திருத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தற்போது பாடசாலைகளில், பல்கலைக்கழகங்களில் இதுபற்றிய பாடத்திட்டம் இணைக்கப்பட்டுள்ளது.
பல்கலைக்கழகங்களில் சமூக விஞ்ஞானம், சட்டம், சமூகவியல் துறைகளில் இளம் குற்றவாளிகள் பற்றி ஆய்வுகள் செய்யப்படுகின்றன. குற்றம் புரியும் பிள்ளைகளின் பெற்றோர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இவை அனைத்தும் பயன் தருமா? என்று காலம் தான் பதில் கூறவேண்டும்.

The Lost Middle Teenagers

தொலைந்து போன கட்டிளமைப் பருவத்தினர்

கனகேஸ் நடராஜா

கட்டிளமைப் பருவத்தினர் என்ற பதம் 13 வயது தொடக்கம் 19 வயதினர் வரை உள்ள பிள்ளைகளை அதாவது ரீன்ஸ் (Teenagers) என்ற பருவத்தினரைக் குறிக்கும். இதில் நடுப் பகுதியைச் சார்ந்த கட்டிளமைப் பருவத்தினர் என்று இங்கு நான் குறிப்பிடுவது 15,16 வயது மாணவர்களையேயாகும். பொதுவாக இவர்கள் 9ம், 10ம் வகுப்பினைச் சார்ந்தவர்களாக இருப்பர். இவர்கள் பாடசாலையிலும் ஆசிரியர்களுக்கு கற்பித்தலைக் கடினமாக்கும் ஒரு பிரிவினர். வீட்டிலும் இவர்களைக் கையாளுவது மிகவும் கடினம் (Toughest to teach, and hardest at home). புதிய நூற்றாண்டில் காலடி எடுத்து வைத்துள்ள நாம் இவர்களைப் பற்றிப் பெருமைப்பட எத்தனையோ விடயங்கள் உண்டு. இவர்களின் அறிவும், ஆற்றலும், விவேகமும், விளக்கங்களும், கண்டுபிடிப்புக்களும் பெரியவர்களாலேயே அடைய முடியாத அளவுக்கு முன்னேறியுள்ளது. ஆனால் அதே நேரத்தில் இவர்கள் தமது வயதுக்குரிய பழக்க வழக்கங்களையோ, விழுமியங்களையோ கைவிட்டு செய்வதறியாது தத்தளிப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. இப் பருவத்திலே தான் உடலில் பல விதமான மாற்றங்கள் ஏற்படுவதை நாம் எல்லோரும் அறிவோம். இவர்களின் ஹார்மோன்கள் (Hormones) கொதித்து எழும் காலம் இது. இங்கு ஆண் பிள்ளைகள் தான் பாடசாலையிலும் வீட்டிலும் பிரச்சனைகளைக் கொடுக்கிறார்கள் என்பது இல்லை. பெண் பிள்ளைகளும் இதற்கு விதிவிலக்கில்லை. நன்றாகப் படித்துக் கொண்டிருந்த பிள்ளைகளின் புள்ளிகள் திடீர் எனக் குறைவதையும், பெற்றோர் பதற்றமடைந்து பிள்ளைகளுக்கு பாடங்களில் மேலதிக உதவி வழங்க வேண்டுமா என வந்து கேட்பதையும் காணலாம். உண்மையைச் சொல்லப் போனால் பல மாணவர்கள் இரகசியமாகக் குடிப்பதையும், புகைப்பதையும், பாடசாலைக்கு வந்தும், வகுப்புகளுக்குச் சமூகமளிக்காமல் இருப்பதையும் காணலாம். புத்திமதிகள் கூறுபவர்கள் மேல் அவர்களுக்குக் கோபம் தான் வரும் (Rebellious Age). உடலில் ஏற்படும் மாற்றங்களோடு இந் நாட்டுப் புறக் காரணியாகிய இவர்கள் வாழும் சூழலுக்கு அமைய இது ஒரு மிகவும் கடினமான வயதாக உள்ளது. (Tough Age).

இந்த 9ம் வகுப்பு வரை வயதுக்குரிய வகுப்புகளில் தான் மாணவர்கள் கல்வி கற்க முடியும். ஒத்த குழுக்கள் ஒரே விதமான பழக்க வழக்கங்களை உடையவர்களாக இருப்பார்கள் என்பது தான் இதற்குரிய காரணமாகும். ஆனால் இரண்டாம் நிலைப் பாடசாலைகளில் மாணவர்கள் பாடங்களைப் பல வகுப்புகளில் வெவ்வேறுபட்ட வயதினருடன் கற்பதைக் காணலாம். 25 வயது வாலிபர்கள் செய்வதையே 20 வயது வாலிபர்களும் செய்கிறார்கள். இரவு இரவாகத் திரிவதையும், விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதையும், சட்டத்திற்குப் புறம்பான பல விடயங்களை பயமின்றிச் செய்வதையும் காணலாம். 20 வயது மாணவர்கள் செய்வதையே 15 வயது மாணவர்களும் செய்கிறார்கள். இவர்கள் உண்மையிலே குழந்தைகள் (Children). இன்னும் எவ்வளவோ காலம் இருக்கிறது இவர்கள் தங்கள் பழக்க வழக்கங்களைத் தீர்மானிப்பதற்கு. ஆகவே இவர்கள் வயதிற்கேற்றபடி நடக்க முயற்சி செய்தல் வேண்டும்..

பாடசாலைகளை இன்று உலுப்பி எடுக்கும் பிரச்சனை பாடசாலைகளின் பாதுகாப்புக் குறைய ஆரம்பித்துள்ளதே. பாடசாலைகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு (Safe Schools) நிர்வாகத்தினரும் எத்தனையோ மந்திர தந்திர உபாயங்களைக் கையாளுகின்றனர். இதில் பாடசாலைகளுக்குப் பொலிஸார் வருகை தந்து விசேடமாக 9ம் வகுப்பு மாணவர்களுக்கு விரிவுரைகள் நடத்துகின்றனர். எல்லாப் பாடசாலைகளிலும் காணப்படும் ஆசிரிய ஆலோசகர் நிரலில் (Teacher Advisor Program), 9ம் வகுப்பு மாணவர்களுக்குப் பல ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. சக மாணவர்கள் உதவுதல் பற்றி அறியத் தருகிறார்கள். (Peer mediation, Peer helpers). மாணவர்களைக் கொண்டே மாணவர்களுக்கு நாடகங்கள், விரிவுரைகள் மூலம் விளங்க வைத்தல் வெற்றியளிப்பதைப் பல விடயங்களிலும் காணக் கூடியதாக உள்ளது. சக மாணவர்கள் கூறும் பொழுது மாணவர்கள் மனதில் நன்றாகப் பதிகிறது. அண்மையில் மாணவர்கள் தாங்கள் எவ்வாறு வன்செயல்களில் ஈடுபடுத்த நிர்பந்திக்கப்படுகிறார்கள் என்பது சம்பந்தமாக ஒரு நாடகத்தைப் பார்க்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அந்த நாடகத்தின் சாராம்சம் இது தான்.

"ஒரு வகுப்பில் கெட்டித்தனமான ஒரு நல்ல மாணவன் ஒரு மாணவியைக் காதலிக்கிறான். அம் மாணவி தனிமையில் இருக்கும் பொழுது பாடசாலையிலேயே சண்டித்தனத்திற்குப் பெயர் போன ஒரு மாணவன் சேட்டை விடுகிறான். தனக்கு நடந்ததை அவள் தனது காதலனுக்கும் மற்ற நண்பர்களுக்கும் கூறுகிறாள். காதலன் இதனைப் பற்றிப் பொலிஸில் புகார் செய்வதே முறை என்கிறான். ஆனால் நண்பர்களோ பொலிஸில் சொல்வதால் ஒன்றுமே நடக்கப் போவதில்லை என்றும், காதலன் தான் ஒரு பாடம் அவனுக்குப் புகட்ட வேண்டும் என்றும் விடாப்பிடியாக வற்புறுத்துகிறார்கள். காதலியும் அவனுக்கு தன் மேல் உண்மையான அன்பு இருந்தால் அதனைத் தானே செய்ய வேண்டும் எனப் பிரலாபிக்கிறாள். சிறிது கூட வன்முறையை விரும்பாத அம் மாணவன் பாடசாலை விட்ட பின்பு அந்தப் பலம் கூடிய மாணவனை விளையாட்டுத் திடலில் நேருக்கு நேராகச் சந்தித்து சண்டை பிடிக்கிறான். நண்பர்கள் எல்லோரும் வட்டமாக நின்று கூப்பாடு போட்டு, கோஷமிட்டு உற்சாகப் படுத்துகிறார்கள். இதற்கிடையில் பொலிஸாருக்குத் தொலைபேசி அழைப்பு பாடசாலை நிர்வாகத்தினரால் விடுக்கப்பட்டு, அந்த நல்ல மாணவன் கைதாகி, பாடசாலையில் இருந்தும் தற்காலிகமாக நீக்கப்படுகிறான். கடைசிக் காட்சியில் அவன் தனது எதிர்காலமே பாழாகிப் போய்விட்டதாகவும், தனது பெற்றோர் தன்னை வெறுப்பதாகவும், தான் இப்பொழுது பாடசாலைக்கே போவதில்லை என்றும் கூறுகின்றான்." இத்தகைய ஒரு சூழலில் தான் எங்கள் பிள்ளைகள் இன்று கல்வி கற்கிறார்கள். ஆண், பெண் உறவுகள் (Boy friend/Girl friend) ஒரு சர்வ சாதாரண விடயம். கோஷ்டிச் சண்டைகள், வன்முறைகள் தான் வாழ்க்கை முறை (Norm). வாய் கூசாமல் பொல்லாத வார்த்தைகள் (Swear) வாயிலிருந்து கொட்டும். இந்த குழுக்களின் ஆதிக்கம் (Peer pressure) மேலோங்கி நிற்கிறது. பெற்றோரின் விருப்பங்களுக்கு மதிப்புக் கொடுப்பதிலும் பார்க்க நண்பர்களுக்காக வாழ விரும்புகிறார்கள். ஆகவே எந்த நேரமும் பிள்ளைகளைக் குறை கூறும் பெற்றோர்கள், அவர்கள் ஏன் அவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்பதனை விளங்கி அவர்களிடம் அன்பாகவும், அதே நேரத்தில் கண்டிப்போடும் நடக்கப் பழகுதல் அவசியம். கூடு விட்டுக் கூடு பாயும் வித்தை இன்றைய பெற்றோருக்குத் தெரிந்து இருக்குமானால் அவர்கள் மாணவர்களின் உடலில் புகுந்து ஒரு வாரம் பாடசாலைக்குச் செல்வார்களேயானால், பிள்ளைகள் அனுபவிக்கும் வாழ்க்கையை விளங்கி அவர்களுக்காக அனுதாபப்பட முடியும். மத்திய பாடசாலையில் இவர்கள் தான் உயர் வகுப்பினர். ஆனால் இரண்டாம் நிலைப் பாடசாலையில் இவர்கள் தான் குழந்தைகள் (Babies). இவர்களுக்கு வழிகாட்டியாக மேல் வகுப்பு மாணவர்கள் உள்ளனர். தலைமைத்துவம், கெட்டித்தனம், பொறுப்புணர்ச்சி, விளையாட்டுத் திறன், நிர்வாகத் திறன் நிறைந்த எத்தனையோ உயர் வகுப்பு மாணவர்கள் உள்ளனர். அவர்கள் மாதிரி பேரும் புகழும் பெறுவது சுலபமல்ல. ஆனால் மாணவர் நடத்தைக்கு ஒவ்வாத பழக்கங்களை பின்பற்றுவது சுலபம். இதனையே பல 9ம் வகுப்பு மாணவர்கள் செய்கிறார்கள். ஆனால் இதில் ஆறுதல் அடைய வேண்டிய விடயம் யாதெனில் வகுப்புகள் ஏற, ஏற பல குழப்படிப் பிள்ளைகள் திருந்தி அமைதியாகி விடுகிறார்கள் (Settle down). ஆகவே 15, 16 வயதில் பிரச்சனை கொடுக்கும் பிள்ளைகள் நல்ல முறையில் கையாளப்பட்டால், தமக்கென ஒரு நல்ல எதிர்காலத்தை அமைத்துக் கொள்வார்கள். அவ்வாறு அமைவதற்குப் பெற்றோர், எவ்வாறு உதவலாம் என நோக்குவோம்.

* கடினமான அன்பு (Tough Love) - இந்தப் பருவத்தில் உடலிலும், மனத்திலும் பல விதமான மாற்றங்கள் ஹார்மோன்கள் சுரப்பதால் ஏற்படுகிறது. அவர்களை நாம்

கட்டிளமைப் பருவத்தினர்...

குழந்தைகளாகவே நினைக்கிறோம்.
ஆனால் இந்த நாட்டு உணவுகள், சூழல் காரணிகளால் கட்டிளமைப் பருவம் மிகவும் சிறு வயதிலேயெ தனது கோலத்தைக் காட்டத் தொடங்கி விடுகிறது. சராசரி 13 வயதில் வட அமெரிக்கப் பிள்ளைகளிடம் பாலியல் முதிர்ச்சி ஏற்பட்டு விடுகிறது. விளம்பரங்கள் சுலபமாகப் பணம் சம்பாதிப்பதற்கு இப் பிள்ளைகளையே தமது இலக்காகப் பாவித்து அவர்களை அறியாப் பருவத்திலேயே விரும்பத் தகாத பல விடயங்களில் ஈடுபடுத்தி விடுகிறார்கள். பெற்றோருக்கு அன்பும் பாசமும் பிள்ளைகள் செய்பவற்றை சில சமயங்களில் சரியில்லை என்று தெரிந்தும் ஏற்றுக் கொள்ளச் செய்து விடுகிறது. சில பெற்றோர்கள் எங்கே பிள்ளைகள் தம்மை வெறுத்து விடுவார்களோ எனப் பயந்து பல செயல்களுக்குத் தடை சொல்லப் பயப்படுகிறார்கள். மனதைக் கடினமாக்கிக் கொண்டு "இல்லை" (To say NO) என்று சொல்லப் பழகிக் கொள்ள வேண்டும். ஆனால் அதனை சொல்லும் முறையைத்தான் கவனமாகக் கையாள வேண்டும். நாங்கள் தான் அதிகாரம் உள்ளவர்கள் என்ற வகையில் (Power Struggle) கூறுதல் அவர்களுக்குக் கோபத்தை உண்டாக்கும். நாங்கள் அன்பும், பாசமும் நிறைந்த பெற்றோர்களேயன்றி மறியல் அதிகாரிகள் (Prison Wardens) அல்ல என எமக்கே நாம் அடிக்கடி நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

* வரையறைகள் அமைத்தல் வேண்டும் (Set Limits) -
பிள்ளைகளின் செயல்களுக்கு வரையறைகளை ஏற்படுத்தும் பொழுது அவர்கள் திமிறினாலும், உள் மனதில் அதனை வரவேற்கவே செய்வார்கள். தங்களை ஆபத்து வராமல் பாதுகாக்க தமது பெற்றோர் இருப்பதையிட்டு அவர்களுக்கு ஒரு பாதுகாப்பான மனநிலையே (Secure Feeling) ஏற்படுகிறது. பிள்ளைகள் கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என வாழும் பொழுது கவனம் செலுத்தாத பெற்றோரைப் பிள்ளைகள் ஒரு பொழுதும் கனம் பண்ண மாட்டார்கள். வரையறைகளை ஏற்படுத்தும் பொழுது, அவர்களுக்கும் ஒரு அளவுக்குச் சுதந்திரம் வழங்குதல் வேண்டும். அதே நேரத்தில் அவ்வாறு நாம் செய்தல் அவர்களின் பாதுகாப்புக்காகத்தான் (Safety) என்பதை நல்ல முறையாக விளங்கப்படுத்துதல் வேண்டும். கோபப்படாமல் நல்ல முறையில் தன்மையாகச் சொல்லும் பொழுது பிள்ளைகளுக்கும் எமக்கும் இடையேயுள்ள உறவு பாதிக்கப்பட மாட்டாது. வரையறைகள் எப்பொழுதும் திட்டவட்டமாகவும், ஒரே மாதிரியாகவும் (Clear and Consistent) இருத்தல் வேண்டும். எங்கள் மனநிலைக்கும், சந்தர்ப்பங்களுக்கு ஏற்ற படியும் மாறுதல் செய்தல் பிள்ளைகளுக்குக் குழப்பத்தை ஏற்படுத்தும்.

* தொடர்பு இடைவெளிகள் (Communication Gaps) -
பல பிள்ளைகளுக்கும் பெற்றோர்களுக்குமிடையே பேச்சு தொடர்பு இடைவெளிகள் காணப்படுகின்றன. இதன் முக்கிய காரணம் பிள்ளைகள் எங்களை நெருங்க முடியாத அளவுக்கு நாம் நடந்து கொள்கிறோம். நேரமின்மை, வேலைப் பளு, வேறு பல காரணிகளால் பொறுமையாக நாம் பிள்ளைகள் கூறுவனவற்றைக் கேட்பதுமில்லை. இதனால் பல பிள்ளைகள் தம் நண்பர்களிடமே சென்று கதைக்கிறார்கள். தகாத சகாக்கள் கிடைத்தால் பிழையான புத்திமதிகள் தான் அவர்களுக்குக் கிடைக்கும். பிள்ளைகளோடு அளவளாவும் பொழுது அவர்கள் திருப்பிக் கதைப்பதை அவர்கள் எதிர்ப்பதாக அர்த்தம் கொள்வது கூடாது. (Don't take it personal). பெற்றோருக்கு ஆத்திரம் ஊட்டும் வகையில் பிள்ளைகள் நடப்பது இங்கு சகஜம். அவர்களோடு ஆற அமர இருந்து பேசி பிரச்சனைகளுக்குத் தீர்வு காண முயற்சித்தல் வேண்டும். எல்லா நேரமும் அவர்களுக்குப் போதனை செய்யக் கூடாது. தக்க தருணங்கள் கிடைக்கும் பொழுது (Teaching Times) அவற்றைக் கை நழுவ விடாது புத்திமதிகள் கூறுதல் அவசியம். கதைக்கும் பொழுது அது ஒரு வழிப் பாதையாக அமையாது (One way street) பெற்றோரும், பிள்ளைகளும் அளவளாவி, சந்தோஷமாக இருக்கும் குடும்பங்களில் பிள்ளைகள் நன்றாக வளர்வார்கள்.

* முன்மாதிரியாக இருத்தல் (Be a Role Model) -
இந்த வயதுப் பிள்ளைகள் தாம் பின்பற்றுவதற்கு ஒரு உதாரணமாக அமையும் ஒருவரை பெரும்பாலும் பின்பற்றுவார்கள். பிள்ளைகள் கேட்பவற்றையெல்லாம் வாங்கிக் கொடுப்பதையே தமது கடமையாகப் பல பெற்றோரும் நினைக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டியது எமது நேரமும், அன்புமே. இங்கு வாழும் பெற்றோரும் பிள்ளைகள் தங்களைக் கனம் பண்ணும் அளவுக்கு தமது பழக்க வழக்கங்களை மாற்றியமைத்தல் அவசியம். இன்றைய சமூக விழுமியங்கள் இப் பிள்ளைகளின் மடமையை (Innocence) களவாடி விட்டது. உடனடியாகச் சந்தோஷத்தைக் (Instant Gratification) கொடுக்கும் வழிகளையே பிள்ளைகள் நாடுகிறார்கள். பெற்றோர் இவர்கள் விரும்பியவற்றையெல்லாம் வாங்கிக் கொடுக்காது, அவற்றால் ஏற்படும் தாக்கங்களை ஆராய்ந்து அறிதல் வேண்டும்.

* பொறுப்புக்களை வழங்குதல் (Entrust Responsibilities)
இவர்கள் எல்லா விடயங்களிலும் தமது வயதிற்கு மேற்பட்டவர்களைப் பின்பற்றினாலும், வீட்டில் பொறுப்புகளை வழங்கும் பொழுது தாம் சிறிய பிள்ளைகள் என்றும், தங்களால் செய்ய முடியாது என்றும் சாட்டுக்கள் கூறித் தப்பப் பார்ப்பார்கள். அது மாத்திரமன்றி அவர்களுக்குப் பொறுப்புகளை வழங்கி அவற்றை அவர்கள் செவ்வனே செய்து முடிக்காதவிடத்து எமக்கும் அவர்கள் மேல் நம்பிக்கையீனம் ஏற்படுகிறது. இவற்றை விடுத்து இவர்களால் கையாளக் கூடிய பொறுப்புகளை இவர்களுக்கு வழங்குதல் இரு பகுதியினருக்கும் நன்மை பயக்கும். அவர்களது பொழுதும் பிரயோசனமாகக் கழியும். எங்கள் வேலைப் பளுவும் சிறிதளவு குறையும். பிழைகள் ஏற்படுமிடத்து அதிகமாக அவர்களை குறை கூறாமலும், சரியாகச் செய்யும் பொழுது அவர்களை மெச்சியும் நடத்துதல் வேண்டும்.

* போதிய விளக்கம் வேண்டும் (Become Knowledgeable)
பிள்ளை வளர்ப்புச் சம்பந்தமான பல புத்தகங்கள் இந் நாட்டில் கிடைக்கின்றன. பிரச்சனைகள் ஏற்படும் பொழுது எங்கு செல்ல வேண்டும் என்ற பல தொலைபேசி எண்கள் இங்கு உண்டு. இவற்றையெல்லாம் பாடசாலை வழிகாட்டி கந்தோர்களோடு தொடர்பு கொண்டு பெற்றோர் அறியலாம். பொதுவாக பிரச்சனைக்குரிய பிள்ளைகளை (At risk children) மிகவும் சிறு வயதிலேயே அடையாளம் காணலாம். பெண் பிள்ளைகளோ, ஆண் பிள்ளைகளோ ஒரு நாள் பொழுதில் பிரச்சனைக்குரியவர்களாக மாறுவதில்லை. எத்தனையோ நாட்கள், மாதங்கள் சென்ற பின்பு தான் அவர்கள் பிரச்சனைகள் பூதாகரமாக உருவெடுக்கின்றன. இவர்களைக் கவனித்து, கண்டித்துத் திருத்த எல்லாப் பெற்றோருக்கும் போதிய அவகாசம் உண்டு. முன்னைய காலங்கள் போல் வாழ்க்கைத் தரம் குறைந்த குடும்பங்களில் உள்ள பிள்ளைகள் தான் குற்றம் இழைப்பது என்பதல்ல. நல்ல படித்த வசதியான வீட்டுப் பிள்ளைகளும் இன்று தறி கெட்டு நடக்கிறார்கள். ஒரு கணனியும், (Computer & Modem) அதன் மற்ற உபகரணங்களும் இருக்குமானால் பிள்ளைகள் எவ்வாறு வெடிகுண்டு தயாரிக்கலாம் என்பதனை அறிவார்கள். அண்மையில் கொலராடோவில் நடைபெற்ற பாடசாலை சூட்டுச் சம்பவத்தில் ஈடுபட்ட மாணவர்கள் தங்கள் வீட்டு கார் தரிக்குமிடத்திலேயே வெடி குண்டுகளைத் தயாரித்துள்ளனர். வசதியான படித்த குடும்பப் பிள்ளைகளாக இருந்த பொழுதும், பெற்றோர் இவற்றையெல்லாம் கவனிக்கவில்லை. ஆகவே பிள்ளைகளின் நடமாட்டங்களை உன்னிப்பாகக் கவனித்தல் பெற்றோரின் கடமையாகும்.

இங்குள்ள பல இனத்தவர்களிற்கிடையில் பெற்றோர் உதவிக் குழுக்கள் (Parent Support Groups) உண்டு. அவர்கள் தாங்கள் பெற்ற அனுபவங்கள், விளக்கங்களை இக் குழுக்களின் கூட்டங்களில் பகிர்ந்து கொள்வார்கள். அத்துடன் மாத்திரமல்லாது ஒருவருக்கு இன்னல் ஏற்படுமிடத்து ஏனையோர் உதவிகளும் செய்வார்கள். அண்மையில் இந் நாட்டிற்கு வருகை தந்த சமூகத்தவர்களாகையால் நாம் இவ்வாறு உள்ள குழுக்களில் பங்கு பற்றுவதில்லை. ஆயினும் காலப் போக்கில் எங்கள் சமூகத்தவர்களும் இத்தகைய குழுக்களை ஏற்படுத்தி ஒருவருக்கு ஒருவர் உதவுதல் நலம்.

இங்குள்ள பிள்ளைகள் பெற்றோரோடு நீண்ட காலம் ஒன்றாக வாழப் போவதில்லை. மிகவும் சிறு வயதிலேயே தனிக்குடித்தனம் போய்விடுவார்கள். அதிகமான பிள்ளைகள் 19, 20 வயதில் பல்கலைக்கழகம் சென்று தனியாக வாழ ஆரம்பித்த பின்பு பெற்றோரிடம் வந்து வாழ்ந்து வேலை பார்ப்பது மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. கொஞ்ச காலம் தான் அவர்கள் எங்களோடு இருக்கும் சாத்தியக் கூறுகள் உண்டு என்பதைப் பெற்றோர் ஞாபகத்தில் வைத்திருந்தால் அதுவே அவர்கள் மேல் கோபம் வராமல் இருக்க உதவும். செட்டை முளைக்கும் முன்பு குருவிக் குஞ்சுகள் கூட்டை விட்டு விழுந்தால் அவர்களைக் குதறி எடுப்பதற்கு எத்தனையோ மிருகங்களும், பருந்துகளும் காத்திருக்கின்றன. ஆகவே 15, 16 வயதுப் பிள்ளைகள் எங்கள் அரவணைப்பிலிருந்து கை நழுவாது பார்த்துக் கொள்ளுதல் அவசியம். மிகவும் முரட்டுத் தனமாக இப் பிள்ளைகள் வெளித் தோற்றத்தில் தெரிந்தாலும், மனதளவில் இவர்கள் உண்மையிலேயே குழந்தைகள். அன்பாக நடத்தினால் இவர்களை கைக்குள் போடுவது கடினமான விஷயம் இல்லை. பெற்றோருக்குப் பொறுமை மற்றும் நம்பிக்கையும் தான் இவர்களை

நிதி நிர்வாகம் Money Management

புலம் பெயர்ந்து புதிய ஒரு நாட்டில் வாழும் எங்களுக்கு தாய் நாட்டை விட முற்றிலும் வேறுபட்ட ஒரு பொருளாதார சூழ்நிலையை எதிர்நோக்கும் நிலைமை இருக்கின்றது. தாய் நாட்டைவிட இங்குள்ள பொருளாதாரம் மக்களை நன்கு செலவு செய்யச் செய்து பணப் புழக்கத்தை அதிகரிக்கச் செய்கின்றது. பணப் புழக்கம் அதிகரித்தால் தான் நாட்டின் பொருளாதாரம் முன்னேற்றம் அடையும். ஆனால் இந்த சூழ்நிலையில் நாம் கவனமாக இருக்காவிட்டால் பணத்தைச் சேமிக்க முடியாமல் போய்விடும். இங்கு வந்தவுடன் முதலில் தேடுவது நல்ல ஒரு வேலையை. பணம் சம்பாதிக்கத் தொடங்கியவுடன், அடுத்த கட்டமாக பணத்தை எவ்வாறு சேமிக்கலாம் என்றும், சேமித்த பணத்தை எவ்வாறு முதலீடு செய்து அதைப் பெருக்கலாம் என்ற கேள்வி எழும்.

பணத்தை சரியான வழியில் முதலீடு செய்வது எப்படி என்று அறிய முன்பு, பணத்தை எப்படி மீதப்படுத்தலாம் என்ற கேள்வி எழும். அநாவசிய செலவுகளை விட, எங்களை அறியாமல், நாம் சில வழிகளில் பணத்தை வீணாக இழக்கின்றோம். அவற்றை முதலில் பார்த்தால், எவ்வளவு பணத்தை நாம் மீதப்படுத்தலாம் என அறியலாம். இங்குள்ள எல்லோருமே வைத்திருப்பது Credit Card எனப்படும் பிளாஸ்ரிக் கடன் அட்டைகள் ஆகும். இந்தக் கடன் அட்டைகளால் பல நன்மைகள் இருந்தாலும், சரியான முறையில் கையாளாவிட்டால் நாம் அதிகளவு பணத்தை இழக்க வேண்டி நேரிடும். நாங்கள் பெருந் தொகைப் பணத்தைக் கையில் எடுத்துச் செல்லாது, இந்தக் கடன் அட்டையை உபயோகித்து பணத்தைச் செலுத்தலாம். பணத்தைச் சேமித்து விட்டுப் பின்னர் தேவையான பொருளை வாங்குவது நல்லது. வங்கியில் பணம் இருக்கும் போது, Debit Card பாவித்துப் பணத்தைச் செலுத்துவது சாலச் சிறந்தது. ஏனெனில் உதாரணமாக 300 டாலர் பெறுமதியான பொருளை வாங்கிவிட்டு, பின்னர் ஒரு வருடம் கழித்து அட்டைக்குரிய பணத்தைச் செலுத்தும் போது, நீங்கள் வாங்கிய பொருளின் விலை 300 ஐ விட அதிகமாக வட்டியுடன் சேர்த்து பணத்தைக் கொடுக்கின்றீர்கள். மிகவும் சிறந்த முறை என்னவென்றால் உங்கள் பணத்தை வங்கியின் சேமிப்புக் கணக்கில் இருக்கவிட்டு, Credit Card ஐ உபயோகித்து பொருளை வாங்கினால் 3 கிழமைகள் சென்ற பின்புதான் உங்களுக்கு பில் வரும். பில் வந்த நாளிலிருந்து 21 நாட்களில் தான் நீங்கள் பணம் செலுத்த வேண்டும். குறிப்பிட்ட திகதியின் முன் பணத்தை செலுத்தினால் உங்களுக்கு வட்டி செலுத்த தேவை வராது. எனவே 6 கிழமைகளுக்கு நீங்கள் வங்கியிடம் இருந்து வட்டியில்லா பணத்தைப் பெறுகின்றீர்கள். அதே நேரத்தில் பொருளின் பெறுமதிக்குரிய பணத்திற்கு உங்களுக்கு சேமிப்புக் கணக்கில் வட்டிப் பணம் 6 கிழமைகளுக்குக் கிடைக்கின்றது. இந்தக் கடன் அட்டைகளை தெரிவு செய்யும் போது கவனமாக இருக்க வேண்டும். பல அட்டைகளை வைத்திருக்காமல், ஒரு அட்டை மாத்திரம் வைத்திருப்பது சிறந்தது. அட்டைகளில் சிலவற்றிற்கு User Fee இருக்கும். இவற்றைத் தவிர்க்க வேண்டும். சிலவற்றிற்கு இந்தக் கட்டணம் இல்லாவிட்டாலும், வேறு வழிகளில் பணம் செலுத்த வேண்டிவரும். சில அட்டைகளுக்குக் காப்புறுதிக் கட்டணம் அறவிடுவார்கள். வங்கிகளின் அட்டைகள் பொதுவாக குறைவான வட்டியுள்ளது. வங்கிகளிலும் பல்வேறு அட்டைகள் உள்ளன. அவற்றுள் குறைந்த வட்டியுள்ளவற்றைத் தெரிவு செய்ய வேண்டும்.

பெரிய Super market, Department store களின் அட்டைகளுக்கு அதிகளவு வட்டி வீதம் அறவிடப்படுகின்றது. அவற்றின் அட்டைகளை எடுக்காமல், அங்கு வங்கிகளின் கடன் அட்டைகளை உபயோகிக்கலாம். அதிகமான பெரிய அங்காடிகளின் கடன் அட்டைகள் 28-30% வட்டி அறவிடுகின்றன. உதாரணமாக ஒரு பெருங்கடையின் வட்டி வீதம் 28.8% என வைத்துக் கொள்வோம். உங்கள் அட்டையில் கட்ட வேண்டிய மீதி 3000 டாலர்கள். ஆனால் கட்ட வேண்டிய வட்டி ஒரு வருடத்திற்கு 864 டாலர்கள் ஆகும். ஆனால் இதேயளவு பணத்திற்கு நீங்கள் குறைந்த 10% வட்டியுடைய அட்டையை வைத்திருந்தால்

விஜே குலத்துங்கம்

கட்ட வேண்டிய வட்டிப் பணம் 300 டாலர்கள் ஆகும். எனவே குறைந்த வட்டி அட்டையைப் பாவித்தால் வருடத்திற்கு 564 டாலர்களை மீதப்படுத்தலாம். உங்களுக்கு அட்டைக்குரிய எல்லைக்கு (limit) அண்மிக்குமாயின், நீங்கள் வங்கியிடம் கேட்டால் அந்த limit ஐ கூட்டித் தருவார்கள். எனவே குறைந்த வட்டியுடைய ஒரேயொரு அட்டையைப் பாவிப்பது மிகவும் சிறந்தது.

நீங்கள் பணத்தைச் சேமிக்கக் கூடிய இன்னொரு வழி காப்புறுதியில் உள்ளது. காப்புறுதி செய்யும் போது கவனமெடுத்தால் பணம் சேமிக்கலாம். அதிகமானோர் மோட்டார் வண்டிக் காப்புறுதி, ஆயுள் காப்புறுதி, வீட்டுக் காப்புறுதி என பல காப்புறுதிகளை வைத்திருப்பார்கள். காப்புறுதிச் சந்தை மிகவும் ஒரு போட்டியிடும் சந்தையாகும். பல்வேறு நிறுவனங்கள் இதற்குப் போட்டியிடுகின்றன. எனவே நிச்சயமாக நீங்கள் பேரம் பேசி உங்கள் கட்டுப் பணத்தைக் குறைக்கும் வழிகள் உண்டு. அதிகமாக அவதானிக்கக் கூடிய உண்மை என்னவென்றால், கார் வாங்கும் போது முக்கியமாக புதிய கார் வாங்கும் போது, விற்பனை நிலையத்திற்குச் சென்று காரை பேரம் பேசி முடிப்பார்கள். காரை வெளியே எடுப்பதற்கு உடனடியாகக் காப்புறுதியை எடுக்க வேண்டும். எனவே அவசரம் அவசரமாக காப்புறுதியையும் எடுத்து விடுவார்கள். இதனால் குறைந்த கட்டணம் உள்ள காப்புறுதியை எடுக்கத் தவறி விடுவார்கள். எனவே வாங்கப் போகும் காரின் விபரங்கள் தெரிந்திருந்தால் முதலில் பல இடங்களில் விசாரித்து, காப்புறுதியை ஒழுங்கு செய்து, பின்னர் காரை வாங்குவதன் மூலம் நிச்சயமாக மாதம் 20-30 டாலர்களை மீதப்படுத்தலாம். இதே போல் ஆயுள் காப்புறுதியையும் பல இடங்களில் விசாரிப்பதன் மூலம் குறைந்த கட்டணப் பணத்துடன் பெறலாம். 30 வயதுடைய புகைப் பிடிக்கும் பழக்கம் இல்லாத ஒருவருக்கு 100,000 டாலர்களுக்குரிய காப்புறுதிக்கு வருடம் 500 இலிருந்து 1500 வரை கட்டணம் வசூலிக்கும் நிறுவனங்கள் உள்ளன. எனவே நேரத்தைச் செலவழித்து, சிறிது கஷ்டப்பட்டுக் குறைந்த கட்டுப் பணம் உள்ள நிறுவனத்தைத் தெரிவு செய்ய வேண்டும். மேலும் எல்லாவித காப்புறுதிகளையும் ஒரே நிறுவனத்தில் எடுத்தால், கழிவுகளும் உண்டு. இதை Multi policy discount எனக் கூறுவார்கள்.

ஆயுள் காப்புறுதி எடுக்கும் போது இன்னொரு விடயத்தையும் கவனிக்க வேண்டும். நீங்கள் எடுக்கும் காப்புறுதிக்குரிய தொகையின் சரியான அளவை தீர்மானிக்க வேண்டும். கூடிய தொகைக்கு காப்புறுதி எடுத்தால் கூடிய மாதாந்த கட்டுப் பணத்தைச் செலுத்த வேண்டும். முதிர்வடையும் வயதுக்கு முன்னர் ஒருவர் இறக்கும் சந்தர்ப்பம் மிகக் குறைவு. இங்கு இறந்தால் தான் உங்கள் காப்புறுதிப் பணம் கிடைக்கின்றது. எனவே ஒருவர் இறந்தால், அவரின் இறப்பின் பின்னர் அவருடைய குடும்பம் கஷ்டமில்லாமல் வாழ்க்கையை நடத்த எவ்வளவு பணம் இருந்தால் போதுமானதோ அவ்வளவு பணத்திற்குக் காப்புறுதி எடுத்தால் போதுமானது. எனவே ஒரு மில்லியன் இரண்டு மில்லியன் என காப்புறுதி செய்யாது, குடும்ப நிலைமையைப் பொறுத்து 100,000 அல்லது 200,000 எடுத்தால் போதுமானது. இதனால் குறைந்த கட்டுப் பணமே செலுத்த வேண்டியிருக்கும்.

அதிகமானோருக்கு RRSP ஐப் பற்றித் தெரிந்திருக்கும். பணத்தைப் பெருக்குவதற்கும், சேமிப்பதற்குமான ஒரு சிறந்த வழியாகும். வருமானவரி கட்டுபவர்கள் அதில் ஒரு பகுதியை RRSP வாங்குவதன் மூலம் மீளப் பெறலாம். ஒருவரின் வருமானத்தைப் பொறுத்து 1000 டாலர்களுக்கு RRSP வாங்கினால் 200-300 டாலர்கள் வரை மீளப் பெறலாம். அதிகமானோர் வருட இறுதியில் வருமானவரிப் பத்திரத்தைப் பூர்த்தி செய்யும் போது தான், RRSP ஐ வாங்குகின்றார்கள். அதன் போது வங்கியில் கடன் பெற்று, RRSP ஐ வாங்கி, பின்னர் மாதா மாதம் அதை வட்டியுடன் திரும்பக் கட்டுகின்றார்கள். இப்படிச் செய்யாது நீங்கள் வருட ஆரம்பத்திலேயே குறிப்பிட்டளவு பணத்தை மாதா மாதம் RRSP யில் போட்டு வந்தால், வருட முடிவில் ஒரு தொகை சேர்ந்து விடும். ஆனால் வட்டிப் பணம் செலுத்தத் தேவையில்லை.

RRSP & Mutual funds

அத்துடன் RRSP யினால் வரும் வருமானம் ஏற்கனவே கிடைக்கத் தொடங்கிவிடும். இதனால் நீங்கள் கடன் பெற்று மாதாமாதம் பணம் கட்டுவது போலத்தான் செயல்படுகின்றீர்கள். ஆனால் காலத்தை மாற்றியமைத்து முன்னதாக செயல்படுவதால் வட்டிப் பணம் மீதமாகின்றது.

RRSP ஐப் பற்றி இன்னொரு விடயம் என்னவெனில் அவசரப்பட்டு RRSP ஐ எடுக்கும் போது தீர விசாரியாது, குறைந்த வருமானம் தரும் GIC போன்றவற்றில் முதலீடு செய்வீர்கள். ஆனால் வங்கிகளின் உத்தியோகத்தர்களுடன் உரையாடி Mutual funds போன்ற மற்றைய முதலீடுகளைப் பற்றித் தெரிந்து தகுந்தவற்றில் முதலீடு செய்யலாம். இதன் மூலம் RRSP யினால் வரும் வருமானத்தைக் கூட்டலாம்.

வருமானவரி கட்டும் பொழுது சிலர் Refund பெறுகின்றார்கள். இதில் நீங்கள் உங்களுக்குச் சேர வேண்டிய பணத்தைக் காலம் தாழ்த்தி மீளப் பெறுகின்றீர்கள். அதாவது மேலதிகமாக நீங்கள் வட்டியைச் செலுத்தி விட்டு, வருட இறுதியின் பின்னர் மீளப் பெறுகின்றீர்கள். நீங்கள் refund இல் பணத்தைப் பெறும் போது, அரசாங்கம் உங்களுக்கு வட்டி தருவதில்லை. எனவே நீங்கள் பணத்தை மீளப் பெறுகின்றீர்கள் என்றால் நீங்கள் அரசாங்கத்திற்கு வட்டியில்லாமல் கடன் கொடுக்கின்றீர்கள் என அர்த்தமாகும். எனவே கூடியளவு உங்களிடம் இருந்து கழிக்கப்படும் பணத்தைக் குறைந்த அளவில் வைத்திருக்க வேண்டும். இதனால் உங்களுக்கு கையில் வரும் சம்பளம் அதிகமாக இருக்கும். மேதிகமாக வரும் பணத்தைத் தகுந்த விதத்தில் முதலீடு செய்தால் கணிசமான வருமானத்தைப் பெறலாம். நீங்கள் பணம் கட்ட வேண்டி வந்தால் கூட, உடனடியாக பணத்தைச் செலுத்தினால் வட்டி கட்டத் தேவையில்லை.

உங்களில் அதிகமானோர் செய்யும் ஒரு முக்கிய பண முதலீடு வீடு வாங்குதல் ஆகும். இதில் அதிகளவு பணத்தை முதலீடு செய்கின்றீர்கள். எனவே இதில் கவனமாக செயற்பட வேண்டும். Mortgage பெறும் பொழுது பல நிறுவனங்களிலும் விசாரித்து வங்கிகள், Trust நிறுவனங்கள் Credit union போன்றவற்றில் விசாரித்து, ஆகக் குறைந்த வட்டி வீதம் கிடைக்கும் இடத்தைத் தெரிவு செய்ய வேண்டும். 1/2 % வித்தியாசம் கூட உங்கள் கட்டுப் பணத்தில் வித்தியாசத்தை ஏற்படுத்தும். உதாரணமாக 100,000 டாலர்களுக்கு 25 வருட காலத்திற்கு 8% இல் மாதாந்த கட்டுப்பணம் 763.22 ஆகும். இதே தொகைக்கு 71/2 வீதத்தில் mortgage எடுத்தால் மாதாந்த கட்டுப் பணம் 731.56. எனவே 30 டாலர்களுக்கு மேல் பணம் சேமிக்கலாம். இந்தத் தொகை 25 வருடங்களுக்கும் கட்டும் பண வித்தியாசத்தைப் பார்த்தால் 9,500 டாலர்களுக்கு மேலாகும். இதேயளவு 100,000 டாலர்களுக்கு 8% mortgage 25 வருடங்களுக்கு எடுத்து விட்டு, மாதா மாதம் 100 டாலர்கள் மேலதிகமாகக் கட்டினால் 18.17 வருடங்களில் கடன் முழுவதும் கட்டப்பட்டு விடும். எனவே 7 வருடங்களுக்குரிய கட்டுப் பணம் மீதப் படுத்தலாம். மாதாமாதம் 200 டாலர்கள் மேலதிகமாக கட்டுவோமானால் 14.58 வருடங்களில் கடனைக் கட்டி முடித்து விடலாம். எனவே மேலதிகமாக பணம் கிடைக்கும் பொழுது Mortgage க்குச் செலுத்தினால் அதிகளவு பணத்தை மீதப்படுத்தலாம். ஆனால் இதில் ஒரு விடயத்தைக் கவனிக்க வேண்டும். தற்போது வட்டி வீதம் மிகக் குறைவு. எனவே வீட்டு Mortgage வட்டி வீதத்தை விட உங்கள் கடன் அட்டையின் வட்டி அதிகமாக இருப்பின் அதை முதலில் கட்டி விட்டுத்தான், குறைந்த வட்டியுடைய Mortgage இல் பணத்தைச் செலுத்த வேண்டும்.

குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு, பிள்ளைகளுக்காக குடும்ப கொடுப்பனவுப் பணம் மாதாந்தம் கொடுக்கப்படுகின்றது. அதிகமானோர் இதற்கு வரும் காசோலையை மாதாந்த செலவுப் பணத்துடன் சேர்த்து செலவழித்து விடுவார்கள். அதை விடுத்து இதை நல்ல வழியில் பரயோசனப்படுத்தலாம். உதாரணத்திற்கு ஒரு குடும்பத்திற்கு ஒரு பிள்ளைக்கு 32 டாலர்கள் வருகின்றது என வைத்துக் கொள்வோம். பார்த்தால் இது ஒரு சிறிய தொகையாகத் தென்படும். ஆனால் இரு பிள்ளைகள் இருக்கின்றார்கள் என வைத்துக் கொண்டால் மாதம் 64 டாலர்கள். இந்தப் பணத்தை 10% வருமானம் உடைய ஒரு முதலீட்டில் வைத்தால், இந்தப் பணம் மாதாமாதம் இதில் வைக்கப்பட்டு, 15 வருடங்களில் இந்தத் தொகை 24,401 டாலர்களாகிவிடும்.

இப்படியாக பலவித வழிகளில் சிறிது சிறிதாக மீதப்படுத்தும் பணத்தை சரியான வழிளில் முலீடு செய்தால் பணத்தைப் பெருக்கலாம்.

முதலீடுகள் திட்டமிடப்பட்டு கவனமாக செய்யப்பட வேண்டும். முதலீடுகளில் பல விதங்கள் உண்டு. இதில் ஒரு வகை நிரந்தர வைப்பு அல்லது Fixed deposit ஆகும். இதில் குறித்த காலத்திற்கு பணத்தை வைப்பில் இட்டு, கால முடிவில் வட்டிப் பணத்துடன் முதலைப் பெறலாம். ஆனால் பொதுவாக வட்டிப் பணம் குறைவு. இன்னொரு வகை GIC எனப்படும் Guranteed Investment Certificate ஆகும். இவற்றைப் பல நிதி நிறுவனங்கள் முதிர்ச்சி காலத்தைப் பொறுத்து வெவ்வேறு வட்டி வீதங்களுக்கு வழங்குகின்றன. இதில் பணம் இட்டால் முதிர்ச்சிக் காலம் வரையில் பணத்தை மீளப் பெற முடியாது. குறிப்பிட்ட வருமானம் தரும் இன்னொரு வகை Bonds எனப்படும். இவை ஒரு குறிப்பிட்ட விலையில் குறிப்பிட்ட வட்டி வீதத்துடன் விற்கப்படும். முதிர்வடையும் போது முதலீட்டுப் பணமும், வட்டியும் வழங்கப்பட்டு Bonds மீளப் பெறப்படும். சில Bonds வருடா வருடம் அல்லது வருடத்திற்கு இரண்டு முறை அல்லது நான்கு முறை வட்டிப் பணத்தை வழங்கும். இந்த Bonds அரசாங்கத்தினாலும், நிதி நிறுவனங்கள் மற்றும் Ontario Hydro, Municipal Bonds என மற்றைய நிறுவனங்களும் Bonds களை விற்கின்றன. Canada Savings Bonds போன்ற அரசாங்க Bonds risk குறைந்தவை. Bonds ஐ வாங்கும் பொழுது வட்டி வீதம், மற்றும் வழங்கும் நிறுவனங்களுக்கு பணம் திருப்பிக் கொடுக்கும் வல்லமை இருக்கின்றதா என்பதையெல்லாம் கவனிக்க வேண்டும்.

இவற்றை விட கனடா அரசாங்கம் விநியோகிக்கும் Canada treasury bill களையும் வங்கிகளில் வாங்கலாம். இவை 3 மாதம் தொடங்கி 1 வருடம் வரை முதிர்ச்சி காலத்தை உடையது. வைக்கப்படும் முதலீட்டுப் பணத்திற்கு ஏற்ப வட்டி வீதம் வேறுபடும். இவற்றின் வட்டி வீதம் அடிக்கடி மாறும். எனவே விசாரித்து வட்டி வீதம் கூடுதலாக இருக்கும் போது முதலீடு செய்ய வேண்டும். இவை அரசாங்கத்தால் வழங்கப்படுவதால் ஆபத்துக் குறைந்தவை.

வருமானத்தை அதிகம் வழங்கக் கூடியதும், ஆனால் (Risk) ஆபத்து நிறைந்ததும் தான் பங்குச் சந்தையாகும். பங்குச் சந்தையில் பல்வேறு நிறுவனங்களின் பங்குகளை பணம் கொடுத்து வாங்கலாம். இவற்றை விரும்பிய நேரத்தில் விற்கலாம். எனவே வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கும் நிறுவனங்களின் பங்குகளை விலை குறைவாயிருக்கும் போது வாங்கி, பின்னர் விலை கூடும் போது விற்றுப் பணத்தைப் பெறலாம். இந்தப் பங்குகளை நாம் நேரடியாக வாங்க முடியாது. Broker களின் ஊடாகவே வாங்க முடியும். வங்கிகளில் discount brokers எனும் குறைந்த Commission உடன் இந்தச் செயற்பாட்டைச் செய்கின்றார்கள்.

பங்குச் சந்தை ஆபத்து நிறைந்தது. திடீரென ஒரு நிறுவனத்திற்கு நஷ்டமேற்படலாம். இதனால் விலை குறைந்து முதலீட்டாளர்களுக்கு நஷ்டமேற்படலாம். எனவே பங்குச் சந்தை நிலவரத்தில் நன்கு அனுபவம் உள்ளவர்களே இதில் ஈடுபட வேண்டும். பங்குகள் வாங்கும் நிறுவனத்தைப் பற்றி நன்கு ஆராய வேண்டும். பங்குகளின் விலைகள் ஒவ்வொரு நாளும் ஆங்கிலப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுகின்றன.

இன்னொரு விதமான முதலீடு Mutual funds ஆகும். இதில் நிதி நிறுவனங்கள் பலருடைய பணத்தை ஒன்று சேர்த்து மற்றைய நிறுவனங்களின் பங்குகளிலோ, Bonds களிலோ அல்லது மற்றைய securities களிலோ முதலீடு செய்யும். இதில் நாம் எவற்றில் முதலீடு செய்ய வேண்டும் என தீர்மானிப்பதில்லை அவர்களே முதலீடு செய்வார்கள். ஆனால் நாம் எமக்கு விரும்பிய வகையைத் தெரிவு செய்யலாம். இந்த Mutual funds இல் fixed income fund எனப்படுவதில் குறித்தளவு வட்டி வீதம் தரும் Bonds, GIC போன்றவற்றில் முதலீடு செய்யப்படும். Equity fund எனப்படுவது, பங்குகளில் பணம் முதலீடு செய்யப்படும் Mutual funds ஆகும். Balanced fund எனப்படுவது, பங்குகளும் Bonds ம் சேர்ந்த கலவையாகும். இதைவிட Dividend fund, Real Estate fund, Gold funds போன்ற பலவிதமான Mutual funds உள்ளது. இவற்றையெல்லாம் பற்றி வங்கிகளில் விசாரித்தால், இலவசமாக உங்களுக்கு விபரங்களைக் கொடுப்பார்கள். எனவே பல்வேறு வகையான முதலீட்டு வழிகளை ஆராய்ந்து தகுந்த முறையில் முதலீடு செய்வதன் மூலம் எமது பணத்தைச் சேமிப்பது மாத்திரமல்லாது அதனைப் பெருக்கிக் கொள்ளலாம்.

குரு அரவிந்தன்

ஒரு தோட்டத்திலே ரோஜாச் செடிகள் பலவித வண்ணங்களில் பூத்துக் குலுங்கும் போது அதைப் பார்ப்பவர்கள் எப்போது இந்தத் தோட்டம் அமைக்கப்பட்டது? இந்தத் தோட்டம் யாருக்குச் சொந்தம்? எப்படி இந்தச் செடிகள் வளர்கின்றன? இந்த மலர்கள் எவ்வளவு அழகாக இருக்கின்றன! இந்த மலர்களைப் பாதுகாக்கவா செடிகளில் முள் நிறைந்திருக்கின்றன? என்றெல்லாம் பல்வேறு கோணங்களில் தங்களுக்குள் சிந்திப்பார்கள். இதே போலத்தான் இன்றைய கனடியத் தமிழ் இலக்கியத் தோட்டமும் இன்று பலரின் பார்வைக்குள்ளும், சிந்தனைக்குள்ளும் அகப்பட்டிருக்கின்றது.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் குறிப்பாக ஆயிரத்தித் தொள்ளாயிரத்தி எண்பத்தி மூன்றாம் ஆண்டுக்குப் பின்பு தான் கனடியத் தமிழ் இலக்கியத் தோட்டம் அமைக்கப்பட்டது எனலாம். தமிழ் மக்கள் தங்கள் சொந்த மண்ணிலே அகதிகளாக ஆக்கப்பட்ட போது அல்லற்பட்டவர்களில் ஒரு பகுதியினர் புலம் பெயர்ந்து பல நாடுகளிலும் தஞ்சம் புகுந்தனர். இப்படியாக சொந்த மண்ணைத் துறந்து கனடாவிற்கு வந்து குடியேறிய தமிழ் மக்கள் இந்த மண்ணைத் தமது சொந்த மண்ணாக ஏற்றுக் கொண்டு காலத்தின் தேவைக்கேற்ப இலக்கியம் வளர்க்கத் தலைப்பட்டனர். இதன் காரணமாய் பல அறிஞர்களும், எழுத்தாளர்களும் ஒன்று சேர்ந்து கனடியத் தமிழ் சமூகத்தின் இலக்கியத் தோட்டத்தை அமைத்தனர்.

இந்த வகையில் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழும் இவர்களால் உரமூட்டப் பெற்று கனடிய மண்ணில் வேரூன்றத் தொடங்கின. அவ்வாறு வளர்ந்த செடிகளே இன்று பூத்துக் குலுங்குகின்றன. இத் தோட்டத்தில் மலர்கின்ற புனைகதைகளைத் தொடர்ந்தும் படைப்பவர்களைப் பற்றிக் குறிப்பிடுவதே இக் கட்டுரையின் நோக்கம். சிறுகதை, நாவல் போன்ற நவீன இலக்கிய வடிவங்களே புனைகதை எனப் பெயர் பெற்றிருந்தன. உரைநடையில் ஒரு மையக் கருவினையும் அதன் நிகழ்வின் அனுபவத்தையும், அல்லது ஒரு பாத்திரத்தையும் அதன் இயக்கத்தால் ஏற்படும் உணர்வு நிலையையும் எடுத்துக் காட்டுவதே சிறுகதையாகும். இதை விரிவுபடுத்திக் காட்டும் இலக்கிய வடிவமே நாவலாகும். இந்த மண்ணில் இவற்றின் வளர்ச்சிக்குப் பத்திரிகைகளும், சஞ்சிகைகளும், வானொலி, தொலைக்காட்சி, இணையம் போன்றவைகளும் பெரிதும் உதவி புரிந்தன.

ஒரு குறிப்பிட்ட மக்களின் வாழ்க்கை அமைப்பில் ஏற்படும் மாற்றங்களே சமுதாய மாற்றங்களாகும். பொருளாதார நிலை காரணமாகவோ அல்லது புலம் பெயர்ந்த சூழ்நிலை காரணமாகவோ வாழ்க்கை நிலை மாறிப் போகலாம். கனடியத் தமிழ்ப் புனைகதைகளும் இவ்வாறே பல்வேறு சூழ்நிலைகளில் சமுதாய மாற்றத்திற்கேற்ப உருவகம் பெற்றன. தாய் மண்ணை விட்டு தமிழ் மக்கள் இங்கே வந்தாலும் அவர்களது எண்ணங்களும் உணர்வுகளும் அந்த மண்ணைச் சுற்றியே இருந்தன. இதனால் அந்த மண்ணைப் பற்றியும், மக்களைப் பற்றியும், அந்த மண்ணில் நடக்கும் விடுதலைப் போராட்டங்கள் பற்றியும் புனைகதைகள் வெளிவரத் தொடங்கின. தாய் மண்ணில் வெளியிட முடியாத பல உண்மைகள் இக் கதைகள் மூலம் இந்த மண்ணில் வெளிவரத் தொடங்கின. இதனால் இப் புனைகதைகள் கனடிய தமிழ் மக்களின் மனதிலே பாரிய தாக்கங்களை ஏற்படுத்தலாயின. கனடிய தமிழ் சமுதாயத்தில் 'மொழி அழிந்தால் நம் இனம் அழியும்' என்ற உண்மையைப் புனைகதை மூலம் பல எழுத்தாளர்கள் எடுத்துச் சொன்னாலும், இத்தகைய கதைகளைத் தொடர்ந்து எழுதி வரும் கலைவாணி ராஜகுமாரன், தேவிகா பாலச்சந்திரன், இரா. சம்பந்தன், கங்கை மைந்தன் போன்றோரை முக்கியமாக இங்கே குறிப்பிடலாம்.

கனடியத் தமிழ் சமுதாயத்தில் உள்ள பொதுவான பிரச்சனைகளையும், குறிப்பாகப் பெண்ணியத்தைப் பற்றியும், இளைஞர்களின் பிரச்சனைகளையும், கனடியச் சமூகத்தில் உள்ள ஓரினச் சேர்க்கையைப் பற்றியும், சமுதாய ஏற்றத் தாழ்வுகளைப் பற்றியும், மையமாக வைத்துப் பல எழுத்தாளர்கள் சிறுகதைகளை இக்குறுகிய காலத்தில் எழுதியிருக்கின்றார்கள். எனக்குத் தெரிந்த வகையில் இத்தகைய சிறுகதைகளைத் தொடர்ந்தும் பத்திரிகைகளில் எழுதுபவர்களில் வி. கந்தவனம், குறமகள், வல்வை கமலா பெரியதம்பி, வி.வி. நல்லதம்பி, இரா. சம்பந்தன், இரா, தணி, வசந்தி ராஜா, சுமதி ரூபன், பிரதீபா, சக்கரவர்த்தி, சிவகணேசன், ரதன், கிருபாசாந்தி, வ.ந. கிரிதரன், குமாரமூர்த்தி, கௌத்தம். பாபு, இலக்கியா, ரோஜா ஆனந்த், கணபதி ரவீந்திரன், ஜெயகரன், அ. கந்தசாமி, கடல்புத்திரன், சேரன், செழியன், சபா. வசந்தன், மொனிக்கா, சிவம், திருமாவளவன் தாட்சாயினி, இசைப்பிரியன், ஆர், என். லோகேந்திரலிங்கம், வீணைமைந்தன், மா. சித்திவிநாயகம், ஜோர்ச் குருஷேவ், ராவுத்தர், நவம், ஞானி, கலகலப்புதீசன், குரு அரவிந்தன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

கனடியப் பத்திரிகைகளில் சிறுகதைப் போட்டிகள் மூலம் பரிசு பெற்றவர்கள் பலரும் இன்று சிறந்த எழுத்தாளர்களாகப் பரிமளித்திருக்கிறார்கள். இவர்களில் கனக. செபரத்தினம், இ. மீரா, சங்கையூர் ஜெகன், டானியல் ஜீவா, காந்திமதி அருணாசலம், ச.மு.தனபாலன், எம். ஜெயருபன், தேவகி முனீஸ்வரன், கங்கை மைந்தன் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

ரொறன்ரோவில் இயங்கும் கனடியத் தமிழ் எழுத்தாளர் இணையம் கனடியத் தமிழ் ஆக்க இலக்கிய வளர்ச்சியில் பெரிதும் முன்னின்று உழைத்து வருகின்றது. இவ் இணையம் வெளியிட இருக்கும் கனடியச் சூழ்நிலையில் எழுதப்பட்ட சிறுகதைத் தொகுப்பில் கனடிய எழுத்தாளர்களான கலைவாணி ராஜகுமாரன், செல்வம் அருளானந்தம், என். கே. மகாலிங்கம், இரா. சம்பந்தன், டானியல் ஜீவா, மா. சித்திவிநாயகம், எம்.பாபு, வள்ளிநாயகி இராமலிங்கம், வல்வை கமலா பெரியதம்பி, வி. கந்தவனம், குரு அரவிந்தன், ஆர். என். லோகேந்திரலிங்கம் ஆகியோர் தங்கள் ஆக்கங்களைப் படைத்திருக்கின்றார்கள்.

அமரர்களான எஸ்.கே. மகேந்திரனும், நிலா குகதாசனும் சிறந்த சிறுகதை எழுத்தாளர் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

கனடியத் தமிழ்ப் புனைகதைகளும் அதன் சமுதாயத் தாக்கங்களும்!

சிறுகதைகள் எப்படி கனடியத் தமிழ்ச் சமூகத்தில் தாக்கங்களை ஏற்படுத்தியதோ அதே போல முற்போக்கான சிந்தனை-களைக் கொண்ட சில நாவல்களும் தமிழ்ச் சமூகத்தில் மாற்றங்களை ஏற்படுத்தியதெனலாம். அவ்வாறு தாக்கங்களை ஏற்படுத்திய நாவல்களில், இரா. சம்பந்தன் எழுதிய பாய்மரக் காகங்கள், கலைவாணி ராஜகுமாரன் எழுதிய பனிவழிப் பயணங்கள், வி. கந்தவனம் எழுதிய ஆறுமுகம், வல்வை கமலா பெரியதம்பி எழுதிய நம் தாயார் தந்த தனம், சுமதிரூபன் எழுதிய விடுதலை, அமரர் எஸ்.கே. மகேந்திரன் எழுதிய தியாகப் பயணம், வ.ந. கிரிதரன் எழுதிய மண்ணின் குரல், இசைப்பிரியன் எழுதிய மூங்கில்கள், கங்கை மைந்தன் எழுதிய உறங்குமோ காதல் நெஞ்சம்?, ஊரைதீவு சிவசித்திரா எழுதிய பாசக் கடிதங்கள், வீணைமைந்தன் எழுதிய காதல் தேவதை, மனுவல் ஜேசுதாசன் எழுதிய 90 நாட்களுக்குள் போன்றவை முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவை. இவற்றில் இலக்கிய விழிப்புணர்ச்சி காரணமாக எழுதப்பட்ட சில நாவல்கள் படித்து மகிழ்வதற்கு மட்டுமல்ல, படித்த பின் சிந்தித்துப் பார்ப்பதற்கும் பல விடயங்களைத் தன்னகத்தே கொண்டிருக்கின்றன.

1999ல் கனடாவில் வெளிவந்த நூல்கள்

1. பஞ்சபுராணத் திரட்டு - தி. விசுவலிங்கம்
2. நாம் தேடும் உண்மைகள் - பாகம் 1 - அடியார் விபுலானந்தா
3. நாடும் நடப்பும் - சி. சிவனேசன்
4. தமிழன் கனவு - கே.ரி. சண்முகராசா (வீணைமைந்தன் - அகிலன் அசோஷியேற்ஸ்)
5. உலகளாவிய தமிழர் - கவிஞர் அம்பி (அகிலன் அசோஷியேற்ஸ்)
6. என்னை எனக்கு அறிவித்த எங்கள் குருநாதர் - ஞானசுரபி ஆத்மஜோதி நா. முத்தையா
7. ஒளிதேடும் நிழல்கள் - ரதன்
8. திருமுறைக் கதைகள் - ஞானசுரபி ஆத்மஜோதி நா. முத்தையா
9. பிள்ளையார் துதியும் ஔவையார் மதியும் - பண்டிதர் வி.வ. நம்பி
10. இந்தியத் திருத்தல யாத்திரை - சேவியர் சதாசிவம்
11. துயர் துடைத்திடும் துங்கக் கரிமுகத்துத் தூமணி - திருமதி கமலா சாந்தலிங்கம்
12. விநாயகர் நான்மணி மாலை - சுப்பிரமணிய பாரதியார் - கனடா சைவசித்தாந்த மன்றம்
13. திசைகள் வெளிக்கும் - தாட்சாயணி
14. ஈழத் தமிழர் வரலாறு - திருமதி வசந்தா நடராஜன்
15. 90 நாட்களுள் - மனுவல் ஜேசுதாசன்
16. வேலவா வடிவேலவா - முருக வே. பரமநாதன்
17. தரணியெங்கும் தமிழ் வளர்ப்போம் - சாமி அப்பாத்துரை
18. ஒரு ரோஜாவின் காதலி - இரா. தணி

தொகுப்பு: கவிநாயகர்

The Canadian Encyclopedia is back in print

Hailed as major Canadian achievement in its 1985 and 1988 editions, The Canadian Encyclopedia has just been reissued in print as a single volume edition by publisher McClelland and Stewart. This valuable research and reference tool for all things Canadian is available for a limited time at a price of $64,99.

The single volume Canadian Encyclopedia Year 2000 Edition contains over 10,000 articles and four million words, an increase of 1.5 million words over the previous edition. Complete with illustrations, maps and tables, it offers signed contributions by more than 4,000 experts in their respective fields.

The encyclopedia is edited by James Hartley Marsh, a distinguished Canadian historian, himself the number of five books on Canadian history. Marsh was responsible for editing the first two editions of the encyclopedia and, from 1991, the multimedia editions. He is a member of the Order of Canada and a recipient of a Royal Society of Canada special medal in 1986 honouring his work on bringing into production the first edition of the encyclopedia.

The encyclopedia was conceived by Mel Hurtig, an Edmonton publisher with a strong sense of nationalism, while sitting in the reception area of a school waiting for an appointment. Glancing idly at the bookshelves around him he realized that they contained only American reference works, which were notorious for their inaccurate Canadian content. He resolved to change the situation and with a $3 million grant from the Alberta government launched the original two-volume edition in 1985 which in 1988 was updated and reissued in a four-volume version.

A year later, Hurtig's financially troubled company was purchased by the Toronto firm of McClelland and Stewart which undertook the massive task of transferring the encyclopedia to the new educational and reference medium for computer use: CD-ROM. Since then, over a quarter of a million copies of the CD-ROM edition have been sold.

According to McClelland and Stewart the re-appearance of the encyclopedia in print ensures that its wealth of information is available to Canadians who prefer it in book form, whether at the office, at school or at home. At the same time, McClelland and Stewart is offering four new CD-ROM versions of the encyclopedia, one of which is bilingual (English and French) and all four of which include the recently published Oxford Canadian Dictionary.

At the launch of the new projects, McClelland and Stewart President Avie Bennett deplored the fact that US-owned computer companies, enjoying huge sales of their projects to Canadian homes, schools and businesses frequently offer with their computers, free packages of reference material including American encyclopedias but none of which includes The Canadian Encyclopedia. He said: "in an increasingly borderless corporate world that seems ever more hostile to national distinctions and aspirations, this book is offered in a spirit of defiance and faith in our future."

கனடியத் தமிழ்ப் புனைகதை...

ஒரு கதையை வாசிக்கும் போது அதை வாசிக்கும் வாசகனின் மனதில் அவனை அறியாது ஒருவித உணர்வு நிலையை ஏற்படுத்தி அதனால் ஒரு தாக்கத்தை அவனது மனதில் எழுத்தாளனால் ஏற்படுத்த முடியுமானால் அவ்வாறான கதை ஒரு தரமான கதையாக அமையும்.

ஈழத்து எழுத்தாளர்களில் அனேகமானோர் யதார்த்தமாய் எழுத முற்படுவதினால் அனேகமான கதைகளின் முடிவுகளும் யதார்த்தமாகவே இருக்கின்றன. இதனால் வாசகர்கள் இத்தகைய கதைகளிலிருந்து சுவாரஸ்யத்தையோ, அல்லது திடீர் திருப்பு முனைகளையோ எதிர்பார்க்க முடியாமல் இருக்கின்றது. இவற்றில் சில கதைகள் எந்த அளவிற்கு இலக்கியத் தரமும் வாசகரஞ்சகமும் கொண்டிருக்கின்றன என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றன. மேலும் சிலர் ஆரம்ப எழுத்தாளர்களாய் இருப்பதால் அவர்களின் சிந்தனைகளைப் பல கோணங்களிலும் விரிவுபடுத்த வேண்டும் என்பதையும், இதற்காக இவர்கள் நிறைய வாசிக்க வேண்டும் என்பதையும் இத் தருணத்தில் எடுத்துக் கூறுவது நல்லதென்று நினைக்கின்றேன்.

சிறுகதை, நாவல் இலக்கியத் துறையில் கனடியத் தமிழ் எழுத்தாளர்கள் இதுவரை பெரிய சாதனைகளைச் செய்யாவிட்டாலும், குறுகிய காலத்தில் வேகமாக வளர்ச்சியடைந்த இவர்கள், எதிர்காலத்தில் நல்ல கலைப் படைப்புகளைத் தருவார்கள் என்ற நம்பிக்கை எல்லோர் மனதிலும் தெளிவாக இருக்கின்றது. இருபத்தியோராம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியத்தில் புதிய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய தகைமைகளை ஈழத்தின் புலம்பெயர்ந்த எழுத்தாளர்கள் கொண்டிருக்கின்றார்கள் என்று தென்னகப் பிரபல எழுத்தாளர் சுஜாதாவும், ஈழத்து முதுபெரும் எழுத்தாளர் எஸ். பொன்னுத்துரையும் கூறுகின்றார்கள் என்றால் அந்தத் தாக்கத்திற்கு வித்திடக் கூடிய பெரும் பங்கை கனடியத் தமிழ் எழுத்தாளர்கள் ஏற்பார்கள் என்பதில் எல்லோருக்கும் நம்பிக்கை உண்டு. இந்த மண்ணில் எல்லா வசதிகளும் இருப்பதால் கனடிய எழுத்தாளர்கள் எல்லோரும் ஒன்றுபட்டு இத்துறையில் தங்கள் பங்களிப்பைச் செய்து, கலைப் படைப்புகளில் சாதனைகளைச் செய்ய வேண்டும் என்பதே கனடிய மண்ணில் வாழும் தமிழ் சமுதாயத்தின் இன்றைய எதிர்பார்ப்பாகும்!

மலரின் எழுத்தாளர்கள்
Our Contributors



ராஜ் இராஜதுரை
முன்னாள் தலைவர், வர்த்தக சம்மேளனம்
தலைவர், 'போர்ட்டலோ' நிறுவனம்



கே.ரி. சண்முகராஜா
எழுத்தாளர்



கனகேஸ் நடராஜா
ஆசிரியர்
ரொறன்ரோ மாவட்டக் கல்விச் சபை



எஸ். பத்மநாதன்
எழுத்தாளர், முன்னாள் விரிவுரையாளர்



குரு அரவிந்தன்
எழுத்தாளர், கணக்காளர்



விஜே குலத்துங்கம்
கட்டுரையாளர், நிதி ஆலோசகர்

தற்கொலை - ஒரு சிறுகுறிப்பு

ஆதிக் கிறிஸ்தவம், இவ்வுலகம் இச்சையும், பாவச் செயலும் நிறைந்த ஒன்று. எனவே இப்பாவ உலகிலிருந்து விடுதலை பெற சாவு ஒன்றே வழி என நம்பியதால் தற்கொலையை ஒரு பாவச் செயலாகக் கருதவில்லை. ஆனால் போரின் கொலைகளையும், கொலைத் தண்டனையையும் கண்டித்துள்ளது.

உரோம ஆட்சியில் கிறிஸ்தவ சமயம் பெரும்பங்கு வகித்தபோது அது தற்கொலையை ஒரு பாவச் செயலாகக் கருதியது. 533ம் ஆண்டில் தற்கொலை செய்தோரைக் கிறிஸ்தவ சமயப்படி அடக்கம் செய்வது குற்றமாகக் கருதப்பட்டது. 693 இல் தற்கொலை முயற்சி கூட பாவச் செயலாகக் கருதப்பட்டு அத்தகைய செய்கைகளில் ஈடுபடுவோர் சமயத்திலிருந்து விலக்கப்பட்டு சிவில் நிர்வாகத்தாலும் தண்டிக்கப்பட்டார்கள்.

"தற்கொலை தான் செய்த குற்றத்திற்கான வருந்துதலைத் தவிர்க்கும் செயல். இது ஒருவகைக் கொலையே. எனவே இது பத்துக் கட்டளையின் (Ten Commandments) ஆறாவது கட்டளையான 'கொலை செய்யாதிருப்பாயாக' ('Thou Shalt Not Kill') என்பதனை மீறும் ஒரு பாவச் செயல்" என்று புனித அகுஸ்தீனார் கூறுகிறார்.

புரட்டஸ்தாந்து மதம் "சாவின் பின் பாவங்களைச் சுத்தப்படுத்தும் பொதுத் தீர்வைக் கொள்கையை தற்கொலை மறுக்கிறது" என்கிறது.

புத்தசமயம், "மனித உடலும் உள்ளமும் சேர்ந்தே ஒளி பெறமுடியும். எனவே துயரின் மூலமான அறிவீனத்தை அகற்றிவிட வேண்டும்" என்கிறது. "துன்பமும் பாவமும் நிறைந்த இவ்வாழ்விலிருந்து விடுதலை பெறச் சாவே மேலானது என்று ஒரு புத்த குரு கொலையைப் போதிப்பானாயின் அவன் புத்த குருவாய் இருக்க முடியாது என புத்த ஆகமவிதி கூறுவதாக ஆனந்த K. குமாரசாமி Buddha And The Gospel of Buddhism என்ற நூலில் கூறுகிறார்.

தற்கொலையை ஒருவித மனநோய் அல்லது பல மன உளைவுகளின் ஒரு செயற்பாடு என்பர். மூளையியல் அறிஞர் Esquirol என்பார் "தற்கொலை மூளை நோயின் பலவித அறிகுறிகளையும் கொண்டுள்ளது" என்கிறார். இதையே உளவியலாளர்கள் "சித்தப் பிரமை" என்றும், மூளையியல் வல்லுனர்கள் "Monomaniac" என்றும் சொல்லுவர்.

இந்நோயினால் பாதிக்கப்பட்டோரின் மூளை ஒரேயொரு செயற்பாட்டைத் தவிர ஏனையவற்றில் பூரண ஆரோக்கியமாய் இருக்கும். இந்நோயாளிகள் எதுவித காரணங்களுமின்றி அபத்த சிந்தனையுடையவர்களாகவும், மது அருந்த, களவு எடுக்க அல்லது தேவைகளின்றி தகாத வார்த்தைகள் பேச உந்தப்படுவர்.

அதே வேளைகளில் அவர்களுடைய மற்றைய செயற்பாடுகள் எதுவித பிழைகளுமின்றி இருக்கும். இந்நோயாளிகளின் மனக் கிளர்ச்சியின் உணர்வு வேகம் தவறான செயற்பாட்டின் பிரதிநிதியாகச் சிந்தனையை ஆட்கொண்டு மூளையின் செயற்பாட்டை முடமாக்கி விடும். இங்கு சிந்தனைச் சமதளம் அற்றுப் போய் ஒருவித ஆவேச உணர்வு ஏற்பட்டு தற்கொலைக்கு இட்டுச் செல்லும்.

நீண்டகால நோயினால் பாதிக்கப்பட்டோரிடையே ஏற்படும் மனவிரக்தி சிலவேளைகளில் அந்நோயாளியைத் தற்கொலைக்குத் தூண்டிவிடும் குணம் உடையது.

ஞானம் லெம்பட்

நீண்டகால நோயும் மனவிரக்தியும் ஒன்றில் ஒன்று செல்வாக்குச் செலுத்தக் கூடியது. நீடித்த நோய் மனவிரக்தியை ஏற்படுத்தும் அல்லது மனவிரக்தி நோயை நீட்டிச் செல்லும்.

ஆனால் நீண்டகால நோயினால் பாதிக்கப்பட்ட எல்லோருமே மனவிரக்திக்கு ஆளாவதும் இல்லை. மனவிரக்தி அடைந்த எல்லோருமே நோயாளியாக மாறுவதுமில்லை.

Charron என்பார் தற்கொலையை, தனிமனித சிறப்பியல்புகள், எதிர்மறை வாழ்வனுபவம், சமூக உதவிகள் என்பவற்றின் செயற்பாடு என்கிறார்.

நீண்டகால தற்கொலை ஆராய்ச்சியாளர்கள் தற்கொலைக்கு.. தனிமனித சிறப்பியல்புகள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ காரணமாய் இருந்துள்ளன என்கிறார்கள். கணக்கீட்டின் படி தற்கொலைப் பண்பியல் வயது எல்லைக்கேற்ப வித்தியாசப்படுகிறது. இப்பண்பியல் 16 வயதுக்குட்பட்டோரிடம் குறைவாகவும், வயது கூடக்கூட இது அதிகரித்தும் காணப்படுகிறது. மிகக் கூடுதலாகக் காணப்படுவது 18 வயதுக்கும் 60 வயதுக்கும் இடைப்பட்டோரிடமே. அதுமட்டுமன்றி தற்கொலை எண்ணங்கள், தற்கொலை முயற்சிகள், தற்கொலைகள் ஆண் பெண் பாலாரிடையேயும் வித்தியாசப்படுகிறது.

இளம்பெண்களிடம் தற்கொலை எண்ணங்களும், முயற்சிகளும் இளம் ஆண்களைவிட அதிகமாயும், இதற்கு மாறாகத் தற்கொலைகள் (Completed Suicide) இளம் ஆண்களிடம் அதிகமாகவும் காணப்படுகிறது.

தற்கொலை செய்யும் முறைகளும் ஆண் பெண்பாலாரிடையே வித்தியாசப்படுகிறது. ஆண்கள் பெரும்பாலும் முரட்டுத் தன்மையான முறையையும் (துப்பாக்கி பாவிப்பது) பெண்கள் முரட்டுத்தன்மை அற்ற முறையையும் (விஷம் அருந்துதல்) கையாளுவர்.

மனித வாழ்வின் அசாதாரண சம்பவங்கள், பயங்கர அனுபவங்கள் என்பன தனிமனிதரிடையே மன அழுத்தத்தை ஏற்படுத்தும். இந்த மனஅழுத்தமானது அந்த நிகழ்வின் தன்மையைப் (முக்கியத்துவம், அளவின் தன்மை, நிச்சயத் தன்மை, காலம்) பொறுத்தும், அந்தத் தனி மனிதனின் ஆளுமையைப் பொறுத்தும் மாறுபடும். இத் தன்மைகள் பெற்றோரை இழந்த குழந்தைகளிடம் அல்லது பிரச்சனையுள்ள குடும்பத்தில் உள்ள குழந்தைகளிடம் அதிகமாகக் காணப்படும். இதனால் தற்கொலையும் இத்தகையோரிடம் கூடுதலாகக் காணப்படும்.

கல்வித் தகைமையில் ஏற்படும் குறைவு கூட சிலரிடம் தற்கொலைத் தன்மையை ஏற்படுத்தும். சராசரி அல்லது அதற்கு மேற்பட்ட கல்வி அறிவுடையோர் பல்வேறு காரணங்களினால் பரீட்சையில் தோல்வி அடைந்தால் தற்கொலையிடம் சரண் அடைபவர்கள் இதில் அடங்குவர்.

தற்கொலை குடும்ப அமைப்பு முறையோடும் தொடர்புடையது. விவாகம் செய்யாதிருப்போர், விதவைகள், விவாகரத்துச் செய்தோரிடையேயும் கூடுதலாக உள்ளது. தனிமை, உதவி செய்ய யாரும் இல்லை என்ற ஏக்கம் என்பனவே இங்கு காரணிகளாகும்.

மிதமிஞ்சிய மதுப் பழக்கம் குடும்பப் புறக்கணிப்பு, தொழிலில் ஒழுங்கின்மை, பிசிறும் சமூக அந்தஸ்து, நண்பர்களிடமிருந்து தனிமைப்படுத்தல் என்பவற்றுக்கு இட்டுச் சென்று சமூகத்திலிருந்து தாழ்ந்த நிலைக்குக் கொண்டு செல்லும். இதனால் சமூக உறவில் ஏற்படும் விரிசல், குற்றவுணர்வு, அபகீர்த்தி என்பன அதீத தனிமையாக்கலுக்குள்ளாக்கி தற்கொலைக்கு ஏதுவாக்கும்.

தற்கொலை - ஒருவரின் அவசர முடிவினால் குடும்ப உறவினர்களுக்கு அபகீர்த்தி

டாக்டர்
து. சூரியபாலன் F.R.C.P (C)

புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழ் மக்கள் கனடாவிற்கு வந்த பின்பும், பலர் தமது வாழ்க்கையில் இன்னல்களையும், துன்பங்களையும் தொடர்ந்து அனுபவிப்பதை நாம் மிகவும் அனுதாபத்தோடு காணக்கூடியதாக இருக்கின்றது. சிலர் ஈழநாட்டில் அனுபவித்த இன்னல்களையும் விட இங்கு கூடிய துன்பங்களை அனுபவிக்க நேரிடுகின்றார்கள். இதுவும் ஒரு வாழ்க்கையா? இப்படித்தான் நாம் வாழவேண்டுமா? என்று மனம் அங்கலாய்க்கின்றார்கள். இந்த அனுபவங்களால் மணவாழ்க்கை கசக்கின்றது. சிலர் மதுவை நாடி தமக்கும் தமது குடும்பத்தவருக்கும் இன்னல்களைக் கூட்டிக் கொள்கின்றார்கள். மணவாழ்க்கை மரண வேதனையாகி இறுதியில் விவாகரத்தில் முடிகின்றது. இதனால் தம்பதிகள் மாத்திரமன்றி அவர்களுடைய பிள்ளைகளும் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். பெரியோர், சிறியோர், படித்தவர்கள், படிக்காதவர்கள், ஆண்,பெண் என்று பேதம் காட்டாமல் எல்லோரையும் விதி சோதனைக்குள்ளாக்குகின்றது. இந்தவேளையில் ஒரு சிலர் தமது துன்பங்களுக்கு தற்கொலை செய்வதே ஒரேயொரு வழி என்று மிகவும் பிழையான முடிவுக்கு வருகின்றார்கள். ரொறன்ரோவில் வாழும் எத்தனையோ நாட்டு மக்களில் தற்கொலை புரிவது ஈழத்தமிழ் மக்களில் மிகவும் கூடியளவாகக் காணப்படுகின்றது என்று சமூக ஆராய்ச்சியாளர்களும் மற்றும் மனநோய் நிபுணர்களும் கூறுகின்றனர்.

இந்து சமயமோ, கிறிஸ்தவ சமயமோ, இஸ்லாம் சமயமோ அல்லது வேறு எந்தச் சமயமோ தற்கொலை செய்வது தான் எமது துன்பங்களுக்கேற்ற பரிகாரம் என்று கூறவில்லை. தற்கொலை புரிவதால் எமது ஆத்மா தொடர்ந்து இன்னல்களை அனுபவித்து பின்பு மிருகமாகப் பிறந்து எத்தனையோ பிறவிகளுக்குப் பின் மனித உருவை எடுக்கின்றது என்று இந்து சமயம் கூறுகின்றது. ஆண்டவனுடைய குழந்தைகளாகிய நாம் அவரின் நீதிக்கு எதிராக எமது உயிரை மாய்ப்பதால் நரகத்தில் பலகாலம் உய்ய வேண்டி நேரிடும் என்று மற்றச் சமயங்கள் கூறுகின்றன. ஆகவே தற்கொலை செய்வதால் எமது துன்பங்கள் எல்லாம் மறைந்து விடும் என்று நாம் எண்ணுவது மிகவும் பிழையான அபிப்பிராயம்.

சிலர் தமது வாழ்க்கை ஒருவருக்கும் பிரயோசனம் அற்றது எனவும், இப் பூவுலகை நீத்தால் மற்றவர்களுக்குப் பாரமாக இருக்காதது மாத்திரமன்றி, தமது இறப்பால் மற்றவர்கள் சந்தோஷமாக வாழ்வார்கள் என்றும் முடிவு கட்டுகின்றனர். இது எவ்வளவு மூடத்தனமான ஒரு முடிவு என்று சாதாரண மனோநிலையில் உள்ளவர்களுக்குத் தெரிந்தாலும், தற்கொலையைப் பற்றிச் சிந்திப்பவர்களுக்குத் தாங்கள் நினைத்த கொள்கையே சரியென்று தென்படுகின்றது. "என்னுடைய உயிரை நான் என்னவாலும் செய்யலாம் மற்றவர்கள் இதில் தலையிடத் தேவையில்லை" என்று வாதிப்பவர்களும் உளர்.

உண்மை என்னவென்றால் தற்கொலை செய்வதைப் போன்ற ஒரு சுயநலம் உள்ள செயல் உலகத்தில் இல்லை. தற்கொலை செய்பவர்கள் தமது மனைவி, கணவர், பிள்ளைகள், பெற்றோர்கள், இனத்தவர்கள், நண்பர்கள் போன்றவர்கள் தமது வாழ்நாள் முழுவதும் கவலையில் துடிதுடித்துப் போய்விடப் போகின்றார்களே என்பதை உணர்வதில்லை. இந்த உண்மையை உணர வேண்டும், தற்கொலை செய்வதால் எமக்கும் எம்மை அண்டியவர்களுக்கும் நாம் கூடிய கெடுதல்களை விளைவிக்கின்றோம் என்ற உண்மையை உணர்ந்தால் எமது சமுதாயத்தில் இன்று தலைதூக்கிப் பேயாட்டம் ஆடும் இந்த தற்கொலை என்னும் பாவச் செயல் முற்றாக அழிந்து போவதற்கு வழியுண்டு. இதை உணராத சிலருக்கு மற்றவர்கள் தகுந்த ஆறுதலையும், ஆலோசனையையும், அன்பையும் வழங்கி, இனிமேலாவது எமது மக்கள் இந்தச் செயலை நாடாது இருக்க வேண்டுமென்று ஆண்டவனை மனமாரப் பிரார்த்திக்கின்றோம்.

கே: தற்கொலை செய்யத் துணிவோரின் மனோநிலையைப் பற்றி ஒரு சில வார்த்தைகள்

ப: ஒருவர் தற்கொலை செய்யத் துணியமுன் பொதுவாக அவர்களைப் பொறுத்தவரையில், மிகவும் தாங்க முடியாத இன்னல்களை அனுபவித்தவர்களாகக் காணப்படுகின்றார்கள். அவர்கள் இந்த இன்னல்களில் இருந்து விடுபட முடியாது என்ற பிழையான ஒரு முடிவுக்கு வருகிறார்கள். அடுத்தபடியாக இந்த இன்னல்களில் இருந்து தப்புவதற்கு ஒரேயொரு வழிதான் இருக்கிறது. அது என்னவென்றால் தங்களுடைய உயிரை மாய்த்துக் கொள்வது என்ற ஒரு முடிவுக்கும் வருகிறார்கள். அந்த முடிவைச் சிலர் நடைமுறையிலும் கையாண்டு விடுகிறார்கள். மற்றவர்களுக்கு இவர்களின் இன்னல்கள் பெரிதாகத் தெரியாவிட்டாலும், இந்த மாதிரியான இன்னல்களை வேறு எத்தனையோ முறைகளால் தீர்வுகாண முடியும் என்று தோன்றினாலும், தற்கொலை செய்ய துணிபவர்களின் மனத்தில் அப்படித் தோன்றுவதில்லை. அவர்களுக்குத் தாங்கள் அனுபவிக்கும் துன்பத்தை ஒருவராலும் தீர்க்க முடியாது, அதேவேளையில் இனிமேலும் தங்களால் தாங்க முடியாது என்ற ஒரு மனோநிலைக்கு வருகின்றார்கள்.

இதை ஆங்கிலத்தில் Hopelessness என்று கூறுவார்கள்.

கே: அப்படியானால் இந்த மாதிரியான மனோநிலை தோன்றுவதற்கு உள்ள காரணங்கள் என்ன?

ப: மிக முக்கியமான காரணம் தொடர்ந்து நாங்கள் அனுபவிக்கும் துக்கமான சூழ்நிலையும், அந்த மாதிரியான இன்னல்களை மற்றவர்களுடன் பகிர்ந்து, ஆலோசனை கேட்காமல் இருப்பதும் என்று கூறலாம். உதாரணமாக, சில பெண்கள் மணவாழ்க்கை கசப்பதால் தற்கொலை செய்யத் துணிகிறார்கள். இளைஞர்கள் படிப்பில் சித்தியடையா விட்டாலோ, வேலை இல்லாமையாலோ இந்த மாதிரியான ஒருவழி தான் தங்களுடைய துன்பத்திற்கு விடை என்று பிழையாக எண்ணுகிறார்கள். இளவயதினர் சிலவேளையில் காதலில் தோல்வி போன்ற காரணங்களுக்காகவும், பெற்றோர் தங்களுக்கு விருப்பமில்லாத ஒருவரை மணம் செய்யத் தூண்டுவதாலும் தற்கொலையை நாடுகிறார்கள். சாதாரண நிலையில் உள்ள எவரும் இந்த மாதிரியான கரைச்சல்களை மற்றவர்களுடன் கதைத்து, ஆராய்ந்து, ஆலோசனை பெற்று அந்த இன்னல்களுக்கு ஒரு நல்ல முடிவைக் காண்கிறார்கள். அதேவேளையில், இந்த மாதிரியான தற்கொலையை நாடுபவர்கள் தங்களுடைய துன்பங்களைத் தங்களுக்குள் வைத்து புழுங்கிப் போய்விடுகிறார்கள். இதனால் நாளடைவில் துக்கமான மனோநிலையையும், மேற்கூறிய மாதிரி ஒரு நம்பிக்கையற்ற உணர்வினையும் அடைகிறார்கள்.

ஒருவர் துக்கமான மனோநிலையை அனுபவிக்கும் பொழுது உலகம் முழுவதும் இருண்டதாகவே அவர்களுக்குக் காணப்படுகிறது. ஆங்கிலத்தில் Pessimistic என்று கூறுவார்கள். எதையெடுத்தாலும், எதைப் பற்றிக் கூறினாலும், அவர்கள் அதைப் பற்றிக் குறைவாகவும், எதிராகவும் (Negative) தான் அவர்களுடைய மனதில் தோன்றும். எங்கள் எல்லோருக்கும் தெரியும் மணவாழ்க்கை எப்பொழுதும் சுமுகமாகப் போவதில்லை என்று. அப்படிப்பட்ட பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு எத்தனையோ வழிமுறைகள் இருக்கின்றன. துரதிர்ஷ்டவசமாக இவர்கள் மற்றவர்களின் உதவியை நாடுவதில்லை. இதனால் மேலும் கூடிய துன்பத்தை அனுபவிப்பது மாத்திரமன்றி,

↘

அவர்களுடைய நிதானமான மனோநிலையையும் இழந்து விடுகிறார்கள். எது பிழை என்று எங்கள் எல்லோருக்கும் படுகின்றதோ, அது இவர்களுக்குச் சரியென்று படுகின்றது. அதாவது They make wrong decisions. இதன் முடிவுதான் தற்கொலை.

கே: Depression என்ற வருத்தத்திற்கும் தற்கொலைக்கும் உள்ள தொடர்புகளைப் பற்றிக் கூறுவீர்களா?

ப: Depression என்ற வருத்தத்தில் எங்களுடைய மனோநிலை மிகவும் துக்ககரமாக இருக்கின்றது. அப்படிப்பட்ட ஒரு மனோநிலையில் நாங்கள் நினைக்கும் நினைவுகள், நாங்கள் எடுக்கும் முடிவுகள் எல்லாம் மேற்கூறிய மாதிரியாக Negative ஆகவும், பிழையாகவும் இருக்கின்றது. இதனால் தாங்கள் இந்த மாதிரியான மனோநிலையை தற்கொலை மூலம் தான் தீர்க்கலாம் என்ற ஒரு பிழையான முடிவிற்கு வருகின்றார்கள். மருத்துவ ஆராய்ச்சியின்படி, தற்கொலை செய்பவர்களில் 80-85% வீதமானோர், தற்கொலை செய்யமுன் மிகவும் Depressed ஆக இருந்திருக்கிறார்கள் என்று அறிகிறோம். மிகுதியான 15% வீதமானோர் வேறுபல காரணங்களுக்காக சடுதியாக இந்த முடிவை எடுக்கிறார்கள்.

கே: இந்த மாதிரியான தற்கொலைகளை எவ்வாறு தடுக்கலாம்?

அப்படித்தான் ஆலோசனை எடுத்தும் எங்களுடைய மணவாழ்க்கையைத் திருத்த முடியாவிட்டால் கடைசி நிலையாக விவாகரத்து செய்துவிட்டு எங்களுடைய வாழ்க்கையைத் தொடர்ந்து நடத்துவது நல்லது. அதைவிட்டு, எங்களுடைய பிள்ளைகளையும் பெற்றோரையும் வாழ்க்கை முழுவதும் கவலையில் ஆழ்த்திவிட்டுப் போவது ஒரு நல்ல முடிவல்ல.

இப்படியான எவ்வளவோ ஆலோசனைகள் கூறினாலும் எங்களில் பலர் மற்றவர்களிடம் உதவி/ஆலோசனை பெற முன்வருவதாகத் தெரியவில்லை. இதன் முடிவு தான் நாங்கள் அடிக்கடி கேள்விப்படும் தற்கொலை அகால மரணங்கள். ஆகவே இதைத் தடுப்பதற்கு மற்றவர்கள் முன்வரவேண்டும். எங்களுக்குத் தெரிந்தவர்கள் கஷ்டங்களை அனுபவிக்கும் பொழுது அவர்களுக்கு ஆதரவாகவும், ஆறுதலாகவும் இருக்க முயல வேண்டும். உள்வீட்டுப் பிரச்சனைகளில் தலையிடுங்கள் என்று நான் கூறவில்லை, ஆனால் அதே நேரத்தில் துப்பரவாகத் தள்ளி நிற்கவும் வேண்டாம். அது வீட்டுப் பிரச்சனை, அதில் நாங்கள் தலையிடக் கூடாது என்று நாங்கள் எட்டி நிற்பது மிகவும் சாதாரணமாகக் காணக்கூடிய ஒன்று. அதே வேளையில் உங்களுக்கு ஏதும் பிரச்சனைகள் இருந்தால், அதை எங்களால் உதவ முடியும் என்றால் தயவுசெய்து கூச்சப்படாமல் கேளுங்கள் என்று கூறுவது நல்லது.

இது ஒரு உள்வீட்டுப் பிரச்சனையில்லை!

ப: முதலாவதாக நாங்கள் எல்லோரும் உணர்ந்து கொள்ள வேண்டிய உண்மை என்னவென்றால் தற்கொலை செய்வதால் நாங்கள் எங்களுடைய துன்பங்களுக்கு முடிவு காணலாம் என்ற பிழையான அபிப்பிராயத்தை விட்டு விடுவதே. எங்களால் ஒரு பிரச்சனைக்கு முடிவு காண முடியாவிட்டால் மற்றவர்களின் உதவியை நாட வேண்டும். அடுத்த முக்கியமான ஒரு கட்டம், மற்றவர்களிடம் ஆலோசனை கேட்பதைப் பற்றி முன்பு கூறினோம். இது ஒரு மிக முக்கியமான ஒரு கட்டம். ஆனால் நடைமுறையில் இது நடப்பதாகத் தெரியவில்லை. இது எங்களுடைய ஒரு கலாசாரப் பண்போ தெரியவில்லை. கணவர் மனைவியரின் வேற்றுமைகளை பிறருடன் கதைப்பதற்குப்பொதுவாக எங்கள் பெண்களோ ஆண்களோ விரும்புவதில்லை. இது ஒரு பிழையான மனப்பான்மை என்றே கூறுவோம். மணவாழ்க்கைப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு எங்களுடைய பெற்றோர்களுடனோ, அல்லது மதகுருமார்களுடனோ அல்லது நீங்கள் நெருங்கிப் பழகிய உற்றார் உறவினருடனோ அல்லது நல்ல நண்பர்களுடனோ அல்லது Marriage Counsellor உடனோ அல்லது எங்களுடைய குடும்ப வைத்தியருடனோ கதைத்து நல்ல முடிவை நாடலாம்.

தற்கொலை செய்யத் துணிபவர்களை, கடைசி நேரத்தில் யாரோடாவது கதைத்து தங்களுடைய மனத்தைத் தேற்ற முயலுவர். அதே வேளையில் நீங்களே கடவுள் போல் அவர்களுக்கு கைகொடுத்து அவர்களின் மனோநிலையை மாற்றலாம். மற்றவர்களுக்குச் செய்யும் சேவை ஆண்டவனுக்குச் செய்யும் சேவைகளில் மிக உன்னதமான சேவை என்பதை நாம் எல்லோரும் அறிவோம். பலர் தாங்கள் தற்கொலை செய்வதற்கு சில நாட்களுக்கு முன், இந்த உலகத்தில் இருந்து என்ன பிரயோசனம், நான் இறந்து விட்டால் எனக்கு இந்த மாதிரியான பிரச்சனைகள் தீர்ந்துவிடும் என்று பட்டும்படாததுமாக கூறுவார்கள். அவர்கள் அப்படிக் கூறும் பொழுது, அதை நாங்கள் Serious ஆக எடுத்து, அவர்களோடு கதைத்து அவர்களுக்கு ஆறுதல் சொல்வது ஒரு மிக முக்கியமான கடமை. இவர் சும்மா சொல்கின்றார் என்று நினைத்து பேசாமல் இருந்து விடவேண்டாம். பின்பு நாங்கள் அதை நினைத்து வாழ்நாள் பூராகவும் மனவருத்தப்பட வேண்டி நேரிடும்.

கே: Crisis Line என்று கூறப்படும் நிவாரண நிலையத்தைப் பற்றிக் கூற முடியுமா?

ப: இது ஒரு Voluntory Organisation. இவர்கள் தற்கொலை செய்ய எண்ணுபவர்களுக்கு Telephone மூலமாக ஆறுதல் சொல்லி, தகுந்த ஆலோசனை வழங்கி, வைத்தியசாலைக்குப் போக (Emergency) உதவுகிறார்கள். வைத்தியசாலைக்கு ஏன் போக வேண்டும்? நாங்கள் தனிமையாக இருக்கும் பொழுதோ அல்லது பிரச்சனைகள் சூழ்ந்து இருக்கும் சூழ்நிலையில் இருக்கும் பொழுதோ, எங்களுடைய மனோநிலை, எவ்வளவு தான் ஆறுதல் கூறினாலும், சிலவேளைகளில் மாறுவதில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்து விடுபட்டு, வைத்தியசாலையில் தற்கொலை சம்பந்தப்பட்ட Counsellors, Therapists, Doctors உடன் கதைத்து அதற்குத் தகுந்த வழிமுறைகளை எடுப்பதால் இந்த மாதிரியான பிழையான நோக்கத்தைக் கைவிடுவது மாத்திரமன்றி, எங்களுடைய பிரச்சனைகளுக்கு சரியான முறையில் தீர்வும் காண முடிகிறது.

எங்களுடைய தமிழ் மக்களுக்குத் தமிழில் பேசி உதவ Crisis Line இப்பொழுது இல்லை. அப்படியொன்றை நாங்கள் நிறுவும் வரை, நாங்கள் தான் ஒருவருக்கு ஒருவர் உதவியாக இருந்து இந்த மாதிரியான அகால மரணங்களைத் தடுக்க வேண்டும். Crisis Line Operate பண்ணுவதற்கு Volunteers பலர் வேண்டும். 24 மணிநேர Telephone சேவை வேண்டும். ஆண்டவன் அருளால் இது கூடிய விரைவில் நடைமுறைக்கு வரவேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம்.

கே: இந்த மாதிரியான தற்கொலை செய்தவர்களின் பெற்றோர், உற்றார், உறவினர், நண்பர்களினது மனோநிலையைப் பற்றி ஒருசில வார்த்தைகள்.

ப: மேற்கூறியவர்களை நாங்கள் மறந்து விடுகிறோம். நாம் எல்லோரும் பொதுவாக தற்கொலை புரிந்தவரைப் பற்றி கவலை தெரிவித்து அனுதாபத்தை செலுத்துவதோடு நின்று விடுகிறோம். அதேவேளையில் தற்கொலை புரிந்தவரின் பெற்றோர், பிள்ளைகள், கணவர்/மனைவியார், தங்களால் தான் இவர் தற்கொலை பண்ணினார் என்று பிழையான அபிபிராயத்தை மேற்கொண்டு, அந்த அபிப்பிராயத்தால் மேலும் துக்ககரமான வாழ்க்கையை நடத்துகிறார்கள். இதை Guilt Feelings என்று ஆங்கிலத்தில் கூறுவர். தேவையில்லாத Guilt Feelings ஆல் தங்களை வருத்திக் கொள்கிறார்கள். அது மாத்திரமன்றி, தாங்கள் என்ன பிழைவிட்டோம், எந்த மாதிரி நடந்து கொண்டால் இந்த அகால மரணத்தை தடுத்து இருக்கலாம் என்று இரவும் பகலும் யோசித்து வருத்தப்பட்ட வண்ணமாக இருக்கிறார்கள். இவர்களுடன் நாங்கள் ஆதரவாகவும் அன்பாகவும் பேசி அவர்களுடைய மனத்தைத் தேற்றி வாழ்க்கையை வாழ்வதற்கு நாங்கள் உதவ வேண்டும்.

Dentistry in Y2K

டாக்டர்
அ. சண்முகவடிவேல்

Many of us were worried about millennium stuff as we were entering year 2000. It is very exciting to be around at the turn of a century. We should all feel pretty special because we got a chance to experience the historical transition from one century to the next.

We were asked several times whether we were ready for the transition! The banks, hydro, governments all informed us that they had done their preparation. When one looked closely, some businesses made a lot of money by selling all sorts of items. Was the millennium pure hype or some profound moment in the history of our time?

Cynicism aside, I really do think that the turn of the century is a good opportunity to check things out and, when appropriate, to make changes. It bypasses the modern-verses-traditional debate and replaces it with the notion of up-to-date. Nobody wants to be out of date, which is to say, lost in the last century.

Our check list for new millennium should include 1) Technology 2) Leadership 3) Technique and 4) Business

The reality is that new technology offers us higher quality outputs. To be not computerized in the present time is to really be a dinosaur. The list goes on to include modern x-ray systems, lasers, microabrasion system, imaging systems, implant prostheses and more.

We have to deliver excellence every single day with every patient and every staff person. Team work is the best approach for the hi-tech dental practice. Self-esteem enhancement is a hot button for the young, the middle age and the maturers. Everyone is looking for well aligned, nicely shaped and white teeth. The benefits of providing implant services are huge. Recently studies have shown that older folks want the very fine dentistry and they are very willing to pay for it.

கடந்த மூன்று சகாப்தங்களாக மூன்று கண்டங்களில் பல்வைத்திய சிகிச்சை செய்து வருகிறேன். இளவயதில் நான் பிறந்த நாட்டிலும் நடுத்தர வயதில் ஆபிரிக்காவிலும் அனுபவம் அடைந்த வயதில் கனடாவிலும் எனது பணி தொடர்கிறது.

புதிய நூற்றாண்டிற்குக் கால் எடுத்து வைக்கும் இவ்வேளையில் எனது கடந்த காலத்திற்கு உங்களை சற்று அழைத்துச் செல்ல விரும்புகின்றேன்.

எனது தந்தையார் இறந்து சரியாக 10 வருடங்களாகின்றன. அந்த உத்தமர் எனது குருவாகவும் தெய்வமாகவும் எனக்கு வழிகாட்டி வந்தார். அவரின் ஆசியுடனேயே எனது சகல காரியங்களையும் செய்து வந்தேன். சர்வகலாசாலைக்குப் பல்வைத்தியத் துறைக்குப் புகுந்தது முதல் வெளிநாடு சென்ற பொழுதும் அங்கிருந்து கனடா வந்த பொழுதும் தந்தையின் ஆலோசனைப்படியே முக்கிய திருப்பங்களில் முடிவுகளை எடுத்து வந்தேன்.

இன்று பிள்ளைகளின் கருத்துகளுக்கு நாம் முதலிடம் கொடுக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறார்கள். முன்னோர் கூறியது போல் தந்தையின் சொல்லை மந்திரமாக எண்ணி வாழ்பவர்களுக்கு உயர்வு உண்டு. அன்னை தந்தையர் எமக்குச் செய்த கருமங்களுக்கு ஈடாக வேறுயாரும் செய்துவிட முடியுமா?

1977ம் ஆண்டு நடந்த இனக்கலவரத்தின் பின்பு இலங்கையில் தமிழர்கள் தொடர்ந்தும் துன்புறுத்தப்படுவார்கள் என்று கருதி நைஜீரியாவிற்குப் போக முடிவு செய்தேன். அப்பொழுது அங்கு பல்வைத்தியராகக் கடமையாற்றிய டாக்டர் தியாகேந்திரன் அவர்களின் உதவியால் அது கைகூடியது.

ஆபிரிக்காவுக்கு சென்ற பொழுது முதலில் ஏன் அங்கு போனோம் என்ற எண்ணம் ஏற்பட்டது. உற்றார், உறவினரை, பிறந்த நாட்டை விட்டுப் புதிய மிகவும் வேறுபாடான கலாசாரத்தைக்கொண்ட மக்களுடன் வாழுவதும் தொழில் செய்வதும் சவாலாகவே ஆரம்பதில் இருந்தது. நாட்கள் போகப் போக அவர்களின் கபடமற்ற மனப்போக்கை அறிய முடிந்தது. எட்டு வருடங்கள் நைஜீரியாவின் கடுனா மாநிலத்தில் மூன்று நகரங்களில் பணியாற்றினேன். பல இடங்களிலும் வாழ்ந்ததால் பலருடன் பழகும் வாய்ப்புக் கிட்டியது.

எட்டு வருடங்களின் பின்பு கனடாவிற்குள் தஞ்சம் புகுந்து கொண்டோம். நான் இங்கு வந்த பொழுது எமது எதிர்காலம் பற்றி என்ன ஆகுமோ என்ற பயம் இருந்தது. யாரிடம் உதவிக்குப் போக வேண்டும் என்றும் புரியாமல் இருந்தது. எனது நண்பர் செல்வராஜா அவர்கள் இங்கு வந்ததும் எமக்கு ஆக வேண்டியவைகளைக் கவனித்தார். பல வருடம் பல்வைத்திய அனுபவம் இருந்ததால் எனது தொழிலைத் தூக்கி எறிந்துவிட்டு வேறு துறைக்குப் போக மனம் இடம்கொடுக்கவில்லை. எனினும் எனது துறையுடன் வேறு தொழிற் கல்விகளையும் கற்கவேண்டும் என எண்ணினேன்.

நான் அப்பொழுது மொன்றியாலில் இருந்ததால், அங்குள்ள McGill பல்கலைக்கழகத்தின் நூல் நிலையத்திற்குச் சென்று படித்து வந்தேன். எனது நண்பர் டாக்டர் சவுந்திரா ஏற்கனவே பல்வைத்திய பரீட்சைகளில் ஈடுபட்டிருந்ததால் அவரிடம் அடிக்கடி தொலைபேசியில் தொடர்பு கொள்வேன். அவர் பரீட்சை பற்றிய பல விபரங்களை மனந்திறந்து எடுத்துக் கூறி வந்தார். நான் எனது துறையை அடைவதற்கு உதவி செய்த முதல் நண்பர் இவரே.

13 வருடங்களுக்கு முன்பு பல்வைத்திய பரீட்சைகள் 4 கட்டங்களாக இருந்தன. மொன்றியாலில் இருந்த பொழுது முதல் கட்டத்தில் சித்தியடைந்தேன். மேலும் London இலுள்ள Western Ontario சர்வகலாசாலை சென்று செயற்கை பயிற்சி பெற வேண்டிய அவசியம் இருந்தது. இப் பயிற்சியை முடித்த பின்பு தான் புரிந்தது பரீட்சையின் அடுத்த கட்டங்கள் கடினமானது என்பது. கியூபெக்கில் இருக்கும் பொழுதே "Dental Hygienist" ஆக தொழில் புரிவதற்குரிய பரீட்சையிலும் தோற்றினேன். அது சாதகமாக அமையாததால் ரொறன்ரோவிற்குக் குடும்பத்துடன் வந்து சேர்ந்தேன்.

புதிய நூற்றாண்டும் பழைய கதைகளும்

ரொறன்ரோவில் கந்தோர்களில் தற்காலிக வேலைகள் கிட்டின. பகல் நேரங்களில் வேலை முடிய இரவு வேளைகளில் கம்பியூட்டர், கணக்கியல் பயில்வதில் ஈடுபட்டேன். இதைவிட பல்வைத்தியத் துறையிலும் George Brown கல்லூரியில் வேறு பயிற்சிகளைப் பெற்று வந்தேன். கந்தோரில் வேலை செய்யும் பொழுது பல புதிய அனுபவங்களைப் பெற முடிந்தது. தொலைபேசியில் பேசுவது முதற்கொண்டு, போட்டோ பிரதிகள் எடுப்பது போன்ற பல வகையான சிறுசிறு வேலைகளை அறிந்து கொள்ள முடிந்தது.

அக்காலத்தில் பல்வைத்திய செய்கை முறைப் பரீட்சைகளில் சேர்க்கப்பட்டிருந்த Laboratory Procedures (தொழில்நுட்ப கூட செய்கை முறைகள்) கடினமாகவே இருந்தன. இவை பின்பு நீக்கப்பட்டதும் சித்தி செய்வது இலகுவாக இருந்தது. அக்காலப் பொழுதில் Dr. Moshen என்னும் ஈரானிய நாட்டைச் சேர்ந்த நண்பரின் உதவியும் எனக்குக் கிடைத்தது. ஓய்வு நேரங்களில் பல தடவைகள் இவர் வீட்டிற்குச் சென்று அவரின் உதவியைப் பெற்று வந்தேன். அடுத்த பரீட்சைகள் நோயாளிகளில் செய்ய வேண்டியிருந்தது. அதற்கு வேண்டியவரை பரீட்சை நடைபெறும் வன்கூவரிலேயே பெறுவதற்கு Dr. சத்தியம் உதவி செய்தார்.

(48ம் பக்கம் பார்க்க)

பற்களை நேராக்கல்

ORTHODONTICS

டாக்டர்
எம். இளங்கோ

பல்வைத்தியத்தில் Orthodontics ஒரு கிளையாகும் Ortho என்றால் நேராக்கல், Dontics என்றால் பற்கள் என்று பொருள்படும். பற்களை நேராக்கும் போது அவற்றைத் தாங்கியிருக்கும் எலும்புகளையும் ஓரளவுக்கு மாற்றியமைக்கக் கூடியதாகவுள்ளது. இதனால் சில நாடுகளில் Orthodontics and Maxillo facial orthopedics என்றும் அழைக்கப்படுகின்றது. தமிழர்கள் இதனை கிளிப் போடுதல் என்றும், மேல் நாட்டவர்கள் Bracess என்றும் சுருக்கமாகக் கூறுவார்கள்.

பற்கள் ஏன் ஒழுங்கீனமாக அமைகின்றன (etiology) என்பதற்கு பல காரணங்கள் உள்ளன.

1. Hereditary - பரம்பரை அல்லது சந்ததி சந்ததியாக வருவது

2. Habit - பழக்கங்கள், உதாரணமாக விரல் சூப்புதல்

Tongue trust நாக்கை பற்களுக்கிடையில் வைத்திருத்தல் காற்று செல்லும் பாதையில் தடையுள்ள போது வாயால் சுவாசிப்பது Mouth breathing

3. Early loss of baby teeth - பாற்பற்களை உரிய காலத்துக்கு முன்னரே இழந்து விடுதல்.

பாற்பற்களை உரிய காலத்துக்கு முன்னரே இழந்து விடுவதால் நிரந்தரப் பற்களுக்குரிய இடமில்லாமல் போவதால் அவை ஒழுங்கீனமாகவோ அல்லது முளைக்க இடமில்லாமல் போய்விடும். எப்படி மரங்கள் மண்ணரிப்பை தடுக்கின்றனவோ அதே மாதிரி பற்கள், பற்தாடை எலும்பு கரைவதைத் தடுப்பதோடு முளைக்கும் போது எலும்பு வளர்ச்சிக்கும் உதவுகின்றன.

Unattended Carries - சூத்தைப் பற்களைக் கவனிக்காமல் விடல்

Bottle mouth syndrom - Juice போத்தலுடன் நித்திரையாக்கல்.

4. Evolution - காலப் போக்கில் மனித நாகரிகத்தில் மனிதன் உண்ணும் உணவைப் பதப்படுத்தி மெதுமையான (Process food) நிலைமையில் உட்கொள்வதால் பற்றாடை எலும்புகளுக்கு வேலை குறைந்து அவற்றின் அளவு (size) குறைந்து கொண்டு போகின்றன. ஆனால் பற்களின் எண்ணிக்கை மாறுவதில்லை. இதனால் இடமில்லாமல் நெருக்கமாக ஒழுங்கீனமாக அமைகின்றன. இதனால் தான் (Wisdom teeth) ஞானப் பற்களை அகற்றும் வீதமும் கூடிக்கொண்டு போகின்றது.

Treatment - சிகிச்சை முறைகள்

சிகிச்சை முறைகள் பற்கள் ஒழுங்கீனமாக முளைப்பதற்குக் காரணமாக அமைபவைகளை தடுப்பதன் மூலமும், பின்னர் உரிய காலத்தில் தகுந்த கருவிகளை (Appliance) பாவிப்பதன் மூலமும் மேற்கொள்ளப்படுகின்றன.

முதலில் விரல் சூப்பும் பழக்கத்தால் வரும் ஒழுங்கீனத்தைத் தடுக்க வேண்டுமாயின் நிரந்தரப் பற்கள் தோன்ற சற்று முன் (6 வயது) Habit breaking appliance ஐ பாவித்து தடுக்க முடியும். மிகவும் சிறிய வயதில் (3 வயதுக்கும் உட்பட்டவர்கள்) விரல் சூப்பும் பழக்கத்தைத் தடுக்க வற்புறுத்துவதால் சில பிள்ளைகள் உள ரீதியாகப் பாதிக்கப்படலாம். எனவே அவர்களுக்கு மென்மையான ரப்பர் சூப்பிகளை (pacifier) பிரதியிட்டோ அல்லது பெரிய பொம்மை (Doll) போன்றவற்றை அவர்களுடன் மாற்றீடு செய்து விரல் சூப்புவதால் கிடைக்கும் சுகத்தை (Comfort) படிப்படியாகக் குறைப்பது நல்லது. பொதுவாக பாடசாலைக்குப் போகத் தொடங்க அனேகமான பிள்ளைகள் நிறுத்திக் கொள்வார்கள். அதற்குப் பின்பும் நிறுத்திக் கொள்ளாவிடில், Habit breaking appliance பாவித்துத் தடுக்க வேண்டும்.

அடுத்து பாற்பற்கள் விழப்போகும் பற்கள் தானே என்று அவற்றை அடைத்து பாதுகாக்காமல் விடுவதால், நிரந்தரப் பற்களுக்குரிய இடத்தை இழந்து விடுகிறார்கள். சில பாற்பற்கள் 10-11 வயது வரை பாதுகாக்கப்பட வேண்டும், இழந்த பாற்பற்களின் இடங்களுக்கு Space maintainer போட்டு இடத்தை வைத்திருக்கலாம்.

பல பற்கள் ஒரே நேரத்தில் சேதமாக்கும் Juice சூப்பி போத்தலுடன் நித்திரையாக்கும் பழக்கத்தைத் தடுக்க வேண்டும். Bottle Mouth Syndrome.

அடுத்து Mouth breathing வாயாற் சுவாசிக்கும் முறை. காற்றுப் பாதையில் உள்ள தடையை மூக்கு, தொண்டை வைத்தியரின் உதவியுடன் அகற்றுவதன் மூலம் குறைக்க முடியும். வளரும் வயதில் Palatal expansion வாய்க் கூரையை அகலமாக்குவதன் மூலம் முன்னேற்ற முடியும்.

Medium diastema - நிரந்தரப் பற்கள் முளைக்கும் போது முன் பற்களுக்கிடையே உள்ள இடைவெளியை இட்டு பெற்றோர்கள் கவலைப்படுவார்களக். பொதுவாக வேட்டைப் பற்கள் (9 வயதில்) முளைக்கும் போது இடைவெளி குறைந்துவிடும். அதற்குப் பிறகும் இடைவெளி இருக்குமாயின் Orthodontic Consultation செய்வது நல்லது. High frenal attachment அல்லது spacing problem ஆக இருக்கலாம்.

எனவே பெற்றோர்கள் அடிக்கடி கேட்கும் கேள்வியான எந்த வயதில் சிகிச்சை ஆரம்பிக்க வேண்டும் என்று குறிப்பிட வேண்டியுள்ளது.

Anterior Cross bite முன் மேல் கீழ்ப் பற்கள் மாறி அமைந்து விட்டால், 7-8 வயதில் ஆரம்பிக்கலாம். அனேகமான பல் ஒழுங்கீனங்களை 9-10 வயதில் பரிசீலனை செய்வதால் சிகிச்சையை ஆரம்பிக்கலாம். சில பெற்றோர்கள் எல்லா நிரந்தரப் பற்களும் முளைக்கும் வரை பொறுத்திருப்பார்கள். சில பிள்ளைகளுக்கு பற்கள் மட்டுமன்றி, பற்தாடை அல்லது அழகு எலும்புகளும் கூடக்குறைய வளர்ச்சியடைந்திருக்கலாம் அவர்களுக்கு அவர்கள் வேகமாக வளரும் வேளையில் எலும்பு வளர்ச்சியை சீர் செய்வது இலகுவாகும். பெண் பிள்ளைகள் 10-12 வயதிலும் ஆண்பிள்ளைகள் 13-14 வயதிலும் வேகமாக வளர்வார்கள். அக்காலத்தில் வளர்ச்சியை செய்யும் கருவிகளை பயன்படுத்தி எலும்பு வளர்ச்சியையும் சீர் செய்ய முடிகிறது. Orthopetic appliance, Head gear

எனவே பெற்றோர்கள் சில பிள்ளைகளுக்கு (Cross bite) 7-8 வயதிலும், அனேகமான பிள்ளைகளுக்கு 9-10 வயதிலும் பற்களை ஒழுங்குபடுத்தும் பரிசீலனைக்கு அழைத்து செல்லலாம், உங்கள் குடும்ப பல்வைத்தியர் இதற்கு உதவியாக இருப்பார்.

பிள்ளைகள் வளர்ந்து வாலிப வயதை அடைந்த பின் கிளிப் போட வெட்கப்படலாம், ஒத்துழைப்பும் குறைகின்றது.

கிளிப் போடும் முறைகள்

1. Removable - கழற்றிப் போடக்கூடிய Plate போன்றவை. இவற்றால் சிறிய ஒழுங்கீனங்களைச் சரிப்படுத்த முடியும், சிறிய வயதில்.

2. Orthopedic appliance, Functional appliance

பிள்ளைகளின் வளர்ச்சிக் காலத்தில் எலும்புகளையும் பற்களையும் முன்னுக்கு அல்லது பின்னால் தள்ளுவதற்கு பயன்படுத்தப்படும்.

மேற்கூறிய இரண்டுக்கும் ஒத்துழைப்பு அவசியம்.

3. Fixed appliance - Bracess

நிரந்தரமாகப் பற்களில் ஒட்டி பற்களை அறுத்து ஒழுங்குபடுத்துவதாலும், இவற்றை பிள்ளைகளால் கழற்ற முடியாததால் ஒத்துழைப்பு இல்லாத நிலைமையிலும் விரைவாக செய்யக் கூடியதாக இருக்கும். அதனால் செலவு அதிகம்.

4. Fixed appliance & Jaw Surgery

பற்தாடைகளின் வளர்ச்சி வித்தியாசமாக நடந்து விட்டால் அல்லது வளரும் வயதை இவர்கள் தாண்டி விட்டால் Bracess போட்டு அறுவைச் சிகிச்சையும் சேர்த்து செய்ய வேண்டும். (48ம் பக்கம் பார்க்க)

வருமுன் காத்தலும் வருத்தமற்ற வாழ்க்கையும்

Dr. V. J. பி(f)கராடோ

எம்மிலே பெரும்பாலானோர் இலங்கையில் பிறந்து வளர்ந்து பழகிய வாழ்க்கையிலிருந்து விலகி வந்து கனடாவின் புதிய சூழலிலே, சற்று வேறுபட்ட வாழ்க்கை முறையிலே வாழ்ந்து கொண்டு அல்லது வாழ முயன்று கொண்டிருக்கிறோம். உணவு, உடை, கலை கலாசாரங்கள் போன்றவற்றில் ஓரளவு எமது நாட்டுப் பழக்கவழக்கங்களைத் தொடரக்கூடியதாக இருக்கின்ற போதிலும், மருத்துவ வசதிகள் நிறைந்து, நோய்களைத் தீர்க்கின்ற வைத்திய முறைகளோடு, நோய்கள் வராமல் தடுக்கின்ற வைத்தியத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து அதற்காக கிரமமான முறைகளைப் பெருமளவில் கடைப்பிடிக்கின்ற இந்நாட்டு வைத்திய முறைகளும் பலருக்குக் குழப்பத்தை ஏற்படுத்துகின்றன. எனவே இவ்வாறான மருத்துவ முற்காப்பு நடவடிக்கைகள் சிலவற்றை இக்கட்டுரை மூலம் உங்களுக்கு விபரிக்கலாமென எண்ணுகிறேன்.

வாழ்க்கை ஒரு வட்டமான தொடராக இயங்குகின்ற போதிலும் ஒரு சிசு உருவாகுவதற்கு முற்பட்ட நிலையான திருமணத்திலிருந்து ஆரம்பிப்பது நல்லதென்று எண்ணுகிறேன். திருமணம் செய்யும் போது உறவினர்களைத் தவிர்த்துத் தங்கள் கணவன் அல்லது மனைவியைத் தெரிந்து கொள்ளுதல் சிசுக்களுக்கு ஏற்படக்கூடிய குறைபாடுகளைத் தவிர்த்துக் கொள்ள உதவுகிறது. யூத இனத்தினரிடையே மட்டும் காணப்படுகின்ற (Taysac's disease) ரேசாக் என்ற நோய் அடுத்து வருகின்ற சந்ததியினருக்கு வராமல் தடுப்பதற்காகப் பலநாடுகளில் திருமணத்துக்கு முன்பு திருமணம் செய்ய இருப்பவர்கள் இரத்தப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அந்தநோயைக் காவுகின்ற பரம்பரைக் காரணிகள் (Genes) இருவருக்கும் இல்லையென்று நிரூபிக்கப்பட்ட பின்னரே அவர்கள் மதகுரு அவர்களுக்கான திருமண அனுமதியை வழங்குவார். ஏனென்றால் அக் குறிப்பிட்ட நோய்க்கான பரம்பரைக் காரணிகள் கணவன் மனைவிக்கு இருந்தால் மட்டுமே அது அடுத்த சந்ததிக்குத் தொடரக் கூடிய வாய்ப்புண்டு.

ஒரு பெண் கருத்தரிக்கும் பொழுது போலிக் அமிலம் (Folic acid) என்ற உயிர்ச்சத்துக் குறைபாட்டினால் சிசுக்களுக்கு முள்ளந்தண்டில் குறைபாடுகள் ஏற்படலாம். எனவே குழந்தை பெறத் தீர்மானிக்கும் பெண்கள், கருத்தரிக்கு முன்பே இந்த போலிக் அமில மாத்திரைகளை உட்கொண்டு வருவது நல்லது. மேலும் ஜேர்மன் சின்னமுத்து அல்லது ரூபெல்லா (German measles or Rubella), சின்னம்மை (Chickenpox) போன்ற தொற்றுநோய்கள் கர்ப்பமான பெண்களைப் பீடித்தால் வயிற்றில் வளரும் சிசுவின் உறுப்புகளில் குறைபாடுகள் ஏற்படும் சந்தர்ப்பமுண்டு. ரூபெல்லா அல்லது ஜேர்மன் சின்னமுத்து போன்றவற்றுக்கான தடைமருந்துகள் இங்கு பிள்ளைகளுக்கு ஒருவயதில் கொடுக்கப்படுகிறது. இத்தடை மருந்துகள் ஒருசில வருடங்கள் மட்டுமே இலங்கையில் பாவனைக்கு வந்துள்ளதால் இலங்கையிலிருந்து இங்கு வந்துள்ள திருமண வயதிலிருக்கும் பெண்கள் அல்லது திருமணமாகிக் குழந்தை பெறும் சந்தர்ப்பமுள்ள பெண்கள் இத் தொற்றுநோய்களுக்கான தடை மருந்துகளைப் பெற்றுக் கொள்வது நல்லது. மேலும் கருத்தரிக்கும் பெண்கள் காலம் தாழ்ந்தால் உடனே உங்கள் குடும்ப வைத்தியரைச் சந்தித்து உங்கள் போஷாக்குக்கான உணவுகள் மாத்திரைகள் போன்றவற்றைப் பற்றிய ஆலோசனைகளைப் பெறுவதோடு உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய கருப்பை தவிர்ந்த ஏனைய இடங்களில் (Ectopic Pregnancy) ஏற்படுகின்ற கர்ப்பத்தைக் கண்டு கொண்டு அதற்கான வைத்திய வசதிகளைப்பெற்றுக் கொள்ள முடியும்.

ஒரு குழந்தை பிறந்ததும் இப்பொழுது பிறந்த மறுநாளே வீட்டிற்கு அனுப்புகின்றபடியினால் குழந்தை பிறந்து 48-72 மணிநேரத்தில் வைத்தியரிடம் காண்பிப்பது குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய மஞ்சட் காமாலை (Jaundice) போன்றவற்றை அவதானித்து வைத்தியம் செய்யக்கூடியதாக இருக்கும். மேலும் பால் புகட்டுதல், பராமரித்தல் போன்றவற்றைப் பற்றிய ஆலோசனைகளைப் பெறவும் உதவியாக இருக்கும். அதைத் தொடர்ந்து குழந்தையை 1 வாரம், 2 வாரம், 1 மாதம், 2,3,6,9,12,18 ஆகிய மாதங்களில் வைத்தியப் பரிசோதனைக்குக் கொண்டு செல்வது நல்லது. சிலவேளைகளில் 2,4,6,12,18 ஆகிய மாதங்களிலும் பின்பு 4-6 வயதுக் காலத்திலும் தடுப்பூசிகள் ஏற்றப்படும். குழந்தைகள் வளர்ந்து வரும் காலங்களில் கண்களின் கருவிழிகள் இரண்டும் ஒரே விதமாக அமைந்திருக்கிறதா என்று அவதானியுங்கள். "வாக்கு" (Squint or Strabismus) போன்ற தன்மைகள் தென்பட்டால் வைத்தியரிடம் சென்று காண்பியுங்கள். ஏனென்றால் அவை சிறுவயதில் திருத்தப்படாவிட்டால் (அதாவது 6-7 வயதுக்கு முன்) பின்பு பார்வையை ஒரு கண்ணில் இழக்கக் கூடிய வாய்ப்புண்டு. அதேபோலப் பிள்ளைகளின் காதுகளில் தனித்தனியாக இரகசியமாகக் கூறி ஒவ்வொரு காதும் கேட்கிறதா என்று பரிசோதித்துப் பார்த்து, ஏதாவது குறைபாடுகள் தென்பட்டால் வைத்திய ஆலோசனையை நாடுங்கள்.

சிறுவர்களுக்கான விபத்துகளுக்கெதிரான பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கடைப்பிடியுங்கள். அதாவது வாகனத் தனி இருக்கைகள் (Car seats) பாவித்தல், மாடிப்படிகளில் வேலி போன்ற தடைகள் பொருத்துதல், மின் இணைப்பு வாங்கிகளுக்கு (Power plug sockets) மூடிகள் போடுதல், சுடுநீர், தேநீர் போன்றவற்றைப் பிள்ளைகளுக்கு எட்டாத இடங்களில் வைத்தல், மின் அடுப்புகள், மின் அழுத்திகள் (Irons) அருகில் மிக அவதானத்துடன் இருத்தல், சைக்கிள் ஓடும்போது தலைக் கவசங்கள் (Helmets) அணிவித்தல் போன்றன இவற்றில் அடங்கும்.

திருமணமாவதற்கு முந்திய பராயத்தில் விபத்துகளே மரணங்களுக்கான முதன்மைக் காரணங்களாகும். அடுத்துப் பாலியல் தொடர்பான தொற்றுநோய்கள், போதைப் பொருட்கள் சம்பந்தமான நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகளுண்டு. ஆனால் பலர் இளவயதின் கவனமற்ற தன்மையினாலும், தங்கள் பெற்றோருக்கு விபரங்கள் தெரிந்துவிடும் என்ற பயத்தினாலும், உரிய காலத்தில் வைத்திய ஆலோசனையை நாடாது நோய்கள் முற்றிப் போகும்வரை காலந் தாழ்த்துவதனால் வைத்தியம் செய்வதில் சிக்கல்கள் ஏற்படுகின்றன. இந்த வயதில் ஒருவருடைய பிரச்சனைகளை முதலில் அறிந்து கொள்பவர்கள் அவர்களது நெருங்கிய நண்பர்களே. எனவே இவ்வாறு பிரச்சனையுள்ளவர்களை இனங்கண்டு, ஆலோசனை கூறி வைத்திய உதவியை நாடவைப்பது நல்ல நண்பர்களின் கடமையென்றே கூறலாம். மேலும், உங்கள் அனுமதியின்றி அல்லது நீதிமன்ற உத்தரவின்றி உங்கள் உடல்நிலை பற்றிய விபரங்களை வைத்தியர் உங்கள் பெற்றோர்களுக்கோ மற்றவர்களுக்கோ தெரியப்படுத்த மாட்டார். 14 வயதுக்குட்-பட்டோருக்குச் சில விதிவிலக்குகளுள்ளன.

திருமண வயதிலுள்ள ஆண்களுக்கென்று பிரத்தியேகமான பரிசோதனைகள் எதுவும் தேவையில்லை. எல்லோரையும் போல ஆண்டுக்கொருமுறை அல்லது ஈராண்டுகளுக் கொருமுறை முழுமையான உடற் பரிசோதனை செய்து கொள்வது நல்லது. திருமணமான அல்லது உடல்ரீதியாகக் குடும்ப வாழ்க்கையில் ஈடுபடுகின்ற பெண்கள் எல்லோரும் முதலிரண்டு ஆண்டுகளிலும் ஆண்டுக் கொருமுறையும் அதன்பின் மூன்று ஆண்டுகளுக் கொருமுறையும் "Pap-test" என்று கூறப்படுகின்ற கர்ப்பப்பை வாயிலில்

(48ம் பக்கம் பார்க்க)

CANCER FACTS

புற்றுநோய்
சில தகவல்கள்

Cancer is not one disease. It is a general term for a group of diseases in which some cells of the body go out of control, growing and increasing in numbers. When cells grow out of control and form a mass, this is called a tumor. Not all tumor however, are cancerous; most are "benign" and do not threaten life. Another important characteristic of cancer cells is that they can spread to other parts of the body.

One way of living longer is to listen to what your body tells you. So keep in shape. And if something does feel wrong, don't shrug it off. Get is checked out by your doctor. Usually, if a disease is diagnosed in it's early stages, it can be cured. That goes for many types of cancer.

Prognostic Factors:

- Type of cancer (Lung cancer worse than Breast or Prostate Cancer)
- Stage of the disease on diagnosis (Stage 0,1,2,3,4)) (0 is best and 4 is worse)
- Aggressive nature (less to worse)
- General condition of the patient at diagnosis (healthy to unhealthy)
- Age, genetics and environmental factors.

Some common Cancers.

1. Lung Cancer (Males and Females)

* It is the leader in cancer deaths in men and women. 80 % are diagnosed at stages 3 and 4.
* Often the first sign is a chronic cough, which may cause blood to appear in the sputum. Increasing amounts of mucus may develop late. Signs are loss of appetite and weight loss. Lung cancer is not easily treated.
* In nine out of ten cases of lung cancer, Cigarette smoking is the cause. If you smoke, the remedy is simple; Quit now: It's never too late.

Lung cancer also has been associated with exposure to asbetos, Chrome salts, nickel refining and coal tar.

2. Breast Cancer (Females)

* 80% are diagnosed at stages 1 and 2. Cure rate is very high.
* Examine your breast every month. A good time to do this is a few days after the end of your period. If you have already reached menopause pick a day you will remember. If you are 50-69 you should have a mammogram every two years. Watch for any changes in your breast such as lumps, puckered or dimpled skin, or bleeding or discharge from the nipples.

If you are not sure how to examine your breasts, ask your doctor to show you or ask your local unit of the Canadian Cancer Society for information. Over 85% of the lumps are not cancerous but it is common sense to have your doctor check any suspicious signs. (Many women are alive and well today because their breast cancer was detected and treated early)

Dr. Senti S. Senthilal

3. Prostate Cancer (Males)

* Most are diagnosed at early stages. Cure rate is reasonably high.
* More than half the men over ages 50 in North America develop a growth in the prostate gland. The first indication may be your urine does not flow freely, or it may contain blood or you may experience a pain in your lower back or while urinating. Another sign of cancer of the prostate may be pain during ejaculation.

Your doctor may give you a digital examination during your periodic health examination. For men over 50, this is most important. The PSA (Prostate specific antigen) blood can help to detect prostate cancer, especially when it is done with a digital examination.

4. Colorectal Cancer (Males and Females)

* Most are diagnosed at stages 2 and 3
* Early signs are bleeding from the rectum, persistent indigestion, a change of bowel habits (persistent constipation or Diarrhea). Late signs are loss of appetite and weight loss.
* If you are over 50, you should have an anal digital examination, where your doctor carefully examines your rectum with gloved finger.

A balanced low- fat, high fibre diet is a recommended sensible precaution. Eating adequate amounts of vegetables every day and foods containing vitamins C and E may help protect you against cancer in this area.

5. Cervix (Female)

* Most are diagnosed at stages 1 and 2.
* Cancer of the cervix is detected by an examination called Pap test. All women over the age 18 who are sexually active should have a Pap test. Most Physicians will recommend annual tests to age 35 and, if there has been no abnormalities, tests every three years until age 69.
* If an early cancer has developed, treatment in these early stages almost always results in a cure.

6. Pancreatic Cancer

This is the third leading cause of death due to cancer in men ages between 30 to 50. Surgery is the primary treatment, unfortunately only 20 percent of the patients do have a resectable lesian on diognosis.

Early signs of symptoms are vague pain in the upper abdomen that spreads around or through the back and/or back pain that worsens while eating or lying down and is relieved by sitting or bending forward and/or yellowing of skin and/or rapid weight loss not due to dieting and/or signs of low blood sugar. If the above signs lasts for more than two weeks one should be seen by a physician. Late signs are severe central abdominal pain, loss of apetite, and severe weight loss.

Risk factors may be smoking, high dietory consumption of fat and meat (fried meat), alcohol intake and diabetic.

High intake of fruits and vegetables appears to have a protective effect.

(Courtesy: *Maaran Memorial Issue*)

மலரின் எழுத்தாளர்கள்
Our Contributors



டாக்டர் து. சூரியபாலன்
மனநோய் நிபுணர்



ஞானம் லெம்பட்
நாடகக் கலைஞர், எழுத்தாளர்



டாக்டர் அ. சண்முகவடிவேல்
குடும்ப பல் வைத்தியர்



டாக்டர் எம். இளங்கோ
General Practioner -
mainly Orthodontics



டாக்டர் வி.ஜே. பி(f)கராடோ
குடும்ப வைத்தியர்



டாக்டர் செந்தி எஸ். செந்திலால்
MD, MHA, FRCPC
Radiation Oncologist

படகில் வரும் சீன அகதிகள் மீதான தாக்குதல் அநீதியானது

கனடாவில் வெளிவரும் சஞ்சிகைகளின் ஆசிரிய தலையங்கங்களில், கனடிய தேசியப் பிரச்சனைகளை மையமாகக் கொண்டவைகளைப் பகுத்து, அவற்றுக்குள் அதிசிறந்தவைகளைத் தெரிந்து பாராட்டுச் சான்றினை வழங்குவதை கனடிய பலவின சஞ்சிகைகள் ஒன்றியம் செய்து வருகின்றது. இந்த வரிசையில், 'தமிழர் தகவல்' கடந்த வருடம் செப்டம்பர் மாதம் (September 1999) எழுதிய ஆசிரிய தலையங்கம் பாராட்டுச் சான்றினைப் பெற்றுள்ளதை மகிழ்ச்சியுடன் எங்கள் வாசகர்களுக்கு அறியத் தருகின்றோம். சீன அகதிகள் கனடாவுக்குப் படகுகளில் வருவதையொட்டி அந்த ஆசிரிய தலையங்கம் வரையப்பட்டிருந்தது. அதன் ஆங்கில பெயர்ப்பு Canadian Scene இதழில் வெளியாகியிருந்தது. பாராட்டுப் பெற்ற அந்தத் தலையங்கத்தினைக் கீழே தருகின்றோம்:.

'தமிழர் தகவல்' ஆசிரிய தலையங்கத்துக்கு பாராட்டுச் சான்று

Attacks on Chinese boat people unjustified

Thiru S. Thiruchelvam
Editor in Chief
Tamil's Information

The arrival of Chinese refugees in Canada, after risking their lives in crossing the vast expanse of the Pacific Ocean in four rusty old ships, caused a great outcry across the country this summer. Yet the total number arriving was around 600 individuals which, according to Citizenship and Immigration Minister Elinor Caplan, worked out to a fraction of the total number of about 25,000 refugee claimants annually. The number of refugees Canada accepts each year is less than a tenth of one per cent of our population.

As though similar incidents had never taken place in this country before, large numbers of the mass media, together with some politicians and members of the general public, showered these Chinese refugees with hostile comment, as though they had committed some horrendous crime. These people busied themselves dispensing free advice to the federal government to the effect that the refugees should be deported immediately.

The refugees' voyaged were hardly a pleasure cruise. They endured an ocean passage without even the basic amenities of sanitation and rest and not knowing whether they'd even reach land alive. Whether they were genuine political refugees or not, people do not leave home under such circumstances without a valid reason. Their attackers should know that the Canadian tradition of dealing with refugee claimants is a noble one and one of the reason that Canada is held in such high esteem in the world community. And it should not be forgotten that it was because of this tradition that Canada was the first country in the world to receive the Nansen Medal.

We the Eelam Tamil Canadians occupy an important place in the Canadian refugee community. Our present population is estimated at over 100,000. But we cannot easily forget the uproar in the media when 155 Eelam Tamils arrived in Newfoundland by ship 13 years ago. Similarly, the same commotion occurred the following year when 174 Sikhs landed in Nova Scotia. The action taken by then Prime Minister Brian Mulroney was compassionate and just. In the same vein, Elinor Caplan retorted to her critics over the Chinese boat people, "Just because they had come by ship, do you expect them to be put back in those ships and allowed to drown?"

Why is it that whenever refugees arrive by sea in groups -- however small -- some of the media seem to be adding fuel to racist fires? These Chinese refugees have the same rights as all other refugee claimants and should be provided with the opportunity to present their case before the Canadian Immigration and Refugee Board.

Courtesy: Canadian Scene, October 1999

சட்டமும் சமுதாயமும்

ஜெகன் ந. மோகன்

சட்டம் என்றால் என்ன? சட்டம் எதற்காக இருக்கின்றது? சட்டத்தினால் சமுதாயத்திற்கு என்ன நன்மை? நாம் **சிந்திக்க** வேண்டிய விடயங்கள் இவை.

சட்டம் இல்லையென்றால் சமுதாயம் சுமுகமாக இயங்க முடியாது. ஏனெனில் சட்டமானது சமுதாயம் ஒழுங்காக இருப்பதற்கு ஏற்ற கட்டுப்பாடுகளை விதிக்கின்றது. சமுதாயம் சுமுகமாக இயங்குவதற்காகவே மனிதர்களால் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. பொதுவாக, சட்டமானது உரிமைகளைக் கட்டுப்படுத்துகின்றது என்று சிலர் கருதுகின்றனர். அது உண்மையல்ல. சட்டம் ஒரு தனி மனிதனுக்குப் பரவலான பல சுதந்திரங்களை வழங்குகின்றது. ஆனால் அதேநேரத்தில், சிலருக்குக் கட்டுப்பாடுகளையும் ஏற்படுத்துகின்றது.

ஒருவருடைய சுதந்திரம் எங்கு முடிவடைகின்றது. மற்றொருவருடைய சுதந்திரம் ஆரம்பிக்கையில் என்பதே சட்டத்தின் முன்னால் கேட்கப்படும் ஒரு கேள்வி. The law is an instrument of liberation என்று ஆங்கிலத்தில் ஒரு வாக்கியம் உண்டு. சுதந்திரமாக இருப்பதற்குச் சட்டம் ஒரு கருவி என்பது இதன் பொருள். ஒரு வாகனம் பெருஞ்சாலையில் (highway) ஓடிக்கொண்டிருக்கின்றது என்று நினைத்துப் பாருங்கள். அந்தச் சாலையில் வாகனத்தை எவ்வாறு ஓட்ட வேண்டுமென்று சட்ட விதிகளை ஏற்படுத்தாவிடின், வாகனங்களைப் பெருஞ்சாலையில் ஒவ்வொருவரும் தாம் நினைத்தவாறு ஓட்டினால் அந்தப் பெருஞ்சாலை ஒரு சுடுகாடாகவே மாறும். அங்கு சட்ட விதிகள் இல்லையெனில், தாம் நினைப்பதை ஒவ்வொருவரும் செய்யும்போது, அதுவும் கட்டுப்பாடின்றிச் செய்கையில், பலர் பாதிக்கப்படுவர். மரணங்களும் நிகழும்.

சட்டத்தின் கீழ் யாவரும் சமம். சட்டம் செயற்படுகையில் சகலரையும் சமமாகவே பார்க்கின்றது. ஆங்கிலத்தில், 'the same considerations apply with equal force in many other avenues of life' என்று சொல்வார்கள். இதன் அடிப்படையில் பார்க்கும்பொழுது மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்குத்தான் சட்டங்கள் இருக்கின்றன என்பது தெரியவரும். அதேசமயம், ஒருவருடைய சுதந்திரத்தைப் பாதிக்காமல் இருப்பதற்காகவே கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன. இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர், சட்டம் எவ்வாறு அமைக்கப்பட வேண்டும், சட்டம் எதனைக் கூற வேண்டும் என்று பல விவாதங்கள் இடம்பெற்றுள்ளன. சட்டம் பலராலும் தொகுத்துத் தரப்பட்ட விடயம். கிழக்குப் பிரதேசங்களில் சட்டம் மனு (Laws of Manu) என்று கூறப்படுகின்றது. பத்துக் கட்டளைகள் (ten commandments) சில சட்டங்களை உருவாக்கியது என்றும் கூறப்படுகின்றது. அதேசமயம் 'பபிலோன்' காலத்தில் Hammurabi என்னும் அரசர் கிறிஸ்துவுக்கு முன் 1850 ஆண்டுகளுக்கு முன்னரே சட்டங்களை ஆக்கினார் என்றும் கூறப்படுகின்றது. அதை பபிலோனின் மலை (Rock of Babylon) என்று கூறுவர். அவர் சட்டத்தை ஒரு கோர்வையாக்கியதால் அது Code of Hammurabi என்று அழைக்கப்படுகின்றது. அவர் எழுதிய இந்தச் சட்டம், தற்போது ஈரான் என அழைக்கப்படும் இடத்திலிருந்து 1902ம் ஆண்டில் புதைபொருள் ஆராய்ச்சியாளர்களால் கண்டெடுக்கப்பட்டது.

அதே போன்று, Reforms of Solon என்று சொல்லப்படும் சட்டமும் இருக்கின்றது. இதனை இயக்கிய Solon என்பவர் கி. மு 594ம் ஆண்டில் ஏதன்ஸ் நகரில் வாழ்ந்தவர். கி.மு 450 ஆண்டுகளுக்கு முன்னர் ரோமில் Justinian என்பவர் சட்டத்தை இயற்றினார். இதனை Code of Justinian என்பர். இதன் சில முக்கிய அம்சங்களை இன்றும் இலங்கையில் காணலாம். அதன் பின்னர் குரான் இருக்கின்றது. அதனைத் தொடர்ந்து, கி.பி. Canon Law என்னும் சட்டம் அமலுக்கு வந்தது. அதன் பின்னர், ஆங்கிலச் சட்டம் (English law) வந்தது. இவையனைத்தும் தற்போதிருக்கும் சட்டங்களுக்கு முன்னோடியாக வந்தவை.

ஆங்கிலச் சட்டம் பரவலாக அமலாகத் தொடங்கிய பின்பு, சட்டத்தை இயற்றும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு வழங்கப்பட்டு, மக்கள் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் சட்டத்தை இயற்ற ஆரம்பித்தனர். இந்த விடயத்தில் சில ஆங்கில தத்துவஞானிகள் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியவர்கள். Locke, Bentham என்பவர்கள் சட்டம் என்றால் என்ன, சட்டம் எப்படி இருக்க வேண்டும், எதனைச் சட்டம் என்று கூறுலாம், சட்டத்தினால் சமுதாயத்திற்கு என்ன நன்மை என்று பல விடயங்களை ஆராய்ந்தனர்.

இதனை ஆராய்ந்து பார்த்தவர்கள் எல்லோரினாலும் ஏற்கப்பட்ட ஒரு வரைவிலக்கணம், சட்டம் என்றால் ஒரு கட்டளை என்பது; இதனை மீறினால் தண்டனை இருக்க வேண்டுமென்பது. கட்டளையும் தண்டனையும் சேர்ந்த ஒரு விடயமே சட்டம். தண்டனை இல்லையென்றால் சட்டமில்லை. கட்டளை இல்லாவிட்டாலும் சட்டமில்லை. கட்டளைக்கு ஒருவர் அடிபணிந்து நடக்க வேண்டுமென்றால், அதனை மீறினால் அல்லது தவறினால் அதற்குரிய தண்டனை என்னவென்பது கூறப்பட்டிருக்க வேண்டும். இல்லையெனில் ஒரு மனிதரும் கட்டளைக்கு அடிபணிந்து நடக்க மாட்டார்கள் என்று ஆங்கில தத்துவஞானிகள் அன்று கூறியது இன்றும் பொருந்தும்.

இப்படிப் பார்க்கையில், உள்நாட்டிலுள்ள சட்டங்கள் (Municipal Laws) அத்தனைக்கும் தண்டனை இருக்க, சர்வதேசக் கட்டளைகள் இல்லை. அதனைத் தண்டிக்கும் உரிமை எவருக்கும் ஏன் இல்லை. ஆகவே சர்வதேச கட்டளைகள் சட்டம் இல்லை என்று சிலர் கூறுவார்கள். அது உண்மை; ஏனென்றால், காட்டிலுள்ள மிருகங்களுக்குச் சட்டமுள்ளதா; அதற்கு அடிபணிந்து அவை நடக்கின்றனவா என்ற கேள்வி எழுகின்றது. காட்டில் சட்டம் இல்லை. காட்டில் வாழும் மிருகங்கள் தாம் விரும்பிய பாட்டில் நடந்து கொள்கின்றன. ஆகையால் சட்டம் இல்லாத இடத்தை "law of the jungle" என்று கூறுவார்கள். இதன் அர்த்தமானது, "law of the might" அல்லது "survival of the fittest", அதாவது, ஒருவர் தாம் வைத்ததுதான் அங்கு சட்டம், இதன்படி பலம் பொருந்திய ஒருவர் தாம் நினைத்தது எதனையும் செய்யலாம் என்று பொருள்படுகின்றது. இதுதான் காட்டுப் பகுதிகளிலுள்ள சட்டம் என்று கூறுவார்கள்.

ஒரு அரசாங்கம் சட்டத்தை இயற்றுகையில், சகல பொதுமக்களையும் சமமாகவே பார்க்கின்றது. அந்தக் கண்ணோட்டத்தில்தான் தண்டனையும் வழங்கப்படுகின்றது. பொதுமக்கள் சட்டத்தினால் காப்பாற்றப்படுகின்றார்கள். கனடாவில் வாழுகின்ற எங்களை எடுத்துக் கொள்வோம். காலையில் படுக்கையிலிருந்து எழுந்த நிமிடத்திலிருந்து, இரவு படுக்கைக்குச் செல்லும் வரை, இரவு நித்திரை கொள்ளும் போதும்கூட, சட்டத்தின் பிடியிலேயே இருக்கின்றோம் என்பதைப் பலரும் உணர்வதில்லை. சிறு சாதாரண விடயம்கூடச் சட்டத்தின் பிடியிலிருந்து தப்ப முடியாது. சிந்தித்துப் பார்த்தால் புரியும். எங்களது ஒவ்வொரு நடவடிக்கையும் சட்டத்தினால் நிச்சயிக்கப்படுகின்றன.

காலையில் எழுந்ததும் பற்பசையினால் அல்லது பற்பொடியினால் பற்களைத் துலக்குகின்றோம். அதில் என்ன இருக்க வேண்டும்; எவ்வாறு இருக்க வேண்டுமென்பது அதன் பக்கட்டில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். அடுத்து நாங்கள் பயன்படுத்தும் தண்ணீர் எவ்வாறு சுத்தமாக இருக்க வேண்டுமென்பதைச் சட்டம் வலியுறுத்துகின்றது. அடுத்ததாக நாங்கள் அணியும் உடுப்பு எப்படிச் செய்யப்பட்டிருக்க வேண்டும், எதனால் செய்யப்பட்டது என்பதை அதனிலுள்ள 'லேபலின்' ஊடாகச் சட்டம் தெரியப்படுத்துகின்றது. அந்த உடுப்பை

மனித அசைவு ஒவ்வொன்றும் சட்டத்துடன் சம்பந்தப்பட்டது

எவ்வாறு தோய்க்கலாம்; ஸ்திரிகை (iron) செய்யலாமா, அப்படியானால் எத்தனை பாகை உஷ்ணத்தில் செய்யலாம் என்பவைகளை எச்சரிக்கையாகத் தெரிவிக்கச் சட்டம் வழிசெய்துள்ளது. வேலைக்குப் பயணம் செய்யும் வாகனம் கடனுக்கு வாங்கப்பட்டதாக இருந்தால், எந்தனையாம் திகதி, யாருக்குப் பணம் செலுத்த வேண்டுமென்ற விடயத்தைச் சட்டம் நிச்சயிக்கின்றது. தவறினால் சட்டமே நடவடிக்கை எடுக்கும். பணத்தைக் கடன் தந்த வங்கிக்குள்ள உரிமைகளையும் சட்டம் வரையறை செய்கின்றது. பணம் கடன் தந்த வங்கி வாகனத்தைப் பறிக்கலாமா; அதற்கு அறிவித்தல் தர வேண்டுமா; பணத்தைச் செலுத்தச் சந்தர்ப்பம் தரப்படுமா என்ற சகலதையும் சட்டம் நிச்சயிக்கின்றது.

அடுத்ததாக, அந்த வாகனத்தை எப்படி இயக்க வேண்டும்; அது நம்பிக்கையான வாகனமா; வீதியில் செலுத்துகையில் மற்றையவர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தாமல் இருக்கக் கூடியதா என்பவையும் சட்டத்தினால் உத்தரவாதப்படுத்தப்பட்டவை. வாகனத்தை வீதியில் எவ்வாறு ஓட்ட வேண்டும்; ஒருவர் வீதியைக் கடந்து போனால் அதற்கு இடம் கொடுக்க வேண்டுமா - இல்லையா; வீதி விளக்கிற்கு அடிபணிய வேண்டுமா - கூடாதா; அதன் விதிகள் என்ன என்பவையும் சட்டத்தில் நிலைநாட்டப்பட்டுள்ளன.

ஒருவர் வசிக்கும் வீடு, அதன் உரிமை, அதற்குச் செலுத்த வேண்டிய பணம், அது வாடகை வீடெனில் அதனை வாடகைக்கு விட்டவர்களின் கடமைகள், வாடகைக்கு எடுத்து வசிப்பவரின் கடமைகள், எவ்வளவு வாடகையை எப்போது செலுத்த வேண்டும், கட்டத் தவறினால் உரிய நடவடிக்கை என்ன என்பவையும் சட்டத்தினால் நிச்சயிக்கப்பட்டுள்ளன.

வேலைக்குச் சென்றால் வேலை செய்யுமிடத்திற்குமெனத் தனிச் சட்டங்கள் உள்ளன. குளிர் காலத்தில் அறையின் சூடு எவ்வளவாக இருக்க வேண்டும்; சூடு இல்லையென்றால் அங்கு வேலை செய்ய முடியுமா; வேலை வழங்குனரின் கடமைகள் என்ன; தொழிலாளியை முதலாளி எவ்வாறு நடத்த வேண்டும்; வேலைத்தலத்தில் ஏதாவது காயம் ஏற்பட்டால் அது விடயமாக என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பனவையும் சட்டத்தினால் நிச்சயிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, Employment Standard Act சில விதிகளைக் கூறியுள்ளது. காயமடைந்தால் என்ன நடக்கும்? அதற்கு என்ன செய்ய வேண்டும்? என்பதை Workplace Safety and Insurance Act கூறுகின்றது.

வேலையிலிருந்து நீக்குவதற்கான காரணம், வழங்க வேண்டிய முன்னறிவித்தல் காலம், உரிய முன்னறிவித்தல் கொடுக்க வேண்டுமா அல்லது தேவையில்லையா, வேலையால் நீக்கினால் Employment Insurance பெறுவதற்கு அவர் எத்தனை நாட்களுக்குள் கடிதம் தரவேண்டும் என்பனவும் சட்டத்தில் நிச்சயிக்கப்பட்டுள்ளது. முதலாளிக்கும் கடமையும் உரிமையும் உண்டு. அவ்வாறு தொழிலாளிக்கும் கடமையும் உரிமையும் உண்டு. இவை எல்லாவற்றையும் சட்டமே நிச்சயிக்கின்றது.

சரி. இனி நீங்கள் வேலையால் வீட்டுக்கு வந்து இரவுச் சாப்பாட்டுக்குச் செல்வதைக் கவனிப்போம். சாப்பாட்டுடன் கோழிக் கறியும் இருப்பதாக வைத்துக் கொள்வோம் அந்தக் கோழி எந்த இடத்திலிருந்து வந்திருக்க வேண்டும்; அதனை எவ்வாறு கொன்றிருக்க வேண்டும்; அது எங்கு பெறப்பட்டது; அதனை யார் வளர்த்தார்கள்; எந்த மாகாணத்தில் எவ்வளவு கோழி வளர்க்கலாம்; எவ்வளவு காலத்துக்கு அதனை உங்கள் குளிரூட்டியில் (fridge) வைத்திருக்கலாம் என்ற அனைத்தையும் சட்டம் நிச்சயித்துள்ளது. நீங்கள் உண்ணும் உணவு, உடுக்கும் உடை, பாவிக்கும் பொருட்கள் அனைத்தையும் சட்டம் வரையறை செய்துள்ளது என்பதை உங்களில் பலரும் உணராமல் இருக்கலாம். இவைகளில் ஏதாவது சில தவறுகள் ஏற்படுகையில் சட்டப்படி நடவடிக்கைகளை எடுக்கும் உரிமை உங்களுக்குண்டு.

உதாரணமாக, நீங்கள் சாப்பிட்ட கோழியினால் உங்களுக்கு ஏதாவது சுகவீனம் ஏற்பட்டால், சம்பந்தப்பட்டவர் மீது வழக்குத் தாக்கல் செய்து நஷ்டஈடு கோர உங்களுக்கு உரிமையுண்டு. அதேபோன்று ஒருவர் தனது வாகனத்தினால் உங்களை மோதினாலும் சட்ட நடவடிக்கை எடுக்கச் சட்டம் இடமளித்துள்ளது. எங்கள் வாழ்க்கையில் ஒவ்வொரு கட்டத்திலும், ஒவ்வொரு நடவடிக்கையிலும், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எங்களது நடவடிக்கைகள் சட்டத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளன என்பதை மறந்துவிடக் கூடாது. சட்டத்தின் பார்வை இங்கில்லையென்றால் சமுதாயம் ஒழுங்காக இயங்க முடியாது.

சட்டமும் சமுதாயமும் ஒட்டி இயங்குபவை. இரண்டும் கைகோர்த்து இருப்பவை. அதனால்தான் law and order என்று சொல்லுவோம். சட்டமில்லையேல் ஒழுங்கில்லை. ஒழுங்கில்லையேல் சமுதாயம் ஒழுக்கமாக இருக்க முடியாது. அப்படியானால் சமுதாயத்தில் முன்னேற்றம் இருக்க முடியாது.

அண்மையில் ஒரு செய்தியை அனைவரும் படிக்க நேர்ந்தது. பிராணிகளுக்கு துன்புறுத்தல் ஏற்படுத்துபவர்களுக்குத் தண்டனை வழங்குவது பற்றிய கனடிய அரசாங்கத்தின் முடிவினை இது தெரிவித்திருந்தது. அந்தத் தண்டனை கூடுதலாக இருக்க வேண்டும் என்று சிலர் தெரிவித்திருந்தனர். வேறு சிலர் கேட்டார்கள், "பிராணிகளுக்காக நாங்கள் ஏன் இவ்வளவு கவலைப்பட வேண்டும்" என்று. வாய் பேசாத பிராணியை ஆறறிவு படைத்த மனிதன் சித்திரவதை செய்வானென்றால் அவன் எப்படிப்பட்ட மனிதனாக இருக்க வேண்டும் என்று நினைத்துப் பார்ப்போமா? அவன் எவ்வாறான மனப்பான்மையுள்ளவனாக இருக்க வேண்டும். 'ஏன் என்னை அடித்தாய்" என்று கேட்க முடியாத பிராணியை தாக்குவது தகுமா? ஒரு பிராணிக்குத் துன்புறுத்தல் ஏற்படுத்துபவன் மனிதரைத் துன்புறுத்தத் தயங்க மாட்டான்" என்று சிந்தனாவாதிகள் கூறுகின்றனர். இது உண்மையான கூற்று. ஆதலால் சட்டத்தின் பார்வையிலும் சமுதாயத்தின் பார்வையிலும் அவன் தண்டிக்கப்படவேண்டியவனாகின்றான். இதனால் எதிர்காலத்தில் அவன் வேறு குற்றங்களைச் செய்யமாட்டான். இதனாலேயே கனடிய அரசு இச்சட்டத்துக்கு முக்கியத்துவமளிக்கின்றது.

ஒவ்வொரு சட்டமும் பல வருடங்களாக ஆராயப்பட்டு, அதன் பலாபலன்கள் நன்மை-தீமைகள் அலசப்பட்டு, விபரமாக உணரப்பட்ட பின்னரே நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டன. ஒரு சட்ட மூலம் சட்டமாவதற்குப் பல நடைமுறைகள் உண்டு. இதற்குப் பல மாதங்கள் எடுக்கும். அதேநேரம் பல பழைய சட்டங்கள் புதுப்பிக்கப்படுகின்றன. புதுப்புதுச் சட்டங்கள் நித்தம் நித்தம் வந்து கொண்டிருக்கின்றன. மக்கள் பாதுகாப்பாகவும், நிம்மதியாகவும் இன்புற்று வாழவே புதிய சட்டங்கள் அமலுக்கு வருகின்றன.

கனடாவிலுள்ள சில சட்டங்களை எவரும் வெளிநாடுகளில் பார்க்க முடியாது. உதாரணமாக, கனடாவில் விற்கும் சகல பொருட்களிலும் ஆங்கிலத்திலும் பிரெஞ்சிலும் 'லேபல்' இருக்க வேண்டுமென்ற சட்டத்தை எடுத்துக் கொள்வோம். நீங்கள் வாங்கும் பொருளின் தன்மை, அதில் சேர்க்கப்பட்டவைகளின் விபரம் என்பவை உங்களுக்கு விபரமாகத் தெரிய வேண்டுமென்பதே இதன் நோக்கம்.

உலகில் சட்டங்கள் கூடுதலாகவுள்ள நாடுகளில் கனடா முன்வரிசையிலுள்ளது. இங்கு பலவின, பல வ்கையான மக்கள் வாழுகின்றார்கள். பரந்த மனப்பான்மையுடன், பலரது கருத்துக்களையும் சிந்தனை-களையும் ஏற்றுக்கொண்டு இங்கு சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. ஆதலால் கனடியச் சட்டங்கள் எவ்வாறு உங்களைப்

(46ம் பக்கம் பார்க்க)

Child Abuse

பிள்ளைகளைத் துன்புறுத்தல்

தெய்வா மோகன்

தாய் நாட்டில் பிரச்சனை காரணமாக கனடாவுக்கு வந்து சேர்ந்த நம் மக்களிடையே இன்று பலவிதமான பிரச்சனைகளைக் காண முடிகிறது. முக்கியமாக எங்கள் அலுவலகத்திற்கு வரும் பிரச்சனைகளில் என்னை வெகுவாகச் சிந்திக்க வைத்தது பிள்ளைகளைத் துன்புறுத்துதல் (Child Abuse).

எல்லாப் பெற்றார்களும் தங்கள் பிள்ளைகளை நன்றாக வளர்க்க வேண்டும் என்று தான் விரும்புகின்றார்கள். அந்த நல்லெண்ணத்தில் சில சமயத்தில் பிள்ளைகளைத் தண்டிக்கிறார்கள். அந்தத் தண்டனை சில சமயங்களில் பிள்ளைகளின் உடம்பில் காயத்தை அல்லது தழும்பை ஏற்படுத்துகிறது. இந்தச் சூழ்நிலையில், பெற்றோரை பொலிஸார் குற்றவியல் சட்டத்தின் கீழ் குற்றஞ் சாட்டுவதோடு மட்டுமன்றி, பிள்ளைகளையும் பிள்ளைகளைப் பேணும் சங்கம் (Children Aid Society) எடுத்துச் சென்றுவிடும். பின்பு நீதிமன்றத்துக்கு சென்று தான் பெற்றோர் தங்கள் வழக்கறிஞர் மூலம் பிள்ளைகளை திரும்ப எடுக்கலாம். அதுவும் பிள்ளைகள் பேணும் சங்கம் (C.A.S) அந்தப் பெற்றோர் தொடர்ந்து பிள்ளைகளைத் துன்புறுத்தி வந்தார்கள் என நீதிமன்றத்தில் நிரூபித்தால், அந்தப் பிள்ளைகளை பெற்றோரிடம் திரும்ப கையளிக்கும் கட்டளையை நீதிமன்றம் வழங்க மறுக்கலாம்.

எப்படியான விடயத்தை நீதிமன்றம் "துன்புறுத்துதல்" என கருதுகிறது என்பதைக் கவனிப்போம்.

1. பிள்ளைகளுக்கு உடம்பில் காயம் வரக்கூடியதாகத் தண்டித்தல். கனடாச் சட்டம் பெற்றோர் பிள்ளைகளுக்கு ஓரளவு தண்டனை வழங்குவதற்கு அனுமதிக்கிறது. ஆனால் சில சமயம் கோபத்தில் தங்கள் கட்டுப்பாட்டை இழந்து தண்டிக்கும் போது பிள்ளையின் உடம்பில் தழும்போ, எலும்பு முறிவோ ஏற்படின் அது பிள்ளைகளைத் துன்புறுத்தல் எனக் கருதப்படும்.

2. பிள்ளைகளைத் தக்க முறையில் கவனிக்காமல் விட்டால், உதாரணமாக பிள்ளைகளுக்கு குளிர்காலத்தில் தக்க உடுப்பு அணிவித்து வெளியில் அனுப்பாவிடின், அதையும் பெற்றோரின் கவனக் குறைவு, பிள்ளைகளை வளர்க்கத் தகுதி இல்லை எனக் கருதி, பிள்ளைகளை அவர்களிடமிருந்து எடுத்து விடுவார்கள். 12 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளை தனியே விட்டுப் போவது பிழை என இங்கு பல பெற்றோர்களுக்குத் தெரியாமல் இருக்கிறது. அண்மையில் கூட ஒரு தாய் தகப்பன் அழுது கொண்டே என்னிடம் வந்தார்கள். காரணம், அவர்களின் இரு சிறு பிள்ளைகளும் விளையாடும் போது மூத்த மகன், சின்னக் குழந்தையை தள்ளி விழுத்தி, அந்தச் சிறு குழந்தைக்கு பலத்த காயம் ஏற்பட்டு விட்டது. அந்தப் பெற்றோர் பிள்ளைகளை மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். உடனே பிள்ளைகளை பேணும் சங்கத்துக்கு வைத்தியர்கள் அறிவித்தார்கள். காயப்பட்ட பிள்ளைகளை மாத்திரமல்ல, மற்ற பிள்ளையையும் கூட எடுத்துச் சென்று விட்டார்கள்.

நானும் ஒரு தாய் என்பதால் அந்தத் தாய் படும் வேதனையை உணர முடிந்தது. ஆனால் உடனே அவர்களிடம் பிள்ளையை எடுத்துக் கொடுக்க முடியாவிடினும், அவர்களுடைய உறவினர் பொறுப்பில் எடுப்பதற்கு ஒழுங்கு செய்தேன். இந்தப் பெற்றோரை அன்பில்லாத துன்புறுத்தும் பெற்றோர் என கூற முடியுமா? இல்லை, ஆனால் சற்றுக் கவனக் குறைவாக இரண்டு சிறு பிள்ளைகளை தனியே விட்டது தான் பிழை. இதே போல் பிள்ளைகளை காரில் விட்டுப் பூட்டி விட்டு, சில நிமிடங்கள் கூடப் போவது தவறாகவே கருதப்படுகிறது. அதுவும் குளிர் காலத்தில் விட்டுச் செல்வது பிள்ளையின் உயிருக்கு ஆபத்தினை ஏற்படுத்தலாம்.

அடுத்து சில பிள்ளைகளை தங்கள் பாலியல் திருப்திக்கு பாவிப்பதும் தவறாகவே கருதப்படுகிறது. உதாரணமாக பிள்ளைகளை வலுக்கட்டாயமாக பாலியல் நடவடிக்கையில் தன்னுடனோ, வேறொருவருடனோ ஈடுபட வைப்பது. இப்படி நமது பெற்றோர் ஈடுபடுவது மிகக் குறைவு. ஆனால் கனடாவில் பல ஆசிரியர்கள் தங்களிடம் படிக்கும் சிறு பிள்ளைகளிடம் இப்படி நடந்திருக்கிறார்கள். பலர் தண்டிக்கப்பட்டும் இருக்கிறார்கள். எங்கள் பண்பாட்டில் இப்படியான விடயத்தை கதைப்பதற்கு எங்கள் பிள்ளைகளும் தயங்குவார்கள். ஆனால் அவர்களின் நடத்தையிலோ அல்லது கதையிலோ சிறிது சந்தேகம் வந்தால், அவர்களிடம் மனம் திறந்து பேசுங்கள். அது மிகவும் முக்கியம்.

ஆனால் எனது அனுபவத்தில் தேவையில்லாமல் தந்தையை, பிள்ளையை பாலியல் முறையில் தொட்டார் எனக் குற்றஞ் சாட்டி, அந்தத் தந்தை குடும்பத்திலிருந்து கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் பிரிந்திருந்து, இறுதியில் அவர் அப்படிப்பட்டவரல்ல என நீதிமன்றத்தில் வாதாடி, நீதிபதி அந்த வாதத்தை ஏற்றுக் கொண்டு விடுதலை செய்யப்பட்டார். எனவே சில சமயங்களில் எமது கலாசாரம், பண்பாடு, பழக்க வழக்கம் முதலியவற்றையும் நீதிபதிக்கு எடுத்துரைப்பது முக்கியம்.

பிள்ளைகளை துன்புறுத்தலில் இருந்து பாதுகாப்பது உங்கள் யாவரின் பொறுப்பாகும். தந்தையால் ஒரு பிள்ளை துன்புறுத்தப்பட்டால், தாயானவர் 'பிள்ளையைப் பேணும் சங்கத்'திடம் முறையிட்டு உதவி கோரலாம். தாய் செய்யாவிடின், நீங்கள் ஒரு குடும்ப நண்பரானால், நீங்களாகவே பொலிசுக்கோ, குழந்தை பேணும் சங்கத்துக்கோ முறைப்பாடு செய்யலாம்.

அந்த முறைப்பாட்டைத் தொடர்ந்து, பிள்ளைகளைப் பேணும் சங்கம், அந்த பிள்ளையை எடுத்து தற்காலிகமாக ஒரு Foster Parent இடம் விட்டு, 5 நாட்களுக்குள் நீதிமன்றத்தில் அந்த பிள்ளை சம்பந்தமாக விண்ணப்பம் கொண்டுவர வேண்டும். இந்த Foster Parent ஆக எங்கள் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஒருவரும் இல்லை. சில சமயம், ஆங்கிலம் பேசத் தெரியாத பிள்ளைகளை, பிள்ளைகள் பேணும் சங்கம் பொறுப்படுத்து தமிழ் மொழி தெரியாத Foster Parents இடம்தான் கொடுப்பார்கள். "ஏன் தமிழ் பேசும் Foster Parents இடம் விடக்கூடாதா? பிள்ளைகள் மொழி தெரியாமல், பெற்றோரைப் பிரிந்த நிலையில் எவ்வளவு கஷ்டப்படுவார்கள்" என்று அவர்களிடம் கேட்டேன். அதற்கு அவர்கள், தமிழ் பேசும் Foster Parents எவருமில்லை. இது பற்றி நீங்கள் ஏன் தமிழ் சமுதாயத்திடம் கூறக் கூடாது என்று என்னிடமே திருப்பிக் கேட்டார்கள். சிறிது சங்கடமாகவே இருந்தது. Foster Parents ஆக எவரும் வரலாம்.

அந்தப் பிள்ளையை யாருடைய பொறுப்பில் விடவேண்டும் என்று 25 நாட்களில் ஒரு விளக்கம் நடைபெறும். அதற்கு முன் அந்தப் பிள்ளையின் பெற்றோர், ஒரு சட்ட அறிஞரின் உதவியுடன் தங்கள் நிலைமையை எழுத்து மூலம் நீதிமன்றத்துக்கு அறிவிக்கலாம். அதில் சத்தியக் கடதாசி போன்ற சாட்சியங்களைப் பரிசீலித்து பிள்ளை பேணும் சங்க ஊழியரின் அபிப்பிராயத்தையும் கவனத்துக்கு எடுத்து பிள்ளையைத் திரும்ப பெற்றோரிடம் விடலாமா இல்லையா என்பதை நீதிமன்றம் தீர்மானிக்கும்.

சில சந்தர்ப்பங்களில் பெற்றோர்களுக்குப் பல நிபந்தனைகளை விதித்து, அவர்கள் அதைக் கடைப்பிடித்த பின்னர் பிள்ளைகளை திரும்பப் பெறலாம். கனடாவைப் பொறுத்தவரை, சட்டம் பிள்ளைகளின் நலனுக்கும் உரிமைக்கும் முதலிடம் கொடுக்கிறது. நீங்களும் உங்கள் பிள்ளைகளின் நலனைத்தான் கருதி வளர்க்கிறீர்கள். பிள்ளைகளை தண்டிக்கும் பொழுது, ஆத்திரப்பட்டு அதிகமாகத் தண்டித்து விட்டால், பிள்ளைகளை பிரிந்திருக்க வேண்டியேற்படும். பின்னர் கவலைப்படுபவர்களும் நீங்களே. எனவே இந்த விடயங்களை மனதில் கொண்டு உங்கள் பிள்ளைகளை நல்லபடியாக வளர்ப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன் இந்த விடயத்தை முடிக்கிறேன்.

பிள்ளை பேணும் சங்கம் - தொலைபேசி: (416) 924-4646

குடும்பப் பிரிவினைகள்

வளர்ந்து வரும் குடும்பப் பிரிவினைகளை எமது சமூகத்தின் மத்தியில் இன்று காணக்கூடியதாகவுள்ளது. இது ஒரு ஆரோக்கியமான நிகழ்வு என்று கூறமுடியாது. இதனால் அதிகளவில் பாதிக்கப்படுவது குழந்தைகளே. அவர்களின் மனத்தில் இத் தாக்கம் ஓர் அழிக்க முடியாத காயமாகப் பதியக்கூடிய வாய்ப்புக்களே அதிகம்.

பெற்றோர் குடும்பப் பிரிவினையை உடனடியாக ஒரு முடிவாக எடுத்து, தமது குழந்தைகளை குடும்பம் என்ற ஒரு அமைப்பிலிருந்தும், தாய் தந்தையரின் தொடர்ச்சியான பிணைப்பிலிருந்தும் பிரித்து விடுகின்றனர். இந்தக் காயம் அல்லது உளரீதியான பாதிப்புக் குழந்தைகளையே பெரிதளவில் நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் பாதிக்கின்றன. ஒரு திருமணமான தம்பதிகள் எவ்வித கருத்து வேறுபாடுகளின்றியோ அல்லது சில சிக்கல்கள் குறுக்கிடாமலோ வாழ முடியாது. அவற்றை உரிய வழிமுறைகளில் கையாளத் தவறுமிடத்து குடும்பப் பிரிவினைகளாக அல்லது விவாகரதுகளாக முடிவடைகின்றன.

கணவன் மனைவியரிடையே பிரிவினைகள் ஏற்பட பின்வரும் காரணிகளை அடையாளம் காணலாம்:

1. நிதிப் பிரச்சனை (Financial Problem)
2. உளரீதியான, உடல் ரீதியான தாக்குதல் (Verbal, Physical abuses)
3. இருவரிடையே ஒத்துழையாத தன்மை (Incompatibility)
4. ஏனைய குடும்ப அங்கத்தவரின் தலையீடுகள்
5. பாலியல் குறைபாடுகள்/ தாக்குதல்கள்
6. மதுபான சீரழிவுகள்.

ஒரு புதிய குடிவரவுச் சமுதாயம் கனடாவில் வாழும் பொழுது குறிப்பாக புதிய மொழி, கலாசார சூழ்நிலைகளில் வாழவேண்டிய சந்தர்ப்பம் வருகின்றது. பெண்கள், குழந்தைகளுக்கு இந் நாட்டில் கூடிய பாதுகாப்புகள் வழங்கப்பட்டுள்ளன. சமூக ஸ்தாபனங்கள் அவர்களை கவனிக்கும் பணியில் செயற்பட்டு வருகின்றன. குடும்பத்தில் யாராவது தவறான குற்றங்கள் செய்யுமிடத்து குழந்தை பாடசாலையில் தனது ஆசிரியரிடமோ, நண்பர்களிடமோ சொல்லக்கூடிய சந்தர்ப்பங்கள் உள்ளன. இத்தகைய நிலைமையில் காவல் துறையினர், (Children Aid Society) அல்லது குழந்தைகள் உதவி நிலையம் குடும்ப விடயத்தில் தலையிடும் சந்தர்ப்பங்கள் உருவாகி விடுகின்றன. மேலும் எமது அயலவர் கூட வீட்டில் நடைபெறும் வன்முறைகளை க் கேட்டு அல்லது பார்த்து காவல்துறையினரை அழைத்து விடுகின்றனர். அதன் பிறகு குற்றவியல், குடும்ப நீதிமன்றுகள் செல்ல வேண்டிய நிலைமை உருவாகி, பல குடும்பங்கள் பிரிந்து விடும் சந்தர்ப்பங்கள் உண்டு. எனது மனைவி அல்லது குழந்தையை தானே அடிக்கிறேன் இதில் சமுதாயம் (நீதிமன்றம்) ஏன் தலையிடுகின்றது என எண்ணி வாழ்வது தவறு. நாம் வாழும் பொழுது இங்குள்ள சமுதாய அமைப்பு, எவ்வாறு செயற்படுகிறது என இனம் கண்டே வாழப் பழக வேண்டும். நாம் சிறு விடயம் தானே என்று செய்வது பெரிய பிரச்சனைகளைச் சந்திக்க வைத்துவிடும்.

சில சமயங்களில் அவசரப்பட்டுச் சிலர் எடுக்கும் முடிவுகளை சமூக ஸ்தாபனங்கள் தவறாக உணர்ந்து குடும்பத்தினரைப் பிரித்து விடுகின்றன. ஏனெனில் சமூக ஸ்தாபனங்களுக்கு குடும்ப உறுப்பினர்களைச் சேர்த்து வைக்க வேண்டும், உரிய வழிமுறைகளைக் கற்பிக்க வேண்டும் என்ற செயற்பாட்டு நெறிகளுக்கு அங்கீகாரமோ அல்லது நிதி வசதியோ இருப்பதில்லை. இத்தகைய சந்தர்ப்பங்களில் குடும்பங்களிலிருந்தும் பெண்கள், குழந்தைகள் பிரிக்கப்பட்டு விடுகின்றனர். (Shelter) தாபரிப்பு நிலையங்களில் தங்கி வாழும் பொழுது பல கலாசார சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளனர். குடும்பங்களின் பிரச்சனைகளில் அடிப்படையை ஆராயவோ அல்லது சேர்த்து

Family Separations

நாதன் சிறீதரன்

வைக்கும் நிலைப்பாட்டையோ தாபரிப்பு நிலையங்கள் செய்ய முன்வருவதுமில்லை; அவர்களுக்கு அத்தகைய கருத்துக்களுமில்லை. அனைவருக்கும் தெரியும் தொலைபேசியில் 911 அழுத்தும் பொழுது உடனடியாக காவல்துறையினர் அந்த இல்லத்திற்கு வந்து விடுகின்றனர் என்பது. எத்தகைய சூழ்நிலையில் 911 போன்ற அவசர தொடர்பினை அழைக்க வேண்டும் என நாம் அறிந்திருக்க வேண்டும். தீ விபத்து, கடுமையான சுகவீனம். உதாரணமாக மார்பு வலி, திடீர் மயக்கம் போன்ற மருத்துவ நிலைமைகளிலும் திருடன் போன்ற சந்தர்ப்பங்களிலும் எனலாம். கணவன் மனைவியின் வாக்குவாதம் அல்லது சிறிய தாக்குதல்கள் போன்ற சந்தர்ப்பங்களில் அவசர தொலை தொடர்பை ஏற்படுத்து முன்பு எமக்கோ அல்லது குழந்தைகளுக்கோ அத்தகைய சூழல் உடல் அல்லது உயிர் ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய நிலைமையா என்று ஒரு கணம் முடிவு செய்தே 911 ஐ அழைப்பது நல்லது. ஏனெனில் காவல்துறையினர் தலையிடும் பொழுது குடும்பங்கள் பிரிக்கப்படுகின்றன.

நீதிமன்றத்தின் மூலம் பிரச்சனைகள் எல்லாம் தீர்க்கப்படும் என்று சொல்ல முடியாது. எமது கலாசாரப் பின்னணிகளை அனைத்து நீதிமன்றத்தாலும் புரிந்து கொள்ள முடியாது. ஆரம்பத்திலேயே குறைபாட்டினை இனம் கண்டு உரிய நடவடிக்கையை எடுத்துக் கொண்டால் பல குடும்ப பிரிவினைகள் அல்லது மண முறிவுகள் ஏற்படாது தவிர்த்துக் கொள்ளலாம். நீதிமன்றமோ அல்லது காவல் துறையினரோ பிரிவினையை நாடும் தம்பதிகளை சேர்ந்து இருக்க வேண்டும் என்று வற்புறுத்த மாட்டார்கள். திருமண பிரிவினைகள் கணவன் மனைவியை மட்டுமல்ல குழந்தைகள், குடும்பத்தினர், நண்பர்கள் எனப் பலரையும் பாதிக்கின்றது. ஒரு தம்பதியினரிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகள் அல்லது வாழ்க்கைச் சிக்கல்கள் யாவைக்கும் திருமணப் பிரிவினைகள் அல்லது விவாகரத்து தான் பரிகாரம் என்று எண்ணக் கூடாது. தற்பெருமை, சுயநலம் போன்ற குணங்கள் சில சமயங்களில் கணவன் மனைவி உறவில் விரிசலை உண்டாக்கும்.

சட்டரீதியாக நோக்குமிடத்து தொடர்ச்சியான பிரிவு, தகாத நடத்தை, பாலியல் குறைபாடுகள், கொடிய துன்புறுத்தல்கள் விவாகரத்தின் அடிப்படைக் காரணங்கள் என நீதிமன்றம் ஏற்றுக் கொள்கின்றது. இந்தக் குறைபாடுகள் கூட மருத்துவரீதியாகவும் மனோதத்துவ ரீதியாகவும் தீர்க்கப்படக் கூடியவை. எம்மவர்கள் மத்தியில் ஆரம்பத்தில் குடும்பப் பிரிவினை ஏற்படும். இறுதியில் விவாகரத்தில் முடிவதையே கூடியளவில் காணக்கூடியதாகவுள்ளது. பிரிவினைக்குட்படும் பெற்றோர் தமது கோபங்களை அல்லது வெறுப்புகளை பிள்ளைகள் மூலமாகக் காட்டிக் கொள்ள முயல்வது பெரிய தவறு. ஏனெனில் குழந்தைகள் பெற்றோர் இருவருக்கும் பொதுவானவர்கள். அவர்களை ஓர் ஆயுதமாகப் பாவிப்பதன் மூலம் குழந்தைகளின் ஆரோக்கியமான மனவளர்ச்சியைத் தடுப்பதைப் பெற்றோர்கள் உணர மறக்கிறார்கள். இதனால் குழந்தைகள் தமது எதிர்காலத்தில் பிடிவாதம், சுயநலம் போன்ற பலவீனமான குணங்களை வளர்த்துக் கொண்டு விடுகிறார்கள். மேலும் சிலசமயங்களில் ஒரு பெற்றோர் மற்றைய பெற்றவரை குழந்தையைப் பார்க்க விடாது அல்லது பழக விடாது தடுக்கும் போது அது வன்முறையில் கூட முடிந்துவிட வாய்ப்புகள் உண்டு.

கணவன் மனைவி இடையே புரிந்துணர்வு, நட்பு, விட்டுக் கொடுக்கும் தன்மை, மன்னிக்கும் மனப்பான்மை என்பவை அநாவசியமான திருமணப் பிரிவினைகளைத் தவிர்ப்பதற்கு உதவும். காவல்துறையினரை அல்லது நீதிமன்றத்தினை நாடும் முன் குடும்பப் பெரியவர்கள், நல்ல நண்பர்கள், குடும்ப சட்டத்தரணிகள், குடும்ப வைத்தியர்கள் போன்றோரை நாடி ஆலோசனை பெறுவதன் மூலம் குடும்பப் பிரிவினைகள் அல்லது விவாகரத்தினைத் தவிர்க்கலாம்.

இறைவன் சேர்த்துவிட்ட சொந்தத்தை மனிதன் பிரித்து விடுவது சரியா என்பதை எம்மவர் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

விருப்பங்கள் சார்ந்த முரண்பாடுகள்

Conflict of Interest and Independent Legal Advice

கனடா வந்து சில வருடங்கள் தான். சுமாரான வசதியுள்ள குடும்பம். கணவன், தனது பெயரில் மட்டும் பதியப்பட்ட ஒரு வர்த்தகத்தை முதலீடு செய்து ஆரம்பித்து நடத்தி வருகின்றார். அந்த வர்த்தகம் (Business) தொடர்ந்து ஓரளவு நட்டமின்றி நடந்தாலும், சில பல தேவைகளுக்கும், வர்த்தகத்தின் வளர்ச்சிக்கும் மேலதிக பணம் அடிக்கடி தேவைப்படுகின்றது கணவன், மனைவி இருவரது பெயரிலும் ஒரு வீடு வாங்கி ஒரு வருடம். 25% முற்பணம் (Down Payment) போட்டு மிகுதி வங்கி ஈடு (Bank Mortgage) செய்து வீட்டைக் கொள்முதல் செய்திருந்தார்கள்.

கணவன் அந்த வீட்டை 2வது Mortgage செய்து வங்கியிடம் ஒரு Line of credit எடுப்பதற்கு விண்ணப்பித்திருந்தார். வங்கி அந்த விண்ணப்பத்தைப் பரிசீலனை செய்து, அங்கீகாரம் பண்ணி வங்கி சார்பில் பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தலை கணவனின் வழக்கறிஞரிடம் அனுப்பி வைக்கின்றது. ஆனால் கணவனுடைய வழக்கறிஞர் மனைவி சுதந்திரமாக இன்னொரு வழக்கறிஞரை ஏற்படுத்திச் சட்ட ஆலோசனை பெற்ற பின்பு கையொப்பமிடுமாறு பணிக்கின்றார். இதற்கான காரணம் என்னவாக இருக்கும்?

இன்னொன்று:
எத்தனையோ கஷ்டங்களுக்கு மத்தியில் பெற்றோர் கொடுத்த ஒரே வீட்டை விற்றுக் கிடைத்த பணத்துடன் ஒரு குடும்பம் கனடாவிற்கு வந்தனர். வீட்டு வாடகையோ அதிகரித்துக் கொண்டு போகின்றது. ஒரு வீட்டைச் சொந்தமாக வாங்குவோம் என்று தீர்மானித்து, விலை தீர்த்து ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பமிட்ட பின் வங்கிக் கடனுக்கு விண்ணப்பிக்கின்றனர். கணவன் மனைவியின் மாதாந்த வருமானத்தின் தொகை பற்றாத காரணத்தினால் வங்கி முகாமையாளரின் வேண்டுதலின் படி உற்ற நண்பனின் வருமானத்தையும் சேர்த்துக் கடன் எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம். கணவன், மனைவி, நண்பன் மூவர் பெயரிலும் mortgage.

"என்னுடைய வருமானம் போதாதபடியால் நண்பன் சும்மா co-sign பண்ணுகிறார்"; இது தான் கணவன் மனைவி வழக்கறிஞருக்கு கொடுக்கும் விளக்கம். ஆனால் வீட்டுக்கு உரிமையாளர்கள் எவரோ அவர்கள் தானே வீட்டை வங்கியில் ஈடு வைக்கலாம்? நண்பனின் பெயரையும் உறுதியில் சேர்க்க வேண்டும். "நண்பன் வீடு வாங்கவில்லையே! அவர் mortgage கட்டப்போவதும் இல்லை. அவர் சும்மா co-signor தான். வீட்டில் ஒரு வீதத்தை நண்பனுக்கு போட்டு விடுங்கோ. 99 வீதம் எனக்கும் மனைவிக்கும் என்று எழுதுங்கோ" இது கணவனின் அறிவுறுத்தல். நண்பனும் இதற்கு ஒப்புக் கொள்கிறார். வழக்கறிஞர் வங்கிக்கு இதனை தெரியப்படுத்திய போது வங்கியின் நிலைப்பாடு, வீட்டில் 1 வீத உரிமை பெறும் நண்பன், இன்னொரு வழக்கறிஞரிடம் சென்று சுதந்திரமான அதாவது தனிப்பட்ட சட்ட ஆலோசனை (Independant Legal Advice) பெற்று வங்கிப் பத்திரங்களில் கையொப்பமிட வேண்டும். ஏன்?

இன்னொன்று:
ஒரு கணவனும் மனைவியும் கருத்து வேறுபாடு காரணமாகப் பிரிந்து வாழ வேண்டிய சந்தர்ப்பம். இருவரும் எந்தவித வெறுப்புணர்வும் இல்லாமல் கலந்து ஆலோசித்து ஒரு பிரிந்து வாழும் உடன்படிக்கையை (separation agreement) ஒரு வழக்கறிஞர் உதவியுடன் தயாரித்துக் கையொப்பமிட விரும்பினார்கள் இருவரும் கணவர் ஏற்படுத்திய வழக்கறிஞரை அணுகி விபரங்களை விளக்க, ஒப்பந்தம் தயாரிக்கப்படுகின்றது. கணவனும் மனைவியும் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்கிறார்கள். ஆனால், மனைவி இன்னொரு வழக்கறிஞரிடம் சென்று தனிப்பட்ட சட்ட ஆலோசனை பெற்ற பின் அந்த வழக்கறிஞர் முன்னிலையில் உடன்படிக்கையில் கையொப்பமிட்டு வரவேண்டுமென்று கணவரின் வழக்கறிஞர் பணிக்கின்றார். இது வீண் செலவு என்பது அந்தக் கணவன் மனைவியின் கருத்து. இது அவசியம் தானா?

இன்னொன்று:
கணவனும் மனைவியும் ஒரு வழக்கறிஞரிடம் சென்று ஒரு உயில்/இறுதி விருப்பம் (Will) தயாரிப்பதற்கான அறிவுறுத்தல்களைக் கொடுக்கின்றனர். இருவரும் தமது சொத்துக்களைப் பற்றிச் சிந்தித்து, ஒருவருக்கொருவர் ஏற்றுக் கொள்ளக் கூடிய

யசோ சின்னத்துரை

ஒரு Plan ஐ வழக்கறிஞருக்கு தெரிவிக்கின்றார்கள். அதன் படி Will தயாரிக்குமாறு கூறிச் செல்கின்றனர். சில மணித்தியாலங்களின் பின் மனைவி வழக்கறிஞரை தொலைபேசியில் அழைத்து தன்னுடைய Will இல் சில மாற்றங்கள் செய்யுமாறு கூறுகின்றார். வழக்கறிஞர் கணவன், மனைவி இருவரையும் பிரதிநிதித்துவம் செய்யத் தயங்குகின்றார்.... காரணம்?

ஒரு விடயத்தில், ஒன்றுக்கு மேற்பட்டவர்களை ஒரே வழக்கறிஞர் பிரதிநிதித்துவம் செய்யும் பொழுது, அந்த ஒவ்வொருவரதும் தனிப்பட்ட நலனில் முரண்பாடு ஏற்படுவதாக மனதில் படும் பட்சத்தில் அந்த ஒவ்வொருவரது நலனும் உரிமையும் பாதுகாக்கப்பட வேண்டியது மிகவும் முக்கியம். இதன் விளைவாக ஒவ்வொருவரும், தனிப்பட்ட சட்ட ஆலோசனை (Independent Legal Advice) பெறுவது இன்றியமையாததொன்று. ஆரம்பத்தில் நான் கூறிய முதலாவது உதாரணத்தைப் போன்ற ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு மனைவி என்னிடம் Independent Legal Advice பெற வந்திருந்தார். அவரை தனிப்பட அழைத்து பத்திரத்தில் கையொப்பமிடுவதால் வரும் நன்மை தீமைகளை விளக்கிய பொழுது, "இந்த business loan இல் நான் கையொப்பமிடாவிட்டால் எனது கணவனிடம் தப்ப முடியாது. அவருக்குச் சரியான கோபம் வரும். மன்னிக்கவே மாட்டார். business இல் தொடர்ந்து பணம் தேவைப்பட்டுக் கொண்டேயிருக்கிறது. இது எங்கு போய் முடியுமோ" என்று கூறிவிட்டு, கணவன் வங்கிக்கு பணத்தை ஒழுங்காகக் கட்டாவிட்டால் வீடு பறிபோய்விடும். தானும் பிள்ளைகளும், கணவரும் தெருவில் நிற்க வேண்டி வரலாம் என்றுணர்ந்து, "நான் என் கணவருக்கு விளங்கப்படுத்தி மனத்தை மாற்றுகிறேன்" என்று கூறி கையொப்பமிட மறுத்துவிட்டார். I.L.A க்குத் தனிப்பட்ட ஒரு வழக்கறிஞரிடம் சென்றபடியால் மனைவி இந்த முடிவை எடுக்கக் கூடியதாக இருந்தது. உடன் கோபம் இருந்தாலும் காலப் போக்கில் மனைவியின் முடிவை கணவன் போற்றியதாக மனைவி தொலைபேசி மூலம் சில காலத்தின் பின் தெரிவித்தார்.

இதனைத் தவிர சட்டத்தின் கீழ் கணவனுக்கும் மனைவிக்கும் நிறையப் பாதுகாப்பு இருக்கின்றது. குடும்பமாக இருக்கும் வீடு (Martimonial Home) கணவன் அல்லது மனைவியில் பெயரில் மட்டும் பதியப்பட்டு இருந்தாலும், வீடு விற்கப்படும் பொழுதோ, mortgage பண்ணும் பொழுதோ தனிப்பட்ட சட்ட ஆலோசனை பெற்றுச் சம்மதத்தை சம்பந்தப்பட்ட பத்திரங்களில் கையொப்பத்தால் தெரியப்படுத்த வேண்டும். தகுந்த தனிப்பட்ட சட்ட ஆலோசனை (I.LA) பெற்ற பின்பு கையொப்பமிடுவதால் பல இடர்களிலிருந்தும், அதிசயங்களிலிருந்தும் காப்பாற்றப்பட I.L.A வழியமைக்கின்றது.

மேற்கூறிய உதாரணங்களிலிருந்து நாம் எதை அவதானிக்கலாம். ஒரு கிறிமினல் சம்பந்தப்பட்ட விடயமாக இருந்தால் மட்டும் தான் உடனே ஒரு வழக்கறிஞரை நாட வேண்டிய அவசியம் ஏற்படும் என்றில்லை. மேற்கூறப்பட்டது போன்ற பல விடயங்களுக்கும் ஒரு வழக்கறிஞரின் ஆலோசனை தேவைப்படுகின்றது.

எந்தச் சட்ட ஆலோசனை பெற வேண்டிய விடயமாக இருந்தாலும் சரி, எவ்வாறு நீங்கள் ஒரு வழக்கறிஞரைத் தெரிவு செய்யலாம். குறிப்பிட்ட ஒரு விடயமாக இருந்தால் அத்தகைய ஒரு சட்டத் தேவை ஏற்பட்டு ஒரு வழக்கறிஞரின் சேவையைப் பாவித்த ஒரு நண்பரிடம் இருந்து வழக்கறிஞரின் பெயரைப் பெற்றுக் கொள்ளலாம் (by reference). அல்லது, அநேகமான தொழில்களில் இருப்பது போல சட்டத் தொழிலிலும், வெவ்வேறு Areas of law வில் அனுபவம் பெற்று அந்த Area வில் அனுபவம் பெற்று

(46ம் பக்கம் பார்க்க)

தமிழீழ மக்களின் பாரம்பரிய நாட்டுக்கூத்துக் கலை

மனுவல் ஜேசுதாசன்

கலை ஒரு தெய்வீக ஊடகம். அது இறைவனையும் மனிதனையும் இணைக்கும் பலம் வாய்ந்த ஒரு பாலம். "கலைப் பணி இறைப் பணி" எனச் சான்றோர் கூறுகிறார்கள். "நல்ல கலையை ஆத்மார்த்தமாக அனுபவித்து இரசிப்பவன் நோய் நொடியின்றி அமைதி வாழ்வு வாழ்வான்" இக்கூற்று மனிதம் உருவான காலம் தொட்டு மனிதனால் சர்ச்சையின்றி ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இயல், இசை, நாடகம் இவை மூன்றும் தான் கலை. இதில் இசையை நாம் உற்று நோக்கில், இசை மனிதத்தில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதைப் பற்றிப் பாடல்களிலும் கவிதைகளிலும் நாம் கண்டுகொள்கிறோம்.

" இசை கேட்டால் புவி அசைந்தாடும்
இது இறைவன் செயலாகும்"
"இசையில் மயங்காதோர் எவரும் உண்டோ!"
மேற்புலத்து மேதைகளும் இசையின் வண்மையைப் பற்றிக் கூறியுள்ளார்கள். சேக்ஸ்பியர் தனது 12வது இரவில் என்ற நாடகத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்.
"காதலுக்கு (அன்புக்கு) இசை தான் உணவானால்
அதை மிதமிஞ்சிய அளவில் எனக்களியுங்கள்
அது எல்லையை மீறி அதனால் எனது காதல்/பசித்
தாகம் மாண்டு மடியட்டும்"

Shakespere in 12th Night
"If music be the food of love, give me excess of it that susfeiting my appetite may sicken and die."

இசையின் மகத்துவத்தை எடுத்துக் கூற வேறு ஆதாரங்களும் தேவையா? ஆனால் இசை கலையின் முழுமை அல்ல. அது ஒரு பிரிவு மட்டுமே. இசையில் இயலுமில்லை; நாடகமுமில்லை.

தமிழீழ மக்களின் பாரம்பரியக் கலையான நாட்டுக் கூத்தை நாம் நிதானத்துடன் நின்று பார்ப்போமானால் இது ஒரு முழுமை பெற்ற கலை என்பதை உணர்வோம். நாட்டுக் கூத்தில் இயல் உண்டு; இசை உண்டு; நாடகம் உண்டு. கலையில் இயல் என்ற பார்வையில் காட்சிகளைக் கதைக்கேற்றாற் போல் அமைப்பதற்கு திரைகளில் ஓவியங்கள் வரையப்பட்டிருக்கும். நாடகம் என்ற பிரிவில் நாட்டுக் கூத்தில் பங்கு கொள்ளும் கலைஞர்கள் தமது பாத்திர நியதிக்கேற்ப நடை, உடை, பாவனைகளால் நடித்துக் காட்டுவார்கள். இசை என்ற பிரிவில் அதே கலைஞர்கள் தத்தமது சொந்தக் குரல்களில் தாளம், மிருதங்கம் போன்ற இசைக் கருவிகள் மெருகூட்ட கொடுக்கப்பட்ட மெட்டில் பாத்திரங்களுக்குப் பொருத்தமாகப் பாடுவார்கள்.

நாட்டுக் கூத்துப் பாடல்கள் தனிச் சிறப்பு வாய்ந்தவை. பாடல்களில் புலவர்கள் பாவனைகளிலிருந்து அறிந்து கொண்டு போகும் அழகிய சொற்களைச் சேர்த்துத் தமிழின் இனிமையை "எடுத்தியம்புகிறார்கள்." உதாரணமாக 'எடுத்தியம்புகிறார்கள்' என்ற சொற்பதம் சமகால இலக்கியங்களில் நாம் பாவிப்பது கிடையாது. ஆனால், நாட்டுக் கூத்தில் "எடுத்தியம்புவீர்" என்ற சொற்பதம் அதிகாரத்திலுள்ள ஒருவரால் தனது ஆணைக்குட்பட்ட ஒருவரைப் பார்த்துக் கூறப்படும் சொற்பதம். அதாவது; தெட்டத் தெளிவாக, முழுமையாக, ஒளிவு மறைவின்றி விளக்கிக் கூறிடுவீர் என்ற பொருள்படும் 'எடுத்தியம்பிடுவீர்' என்ற இந்தச் சொற்பதம். இதே போன்று ஒவ்வொரு பாடல் வரிகளிலும் மறைந்து போகும் சொற்பதங்கள் பலவற்றைப் பார்த்துப் பரவசமடையலாம். இத்தகைய சொற்கள் பாடல்களின் மெட்டுக்களுக்கேற்பப் பாவிக்கப்படுகின்றன. வேறு சொற்கள் பாடல்களின் மெட்டுகளுக்குப் பொருத்தமாக அமையா.

அன்புசேர் மகற் கன்பராய் - எந்தன்
மகளை மணம் முடித்து
மருகா மறுமனை நீ
சென்றீரோ எந்தன் மருகரே!

இந்தப் பாடலில் வரும் மருகா, மருகரே என்ற சொற்கள் மகளை மணம் முடித்த மருமகனைக் குறிக்கும். இது பாவனையில் இல்லாத ஒரு சொல். மருகா என்ற சொல்லுக்குப் பதிலாக மருமகனே என்ற சொல்லைப் பாவித்தால் பாடலின் மெட்டு, தாளம் பிழைத்துவிடும்.

நாட்டுக் கூத்து மெட்டுகள் மிகவும் பழமை வாய்ந்தவை. பழமை வாய்ந்த சொற்கள் தான் மெட்டுகளுக்குப் பொருத்தமாக அமைகின்றன.

நாட்டுக் கூத்துப் பாடல்களுக்கு மேலும் ஒரு சிறப்பு என்னவென்றால் அவற்றை எழுதியவர்கள், எழுதுபவர்கள் பட்டப் படிப்பு மூலம் தமிழ்மொழிப் பாண்டித்தியம் பெற்றவர்கள் அல்ல. நான் அறிந்த புலவர்கள் தமிழ் எழுதக் கூடத் தெரியாதவர்கள். அவர்கள் பாடும் பொழுது வேறு யாரோ அப்பாடல்களை எழுதுவார்கள்.

மேற்கூறிய வாதத்தின் அடிப்படை ஆதாரத்தில் இருந்து நாட்டுக் கூத்து முழுமையான ஒரு கலை வடிவம் என்பது தெளிவாகிறது. இதுவே காலங்காலமாக, அண்மைக் காலம் வரை எம்மக்கள் மத்தியில் ஒரு ஜனரஞ்சகமான ஊடகமாக இருந்து வந்தது.

நாட்டுக் கூத்துக் கலை எங்கு, எப்போது, யாரால் உருவாக்கப்பட்டது என்பது பற்றிய அல்லது அதன் வளர்ச்சியின் வரலாறு பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரையல்ல இந்தக் கட்டுரை. மாறாக நமது பரம்பரைக் கலையான நாட்டுக் கூத்தை நாம் புலம்பெயர்ந்த நாடுகளில் ஏன் புனரமைப்புச் செய்து நமது பாரம்பரியக் கலைக்குப் பெருமை தேடிக் கொடுக்கக் கூடாது என்ற கேள்வியை வாசகர்கள் உள்ளத்தில் பதிப்பது தான் இந்தக் கட்டுரையின் நோக்கம்.

நாட்டுக் கூத்தைப் புனரமைப்புச் செய்வதன் மூலம் நம் சமூகத்தில் சரித்திர ரீதியாகப் பல தாக்கங்களை ஏற்படுத்தலாம். "Opera" என அழைக்கப்படும் ஐரோப்பிய மக்களின் பாரம்பரியக் கலையை ஒத்தது நமது நாட்டுக் கூத்து. 'Opera' ஒரு உன்னத கலையாக மேற்புலத்து மக்களால் போற்றிப் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. Opera வழியாக மறந்து போகும், மறைக்கப்படும் சரித்திரங்களைப் புத்துயிர் கொடுத்து புனர்வாழ்வளித்து அழியாக் காவியங்களாக நவீன தொழில்நுட்பக் கலையுடன் ஒன்றிணைத்து சாகாவரம் கொடுக்கிறார்கள் மேற்புலத்தோர். அவ்வண்ணமே நாமும் நமது நாட்டுக் கூத்தைப் புனரமைப்புச் செய்தால் மறைக்கப்படும், மறுக்கப்படும், மறக்கப்படும் நம் சரித்திரங்களைக் காவியங்களாகப் படைத்து நமது தனித்துவமான கலையும் நமது சரித்திரமும் நிரந்தரமாக நிலைத்து நிற்கப் பணி செய்யலாம்.

அண்மையில் ஸ்காபரோவில் "கண்ணகி" நாட்டுக் கூத்தில் கண்ணகி மதுரையை அழிக்கும் காட்சியைப் பாடி நடித்துக் காட்டினார்கள். இந்த நாட்டுக் கூத்தைப் பார்த்த பலரும் வியந்து, இதுபோன்ற கலை வடிவங்கள் மேலும் படைக்கப்பட வேண்டும் என்ற தமது ஆசையை ஆர்வத்துடன் வெளிப்படுத்தியுள்ளார்கள். இதில் பிரதான பாத்திரங்கள் ஏற்றுப் பாடி நடித்தவர்கள் கனடாவில் வளர்ந்த பிள்ளைகள் என்பது குறிப்பிடத்தக்கது. தமது பாரம்பரியக் கலையில் இவர்கள் காட்டிய ஈடுபாடும் பற்றும் நமது இக் கலைவடிவம் தமிழ்மொழி போல் என்றும் அழியாது என்று நம்பிக்கையையும் உற்சாகத்தையும் தருகிறது.

கனடாவில் நாட்டுக் கூத்துக் கலைஞர்கள் பலர் இருக்கிறார்கள். நாட்டுக் கூத்துப் பாடல்கள் எழுதும் ஆற்றல் கொண்ட புலவர்கள் நம் மத்தியில் இருக்கிறார்கள். காட்சிகள் அமைக்கக் கூடிய ஓவியர்கள், பக்கவாத்தியக் கலைஞர்கள் கனடாவில் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களது கலைத்திறன் இவர்களுடன் அழிந்து போகக் கூடாது.

கண்ணகி, ஞானசௌந்தரி, கண்டியரசன் போன்ற கதைகள் மட்டும் நாட்டுக் கூத்து வடிவம் பெறக் கூடாது. சமகால தமிழீழ மக்களின் வரலாறு நாட்டுக் கூத்து வடிவமாக வேண்டும் மிகுந்த ஆர்வமும் ஆற்றலும் மிக்க கலைஞர்கள் முன்வந்து நிறைவேற்ற வேண்டும். இதற்கு நாம் ஆதரவு வழங்க வேண்டும்.

இறுதி விருப்ப ஆவணம்

Last Will Document

பொ. கயிலாசநாதன்

இறுதி விருப்ப ஆவணம் என்ற பதம் இலங்கையில் எம்மத்தியில் முக்கியமானதாகத் தெரிந்திருக்கவில்லை. அங்கும் இறுதி விருப்ப ஆவணம் நடைமுறையில் இருந்த போதும் சாதாரண மக்கள் மத்தியில் முக்கியமானதாகக் கருதப்படவில்லை. ஆனால் இங்கு இப்பதம் எல்லோர் நாவிலும் உச்சரிக்கப்படுவதோடு மிகவும் முக்கியத்துவம் கொடுக்கப்படும் ஒரு சொல்லாகவும் விளங்குகின்றது.

இறுதி விருப்ப ஆவணம் எனப்படுவது ஒரு நபர் தனக்குப் பின் தன்னுடைய சொத்துக்கள், அவை எங்கு இருந்தாலும், யாருக்கு அல்லது யார்யாருக்குப் போய்ச் சேர வேண்டுமென அல்லது எவ்வாறு பங்கிடப்பட வேண்டுமென தான் உயிர் வாழும் போது எண்ணுகின்றாரோ அந்த எண்ணத்தை எழுத்தில் வடித்து ஆவணமாக வைத்திருப்பதாகும். இந்த ஆவணத்தை அவர் தானாகத் தன் கைப்படத் தயாரித்து வைக்கலாம் அல்லது ஒரு வழக்கறிஞரின் உதவியுடன் தயாரிக்கலாம். ஒருவரின் மனதிலுள்ள எண்ணத்திற்கு ஒரேயொரு விளக்கம் மட்டுமே கொடுக்கப் படக்கூடியதாக இருக்க வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட விளக்கங்கள் கொடுக்கப்படக் கூடியதாக இருப்பின் அந்த ஆவணம் செல்லுபடியற்றதாகலாம். இன்னொன்றையும் இவ்விடத்தில் குறிப்பிட வேண்டும். அதாவது இறுதி விருப்ப ஆவணம் இல்லாவிட்டால் உங்களது சொத்தை எவரும் அபகரிக்க முடியாது. சொத்துக்கு உரிமையுடையவர் எவரோ அவர் அதை உரிமை கோரிப் பெற்றுக் கொள்ளலாம். அரசாங்கம் சொத்தை எடுத்து விடும் என எண்ணுவது தவறு.

உதாரணமாக Aயும் Bயும் கணவன் மனைவியர். அவர்களுக்கு C,D என இரண்டு குழந்தைகள் இருக்கிறார்கள். A ஒரு விபத்தில் மரணமடைந்து விடுகிறார். இறுதி விருப்ப ஆவணம் எழுதி வைக்கவில்லை. இவருக்கு ஒரு வீடும், வங்கியில் பணமும் இருக்கின்றது. இச் சந்தர்ப்பத்தில் Aயின் மனைவி B நீதிமன்றத்தில் சென்று இச் சொத்துகளுக்கு உரிமை கோரலாம். அந்தச் சட்ட நடைமுறையும் மிகவும் இலேசானதாகும்.

Aயும் Bயும் ஒரே நேரத்தில் விபத்தில் இறந்து விட்டார்கள். இவர்களுக்கு ஒரு வீடும், வங்கியில் பணமும் இருப்பதாக வைப்போம். இறுதி விருப்ப ஆவணம் எழுதி வைக்கவில்லை. இச் சந்தர்ப்பத்தில் இவர்களின் குழந்தைகள் உரிமை கோரிச் சொத்தைப்பெறலாம். இதை யாரும் தடுக்க முடியாது. ஆகவே இறுதி விருப்ப ஆவணம் இல்லாவிட்டால் சொத்துப் போய்விடும் என எண்ண வேண்டாம்.

ஆனால், கொஞ்சம் அதிகமாகவே சொத்து வைத்திருப்பவர்கள். பல துறைகளில் முதலீடு செய்துள்ளவர்கள், பல்வேறு விகிதாசாரத்தில் சொத்துகள் அவர்களின் வாரிசுகளைப் போய்ச் சேர வேண்டுமென விரும்புபவர்கள் இறுதி விருப்ப ஆவணம் எழுதி வைப்பதே நல்லது. இறுதி விருப்ப ஆவணம் இருந்தால் அது பல பிரச்சனைகளைத் தவிர்க்கும்.

இறுதி விருப்ப ஆவணத்தை எந்த நேரமும் மாற்றலாம். நீங்கள் விரும்பிய நேரம், விரும்பிய மாதிரித் திருத்தலாம். ஆவணத்தை மாற்றாமல் திருத்தத்தை மட்டும் செய்யலாம்.

முறையாகத் தயாரிக்கப்படாத இறுதி விருப்ப ஆவணம் முடிவற்ற வழக்கு நடவடிக்கைகளுக்கும் தேவையற்ற செலவினத்திற்கும், இறுதியில் குடும்பப் பகைக்கும் வழிவகுக்கும். எனவே மனதிலுள்ளதை தெளிவாக எழுத்தில் போடவும், செல்லுபடியானதான ஒரு இறுதி விருப்ப ஆவணம் தயாரிக்கவும், ஒரு வழக்கறிஞரின் உதவியை நாடுவது நல்லது. ஆனால் வழக்கறிஞர் தான் இறுதி விருப்ப ஆவணத்தைத் தயாரிக்க வேண்டும் என்பதல்ல.

இறுதி விருப்ப ஆவணம் எங்கும் பதிவு செய்யப்பட வேண்டியதில்லை. தயாரித்த பின்னர் பாதுகாப்பான ஒரு இடத்தில்

மரணத்தின் பின் மற்றையோரால் கண்டு கொள்ளக்கூடிய விதத்தில் வைக்கப்படல் வேண்டும். மரணத்தின் பின்னர், இறுதி விருப்ப ஆவணம் எவரிடமும் வந்து சேராவிட்டால் அதைத் தயாரிப்பதில் அர்த்தம் இல்லாது போகும்.

பொதுவாக சொத்துகள் யாவும் கணவன் மனைவி இருவரின் பெயரிலும் இருக்கலாம். சில சமயம் ஒருவரின் பெயரிலேயே அதாவது கணவன் அல்லது மனைவியின் பெயரில் மட்டும் இருக்கலாம். ஒரு துணையின் பெயரில் மட்டும் சொத்துகள் இருந்தால் அவர்கள் இறுதி விருப்ப ஆவணம் தயாரிக்கும் போது மிகவும் கவனத்துடன் இருக்க வேண்டும். அவர்கள் தெரிந்திருக்க வேண்டியது என்னவெனில் உயிர் வாழும் துணைக்கு சொத்தில் ஒரு பகுதியைக் கொடுக்காமல் மற்றையவர்களுக்கு மட்டும் சொத்துப் போக வேண்டும் என இறுதி விருப்ப ஆவணம் எழுதினால் அது செல்லுபடியற்றதாக்கப்படலாம்.

உதாரணமாக Aயும் Bயும் கணவன் மனைவி. ஏதோ காரணத்திற்காக கணவன் Aயின் பெயரிலேயே சொத்துகள் இருக்கின்றன. திருமண வாழ்க்கையில் இவர்களுக்கிடையே சந்தோஷமில்லை. அன்னியோன்னியம் இல்லை. தனது மரணத்தின் பின்னர் மனைவி Bக்கு சொத்துகள் போகக் கூடாதென A எண்ணுகிறார். எனவே இறுதி விருப்ப ஆவணத்தில் சொத்துகள் யாவும் தனது தாய்க்குப் போக வேண்டுமெனக் குறிப்பிட்டுள்ளார். இச் சந்தர்ப்பத்தில் இவரின் மனைவி B சட்டப்படி தனது பங்கைக் கோரலாம். இவ்விடத்தில் இறுதி விருப்ப ஆவணம் செல்லுபடியற்றுப் போகும். இந்த மாகாண சட்டத்தில் கணவன், மனைவியரின் உரிமை பாதுகாக்கப்பட்டுள்ளது.

இறுதி விருப்ப ஆவணம் எழுதுபவருக்கு தனது சொத்துகள் தன் மரணத்தின் பின் யார் யாருக்கு என்னென்ன விகிதாசாரத்தில் போய்ச் சேரும் என்பது தெரியும். எப்படி இருப்பினும் சொத்துகளை தான் விரும்புவோருக்குக் கொடுக்கப் பல்வேறு மாற்று முறைகள் இருக்கின்றன என்று பலருக்குத் தெரியாமல் இருக்கும். இவற்றை அறிந்து கொள்ள உங்கள் வழக்கறிஞர்களை நாடுங்கள்.

பராயமடையாதோர், தங்கி வாழுபவர் என்போரைப் பராமரிக்கும் சட்டப்படியான பொறுப்பு இருக்கும் போது அவர்களுக்கு எதையும் கொடுக்காமல் மற்றையோருக்கு மட்டும் சொத்துகள் சென்றடைய வேண்டுமென இறுதி விருப்ப ஆவணம் எழுதப்பட்டால் சட்டம் அதை அங்கீகரிக்காது.

இறுதி விருப்ப ஆவணம் தயாரிப்பவர் பராயமடைந்தவராக இருக்க வேண்டும். பிராயமடையாதவராக இருப்பின் திருமணமானவராக அல்லது ஆமி, நேவி ஆகிய படைகளில் பணியாற்றுபவராக இருப்பின் அவர் இறுதி விருப்ப ஆவணம் தயாரிக்கலாம்.

இறுதி விருப்ப ஆவணம் தயாரிப்பவர் சித்த சுவாதீனம் உடையவராக இருத்தல் வேண்டும். மனக் குழப்பத்திலுள்ளோர் அல்லது தான் செய்வது என்ன என்பதை அறியும் ஆற்றலற்றவராக இருப்பின் அவர் இறுதி விருப்ப ஆவணம் எழுத முடியாது. இறுதி விருப்ப ஆவணம் தயாரிக்கப்பட்ட பின்னர், இவர் சித்த சுவாதீனமற்றவர் அல்லது விளங்கும் ஆற்றல் அற்றவர் என்று நிரூபிக்கப்பட்டால் அவரது இறுதி விருப்ப ஆவணம் செல்லுபடியற்றதாக்கப்படும். இறுதி விருப்ப ஆவணம் எழுதுபவர் மீது தகாத செல்வாக்கு செலுத்தப்பட்டிருத்தல் ஆகாது.

மேலும் நடக்கவிருக்கும் திருமணத்தை எதிர்பார்த்துத் தயாரிக்கப்படும் இறுதி விருப்ப ஆவணத்தில் இவ்விடயம் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும். ஏனெனில் திருமணமாகு முன் எழுதிய இறுதி விருப்ப ஆவணம் திருமணத்தின் பின்னர் வலுவற்றதாகி விடும். அதை வலுவுள்ளதாக வைத்திருக்க வேண்டுமாயின் மேற்குறிப்பிட்ட விடயம் குறிப்பிடப்படல் வேண்டும்.

பராயமடையாதவர்கள் ஆதனத்தில் உரித்துடையோராவர் என இறுதி விருப்ப ஆவணம் எழுதும் போது அவர்கள் எந்த வயதில் ஆதனத்தைப் பெறுவார்கள் என்பது தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும். ஏனெனில் வயது குறிப்பிடப்படாவிட்டால் அவர் பராயமடைந்ததும் சொத்துக்கு உரித்துடையவர் ஆகிவிடுவார். உதாரணமாக உங்களிடம் 1 மில்லியன் டாலர்கள் இருக்கின்றன என வைப்போம். 2 பிள்ளைகள். உங்களுக்குப் பின் பிள்ளைகள் இருவருக்கும்

(மறுபக்கம் பார்க்க)

சட்டமும் சமுதாயமும்

பாதிக்கின்றது என்பதை உணர்ந்து சரியாகச் சிந்தித்து நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

* நீங்கள் திருமணத்தை இங்கு நடத்துவதாயின், நீங்கள் கலியாணம் செய்யப்போகின்ற கணவனோ/மனைவியோ உங்களுக்கிடையில் ஓர் ஒப்பந்தம் செய்ய வேண்டுமா? இருவரும் பிரிய வேண்டிய நேரத்தில் எவ்வாறு தங்களுக்குரிய சொத்துக்கள் பிரிக்கப்பட வேண்டுமென்று கலியாணத்துக்கு முன்னரே எழுதப்பட வேண்டுமா? இலங்கையருக்கு இது ஒரு புது விடயமாக இருக்கலாம். ஆனால் கனடாவில் இது பரவலாக நடைமுறையிலுள்ள ஓர் ஒப்பந்தம்.

* உங்கள் வீட்டில் நீங்கள் நாய் வளர்க்கவில்லை. ஆனால் பக்கத்து வீட்டில் உள்ளவரிடம் நாய் உள்ளது. அது உங்களை அல்லது உங்கள் வீட்டிலுள்ள ஒருவரைக் கடித்தால், உங்களுக்குள்ள உரிமை என்ன? நீங்கள் என்ன செய்யலாம்? எவ்வாறு நஷ்ட ஈடு கோரலாம் என்கின்ற யாவும் சட்டத்தில் எழுதப்பட்டுள்ளன. இவைகளை ஒவ்வொருவரும் தெரிந்திருக்க வேண்டும்.

* ஒரு பழைய வாகனத்தை நீங்கள் வாங்குகின்றீர்கள். அதனை வாங்குகையில் உங்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கின்றது. அதனைப் பற்றி எங்கு அறியலாம். அது திருடப்பட்ட வாகனமென்று பின்னர்தான் தெரிய வந்தால் என்ன செய்யலாம். இவைகளையும் சட்டம் விபரமாகக் கூறுகின்றது.

* திருமணமான ஒருவர் விவாகரத்துச் செய்ய விரும்புகின்றார். அதற்கு வழக்கறிஞர் தேவையா இல்லையா; வழக்கறிஞரை எவ்வாறு தெரிந்தெடுப்பது. ஒரு பொலிஸ்கார் உங்களை வீதியில் மறித்துக் கேள்விகள் கேட்டால் பதில் சொல்ல வேண்டுமா? இல்லையா? அப்போது பொலிஸாரிடம் நீங்கள் கேட்க வேண்டியவை என்ன? பொலிஸ் உங்களைக் கைது செய்யாதவிடத்தும் உங்களில் சந்தேகமிருப்பதாகக் கூறினால் நீங்கள் செய்ய வேண்டியது என்ன? இவைகளை ஒவ்வொருவரும் அறிந்து வைத்திருக்க வேண்டும்.

* உங்களுடைய இளவயது மகனோ மகளோ (teenagers) வாகனத்தை எடுத்து ஓட்டிச் செல்கையில் விபத்தில் சிக்கினால், அதற்கு பெற்றோர் பொறுப்பா இல்லையா என்பதைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும். நீங்கள் வேலை புரியுமிடத்தில் உங்களுக்கென ஒரு அறையுள்ளது. அங்கு உங்களுக்கொரு 'லொக்கர்' இருக்கின்றது. அதனைச் சோதிப்பதற்கு உங்கள் வேலைத்தல அதிபருக்கு உரிமையுண்டா? இல்லையா? என்பதை நீங்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

* குடியிருக்கும் வீட்டைச் சீவிய காலத்தற்குப் பின்னர் பிள்ளைகள் பாவிக்க முடியுமா? இதற்கு ஏதாவது ஆவணத்தில் இருக்க வேண்டுமா? ஒருவர் விவாகரத்துச் செய்த பின்னர் பிள்ளைகளுக்குப் பராமரிப்புப் பணம் கொடுக்க வேண்டுமா? இதற்குச் சட்ட நடவடிக்கை எடுக்க முடியுமா? எவ்வளவு காலத்துக்குப் பராமரிப்புப் பணத்தைக் கேட்க முடியும். இவையெல்லாம் சட்டத்தினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

சட்டத்தின் கீழ் தனி மனிதரொருவருக்கு உரிமைகளை வழக்கறிஞர் ஒருவரிடம் கேட்டு அறிந்து கொள்ளலாம். ஒரே விதமான வழக்கில் உங்கள் நண்பரோ உறவினரோ வெற்றி பெற்றுவிட்டால் எனக்கும் வழக்கில் வெற்றி கிடைக்கும் என்று நினைப்பது தவறு. ஒவ்வொரு வழக்கும் ஒவ்வொரு விதமானவை. வெவ்வேறு நீதவான்கள் முன்னிலையில், வெவ்வேறு சாட்சிகளுடன் வழக்குகள் நடத்தப்படுகின்றன. ஆகவே நல்லதொரு வழக்கறிஞரைக் கலந்தாலோசித்து, அவர் கூறும் சட்ட ஆலோசனைக்கிணங்க நடந்து கொள்வது நல்லது. வழக்கறிஞரைத் தெரிந்தெடுப்பது முக்கியமான விடயம். அனுபவமும் ஆற்றலும் வாய்ந்த, சட்டத்தை நன்கு தெரிந்த நம்பிக்கையான ஒரு வழக்கறிஞரை முதலில் கலந்தாலோசிக்க வேண்டும். உங்களுக்கு அவரில் விருப்பமோ விருப்பமில்லாமலோ இருக்கலாம். ஆனால் அவர் ஒரு நம்பிக்கைக்குரியவராக இருக்கலாம்.

இதனைக் கூறுகையில் எனக்கு ஒரு விடயம் நினைவுக்கு வருகின்றது. சிங்கப்பூரின் பிரதம மந்திரியாக இருந்த லீ குவான் யு (Lee Kwan Yu) மிகுந்த திறமைசாலி. அவர் ஒருமுறை சொன்னார்: "நான் பெரும்பான்மை மக்களால் போற்றப்படும் ஒரு பிரதம மந்திரியல்ல; ஆனால் மக்களின் நம்பிக்கைக்குரிய ஒரு பிரதம மந்திரி. ஆகவே நான் செய்யும் விடயங்கள் யாவையும் மக்கள் நம்புகின்றார்கள். நம்பிக்கை தான் முக்கியம்" என்பது அவரது கூற்று. ஆங்கிலத்தில் சொல்வதானால், "I am not a popular Prime Minister; however I am a Prime Minister on whom the people have their confidence" என்பது. உங்களுடைய நம்பிக்கைக்குரிய ஒரு வழக்கறிஞரையே நீங்கள் தெரிவு செய்ய வேண்டும். அவரை உங்களுக்குப் பிடித்திருக்க வேண்டும் என்றில்லை. உங்களுடைய நம்பிக்கைக்கு அவர் பாத்திரமானவரா என்பதுதான் முக்கியம். இதனை மனதில் வைத்து சட்டம் சம்பந்தமான பிரச்சனைகள் வருகையில் புத்திசாலித்தனமாக சிந்தித்து நடந்து கொள்ளுங்கள்.

இறுதி விருப்ப ஆவணம்

சம பங்காக இப் பணம் போக வேண்டும் என இறுதி விருப்ப ஆவணம் எழுதியுள்ளீர்கள். உங்கள் முதற் குழந்தை பராயமடைந்தால் 500,000 டாலர்களைப் பெறும். இவ்வயதில் அதாவது 18 வயதில் இக் குழந்தை 1/2 மில்லியன் ரூபாவை நிர்வகிக்கக்கூடிய அறிவு ஆற்றல் என்பன இக் குழந்தைக்கு இருக்குமா என்பதை உணர வேண்டும். இவ் வயதில் கிடைக்கும் பணத்தை இக் குழந்தை செவ்வனே பராமரிக்க முடியாமல் வீணடிக்கலாம். எனவே 19 வயதில் ஒரு லட்சம் டாலர் 25 வயதில் 2 லட்சம் டாலர் 30 வயதில் 3லட்சம் டாலர் சென்றடைய வேண்டுமென்ற ஏற்பாட்டை இறுதி விருப்ப ஆவணத்தில் செய்யலாம். அதுவே சாலச் சிறந்ததும் ஆகும்.

விருப்பங்கள்...

சிறப்பாக அந்த விடயம் சம்பந்தமாக தொழிலாற்றும் வழக்கறிஞர்கள் இருக்கின்றார்கள். உதாரணமாக ஒரு Real estate வழக்கறிஞரிடம் Criminal law தொடர்பாக ஆலோசனை பெறுவது கடினம். நிச்சயமாக பொதுவான ஆலோசனை எந்த விடயத்திலும் எந்த வழக்கறிஞரும் அளிப்பார்கள். இருந்தாலும் நுணுக்கமான கேள்விகளுக்கு ஆலோசனையையும் அந்த Area வில் அனுபவம் பெற்ற வழக்கறிஞரினால் தான் தர முடியும்.

வழக்கறிஞரை ஏற்படுத்துவதற்கு இன்னொரு வழி Lawyer Referral Service. இது Law society of upper Canada இனால் ஏற்படுத்தப்பட்ட ஒன்று. நீங்கள் (416) 947-3330 என்ற தொலைபேசி இலக்கத்தை அழைத்து இருக்கும் முகவரி, மற்றும் மொழி, சட்ட தேவை பற்றி விபரங்களைக் கொடுத்தால் 3 வழக்கறிஞர்களின் பெயர் தரப்படும். 3 வழக்கறிஞர்களுடனும் பேசி, அவரவர் காரியாலயத்தில் 30 நிமிடங்கள் சந்தித்து இலவச ஆலோசனை பெறலாம். பின்பு ஒருவரைத் தெரிவு செய்யலாம்.


ஒரு வழக்கறிஞரின் ஆலோசனையை நாடும் போது பணச் செலவு இருக்கத்தான் செய்யும். ஆனால் நீண்ட பயனைப் பார்க்கும் போது நீங்கள் நிறையப் பணம் சேமிப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கும்.

உதாரணமாக ஒருவர் ஒரு Convenience Store ஐ 50,000 டாலர் தீர்த்து இன்னொருவரிடம் வாங்குவதற்கு ஒப்புக் கொள்கிறார். "வழக்கறிஞரை ஏற்படுத்தாமலே இது செய்யலாம். ஏன் வீண் செலவு. அதுவும் Double செலவு" என்று இருவரும் யோசித்தார்கள். கடையும், பணமும் கைமாறியது. அடுத்த நாள் கடையின் கதவு Seal பண்ணப்பட்டிருப்பதைக் கடை வாங்கியவர் கண்டு திகைக்கின்றார். காரணம், சில மாதங்களாக வாடகைப் பணம் கட்டப்படாத காரணத்தினால் Land Lord Seal பண்ணி விட்டார். அதை ஒருவாறு கடையை விற்றவருடன் கதைத்துத் தீர்த்துக் கடையை ஆரம்பித்த இரண்டு நாட்களில் றோயல் வங்கி மெஷினை றோயல் வங்கி எடுத்துச் சென்று விட்டது. காரணம் றோயல் வங்கிக்கும் முன்னைய கடை உரிமையாளருக்கும் இருந்த ஒப்பந்தம் முடிந்து விட்டது. வழக்கறிஞரை ஏற்படுத்தாதன் விளைவு!

வழக்கறிஞர் ஒருவரை ஏற்படுத்தும் பொழுது புத்திசாலித்தனமாக நடப்பது நல்லது. செலவு பற்றி முற்கூட்டியே அறிந்திருப்பது நல்லது.

எனது காரியாலத்தில் இருந்து வந்த அனுபவங்களில் சில மேற்கூறியவை. ஒரு வழக்கறிஞரை ஏற்படுத்திய பின்பு, அந்த வழக்கறிஞரில் முழுமையான நம்பிக்கை இருக்க வேண்டும். எந்த நிமிடம் வழக்கறிஞரில் அந்த நம்பிக்கை கடுகளவேனும் இல்லாமற் போகின்றதோ அந்த நிமிடம் வழக்கறிஞர் தொடர்ந்து பிரதிநிதித்துவம் செய்வது சிரமமாக இருக்கும்.

மலரின் எழுத்தாளர்கள்
Our Contributors



ஜெகன் நா. மோகன்
கனடிய மூத்த பாரிஸ்டர்




யசோ சின்னத்துரை
கனடிய பாரிஸ்டர்



மனுவல் ஜேசுதாசன்
கனடிய பாரிஸ்டர்



தெய்வா மோகன்
கனடிய பாரிஸ்டர்



பொ. கயிலாசநாதன்
கனடிய பாரிஸ்டர்



நாதன் சிறீதரன்
கனடிய பாரிஸ்டர்

வருமுன் காத்த...

செய்யப்படும் சோதனையைச் செய்துகொள்ள வேண்டும். இதன் மூலம் பெண்களுக்கு ஏற்படக்கூடிய கர்ப்பப்பையில் ஏற்படும் ஒருவித புற்றுநோயை ஆரம்பத்தில் கண்டுபிடிக்கலாம். அப்படி ஆரம்பத்தில் கண்டுபிடிக்கப்பட்டால் அது முற்றாகக் குணமாக்கக் கூடிய ஒன்றாகும். பெண்களுக்கு அதிகமாக ஏற்படுகின்ற புற்றுநோய் மார்பகங்களில் ஏற்படுகின்ற புற்றுநோயாகும் (Breast Cancer). இது ஏறத்தாழப் பத்துப் பேருக்கு ஒருவர் என்ற விகிதத்தில் பெண்களுக்கு ஏற்படும் வாய்ப்பினைக் கொண்டது. இதனால் பெண்கள் குறிப்பாக 35 வயதுக்கு மேற்பட்டவர்கள் தங்கள் மார்புகளைத் தாங்களே கிரமமாகப் பரிசோதித்துக் குடும்ப வைத்தியரிடம் கேட்டு அறிந்து கொள்ளலாம். குடும்பங்களில் ஏனையவர்களுக்கு மார்புப் புற்றுநோய் இருப்பவர்கள் அல்லது கர்ப்பத்தடை மாத்திரைகள் போன்ற ஹோர்மோன்கள் (Hormones) வகையான மாத்திரைகள் பாவிப்பவர்கள் 40 வயது முதலும் ஏனையவர்கள் 50 வயது முதலும் Mamogram என்கின்ற x-கதிர் பரிசோதனையை (மமோகிராம்) ஆண்டுக் கொருமுறை செய்து வருவதனால் மார்புப் புற்றுநோய்களை ஆரம்பத்தில் அடையாளம் கண்டு சிகிச்சை பெற்றுக் கொள்ளலாம். மார்புப் புற்றுநோய்களில் சிலவகை ஆரம்ப நிலையில் கண்டுபிடிக்கப்பட்டால் பூரணமாகக் குணப்படுத்தக் கூடிய ஒன்றாகும்.

ஆண், பெண் இருவருக்குமே ஏறத்தாழ 35 வயது வரைக்கும் கல்சியம் என்ற கனியுப்பை உடம்பிலுள்ள எலும்புகளில் சேர்க்கின்ற தன்மை அதிகமாக இருக்கிறது. அதன் பின்பு உணவிலே கல்சியம் அதிகம் சேர்த்தாலும் கூட அதனை எலும்பிலே சேர்க்கக் கூடிய தன்மை படிப்படியாகக் குறைந்து போகிறது. எந்த வயதிலும் உடற்பயிற்சி செய்வது இத்தன்மையை மேலும் அதிகரிக்கிறது. எனவே சிறுவயதிலிருந்து பால், மீன் போன்ற கல்சியம் அதிகமாகக் கொண்ட உணவுகளை உட்கொண்டு வருவதும், உடற்பயிற்சி செய்து வருவதும் வயது முதிர்ந்த காலங்களில் ஏற்படுகின்ற எலும்பு கோறையாகு தன்மையையும் (Osteoporosis) அதன் விளைவுகளான கூன், எலும்பு முறிவுகள் என்பவற்றைத் தடுக்கவும் உதவுகிறது.

இலங்கையுட்படத் தென்கிழக்கு ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு, இருதய நோய் (Heart disease) சலரோகம் (Diabetes) என்பன அதிகமாக ஏற்படுகின்ற தன்மையிருப்பதனால் அவற்றின் விளைவுகளை மேலதிகப்படுத்தும் காரணங்களான புகைத்தலைத் தவிர்க்க வேண்டும். உயர் இரத்த அழுத்தத்தை (high blood pressure) 40 வயதுக்கு மேற்பட்டவர்களும். குடும்பங்களில் இருதய நோய், சலரோகம் போன்ற நோய்கள் இருப்பவர்கள் அதற்குக் குறைந்த வயதிலிருந்தே ஆண்டுக் கொருமுறை இரத்தப் பரிசோதனை மூலம் சர்க்கரை (Sugar level) கொலஸ்றோல் (Cholesterol) என்பவற்றைப் பரிசோதித்து அவற்றைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். மேலும் இருதய நோய்களைக் குறைக்கக் கூடிய உயிர்ச்சத்துகள் அல்லது விட்டமின்கள் (Vitamins) E, B_{12}, போலிக் அமிலம் (Folic acid) போன்றவற்றைப் பாவிப்பதும் நல்லது. இதுபற்றிய மேலதிக விபரங்களை உங்கள் குடும்ப வைத்தியரிடம் அறிந்து கொள்ளலாம்.

50 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கு சிறுநீர்ப்பையின் கழுத்துப் பகுதியில் அமைந்துள்ள புறொஸ்ரேற் (Prostate) சுரப்பியில் புற்றுநோய் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம். எனவே அவர்கள் ஆண்டுக் கொருமுறை மலவாயிலூடான பரிசோதனை (Rectal exam) செய்து கொள்ள வேண்டும். இப் பரிசோதனை மூலம் குடலின் ஒரு பகுதியில் ஏற்படும் புற்றுநோயைக் கண்டு கொள்ளவும் வாய்ப்புண்டு.

65 வயதுக்கு மேற்பட்டவர்கள் புளூ காய்ச்சலினால் பாதிக்கப்படாதவாறு ஆண்டுக் கொருமுறை புளூ தடுப்பூசியினையும் (Flu shot), 6-7 ஆண்டுக் கொருமுறை நிமோனியா தடுப்பூசியினையும் (Pneumonia shot) ஏற்றிக் கொள்வது நல்லது.

வருமுன் காக்கின்ற மருத்துவ நடவடிக்கைகளில் முக்கியமானவைகளை இங்கு குறிப்பிட்டுள்ளேன். இவைகளை விட மேலும் பல விடயங்களில் எங்களுடைய வாழ்வினை வளம்படுத்திக் கொள்ளக் கூடிய வைத்திய ஆலோசனைகளை உங்கள் குடும்ப வைத்தியரிடமும், சிறப்பு வைத்தியர்களிடமும் பெற்று ஆரோக்கியமான வாழ்வுக்கு வலுவான அத்திவாரமிட்டுக் கொள்ளும்படி அன்புடன் வேண்டிக் கொள்ளுகிறேன்.

பற்களுக்கு கிளிப் போடும் காலம்

இது பிரச்சனையின் அளவையும், ஒத்துழைப்பையும் பொறுத்துள்ளது. பொதுவாகக் கிட்டத்தட்ட 2 வருடங்கள் செல்லும். எலும்பையும் பற்களையும் சீர் செய்வதனால் 3 வருடங்களாவது செல்லலாம். சிறிய பல் ஒழுங்கீனத்தை ஒரு வருடமளவில் முடிக்கலாம். சிகிச்சைக் காலத்தில் பொதுவாக மாதம் ஒருமுறை adjust பண்ண வரவேண்டியிருக்கும்.

பற்களை ஒழுங்குபடுத்திய பின் Retainers எனினும் Plates பாவிக்க வேண்டும். அதாவது புதிய இடத்துக்கு அசைந்த பற்கள் நிரந்தரமாக புதிய இடத்தில் படியும் மட்டும் இதைப் பாவிக்க வேண்டும்.

புதிய நூற்றாண்டு...

நான்காவது கட்டமான பரீட்சைக்கு ஏற்றவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தது. பற்களில் சிறு சூத்தைகள் உள்ளவர்களை வலை போட்டுப் பிடிக்க வேண்டியது எங்கள் பொறுப்பாகும். இவர்களின் பற்களை x-ray எடுத்துப் பரிசோதிக்க வேண்டும். எங்கு சென்று இதைச் செய்வது என்ற பிரச்சனை ஏற்பட்டது! எம்மவர்கள் ஒருவரும் அப்பொழுது பல்வைத்தியர்களாக இருக்கவில்லை. George Brown கல்லூரியில் அனுமதி பெற்றேன். ஒருவருக்குப் படம் பிடித்துப் பார்ப்பதற்கு பல பத்திரங்களும் பல மணிநேர அவகாசமும் தேவைப்பட்டது. நான் தங்கிய இடத்திற்கு எதிரே இருந்த பல்வைத்திய நிலையத்தில் போய் ஒரு பல்வைத்தியரிடம் எனது நிலையை விளக்கினேன். அவர் அதைப் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. அதே நிலையத்தில் வேறொரு இளமையான பல்வைத்தியரை அணுகினேன். அவர் மிகவும் நட்பு முறையில் நீங்கள் தாராளமாக வந்து படம் பிடித்துப் பாருங்கள் என்றார். நான் பரீட்சைகளில் சித்தி எய்தியதும் அவரின் (Dr. Bongard) பல வைத்திய நிலையத்தில் 5 வருடங்கள் "associate" ஆக பணிபுரிந்தேன். பலர் அப்பொழுது கூறினர் உடனே தனியாக ஆரம்பிக்கும்படி. ஆனால் நான் அதைச் செய்ய விரும்பவில்லை.

இப்படிப் பல நல்ல உள்ளம் படைத்தவர்களின் உதவியால் எனது நோக்கம் நிறைவேறியது என்று சொன்னால் அது மிகையாகாது. புதிய நூற்றாண்டில் நாம் ஆற்ற வேண்டிய புதிய பணிகள் பற்றி இனிப் பார்ப்போம். பல்வைத்தியர்களாகப் பணிசெய்யும் வாய்ப்பு கிட்டிய நாங்கள் எமது பணியை மக்களுக்கு முழு மனதுடன் வழங்க முன்வர வேண்டும். எமது சமூகத்திற்கு பல வழிகளிலும் ஆதரவு வழங்கி அவர்களை உற்சாகப்படுத்த வேண்டியதும் எமது கடமையாகும்.

பல்வைத்திய சிகிச்சைகளை மேலும் நவீனப்படுத்த வேண்டியது அவசியமாகும். சேவைகள் அனைத்தும் அனைவருக்கும் சிறப்பாக வழங்கப்பட வேண்டும்.

பற்சூத்தைகள் நம்மவர்களில் பரவலாகக் காணப்படுகிறது. குழந்தைகள் பலருக்கும் இந்த நிலைமை தான். முரசு வியாதிகளால் பல நடுத்தர வயதினர் பற்களை இழக்க வேண்டியுள்ளது. இவ்விரு வியாதிகளையும் கட்டுப்படுத்த வேறு உபாயங்களைக் காண வேண்டியது அவசியமாகும்.

ஒழுங்கான பற்களையுடைய பிள்ளைகளை இப்பொழுது காண்பது அரிது. பற்களில் நெருக்கமும் வேறு பிரச்சனைகளையும் தினமும் கண்டு வருகிறேன். இவர்களின் புதிய நிரந்தரமான பற்கள் முளைக்கும் பொழுது அவற்றை வழிநடத்த வேண்டியது அவசியமாகும்.

(ரொறன்ரோ ஸ்ரார் (23.12.99), Maclean Nov.8 ஒழுங்காய் வாசித்தவர்கள் அடுத்த கட்டுரைக்குத் தாராளமாகப் போகலாம்.)

இணையம் ஒரு அத்தியாவசியமான தீங்கு

சிறார்களுக்கு அற்புதம் நிறைந்த, வித்தை காட்டும் மையமே இணையம். புதிய எண்ணக் கருக்களை ஆய்வுப் பயணம் (explore) செய்வதற்கோ, அந்நிய நாடுகள் பற்றித் தெரிந்து கொள்வதற்கோ, தம்மை ஒத்த சிறார்களுடன் உறவாடி மகிழ்வதற்கோ, சவால் விளையாட்டுக்கள் விளையாடவோ, விஞ்ஞான, தொழில்நுட்ப விபரங்கள், கலை இலக்கிய விபரங்கள் பெறுவதற்கோ உகந்த இடம் என்பது யாபேரும் அறிந்த பேருண்மை. ஒரு சின்ன விபரம் கேட்டாலும் அம்பாரம், அம்பாரமாய்த் தகவல்களைக் கொட்டித் தேவையானவற்றை எடுத்துக் கொள் என அமுதசுரபியாய் நிற்கின்றது. அலைச்சல் குறைகிறது. நேர விரயம் தவிர்க்கப்படுகிறது. பணம் மீதமாகிறது. சென்ற நூற்றாண்டில் தொழில்நுட்பவியல் முன்னேற்றத்தில் அற்புதமான சாதனையில் இணையமும் இடம்பெறுவதுடன் இந்த நூற்றாண்டில் மேலும் முக்கியத்துவம் பெறவுள்ளது என்பது உண்மையே.

சார்ந்தவர் சென்ற ஆண்டில் மாத்திரம் இது சம்பந்தமாக 92 வழக்குகள் போடப்பட்டுள்ளதாகவும், இன்னும் 90 துப்பறியப்படுகிறது எனவும், இதுவரை 24 பேர்கள் சிறையிடப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கின்றார். இவற்றில் 99 விழுக்காடு நிகழ்வுகள் ஏதோ விதத்தில் கணனி அல்லது இணையம் சம்பந்தப்பட்டுள்ளதாக மத்தியூஸ் தெரிவிக்கிறார். தம்மை அழைக்கின்ற பெற்றோர்களில் பெரும்பாலோர் கூறும் குற்றச்சாட்டு, தமது மகனோ, மகளோ இணையத்தின் மூலம் தொடர்பு ஏற்படுத்திய ஒருவருடன் பாலியலில் ஈடுபட்டுள்ளார் என்பதே ஆகும். இங்கே ஆச்சரியம் என்னவென்றால் பாலியல் ஈடுபாட்டிற்கு அங்கீகார வயது 14. எனவே, பெற்றோர் தமது 15 வயது மகள் இணையத்தின் மூலம் தொடர்பு கொண்ட 30 வயதுடைய ஒருவருடன் பாலியல் நடத்தையில் ஈடுபட்டுள்ளார் என பொலிஸிற்கு அறிவிப்பதால் பிரயோசனம் ஏதும் ஏற்படப் போவதில்லை. பொலிஸ்

தேவையானவை இரண்டே இரண்டு. அவை நுழைவனுமதிப் பெயரும் (Log On Name), கடவுச் சொல்லும் (Pass Word) ஆகும். Pokemon ஐ தம்பிக்கோ, தங்கைக்கோ காட்டிவிட்டு அண்ணனோ, அக்காவோ மெல்லச் சுண்டெலியை (Mouse) இருமுறை தட்டி உல்லாச உலகம் சென்றடைய முடியும்.

இத்தகைய காம இச்சைச் செய்திகளும், களவாடிய மென்பொருளுடன் (Software) உலாவரும் பல் இணைய அண்டவெளி (Cyber Space), வையக விரிவலை (World Wide Web) இலிருந்து தனியாக இயங்கும் விரைவு அணி நிரை (Hot Line) Microsoft Corp போன்ற பிரபல மென்பொருள் உற்பத்தியாளருக்கே பெரும் தலையிடியாய் வந்து சேர்ந்துள்ளதாம்.

அண்மையில் நடந்த ஆய்வொன்றின்படி கனடாவில் முழுமையாக 50 விழுக்காடு இல்லங்களிலே இணையம் உள்ளதாம். இது மாத்திரமல்லாது நூலகங்கள், பாடசாலைகள், தேநீர்க் கடைகளிலேயும் இருக்கவே செய்கிறது. இணையம் தேவை இல்லை எனப் பெற்றோர்கள் கூறமுடியாது. அப்படிக் கூறுவார்கள் என்றால் வருங்காலச் சந்ததிக்கு இழைக்கப்படுகின்ற பெரும் துரோகமாகவே அமையும். போகின்ற போக்கிலே மிக விரைவிலே சிறார்கள் பெற்றோர்களோ, பெரியவர்களோ இல்லாத சூழலிலே இணையத்தை உபயோகிக்கின்ற நிலை ஏற்படவே செய்யும். எனவே, பெற்றோர்கள் எதிர்நோக்குகின்ற தலையாய கடமை என்ன? பிள்ளைகள் விந்தை நிறைந்த இந்த ஊடகத்தின் உள்ளே புகுந்து தேவையான தகவல்களைப் பெற்று ஆனந்தமாய் அங்கே சஞ்சரித்து எவ்வித பாதிப்பும் மனதளவில் ஏற்படாமல் வெளியே வருவதற்கு உதவ வேண்டும்.

எப்படி உதவலாம்? ஒரே ஒரு வழிதான் உள்ளது! சிறந்த பெற்றோரியம் (Good Parenting). பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு விஷயத்திலேயும் தமது விழுமியங்கள் பற்றிப் பொறுமையுடன் பிள்ளைகளுக்கு எடுத்துச் சொல்வார்களாயின், பிள்ளைகள் தாமாகவே எது உகந்தது, எது கேடு விளைவிப்பது, ஒவ்வாதது எனத் தெரிந்து கொள்வார்கள். எனவே அவர்களை நம்பி இணையத்தை மேய (Surf or Browse) விடலாம்.

பொலிஸ் அலுவலர் மத்தியூஸ் சொல்வதிலும் சற்றுக் கவனம் எடுக்க வேண்டியுள்ளது. பெற்றோர்கள் செய்ய (மறுபக்கம் பார்க்க)

Internet is A Necessary Evil

துரதிர்ஷ்டவசமாக இணையம் சிறார்களைப் பொறுத்தமட்டிலே எந்த அளவினுக்கு உபயோகமுள்ளதாக அமைகிறதோ அதே அளவினுக்கோ அல்லது அதற்கும் கூடுதலாகவோ அபாயகரமானதாகவும் அமையலாம். "ஒய்யாரமான கொண்டை அதன் உள்ளே இதுப்பது ஈரும் பேனும்" என்பது போன்று ஆடம்பரமான வெளித் தோற்றத்திற்குக் கீழே அயோக்கியத்தனம் மிக மலிவாகவே காணக்கூடியதாகவுள்ளது. இளம் சிறார்களைக் கெடுக்கக்கூடிய விரச இலக்கியம், ஆபாச வரைபுகள், சித்திரங்கள், வர்ணனைகள் மலிவாகவே கிடைக்கின்றன. Winnie the Pooh அல்லது Pokemon போன்ற சிறார்களுக்குரிய பதங்களைக் கரவின்மையுடன் மேயச் செல்லும் சிறார்கள் எதிர்பார்க்காமலேயே வலையத்திலே (Website) காமவெறியைத் தூண்டக்கூடிய கேந்திரங்களுக்குள்ளே புகும் வாய்ப்பு நிறையவே உண்டு. இன்னும் ஆச்சரியமானது உங்கள் 12 வயதுப் பெண்குழந்தை, இரையினைக் கவ்வத் தயாராய் இருக்கும் கிழட்டுப் புலி போன்ற 40 வயதுடைய காமவெறியன் ஒருவனுடன் இன்னுரையாடலில் (Chat Room) ஈடுபடலாம்.

ஒன்ராறியோ மாகாண பொலிஸ் துப்பறியும் அதிகாரியான பொப் மத்தியூஸ் (Bob Mathews) சிறார்கள் சம்பந்தமான ஆபாச சித்திரம், வருணனை (Pornography) சம்பந்தமான குற்றவியல் துறையினைச்

பொ. கனகசபாபதி

கையறா நிலையில் உள்ளது என்கிறார். காமவெறியர் (Pedophiles) மிகவும் கைதேர்ந்தவர்கள். ஒரு சிறாரின் ஆவலை எவ்விதமாகத் தூண்டலாம், எந்த எந்த யுக்திகளைக் கையாண்டால் அவர்களைச் சுலபமாக ஆட்கொள்ளலாம் என்பதை அவர்களது அனுபவ அறிவினால் நிறையவே தெரிந்து வைத்துள்ளனர். அவர்களுக்கு ஒரு சூதுவாதும் அறியாத வளரிளம் பருவப் பெண்ணோ, ஆணோ அகப்பட்டால் போதும். அவர்களுக்கு ஆறாவது நுண்ணறிவும் உள்ளதாம். அதன் மூலம் இலகுவாய் வயப்படுத்தக் கூடிய ஒரு வளரிளம் பருவத்தவரைச் சுலபமாகவே கண்டு கொள்வார்களாம். சூதறியா இளம் சிறார்களுடன் பேசும் பொழுது தம்மை இளமை மிக்க ஆணழகராக, அறிவு ஜீவியாகக் காட்டிக் கொள்வார்கள். சிறிது சிறிதாக அவர்களைக் கவர்ந்து இறுதியாகத் தம்மைப் புலப்படுத்துகையில் காலம் கடந்து விட்டதாகி விடும்.

The Phantom Menale, The Blair Witch Project போன்ற போதையூட்டும் திரைப்படங்களும், கிளர்ச்சி தரக்கூடிய Quake II, DOOM III போன்ற வீடியோ விளையாட்டுக்களும் மிகச் சுலபமாகவே தகவல் இறக்கம் (Down Loading) செய்ய முடியும். ஒரு சிறாருக்கு இதற்குத்

சிறந்த பெற்றோரியம் தேவை!

வேண்டிய மிக முக்கியமான செயல், கணனியை எல்லோரும் அவதானிக்கக் கூடிய கேந்திர தானத்தில் (Central Location) வைப்பது ஆகும். தாங்கள் துப்புத் துலக்கலோடு சம்பந்தப்பட்ட பெரும்பான்மையான சிறார்கள் காம இச்சை தூண்டும் (Pornography) நிகழ்வுகளில், கணனிகள் ஒன்றில் சிறார்களின் அறைகளில் அல்லது கீழ்த்தளத்தில் (Basement) காணப்பட்டது என மத்தியூஸ் கூறுகிறார்.

இணையத்தினைப் பிள்ளைகள் உபயோகிக்கின்ற பொழுது வடிகட்டித் தேவையற்றவையைத் தடுப்பதற்குரிய மென்பொருள் தயாரிப்புகள் விற்பனையில் உள்ளன. Cyber Patrol, Cyber Sitter, Watch Dog போன்றவை சில. இவை கணிசமான விலை என்பதுடன் மிகவும் தேவையான தகவல்களையும் தடைசெய்து விடுகின்றன. (Breast) மார்பு தடை செய்யும் பொழுது, மார்புப் புற்றுநோய் சம்பந்தமான தகவல்களும் தடை செய்யப்பட்டு விடுகின்றன.

The U.S. National Centre For Missing And Exploited Children (www.missingkids.org) உங்கள் பிள்ளைகளைப் பாதுகாப்பதற்குரிய பின்வரும் ஆலோசனைகளைத் தருகிறது. எமது பிள்ளைகள் மோசமில்லை என்று உதாசீனமாயிருப்பதிலும் பார்க்க, வருமுன் காப்பது நல்லது அல்லவா? நான் எனது மகளைத் தான் கேட்டேன் இணையத்திலே Pornography க்கு எப்படிச் செல்வது என. அவர் சிறிது காட்டித் தந்தார். எனக்கு ரசிக்கவில்லை(!). நான் வேண்டுமென்றால் நாளை முழு விபரமும் எடுத்துத் தருகிறேன் எனது தோழி ஒருவருக்கு நிறையவே விபரம் தெரியும் என்றார்.

வன்முறைக் குறிப்புகள். உங்கள் பிள்ளைகளுக்குச் சொல்லி வையுங்கள்.

1. இணையத்தில் வருகின்ற எவருக்கேனும் தம்மைப் பற்றிய அல்லது குடும்பம் பற்றிய எந்த விபரமும் கொடுக்கக் கூடாது என்பதோடு, பெற்றோர் இல்லாமல் எவரையும் சந்திப்பதற்கு சம்மதிக்கக் கூடாது.

2. உங்கள் பிள்ளைகள் இணையத்தில் இருக்கும் பொழுது அவர்களுடன் சிறிது நேரம் செலவிடுங்கள். அவர்கள் தொடர்பு கொள்ளும் என்றும் இணைந்த (On Line) செயற்பாடுகளை விளக்குமாறு கேளுங்கள். (நம்மில் பலருக்கு எமது பிள்ளைகளின் செயற்பாடுகள் ஆச்சரியமானவையாகவும் புளகாங்கிதம் கொள்ளக்கூடியவையாகவும் அமைகின்றன என்பது உண்மையே. "அவன் மிக வேகமாகச் செய்கிறான், எனக்கு ஒன்றும் புரியவில்லை" என்பது ஒரு தாயின் மறைமுகமாகத் தன் மகனின் தேர்ச்சியை மெச்சும் ஆதங்கம். ஆனால் அவனை ஒரே ஒருமுறை பொறுமையாக எனக்குக் காண்பி என்று கேட்கலாம் தானே)

3. அச்சுறுத்தக்கூடிய, கீழ்த்தரமான, பூடகமான, உள வசியம் சார்ந்த . செய்திகளுக்கு பதில் தரத் தேவையில்லை என்பதுடன் அத்தகைய செய்திகள் வருகின்ற போது உங்களுக்குத் தெரிவிக்குமாறும் பணியுங்கள்.

4. அவர்கள் கணனி உபயோகிப்பதற்கு விதிமுறை வகுத்து விடுங்கள். நேர எல்லை மிக முக்கியமானது.

5. அவர்கள் இரவினிலே என்றும் இணைந்த (On Line) சேவைகளை எவ்வளவு நேரம் வரை உபயோகிக்கின்றார்கள் என்பதை அவதானியுங்கள். அகாலங்களிலே உபயோகித்தால் பிரச்சனை உள்ளது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

6. உங்கள் பிள்ளைகளின் நண்பர்களைத் தெரிந்து கொள்வது போன்று இணையத்தில் வரும் என்றும் இணைந்த நண்பர்களையும் (On Line Friends) தெரிந்து கொள்ள முயலுங்கள்.

7. உங்கள் பிள்ளை உபயோகப்படுத்தும் என்றும் இணைந்த தேவைகள் எவை எனத் தெரிந்து கொள்ளுங்கள். தேவையேற்படின் அவைகளைத் தடை செய்யும் முறைகள் உள்ளனவா என அறிந்து வையுங்கள்.

8. இணையத்தை உபயோகிக்கத் தெரியாவிட்டால் இணையத்துள் நுழைவது (Log) எப்படி என உங்கள் பிள்ளைகளிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். "சேய்க்கு வரும் நோய்க்குத் தாய் மருந்து உண்பது போல்" என பழைய பாடல் ஒன்று கேட்டிருப்பீர்கள். அதே போல் பிள்ளையைப் பாதுகாப்பதற்காக இணையம் பற்றி கல்வி புகட்டும் ஒரு இடத்தில் சிறிது காலம் ஓய்வெடுங்கள். இணையத்தில் விற்பன்னராகி விடுவீர்கள்.

நமக்கு இருக்கும் குறைபாடு நமது இளம் பிள்ளைகளிலும் பார்க்க நமது அறிவுத் திறன்கள் குறைவாக இருப்பதே. அதை ஓரளவிற்கேனும் நாம் ஈடு செய்தல் அவசியம். தமிழிலும் கணனி இணையம் பற்றிய நூல்கள் உள்ளன. "பாமரனுக்குக் கணிப்பொறி" என பேராசிரியர் இராதாகிருஷ்ணன் எழுதியது எளிமையானதுடன், நாவல் ஒன்று வாசிக்கையில் ஏற்படக்கூடிய சுவாரசியத்தையும் கொண்டது. சுஜாதாவின் "வீட்டுக்குள் வரும் உலகம்" இணையம் பற்றி நிறையவே தகவல்கள் தருகிறது. இவை தவிர இங்குள்ள பல அறிஞர்கள் வானொலி, பத்திரிகை மூலம் நிறையவே எழுதிக் கொண்டிருக்கிறார்கள். கனடா இராஜ்மோகன் என்பவரின் குறுந்தகடு (Compact Disc) கன்னியா குமரியிலே 1.01.2000 அன்று நடந்த வள்ளுவர் சிலை திறப்புவிழாவில் வெளியிடப்பட்டுள்ளது. ஆகவே நிறைய வாய்ப்புகள் உள்ளன வளப்படுத்துதல் உங்களைச் சார்ந்தது.

இங்குள்ள கட்டுரையாளர்களுக்கு ஒரு வேண்டுகோள். ஆளாளுக்குப் புதிய சொல்லாக்கங்களை உபயோகிக்காது பொதுமைப்பாடுடைய சொற்களை கலைச் சொற்களுக்கு உபயோகியுங்கள். எழுத்துச் சிக்கனமும் அவசியம். Internet என்பதற்கு 'இணையம்' போதுமே, சிலர் 'தொடர்வலையாக்கம்' என உபயோகிக்கிறார்கள்.

நான் உபயோகித்த கலைச் சொற்கள் சுஜாதா, மற்றும் சிங்கப்பூரில் உபயோகிக்கப்படுபவை. இவை சிறந்தவை என்று அர்த்தமில்லை. ஒரு பொதுமைப்பாடு கருதியே உபயோகித்துள்ளேன். மேலும் 'இணையம் 99'ல் நியமிக்கப்பட்ட அறிஞர் குழுவொன்று இணையத்தில் வலைப்பக்கம் (Web Page) ஒன்றினை உருவாக்கி கணனிக் கலைச் சொற்களைத் தந்துள்ளது. அவற்றைக் கட்டுரையாளர்கள் உபயோகிக்கலாம். சிறந்த கலைச் சொற்கள் தெரிந்தால் அதையும் தெரிவிக்கலாம்.

கனடாவில் நண்பர்கள் விசைப் பலகை (Key Board) கூடத் தமிழில் உருவாக்கி விட்டார்கள். இணையத்தில் நுழைந்த முதல் இந்திய மொழி தமிழ் என்பதிலும் எமக்குப் பெருமை. ஆனால்! ஆங்கிலத்தில் உள்ள எல்லா மென்பொருட்களும் ASCII என்ற ஒரே உள் குறியீட்டு (Coding) முறையினைப் பயன்படுத்துகின்றன. அதனால் தான் உலகு எங்கும் உள்ள ஆங்கிலம் தெரிந்த அத்தனை பேராலும் ஆங்கில இணையத்தைச் சுலபமாகப் பயன்படுத்த முடியும். இத்தகைய நியமப்படுத்தப்பட்ட குறியீட்டு முறை (Standardised Coding) தமிழில் இல்லாமையால் இணையத்தில் தமிழ் நுழைந்தும், எல்லாம் இருந்தும் ஒருவரால் எல்லாம் தெரிந்து கொள்ள முடியாத அவல நிலை. ஒவ்வொருவரும் தமக்குப் பிடித்த முறையிலே மென்பொருளை தயாரித்து விட இன்று 350க்கும் மேலான மென்பொருட்கள் தமிழில் உலா வருகின்றன. சென்ற வருடம் பெப்ரவரி மாதத்திலே 'தமிழ் இணையம் 99' என்ற மகாநாடு தமிழகத்தில் நடைபெற்றது. நம்மவர்கள் ஒருவரும் பங்குபற்றாதது துரதிர்ஷ்டமே. எனினும் 'கலைஞர் 99' என்ற மென்பொருள் பின்னர் உருவாக்கப்பட்டுள்ளது. எனவே இனிமேல் மென்பொருள் தயாரிப்பவர்களோ விசைப்பலகை உருவாக்குபவர்களோ அதனை நியமமாக வைத்துச் செய்வார்களானால் தமிழ் இன்னும் வாழும்! வளரும்!

Beginning Computer Programming

Valavan Manohararajah

Have you ever wondered about the technology that makes your favourite computer program work? From the moment you start your computer there is a program of some sort running on the hardware you have purchased. Most computers on the planet run a version of Microsoft's popular operating system called Windows. It took several programmers, several years to design that program. There is a great deal of complexity in computer program design and many of you might be curious about the design process.

At a basic level the microprocessor, also referred to as the central processing unit (CPU), is the brains inside the computer. It continually processes a stream of instructions - a program's execution on your computer is the result of its instructions being executed by the microprocessor. The microprocessor can only execute very simple instructions. Typically it is capable of executing arithmetic, logic, data movement and program control instructions. The instructions reside in memory and are encoded as numbers stored in the binary format. Just as human beings use the decimal number system (base 10) to represent numbers, computers use the binary number system (base 2) for number representation. Computers are limited to base 2 operation because they can only represent two values concretely: 1/on and 0/off.

Consider the problem of computing b^2 - 4ac. Many of you may recognize this formula as a small segment within the quadratic equation. One possible instruction sequence that accomplishes the required activity is illustrated in Table 1. The instructions in the table are written in assembly language. In the instruction sequence, it was assumed that r0 holds the value of b, r1 holds the value of a and r2 holds the value of c. The assembly language sequence is then converted into a binary sequence before being executed by the processor. For example, instruction I would be converted into the binary instruction 0001011000000000. The reader should not concern himself/herself with the details of how the binary instruction was obtained but should realize that a translation exists between assembly language and the binary format of the microprocessor. Note the complications involved in computing a simple expression like b^2 - 4ac. The complications arise from the fact that the processor is only capable of executing simple instructions.

	Instruction	Meaning
1	`mov r0, r3`	Transfer a copy of the value in r0 into r3
2	`mul r0, r3`	Multiply r0 and r3 and place the result in r3
3	`mov #4, r4`	Put the value 4 into r4
4	`mul r1, r4`	Multiply r1 and r4 and place the result in r4
5	`mul r2, r4`	Multiply r2 and r4 and place the result in r4
6	`sub r4, r3`	Subtract r4 from r3 and place the result in r3

Table 1: An assembly language instruction sequence for b^2 -

```
int gcd(int u, int v)
{
  int t;
  while (u > 0) {
    if (u < v) {
      t = u; u = v; v = t;
    }
    u = u - v;
  }
  return v;
}
```

Figure 1: C code that determines the GCD of two numbers u and v.

Assembly language is the only language that is directly understood by the microprocessor. By "directly" it is meant that for each assembly language instruction, the microprocessor will execute a single binary sequence representing that instruction. Due to the complexity of programming the microprocessor using assembly language, most programmers resort to a higher level language. One popular high level language is "C". In C, the task of computing b^2 - 4ac is as easy as writing "result = b*b - 4*a*c;". The task of translating a program written in a high level language such as C into the binary format required by the microprocessor is carried out by a tool called the compiler.

a small section of code written in C is illustrated in Figure 1. The code in the figure is used to compute the greatest common divisor (GCD) of two integers u an dv. The method is based on an old idea from the famous mathematician Euclid. Euclid's idea is that the greatest common divisor of u and v is the same as the greatest common divisor of v and u - v. A detailed explanation of how the code works is beyond the scope of this expository article. However, a talented reader may be able to pick out how the code implements Euclid's idea. When compiled, the section of code illustrated would translate into a sequence that would be 25-30 instructions long.

Today, most program design is done in one of two languages: C or C++. C++ is an extension to the C language in order to facilitate new ideas in program design. Java is a relatively new language but enjoys a large following among those interested in writing web applications. For those interested in learning to program, C is a good language to start with. It is relatively easy to pick up and the programming style is not that hard to master. Once C has been mastered,the natural progression is to learn C++. Some universities have recently made a change in their programs to teach Java as the first programming language. Previously, most universities had taught C as the first language. Java is not that hard to pick up, however, the object-oriented programming style employed by Java takes some time to master.

The important concept in all of this is program design. When one is given a problem to be solved using the computer, program design deals with the details of constructing a program that solves the problem. The program can be expressed in one of the many computer languages available, however, the design process is the same for most languages. A computer programmer's challenge is to express a solution to the difficult problem using the simple building blocks that all computer languages provide. This is a skill that is only learnt through practice. As a computer language is being learnt, the student will develop this skill by designing programs in that language.

இலத்திரனியல் வர்த்தகம் (e-commerce) - ஒரு கண்ணோட்டம்

கலாநிதி
த. வசந்தகுமார்


சென்ற ஆண்டு கம்பியூட்டர் உலகில் மிகவும் பரபரப்பாகப் பேசப்பட்ட விடயம் Y2K! இந்த ஆண்டு E2K! ஆம்! தற்பொழுது பலரின் கவனத்தை ஈர்த்திருப்பது மட்டுமல்ல, இனி வருங்காலங்களில் வர்த்தகத் துறையில் புதியதொரு சகாப்தத்தை உருவாக்கவிருப்பதுமே E-Commerce, Electronic Commerce என்றழைக்கப்படும் இலத்திரனியல் வர்த்தகமாகும். பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்காட்சி போன்ற இன்னோரன்ன பல ஊடகங்களினால் தங்கள் உற்பத்திப் பொருட்களை விளம்பரஞ் செய்பவர்கள், தங்களுடைய தொலைபேசி இலக்கம், விலாசம் என்பவற்றிற்குப் பதிலாக, web site address இனைப் பாவிக்கும் வழக்கம் அண்மைக் காலங்களில் பெருகிக் கொண்டு வருவதும் இதற்கொரு சான்றாகும்.

வெகு வேகமாக வளர்ச்சியடைந்து வரும் கம்பியூட்டர் Network துறையினதும், தொலைத் தொடர்புச் சேவை (Telecommunications) யினதும் துரித தொழில்நுட்ப வளர்ச்சியே இந்த இலத்திரனியல் வர்த்தகத்திற்கு வித்திட்டது எனலாம்.

உற்பத்திப் பொருட்களினதும், சேவைகளினதும் செலவுகளைக் குறைத்து, குறுகிய காலக்கிரமத்தில், தரமான சேவைகளை, உலகளாவிய ரீதியில் வழங்குவதே இந்த e-commerce இனுடைய நோக்கமாகும். பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கப்பால், உலகின் பல்வேறு மூலை முடுக்குகளிலுமுள்ள பாவனையாளர்களையும், விற்பனையாளர்களையும், உற்பத்தியாளர்களையும், வங்கிகளையும், போக்குவரத்துச் சாதனங்களையும் உங்கள் வீட்டிலுள்ள ஒரு கம்பியூட்டர் மூலம் இணைத்து, உங்கள் வீட்டு வாசற்படிக்கு, நீங்கள் விரும்பிய பொருட்களை வரவழைக்கும் கைங்கரியத்தைச் செய்வது இந்த இலத்திரனியல் வர்த்தகமே!

இத்துறையைப் பற்றி, தற்போது அதிகமாகப் பிரஸ்தாபிக்கப்பட்டாலும், இந்த இலத்திரனியல் வர்த்தகமானது கடந்த 20 வருடங்களுக்கு மேலாகப் பாவனையில் இருந்து வருகின்றது. குறிப்பாக, 1970ம் ஆண்டுகளின் பிற்பகுதியில் அறிமுகஞ் செய்யப்பட்ட Electronic Data Interchange (EDI), Electronic Funds Transfer (EFT), Credit Cards என்பனவும், 1980ம் ஆண்டளவில் அறிமுகஞ் செய்யப்பட்ட Telephone Banking என்பனவும் இலத்திரனியல் வர்த்தகத்தின் பிறிதொரு வடிவங்களே! அப்படியாயின், இத்துறை இப்போது மட்டும் ஒரு பாரிய தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு என்ன காரணம் என்பது நியாயமான கேள்வியே! இதற்குரிய பதிலும் இல்லாமலில்லை. இந்தப் பாரிய மாற்றத்தை ஏற்படுத்திய பெருமை Internet ஐயே சாரும்! ஆம்! EDI தொழில்நுட்பம் அறிமுகஞ் செய்யப்பட்ட கால கட்டங்களில், Network தொடர்பை உருவாக்குவதற்கும், அதற்குத் தேவையான கம்பியூட்டர் சம்பந்தமான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கும், பாரிய முதலீடு தேவைப்பட்டது. இதற்கான செலவீனங்களைத் தாங்கக்கூடிய சக்தி, வங்கி போன்ற நிறுவனங்களுக்கே இயலுமாகையினால் இது பல காலமாக பாரிய நிறுவனங்களின் சொத்தாகவே கருதப்பட்டு வந்தது. Internet இன் குறைந்த செலவும், துரித வளர்ச்சியும் இந்த நிலைக்கு முற்றுப் புள்ளி வைத்தது. அதாவது பாரிய நிறுவனங்கள், பல்லாயிரக்கணக்கான பணத்தை முதலீடு செய்து, தங்களுக்கென Network அமைத்து, அதன் மூலமாக வர்த்தகஞ் செய்யும் முறைக்கு ஆப்பு வைத்து, அதிலும் பார்க்கப் பரந்த, உலகளாவிய Network இற்கு மிகவும் குறைந்த முதலீட்டுடன் காலடி எடுத்து வைக்க வழிவகுத்ததே இந்த Internet!

சுருக்கமாகக் கூறப் போனால், உங்கள் வீட்டில் ஒரு கம்பியூட்டர் இருந்தால் அதற்கு மாதமொன்றிற்கு ஏறக்குறைய 10 டாலர் மட்டில் செலவு செய்து ஒரு Internet Service Provider (ISP) மூலமாக உலகை வலம் வர வைத்ததே இந்த Internet தொழில்நுட்பம்! இத் தொழில்நுட்பத்தின் விஸ்தரிப்பே இலத்திரனியல் வர்த்தகமாகையால், Internet இன் அடிப்படைகளை அறிவது நன்மை பயக்கும். கீழ்வரும் படம் இதன் செயற்பாடுகளை மிகவும் எளிய முறையில் விளக்குகின்றது.




HTML (Hyper Text Markup Language) போன்ற விசேட மொழிகளைப் பாவித்து எழுதப்பட்ட documents, web server இல் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. பாவனையாளர்கள் Browser என்னும் Software பாவிப்பதன் மூலம், தேவையான தரவுகளையும், தகவல்களையும் Server இடம் கோரும் பட்சத்தில் அவை அனுப்பி வைக்கப்படுகின்றன. Web Servers, Browser ஆகியவற்றின் தொடர்புச் சாதனமாக HTTP (Hyper Text

இலத்திரனியல் வர்த்தகம் (e-commerce) - ஒரு கண்ணோட்டம்


Transfer Protocol) உம், போக்குவரத்துச் சாதனமாக Transmission Control Protocol (TCP), Internet Protocol (IP) என்பனவும் பாவிக்கப்படுகின்றன. இந்த Network உடன், பாரிய அளவிலான தரவுகளைச் சேகரிப்பதற்கு SQL Server, Oracle Server போன்றவற்றையும், வங்கிப் பரிமாறல்களுக்கான Server களையும் பொருத்தமான முறையில் இணைத்து பாதுகாப்பான முறையில் Electronic Payment செய்யும் முறையையும் சேர்ப்பதன் மூலம் இலத்திரனியல் வர்த்தகம் நடத்தப்படுகின்றது. பின்வரும் படம் இலத்திரனியல் வர்த்தகத்தின் அடிப்படைச் செயற்பாடுகளை எளிய முறையில் விளக்குகின்றது.

இலத்திரனியல் வர்த்தகத்துறையில், இந்த Server கம்பியூட்டர்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. அறிவு ஜீவிகளின் முதலீடுகள் (Intellectual Capital) இங்குதான் சேமித்து வைக்கப்படுகின்றன. பல்லாயிரக்கணக்கான பாவனையாளர்களின் கோரிக்கைகளும், ஒரே சமயத்தில் இங்கு கையாளப்படுகின்றன. இந்த Server கம்பியூட்டர்கள் ஒரு நாளில் 24 மணித்தியாலங்களும், வாரத்தில் 7 நாட்களும், வருடத்தில் 365 நாட்களும் தொடர்ந்து வேலை செய்து கொண்டிருப்பதனால், சிறந்தவொரு கம்பியூட்டரைப் பாவிப்பது விரும்பத்தக்கது.



Electronic Payment

இலத்திரனியல் வர்த்தகத்துறையிலே, தேவையான தரவுகளை, உற்பத்திப் பொருட்களை, சேவைகளை வழங்கும் போது, அதற்குத் தேவையான பணத்தைப் பெறுவதற்கு, Electronic Payment என்றழைக்கப்படும் Digital Currencies, Credit Cards, Electronic Cheques ஆகியவை பாவிக்கப்படுகின்றன. உதாரணமாக Credit Card ஐ எடுத்துக் கொண்டால், பாவனையாளருடைய Credit Card number, அது காலாவதியாகும் மாதம், ஆண்டு போன்ற முக்கிய தகவல்கள் இந்த Network மூலம் அனுப்பி வைக்கப்படுகின்றன. சாதாரணமாக, Credit Card நம்பர்களை தொலைபேசி மூலமாகவேனும் கொடுக்க வேண்டாமென்று எச்சரிக்கை செய்கின்ற இன்றைய காலகட்டத்தில், பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் பாவிக்கின்ற Internet ஊடாக இந்த Credit Card மூலம் கொடுப்பனவு செய்வது எவ்வளவு தூரம் பாதுகாப்பாகும் என்பது போன்ற பல கேள்விகள் எழுவது நியாயமானதே! Credit Card விபரங்களை உங்கள் கம்பியூட்டர் பெற்றுக் கொண்ட பின்பு, அவை தொழில்நுட்பத்தைப் பாவித்து வேறு விதமாக மாற்றப்பட்டு (Encryption or Secret Codes), தொலைதொடர்புச் சாதனங்களினூடாகக் குறிக்கப்பட்ட Web Server ஐ அடைந்து, பின்னர் வங்கிகளுடன் தொடர்பு கொள்கின்றது. இந்தக் கொடுப்பனவு விபரங்கள் Internet போன்ற பொது ஊடகங்களினூடாகச் செல்லும் போது, கம்பியூட்டர் மொழியில் Hackers என்றழைக்கப்படுகின்ற விஷமிகள் தங்கள் தொழில்நுட்பத் திறமையினால் இந்த விபரங்களைப் பெறுவதைத் தடைசெய்வதற்கு encryption முறை பெரிதும் உதவுகின்றது. இவற்றின் ஒரு முறையைக் கீழேயுள்ள படம் விபரிக்கின்றது.



இதனை விட, மேலும் பல பாதுகாப்பு முறைகளும் பாவிக்கப்படுகின்றன. குறிப்பாக இலத்திரனியல் வர்த்தகத்துறையில், பாதுகாப்பான முறையில் Credit Card இனைப் பாவிப்பதற்காக, Visa & Master Card நிறுவனங்களினால், 1996ம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டதே Secure Electronics Transaction (SET) எனப்படும் Protocol (விதிமுறைகள்). இதனை இன்று Microsoft, Netscape, IBM போன்ற நிறுவனங்களும் பாவிக்கின்றன. அத்துடன் வங்கிகளைப் பொறுத்த மட்டில், பாதுகாப்பை மேன்மேலும் உறுதிப்படுத்துவதற்காக, அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு போன்ற உயர் பாதுகாப்பு நிறுவனங்கள் உபயோகிக்கும் CMW+ என்ற Trusted Operating Systems போன்றவைகளைப் பாவிக்கின்றன. அத்துடன் Firewalls என்ற முறையைப் பாவித்து, Internet பாவிக்கும் எல்லாப் பாவனையாளர்களையும் வங்கியின் Network இனுள் அனுமதிக்காது, தேவையான

இலத்திரனியல் வர்த்தகம் (e-commerce) - ஒரு கண்ணோட்டம்

பாவனையாளர்களை, அவர்களுடைய அடையாளங்களை உறுதிப்படுத்திய பின்னர் அனுமதிக்கும் விசேட வழிமுறைகளையும் கையாளுகின்றன.

துரிதகதியில் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கும் இந்த இலத்திரனியல் வர்த்தகமானது சட்டத்துறை, சுங்கத்துறை, வரித் திணைக்களம் போன்ற பல துறைகளுக்கு, சவால்கள் என்று கூறுவதை விட, பல புதிய 'தலையிடிகளை'த் தோற்றுவித் திருக்கின்றதென்றே கூறலாம். உதாரணமாக, பிரதி செய்யும் உரிமையை (Copyright) எடுத்துக் கொள்வோம். இன்று ஏறக்குறைய, 30 வீதமான Software விற்பனைகள், e-commerce மூலம் நடத்தப்படுகின்றன. ஆனால் Internet மூலமாக ஒருவர் பணஞ் செலுத்தி, அவருக்கு மட்டும் உரிமையானதாக down load செய்யப்படும் file ஆனது, அவர் விரும்பியோ, விரும்பாமலோ அதனுடைய பிரதிகள் கம்பியூட்டரில் ஆங்காங்கே இருக்கத்தான் செய்கின்றன.

1. Deleted but not erased copies: கம்பியூட்டர் Hard disk இலிருந்து ஒரு file இனை delete பண்ணினாலும் அது உடனடியாக erase பண்ணப்படுவதில்லை. இதைப் போலவே e-mail programs, down load பண்ணப்படும் போது ஒரு பிரதியை Server இல் வைத்திருப்பதும், e-mail அனுப்பிய பின்பும் அதனுடைய ஒரு பிரதி தொடர்ந்தும் அந்த folder இல் அழிக்கும் வரை இருப்பதும், கம்பியூட்டர் தொழில்நுட்பத்தைப் பொறுத்த மட்டில் தரவுகளை இழக்காமலிருப்பதற்காக எடுக்கப்படும் முன்னெச்சரிக்கையான நிகழ்வாகத் தோன்றினாலும், சட்டத்துறையைப் பொறுத்த மட்டில் பிரதியாக்கம் செய்யும் உரிமையை மீறும் செயலாகக் (Copyright Violation) கருதுகின்றார்கள்.

2. Web Cache Copies: Web Site இனை Computer Browser மூலம் அணுகும் போது, நீங்கள் சென்றடையும் Web Page தானாகவே (automatically) cache என்னும் memory இல், அழிக்கப்படும் வரை அல்லது குறிக்கப்பட்ட நேரம் வரை சேமித்து வைக்கப்படுகின்றன.

வரித் திணைக்களத்தைப் பொறுத்தமட்டிற் கூட இந்த இலத்திரனியல் வர்த்தகம் பல சிக்கல்களைத் தோற்றுவித்திருக்கின்றது. பூகோள ரீதியாக நடத்தப்படும் இந்த வர்த்தகத்தில் உலகின் பல பாகங்களிலிருந்தும் பொருட்கள் கொள்வனவு செய்யப்படலாம்; அல்லது விற்கப்படலாம். ஆனால் ஒவ்வொரு நாட்டிலும் கையாளப்படும் வரிமுறைகளோ, நாட்டுக்கு நாடு வித்தியாசமானவை. உதாரணமாக, கனடாவைப் பொறுத்த மட்டில் GST & PST; USA, இலங்கை, இந்தியா, UK போன்ற நாடுகளைப் பொறுத்த மட்டில், விற்பனை வரிகள் வித்தியாசமானவை. ஆகவே நாங்கள் இலத்திரனியல் வர்த்தகம் செய்யும் போது, வரி கட்ட வேண்டுமா, அல்லது, யார், யாருக்கு, எங்கே, எப்போது, எந்த அளவு வரிகட்ட வேண்டுமென்பது கேள்விக்குறியே!

சுருக்கமாகக் கூறப் போனால், இலத்திரனியல் வர்த்தகம் வளர்ந்து வரும் வேகத்திற்கு, சட்டத் திணைக்களம், வரித் திணைக்களம் போன்றவைகளின் வேகம் ஈடு கொடுக்க முடியவில்லை என்பது கண்கூடு. இது நாளடைவில் புதிய பல பிரச்சனைகளைத் தோற்றுவிக்கக் கூடும் என்று கருதுவதிலும் தப்பில்லையென்றே கூறலாம்!

இந்த இலத்திரனியல் வர்த்தகமானது, பாவனையாளர் - விற்பனையாளர்களுக்கிடையே வளர்ந்து வரும் வேகத்தை விட, வர்த்தக நிறுவனங்களுக்கிடையே (Business-to-Business) மிகவும் வேகமாக வளர்ந்து வருகின்றது.

General Electric (GE) தொழில் நிறுவனத்தின் C.E.O ஆகிய Jack Welch என்பவர், தங்களது நிறுவனம் இலத்திரனியல் வர்த்தகத்திற்கு முன்னுரிமை வழங்குவதுடன், இன்னும் 18 மாத காலத்திற்குள் தங்களுடைய வர்த்தகப் பங்காளிகள் (Business Partners) Internet மூலம் தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாவிடின் தாங்கள் தொடர்ந்து அவர்களுடன் வர்த்தகஞ் செய்ய முடியாதெனப் பகிரங்கமாகக் கூறியுள்ளார்.

December 22, 1999, Toronto Star பத்திரிகைச் செய்தியின் படி, BCE Emergis என்னும் ஒரு பாரிய தொலைத் தொடர்புச் சேவை நிறுவனமானது, கலிபோர்னியாவில் அமைந்துள்ள Ariba என்னும் Software தயாரிக்கும் நிறுவனத்திடம், கனடாவிலேயே முன்னணி வகிப்பவைகளில் ஒன்றாகத் திகழக் கூடிய ஒரு e-commerce market place ஐத் தயாரிக்கும் பணியைக் கையளித்துள்ளனர். இதனுடைய முதலாவது பாவனையாளர் Bell Canada என்பதும், ஆரம்பித்த 6 மாதங்களினுள் நான்கு பில்லியன் டாலர்கள் பெறுமதி வாய்ந்த வருடாந்தக் கொள்வனவுகள் On-line ஆக மாற்றப்படுமெனவும் அப்பத்திரிகைச் செய்தி மேலும் தெரிவிக்கின்றது. இதே போலவே, Toronto Dominion Bank ஆனது, Commerce One எனப்படும் Software தயாரிக்கும் நிறுவனத்துடன் இணைந்து இத்தகைய முயற்சிகளில் ஈடுபட ஆரம்பித்துள்ளது. இவைகள் தவிர இன்னும் பல பிரபல்யமான நிறுவனங்களும் இதே வழியைப் பின்பற்ற ஆரம்பித்துள்ளன. உலகளாவிய ரீதியில், Busines-to-Business இலத்திரனியல் வர்த்தகத்தைப் பொறுத்த மட்டில், 1999ம் ஆண்டின் எண்ணிக்கையாகிய 700 Billion டாலரிலிருந்து இன்னும் நான்கு வருடங்களில், அதாவது 2003ம் ஆண்டளவில் இரண்டு Trillion டாலர்களை எட்டிப் பிடிக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

அடுத்தபடியாக, விற்பனையாளர்/பாவனையாளர்களுக்கிடையேயான வர்த்தக முறையிலும் இந்த இலத்திரனியல் வர்த்தகமானது பாரிய மாற்றங்களை ஏற்படுத்துமென அஞ்சப்படுகிறது. இதனை On-line retailing அல்லது e-tailing என்று சுருக்கமாகக் குறிப்பிடுகின்றார்கள். சாதாரண வியாபார நிறுவனங்களை எடுத்துக் கொண்டால், அது எந்த இடத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றது (Location), அதனுடைய அமைப்பு (Physical Layout), பொருட்களினது ஒழுங்கமைப்பு (Merchandising environment) போன்றவைகள் வியாபாரத்தின் வெற்றியை நிர்ணயிக்கும் காரணிகளாகின்றன. இதனால் ஏற்படும் செலவுகளால் பொருட்களின் விலைகளை அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. ஆனால் இலத்திரனியல் வர்த்தகத்தைப் பொறுத்த மட்டில், Basement இலிருந்து விற்பனை செய்பவருக்கும், Bay இற்கும், வியாபார ஸ்தானம் (Electronic trade area) ஒன்று தான்! இங்கு பாவனையாளர்கள் நேரடியாக வியாபார நிலையங்களுக்குச் செல்வதில்லையாகையால், பாவனையாளர்களைக் கவரக் கூடிய முற்கூறப்பட்ட காரணிகள் அநாவசியமாவதுடன், புதிய காரணிகள் தலைதூக்குகின்றன. பொருட்களைப் பற்றிய விபரங்கள், போட்டி உற்பத்தியாளர்களின் விலைகளைப் பெறக் கூடிய வழிமுறைகள், கம்பியூட்டரிற் பார்க்கும் போது பாவனையாளர்களைக் கவரக்கூடிய முறையிலான கம்பியூட்டர் Presentaion, விலை, விநியோகிக்க எடுக்கும் நேரம் என்பன வியாபாரத்தின் வெற்றியை நிர்ணயிக்கும் காரணிகளாக மாறுகின்றன. இவைகளெல்லாவற்றையும், Shopping engines என்றழைக்கப்படும் Software tools இனைப் பாவித்துப் பெற்றுக் கொள்ளலாம். சுருக்கமாகக் கூறப் போனால், வியாபாரத்தின் வெற்றியானது, Physical Location, பொருட்களை அழகாகக் காட்சியறைகளில் அடுக்குபவர்கள் போன்றவர்களின் கைகளிலிருந்து கம்பியூட்டர் துறை சார்ந்த Web Page Designers, Graphic designers, Database developers, Database administrators போன்றவர்களின் கைகளுக்கு மாறுஞ் சூழ்நிலை ஏற்படுகின்றது. துரித கதியில் வளர்ந்து வரும், e-Commerce, e-mail, e-tailing என்ற 'e-crazy' தொடரைப் பார்க்கும் போது, மிக விரைவில்,

"e-business or no-business?"

மிக விரைவில் பதில் கிடைக்கத்தான் போகின்றது!!

லலிதா புறாடி

புத்தம் புதிய சகாப்தமொன்று குறும்புக் கண்சிமிட்டலுடன் கூப்பிடு தூரத்தில் காத்திருக்கும் காலமிது! இந்த அபூர்வ உதயத்தினைக் கண்கூடாகக் காண்பதற்குக் கொடுத்து வைத்தவர்கள் தாம் நாம்.

கனடா தமிழர்களில் கணசமான விகிதத்தினர் முதிய பெற்றோர்கள். தாயகத்துப் பிரச்சனைகளிற்குத் தப்பியோடி வந்த வயதானவர்கள், இங்கும் வெவ்வேறு புதுப் புதுப் பிரச்சனைகளைச் சந்திக்கின்றனர்.

பிரச்சனைகளே இல்லாத வாழ்வு என்பது வெறும் பகற் கனவு. சந்திக்கும் சவால்களைச் சரிவரச் சமாளித்து எதிர் நீச்சலிடும் யாத்திரை தான் மானிட வாழ்க்கை என்பதைப் பலர் தம் முதுமையில் கூட உணர்ந்து கொள்வதில்லை. மேற்கத்தைய முதியவர்கள் ஆத்மீகத்தை அறவே மறந்து தம் உடல் உள்ளப் பிரச்சனைகளைச் சமாளிக்க முடியாது திண்டாடுவது சகஜம். ஆனால் எம் தமிழ் முதியோரோ இறை பக்தி மிக்கவர்களானாலும் சந்தர்ப்பச் சூழலுக்கேற்ப விடாது தொடர்ந்து கொண்டே போகும் தம் சுயவளர்ச்சிக்கு அத்தியாவசியமான, மாற்றமுள்ள சிந்தனை, சொல், செயல் என்பவற்றைச் சரிவர நடைமுறைப் படுத்த முடியாத படியால் தான் கூடிய சிரமப்படுகின்றனர் எனக் கூறலாம். மாற்றம்தான் எமது சுயவளர்ச்சி, முன்னேற்றம், மனநிறைவு, மகிழ்ச்சி யாவற்றிற்கும் அத்திவாரமானதல்லவா?

அண்மையில் Toronto Colony Hotel இல் நடைபெற்ற முதியவர் துன்புறுத்தப்படுதல் பற்றிய இரண்டாவது தேசியக் கருத்தரங்கு, ஒன்ராறியோ முதியவர் சங்கத்தின் 18வது கருத்தரங்கு/ஒன்றுகூடல் இரண்டிலும் Older Womens' Network (OWN) உறுப்பினர்கள் தயாரித்துச் சமர்ப்பித்த துணுக்கு நாடகங்களில் பங்குபற்றி இங்கு எமது தமிழ் முதியோர்/பெண்கள் சந்திக்கும் சவால்களைப் பற்றி அரசுக்கு எடுத்துரைக்க எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. இந்த நிகழ்வுகள் University of Toronto Institute for Human Development life Course & Aging வெளியீட்டிலும், தேசிய ரீதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

எனது பெயர் லலிதா. நான் இலங்கையின் மகுடம் போல் விளங்கும் தமிழீழத்திலிருந்து இங்கு 1990இல் தஞ்சம் புகுந்தேன். எனக்கும் ஒன்றேகால் லட்சம் வரையான எனது சமூகத்தினருக்கும் புகலிடம் அளித்து உதவும் கனடா அரசுக்கு நான் நன்றி கூறித் தலை வணங்குகின்றேன். இதோ என் கதை!

அப்பப்பா! கனடாவில் இந்த மொழிப் பிரச்சனை! எனது கதை கஷ்டங்களைப் பொறுமையாய்க் கேட்டு எனக்கு ஆறுதல் கூறி ஆவன செய்ய ஒருவருமே இல்லையா? 70 வயதாகியும் எனக்குப் பிரச்சனைகள் தீர்ந்த பாடில்லை! மறதியும் வந்துவிட்டது! ஊரில் பெரிய வீடு வளவுடன், பண்டிதமணி ஆசிரியையாய், அன்புக் கணவருடன் எவ்வளவு மதிப்புடன் நான் வாழ்ந்தேன் தெரியுமா? ஒரேயொரு செல்வ மகன் டாக்டர் பட்டத்துடன், பல்வைத்திய மருமகளைக் கல்யாணம் பண்ணிய போது ஊரே திரண்ட பெரிய திருமணம்!

1983 கலவரத்தில் அகப்பட்ட மகனும் மருமகளும் கனடாவிற்குப் புலம்பெயர்ந்தனர். எனது கணவர் திடீரென்று மாரடைப்பால் காலமான போது, கொள்ளி வைக்கக் கூட மகன் வர நாட்டு நிலை இடந்தரவில்லை. ம்... என்ன செய்வது! கொஞ்ச காலத்திற்குப் பின், மகன் ஸ்பொன்சரில் பற்பல எதிர்பார்ப்புகளுடன் நான் கனடா வந்தேன். கண்ணைப் பறிக்கும் கனடாவின் மோக மயக்கம் தெளிய சில நாட்கள் தான் பிடித்தது. அப்பப்பா! என்ன குளிர்! எவ்வளவு உடுப்பு! எடுப்பு! கால் சப்பாத்துள் நுழையவே மறுத்தது! அப்போ கை? ஆங்கிலம் தெரிந்தாலும் பேச வெட்கம்! வெளியில் போகப் பயம்! வெள்ளையர் பேசுவது புரியவில்லை! அதிகம் பேசிப் பழக்கமுமில்லை! எனது பழைய பழக்க வழக்கங்களை மாற்றுவதென்றால் எவ்வளவு கஷ்டம் தெரியுமா? முதிர்ந்த மரம், பிடுங்கி நட்டால் தளிர்க்குமா?

மனக் கவலைகளைப் பகிர்ந்து பாரம் குறைத்துப் பேசுவதற்கு உற்ற நண்பர் எனக்கு ஒருவருமே இல்லை. தமிழ் ரேடியோக்கள் தான் துணை. தொலைக் காட்சியில் ஆங்கில நிகழ்ச்சி ஒன்றுமே விளங்காது. கிழமை தோறும் ஒரு 1/2 மணி TV நிகழ்ச்சி தான். இன்னும் கூட வராதா என மனம் ஏங்கும்.

என் மனக் கவலை கூடக்கூட உடல் ஆரோக்கியம் கெட்டது. எனது கர்ப்பப்பை 25 வருடங்களுக்கு முன் அகற்றப்பட்ட போது நோய் தீர்ந்தது என மகிழ்ந்தேன். ஆனால் அதன் பக்க விளைவாக, மெல்ல மெல்ல அறிகுறி ஏதுமின்றி எனது எலும்புக்கூடு முழுவதும் பழுதடைந்து, அடர்த்தி குறைந்து, Osteoporosis எனும் நோய் என்னைப் பீடித்திருக்கின்றது இப்போது. இதற்கு மருந்து கல்சியம், ஹார்மோன்ஸ் உட்கொண்டால், மூலக்கொதி, வலி, உயரங் குறைதல் போன்ற பக்க-விளைவுகள்! (முது பெண்கள் வைத்தியரின் ஆலோசனையுடன் கட்டாயம், கல்சியம், ஹார்மோன்ஸ் மருந்துகள் உட்கொள்ள வேண்டும். Osteoporosis பற்றி விசாரித்து அறிக). ஆங்கிலம் நன்கு பேசக் கூடிய எனக்குத் தெரிந்த ஒரு 50 வயதுப் பெண்ணை டெலிபோன் நேர்காணல் மூலம் வேலைக்கு எடுத்த ஒரு பெரிய கடை அவ சேலை அணிந்து வேலைக்குப் போனபடியால், வேலையை ரத்துச் செய்து விட்டது. இந்த இனவாதம் எங்களை விட்டபாடில்லை!

கனடாவில் முதியோர் சந்திக்கும் சவால்கள்

சில நாட்களின் பின் எனது மகன் மருமகள் இருவரும் தாம் படித்த வைத்தியர் வேலை செய்யவில்லை என்பது எனக்கு விளங்கியது. ஏதோ விருப்பமில்லாத சில்லறை வேலை! இயந்திர வாழ்க்கை! நான் ஓடியோடி சமையல், கழுவல், துடைத்தல் சகலதும் செய்து வைத்தாலும் குற்றங் குறை கண்டு முகங் கோணும் மருமகள்! தனது பிரச்சனைகளிற்கு என்னை வடிகாலாக்கிக் கொதித்துச் சீறும் மகன்! நான் ஆசையாய் வளர்த்த பாசமிகு ஒரேயொரு மகன் எங்கே? நான் முன் இருந்த இடத்தில் இப்போ அவன்! அவன், முன்பு எனக்குத் தந்த மரியாதையை, நான் இப்போது அவனுக்குக் காட்ட வேண்டி வந்து விட்டது! சொந்தமாக உழைத்துத் தாராளமாய்ச் செலவழித்துப் பழகிய கையை இன்று நீட்டி நிற்க வேண்டிய நிலை! கோவில், கடை என்று சுதந்திரமாய் உலவிய எனக்குத் தனியாக வெளியில் கால் வைக்க முடியாத பாடு! வாசிக்க உபயோகிக்க முடியாத மூக்குக் கண்ணாடி மாற்ற டாக்டரிடம் கூட்டிக் கொண்டு போகக் கூட நாட்களைத் தள்ளிப் போடும் அக்கறையில்லாத மகன்!

நாம் தான் பிரச்சனைகளை வெளிப்படுத்துவதே இல்லையே! எனது எனக்குத் தெரிந்த தாய் ஒருத்தி வீட்டில் கணவன், மகன், மற்றவர்கள் கொடுமை பொறுக்காது, தனிப்பட்டு welfare எடுத்துக் கொண்டு வாழ்கின்றா தான். ஆனால் எனக்கு அப்படிச் செய்து குடும்பத்தைச் சந்தி சிரிக்க வைக்க விருப்பமில்லை. நான் எல்லாவற்றையும் சமாளித்துக் கொண்டு தான் வாழ்கின்றேன்.

என் இருப்பிடத்திற்குச் சமீபத்தில் ஒரு வைத்தியசாலை இருந்தாலும் எனக்கு அங்கு போக விருப்பமில்லை. டாக்டரிடம் போனால் மொழிப் பிரச்சனை, தனியாகப் போக முடியாது. தூரத்தில் ஒரு முதியோர் தமிழ் மன்றம் ஒன்று இருக்கிறதாம். ஆனால் சமீபத்தில் அப்படி ஒன்றும் இல்லை. அன்று ரேடியோ நிகழ்ச்சியில் நெருக்கடி நிலை தவிர்ப்பு தொலைபேசி இருக்கிறது ஆனால் ஆங்கிலத்தில் பேச வேண்டும் என்று சொன்னார்கள். ஏன்! இவ்வளவு தமிழர் இங்கு இருக்கையில் ஒரு தமிழ்த் தொலைபேசி இருந்தால் என்ன?

தமிழர் எங்கும் பரந்து வாழ்வதால் நாம் அரசுக்கு தேர்தலில் தமிழ்ப் பிரதிநிதியைத் தெரிவு செய்வது கடினம். கனடிய அரசு எமக்கு நியமன பாராளுமன்ற

(58ம் பக்கம் பார்க்க)

பூரதி

மனிதப் பிறவியின் பெரும் சிறப்புகளில் மிக முக்கியமான ஒன்று பிறருக்கு உதவியாக வாழும் தன்மையாகும். ஒவ்வொருவரும் தாம் வாழும் காலத்தில் தம்மாலியன்ற வழிகளில் மற்றவர்களுக்கு உதவிகளைப் புரிந்து வருகின்றார்கள். ஏழைகளுக்கு உணவு, கல்வி வழங்கல், பண உதவி, சரீர உதவி செய்தல், நோயாளர்களுக்கும், முதியோர்களுக்கும் தொண்டுகள் செய்தல், ஆபத்திலிருப்பவரைக் காப்பாற்றுதல், விபத்து போன்ற சமயங்களில் உதவுதல் , இன்னும் பலவும் இதில் அடங்கும். பலன் எதிர்பாராது செய்வது உதவி.

இவற்றில் இன்னும் ஒருபடி மேலே போய், தம் வாழ்வு முடியும் காலத்திலும் மற்றவர்களுக்கு எந்த வகையிலாவது உபயோகப்பட வேண்டும் என எண்ணுபவர்கள் உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டியவர்கள். இவர்கள் தம் உயிர் பிரிந்த பின் தம் உடல் உறுப்புகளையும் கூட தானமாகப் பிறருக்கு வழங்குவதன் மூலம் இன்னொருவரின் வாழ்வில் ஒளியேற்றிச் செல்கின்றனர். அப்படிப் பட்ட ஒரு சிறந்த காரியத்துக்குக் கனடாவில் தாராளமாக இடமுண்டு.

ஒன்ராறியோ சுகாதாரத் திணைக்களத்தில் அங்கதானத்துக்கான விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்த பின் அவர்கள் உங்களுக்கு ஒரு அங்கதான ஒப்புதல் அட்டையை தபாலில் அனுப்பி வைப்பார்கள். அல்லது உங்கள் வைத்தியத்துக்கான சுகாதார அட்டையில் (Health Card) ஒரு குறிப்பை வைப்பார்கள். தேவையான நேரத்தில் அது கம்பியூட்டர் மூலம் மீளப் பெறப்படும், அத்துடன் நீங்கள் வாகன சாரதி அனுமதிப் பத்திரம் (Driver's Licence) வைத்திருப்பவராயிருந்தால் அடுத்த தடவை அதை புதுப்பிக்கும் சமயத்தில் தனியான ஒரு அங்கதான அட்டையும் புதிய சாரதி அனுமதிப் பத்திரத்துடன் உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். அதனை நீங்கள் எப்பொழுதும் உங்களுடனேயே வைத்திருத்தல் அவசியம். உங்கள் குடும்பத்தினருக்கும், உங்களுடன் நெருக்கமானவர்களுக்கும் உங்கள் விருப்பத்தைத் தெரிவித்து வையுங்கள். அங்கதான அட்டையில் கையொப்பமிடுகையில் நீங்கள் முக்கியமாக கவனிக்க வேண்டிய விடயங்களாவன:

1. உங்கள் தீர்மானத்தைப் பற்றி உங்கள் குடும்பத்தவர், நண்பர்கள், வைத்தியர் ஆகியோருடன் உரையாடி அவர்களுக்குத் தெரிவித்தல்.
2. நீங்கள் தொண்டின் அடிப்படையில் (Volunteer) இக் காரியத்தைச் செய்ய முன் வந்திருக்கிறீர்கள் என்பதை அவர்களுக்கு விளக்கல்.
3. உங்கள் விருப்பங்களை மதித்து அதனை நிறைவேற்றும்படி உங்கள் குடும்பத்தினரைக் கேட்டுக் கொள்ளல்.

நீங்கள் உங்கள் இதயம், ஈரல், சிறுநீரகங்கள் போன்ற அங்கங்களையும், இருதய வால்வுகள், கண்கள், எலும்புகள், தோல் போன்ற இழையங்களையும் தானமாக வழங்கலாம். இவற்றில் சிலவற்றை மாத்திரம் அல்லது எல்லாவற்றையும் வழங்கலாம். அல்லது ஏதாவது ஒரு அங்கத்தை மட்டும் குறிப்பிட்டு உங்கள் அனுமதியை விண்ணப்பத்தில் தெரிவிக்கலாம். அங்கதானம் செய்வதற்கு வயதெல்லை கிடையாது. அங்கத்தின் ஆரோக்கியமே கவனத்தில் கொள்ளப்படும். ஒன்ராறியோவில் மிகக் கூடிய வயதுடைய அங்கதானம் செய்தவரின் வயது 92 ஆகும்.

அங்கதானத்தை அனுமதிக்கும் அங்கதான அட்டையானது ஒரு சட்டபூர்வமான ஆவணம். இதன் மூலம் வைத்தியர்கள் உங்கள் விருப்பத்தை அறிந்து

அங்கதானம்

செயற்படுவார்கள். ஆனால் உங்கள் குடும்பத்தினர் ஆட்சேபித்தால், அவர்கள் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்து உங்கள் அங்கங்களைப் பெற்றுக் கொள்ள மாட்டார்கள். உங்கள் விருப்பத்தை நீங்கள் உயிலில் தெரிவிக்க முடியாது. ஏனெனில் உயில் சிறிது காலத்தின் பின்பே உங்கள் குடும்பத்தவரால் வாசிக்கப்படும். அந்த சமயத்தில் உங்கள் அங்கங்களைப் பாவிக்க முடியாது. பழுதடைந்து விடும் அல்லது கிடைக்காமல் போய்விடும். அங்கதான விண்ணப்பத்தை நிரப்புவதன் மூலமே இக் காரியத்தில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளலாம்.

இவ்வட்டையில் அனுமதியளித்ததன் காரணத்தினால் உங்கள் உயிருக்கு ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில்

Organ Donation

அனுமதிக்கப்படும் போது வைத்தியர்கள் தகுந்த சிகிச்சை அளிக்க மாட்டார்கள், உங்களை இறக்க விட்டு விடுவார்கள் என்று அஞ்சத் தேவையில்லை. உங்களுக்கு அளிக்க வேண்டிய சகல சிகிச்சைகளையும் அவர்கள் அளிப்பார்கள். நீங்கள் அங்கதானம் செய்ய முன்வந்திருப்பதனால் உங்களைப் பிரத்தியேக மரியாதையுடனும், மதிப்புடனும் நடத்துவார்கள். இறப்பு நிகழும் பட்சத்தில், அதனை 2 டாக்டர்கள் உறுதி செய்ததன் பின்பே, உங்கள் குடும்பத்தினரும் ஆட்சேபம் தெரிவிக்காதவிடத்து 24 மணிநேரத்திற்குள் அங்க மாற்றுச் சத்திர சிகிச்சையை நடத்துவார்கள். உங்கள் அங்கங்கள் உடனடியாக வேறொரு அங்கம் பழுதடைந்த/ செயலிழந்த நோயாளிக்கு சத்திர சிகிச்சை மூலம் பொருத்தப்படும். ஈமக் கிரியைகளை முறைப்படி மேற்கொள்ள வேண்டுமென்ற உங்கள் குடும்பத்தவர்களின் விருப்பத்தை உணர்ந்து வைத்தியர்கள் மிக விரைவாகச் செயற்படுவார்கள். எந்தவித அநாவசிய தாமதமுமின்றி குடும்பத்தவரிடம் உடல் ஒப்படைக்கப்படும்.

நீங்கள் அங்கதானம் செய்ய ஒப்புக் கொண்டபின், உங்கள் உடல் மருத்துவக் கல்லூரிகளின் ஆராய்ச்சிகளுக்காகப் பயன்படுத்தப்பட முடியாது. ஏனெனில் அவர்களுக்குப் பரிசோதனைகள் செய்வதற்கு முழுமையான உடல் தேவை. நீங்கள் ஒன்றில் அங்கதானம் அல்லது மருத்துவ ஆராய்ச்சிக்கு உங்கள் விருப்பப்படி, உங்கள் உடல் எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை முடிவு செய்து விண்ணப்பிக்கலாம். ஆனால் இரண்டையும் செய்ய முடியாது. மருத்துவ ஆராய்ச்சிகளுக்கு உங்கள் உடல் வழங்கப்படின் குடும்பத்தவர் உங்கள் ஈமக் கிரியைகளைச் செய்ய முடியாது. ஆனால் அங்கதானம் செய்தால் வழமையான சடங்குகளை மேற்கொள்ளலாம். நீங்கள் விரும்பாவிடின் உங்கள் குடும்பத்தினர் தவிர்ந்த ஏனைய உறவினர்கள் கூட உங்கள் அங்கதானம் பற்றி அறியத் தேவையில்லை.

அங்கமாற்றுச் சத்திர சிகிச்சை நடவடிக்கைகளை ஒழுங்கு செய்வதற்கென ஒன்ராறியோ அரசினால் அமைக்கப்பட்ட அமைப்பின் பெயர் Organ Donation Ontario (ODO) ஆகும். இது முன்பு The Multiple Organ Retrieval and Exchange (MORE) Program of Ontario என அழைக்கப்பட்டது. இது 1988இல் ஆரம்பிக்கப்பட்டது. மாகாண ரீதியில் கம்பியூட்டர் பதிவுகளின் மூலம் இத் திட்டத்தை நிர்வகித்து வருகின்றது. அங்க மாற்றீடு செய்யும் நிபுணர்கள், எல்லா நோயாளிகளுக்கும் சம சந்தர்ப்பத்தை வழங்குவதற்காக இக் கம்பியூட்டர் நிர்வாக அமைப்பை உருவாக்கினர். மிகத் துரிதமாக அங்கங்களை ஒருவரின் உடலிலிருந்து பெற்று மிக அவசர தேவையுள்ள ஒருவரைத் தெரிந்தெடுத்து அவருக்கு மாற்றீடு செய்வதற்கான சகல ஒழுங்குகளையும் இந்த அமைப்பே செய்கின்றது. தெரிந்தெடுத்த நோயாளிக்கு ஏதாவதொரு தவிர்க்க முடியாத காரணத்தினால் சத்திர சிகிச்சை செய்ய முடியாவிடின், கம்பியூட்டர் பதிவு வரிசையில் அடுத்ததாக இருக்கும் நோயாளிக்கு இம் மாற்றீடு செய்யப்படும். எந்தவிதப் பாகுபாடுமின்றி தேவையின் அடிப்படையிலும் மற்றைய பொருந்தும் விதங்களின் அடிப்படையிலும் மாத்திரமே நோயாளிகள் தெரிவு செய்யப்படுவர். இந்த அமைப்பின் மூலம் எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் வழங்கப்படுவதுடன், கிடைக்கக் கூடிய

(58ம் பக்கம் பார்க்க)

சர்வதேச முதியோர் மகாநாடும் அதற்குப் பின்னும்

பிரெட் பாலசிங்கம்

முதியோர் தங்கள் எதிர்காலத்தை நிர்ணயிக்கவும், எங்கு எவ்வாறு வாழவேண்டுமெனத் தீர்மானிக்கவும் உரிமையுள்ளவர்கள். சமூகத்திற்கு அவர்கள் அளிக்கும் பணி, தங்கள் குடும்பத்திற்கும் சுற்றாடலுக்கும் ஆற்றும் தொண்டு முதலியவற்றைப் பகிரங்கமாகப் பிரகடனம் செய்ய இம் மகாநாடு உதவுமென, சர்வதேச முதியோர் சம்மேளனத்தின் 4வது உலக மகாநாட்டைத் தொடங்கி வைத்த முதியோர் பிரதிநிதியும் கியூபெக் அரசின் பெரும்பாக நகரசபைகளின் அமைச்சருமான லூயி கரல் குறிப்பிட்டார் (Louise Harel).

ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்ட சர்வதே முதியோர் ஆண்டு நிகழ்ச்சிகளின் சிகரமான இந்த மகாநாடு மொன்றியல் நகரின் மிகப் பிரமாண்டமான பலேடி-கொங்கிரஸ் (Palais des Congrss) என்ற மகாநாட்டு மண்டபத்தில் செப்டெம்பர் மாதம் 5 இலிருந்து 9 வரை நடைபெற்றது. 47 நாட்டிலிருந்து வந்த 1700 பிரதிநிதிகளைக் கொண்ட இம் மகாநாட்டில் முதியோரும், முதியோர் நலன் விரும்பிகளும் கலந்துரையாடினர். மகாநாட்டுத் தலைவரும், உலக முதியோர் சம்மேளனத் தலைவருமான, டானியல் தேர்ஸ் தனது தலைமை உரையில், 'முதியோர் பணத்திமிர் பிடித்தவர்கள், அல்லது நாட்டின் பணத்தை உறிஞ்சும் பச்சோந்திகள்' என்ற அபிப்பிராயம் மக்கள் மனதிலிருந்து களையப்பட்டு முதியவரின் அனுபவங்களை எவ்வாறு பயன்படுத்த முடியுமென்பதே இம் மகாநாட்டின் குறிக்கோள் எனக் கூறினார்.

மகாநாட்டில் பரிமாறப்பட்ட புள்ளி விபரங்களின்படி 1996ம் ஆண்டுவரை "முதியோரில் முதியோர்" எனக் கூறப்படும் 75 வயதுக்கு மேற்பட்டவர்களில் 43% வீதத்தினர் சீனா, யப்பான், இந்தியா, ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளில் தான் இருந்தனர். கீழைத் தேசங்களில் முன்னிருந்த வழக்கமான ஒன்றிணைந்த குடும்ப முறை (Extended families) இப்பொழுது குறைந்து வருகின்றது. சீனா, யப்பான் ஆகிய நாடுகளில் கூட தங்கள் முதியோரை முதியோர் இல்லங்களில் வசிக்க விடுகின்றனர். முதியோருக்கு வழங்கப்பட்ட கௌரவமும், மரியாதையும் அந்த நாடுகளில் குறைந்து வருவதைக் காண முடிகின்றது. வயோதிபர் எப்போதும் வருத்தக்காரர் என்ற தப்பெண்ணம் பலர் மனதில் பதிந்துள்ளது. ஆனால் புள்ளிவிபரங்களின் படி, முதியோரில் 73% வீதத்தினர் சுகதேகிகளாக இருக்கின்றனர். இவ்வாறு டானியல் தேர்ஸ் மேலும் குறிப்பிட்டார்.

ஆரம்ப உரைகளைத் தொடர்ந்து மூன்று நாட்கள் கலந்துரையாடல்கள், பட்டறைகள், கண்காட்சிகள் நடந்தன. பட்டறைகளில் முதியோருக்கேற்ற வீடமைப்பு, வாகன அமைப்பு, இலேசாகத் திறக்கக் கூடிய மாத்திரைப் பெட்டிகள், முதியோர் கல்வி, நடிப்புக் கல்வி, மறதி, மனச் சோர்வு முதலானவையும் இன்னும் பலவும் பேசப்பட்டன.

முதியோருக்காக நடத்தப்பட்ட இந்த மகாநாட்டிலும், பட்டறைகளிலும் உரையாட முதியோரல்லாத கல்விமான்களை அழைத்திருந்தது விசித்திரமாகவிருந்தது. இறுதி நாளன்று முதியோரின் தேவைகளைப் பற்றிய தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. இவை, சிறு பிரிவுகளாக அமைக்கப்பட்ட வட்ட மேசைகளில் வைத்துத் திருத்தப்பட்ட போதும், திருத்தங்கள் ஏற்றுக் கொள்ளப்படாதது பல முதியோரிடையே மனவருத்தத்தைக் கொடுத்தது. மொன்றியால் தீர்மானத்தின் பிரதான ஷரத்துக்கள் பின்வருமாறு:

1. அங்கத்துவ நாடுகள் ஒவ்வொன்றிலும் முதியோருக்கு ஏற்ற தேசியத் திட்டம் ஒன்றை அமல் படுத்தும்படி ஐக்கிய நாடுகள் சபை வற்புறுத்தல் வேண்டும். அத்தகைய தேசியத் திட்டம் பால், இன, பல்லினஞ் சார்ந்த விடயங்களுக்கு முக்கியத்துவம் அளித்தல் வேண்டும்.
2. அத்தகைய திட்டத்தை அமல் செய்து பெற்ற முன்னேற்றத்தைப் பரிசீலனை செய்ய ஐந்து ஆண்டுகளில் உலக மகாநாடு ஒன்றை ஐக்கிய நாடுகள் சபை கூட்டுதல் வேண்டும்.
3. ஐக்கிய நாடுகள் சபையின் எல்லா விதமான செயற்பாடுகளிலும் அபிவிருத்தி நிகழ்ச்சிகளிலும் முதுமையடைதல் பற்றிய பிரச்சனைகள் பிரதான கூறாக அமைதல் வேண்டும்.
4. முதுமையடைதல் தொடர்பான திட்டங்களுக்கும் முதுமையடைதலை மையமாகக் கொண்டு இயங்கும் தாபனங்களுக்கும் ஐ. நா. அதிக நிதி ஒதுக்கீடு செய்தல் வேண்டும்.
5. ஐ.நா.வின் சகல முதியோர் திட்டங்களும்:
- பொருளாதாரம், உணவு, சுகாதாரம், பராமரிப்பு, உறைவிடம், உடை, போக்குவரத்து விடயங்களில் முதியோருக்குப் பாதுகாப்பு அளிப்பதாக இருத்தல் வேண்டும்.
- தமது சமூகத்தின் சமூக, கலாசார, அரசியல் வாழ்க்கையில் முதியோர் முழுமையாக ஈடுபடும் வகையில் அமைதல் வேண்டும்.
- முதியோர் சுதந்திரத்தைப் பேணுதல் வேண்டும். பிறரின் வன்முறையிலிருந்தும் துர்ப்பிரயோகத்திலிருந்தும் அவர்களைப் பாதுகாக்க வேண்டும்.
- வேலை செய்யக்கூடியவருக்கு வேலை வாய்ப்புகளும் தொழிற் பயிற்சிகளும் அளித்தல் வேண்டும்.
- முதியோருக்கு ஆதரவு அளிக்கும் வகையில் அவர்கள் குடும்பங்களையும் சமூகங்களையும் ஊக்குவித்தல் வேண்டும்.
- சந்ததித் தொடர்பு, கருத்துப் பரிமாற்றம், வழிகாட்டல் போன்றவற்றை அதிகரித்தல் வேண்டும்.
- முதியவர் எல்லாச் சுற்றாடல்களுக்கும் செல்லக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
- அரசாங்க, தனியார், தொண்டர் நிலையங்கள் முதியோர் நலனுக்கு இணைந்து செயற்படும் வகை வலுப்படுத்தல் வேண்டும்.

உலகளாவிய வகையில் மிக விமரிசையாக நடத்தப்பட்ட முதியோர் ஆண்டின் பின் முதியோரின் நிலைப்பாட்டைப் பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது. "ரொறன்ரோ ஸ்ரார்" பத்திரிகையில் ஒக்டோபர் மாதம் 2ம் திகதியும், 30ம் திகதியும் "முதுமை" என்ற தலைப்பில் Helen Henderson எழுதிய இரு கட்டுரைகள் எங்கள் முதியோரின் நிலையைக் கோடிட்டுக் காட்டுகின்றது. அவர் குறிப்பிட்ட சிலவற்றை எடுத்துரைப்பது முதியோரான எங்களுக்கு ஒரு விழிப்புணர்ச்சியைத் தருமென எண்ணுகின்றேன்.

60 வயதுடைய ஓர் பெண் தனது மருத்துவரிடம் தனது முதுகிலும், கையிலும் நோ இருப்பதாகக் கூறினார். அதற்கு அம் மருத்துவர் உங்கள் கைப் பையை மற்றத் தோளில் சுமக்கும்படி சொன்னாராம். அப் பெண்ணிற்கு இருதய நோய் இருப்பதாக அவரால் கண்டுபிடிக்க முடியவில்லை.

'முகத்தில் சுருக்கம் விழுந்தவர்களை வைத்தியசாலை புறக்கணிக்கின்றது' என்கின்ற அபிப்பிராயம் முதியோர் மத்தியில் மட்டுமல்லாது முதியோரை வைத்தியசாலைக்கு ஏற்றி இறக்கும் அவர்களது பிள்ளைகள் மத்தியிலும் பரவலாக நிலவி வருகின்றது.

வைத்தியர்கள் முதியவர்களுக்குச் சிரத்தையுடன் வைத்தியம் செய்கின்றார்களா? முகத்தில் சுருக்கம் விழுந்தவர்களின் முறைப்பாடுகளுக்கு அக்கறையுடன் செவி சாய்க்கின்றார்களா?

சில வைத்தியர் முதியவர் மீது கவனம் எடுக்கின்றார்கள் என்பது உண்மை. ஆனால் பெரும்பான்மையான வைத்தியர்கள் அவ்விதம் இல்லை என்பதனை முதியோர் முறைப்பாடுகள் காட்டுகின்றன.

ரொறன்ரோ ஸடார் பத்திரிகைக்குக் கிடைத்த

(மறுபக்கம் பார்க்க)

சர்வதேச...

சில முறைப்பாடுகள் விழிகளைப் பிதுங்க வைக்கின்றன:

- 79 வயதுக் கிழவர் ஒருவருக்கு வைத்தியர் சொன்னது: 'நீங்கள் நீண்ட காலம் நன்கு வாழ்ந்து விட்டீர்கள். இந்தச் சத்திர சிகிச்சையில் நீங்கள் உயிர் பிழைக்கும் வாய்ப்பு மிகவும் குறைவு. அதனால் மரண சாசனம் எழுத வேண்டும் என்றால் எழுதி வையுங்கள். (நல்ல காலமாக இவர் வேறு ஒரு வைத்தியரால் சத்திர சிகிச்சை செய்யப்பட்டு இப்பொழுது சுகமாக இருக்கின்றார்.)
- 74 வயதுள்ள ஒருவரின் வருத்தத்தை மாற்ற முடியாத வைத்தியர் கடைசியில் சொன்னார்: 'உமது தந்தையாருக்கு உளவியல் பிரச்சனைகள் உள்ளன.'
- 'எனது 90 வயதுத் தாயாரை மாரடைப்பால் அவசரப் பிரிவுக்குக் கொண்டு சென்றேன். அங்குள்ள இளம் நோயாளருடன் சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருந்த வைத்தியரின் முகம் எனது தாயாரைக் கண்டதும் மாற்றம் அடைந்ததை அவதானித்தேன். மேலும் தாயாருடன் பேசாமல் என்னுடனேயே பேசினார். இத்தனை வயதுக் கிழவியை அவசரப் பிரிவுக்கெல்லாம் ஏன் கொண்டு வருவான் என்று அவர் எண்ணியது போலத் தெரிந்தது.'
- 'எனது உடல் நலப் பிரச்சனைகள் எனது வைத்தியரை தொல்லைப்படுத்துகின்றனவோ என்று எண்ணத் தோன்றுகின்றது. ஒவ்வொரு முறையும் திருப்தியான பதில்களைப் பெறாமலேயே நான் வீடு திரும்புகின்றேன். எனக்கு 83 வயது தான். என்றாலும் எனது மூளையையும் புத்தியையும் நான் இன்னும் இழக்கவில்லை.'
- 'மருந்தை எழுதித் தந்துவிட்டு எனது டாக்டர் மறைந்து விடுகிறார். இரண்டொரு கேள்விகளைக் கேட்கவோ சந்தேகங்களைத் தீர்க்கவோ அவர் நிற்பதில்லை.'
- 'வைத்தியரை மாற்ற முடியாமல் இருக்கிறது. புதிய வைத்தியர்கள் வயதைக் கேட்டு விட்டுச் சாட்டுகள் சொல்லித் தட்டிக் கழிக்கிறார்கள்.'
- இரு இடங்களில் 65 வயதுக்கு மேற்பட்ட நோயாளிகளைப் பார்ப்பதில்லை என்று சொல்லப்பட்டுள்ளது.

இவை கனடிய முதியவருக்கு மட்டுமுள்ள பிரச்சனைகள் என்று நினைக்க வேண்டாம். உலகெங்கும் இப் பிரச்சனைகள் உள்ளன. மேலும் வைத்தியம் சார்ந்த பிரச்சனைகளோடு பொருளாதார, சமூக, கலாசாரப் பிரச்சனைகள் என்று பலவிதமான இடர்ப்பாடுகளை முதியோர் அனுபவிக்கின்றனர். இவற்றுக்குப் பின்னணியில் ஆஸ்பத்திரிகளில் இடமின்மை, தனியார் வைத்தியரையோ, நிபுணர்களையோ காண்பதற்குப் போதிய பணமின்மை, சமூகத்தில் முதியவருக்கு மதிப்பு இன்மை போன்ற பல காரணங்கள் இருக்கின்றன. உலகத்தின் கவனத்தை முதியோர் பிரச்சனைகள் பக்கம் திருப்பவே ஐ.நா. சர்வதேச முதியோர் ஆண்டைப் பிரகடனம் செய்தது. முதியோர் ஆண்டின் சிகரமாகவே மொன்றியால் மகாநாடு நடந்தது. இம் மகாநாட்டால் உலகெங்கணும் உள்ள முதியோர்கள் நன்மை பெறுவார்கள் என எதிர்பார்ப்போமாக!

முதியோர்...

உறுப்பினர்களைத் தந்துதவ நாம் குரல் கொடுக்க வேண்டும். செய்வீர்களா? இன்னும் எத்தனையோ பிரச்சனைகள் இருக்கின்றன. வீட்டுக்கு வீடு வாசற்படியாய் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பிரச்சனை. அரசுடன் எமது சமுதாய அமைப்புகளும், முதியவர்களின் குரல்களை மதித்து உதவ வேண்டும் எனக் குரல் கொடுக்கின்றேன்.

கனடாவில் முதுதமிழர் சந்திக்கும் சில சவால்கள்

1. கலாசாரத்தில்/வாழ்க்கை முறையில்/காலநிலையில் வேறுபாடுகள்
2. எமது கல்வித் தகைமை, தராதரம், திறமை, அனுபவம் போன்றவற்றின் அங்கீகாரமின்மை
3. பொருளாதாரப் பிரச்சனைகள் (10 வருடம் பென்ஷன் இன்மை)
4. ஆரோக்கியம் - உடல், உள, ஆத்மீக சம வளர்ச்சி போன்றவை, வைத்தியர்/வைத்தியசாலையின் மொழிப் பிரச்சனை/ஆரோக்கியம் பேணிக் கண்காணிப்பவரை பற்றிய அறிவும், access?
5. குடியிருப்புப் பிரச்சனை/கூட்டுக் குடும்பத்தில் இடவசதியின்மை
6. போக்குவரத்து/தனிப் பிரயாணம் செய்ய மொழிப் பிரச்சனை/பயம்
7. தாயகத்தில் நாமனுபவித்த சுதந்திரம், ஆளுமை முதலியவற்றை இழந்து மக்கள் தயவில் வாழ வேண்டிய நிர்ப்பந்தம்
8. சுதந்திரமில்லாத வாழ்க்கை - பணம், போக்குவரத்து, மொழி, வழிபாடு, பொழுது போக்கு சகலவற்றிற்கும் பிள்ளைகளை நம்பியிருக்க வேண்டிய நிலை
9. மாறிய சமூக நிலை - எமது கௌரவம் மலையேறி இப்போது நாம் யாவற்றிற்கும் பிள்ளைகளை நம்பியிருக்க வேண்டிய நிலை
10. சட்ட உதவிகள் - இங்கு கிடைக்கும் சட்ட முறைகள் உதவிகளைப் பற்றியும், எவ்வாறு அவற்றைப் பெற்றுக் கொள்வது என்பதையும் தெரிந்து கொள்ளல்
11. ஸ்பொன்சர்/welfare பிரச்சனைகள்
12. உறவுப் பிரச்சனைகள்
13. தனிமை - உளநலப் பிரச்சனைகள் - உளவளத்துணை மனோதத்துவச் சிகிச்சை
14. இனவாதம்/வயோதிபம்
15. மூன்றாவது தலைமுறையுடன் இடைவெளிப் பிரச்சனைகள்
16. பொழுது போக்கு/உடற்பயிற்சி - TV தமிழ் நிகழ்ச்சிகள்
17. வீட்டில் வந்து உதவும் பராமரிப்பு பற்றிய அறிவும், பெறும் வழிவகைகளும்
18. தமிழர் பிரச்சனைகளிற்குக் குரல் எழுப்ப கனடிய பாராளுமன்றத்தில் தமிழ்க் குரல் ஒலிக்க வேண்டும் - தேர்தலில் முடியாவிட்டால் நியமன அங்கத்தவர் வேண்டும் எனும் கோரிக்கை.

றிச்மன்ட்ஹில் இந்து ஆலய இந்த மாத உற்சவங்கள்

வடஅமெரிக்காவின் 'பெரிய கோயில்' என அழைக்கப்பெறும் றிச்மன்ட்ஹில் ஆலயம் திங்கட்கிழமையிலிருந்து வியாழக்கிழமை வரை காலை எட்டு மணி தொடக்கம் நண்பகல் பன்னிரண்டு மணி வரையும், பின்னர் பிற்பகல் ஆறு மணி தொடக்கம் இரவு ஒன்பது மணி வரையும் திறந்திருக்கும். மற்றைய நாட்களில் காலை 8:00 மணி முதல் இரவு 9:00 மணி வரை திறந்திருக்கும். மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் 905-883-9109 தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம்.

ஆலயத்தின் இந்த மாத (பெப்ரவரி) உற்சவங்களின் விபரம் வருமாறு:

02	புதன்:	பிரதோஷம்
04	வெள்ளி:	தை அமாவாசை
08	செவ்வாய்:	சதுர்த்தி
11	வெள்ளி:	ரதஸப்தமி
12	சனி:	கிருத்திகை
16	புதன்:	பிரதோஷம்
17	வியாழன்:	நடராஜர் அபிஷேகம்
18	வெள்ளி:	பௌர்ணமி சத்யநாராயண பூஜை
19	சனி:	மாசிமகம்

அடுத்த மாதமான மார்ச் 04ம் திகதி சனிக்கிழமை மஹாசிவராத்திரி என்று ஆலய வெளியீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கதானம்

எல்லா அங்கங்களும் தேவையானவர்களுக்குப் பயன்படுத்தப்படும். ஒருபொழுதும் வீணாக மாட்டாது. ஒருவரின் பல அங்கங்கள் பலருக்கு பலவிதத்தில் சிகிச்சையளிக்கப் பயன்படுத்தப்படும்.

அங்கதானத்தின் மற்றொரு வகையான இழையங்களைத் தானம் செய்வதன் மூலமும் உதவி செய்யலாம். இந்த வகையில் சிலவகை இழையங்களை யாரும், எப்பொழுதும் தாம் உயிருடன் இருக்கும் பொழுதே செய்யலாம். இரத்த தானம், என்புமச்சை தானம் (Bone Marrow) என்பவற்றை இதில் குறிப்பிடலாம்.

ஒன்ராறியோவில் 1997ம் ஆண்டில் அங்கதானத்தினால் மறுவாழ்வு பெற்றவர்களின் எண்ணிக்கை 628 ஆகும். அத்துடன் அங்கதான அட்டையில் நீங்கள் கையெழுத்திடுவது, நீங்கள் மற்றவர்களுக்கு உதவி செய்ய விரும்புகின்றீர்கள் என்பதைக் குறிக்கும். இன்றைய உங்கள் தீர்மானம் யாரோ ஒருவரின் எதிர்காலமாக அமையும். மேலதிக விபரங்களுக்கு நீங்கள் தொடர்பு கொள்ள விரும்பின்:
1-800-263-2833 or, in Toronto
(416) 351-7328
http://www.transplant-ontario.org

மலரின் எழுத்தாளர்கள்
Our Contributors



பொ. கனகசபாபதி
பல்கலாசார ஆலோசகர்
ரொறன்ரோ மாவட்ட கல்விச் சபை



வளவன் மனோகரராஜா
Computer Group
University of Toronto



கலாநிதி த. வசந்தகுமார்
அதிபர்
கம்பியூடெக் நிறுவனம்



லலிதா புறூடி
முதியோர் சேவையாளர்



பிரெட் பாலசிங்கம்
முன்னாள் தலைவர்
முது தமிழர் மன்றம்

கடந்த எட்டு ஆண்டுகளில் 'தமிழர் தகவல்' விருதுகளைப் பெற்றவர்கள்.

1992ம் ஆண்டு

திரு. நா. சிவலிங்கம் (சமூக சேவை)
திரு. க. தா. செல்வராஜகோபால் - ஈழத்துப் பூராடனார் (இலக்கிய சேவை)

1993ம் ஆண்டு

திருமதி றொசலின் இராசநாயகம் (சமூக சேவை), திரு. எம். பி. கோணேஷ் (இசைத்துறைச் சேவை)
கலாநிதி நான்ஸி பொகொக் அம்மையார் (அகதிகள் பணி)
செல்வன் இரமணன் இராமச்சந்திரன் (தீரத்துக்கான கௌரவம்)

1994ம் ஆண்டு

திரு. சஞ்சீவ சிறீநாதன் (சமூக சேவை)
திருமதி. வள்ளிநாயகி இராமலிங்கம் - குறமகள் (இலக்கிய சேவை)
கவிநாயகர் கந்தவனம் (இலக்கிய சேவை)
கலாநிதி ரொம் கிளார்க் (அகதிகள் பணி), திரு. எஸ். ஏ. சிவபாதம் (பொதுப்பணி)

1995ம் ஆண்டு

திரு. அலோய் இரத்தினசிங்கம் (சமூக சேவை)
திருமதி. நவராஜகுலம் முத்துக்குமாரசுவாமி (இசைப்பணி)
திரு. தி. மாணிக்கவாசகர் (கல்விப் பணி), திருமதி. மிராண்டா பின்ரோ (அகதிகள் பணி)
கலாநிதி கே. எஸ் நடராஜா (மறைவுக்குப் பின்னரான கௌரவம்)

1996ம் ஆண்டு

திரு. அகஸ்தின் ஜெயநாதன் (சமூக சேவை), திரு. எஸ். எஸ். அச்சுதன் (கலைப் பணி - நாடகம்)
திருமதி. கீதா யோகேந்திரன் (கலைப் பணி - நடனம்)
திரு. பொ. கனகசபாபதி (கல்விப் பணி), திரு. அலி கொலபூர் (அகதிகள் பணி)

1997ம் ஆண்டு

திரு. கிங்ஸ்லி அரியரத்தினம் (சமூக சேவை), திருமதி. கமலா பெரியதம்பி (இலக்கியச் சேவை)
சங்கீதபூஷணம் தா. இராசலிங்கம் (இசைத்துறைச் சேவை),
கலாநிதி வே. இலகுப்பிள்ளை (கல்விப் பணி)
'ரொறன்ரோ ஸ்டார்' பத்திரிகை (அகதிகள் சேவை)
சட்டத்தரணி எஸ். கே. மகேந்திரன் (மறைவுக்குப் பின்னரான கௌரவம்)

1998ம் ஆண்டு

திருமதி மணி பத்மராஜா (சமூக சேவை)
சங்கீதபூஷணம் பொன். சுந்தரலிங்கம் (இசைத்துறைச் சேவை)
கவிஞர் இ. அம்பிகைபாகர் - அம்பி (சர்வதேச தமிழ்ப் பணி)
திருமதி. வசந்தா நடராஜா (இலக்கியப் பணி), திருமதி. கனகேஸ்வரி நடராஜா (கல்விப் பணி)
திருமதி கிம் புக் (யுனெஸ்கோ நல்லெண்ணத் தூதுவர்) (அகதிகள் சேவை)
கவிஞர் நிலா குகதாசன் (மறைவுக்குப் பின்னரான விருது)

1999ம் ஆண்டு

திரு. எஸ். தர்மலிங்கம் (சமூக சேவை), திருமதி. தனதேவி மித்ரதேவா (இசைப்பணி)
திரு. 'போர்ட்டலோ' இராஜதுரை (வர்த்தக முயற்சி முன்னோடி விருது)
திரு. பிரெட் பாலசிங்கம் (முதியோர் சேவை விருது)
திரு. கே. எஸ். சிவகுமாரன் (ஜேர்மனி - தமிழ்-கலைப்பணி)
அடல்போ - பெட்டி புரசெல்லி தம்பதிகள் (அகதிகள் சேவை)

PRIME MINISTER · PREMIER MINISTRE

I am pleased to convey my warmest greetings to all those attending the annual awards ceremony of Tamils' Information.

This publication, in its ninth year, serves to highlight the contributions of an important segment of our population. By preserving the legacy of your predecessors, you have fostered a sense of pride in your community and generated awareness about your heritage.

As you gather for this celebration, I would like to offer my best wishes for a most enjoyable evening.

Jean Chrétien



OTTAWA
2000

TORONTO

Mel Lastman



Mayor
City Hall, 2nd Floor
100 Queen Street West
Toronto, Ontario M5H 2N2

Tel: (416) 395-6464
Fax: (416) 395-6440
mayor_lastman@city.toronto.on.ca

A Message from Mayor Mel Lastman

I am delighted to extend greetings and best wishes on behalf of Toronto Council and the more than 2.3 million people of our great City, to all those attending the Ninth Annual Tamils' Information Awards ceremony and to the readers of the Tamils' Information Ninth Anniversary Issue.

Publications that respond to the varied needs and interests of our diverse community are welcomed and encouraged in our city. Tamils' Information is a monthly information digest that provides the Tamil community with important information on government programs and services.

As the most culturally diverse City in the world, Toronto is home to people from 169 different countries, speaking more than 100 languages. Throughout Toronto's history, the people of our City have learned from each other by celebrating and sharing their rich and varied cultures. Association and organizations that provide important community services and assist our many diverse cultural groups are appreciated and supported in our City.

Congratulations to all the award winners and best wishes for a successful event.

Cordially,

Mel Lastman
Mayor

February 2000

National Crime Prevention Centre
Centre national de prévention du crime

Greetings from Barbara Hall

It is with great pleasure that I extend my best wishes and congratulations to everyone associated with the 9th anniversary of Tamils' Information.

This magazine plays a vital role in assisting newcomers to adjust to a new life in this country and to become part of the local community. Tamils' Information has provided a uniquely valuable service to Tamil newcomers in its 9 years. It provides them with up-to-date information and programs that are available to them.

Tamils' Information magazine truly serves the needs of the Tamil community in Canada. It has also benefited the entire community which is better when all Canadians are able to contribute.

I wish to commend you for your past work and wish you well in your future endeavours.

Barbara Hall



Department of Justice Canada | Ministère de la Justice Canada

Solicitor General Canada | Solliciteur général Canada

Pam McConnell

TORONTO

Councillor, Don River
City of Toronto

City Hall, 2nd Floor
100 Queen St. West
Toronto, Ontario
M5H 2N2

Tel: 416 392-7916
Fax: 416 392-7296
TTY: 416 392-1239
councillor_mcconnell@city.toronto.on.ca



25 January 2000

GREETINGS FROM COUNCILLOR PAM McCONNELL

I am so pleased to offer my congratulations to the Tamil Information Centre on the occasion of its ninth anniversary, and I am very happy to be celebrating with you again this year.

This year the Tamil community was instrumental in ensuring that information on municipal elections remains available in Tamil. An attempt "cut costs" by city staff and discontinue translation was seen by many as a real barrier to access to full participation in the civil society we are so justly proud of in this city.

It is this commitment to civil society, and to the strengthening of our communities, that makes me proud to be your representative at City Hall.

I especially look forward to working with the Tamil community on moving forward with the new St. James Town Community Centre. The funding for this new community centre has just been approved and we are about to embark on the design process. Together we have moved the Centre closer to reality, and together we will design a Centre that reflects and serves the wonderful people that make up our community. With your help and your active involvement, we will ensure that the needs and desires of the community will be incorporated into the design.

Again, I appreciate your immense and growing contribution to the community and to our city. And thank you again for making me a part of the anniversary celebrations once more!

Sincerely,

Pamela McConnell

Pam McConnell
City Councillor, Don River

Award Recipient

சேவைக்கு என்றும் இளையவர்



Community Service:
Mrs. Lalitha Broodie
a prominent community worker for over twenty five years in Sri Lanka and Canada, who has specialized in Seniors affairs receives the community servic award and the S.T.Ahilan memorial medal

பதின்மூன்றாம் திகதி அதிர்ஷ்டமில்லாத நாள் என்பது பலரதும் பொதுவான அபிப்பிராயம். ஆடி மாதம் பீடை மாதம் என்பது இந்துக்கள் பலரதும் கருத்து. ஆடி மாதத்துப் பதின்மூன்றாம் திகதியில் பிறந்த இந்த இளம் பெண் (வயதினால் மட்டும் முதியவர்) இரவும் பகலும் ஓடியாடி சமூகப் பணிகளைப் புரிந்து கொண்டிருக்கின்றார். எங்காவது சொற்பொழிவாற்ற அழைத்தால் உரையினை ஆற அமரவிருந்து தயாரித்து கருத்துக்களை முன்வைக்கிறார். முதியவர் பிரச்சனை அல்லது அவர்களது விடயங்களென்றால் அங்கெல்லாம் இவரைத் தவறாது காணலாம்.

திருமதி லலிதா புரூடி இதயத்தால் என்றும் இளையவர்; பேச்சுக்கும் செயலுக்கும் இனியவர். தமிழீழத்தின் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் புகழ்பெற்ற மாணவிகளில் ஒருவர். நான் கல்வி கற்ற அதே கல்லூரியின் மூத்த மாணவி ஒருவரைச் சமூக சேவை விருதுக்கு அறிமுகம் செய்வதில் பெருமையடைகின்றேன்.

திருமதி புரூடி அவர்கள் யாழ்ப்பாணத்தில் இராணுவ அராஜகம் ஆரம்பித்த நாட்களில் யாழ். அன்னையர் முன்னணியை ஆரம்பித்து, கைதான பிள்ளைகளின் விடுதலைக்காகக் குரல் கொடுத்து, பல ஊர்வலங்களை நடத்தி அனைத்து அன்னையர் நெஞ்சங்களிலும் இடம் பிடித்தவர்.

அதுமட்டுமல்ல -
இராணுவ அனர்த்தங்களால் கால்களை இழந்தவர்களுக்காக ஜெய்ப்பூர் செயற்கைக்கால் பொருத்தும் நிலையத்தை யாழ்நகரில் அமைத்து, பல நூற்றுக்கணக்கான எம்மவர் இரு கால்களுடன் (செயற்கை) நடமாட உதவி செய்தவர். அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு ஆலோசகராகவும் இருந்து வந்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சுகாதார கவுன்ஸிலை ஸ்தாபித்து, அதன் நிறைவேற்று அதிகாரக் குழுவின் முக்கியஸ்தராகவும் பணியாற்றி, அதே நிலையத்தில் Psychological & Crisis Counsellor ஆகவும் செயலாற்றினார்.

தேவை ஏற்பட்டிருந்த வேளையில் அதனை ஒரு சேவையாகக் கருதி அவர் ஆற்றிய மேற்சொன்ன பணிகளுக்காக ஒரு சதத்தைக் கூட உபகாரமாகவோ சம்பளமாகவோ பெறவில்லை. அனைத்துமே தொண்டுதான்.

கல்லூரிப் படிப்பை 1950களில் முடித்துக் கொண்ட லலிதா அவர்கள் சமூக ஆலோசகர் பணியில் டிப்புளோமா சான்றிதழ் பெற்றதால், குடாநாடு பாதிக்கப்பட்டிருந்த வேளையில் மக்களுக்கு அளப்பரிய சேவை செய்ய முடிந்தது. அக்காலத்தில் தமிழர் பிரதேசங்களில் இவ்வாறான பயிற்சிகள் பெற்றவர்கள் மிகக்குறைவாக இருந்ததால் இவரது சேவை பெரிதும் வரவேற்பைப் பெற்றது.

இவர் கனடாவில் வாழ்ந்த காலம் ஒரு தசாப்தமேயாயினும், சமூகத்துக்காக ஆற்றிய, ஆற்றி வருகின்ற தன்னலமற்ற பணிகளின் பட்டியல் நீளமானது.

'The Older Womens' Network (OWN) என்னும் அமைப்பு இங்குள்ள பெண்கள் அமைப்புகளில் மூத்ததும், முதுபெண்களின் நலன்களைக் கவனிப்பதில் முன்னணியில் நிற்பதுமாகும். பல்வேறு சமூகங்களையும் இணைத்த இந்த அமைப்புக்குக் கனடிய தேசிய/மாகாண/மாநகர மட்டங்களில் பலமான ஆதரவும் நிதியுதவியும் உண்டு. இதனால் இதன் சேவைகளும் விரிவானவை. இந்த OWN அமைப்பில் 1994ம் ஆண்டிலிருந்து உற்சாகமான ஒரு உறுப்பினராக லலிதா புரூடி அவர்கள் செயலாற்றி வருகின்றார். அத்துடன் 1997ம் ஆண்டிலிருந்து இதன் கவுன்ஸிலிலும் ஒருவராக அமர்ந்திருப்பது தமிழ்ப் பெண்களுக்கு மட்டுமன்றி கனடிய தமிழர் சமூகத்துக்கே மதிப்பானது. இந்த அமைப்பினில் முதன்முதலாக இணைந்த தமிழர் இவரே என்பதும் குறிப்பிடப்பட வேண்டியது. இந்த அமைப்பின் spirituality group இன் அங்கத்தவராகவும் செயலாற்றி வருகின்றார்.

Humber River Regional வைத்தியசாலையில் ஒரு தொண்டராகவும், பிஞ்ச் பகுதியில் அமைந்துள்ள Community Mental Health சிகிச்சை நிலையத்தில் ஒரு Volunteer Support கவுன்ஸிலராகவும் 1992ம் ஆண்டுகளிலிருந்து பணியாற்றி வருகின்றார்.

ஒன்ராறியோ முதுதமிழர் மன்றம், ஒன்ராறியோ சத்ய சாயி சமித்தி, சுஹியோ மிஹிகாரி (Sukiyo Mihikari - a worlwide Spiritual Orgnaisation from Japan) ஆகியவைகளிலும் சுறுசுறுப்பான ஒருவராக இருந்து வருகின்றார்.

ஆங்கிலம் தமிழ், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் பேசும், எழுதும் வளத்தினைப் பெற்ற லலிதா அவர்கள் இலக்கியத் துறையிலும் நீண்ட ஈடுபாடு கொண்டவர். இவரால் எழுதப்பெற்ற 'நீதியுடனான சமாதானம்' (Peace with Justice) என்னும் ஆங்கிலக் கவிதை நூல் 1998ம் ஆண்டு கனடாவில் வெளியிடப்பெற்றது. 72 பக்கங்களைக் கொண்ட இந்த நூலின் மூன்றாம் பதிப்பும் வெளியாகிவிட்டது என்பது இதன் தரத்திற்கும் விற்பனைக்கும் சான்று கூறுவது. OWN நிறுவனமே இந்த நூலினை வெளியிட்டது.

கனடாவிற்கு வந்த நாட்களிலிருந்து கலைஞர் கோணேஷினால் நடத்தப்பெறும் வானொலி நிகழ்ச்சிகளில் இவரது நேரடிப் பங்களிப்பு இருந்து வருகின்றது. நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும், ஒலிபரப்பாளராகவும் கூட இவர் தமது நேரத்தினைப் பயன்படுத்தி வருகின்றார் Asian Multicultural Centrum என்னும் பெயரில் சர்வதேசமும் ஒலிபரப்பாகும் International Tamil Broadcasting Corporation நிறுவனத்தின் நிறைவேற்று அதிகார இயக்குனராக (Executive Director) லலிதா புரூடி அவர்கள் இயங்கி வருகின்றார். ஊதியம் பெறாத இவரது சமூக சேவைகளில் இதுவும் ஒன்று.

தமது கணவருடன் கனடாவில் வாழ்ந்து வரும் இவருக்கு ஐந்து பிள்ளைகள் உள்ளனர். அனைவருமே இவரது அயராத பணிகளுக்கு ஒத்தாசையாக இருந்து வருவது இவருக்குக் கிடைத்த கொடை எனலாம்.

தொடர்ந்து இருபத்தியைந்து வருடங்களுக்கு மேலாகச் சமூகப் பணியுடன், இலக்கிய-வானொலிச் சேவைகளும் புரிந்து வருகின்ற லலிதா புரூடி அவர்களுக்கு தமிழர் தகவலின் சமூக சேவைக்கான விருதுடன், தமிழீழம் சென். ஜோன்ஸ் கல்லூரியின் மாணவர் தலைவனாகவிருந்து கல்வியிலும் விளையாட்டிலும் முன்னணியில் திகழ்ந்த எஸ். தி. அகிலன் ஞாபகார்த்த தங்கப் பதக்கமும் வழங்கப்பெறுகின்றது.

நஞ்சி திரு

Award Recipient

விமர்சனக் கலையை வளர்த்துவரும் சிந்தனைச் செல்வர்



Literary Contribution:.
This award will be presented to **Mr.S. Pathmanathan,** an outstanding Tamil writer/critic/author and lecturer of the Teacher's Training College in Sri Lanka. He also receives the S. Ledchumanasamy memorial medal.

உளவியல் துறையிலும் இலக்கியத் துறையிலும் அறிவியல் வளர்க்கும் அறிஞர் திரு. எஸ். பத்மநாதனின் சொந்த ஊர் உரும்பராய். சீனிவாசகம் - செல்லாச்சி தம்பதிகள் இவரது பெருமைக்குரிய பெற்றோர்கள். உரும்பராய் இந்துவும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாவும் எண்ணையும் எழுத்தையும் வழங்கிய கண்ணிகர் கூடங்கள்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி இவருக்குப் பேராதனைப் பல்கலைக் கழகத்துக்குப் பாதையைக் காட்டியது, 1964ல். அந்தக் கழக வாசனையை நான்கு ஆண்டுகள் சுவாசித்து, புவியியல் பூங்காவில் B.A. (Hons) என்னும் பூவைக் கொய்து கொண்டார். கொய்த சிறப்பால் பல்கலைக் கழகத்திலேயே உதவி விரிவுரையாளர் பதவியும் கிடைத்தது.

பல்கலைக் கழக வாழ்வு கலையுலகக் கதவுகளையும் திறந்து வைத்தது. அங்கு விவாத அரங்கத்துக்குத் தலைமை தாங்கும் அளவுக்கு இவரது நாவன்மை யாவரையும் கவர்ந்திருந்தது. அங்கு படிக்கும் காலத்திலேயே (1965) இவரது முதற் சிறுகதை மல்லிகையில் வெளிவந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

சுவர்களை உடைத்துச் சுதந்திரமாகப் பறக்க விரும்பிய இளைய வயசுக்கு மத்திய மாகாணப் பாடசாலைகளுக்கான சமூகக் கல்வி ஆலோசகர் பதவி நல்லதாகப்பட்டது. அந்தக் காலம் (1971 79) மத்திய மாகாணத்தில் பல நூல் வெளியீடுகள், கலை விழாக்கள், கருத்தரங்கங்கள் முதலியன இதமுற அடிக்கடி நடைபெற்ற காலம் - அவற்றையெல்லாம் இயக்கிய நாதன் இந்தப் பத்மநாதன். நுவரெலியாவில் இவரது நாடகத்துக்கு முதற் பரிசும் கிடைத்தது.

கொழும்புப் பல்கலைக் கழகத்தில் கல்வி டிப்ளோமாப் படிப்பை மேற்கொண்டிருந்த காலத்தில் இலங்கை வானொலியில் கவிஞர் அம்பியுடன் சேர்ந்து 'அறிவியல் அரங்கம்' என்னும் நிகழ்ச்சியை நடத்திய சிறப்பும் இவருக்கு உண்டு.

1980ல் யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரிக்கு மாற்றம் கிடைத்தது. 1983ல் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார்.

யாழ்ப்பாணத்தில் தொழில் சார்ந்த கடமைகளுக்கு அப்பால் இவரது கலை இலக்கிய முயற்சிகளும் தொடர்ந்தன. பட்டிமன்றங்கள், கவியரங்கங்கள் என்பவை இவரால் கலகலப்பெய்தின.

சொற்பொழிவுகள் மக்களுக்கு அறிவையூட்டின; அறிஞர்களின் சிந்தனைகளுக்கு விருந்தளித்தன.

மௌனகுரு அவர்களின் நாடகங்களுக்கு விமர்சனங்கள் எழுதியது முதலாக விமர்சனத் துறையில் இவரது பெயர் பிரபல்யமாகத் தொடங்கியது. இவரது விமர்சனங்களையும் பிற சிந்தனைக் கட்டுரைகளையும் ஈழநாடு, வீரகேசரி, தினபதி ஆகிய நாளிதழ்கள் வெளியிடுவதில் பெருமையடைந்தன.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் M.A. பட்டப் படிப்பில் ஓர் ஆண்டை முடித்த நிலையில் நாட்டு நிலைமை திரு. பத்மநாதனைத் துரத்தியடித்தது.

1985ல் கனடாவுக்குப் புலம்பெயர்ந்தார். மொன்றியால் புதுவாழ்வு அளித்தது. தமிழர் ஒளி அமைப்புடன் ஒன்றிணைந்தார் - திட்ட ஒருங்கிணைப்பாளராக. தமிழர் ஒளியின் நூல் நிலையத்தை நடத்தவும் வருடாந்த விழாக்களை நடத்தவும் பெரிதும் உதவினார். மிகவும் முக்கியமாக, இளங்கீற்று என்னும் இளைஞர் முயற்சிகளுக்கும் வளர்ச்சிகளுக்கும் முன்னின்று உழைத்தார். தமிழ், ஆங்கில வகுப்புகளை ஆரம்பிக்க உதவியதோடு, ஆசிரியராகவும் தொண்டு செய்தார்.

1987 முதல் ரொறன்ரோ வாசியாகியுள்ள திரு. பத்மநாதன் அவர்களின் கலையார்வமும் பன்முகத் திறமைகளும் ரொறன்ரோ வாழ் தமிழ் மக்களது கலை இலக்கிய முயற்சிகளுக்கும் ஏற்றம் தரலாயின. வானொலிகள், பத்திரிகைகள் வாயிலாகத் தமது சிந்தனைகளை மக்கள் முன் வைத்து இவர் முன்னேறி வருவதைப் பலரும் அறிவர். கீதவாணியில் இவர் ஆற்றிய திருக்குறள் விளக்கவுரைகள் இன்னமும் பலர் செவிகளில் ஒலித்த வண்ணம் இருக்கின்றன. நம்நாடு பத்திரிகையில் இவர் எழுதிய உளவியற் கட்டுரைகளைத் தொகுத்து 'சிந்தனைப் பூக்கள்' என்ற பெயரில் நம்நாடு 1996ல் நூலாக வெளியிட்டுள்ளது. 1997ல் ஒன்ராறியோ அரசு இவரின் சமூகத் தொண்டினைப் பாராட்டி விருது வழங்கிக் கௌரவித்தது.

திரு. பத்மநாதனுக்கு ஏற்கனவே கடவுளால் ஒரு விருது வழங்கப்பட்டுள்ளது. அது அவரது அழகுச் சிரிப்பு - அழகானவற்றைக் கண்டு சிரிக்கும் சிரிப்பு. இந்தச் சிரிப்பில் மயங்கினார் திரு. நாகமணி தம்பதிகளின் மகள் ஞானயோகராணி. 1971ல் இருவரும் ஒருவராயினர். இரண்டு பெண்கள். மூத்த மகள் மீரா கணக்காளர். சுபத்திரா தந்தைக்குச் சவால் விடும் வகையில் உளவியல் துறையில் யோக் பல்கலைக்கழகத்தில் B.A (Hons.) பட்டம் பெற்றுள்ளார். இப்பொழுது B.Ed. படித்து வருகின்றார்.

நூல்களைச் சதா நுகர்ந்து கொண்டிருக்கும் தேன் வண்டு இவர். அந்த அனுபவமும் அறிவின் ஆழமும் சேர்ந்து இவர் எழுதும் நூல் விமர்சனங்களுக்கு வெளிச்சம் கொடுத்து வருகின்றன. விமர்சனக் கலை இவரால் விளக்கம் பெற்று வருவதால் கனடிய இலக்கியத் துறையும் கனதி பெற்று வருகின்றது.

திரு. பத்மநாதன் அவர்களுக்கு இலக்கிய சேவைக்கான 'தமிழர் தகவல்' விருதுடன், 'உதயன்' பத்திரிகை பிரதம ஆசிரியர் திரு. ஆர். என். லோகேந்திரலிங்கம் தமது மைத்துனர் த. இலட்சுமணசாமி நினைவாக அளிக்கும் தங்கப் பதக்கமும் வழங்கப்பெறுகின்றது.

வி. கந்தவனம்

Award Recipient

இசையுலகின் இனிய மதி திருமதி விஜயலஷ்மி சீனிவாசகம்



Tamil Music:
'Sangeetha Vidwan' Srimathy **Vijayaluxmy Seenivasagam** is being recognized for her dedicated contribution for Tamil music for over two decades. She has been a music teacher, a classical singer, and stage/radio artist. Mrs. Srinivasan is to be presented with the S. K. Ampalavanapillai memorial medal.

கனடாவுக்கு வந்த நாள் முதலாகத் தமிழ்க் கனடியரைத் தமது கனிவான கானத்தால் கவர்ந்து வரும் இசைக்குயில் திருமதி விஜயலஷ்மி சீனிவாசகம் இணுவிலில் பிரபல இசைக் குடும்பத்தில் பிறந்து உரும்பராயில் வாழ்ந்தவர். அங்கப்பா - சிவயோகம் தம்பதிகள் இவரது பெற்றோர்.

இராமநாதன் கல்லூரி இவரது கல்விக் கோயில். 8ம் வகுப்புப் புலமைப் பரிசிலைப் பெற்றுத் தொடர்ந்து க.பொ.த. உயர்தர வகுப்புவரை அங்கேயே கல்வி கற்றார்.

இசைஞானம் இவர் இரத்தத்தோடு கலந்ததொன்று. இராமநாதன் கல்லூரியும் இவரது குடும்பமும் அதனை வளர்த்தெடுத்தன.

மூத்த சகோதரர் திரு. அ. சிவசாமி பெயர்பெற்ற வயலின் வித்துவான். இவரிடம் வாய்ப்பாட்டையும் வயலினையும் சிறுவயதிலிருந்தே கற்று வந்தார். அதனால் விஜயலஷ்மிக்கு வட இலங்கைச் சங்கீதப் பரீட்சை ஒன்றும் கடினமாக இருக்கவில்லை.

இந்தப் பரீட்சையில் சித்தி பெற்று 1977ல் சங்கீத ஆசிரியராக மன்னார் புனித சவேரியர் பெண்கள் பாடசாலையில் நியமனம் பெற்றார்.

1979ல் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரிக்குத் தெரிவாகி 1981ல் பயிற்றப்பட்ட ஆசிரியர் பத்திரத்தையும் பெற்றார்.

1982ல் முதல் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, காரைநகர் யாழ்ரன் கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியப் பணி புரிந்தார்.

அக்காலத்தில் சங்கீத மேதைகள் திரு. சித்தூர் சுப்பிரமணியம் பிள்ளை, திரு. T.M. தியாகராசா ஆகியோரிடம் வாய்ப்பாட்டும் கன்னியா குமாரியிடம் வயலின் இசையும் கற்கும் வாய்ப்புகளையும் இவர் பெற்றார்.

இவ்வித மேலதிக பயிற்சிகள் வாய்ப்பாட்டிலும் வயலினிலும் பல கச்சேரிகளைச் செய்து இசைத் துறையில் தமக்கென ஓர் இடத்தையும் பிடித்துக் கொள்ள இவருக்குப் பெரிதும் உதவின.

இவரது திறமையை நன்கு பயன்படுத்திய தாபனங்களில் இலங்கை வானொலியும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

1987ல் இவரது குடும்பம் கனடாவுக்குப் புலம்பெயர்ந்தது. 1988ல் 'நாதாலயா' என்னும் பெயரில் இசை பயிற்றுவிக்கும் பகுதிநேர வகுப்புகளை ஆரம்பித்தார். நாளடைவில் இதனை ஒரு முழுநேரப் பாடசாலையாக்கி நூற்றுக்கும் மேற்பட்ட மாணவருக்கு வாய்ப்பாட்டு, வயலின் இசை வகுப்புகளை நடத்தி வருகின்றார்.

அதுமட்டுமன்றி கனடா உலகத் தமிழர் இயக்கம் நடத்தும் தொழில்நுட்பக் கல்லூரியின் நுண்கலைப் பிரிவுக்கும் பொறுப்பாக இருந்து வாய்ப்பாட்டு, வயலின் ஆகிய பாடங்களைப் புகட்டி வருகின்றார்.

கனடாவில் மட்டுமன்றி அமெரிக்கா, ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய ஐரோப்பிய நாடுகளிலும் திருமதி விஜயலஷ்மி அவர்கள் கச்சேரிகள் நடத்தியிருக்கின்றார்கள்.

ஜேர்மனியில் ஹாம் பிள்ளையார் கோயில் கட்டிட நிதிக்கு இசைக் கச்சேரி நிகழ்த்தி 70,000 மார்க் சேர்த்துக் கொடுத்த பெருமை இவருக்கு உரியது.

வல்ல கலைஞர்களைத் தேடி நல்ல கௌரவங்கள் வருவது இயற்கை. திருமதி விஜயலஷ்மி சீனிவாசகத்தையும் பல பாராட்டுகளும் பட்டங்களும் நாடி வந்தன.

1993ல் ஒன்ராறியோ மாநில அரசு இவரது பணியைப் பாராட்டி விருது வழங்கிக் கௌரவித்தது.

அதே ஆண்டு பேர்லின் நகரத்தில் நடைபெற்ற மூன்றாவது பன்னாட்டு மாநாட்டில் இவர் வழங்கிய கானாமிர்தம் 'இசைக் குயில்' என்னும் பட்டத்தை இவருக்குப் பெற்றுக் கொடுத்தது.

1994ல் உலகத் தமிழர் இயக்கம் கப்டன் வானதியின் ஞாபகார்த்த விருதினை வழங்கி இவரைக் கௌரவித்தது.

இராமநாதன் கல்லூரிப் பழைய மாணவிகள் சங்கம், தமிழ் இசைக் கலாமன்றம், ஒட்டாவா கனடாத் தமிழ்ச் சங்கம் ஆகிய அமைப்புகளும் திருமதி விஜயலஷ்மி அவர்கள் இசைத் துறைக்கு ஆற்றிவரும் தொண்டினைப் போற்றிக் கௌரவங்கள் செய்துள்ளன.

இவரின் பாட்டுகள் ஒலிநாடாக்களாகவும் வெளிவந்துள்ளன.

'தெய்வீக கானங்கள்' என்னும் இசைத் தட்டு வெளியீடு 1996ல் பெருவிழாவாக நடத்தப் பெற்றது.

இசையே வாழ்வாகக் கொண்ட விஜயலஷ்மி முன்மாதிரியான ஒரு குடும்பப் பெண்மணியுமாவார்.

பாடறிந்து ஒழுகும் பண்பாளர் திரு. சீனிவாசகம் அவர்களுக்கும் விஜயலஷ்மிக்கும் திருமணம் 1977ல் நடந்தது.

பிரதீபனும் பிரவீணாவும் இவர்களது இல்லறப் பரிசுகள். இருவருக்குமே இசை வாழைப்பழம் மாதிரி.

தமிழீழத்தில் இசைக்கலைத் துறையில் இவர் பெற்ற புகழினை மதித்தும், கனடாவில் இசைக் கலை வளர்ச்சிக்கு இவர் ஆற்றிவரும் பணிகளைப் போற்றியும் இவருக்கு டாக்டர் அ. சண்முகவடிவேல் அவர்கள் தமது தந்தையார் எஸ். கே. அம்பலவாணபிள்ளை ஞாபகார்த்தமாக வழங்கும் தங்கப்பதக்கமும் சூட்டப்பெறும்.

கவிநாயகர்

We were very proud of Maran when he was a student at Carleton University and as an alumnus of our engineering program. Maran was instrumental in establishing the support programs that have resulted in Carleton University being home to one of the largest Tamil student group outside of Asia. He was one of the founders the Carleton University Tamil Students' association and helped initiate the Tamil Alai culture program on CKCU radio station. This demonstrates the commitment your son displayed to his fellow students and the Tamil community at Carleton.


Carleton University is very honoured that family and friends of Maran have chosen to establish a student award in his name. The students award will be endowed so that the interest can be used to benefit students on an annual basis. in this way, Maran's tremendous contribution to Carleton University will be remembered in perpetuity.

I would like to congratulate the Tamil Community for their support of the Maran Kanagasabapathy Fund. It is a wonderful legacy for someone who gave so much to his community.

Richard Van Loon
President
Carelton University
Ottawa, Canada.

Award Recipient

கனடிய மாணவர் சமூகத்தில் மணிமாறன் ஒரு சின்னம்



Posthumous Award:
This award is being posthumously conferred on the Late **Manimaran Kanagasabapathy**, former president of the Carlton University Tamil Students Association, who passed away last october in Canada at the age of 33. He was a distinguished student at the university and a pioneer in Tamil Radio Broadcast (Ottawa) and made tremendous contribution towards educational and sports activities. The award and S. Ponnampalam memorial medal will be accepted by late Manimaran's sister Miss. Manivillie Kanagasabapathy.

காள்ற்ரன் பல்கலைக் கழகத் தமிழ் மாணவர் மன்றத்தை இன்று அறியாதவர்கள் யாரும் இல்லை. தமிழர் கலை, கலாசாரத்தை பரப்புவது மட்டுமல்லாமல், தாய் நாட்டில் என்றும் தமிழ் மக்களுக்குத் தனது அரிய சேவையை ஆற்றி வருவதே இதன் காரணம். இப்படி வளர்ந்து நிற்கும் தமிழ் மன்றத்துக்கு ஆரம்ப வித்திட்டவர்களில் முக்கியமான பங்கு அமரர் திரு. மணிமாறன் கனகசபாபதியையே சாரும்.

திரு. மணிமாறன் கனகசபாபதி, ஒரு தன்னலம் கருதாத பொதுநலவாதி. நல்ல விடயங்களையும் கருத்துக்களையும் தீர்க்க தரிசனத்துடன் சிந்தித்துச் செயலாற்றி அவற்றில் வெற்றியும் கண்டவர். காள்ற்ரன் பல்கலைக்கழகத்தில் கணனிப் பொறியியல் பீடத்தில் கல்வி பயின்று கொண்டிருந்த திரு. மணிமாறன், 93-94ம் ஆண்டுக்கான, காள்ற்ரன் பல்கலைக் கழகத் தமிழ் மாணவர் மன்றத்தின் தலைவருமாவார். அவர் தலைவராக இருந்த காலப்பகுதியில், பல பகுதி நேர வகுப்புகளை இதர தமிழ் மாணவர்களுக்கு தமிழ் மன்றம் வழங்கி வந்தது. அதிலும் கணனிப் பாடத்தினை திரு. மணிமாறன் தானே ஏனைய மாணவர்களுக்கு பயிற்றுவித்து வந்தார்.

எமது தாயகத்தில் அல்லலுறும் தமிழ் மக்களுக்கு எப்படியாவது உதவ வேண்டும் என்ற அவரது ஆர்வமும், அதன் விளைவாக 94ம் ஆண்டு தை மாதத்தில் நடைபெற்ற கலைவிழாவின் மூலம் கிடைக்கப்பெற்ற பணத்தை, திரு. மணிமாறன் தானே முன்னின்று, தமிழர் புனர்வாழ்வு நிதிக்காக வழங்கினார்.

ஒட்டாவா வாழ் தமிழர்களுக்காக எப்படியாயினும் ஒரு தமிழ் வானொலி சேவை நடத்த வேண்டும் என்ற திரு. மணிமாறனின் அரிய முயற்சியின் விளைவாக, "தமிழ் அலை" என்ற வானொலிச் சேவை ஒட்டாவாவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இன்றும் தனது சேவையை வெற்றிகரமாக வழங்கிக் கொண்டிருக்கும் "தமிழ் அலை" வானொலியை நடத்தி வரும் சில புதிய மாணவர்களுக்கு, திரு. மணிமாறன் தான் இதை ஆரம்பித்து வைத்தவர் என்ற உண்மை ஒருவேளை தெரியாமல் இருக்கலாம்.

எத்தனையோ பொதுத் தொண்டுகளுக்கு மத்தியிலும் தனது கல்வியை வெற்றிகரமாக காள்ற்ரன் பல்கலைக்கழகத்தில் தொடர்ந்து கொண்டிருந்த நேரம் தனது மூன்றாம் வருடத்தில், IEP மூலம் பதினாறு மாத தொடர்வேலைக்காக, Nortel நிறுவனத்தால் காள்ற்ரன் பல்கலைக்கழகத்தில் இருந்து திரு. மணிமாறன் அவர்களே தெரிவு செய்யப்பட்டார். IEP மூலம் வேலை பெற்ற முதல் காள்ற்ரன் பல்கலைக்கழகத் தமிழ் மாணவனும் திரு. மணிமாறன் அவர்களே. திரு. மணிமாறன் 1995ம் ஆண்டு வைகாசி மாதத்தில், காள்ற்ரன் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில், கணனிப் பொறியியல் பீடத்தின் உயர்நிலை (High distinction) பட்டதாரியாகப் பட்டம் பெற்றார்.

தனது பட்டப்படிப்பின் பின்பு, ஒட்டாவா நகரில் உள்ள Nortel இல் நிரந்தர வேலை பார்த்து வந்தார். பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறிய பின்பும் திரு. மணிமாறன் அவர்களின் பொதுச்சேவை தமிழ் மன்றத்துக்குத் தொடர்ந்து கொண்டிருந்தது. கல்வி, விளையாட்டு, கலை என அவரது பொதுப்பணிகள் மன்றத்துக்கு நீண்டு கொண்டே போயின.


கடந்த வருடமும் வழமைபோல் கலைவிழாக்கள், விளையாட்டுப் போட்டிகள் என ஒட்டாவா மாநகரமே களைகட்டி இருந்த போது, பேரிடியாக அந்தச் செய்தி எல்லா தமிழ் மாணவர்களின் இதயத் துடிப்பையும், ஒரு நிமிடம் நிறுத்தி வைத்தது. எல்லோருடைய பிரார்த்தனைகளையும் அலட்சியப் படுத்திய இறைவன் - அவரது 33 ஆவது வயதிலேயே - அவரது பிறந்த நாள் அன்றே - 1999 அக்டோபர் 23ம் திகதி தன்னிடம் அழைத்து விட்டார்.

பிரபல கல்விமான், அதிபர் பொ. கனகசபாபதி - அமிர்தகௌரி தம்பதிகளின் புதல்வரான மணிமாறனின் பெயரில் காள்ற்ரன் பல்கலைக் கழகம் இருபதாயிரம் டாலர்களில் புலமைப் பரிசில் நிதியமொன்றை ஆரம்பித்துள்ளது.

குறுகிய வயதினில் சமூகத்துக்காகப் பாரிய பணிகளைப் புரிந்துள்ள மாறனின் சேவைகளை வியந்து மறைவுக்குப் பின்னரான விருதுடன், நோர்வேயில் வசிக்கும் சங்கீதபூஷணம் பொன். சுபாஷ் சந்திரன் தமது தந்தையார் சண்முகம் பொன்னம்பலம் நினைவாக வழங்கும் தங்கப் பதக்கமும் வழங்கப்பெறுகின்றது. இந்த விருதினையும் பதக்கத்தையும் அவரது சகோதரி மணிவிழி கனகசபாபதி விழாவில் பெறுகின்றார்.

Award Recipient

கையிலே கலை வண்ணம் கண்ட சித்திர சிற்பக்கலை வேந்தன்



Art & Cultural Enrichment:
Mr. Saravanamuthu Jeyarajah
a well renowned sculptor and mural artist will be honoured with this award for his marvellous contribution to Hindu temples in Sri Lanka and Canada for over 30 years. He will be decorated with S.T.Ahilan Memorial medal.

சிற்ப கலாகேசரி;
சிற்பக்கலை அரசன்;
சிற்பக் கலா ரத்தினம்;
சிற்பக் கலை மாமணி;
சிற்பக் கலைஞானி ஆகிய ஐந்து பட்டங்களையும் தன்னகத்தே கொண்டும் எந்தவிதமான ஆடம்பரமோ படாடோபமோ இல்லாது நடமாடும் அடையாளம் தேவையற்ற அற்புதச் சிற்பி அவர்.

'சரவணாஸ்' ஜெயராஜா அவர் என்பதற்கு முன்னுரை எதுவும் வேண்டியதில்லை. 'சரவணாஸ்' அவரது கலைக்கூடத்தின் பெயர் மட்டுமல்ல; அவரை இப்பூவுலகுக்குத் தந்த தந்தையார் சரவணமுத்து அவர்களின் பெயரிலிருந்து வந்தது. தாயார் திருமதி மகேஸ்வரி சரவணமுத்து அவர்கள். தமிழீழத்தின் மயிலிட்டி இவரது பிறந்தகம்.

பதினெட்டு வயது இளைஞனாக இருக்கையில் 1972ம் ஆண்டில் சிறிய தந்தையார் 'கலாகேசரி' ஆ. தம்பித்துரை (திருநெல்வேலி) அவர்களுடன் அவரது பட்டறையுள் சிற்பக் கலையில் இட்ட 'பிள்ளையார் சுழி', இன்று கலைஞர் ஜெயராஜா அவர்களை வடஅமெரிக்காவின் தலைசிறந்த சிற்பியாக உயர்த்தியுள்ளது. அந்தப் 'பிள்ளையார் சுழி' சுதுமலை அம்மன் கோவில், குப்பிழான் கற்கரை கற்பக விநாயகர் கோவில், நுணாவில் கொல்லன்கிராய் பிள்ளையார் கோவில், மாத்தளை ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயம் ஆகியவற்றின் தேர்த் திருப்பணிகளாக அமைந்தன.

ஆறாண்டுகளின் பின்னர், 1978ம் ஆண்டு தைப்பூச தினத்தன்று மயிலிட்டிப் பிள்ளையாருக்கான அழகிய சித்திரத் தேரினை அமைக்கும் பணியைத் தாமே தனித்து ஆரம்பித்து, 1979 செப்டம்பர் முதலாம் நாள் அதன் வெள்ளோட்டத்தை நடத்தியதுடன், கலைஞரின் புகழ் ஆலயங்களின் உட்பிரவாகம் எங்கும் பரவலாயிற்று. அவரை நம்பியே சித்திரத் தேர்களை நிர்மாணிக்கப் பல கோவில்களும் முன்வந்தன.

அடுத்ததாக இவரால் வல்வெட்டித்துறை ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தானத்துக்கான பிள்ளையாருக்கும் முருகனுக்கும் தனித்தனியாகத் தேர்கள் அமைக்கப்பெற்று 1980 ஏப்ரல் 28ம் நாள் வெள்ளோட்டம் கண்டன!

இதனையடுத்து, 1980க்கும் 1986ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் எட்டு ஆலயங்களுக்கான தேர்களை நிர்மாணித்து ஒரு சாதனை நிகழ்த்தினார். வல்வெட்டித்துறை சிவன் கோவில் சித்திரத் தேர், ஊரெழு ஸ்ரீமீனாட்சி அம்மன் தேர், மாசியப்பிட்டி ஸ்ரீமீனாட்சி அம்மன் தேர், நாவலப்பிட்டி ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோவில் தேர், காரை-நகர் திக்கரை முருகன் தேர், பொலிகண்டி உப்புக் கிணற்றடிப் பிள்ளையார் தேர், புங்குடுதீவு அரிநாயகம்புலம் பிள்ளையார் தேர், புங்குடுதீவு சிவன் கோவில் சித்திரத் தேர் ஆகியவைகளை நிர்மாணித்துத் தமது முப்பத்தியிரண்டாவது வயதினுள் தம் பெயரினைத் தமிழீழக் கலையேட்டில் பதித்த பெரும் பெருமைக்குரியவர் ஜெயராஜா அவர்கள். வரலாற்றுப் புகழ்மிக்க செல்வச் சந்நிதி சித்திரப் பெருந்தேரின் மேல் விதானத்தையும், அச்சுவேலிக் காட்டுமலைக் கந்தசாமி கோவில் மஞ்சத்தினையும் உருவாக்கிய பெருமையும் இவருக்குரியது.

இலங்கையின் உள்நாட்டு யுத்தம் காரணமாக 1986ம் ஆண்டு இவரும் கனடாவுக்குப் புலம்பெயர நேர்ந்தது. ஒரு வகையில் கனடாவுக்கு அதிர்ஷ்டமாக அமைந்தது என்றும் சொல்லலாம்.

தமது முதலாவது திருப்பணியாக 1987ல் றிச்மன்ட்ஹில் இந்து ஆலயத்தின் பிள்ளையார், முருகன், பெருமாள் சந்நிதிகளுக்குச் சித்திர வேலைப்பாடமைந்த கதவுகளை உருவாக்கினார். வடஅமெரிக்காவின் மிகப்பெரிய இந்து ஆலயமான மேற்படி ஆலயத்தின் வேலையுடன், வடஅமெரிக்காவின் ஆலயப் பணிகளை ஆரம்பித்தார் கலைஞர். இவரது முதலாவது தேர் நிர்மாணப் பணியும் இந்த ஆலயத்தில்தான் ஆரம்பமானது. 1994ம் ஆண்டு இவ்வாலயத்தின் பிள்ளையார், முருகன் தேர்களை உருவாக்கி அனைவரதும் பாராட்டினைப் பெற்றார்.

எஸ். ரீ. சிங்கம்

1995ம் ஆண்டு மொன்றியலில் முருகன் கோயில் அமைக்கும் பணியினை நிறைவு செய்தார். அதேயாண்டில் மொன்றியல் ஸ்ரீதுர்க்கை அம்மனுக்கு சூரன் அமைத்து அனைவரையும் வியப்பிலாழ்த்தினார். இங்குள்ள ஆலயங்களுக்கு எலி, பாம்பு, மயில், குதிரை, காராம்பசு, யானை, அன்னம், புலி என்று முப்பதுக்கும் அதிகமான வாகனங்களை உருவாக்கியுள்ளார்.

1996ம் ஆண்டு இவரது சித்திரக் கலைப் பணியின் முக்கியமான ஆண்டு. கனடாவில் தமது முதலாவது சித்திரத் தேரினை மொன்றியல் முருகன் கோவிலுக்கு அமைத்து செப்டம்பர் 14ம் நாள் வெள்ளோட்டம் விட்டுக் கனடிய மண்ணில் வரலாற்றுச் சாதனையை நிகழ்த்தினார் ஜெயராஜா அவர்கள். அன்றைய தினம் கியுபெக் சைவ மகா சபையினர் வழங்கிய 'சிற்பக்கலை அரசன்' பட்டம் அவருடைய பெயருடன் இணைந்துவிட்டது.

1997ம் ஆண்டில் றிச்மன்ட்ஹில் ஆலயத்துக்கு உள்வீதிக்கான தங்க ரதத்தினையும், 1999ல் மிஸிஸாகா ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயத்துக்கு தங்கத் தேரினையும் பக்தர்கள் வியப்புறும் வண்ணம் அமைத்து, மேற்படி ஆலய சபைகளினால் முறையே 'சிற்பக் கலா ரத்தினம்', 'சிற்பக் கலைஞானி' ஆகிய பட்டங்களையும் பெற்றார்.


ரொறன்ரோ ஸ்ரீமீனாட்சி அம்மன் ஆலயம், மிஸிஸாகா ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயம், மொன்றியல் பிள்ளையார் கோவில், ரொறன்ரோ சிவா விஷ்ணு ஆலயம், ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலயம் ஆகியவை இவரது கைவண்ணத்துக்கும் கலைவண்ணத்துக்கும் நற்சின்னங்களாக நிமிர்ந்து நிற்பவை. இந்த ஐந்து ஆலயங்களையும் குறுகிய காலத்துள் அழகிய வேலைப்பாடுகளுடன் நிர்மாணித்துள்ளமை பாராட்டுதற்குரியது. ரொறன்ரோ சிவா விஷ்ணு ஆலயம் இவருக்கு 'சிற்பக் கலைமாமணி' பட்டத்தினை வழங்கியது. முதன்முதலாக 1980ல் வல்வெட்டித்துறை ஸ்ரீமுத்துமாரியம்மன் தேவஸ்தானம் 'சிற்பகலாகேசரி' பட்டம் வழங்கியதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

இலங்கையில் பயிற்றப்பட்ட ஆசிரியையான சியாமளாதேவியைத் திருமணம் புரிந்து நான்கு பிள்ளைகளின் தந்தையாகவிருக்கின்றார். இவரது பணிகள் அனைத்துக்கும் துணைவியார் துணையாக இருந்து வருவதால் எல்லாமே சிறப்பாகவும் சீராகவும் முடிவுபெறுகின்றன எனலாம்.

தொடர்ந்து இருபது வருடங்களுக்கு மேலாகச் சித்திரக் கலைப் பணியும், திருப்பணியும் புரிந்து வருகின்ற கலைஞர் ச. ஜெயராஜா அவர்களுக்கு தமிழர் தகவல் வீருதுடன், தமிழீழம் சென். ஜோன்ஸ் கல்லூரியின் மாணவர் தலைவனாகவிருந்து கல்வியிலும் விளையாட்டிலும் முன்னணியில் திகழ்ந்த எஸ். தி. அகிலன் ஞாபகார்த்த தங்கப் பதக்கமும் வழங்கப்பெறுகின்றது.

Award Recipient

மூன்று தசாப்தங்களின் முன்னணிச் சேவையாளர்



Mr. N. Sivalingam, popularly known as *'President'* Siva, founder of Tamil Eelam Society of Canada & Richmond Hill Hindu Temple and a prominent figure in Canadian National and Community organisations has made outstanding contributions for the past 33 years towards the betterment of the lives of Tamils in Canada. Siva will be honoured with a special award title 'Man of the decades - Canada' along with Shri S. Panchadchara Kurukkal memorial medal.

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக புலம்பெயர்ந்த மண்ணில் தனது இளமை முதுமைக் காலங்களை அனுபவித்து இங்கு வாழ்ந்து வரும் எமது ஈழத் தமிழ் சமூகத்தினருக்காக சமூக சேவையாற்றிய ஒருவரே 'தலைவர் சிவா' என்று அனைவராலும் அன்பாக அழைக்கப்படும் திரு. நா. சிவலிங்கம் ஆவர். யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள இளவாலையில் திரு. திருமதி. நாகரத்தினம் தம்பதிகளின் மகனாகப் பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வியை புனித ஹென்றியரசர் பாடசாலையிலும் உயர் கல்வியை மகாஜனாக் கல்லூரியிலும் மேற்கொண்டார். பின்பு கொழும்பு தொழில்நுட்பக் கல்லூரியில் கட்டிடக் கலைத் துறையில் ஈடுபட்டார். 1960ல் இல் பொதுச் சேவைத் திணைக்களத்தில் கட்டிடத் துறையில் இணைந்து சேவையாற்றினார். எனினும், சிங்கள மொழி அமுலாக்கல் காரணமாக பதவியைத் துறந்து 1964ல் இங்கிலாந்து சென்று மீண்டும் கட்டிடக் கலையில் மேற்படிப்பை மேற்கொண்டார்.

சிவா அவர்கள் கனடாவிலுள்ள கட்டிடத்துறை அலுவலகம் ஒன்றின் தொழில் அனுமதி பெற்று 1966ல் கனடாவிற்கு குடிபெயர்ந்தார். இச் சந்தர்ப்பத்தில் ரொறன்ரோ மாநகரில் 16 தமிழ்க் குடும்பங்கள் வரையிலேயே இருந்துள்ளன. இவ்வாறான சூழ்நிலையில் தொழில் புரிந்த இவர் ரொறன்ரோ பல்கலைக் கழகத்தில் 1967 செப்டம்பர் முதல் கட்டிடக்கலை உயர்கல்விப் படிப்பையும் மேற்கொண்டார். நான்கு ஆண்டுகள் கற்ற பின்பு 1971ல் மீண்டும் தமிழீழம் சென்று அதே வருடம் டாக்டர் சபாரத்தினம் தம்பதிகளின் மகளான ஜெனனியைத் திருமணம் செய்து கொண்டு திரும்பவும் இங்கு வந்து சேர்ந்தார். பல்வேறு திணைக்களங்களில் ஒரு கட்டிடக்கலை நிபுணராகக் கடமை புரிந்து பல்வேறு அனுபவங்களையும் பெற்றுக் கொண்ட இவர் தற்போது 'Amalgamated Glass Works' நிறுவனத்தில் ஒரு பங்காளராகவும் விளங்குகின்றார்.

திரு. நா. சிவலிங்கம் அவர்களது சேவை உணர்வு மிகவும் இளமைக் காலம் முதலே இருந்துள்ளது. 1967 முதல் பாரதி கலா மன்றத்துடன் தொடர்பினை ஏற்படுத்திய இவர் முதன் முதலாக தமிழர்களுக்கு ஒரு தனியான சங்கம் வேண்டும் என்பதனை உணர்ந்து அதற்காகச் செயற்பட்டார். ஏனைய ஆர்வலருடன் இணைந்து 1978ல் தனது வீட்டிலேயே 'தமிழீழச் சங்கம்' என்ற பெயரில் இதனை நிறுவ முயன்றார். அவரது வீட்டின் நில அறை (Basement) இதன் காரியாலயமாயிற்று. இங்கிருந்து தொலைபேசி மூலமான செய்திச் சேவையும் படிப்படியாக வழங்கப்பட்டது. தமிழீழம் என்ற பெயரில் ஒரு சங்கத்தினை உலகிலேயே நிறுவிய பெருமையும் இங்குதான் ஏற்பட்டது. 1978 முதல் 1982 வரையில் இச்சங்கத்தின் முதலாவது தலைவராக இவர் பணி புரிந்தார். தமிழ் மக்களின் வரலாற்றில் புலம்பெயர்ந்த நாடொன்றில் இவ்வாறான சங்க அமைப்பும் படிப்படியாக அரச தொடர்பு மூலம் மானியம் பெற முயன்றதும் இதுவே முதற் தடவை. அரச பதவியுடன் நிரந்தர ஊழியர் அமைப்பு ஏற்பட்டதுடன் 1983ல் இடம்பெற்ற இனக் கலவரத்தில் மேலும் இச் சங்கத்தின் பணி கூடியது.

1985ம் ஆண்டளவில் இந்தியாவிற்குச் சென்று பல்வேறு தமிழ்க் குழுக்களின் ஒற்றுமையை வேண்டியதுடன் எமது விடுதலைக்கான முயற்சிகள் சிலவற்றை மேற்கொண்டு நிதி உதவி வழங்குவது பற்றியும் ஆலோசித்துத் திரும்பினார். அதே வருடம் ISAP, METRO ஆகிய நிதி உதவித் திட்டம் மூலம் சங்கத்திற்கு பல உதவிகள் கிடைத்தன. Caftarr என்ற அமைப்பு மூலம் குடிவரவு, கலாசாரம், சமயம், கல்வித் திட்டங்கள் துறைகளில் வளர்ச்சி பெற உதவினார். மாநகர, மாநில, மத்திய அரசுகளின் தொடர்பு மூலம் மேலும் வளர்ச்சி பெற்றதால் இச் சங்கம் மேலும் வளர்ச்சி பெற்றது. இவரது சிறப்பான பணியால் மீண்டும் 1988-1990 வரையில் தலைவராகச் செயற்பட்டார். 1990ல் 4 நிரந்தர ஊழியர்களுடன் இச் சங்கம் செயல்பட ஆரம்பித்தது. இவரது பதவிக் காலத்திலேயே 1989ல் அகதிகள் குடியமர்வுத் திட்டம் (Refugee Settlement Program) உருவானது என்பது குறிப்பிடத்தக்கது. திருவாளர்கள் ரவி லோஜன், மகா உத்தமன், விஜயநாதன், அம்பிகாபதி போன்ற நண்பர்கள் இவருக்கு உறுதுணையாக நின்று செயல்பட்டதாக பெருமைப்படுபவர் இவர்.

இவரது சமயத் துறையிலான சேவை மிகவும் நிலைபேறுடையதொன்றாகும். 1979 முதல் இன்று வரை றிச்மன்ட் ஹில் பிள்ளையார் கோவிலுக்குத் தொடர்ந்து தன்னை அர்ப்பணித்துள்ள ஒருவராவார். இவரது கட்டிடக் கலை ஆற்றல் இக்கோவில் அமைப்பிற்கு பெருமை சேர்த்துள்ளது. தலைவர், பொருளாளர், செயலாளர் போன்ற பல்வேறு பதவிகளிலும் இவரை அறங்காவலர் குழு அமர்த்தியதற்கு அடிப்படைக் காரணம் இவரது நேர்மையான செயல் திட்டங்களேயாகும். திருவாளர்கள் கோடீஸ்வரன், கலாநிதி சண்முகதாஸ், வெங்கடராமன் போன்றோர் இவரது செயல் திறனை வெகுவாக நம்பியிருந்தனர். 1980ல் ஆரம்பிக்கப்பட்ட அறங்காவல் குழுவினர் இவரது சேவைகளைப் பல வகையிலும் பெற்றுள்ளனர். தற்போது அவர் தொடர்ந்தும் சமயக் குழுவில் தலைவராகச் செயற்பட்டு வருகின்றார். ஆகவே, 1979 முதல் இன்று வரை இரு தசாப்தங்களாக இவரது சமயப்பணி அமைகின்றது.

தமிழ்த் துறை சார்ந்த இவரது பணிகள் பலவாக இருந்துள்ளன. தமிழ்ப் பண்பாடு மாறாத கோலத்துடன் செயல்படும் இவர் தமிழ்மொழியிலும், தமிழினத்திலும் மாறாத பற்றுள்ளவர். பாரதி கலாமன்றம் காலம் முதல் தன்னை தமிழ்ச் சேவையிலீடுபடுத்திய இவர் 1993 பெப்ரவரியில் உலகத் தமிழ்ப் பண்பாடு மாநாடு ரொறன்ரோவில் நிகழ்த்துவதற்காகத் தலைமைச் செயலகத்துடன் தொடர்பு கொண்டிருந்தார். உலகப் பண்பாட்டு இயக்கத் தலைவர் ஆர்.என். வீரப்பன் அவர்கள் இவரது தொடர்பு முறை காரணமாக பாராட்டிக் கடிதமும் எழுதியிருந்தார். 'தமிழுக்கு தொண்டு செய்வார் சாவதில்லை' என்ற கருத்தில் அவரது கடிதம் அமைந்திருந்தது. இங்கு நடைபெறும் பல்வேறு விழாக்களிலும், கலை நிகழ்ச்சிகளிலும் அவரைத் தலைவராக அழைத்தமையால் தான் 'தலைவர் சிவா' என்று அழைக்கப்பட்டார். மூன்று தசாப்தங்களாக இங்குள்ள நூற்றுக் கணக்கான விழாக்களில் கலந்து கொண்ட பெருமை இவருக்கு உண்டு. இவர் உரத்த குரலில் சத்தமிட்டுப் பேசும் சொற்பொழிவாளரல்ல. ஆனால் சிந்தித்து சில (76ம் பக்கம் பார்க்க)

திரு. நா. சிவலிங்கம் அவர்களுக்கு 'கடந்த தசாப்தங்களின் அதியுயர் சேவையாளர்' விருதுடன், சிவஶ்ரீ ப. விஜயகுமார குருக்கள் தமது தந்தையார் சிவஶ்ரீ சொ. பஞ்சாட்சரக் குருக்கள் ஞாபகார்த்தமாக வழங்கும் தங்கப் பதக்கமும் சூட்டப்பெறும்.

"ஒரு மரத்தில் பழுத்துத் தொங்கி கவர்ச்சிகரமாக ஒரு கனி காட்சி தருவதற்குக் காரணம் அந்தக் கனியல்ல. அந்தப் பாராட்டுக்குரியது தாய் மரம், அதன் கிளைகள், இலைகள், முக்கியமாக மரம் வளரும் சூழ்நிலை, அத்துடன் அந்த மரம் காணப்படும் மண்ணின் செழுமை" என்று கருதுகின்றார் இலண்டன் வழக்கறிஞர், வானொலி ஒலிபரப்பாளர், தொலைக்காட்சி ஒளிபரப்பாளர், மேடை நடிகர், எழுத்தாளர் விமல் சொக்கநாதன். தம்மைப் பற்றியும், தாம் பிறந்து வளர்ந்த சூழல் பற்றியும் சுவையாக எழுதுகின்றார்.

-பிரதம ஆசிரியர்

Award Recipient

திரும்பிப் பார்க்கிறேன்!



A senior and well known broadcaster, telecaster, writer, actor and critic **Mr. Vimal Sockanathan** (Barrister, U.K) will be honoured with a special award along with Dr. K.S.Nadarajah *(Navatkuliyoor* Nadarajan*)* memorial medal for his outstanding contributions to Tamil media for over 30 years in Sri Lanka and Europe.

வடபுலத்தில் யாழ்ப்பாணத்திற்கு அருகே உள்ள அழகிய கிராமம் 'கொக்குவில்'. நான் பிறந்த மண் அது. கிராமத்தின் இதயமான ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணியசுவாமி ஆலயம் (புதுக் கோயில் என்பது ஊர் மக்கள் வைத்த பெயர்) நடுவில் இருக்க, அதன் அருகில், பல மருத்துவ கலாநிதிகளை, நீதிபதிகளை, பொலிஸ் அதிகாரிகளை, கல்விமான்களை உருவாக்கிய கொக்குவில் இந்துக் கல்லூரி என்ற கல்விக் கூடம். சற்றுத் தள்ளி, உலகப் புகழ் பெற்ற ஸ்ரீ இரகுநாத ஐயர் பஞ்சாங்கம் வெளியிடும் சோதிடப் பிரகாச அச்சுக் கூடம் இருக்கும் 'அச்சுக் கூடத்து ஒழுங்கை'. புழுதி பறக்கும் அந்த மணல் ஒழுங்கை, நான் ஓடியாடித் திரிந்த நிலம்.

கொக்குவிலில் பிறந்தாலும், என் தந்தையின் வேலை நிமித்தம் எங்கள் குடும்பம் கொழும்பில் தங்கி வாழ நேரிட்டது. இதனால், கொழும்புக் கல்லூரி விடுமுறை எப்போது தருவார்கள்? என் கொக்குவிலுக்கு எப்போது போவேன்? என்று என் பிஞ்சு மனம் ஏங்கிய நாட்கள் பல.

கொழும்பிலிருந்து புறப்படும் "இரவு தபால் ரயில் வண்டி" மறுநாள் அதிகாலை கொக்குவிலின் அந்தச் சின்னஞ் சிறிய ரயில் நிலையத்தில் நிற்கும் போது அதிலிருந்து எங்கள் குடும்பம் இறங்கியதும், எங்களை ரயில் நிலையத்தில் சந்தித்து அழைத்துச் செல்லும் உறவுகள்; என்னால் மறக்க முடியாத இன்முகங்கள். மனதில் ஆழப் பதிந்து விட்ட நினைவுகள் அவை.

கொக்குவில் அச்சுக் கூடத்து ஒழுங்கையில் என் பாட்டியார் வீடு இருந்தது. அதிகம் சொல்வானேன் கொக்குவிலின் அத்தனை வீடுகளுமே அப்போது என் உறவினர் வீடுகள். அவர்கள் அனைவரையும் ஒரு சுற்று கூடிக் குலாவி வர என் விடுமுறை முடிந்து விடும். இன்று அந்த வீடுகளின் விழுதுகள், என் மைத்துனர், மைத்துனிகள், என் மருமக்கள் - பல கண்டங்களில், பல நாடுகளில் தொலைதூரத்தில் பிரிந்து வாழ்வது என் மனதை நெருடுகிறது.

கொக்குவிலின் எங்கள் அச்சுக் கூடத்து ஒழுங்கையில் என் தாய்வழிப் பெரிய தாயார் பண்டிதை அமிர்தாம்பிகை சதாசிவன் அவர்கள் இலங்கை வானொலியில் ஒரு நிகழ்ச்சிக்காக கொழும்பு வந்திருந்தார். கல்வி ஒலிபரப்பின் அந்த நிகழ்ச்சிக்கு என்னையும் அழைத்துச் சென்றார். இலங்கை வானொலி நிலையத்திற்குள் அவருடன் நான் காலடியெடுத்து வைக்கும் போது வயது 7 இருக்கலாம். அந்த வேளை என்ன சுபவேளையோ? அதன் பின் வானொலி நிலைய ஒலிவாங்கியை நான் கீழே வைத்தது கிடையாது.

பாலர் கழகம், சிறுவர் மலர், மாலை மதியம், இளைஞர் அரங்கு என்று பல்வேறு நிகழ்ச்சிகளிலும் எனக்கு வாய்ப்பு வந்து சேர்ந்தது. அன்றைய ஒலிபரப்புத் துறைப் பிரம்மாக்கள் இன்றைய ஒலிபரப்பு மேதைகள். ஸ்ரீமதி பொன்மணி குலசிங்கம், வீ.சுந்தரலிங்கம், திரு. குஞ்சிதபாதம், அமரர் சில்லையூர் செல்வராஜன் ஆகியோர். என்னை வழிநடத்த அப்போதைய தமிழ் நிகழ்ச்சி அதிகாரி (அமரர்) நாவற்குழியூர் நடராஜன் எனப்படும் கலாநிதி கே.எஸ். நடராஜா அவர்களினால், நான் பகுதி நேர அறிவிப்பாளராக தெரிவு செய்யப்பட்டமை 'கரும்பு தின்ன எனக்கு கைக்கூலி தரப்பட்டது' போன்ற சம்பவம்.

அப்போது நான் கல்லூரி மாணவன். புகழ்பெற்ற மேடை நாடகங்கள் யாவற்றிலும் நான் 'பிஸியாக' நடித்துக் கொண்டிருந்தேன். பின்னர் கொழும்பு சட்டக் கல்லூரி வாழ்வு. ஆனாலும் இலங்கை வானொலியில் என் பகுதி நேரப் பணி தொடர்ந்தது.

அதிகாரி கே.எஸ். நடராஜா அவர்களினால் முக்கிய நிகழ்ச்சிகள் பலவற்றை நடத்தும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. இலங்கை வரும் முக்கியஸ்தர்களை பேட்டி காணும் "கண்டதும் கேட்டதும் - செய்திச் சுருள்", தொழில் நிலையங்களில் தொழிலாளர்களை நேரில் சந்தித்து பாடல் தெரிவுகளை அறியும் 'தொழிலாளர் வேளை' நிகழ்ச்சி, இப்படிப் பல.

தமிழறிஞர் கி.ஆ.பெ.விஸ்வநாதம், பொள்ளாச்சி மகாலிங்கம், சௌகார் ஜானகி, பத்மினி, சோ, மனோரமா இப்படிப் பலர் எனது வானொலி நிகழ்ச்சிகளில் கலந்து சிறப்பித்தார்கள்.

இலங்கை வானொலி "கண்டதும் கேட்டதும்" நிகழ்ச்சிக்காக முக்கிய பிரமுகர் ஒருவரின் யாழ்ப்பாண விஜயத்தை ஒலிப்பதிவு செய்து நிகழ்ச்சி தயாரிக்கும்படி நான் கேட்கப்பட்டமை நான் என்றுமே மறக்க முடியாத சம்பவம். அந்தப் பிரமுகர் - இலங்கையின் அப்போதைய பிரதமர் - டட்லி சேனநாயக்கா. ராணுவப்படை வீடற்ற அன்றைய யாழ்ப்பாணத்தில் நான்கு நாட்கள் தங்கிய பிரதமர் குறைந்த பாதுகாப்புகளுடன் பல இடங்களிலும் விவசாயச் சுற்றுலா மேற்கொள்ள அவரது வண்டியின் பின்னால் வானொலி, பத்திரிகையாளர்களுக்குத் தரப்பட்ட ஜீப் நான்கு நாட்களும் பயணம் செய்தது. நண்பர் 'திரு' திருச்செல்வம் போன்ற பத்திரிகையாளர்கள் எனக்கு முதன் முதலில் அறிமுகமான இந்த 'டட்லி - யாழ் விஜயம்' என்னால் மறக்க முடியாதது.

என் சட்டப்படிப்பு முடிவடைந்த பின் இலங்கை வானொலியின் வர்த்தக ஒலிபரப்பில் நிரந்தர அறிவிப்பாளர் பதவி என்னைத் தேடி வந்தது. "இசையும் கதையும்" - 'என் விருப்பம்', 'அறிவிப்பாளரோடு அரை மணி நேரம்'

(76ம் பக்கம் பார்க்க)

பாரிஸ்டர் விமல் சொக்கநாதன் அவர்களுக்கு கலை, இலக்கிய, வெகுஜன தொடர்புச் சாதன சேவைக்கான 'தமிழர் தகவல்' சிறப்பு விருதுடன், கலாநிதி கே. எஸ். நடராஜா அவர்கள் நினைவாக அவரது பிள்ளைகள் வழங்கும் தங்கப் பதக்கமும் சூட்டப்பெறும்.

விமல் சொக்கநாதன்

Award Recipient

தமிழ் வெகுஜன தொடர்பு சாதன பிதாமகர்; ஒலிபரப்பு வாத்தியார்

ஈழம் தந்த தன்னிகரற்ற இலக்கியவாதியும் ஒலிபரப்பாளரும் எழுத்தாளருமான மேதை பெரியார் திரு. சோ. சிவபாதசுந்தரம் அவர்களை அறியாதவர்கள் இல்லையென்றே கூறவேண்டும். தமிழீழத்தில் கடல் சூழ்ந்த ஊர்காவற்றுறையில் சோமு உடையார் பேரன் என்று அழைக்கப்பட்ட திரு. சோமசுந்தரம்பிள்ளைக்கு மகனாகப் பிறந்தார். 1914ம் ஆண்டு ஆகஸ்ட் 15ல் பிறந்த இந்த மாமேதை, தமிழ் வெகுஜனத் தொடர்புச் சாதனங்களுக்கும் இலக்கிய உலகுக்கும் ஆற்றிய தொண்டுகள் கணக்கில் அடங்கா.

ஆங்கிலம், தமிழ், சமஸ்கிருதம் போன்ற மொழிகளில் நன்றே பாண்டித்தியம் பெற்ற இவர் சட்டக் கல்லூரியில் படித்தபோதிலும், இலக்கிய ஆர்வத்தால் இலக்கியத்தோடு இரண்டறக் கலந்து பல எட்ட முடியாத சிகரங்களைத் தொட்டுள்ளார்.

சிங்கள, இஸ்லாமிய கலவரத்தைத் தீர்த்து வைத்த சேர். பொன்னம்பலம் இராமநாதனைக் கௌரவிக்கும் முகமாக ஈழகேசரி என்ற பெயரில் 1930களில் குரும்பசிட்டி பொன்னையா அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகையில் எடுத்த எடுப்பிலேயே ஆசிரியரானார். புதுமைப் பித்தன், ராஜகோபாலன் போன்ற பல இந்தியப் பத்திரிகையாளர்களின் சிறுகதைகள், கட்டுரைகள் பலவற்றைத் தருவித்து சிறுகதை, இலக்கியம் மேன்மையடைய முதன்மையான-வராகத் திகழ்ந்தார்.

ஐந்து வருடம் தொடர்ந்து கடமையாற்றிய பின் "கொழும்பு வானொலி"யில் 1941ம் ஆண்டளவில் தன்னை இணைத்துக் கொண்டார். இவ்வேளையில் அந்த நாளைய ஜாம்பவான்களாகத் திகழ்ந்த ராஜரத்தினம் பிள்ளை, சிறுவனான பாலமுரளி கிருஷ்ணா போன்ற பலரை அடையாளம் காட்டி வானொலியில் பல புதுமைகளைக் கையாண்டார்.

"South East Broadcasting Company" இனால் சிபாரிசு செய்யப்பட்டு 1947ம் ஆண்டு இலண்டனில் உள்ள பி.பி.சி (British Broadcasting Corporation) உடன் இணைந்தார். தொடர்ந்து ஐந்து வருடம் அங்கு பணியாற்றியவர் "தமிழோசை" என்று பெயரிட்டு உலகளவில் தமிழோசை கேட்க வைத்த காரணகர்த்தாவாகினார் இன்றும் நம் காதில் தமிழோசை கேட்பது அவராலேயே என்று போற்றப்படுகிறார்.

1948இல் இங்கு தங்கியிருந்த போதே இந்தியா சுதந்திரம் அடைந்த தினத்தில் Royal Albert Hall இல் நடைபெற்ற வைபவத்தில் அந்த நாளைய தூதுவர் கிருஷ்ணமேனன், Lord Mount Burton போன்றவர்கள் முன்னிலையில் இவரது மனைவியான ஞானதீபம் அம்மையார் வீணை மீட்டினார்.

1947இல் இலங்கை திரும்பிய இவர், பல புதுமைகளைச் செய்ய முனைந்தபோது இனத்துவேஷத்தால் தடுத்து நிறுத்தப்பட்டார். இலங்கை வானொலியை விட்டு வெளியேறி Lever Brothers என்ற நிறுவனத்தில் விளம்பர இயக்குனராகத் தொடர்ந்து ஒன்பது வருடங்கள் பணிபுரிந்தார். இவ்வேளையில், மஞ்சுபாஷினி, ரவிலோச்சனன், பிரசன்னவதனி என்று மூன்று முத்துக்களையும் பெற்ற தந்தையானார்.

இக்காலத்தில் "கௌதம புத்தரின் அடிச் சுவட்டில்" என்றதோர் ஆராய்ச்சி நூலை எழுதி பலத்த பாராட்டைப் பெற்று சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்று மகிழ்ந்தார்.



Mr. So. Sivapathasundaram (England), the front line pioneer of the Print and Electronic Media in Ceylon (1930s) and the B.B.C (U.K) Tamil Service *'Thamilosai'*, and author of several award winning books will be honoured for his continuos contribution to *'Thamiliyal'* for over 50 years. He will be presented with *'Kurumpasiddy Eelakesari'* Ponniah memorial medal

1958இல் நடந்த இலங்கையின் இனக் கலவரத்தால் மிகவும் மனமுடைந்து இந்தியாவுக்குக் குடிபெயர்ந்தார். அங்கிருந்த எழுத்தாளர்களான கல்கி, சுவாமி நாதயர், சிதம்பரநாத முதலியார் ஆகியோர் இவரை வரவேற்றுத் தங்களில் ஒருவராக இணைத்துக் கொண்டனர்.

'ஆல் இந்தியா ரேடியோ'வில் (All India Radio) வருடாந்த மதிப்புக் குழுவில் இடம்பெற்று, பல கலைஞர்களை அடையாளம் காட்டினார். நுண்கலைகளின் நுணுக்கங்கள் பலவற்றை நன்கே அறிந்து விமர்சனம் செய்யவும் இவர் தயங்கியதில்லை. அகில இந்திய எழுத்தாளர் பேரவையின் செயலாளராக, தன் இலக்கிய இரட்டையரான சிட்டி சுந்தர்ராஜனையும் இணைத்து அகில இந்திய ரீதியில் சகல மொழி எழுத்தாளரையும் ஒருங்கிணைத்தார்.

கல்கி, ராஜகோபாலாச்சாரியார், எம்.எஸ். சுப்புலஷ்மி, சதாசிவம் போன்ற அந்த நாளைய கலையுலகப் பிரமுகர்களுடன் தன்னை இணைத்துக் கொண்டு பல இலக்கிய ஒன்றுகூடல்களை நடத்தினார். இவ்வேளையில், 'கௌதம புத்தரின் அடிச்சுவட்டில்' நூலினை அறிந்த சைவ மதத்தினர் பலரின் வேண்டுகோளுக்கிணங்க "சேக்கிழார் அடிச் சுவட்டில்", "மாணிக்கவாசகர் அடிச் சுவட்டில்" போன்ற ஆராய்ச்சி நூல்களை எழுதி இலக்கிய உலகமே வியக்கச் செய்தார்.

இந்தவேளை "ஒலிபரப்புக் கலை" என்ற நூலையும் எழுதி அதற்கு முன்னுரை எழுதிய ராஜாஜியிடம் "ஒலிபரப்பு வாத்தியார்" என்ற பாராட்டையும் பெற்றார். அந்த நூலை பல வானொலியாளர்கள் அகராதி போல் இன்றும் பயன்பெற வழியமைத்தார். மதுரைப் பல்கலைக்கழகம் இவரை டாக்டர் பட்டம் அளிக்கும் மதிப்பீட்டுக் குழுவில் அமர வைத்து அங்கீகரித்தது. பல பல்கலைக்கழகங்கள் இவரை பகுதிநேர விரிவுரையாளராக அழைத்துக் கௌரவித்தன. எந்தவொரு ஈழத் தமிழனுக்கும் கிடைக்காத, எட்ட முடியாத சாதனைகள் இவையென்றால் மிகையாகாது.

இவர் மகள் பிரசன்னா சிறந்த நடன வித்தகியாகத் திகழ்ந்து, திருமதி ருக்மணி அருண்டேலின் கலாஷேத்திராவில் விரிவுரையாளராகக் கடமையாற்றினார். இவ்வேளையில் சிறந்த நடனத்துக்கான விருதைப் பெற்று, இந்திய அரசு ஒரு முத்திரையில் அவரின் உருவத்தை வெளியிட்டுக் கௌரவித்தது. இவரின் அகால மரணம் பெரியாரின் குடும்பத்தினரை மிகவும் பாதித்த ஒன்றாகும். மூத்த மகள் டாக்டர் (Consultant) ஆக இலண்டனில்; மகன், நிதி அறிவுரையாளராக கடமை புரிகின்றனர். 1982ல் இவர்களும் இலண்டன் வந்து சேர்ந்தனர்.

இன்றும் இலண்டனில் வெளிவரும், அஞ்சல், Tamil Times போன்ற பத்திரிகைளுக்கு எழுதும் இந்த வைரவிழாக் கண்ட இளைஞர், இன்னும் பல்லாண்டு தம் சேவையை நல்க ஆண்டவன் அருள் வேண்டுவோம்.

தமிழ் வெகுஜன தொடர்புச் சாதனங்களின் பிதாமகராகவும், ஒலிபரப்பு வாத்தியாராகவும் அமையப் பெற்றுள்ள திரு. சோ. சிவபாதசுந்தரம் அவர்களுக்கு தமிழர் தகவல் விருதுடன், குரும்பசிட்டி 'ஈழகேசரி' பொன்னையா ஞாபகார்த்த தங்கப் பதக்கமும். வழங்கப்பெறுகின்றது. 'ஈழகேசரி' பொன்னையா அவர்களின் பெறாமகளான திருமதி. து. சத்தியபாமா அவர்கள் பதக்கத்தினை அன்பளிப்புச் செயதுள்ளார்.

மாதகலான் என்ற பெயரில் இக்கட்டுரையை எழுதியிருக்கும் திரு. யோகராஜா மாஸ்டர் அவர்கள் இலங்கையில் மாதகலைச் சேர்ந்தவர். இங்கிலாந்தில் உயர் பாடசாலையில் கணித ஆசிரியராகக் கடமையாற்றுகின்றார். பெரியார் சோ. சிவபாதசுந்தரம் அவர்கள் மீது அபார அன்பும் விசுவாசமும கொண்டவர். அவர் பற்றி பல கட்டுரைகள் ஏற்கனவே எழுதியவர்.

மாதகலான்

Award Recipient

அறிமுகம் தேவையற்ற முழுநேரப் பத்திரிகையாளர்



Life time working Journalist award will be received by **Mr. E. K. Rajagopal,** who is the Editor of London *Eelamurasu* and *Puthinam* (England), and author of several books. He has been an outstanding Journalist for the past 35 years in Sri Lanka and U.K. Mr. Rajagopal will receive Tamil Scholar C.Y.Thamotharampillai memorial medal.

ஈழத் தமிழ்ப் பத்திரிகையாளர் ராஜகோபாலுக்கு அறிமுகம் தேவையில்லை. அவர் வாழ்கிற இடம்தான் மாறியிருக்கிறதே தவிர, அவரிலோ அல்லது அவரின் பணியிலோ, எவ்வித மாற்றமுமில்லை. அங்கும் அவர் முழு நேரப் பத்திரிகையாளராக இருந்தார். புலம்பெயர்ந்து வாழும் மண்ணிலும் அவர் முழு நேரப் பத்திரிகையாளராகத் தான் இருக்கிறார்.

தனி மனிதனான அவர் புலம்பெயர்ந்த மண்ணில் ஒரு நிறுவனமாகத் திகழ்கிறார். ஈழத்திலும், தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் உலகமெங்கும் அவர்பெயர் பிரபலம் பெற்று விளங்குகின்றது. இப்பொழுது எல்லாம் ஒரு பத்திரிகையின் பெயரைச் சொல்லித்தான் அதன் ஆசிரியரைத் தெரிய வைக்க வேண்டும்; ஆனால் இவர் பெயரை முதலில் சொல்வதனால் தான் அப் பத்திரிகை பெருமை பெறுகிறது.

பள்ளியில் படிக்கும் போதே பத்திரிகைத் துறைக்குள் நுழைந்து லண்டனில் வாழ்ந்து கொண்டு இருக்கிற இன்று வரை தொடர்ச்சியாக முப்பத்தைந்து ஆண்டுகள் வாழ்வோடு இரண்டறக் கலந்துவிட்ட பத்திரிகைத் தொழிலோடு ஐக்கியமாகி விட்டார்.

தனித்துவம், எளிமை, இனிமை, நேயம், கனிவு என்பன ஒன்றாகி ராஜகோபால் என்ற மனிதருடன் இணையப் பெற்றுவிட்டதனால் தான் அவர் இத்துறையில் நீண்டு நிலைத்து நிற்கிறார். அவருக்கு எந்தக் காலத்திலும் கர்வம் இருந்ததில்லை. அவரது பேனா சில சமயங்களில் தயவு தாட்சண்யமின்றிக் கீறிக் கிழித்தாலும், பணிவோடு பழகும் பண்பும், ஆரவாரமில்லாமல் செயல்படும் அடக்கமும், எவரையும் மனித நேயத்தோடு நேசிக்கும் இருதய சுத்தியும் அவரது வெற்றியின் ரகசியங்கள்.

"ஒருமுறை அவருடன் பழகியவர்களை அவரால் என்றுமே மறக்க முடிவதில்லை. அப்படித்தான் அவருடன் பழகிய எவருமே அவரை இலகுவாக மறந்து போக முடிவதுமில்லை. அன்னியோன்யமாக எவருடனும் இலகுவில் உறவாடுவதினால் எவருமே அவருக்கு அந்நியராக இருப்பதில்லை. பரிச்சயம் இல்லாதவர்களோடு சகஜமாகப் பழக அவரது இதயத்தால் மட்டுமே முடியும்" - பத்திரிகையாளர் ராஜகோபால் பற்றி மலர் ஒன்றில் சில காலத்தின் முன் குறிப்பிடப்பட்டு இருந்ததை மீண்டும் படித்துப் பார்த்தேன். அந்தக் கணிப்பு அவருக்கு நூற்றுக்கு நூறு வீதம் பொருத்தமானது என்பதை அவருடன் நெருக்கமாகப் பழகிய சிலருக்குத் தெரியும்.

ஈழத்துத் தமிழ்ப் பத்திரிகை உலகம் 'உதய தாரகை'யுடன் ஆரம்பமானது. எனினும் - வாசிப்புப் பழக்கத்துடன் கூடிய பத்திரிகைக் காலம் 1930களிலேயே உருவானது. தினசரிப் பத்திரிகைகளின் வருகை இதற்குப் பெரிதும் காரணமாக அமைந்தது. இவ்வகையிலே பார்க்கையில், 1930கள், 1969கள், 1980கள் என்ற மூன்று காலகட்டங்களைக் கொண்டதாக ஈழத்துத் தமிழ்ப் பத்திரிகை உலகைப் பிரிக்கலாம்.

இதில் இரண்டாம் கால கட்டத்தில் பத்திரிகைச் சாம்ராஜ்யத்தில் காலடி எடுத்து வைத்து, இன்றும் தன் பயணத்தை வெற்றிகரமாகத் தொடர்பவர் ராஜகோபால். அவரது பத்திரிகை உலகப் பிரவேசமும், எனது பிரவேசமும் ஓராண்டு கால வித்தியாசமுடையவை. பத்திரிகைத் துறையில் நான் கால் பதிப்பதற்கு பிரதானமானவராக இருந்தவர் என்பதை அவருக்குக் கௌரவம் அளிக்கும் இச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்வதில் பெருமைப்படுகிறேன்.

தன்னைப் பெற்றெடுத்த வல்வெட்டிக் கிராமத்துக்கு அருகாமையில் அமைந்த உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் பயின்று, கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் மாணவனாக இருந்த காலத்தில் பழம்பெரும் எழுத்தாளர் வரதர் வெளியிட்ட 'புதினம்' இதழில் அவரது சிறுகதை ஒன்று வெளிவந்தது. 'அவள் தெய்வம் - நீ?' என்ற அந்தச் சிறுகதைதான் முதலில் அவர் அச்சில் பார்த்த எழுத்துக்கள். கலைச்செல்விப் பண்ணை பிரசவித்த எழுத்தாளர்களில் இவரும் ஒருவர்.

அவரது வகுப்பில் படித்துக்கொண்டிருந்த அவரது நெருக்கமான நண்பன் பெரி. சண்முகநாதன் (நல்ல சிறுகதை எழுத்தாளராகத் திகழ்ந்து, ரஷ்யத் தூதரகத்தில் பணியாற்றி, பின் சுன்னாகத்தில் அகாலமாக மரணித்தவர்) அக்கதை வெளியான 'புதினம்' இதழை பாட-சாலை எல்லாம் கொண்டு சென்று குதூகலித்ததை இன்னமும் அவர் நெஞ்சினில் சுமந்து கொண்டிருக்கிறார். இதற்குப் பிறகு 'வரதர்' அவருக்கு எழுதிய கடிதம் அவர் வாழ்வில் திருப்பு முனையாக அமைந்தது என்று சொல்லலாம்.

யாழ்ப்பாணம் கே.கே.எஸ்.வீதியில் வரதரின் ஆனந்தா அச்சகத்தில் பின்பகுதியில் ஒதுக்கப்பட்டு இருந்த 'புதினம்' அலுவலகத்தில் அரைக் காற்சட்டை போட்ட 'பொடியனாக' ஒருவரை அடிக்கடி காணலாம். பாடசாலை முடிந்த நேரங்களில் மட்டுமல்ல, பாடசாலை நேரங்களிலும் 'கட்' அடித்துவிட்டு அங்கு சைக்கிளில் சென்று விடுவார். அப்போது வாரப் பத்திரிகையாக 'சுடச்சுட' பல்சுவை பத்திரிகையாக வந்து கொண்டிருந்த 'புதினம்' இதழில் பிரபல மறைந்த ஈழத்து எழுத்தாளர் தாழையடி சபாரத்தினம் - பொறுப்பாசிரியராகப் பணியாற்றிக் கொண்டு இருந்தார். அவரிடம் ஒவ்வொரு வாரத்துக்கும் ஏதாவது எழுதிக்கொடுத்துவிட்டு அவரது எழுத்துலக அனுபவங்களையும் - இலக்கியச் சங்கதிகளையும் கேட்டுக் கொண்டு இருப்பதில் அவருக்கு ஒரு சுகம். அப்போது தான் 'வரதர்' தயாரித்த பலகுறிப்பு வெளிவந்தது. அதையும் அவர் இன்னமும் மறக்கவில்லை.

"பள்ளிப் பையன் ஒருவன் அரைக் காற்சட்டையுடன் 'ஈழநாடு' அலுவலகத்துக்கு

(மறுபக்கம் பார்க்க)

திரு. ராஜகோபால் அவர்களுக்கு 'முழுநேரப் பத்திரிகையாளர்' விருதுடன், கனடாவில் இயங்கும் சி. வை. தாமோதரம்பிள்ளை ஒன்றியத்தின் தலைவர் திரு. ஆ. வேலுப்பிள்ளை அவர்கள் வழங்கும் 'சி. வை. தாமோதரம்பிள்ளை ஞாபகார்த்த தங்கப் பதக்கமும்' சூட்டப்பெறும்.

'எஸ்தி'

(முன்பக்கத் தொடர்ச்சி)
வந்து ஒரு கடிதத்தை நீட்டுகிறான். எனது முக்கிய நண்பர்களில் ஒருவரான 'தாழையடி' சபாரத்தினம் கொடுத்த கடிதம் அது. பிரித்துப் படிக்கிறேன். 'இக் கடிதம் தரும் தம்பி எழுத்துத் துறையில் பிரகாசிக்க விரும்புகிறார். அவருக்கு ஆதரவு அளிக்க வேண்டும்' என்று எழுதியிருந்தார். கடிதத்தைப் படித்து முடிக்கவும், இன்னொரு என்வலப்பை நீட்டுகிறான் பொடியன். அது ஒரு சிறுகதை: 'மொட்டை மரம்' அடுத்த வாரமே அந்தச் சிறுகதை 'ஈழநாடு' வாரமலரில் வெளியானது. விட்டானா பின்னே? சிறுகதை, கட்டுரை என்று எழுதித் தள்ளினான்" - இவ்வாறு 'ஈழநாடு' பத்திரிகையில் பணியாற்றி இப்போது திருச்சியில் வாழும் எழுத்தாளர் 'சசிபாரதி' சபாரத்தினம் ராஜகோபால் பற்றி ஒரு கட்டுரையில் அழகாக எழுதியிருந்தார்.

யாழ்ப்பாணம் சுண்டிக்குளியில் இருந்து அப்போது பாடப்புத்தகங்களை வெளியிட்டும் பெரும் அச்சு வேலைகளைச் செய்தும் வந்த ஆசிர்வாதம் அச்சகத்தில் இருந்து 'விவேகி' என்ற மாத இதழ் வெளிவந்து கொண்டு இருந்தது. இதனை வெளியிட்டவர், அச்சகத்தின் உரிமையாளரும் ஆசிரியருமான ஆசீர்வாதம் அவர்கள். அந்த சஞ்சிகைக்குப் புத்துயிர் கொடுக்க படித்துக் கொண்டிருந்த ராஜகோபால் பொறுப்பாசிரியராக நியமிக்கப்பட்டு, 'விவேகி' சில மாத காலம் அவர் பணியில் நவீனமாக வெளிவந்தது.

அந்த நேரத்தில் கண்டியில் இருந்து வெளிவந்த ரா.மு.நாகலிங்கம் அவர்களின் 'செய்தி' வாரப் பத்திரிகையில் யாழ். செய்தியாளராகப் பணியாற்றி, 'கோட்டைக்குள் குத்துவெட்டு' போன்ற கூட்டணியின் உள்வீட்டு சங்கதிகளை எழுதி பரபரப்பை ஏற்படுத்தினார். இதனால் அமிர்தலிங்கத்திடம் மாட்டிக் கொண்டு 'அடி விழாக்' குறையாக அவரிடம் இருந்து தப்பிய அனுபவம் இன்னும் அவர் நினைவில் வாழ்கிறது.

'ஏசுவார்கள்; எரிப்பார்கள்; அஞ்ச வேண்டாம்; உண்மையை உண்மையாக எழுதுங்கள்' என்ற கொழும்புத்துறை தவத்திரு யோக சுவாமிகளின் ஆசிர்வாதத்துடன் பெரியார் தங்கராசா, டாக்டர் சண்முகரத்தினம் ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்ட 'ஈழநாடு' பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் ஒருவராகச் சேர்ந்து கொண்டார் ராஜகோபால். யோகசுவாமிகளின் மேற்சொன்ன வாசகம் தான் 'ஈழநாடு'வில் எல்லோரையும் வழிநடத்தும், நெறிப்படுத்தும் ஜீவநாதம். அந்தப் பத்திரிகையில் பணியாற்றியவர்கள் எல்லாம் தொழில் தேடி அங்கு வந்தவர்களல்ல. இயற்கையாகவே எழுத்தாற்றல் வரப் பெற்றவர்கள். ஆரம்பத்தில் எந்தச் செய்தியை எப்படி எழுத வேண்டும் என்ற வித்தையைக் காட்டி, பலதரப்பட்ட விஷயங்களை வாசகர்களைக் கவரும் விதத்தில் எழுதி, வாசகர்களோடு அந்தரங்கமாக உறவாடும் சக்தி தன் பேனாவுக்கு உண்டு என்பதைக் காட்டுவதில் வல்லவரானார். இரணைமடுக்குளத்துக்கு யாழ் திருக்குடும்ப கன்னியர் மட பாடசாலை மாணவிகள் சுற்றுலாச் சென்றபோது நடந்த சம்பவத்தை செய்தியாக எழுதினார் அவர். அந்தப் பிஞ்சு மாணவியின் பரிதாப மரணத்தை 'ஈழநாடு'வில் அப்போது வாசித்தவர்கள் இதயங்களைப் பிசைய வைத்தது. கடைசியாக நீரின் மேல் அவளது ஒரு கையின் விரல்கள் தெரிகின்றன. இது அழியாத காட்சியாக என் மனதில் பதிந்து விட்டது.

'ஏழு வயதில் தாய்' என்ற தலைப்பில் 'ஈழநாடு' வாரமலரில் ராஜகோபால் எழுதிய உணர்ச்சிவசமான உண்மைச் சம்பவம் அந்த அனாதரவான சின்னஞ் சிறுசுகளுக்கு நிவாரணம் தேடிக் கொடுத்தது. தாய், தந்தையை இழந்த மூன்று பெண் குழந்தைகள்... மூத்தவளுக்கோ வயது ஏழு... அந்த ஏழு வயதுச் சிறுமியே 'தாயாக' உறவினர் ஒருவரின் குடிசைக்குள் பசியோடு பட்டுக் கொண்டிருந்த வாழ்வை அப்படியே அவரது பேனா சாரைசாரையாய் இரத்த அருவி கொட்டியது. இக் கதையின் இறுதியில் தொடுத்த ஒரே கேள்வி; 'கருணையே வடிவாக ஈவிரக்கமுள்ளவர்களாக 'போட்டோவுக்கு போஸ்' கொடுக்கின்ற அரசியல் தலைவர்கள், அமைச்சர்கள், வறுமையோடு போராடும் இந்த அனாதைச் சிறுமியர்களுக்கு உதவுவார்களா?' பத்திரிகை வெளிவந்த அடுத்த நாளே அக் கட்டுரையைப் படித்த தமிழ் அமைச்சர் ஒருவர், அச் சிறுமியர்களுக்கு நிவாரண உதவியை பொதுமக்களிடம் இருந்து சேர்க்கும்படி ஒரு தொகையை தன் பெயரில் அனுப்பியிருந்தார். அந்த நிதிக்கு பெருந்தொகையான பணம் சேர்க்கப்பட்டு அச் சிறுமியர்களின் வாழ்வுக்காக வழங்கப்பட்டது.

அனலை தீவுக்கும், எழுவை தீவுக்கும் இடையில் அனாதரவான நிலப் பகுதிக்குச் சென்று இருநாட்கள் தங்கியிருந்து அவர் எழுதிய 'பருத்தித் தீவில் ராஜா' தொடர் உல்லாசப் பயணிகளைக் கவரும் மவுசைப் பெற்றுத் தந்தது. வாழ்க்கை மறுக்கப்பட்டவர்களுக்கு வாழ்வு கொடுத்தது, அவரது தொடரான 'யாரை நம்பி நாம் பிறந்தோம்?' 'ஈழநாடு'வில் அவர் எழுதி வாசகர்கள் அபிமானத்தைப் பெற்ற மூன்று தொடர்கள் நூலாக்கப்பட்டுள்ளன. 'வி.பி.யின் சோவியத் பயணக் கதை' அப்போது பிரசித்தி பெற்றது. 'வல்வெட்டித் துறையிலிருந்து அமெரிக்கா வரை கப்பலோட்டிய தமிழர்கள்', பின்னாளில் உலகமெல்லாம் வாழும் தமிழர்களின் அபிமானத்தைப் பெற்றது மட்டுமல்லாது, லண்டன், ஐரோப்பா, கனடா போன்ற நாடுகளில் வெளியீட்டு விழாக்களை நடத்தி விற்பனையில் பெரும் சாதனையை ஏற்படுத்தியது. வேறு எந்த ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களுமே இந்த அளவுக்கு விற்பனை செய்யப்படவில்லை.

பரந்துபட்ட பசுபிக் சமுத்திரத்தைத் தாண்டிப் பனை உயரத்துக்கு மேலாக, அலை அடித்து எழுந்து கொந்தளித்துக் கொண்டிருக்கும் 'அத்திலாந்திக்' சமுத்திரத்தினூடாக ஐந்து மைல் ஆழமுள்ள தண்ணீருக்குள் வீர சாகசப் பயணம் செய்த அந்த வரலாற்று நாயகர்கள் கப்பலோட்டிய 'கதை' யைப் படிக்கும் போது மெய்சிலிர்த்தது.

நமது மண்ணின் கலைஞர்கள் ராஜகோபால் பார்வையால் தலை தூக்கினர். அவர் 'ஈழநாடு' வார மலரில் அவரது 'கலையரங்கம்' பகுதியில் 'நம்நாட்டு கலைஞர்கள்' என்று வாரவாரம் ஒவ்வொரு கலைஞர்களைப் பற்றி எழுதியதனால், தலை நிமிர்ந்தார்கள் ஈழக் கலைஞர்கள். தலைமன்னாரில் இருந்து தனுஷ்கோடிக்கும், தனுஷ்கோடியில் இருந்து தலைமன்னாருக்கும் இரு வழிகளாக நீந்திக் கடந்து 'ஆழிக்குமரன்' ஆனந்தன் சாதனை செய்த போது அவருடன் படகில் உடன் சென்று எழுதிய மயிர்க்கூச்செறியும் கட்டுரைகள்....

'ஈழநாடு'வில் இருந்து விலகி கொழும்பு லேக்ஹவுஸ் நிறுவனம் வெளியிடும் 'தினகரன்' பத்திரிகையில் சிவகுருநாதனின் கீழ் துணையாசிரியராகச் சேர்ந்து பல புதிய அம்சங்களைச் செய்தார். சினிமாப் பகுதி, இதய ராகங்கள், வாரம் ஒரு சந்திப்பு, நம் நாட்டுக் கலைஞர்கள் எனவும் பிறவுமாய் பக்கம் பக்கமாக எழுதினார். தினகரனில் முதல் பக்கம் முதல் கடைசிப் பக்கம் வரை எந்தப் பக்கத்தை அன்றைய நாளில் செய்திருக்கிறார் என்று சொல்லக் கூடிய வகையில் அவர் கைவண்ணத்தை வாசகர்கள் தெரிந்து கொண்டார்கள்.


ஆறுஆண்டுகள் அங்கு பணியாற்றிய ராஜகோபால் 1980இல் விடுமுறையில் லண்டன் சென்று ஓராண்டுக்குப் பின் நாடு திரும்பினார். அதன் பின் மீண்டும் 'ஈழநாடு' அவரை அணைத்துக் கொண்டது. 'ஈழநாடு'வின் உரிமையாளர், மறைந்த தமிழ்ப் பெரியார் கே.ஸி.தங்கராஜாவே ராஜகோபாலின் திறமைக்கு மதிப்புக் கொடுத்தார்.

யாழ்ப்பாணம் முத்திரைச் சந்தைப் பகுதியில் ஆறுமாத இளம் கர்ப்பிணிப் பெண் ஒருவர் ராணுவ வெறியர்களினால், கணவன் முன்பாகக் கற்பழிக்கப்பட்ட போது, வெகுண்டு எழுந்து தன் பேனாவால் போர் தொடுத்தார். இதனால் ஏற்பட்ட பிரச்சனைகளைத் தொடர்ந்து, 1985ம் ஆண்டு மே மாதம் குடும்பத்தோடு லண்டனுக்குத் தப்பிப் போனார். இவருக்கும், இவரது குடும்பத்துக்கும் பிரிட்டிஷ் அரசு உடனடியாகவே புகலிடம் அளித்தது.

வெளிநாடுகளுக்குச் சென்றவர்களுக்கு வாழ்வை வசதியாகவும் வளமாகவும்
(78ம் பக்கம் பார்க்க)

கௌரவம் பெறும் நம்பிக்கை நட்சத்திரங்கள்

நான்கு மாணவர்களுக்கும் 'தமிழர் தகவல்' விருதுடன், ஒன்ராறியோ நுண்கலைக் கூடம் மகிழ்வுடன் வழங்கும் தங்கப் பதக்கமும் விழாவில் சூட்டப்பெறும்.



பிரசாந்த் பாலசுப்பிரமணியம்

நீச்சற் கலை தமிழர்களின் புராதன விளையாட்டுக்களில் ஒன்று. ஈழத்தமிழர் பெயரை நீச்சல் துறையில் பிரபல்யம் அடையச் செய்தவர்கள் இருவர். முதல்வர் நவரத்தினசாமி; அடுத்தவர் ஆழிக்குமரன் ஆனந்தன். இவர்கள் இருவரும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்கள். இதன் அயலூர் வல்வெட்டி. இதனைத் தாயகமாகக் கொண்ட செல்வன் பிரசாந் பாலசுப்பிரமணியம் நீச்சல் துறையில் மொன்றியலில் பல சாதனைகளைப் புரிந்து வருகின்றார். அதுமட்டுமன்றி விளையாட்டுத் துறையிலும் நம்பிக்கை நட்சத்திரமாக ஒளிர் விடுகின்றார். மொன்றியலில் வசிக்கும் பாலசுப்பிரமணியம் தம்பதிகளின் புதல்வரான பிரசாந்த் அங்குள்ள சென். கெவின் பாடசாலையின் இரு மொழி மாணவனாவர்.

கடந்த ஆண்டின் ஆரம்பத்தில் Club Aquatique Cotede Niges ஆதரவில் நடைபெற்ற 50 மீட்டர், 25 மீட்டர் போட்டிகளில் நீச்சலடித்து முறையே இரண்டாம் முதலாம் இடங்களைப் பெற்றார்.

Club Sophie Banoct clu Gabbois சார்பாக நீச்சல் குளங்களில் மீன்குஞ்சு போன்று துள்ளி வரும் இவர் 1997ல் மொன்றியல் உலகத் தமிழர் விளையாட்டுக் கழகம் நடத்திய 1500 மீட்டர் வயதெல்லையற்ற ஒட்டப் போட்டியில் பெரியவர்களுக்குச் சமமாக ஓடி முடித்து அனைவரதும் பாராட்டைப் பெற்றார். இவ்வருடம், பெப்ரவரி மாதத்தில் எட்டுக் கழகங்கள் பங்குபற்றிய நீச்சல் போட்டியில் 10-11 வயதுக்காரருக்கான 50 மீட்டர் நீச்சல் போட்டியில் மூன்றாவது இடத்தையும், 50 மீட்டர் Free Style நீச்சலில் முதல்

(78ம் பக்கம் பார்க்க)



யாழினி லோகேந்திரலிங்கம்

கனடாவின் இளம் நாட்டியத் தாரகைகளில் ஒருவராகத் திகழும் செல்வி. யாழினி லேகேந்திரலிங்கம், ஹர்காவற்றுறையில் 1984ம் ஆண்டில் பிறந்தவர். ஆறு வயதாக இருக்கையில், 1990ம் ஆண்டு கனடாவுக்குத் தமது பெற்றோர் சகோதரர்களுடன் குடிபெயர்ந்து, கல்வி கற்று வருகின்றார். இவரது நடன அரங்கேற்றம் பத்து வயதாக இருக்கும்போது நடைபெற்றது. இதனை ஒரு சாதனை எனலாம்.

ஆரம்பக் கல்வியை ஸ்காபரோ மிலிட்டரி ட்ரெயில் பாடசாலையிலும், இடைத்தரக் கல்வியை டாக்டர். மரியன் ஹீலார்ட் கல்லூரியிலும் மேற்கொண்ட யாழினி, தற்போது மதர் தீரேஸா கத்தோலிக்க இரண்டாம்நிலைக் கல்லூரியில் உயர் கல்வியை மேற்கொண்டு வருகின்றார். மூன்று பாடசாலைகளிலும் மாணவர் சமூகத்துக்கான தொண்டர் சேவைக்காகப் பல தடவை பாராட்டுகளையும், சான்றுகளையும் பெற்றுள்ளார். பாடசாலையின் நூலகத்தில் வகுப்பு நேரத்துக்குப் பின்னர் ஆற்றிய தொண்டர் சேவைக்காகவும் நூலகருக்கு வழங்கிய உதவிகளுக்காகவும் இவர் கௌரவிக்கப்பட்டுள்ளார். ஏழாம் வகுப்பில் கல்வி கற்கையில் கம்பியூட்டர் கல்வியின் போது உதவியமைக்காக இவருக்கு "Award for skills in computer' சான்று வழங்கப்பெற்றது.

'உதயன்' பத்திரிகை, 'தமிழன் வழிகாட்டி' வர்த்தக தகவல் வெளியீடு ஆகிய இரண்டினையும் வெளியிடும் நிறுவனங்களில் கடந்த பல ஆண்டுகளாக ஒரு தொண்டராகப் பணியாற்றி வருகின்றார். அருணோதயா நாட்டியக் கல்லூரியிலும் நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்துவதில் தமது ஒய்வு



ரமணா கணேஷரட்ணம்

ரமணா கணேஷரட்ணம்

யாழ்ப்பாணத்தில் கல்வி கற்றுக்கொண்டிருக்கையில் செல்வன் ரமணா கணேசரட்ணத்துக்கு கனடியக் கல்வி முறை பற்றி அவ்வளவு தெரியாது. இருந்தாலும், அங்கு 1998ம் ஆண்டில் ஜி. சி. ஈ உயர்தரப் பரீட்சையில் நான்கு பாடசங்களிலும் பெற்ற உயர் சித்தி, அவருக்கு கனடா மக்மாஸ்டர் பல்கலைக் கழகத்தில் அனுமதியைப் பெற்றுக் கொடுத்தது. அத்துடன், Canada Millennium Scholarship Foundation வழங்கிய மில்லேனியம் புலமைப் பரிசிலையும் அவருக்குக் கிடைக்கச் செய்தது. 1999-2000 கல்வி ஆண்டில் இந்தப் புலமைப் பரிசில் அவருக்கு மூவாயிரம் கனடிய டாலர்களை வழங்கியுள்ளது.

செல்வன் ரமணா கணேசரட்ணம் யாழ்ப்பாணத்தின் பெயர்பெற்ற பாடசாலையான சென். ஜோன்ஸ் கல்லூரியில் கல்வி கற்றவர். ஜி. சி. சாதாரண தரப் பரீட்சையிலும் உயர் புள்ளிகளுடன் சித்தி பெற்றவர். பாடசாலையின் விளையாட்டுத் துறையிலும் பிரகாசித்தவர். 1993 முதல் ஹாக்கிக் குழுவில் ஒரு உறுப்பினராகவிருந்தவர்.

(78ம் பக்கம் பார்க்க)



நீஷா சிவகுருநாதன்

நீஷா சிவகுருநாதன்

வாய்ப்பாட்டு, வீணை ஆகிய இரண்டு சங்கீதங்களிலும் கல்வி கற்று வரும் நீஷா சிவகுருநாதன், தமிழிசைக் கலா மன்றம் 1999ம் ஆண்டு நடத்திய 5ம் தரப் பரீட்சையில் உயர்தர நிலையில் சித்தியடைந்துள்ளார்.

தமது எட்டாவது வயதில் இலங்கையிலிருந்து கனடாவுக்கு வந்த இவர், முன்னணிச் சங்கீத ஆசிரியர்களில் ஒருவரான திருமதி குலநாயகி விவேகானந்தனிடம் முறைப்படி வாய்ப்பாட்டு கற்று வருகின்றார். அத்துடன், சங்கீதக்குரு திருமதி. கல்யாணி சுதர்ஷனிடம் வீணைச் சங்கீதமும் கற்று வருகின்றார். இப்பரீட்சையின் நான்காம் தரத்தில் மிகவிசேஷமாகத் தமது திறமையைக் காட்டியுள்ளார். தமிழிசைக் கலாமன்றத்தின் மாணவர் சங்கத்தின் தலைவியாகவும் பணியாற்றுகின்றார்.

இவரது கலைத்துறை ஈடுபாடுகளில் மேன்மையாக விளங்குவது பரதநாட்டியம். நாட்டிய கலாலயத்தின் புகழ் பெற்ற வசந்தா டானியலிடம் பயின்று, தமது 13வது வயதில் அரங்கேற்றம் செய்தார். தற்போது அந்த மன்றத்தின் உயர்தர மாணவராகவுள்ளார். தமது நடனக் குருவான ஆசிரியைக்கு இவர் செய்து வரும் உதவிகளைக்

(78ம் பக்கம் பார்க்க)

மூன்று தசாப்தங்களின்...

சொல்லும் சிந்தனையாளர். உறுதிப்பட தனது உரையைத் தயாரித்து அதனையே ஒப்புவிக்கும் தன்மையும், சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் ஆற்றலும், தொலைநோக்கும் இவரது உரையில் எப்போதும் இருக்கும். இங்குள்ள தொலைதொடர்புச் சாதனங்கள் உருவாவதற்கு முன்பு 24 மணிநேர வானொலி பற்றிச் சிந்தித்து உரையாற்றியும் இருந்தார். தவறாது எல்லாத் தமிழ் விழாக்களிலும் கலந்து கொள்ளும் உயர்ந்த பண்பு இவரிடம் குடிகொண்டிருக்கிறது.

இவரது அரசியல் வாழ்வும் சிறப்பானதொன்றாகும். மிக நீண்ட காலமாக இங்கு வாழ்ந்துள்ள இவரது காலத்தில் பல பிரதமர்கள் இந் நாட்டில் பதவி வகித்துள்ளனர். ட்ரூடோ, ஜோன் ரேணர், மேர் கிளார்க், பிறையன் மல்றோனி, கிம்காம்பல், ஜோன் கிறெச்சியான் வரையிலான 6 பிரதமர்கள் காலத்திலும் வாழ்ந்து அரசியல் தொடர்பினை மேற்கொண்டுள்ளார். லிபரல் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டு தொகுதி ரீதியாகப் பல வேலைகளைச் செய்த இவரை அக் கட்சி கௌரவம் வழங்கி தொகுதிச் சங்கம் (Riding Association) அமைப்பில் உறுப்பினராக்கியுள்ளது. கலகாரியில் நடைபெற்ற லிபரல் கட்சி மாநாட்டில் ஒரு பார்வையாளராக இவர் தெரிந்து அனுப்பப்பட்டார். இவ்வாறு நீண்ட கால அரசியல் அனுபவம் உள்ளமையால் பல தமிழர்களின் தேவைகளையும், திட்டங்களையும் நிறைவேற்ற உதவினார். இவரது நீண்ட கால சேவைகளை உணர்ந்து பல்வேறு கௌரவங்களை வழங்கியுள்ளனர். 1992ம் ஆண்டு 'தமிழர் தகவல்' சஞ்சிகையில் இவரது படம் பிரசுரிக்கப்பட்டதுடன் பிறவிச் சமூக சேவையாளர் - தலைவர் சிவா என்ற கட்டுரையை திரு. அருளையா அவர்கள் எழுதியிருந்தார். இவரது கட்டுரையின் இறுதியில் சிவாவைப் பற்றிக் குறிப்பிடும் போது 'அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு ஐந்து சால்பு ஊன்றிய நாண்' என்று குறிப்பிட்டுள்ளார். ஒரு சமூக சேவையாளரை மிகவும் அவதானித்து எழுதிய இவரது எழுத்துக்களில் மிகுந்த சிறப்புக்கள் உள்ளன. 'தமிழர் தகவலின்' சிறந்த சமூக சேவைகளுக்கான விருதும் இவருக்குக் கிடைத்தது.

1994ல் திரு.ந.வீரப்பன் அவர்களும் இவரது தமிழ்த் தொண்டினை நினைந்து ஒரு சான்றிதழை மலேசியாவிலிருந்து அனுப்பியிருந்தார். இவ்வாறு வெளிநாட்டிலும் இவரது சேவை உணரப்பட்டுள்ளது. இவரது சமூகசேவை உணர்வினையும் முன்னிலைப்பாட்டையும் உணர்ந்து வார்த்தைகளால் புகழ்ந்தவர்களும் உளர். முது தமிழர் மன்ற தலைவராக நீண்ட காலம் பணிபுரிந்த சிறந்த சேவையாளர் அலோய் ரட்ணசிங்கம் அவர்கள் 1993-94 ஆண்டுக்கான சேக்கம் (Sacem) மலரில் குறிப்பிட்ட வரிகள் பொருத்தமானவை "ரொறன்ரோவில் உள்ள தமிழர்களில் ஒரு பிதாமகன். அவரது இல்லம் ஒரு திறந்த வீடு; இங்குள்ள தமிழர்களுக்கு ஒரு தகவல் நிலையமாகவும் எழுச்சியூட்டும் நிறுவனமாகவும் விளங்கியது" "Mr. N. Sivalingam, a father figure for all Tamils in Toronto. His home was an open house. It remained for a number of years as a centre of information and inspiration to all Tamils here" என்று குறிப்பிட்டுள்ளார். இதனைத் தவிர வேறு எந்த விசுவாசமான வரிகளும் கூற முடியவில்லை.

கனடா தமிழர் தேசிய மன்றம், ஈழத் தமிழர்தகவல் நிலையம் ஆகியவைகள் இவரது முயற்சியால் உருவான தமிழர் அமைப்புகள். இந்த வருடம் ஜனவரி மாதத்தில் இவரது பிறந்த நாளான தைப்பூசத் திருநாளன்று றிச்மன்ட்ஹில் இந்து ஆலய தொண்டர்கள் இவரது அறுபதாவது பிறந்த நாளை முன்னிட்டு 'அறப்பணி அருளாளர்' என்னும் பட்டம் வழங்கக் கௌரவம் செய்தனர்.

மூன்று தசாப்தங்களாக இங்கு வாழ்ந்து தனது வீட்டினை தமிழர்களின் முதல் நிறுவனமாக மாற்றி அங்கிருந்து இன்று ஒன்றேகால் லட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் இங்கு வாழ்கின்ற நிலையிலும் தொடர்ந்து சேவையாற்றும் ஒருவராகவே சிவாவைக் காண முடியும். நேர்மையான வாழ்வுடன் தமிழர் பண்பாடு மறக்காத ஒரு மௌனி இவர். அமைதியான ஆழமான கருத்துக்களைப் பயமின்றி எடுத்துக் கூறி சிந்திக்க வைத்த சீர்திருத்தவாதி இவர். பொறுமையும், நிதானமும் இவரிடம் குடிகொண்டிருந்த சிறப்பான பண்புகள்.

இன்று தமிழர்கள் எவை தமது பாரம்பரியம், பெருமை என்று கௌரவப்படுத்துகின்றார்களோ, எந்த வேலைத் திட்டம் எம்மை வாழ வைத்துள்ளதென்று கருதுகின்றார்களோ அவை அனைத்தும் சிவா காலத்திலிருந்தே உருவானவை ஆகும். சேவையில் அவர் ஒரு ஆலமரமாகியுள்ளார். விழுதுகள் பல தொடர்ந்து வளர்கின்றன. கட்டிடக் கலை நிபுணரான இவர் தமிழர் இனத்தினைக் கட்டி எழுப்புவதிலும் ஒரு சேவையாளராகத் தன்னை அர்ப்பணித்துள்ளார்.

எஸ்.பி.நாதன்

திரும்பிப் பார்க்கிறேன்

ஆகியன என் முத்திரையைப் பதித்த நிகழ்ச்சிகள் என்று எனது வானொலிக்கால அபிமான நேயர்கள் கருதுகிறார்கள்.

1976ல் இலங்கை வானொலி அறிவிப்பாளர் பதவியிலிருந்து விடைபெற்றுக் கொண்டு கொழும்பில் என் சட்டத் தொழில் பணிமனையையும் மூடிவிட்டு என் வழக்கறிஞர் மனைவியுடன் இலண்டன் வந்தேன். கடந்த 23 ஆண்டுகளாகத் தெற்கு லண்டன் குறோய்டனில் சட்டத் தொழில் பணிமனை நடத்தி வருவதோடு நாடு நாட்டுடன் நல்லுறவு பேசும் இலண்டன் பி.பி.சியின் தமிழோசைக் குடும்பத்திலும் ஒருவனாக பணியாற்றி வருகிறேன்.

"உலகத் தமிழர்கள் அனைவரையும் ஒன்றிணைக்கும் தொலைக்காட்சி" என்று கடந்த மூன்று ஆண்டுகளாக முழங்கிவரும் பிரான்ஸ் நாட்டின் ஐரோப்பிய செய்கோள் தொலைக்காட்சியில் ஒரு பங்காளியாக, ரி.ஆர்.ரி நிர்வாக சபை இயக்குனர்களில் ஒருவராக, தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளராக, நிகழ்ச்சித் தயாரிப்பாளராக நான் ஆற்றி வருவது புதிய பணி - புதிய அனுபவம். உலகெங்கும் சிதறி வாழும் தமிழர்கள் எந்த நேரத்திலும் எந்த நாட்டிலும் கேட்கும் (பி.பி.சி தமிழோசையை ஒத்த) உலகத் தமிழ் வானொலி ஒன்று உருவாக வேண்டும். 24 மணிநேரம் ஒலிக்க வேண்டும். இந்த மாபெரும் முயற்சியில் நானும் ஒரு சிறிய பங்காற்ற வேண்டும் என்பது எனது இன்றைய விருப்பம்.

"அவர் என்ன வெறும் அறிவிப்பாளர் தானே? எழுதிக் கொடுத்ததை வாசிக்கிறார். அவ்வளவு தானே? அவருக்கேன் இத்தனை மரியாதை - புகழ்? என்று அறிவிப்பாளர்களின் பணியை தரம் குறைத்து எடைபோடும் மேதாவிகள் - விமர்சகர்கள் - எனக்கு என்றுமே பிடிக்காதவர்கள். இலங்கை வானொலியில் செய்தி வாசிப்பில் எனக்குப் பயிற்சி வழங்கிய வீ.ஏ.கபூர் அவர்கள் நான் குருவாக இன்றும் கருதும் ஒருவர்.

இலண்டன் பி.பி.சிக்கு நான் வந்தபோது எனது மொழிபெயர்ப்பு ஆற்றல், சொற்பிரயோகம், செய்தி வாசிக்கும் பாங்கு தமக்கு மிகவும் பிடித்திருக்கிறது என்று கூறியவர் பிபிசி தமிழோசையின் அதிகாரி, மதிப்பு மிகு (சங்கர் அண்ணா) - சங்கர் - சங்கரமூர்த்தி அவர்கள். இலங்கை வானொலியில் நாங்கள் வழக்கமாக பயன்படுத்தும் சில சொற்றொடர்கள், என்னுடன் ஒட்டிக் கொண்டு வந்துவிட்ட வார்த்தைகள் - உலகத் தமிழோசை ஒலிபரப்புக்கு ஏற்றவையல்ல என்று அவற்றை அப்புறப்படுத்தி, என் குறைகளைக் களைந்து, என்னைப் புடமிட்டு எடுத்து 'நாடு போற்றும் நல்ல ஒலிபரப்பாளன்' என்று பாராட்டிய சங்கரண்ணா என் ஒலிபரப்புப் பயணத்தில் நான் கண்ட கலங்கரை விளக்கு!

அனுபவங்கள் முதிர்ச்சி கண்டதும் ஆன்மீகத்தை மனது நாடுவதில் வியப்பில்லை அல்லவா? "ஆண்டவனை அடைய இந்தக் கலியுகத்தில் வேள்விகள், யாகங்கள் தேவையில்லை. பகவானின் பெயரை பல தடவை உச்சரித்து நாமாவளி செய்தால் போதும்; பஜனைகள் நடத்தினால் போதும்..." என்று போதனை செய்த ஒரு மகான் சுவாமி ஹரிதாஸ் கிரி அவர்கள் தமிழ்நாடு தபோவனம் சத்குரு ஞானானந்த சுவாமிகளின் பிரதம சிஷ்யர் அவர். இடுப்பில் ஒரு காவித்துண்டு மட்டும் அணிந்து தனது தேவகானங்களினால் பலகோடி பக்தர்களின் மனதில் இடம் பிடித்தவர். அவரை நான் நேரில் சந்தித்தது, பழகியது, தமிழ் நாட்டில் கற்றோர் அவையில், "குருபக்த சிரோன்மணி" என்று பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை - என் வாழ்வில் திருப்பு முனைகளை ஏற்படுத்திய சம்பவங்கள். என்னுள்ளே இருந்து இன்றும் என்னை இயக்கி என் குரலாக, செயலாக வெளிப்படுவது, என்னைப் பாதுகாத்து வழிநடத்துவது, என் ஆன்மீகக் குருவே - என்பது என் உறுதியான நம்பிக்கை.

கதிர் துரைசிங்கம்

எங்களின் விழாக்களில் நாங்கள் கவனிக்க

கனடாவில் பலவகையான தமிழர் அமைப்புகள் கலைவிழாக்களை நடத்துகின்றார்கள். கல்லூரிகளின் பழைய மாணவர் சங்கங்கள், கிராம, ஊர் நலன்புரிச் சங்கங்கள், அங்கு செய்த தொழில்கள் ஒன்றுபட்ட ஊழியர் சங்கங்கள் என்று தாய்நாட்டு தொடர்புள்ள அமைப்புகள் ஒருவகை. கல்லூரி மாணவர் சங்கங்கள், பல்கலைக்கழக மாணவர் சங்கம், தமிழ்மொழி தமிழ் இனம் மதம் சார்ந்த சங்கங்கள், சங்கீத நாட்டிய வகுப்பு நடத்துபவர்கள், வானொலி, பத்திரிகைகள், தொலைக்காட்சி நடத்துபவர்கள் என்று இங்கு உருவான அமைப்புகள் என்பது இன்னும் ஒரு வகை. எந்த அமைப்பு கலைவிழா நடத்தினாலும் நிகழ்ச்சிகளின் தரம் உயர்ந்து கொண்டு போவதை நாம் காண்கிறோம். பார்வையாளரின் ரசனையும் வளர்கிறது. இவை எல்லாம் எங்கள் பாரம்பரியம், கலாசாரம், பண்பாடு முதலியவற்றை எம்மவருக்கு எடுத்துக் கூறவும் அவர்களை பங்குபற்றச் செய்யவும், மொழியை வளர்க்கவும் முக்கியமாக உதவுகிறது. அத்துடன் தாய்நாட்டு உணர்வை வளர்ப்பதோடு இந்தக் கலைவிழாக்களால் வரும் லாபத் தொகையை தாய்நாட்டுத் தேவைகளுக்கு அனுப்பவும் முடிகிறது.

அங்கு இப்படியான நிகழ்ச்சிகளில் பங்கு பற்றியவர்கள், பார்த்து ரசித்தவர்கள் இங்கும் பங்கெடுப்பார்கள். ஆனால் இங்கு பிறந்த பிள்ளைகள், சிறுவயதில் இங்கு வந்தவர்கள் இவற்றில் பங்குகொள்ள மாட்டார்கள். தமிழ்மொழி தெரியாமையும் அவர்களைக் கவரக்கூடிய நிகழ்ச்சிகள் இல்லாமையும் இதற்குக் காரணமாக இருக்கும். எமது கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் நிகழ்ச்சி ஒன்றை ஆங்கிலத்தில் தயாரிப்பதுடன் அவர்களைக் கவரக்கூடிய நிகழ்ச்சிகள் சிலவற்றை தமிழில் தயாரிப்பது அந்தப் பிள்ளைகளை ஈர்க்க உதவும் என்று சென்ற மலரில் நான் கூறியிருந்தேன்.

பிள்ளைகளை அழைத்து வருவது பெற்றோரின் கடமை. பல சங்கங்கள் பேச்சுப் போட்டி நடத்துகிறார்கள். பங்குபற்றிய பிள்ளைகளுக்கு பரிசில் வழங்குகிறார்கள். சிறந்த பேச்சுக்களைக் கலைவிழாக்களில் இடம்பெறச் செய்கிறார்கள். இவையெல்லாம் சிறந்த உத்திகள். ஆனால் சில வேளைகளில் இப்படிப் பேச்சுப்போட்டிகளில் பங்குபற்றும் மாணவர் சிலருக்குத் தமிழ் வாசிக்க எழுதத் தெரியாமல் இருப்பதைக் காண்கிறோம். பெற்றோர் வீட்டில் தமிழ் எழுத வாசிக்கக் கற்பிப்பதோடு தமிழ் வகுப்புகளுக்கும் அவர்களை அனுப்ப வேண்டும்.

சென்ற ஆண்டு உதயன், தமிழன் வழிகாட்டி சேர்ந்து நடத்திய சொல்வதெழுதல் போட்டி, திருமதி வசந்தா நடராஜன் நடத்திய சொல்வதெழுதல் போட்டி முன்னோடியாக அமைந்தது. சொல்வதெழுதல் போட்டியுடன் வாசிப்புப்போட்டியையும் இங்கு இருக்கும் அமைப்புகள் நடத்த வேண்டும். மொழியைத் தெரிந்து, அர்த்தத்தைப் புரிந்து, பிள்ளைகள் செய்யும் நிகழ்ச்சிகள் சிறப்பாக அமைவதை நாம் காண்கிறோம்.

ஒரு கலைவிழா நடத்துவது சுலபமான காரியம் அல்ல. தாயகத்தில் கலைவிழா என்றால் பங்குபற்றுவோர், நடத்துவோருக்கு நேரம் ஒரு பிரச்சனையாக இருப்பதில்லை. ஆனால் இங்கு தினசரி வேலைப் பளுவுடன் தான் இவைகளைச் செய்ய வேண்டும். பார்வையாளர்கள் இதை மனதில் கொண்டு நிகழ்ச்சிகளை நோக்க வேண்டும். அமைப்புகளும் தமது அங்கத்தவர், அவர்களின் பிள்ளைகளுக்கு நிகழ்ச்சிகளில் முக்கிய பங்களிப்பு கொடுக்கும் அதேவேளை பணம் கொடுத்து, நேரத்தை விரயமாக்கி வரும் பார்வையாளருக்குத் தரமான நிகழ்ச்சிகளை வழங்க வேண்டும்.

ஆரம்ப காலத்தில் இங்கு கலைவிழாக்கள் தொடங்கிய போது எம்மவர்களின் வன்முறை நிகழ்வுகள் சில நடந்தது எல்லோரும் அறிந்ததே. ஆனால் அண்மைக் காலத்தில் எந்தவித நிகழ்வும் கலைவிழாக்களில் நடப்பது இல்லை என்று கூறலாம். முன்பு தமிழ்க் கலைவிழாக்களுக்கு தமிழர்கள் வரத் தயங்கினார்கள். அந்த நிலை இப்பொழுது மாறி வருகிறது.

முன்னேறிய நாட்டில் நாம் இருக்கிறோம். ஆனால் பின்வரும் விடயங்களில் கலைவிழாக்களை பொறுத்தளவில் நாம் பின்தங்கி இருப்பதாக நான் உணர்கிறேன்.

ஒலி, ஒளி அமைப்பு

1950 களில் நான் யாழ் மாவட்டத்தில் பல பாகங்களில் பார்த்த கலைநிகழ்ச்சிகளின் ஒலி, ஒளி அமைப்பு இன்னும் என் மனதில் நிலைநிற்கிறது. மண்டபத்தில் நடந்தால் என்ன திறந்தவெளி அரங்கில் நடந்தால் என்ன பார்வையாளர்கள் எங்கிருந்தும், பார்க்கவும் கேட்கவும் முடிந்தது. இத்தனை ஆண்டுகளுக்கு பின் இவ்வளவு விஞ்ஞான வளர்ச்சிக்குப் பின் எந்த விழாவில் ஒலி ஒளி சரியாக இருக்கும் என்று திட்டவட்டமாகக் கூறமுடியாத நிலை ஆரம்ப காலத்தில் இருந்தது. இந்த நிலை அண்மையில் எம்மவர் ஒலி ஒளி அமைப்பை ஆதிக்கம் செய்யத் தொடங்கிய பின் குறைந்து விட்டது என்று கூறலாம். இதற்குச் சில காரணங்களைக் கூறலாம். பாடசாலை மண்டபங்கள் கனடிய நிகழ்ச்சிகளை மையமாக வைத்து அமைக்கப்பட்டவை. எங்கள் நிகழ்ச்சிகளில் கையாளப்படும் உத்திகளின் தரம் வித்தியாசமானது. இங்கு இருக்கும் ஒலி ஒளி அமைப்பு எங்களின் சிறு நிகழ்ச்சிகளுக்கு கூட ஈடுகொடுக்க மாட்டாது. ஒலி நிச்சயமாக தனியார் ஒருவர் மூலம் ஒழுங்கு செய்யப்பட வேண்டும். அந்த ஒலி அமைப்பாளர் தமிழராக இருந்தால் சிறப்பாக இருக்கும். அல்லாவிடில் அவருக்கு உதவுபவர் தமிழ் வாசிக்க எழுதத் தெரிந்தவராகவும், கலை ஆர்வம், நிகழ்ச்சிகள் பற்றி முழு விளக்கம் தெரிந்தவராகவும் இருக்க வேண்டும். ஒளியும் அப்படியே. ஒளி சிலவேளைகளில் மண்டபத்தில் இருக்கும் அமைப்புடன் நடத்த முடியும். ஆனால் அதைக் கையாளுபவர் எம்மவராகவும் நிகழ்ச்சிகள் பற்றிய விபரம் ரசனை உள்ளவராகவும் இருக்க வேண்டும். அத்துடன் மேடையில் ஒலி ஒளி தொடர்பு செய்பவரும் மேற்கூறிய தகைமை உடையவராக இருத்தல் அவசியம்.

நேரக் கட்டுப்பாடு

ரொறன்ரோ பெருநகரில் உள்ள கல்விச் சபை மண்டபங்கள் எல்லாவற்றிற்கும் இரவு 11 மணிவரை தான் பாவிக்க அனுமதி வழங்கப்படும். அதுவும் Scarborough என்றால் நிச்சயமாக 11 மணிதான். 11 மணி என்பதே சில சமயம் நிகழ்ச்சிகள் முடிவு பெறும் நேரம் என்றும், சிலசமயம் மண்டபம் காலியாக வேண்டிய நேரம் என்றும் விளக்கம் கூறுவார்கள். இரவு 10.30 மணிக்கு நிகழ்ச்சிகளை முடிவு செய்யும் நேரமாக வைத்துக் கொண்டு தொடங்கும் நேரத்தை நிர்ணயித்தல் சிறந்ததாக இருக்கும். 30 நிமிடத்தை இடைவேளைக்கும், சில நிகழ்ச்சி கால-தாமதத்திற்கும் வைத்துக் கொள்ள வேண்டும். 6.00 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாவது என்று வைத்துக் கொள்வோம். 4 மணித்தியாலம் நிகழ்ச்சிகளுக்கு திருப்தியாக போதுமானது. கல்விச் சபையில் உத்தரவு எடுக்கும் போது மண்டபம் பாவிக்கும் நேரம் 5 மணி தொடக்கம் 11 மணிவரை என்று குறிப்பிட வேண்டும். மண்டபம் மேடை ஒழுங்கு செய்வதற்கு 3 மணிக்குத் திறக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட வேண்டும். இல்லாவிடில் 5.00 மணிக்குத்தான் உள்ளுக்கு சென்று ஒலி ஒளி மேடை அமைப்பு எல்லாம் செய்ய விடுவார்கள். சிற்றுண்டிச்சாலை தேவைப்படின் இடைவேளைக்கு முன் 1/2 மணித்தியாலம் பின்னர் 1/2 மணித்தியாலம் உத்தரவு பெற்றால் போதும். பொலிஸ் உத்தியோகத்தர்களின் சேவை 6.00 மணி தொடக்கம் 11 மணி வரை பெற்றால் போதும். விழாவிற்கு முதல் நாள் அதே மண்டபத்தில் எல்லா நிகழ்ச்சிகளுக்கும் ஒத்திகை பார்க்க வேண்டும்.

மேற்கூறிய நேரவரையறைகள் உத்தரவுப் பத்திரத்தில் குறிக்கப்பட வேண்டும். அதன் பிரதி மண்டபம் ஒழுங்கு செய்தவரின் கையில் மண்டபத்தில் இருக்க வேண்டும். மேற்கூறிய விடயங்களைக் கவனத்தில் கொண்டு, நிகழ்ச்சிகளை நேரக் கட்டுப்பாட்டுடன் ஒத்திகை செய்து பார்த்து நடந்தால் விழா சிறப்பாக அமையும். குறித்த நேரத்திற்கு தொடங்கும் வழக்கத்தை ஒரு சில அமைப்புகள் கையாண்டு வருகிறார்கள். குறித்த நேரத்தில் தொடங்குவது மட்டும் நேரக் கட்டுப்பாடு என்று கூற முடியாது. முடிவு நேரமும் தீர்மானிக்கப்பட வேண்டும் அதன்படி முடிக்கவும் வேண்டும். அனுமதிச் சீட்டு, விளம்பரங்கள், நிகழ்ச்சி நிரல் முன்றிலும் தொடக்க நேரமும் முடிவு நேரமும் போடப்பட வேண்டும். இப்படி செய்ய முடிந்தால் கிழமை நாட்களில் கூட கலைவிழாக்கள் நடத்த முடியும். பார்வையாளர்கள் நிகழ்ச்சி நிரலில் உள்ள எல்லா நிகழ்ச்சிகளையும் பார்க்கவும் முடியும்.

பாதுகாப்பு

இங்கு எண்பது வீதமான கலை நிகழ்ச்சிகள் Scarborough நகரில் நடைபெறுகின்றன. Police உத்தியோகத்தர்கள் இன்றி கலைநிகழ்ச்சிகள் நடத்த முடியாது. தமிழர்களைத் தமிழர்களிடம்

(80ம் பக்கம் பார்க்க)

அறிமுகம் தேவையற்ற...

வைத்துக் கொள்வதற்குப் பல வழிகள் இருந்தன. ஆனால் ராஜகோபால் லண்டனில் புதிய பாதையை வகுத்துக் கொண்டு தன் பத்திரிகைப் பயணத்தையே தொடர்ந்தார். தமிழீழ விடுதலையை மூச்சாகக்கொண்ட 'தமிழன்' லண்டனில் பிறந்தான். 'தமிழன்' இதழில் புதிய பாணியைப் புகுத்திக் கொண்டு, பத்திரிகையின் முதல் இதழில் அவர் எழுதிய ஆசிரியர் தலையங்கத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: "வீடு நெருப்புப் பிடித்து எரியும் வேளையில் வீட்டுக்கு நெருப்பு வைத்தது யார்? நண்பரா? பகைவரா? சரியா, பிழையா? என்பன போன்ற ஆராய்ச்சியில் 'தமிழன்' தனது காலத்தை வீணாகக் கழிக்க மாட்டான். வேகமாகத் தண்ணீர் கொண்டு ஊற்றி, நெருப்பை அணைக்க முற்படும் கிராமத்தவர்களோடும், ஊர்மக்களோடும், வாலிப வீரரோடும் 'தமிழன்' சேர்ந்து கொண்டு பணியினை ஆற்றத் தயங்க மாட்டான். 'ஊர் ஓடினால் ஒத்து ஓடு, ஒருவன் ஓடினால் கேட்டு ஓடு' என்பது 'தமிழன்' அறியாதது ஒன்றல்ல. உங்கள் பத்திரிகையாக, மக்கள் பத்திரிகையாக வெளிவரும் 'தமிழன்' கோட்பாடு: "Facts are sacred. Comment is free" - அதாவது செய்திகள் புனிதமானவை, கருத்துக்கள் சுதந்திரமானவை. இந்தப் பத்திரிகா தர்மத்தின் கோட்பாட்டை முன் வைத்துத் தான் 'தமிழன்' தனக்கென்றோர் தனித்துவத்துடன் பெருமிதத்துடன் தொடர்ந்து வெளிவருவான்"

லண்டனைத் தலைமையகமாகக் கொண்டு வெளியான 'தமிழன்' ஐரோப்பா எங்கும் கொடிகட்டிப் பறந்தது. ஊர்ச் செய்தி முதல் உலகச் செய்தி வரை, தமிழீழ உணர்வோடு புலம்பெயர்ந்த தமிழர்கள் இல்லங்களை அலங்கரித்தது. மாதம் இரு முறையாக வந்த வெளியீட்டை வாரம் ஒரு முறையாக்கினார். அந்தச் சமயத்தில் தான் ஈழத் தமிழர்களுக்கு உலக அரங்கில் புகழ் தேடிக் கொடுத்த 'கின்னஸ்' சாதனை வீரன் 'ஆழிக்குமரன்' ஆனந்தன் பற்றி தொடராகத் 'தமிழன்' இதழில் எழுதினார். வாழும் போதே ஆனந்தனுடம் நெருக்கமாகப் பழகி, அவரின் அனேகமான சாதனை நிகழ்வுகளில் பங்கு கொண்ட ராஜகோபால், ஆயிரக் கணக்கான தமிழ் நெஞ்சங்களில் ஆழிக்குமரனை வாழ வைத்தார்.

'தமிழன்' பத்திரிகையில் இருந்து விலகி, 'ஈழகேசரி' என்ற பத்திரிகையை ஆரம்பித்த போது 'தமிழன்' இதழுக்கு இருந்த அதே ஆதரவு அவருக்கு இருந்தது. புலம்பெயர்ந்து வாழும் மக்கள் மத்தியில் வீறாப்புடன் விடுதலை உணர்வை வித்திடுவதில் முழு மூச்சாக ஈடுபட்டார். இக் காலகட்டத்தில் தான் 'ஆழிக்குமரன்' நூல் வெளியிடப்பட்டது. இந் நூலும் அவருக்கு பெரும் புகழைத் தேடித் தந்தது. லண்டனில் இது போல ஒரு நூல் வெளியீட்டு விழா நடைபெற்றதில்லை. விற்பனையும் அவ்விதமே அமையப் பெற்றது. இவர் ஏற்பாட்டில் நடந்த இவ்விழா நமது தமிழ் வீரன் ஒருவனின் ஆற்றலுக்கு மதிப்புக் கொடுத்து மாவீரனாகக் கௌரவித்தது. கனடா - ரொறன்ரோவில் நடந்த 'ஆழிக்குமரன்' வெளியீட்டு விழா இவருக்கு அங்கு உள்ள செல்வாக்கினை வெளிப்படுத்தியது. ஆயிரம்பேர் கூடி விழாவைச் சிறப்பித்தது இவருக்குப் பெருமை தந்தது.

'ஈழகேசரி'யைச் சஞ்சிகையாக மாற்றியதன் மூலம் ஐரோப்பிய நாடுகளில் மட்டுமல்லாது கனடா உட்பட உலக நாடுகள் எல்லாம் வாசகர்களைச் சென்றடைந்தது. தமிழீழ உணர்வை ஊட்டுகிற இதழாக வண்ணத்தில் மலர்ந்தது. ஒரே சமயத்தில், தன்னைப் பத்திரிகை உலகுக்குக் கொண்டு வந்த 'புதினம்' இதழ் யாழ்ப்பாணத்தில் இப்போது வராது நின்று போனாலும், லண்டனில் அந்த நினைவாக 'புதினம்' என்ற இலவசப் பத்திரிகை நடத்தி வருகிறார்.

திருமணத்துக்கு முன் பாமா ராஜகோபால் என்று பிரசித்தி பெற்ற இவர், பத்துக்கும் அதிகமான புனைப் பெயர்களில் பவனி வந்துள்ளார். அவரது எழுத்து மற்றவர்களை ஊக்குவிப்பது. உயிர்த் துடிப்பு மிகுந்தது. அதனாலேயே பரந்த வாசகர் கூட்டமொன்றை தாம் சென்ற இடமெங்கும் இவரால் உருவாக்கிட முடிந்தது.

லண்டனில் இருந்து ஒரு தமிழ்த் தினசரியைக் கொண்டு வரக்கூடிய சக்தி இவர் ஒருவருக்குத் தான் அங்கு உண்டு. வல்வெட்டி இளையதம்பி குமாரசாமி - விசாலாட்சி (நவாலி) தம்பதிகளின் மூத்த புதல்வர் இவர். ராஜகோபால் அவர்களின் வெற்றிக்கு பின்னணியில் அவர் மனைவி பிரபல நடன ஆசிரியை ராகினி ராஜகோபால் இருக்கிறார் என்பது பலருக்குத் தெரிந்த ரகசியம். இவர்களுக்கு ஷர்மினி, ஷியாம் என்ற இரு கண்மணிகள். இவர்கள் இலக்கிய - கலைக் குடும்பம்.

புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழர்கள் மத்தியில் பத்திரிகைத் தொழில் எனப்படுவது - குடிசைக் கைத்தொழிலாக மாறிவருவது வேதனைக்குரியது. 'கம்பியூட்டர்' அடிக்கத் தெரிந்தவர்கள் எல்லாம் பத்திரிகை ஆசிரியர்களாகப் பார்க்க வேண்டிய சோதனைக் களத்தில் சமூகம் தள்ளப்பட்டு நிற்கிறது. இவர்கள் மத்தியில் தரமான ஓர் பத்திரிகையாளனாக ராஜகோபால் பிரகாசிப்பதற்கு அவர் பெற்ற பயிற்சியும், திறமையும், எழுத்து வன்மையும், சிறந்த ஆளுமையுமே மூல காரணங்கள்.

பிரசாந்த் பாலசுப்பிரமணியம்

இடத்தையும் பெற்றுள்ளார் செல்வன் பிரசாந். 50 மீட்டர் Breast Stroke நீச்சல் போட்டியிலும் முதற் பரிசு இவருக்கே. இவ்வாறு நீச்சலை மூச்சாகக் கொண்டு வளர்ந்து வரும் பிரசாந்த புகுந்தகத்தில் தமிழீழத்தின் பெயரை நிச்சயம் நிலைநாட்டிப் பல சாதனைகளைப் புரிவார்.

(78ம் பக்கம் பார்க்க)

யாழினி லோகேந்திரலிங்கம்

நேரங்களை வழங்கிச் சேவையாற்றி வருகின்றார். 'உதயன்' பத்திரிகை ஆசிரியர் திரு. ஆர். என். லோகேந்திரலிங்கம் தம்பதிகளின் மூத்த புதல்வி இவர். கனடிய மத்திய அரசாங்கம் தேசிய அடிப்படையில் வழங்கும் 'Canada day Youth Award - 1999' செல்வி யாழினி லோகேந்திரலிங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தமிழ் மாணவர்

ரமணா கணேஷரட்ணம்

சென். ஜோன்ஸ் விவசாய விஞ்ஞானக் கழக சஞ்சிகையின் ஆசிரியர், சாரணக் குழுவின் உறுப்பினர், விஞ்ஞான மாணவர் மன்றம், 'செஸ்' கிளப் ஆகியவைகளின் உபதலைவர், அம்புலன்ஸ் படைப் பிரிவின் செயலாளர், விஞ்ஞான மாணவர் மன்றம், இன்டரக்ட் கழகம் ஆகியவைகளின் செயற்குழு உறுப்பினர் போன்ற பல முக்கிய பதவிகளைக் கல்லூரியில் ரமணா தனதாக்கிக் கொண்டிருக்கின்றார்.

பாடசாலையின் மாணவர் தலைவர்களில் (Prefect) ஒருவராகவும் இருந்துள்ளார். "As a College Prefect he has shown signs of leadership and was well liked by his teachers and peers. He was a well disciplined and persevering student with a good character" என்று சென். ஜோன்ஸ் கல்லூரியின் அதிபர் திரு எஸ். தனபாலன் வழங்கியுள்ள சான்றுப் படிவத்தில் ரமணா பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

ரமணாவுக்கு வழங்கப்பட்டுள்ள கனடிய மில்லேனியம் ஸ்கொலர்ஷிப் பற்றி 'Canadian Millennium Scholarship Foundation' வழங்கியுள்ள சான்றிதழில்," The award represent an important investment in Canada's youth and are intended to help young Canadians acquire the knowledge and skills they require in order to participate in a changing economy" என்று தெரிவித்துள்ளது.

நீஷா சிவகுருநாதன்

கௌரவித்து, பத்மஸ்ரீ தண்டாயுதபாணிப்பிள்ளையின் நினைவான சான்றுப் பத்திரம் 1998ல் நீஷாவுக்கு வழங்கப்பெற்றது.

ஸ்காபரோ அல்பர்ட் காம்பல் பாடசாலையில் 12ம் வகுப்பில் கல்வி கற்று வரும் இவர், பாடசாலையிலும் அதிக திறமை வாய்ந்தவராகத் திகழ்கின்றார். மாணவர்கள் மத்தியில் தலைமைத்துவத் தகைமைகள் உள்ளவராகவும், பல வைபவங்களுக்கும் தலைமை தாங்குபவராகவும் வளர்ந்து வருகின்றார். ஸ்காபரோ கிறேஸ் வைத்தியசாலை, செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றில் தொண்டராகப் பணியாற்றியபின், தற்போது ஸ்காபரோ Prividence Centreல் வலது குறைந்தவர்களுக்குத் தொண்டராகச் சேவையாற்றி வருகின்றார். பௌதிக விஞ்ஞானத்தில் பட்டம் பெறுவதற்காகப் பல்கலைக் கழகம் செல்வதே இவரது விருப்பம்.

சூழல்தான் கற்கத் தூண்டுகின்றது

இலங்கையன்

சில படித்த குடும்பத்திலுள்ள சில பிள்ளைகள் படித்து உயர்நிலை அடையாததையும், சில படிக்காத குடும்பத்திலுள்ள சில பிள்ளைகள் படித்து, உயர்நிலை அடைவதையும் சமூகத்திற் காண்கின்றோம். இந் நிலை ஏன், எப்படி உருவாகின்றது என்ற கேள்விகள் எம் மனதில் எழாமலில்லை. இதற்கான காரணம் அவரவர் கிரக பலன் என்றும், தலை எழுத்தென்றும், விதிப் பலனென்றும், அவன் செயல் என்றும் கூறி மனதைத் தேற்றி நிம்மதி தேடுபவர்கள் எம் மத்தியில் அநேகம். இதற்கான உண்மையை அறிந்து அதற்கான பரிகாரத்தைத் தேடாத நிலையைத் தான் எம் மத்தியில் இன்றும் காண்கின்றோம்.

கற்றது தான் கல்வி. எனவே கற்றதைப் பொறுத்ததே கல்வி. கற்றல் என்பதன் உண்மையான கருத்தை விளங்கிக் கொண்டால் கற்றல் எவ்வாறு எப்போது இடம்பெறுகின்றது என்பதை விளங்கி, அதற்கேற்றவாறு கற்றற் சூழலை ஏற்படுத்தி கற்றலை இடம்பெறச் செய்யலாம். சூழலுக்கேற்றவாறு அமைத்து வாழப் பழகுவதே கற்றலாகும் என்பது கல்வியாளர் கருத்து. கற்றல், உயிர்களுக்கு இருக்கும் பசி, தாகம் போன்ற இயல்பூக்க தொழிற்பாடேயாகும். அதாவது கற்றலும் உயிரிகளில் இயற்கையாகவே இடம்பெறுகின்றது. மனித உயிரியில் இவ்வியல்பூக்கம் மற்றைய உயிரிகளிலும் பார்க்க அதிகளவுக்கே இடம்பெறுகின்றது.

ஒரு குழந்தை தாயின் கருப்பையில் உருவாகும் காலந் தொட்டே கற்கப் பழகிக் கொள்கின்றது. தாயின் கருப்பையில் உருவான குழந்தை, தாயின் கருப்பைச் சூழலை அனுபவித்து, அதற்கேற்றவாறு தன் உடலை அதாவது தலை, கை, கால்கள் போன்ற தனது உடல் உறுப்புக்களை கருப்பையில் நிலைப்படுத்தக் கற்றுக் கொள்கின்றது. கருப்பைக்கு வெளியே வந்ததும், அதன் உடலியற் தேவைகள் மாற்றங்கள் ஆகியவை காரணமாக எழும் பசி, விடாய், அழுகை, சிரிப்பு, கோபம் போன்ற இயல்பூக்க உணர்வுகளுக்கு வடிகால் காணக் கற்றுக் கொள்கின்றது. குழந்தைப் பருவத்தில் உடலியற் தேவைகளே கற்றலைத் தூண்டுகின்றன. குழந்தை வளர வளர சூழற் தேவைகளும் அதிகளவு கற்றலைத் தூண்டுகின்றன. குழந்தை வளரும் வீட்டுச் சூழலில், அம்மாவை, அப்பாவை, அக்காவை, அண்ணாவை மற்றும் வீட்டுக்கு வருவோரை இனங்காண கற்றுக் கொள்கின்றது. இக் கற்றல் பிள்ளையின் ஐம்புலன்களூடாகவே நடைபெறுகின்றது. அதாவது பிள்ளையின் புல அவதானங்கள் மூலமே இடம்பெறுகின்றது. அது போலவே பிள்ளை மொழியையும், அம்மா, அப்பா, அண்ணா, அக்கா மூலம் குறிப்பாக அம்மாவிடமிருந்து கற்றுக் கொள்கின்றது. இக் கற்றலில் எவரினதும் நிர்ப்பந்தமோ அல்லது பலவந்தமோ இருப்பதில்லை. பிள்ளை தானாகவே தனது புலன்களின் துணை கொண்டு அவதானித்துக் கற்கின்றது. மொழி கற்றலைப் பொறுத்த வரையில், ஐந்து வயது நியமக் குழந்தை சராசரி 2000 சொற்களைக் கையாளுகின்றது என குழந்தை உளவியலாளர்கள் கண்டுள்ளனர். பொதுவாக ஒரு குழந்தையின் கற்குந் திறனும் அளவும் அதன் அகச் சூழலிலும், புறச் சூழலிலும் தங்கியுள்ளது என்பது உளவியலாளர்களின் முடிபாகும். அகச் சூழல் என்று கூறும் போது அது குழந்தையின் பரம்பரை அல்லது மரபணுக்களைப் (Genes) பொறுத்தது. அதாவது குழந்தையின் பரம்பரை அல்லது மரபுச் சூழலைப் பொறுத்தது. இச் சூழல் பெற்றோரிற் தான் தங்கியுள்ளது. புறச் சூழல் என்று கூறும் போது, அது வீட்டுச் சூழல், பாடசாலைச் சூழல், சமூகச் சூழல் ஆகியவற்றாலேயே ஏற்படுத்தப்படுகின்றது. இச் சூழல்கள் தகுந்த முறையில் அமைந்தால், பிள்ளை தானாகவே அதாவது இயல்பாகவே கற்று கடைத்தேற முடியும்.அகச் சூழல் தகுந்தவாறு அமையாவிட்டாலும், புறச் சூழலைத் தகுந்தவாறு அமைத்து ஒருவரின் கற்குந் திறனையும், அளவையும் அதிகரிக்க முடியும் என்பது ஆய்வாளர்களின் முடிபு. எனவே தான் படித்த பின்னணியிற் தோன்றிய சிலர் கற்று கடைத்தேற முடியாத நிலையும் படிக்காத பின்னணியிற் பிறந்த சிலர் கற்று கடைத்தேறும் நிலையும் சமூகத்திற் காணப்படுகின்றது. ஆகவே ஒருவரின் கற்றல், கல்வி, வாழ்வு ஆகியவற்றைப் பொறுத்த வரையில் புறச் சூழல்கள் மிக முக்கிய பங்கை வகிக்கின்றன என்பது புலனாகின்றது.

ஒருவரின் வாழ்வின் புறச் சூழல்களில் வீட்டுச் சூழல் முக்கிய பங்கை வகிக்கின்றது. இச் சூழல் அவர் வாழும் வீட்டிலேயே அமைகின்றது. அந்த வகையில் பெற்றோர் முக்கிய பங்கை வகிக்கின்றார்கள். பிள்ளையின் நடத்தையை அடிகோலி உருவாக்குபவர்கள் பெற்றோரே. பெற்றோரின் உரையாடல், நடத்தை, வாழ்வியல் முறைகளை அவதானித்து, அவற்றை உள்வாங்கி, தன் வயமாக்குவதன் மூலமே பிள்ளை மொழி, நடத்தை, வாழ்வியல் முறை ஆகியவற்றைக் கற்று தனதாக்கிக் கொள்கின்றது. அந்த வகையில், பெற்றோர் நல்லவற்றைப் பேசி, நல்லவற்றைச் செய்ய வேண்டும். பிறப்பின் பின்னர் குழந்தையின் சூழல் சிக்கலாகி விடுகின்றது. அதன் பௌதிகச் சூழல் மாத்திரமன்றி, சமூகச் சூழல், மொழி, பண்பாடு ஆகியவையும் குழந்தையின் வளர்ச்சியில் தாக்கம் கொண்டுள்ளன எனவும், இவற்றின் ஒட்டுமொத்த விளைவாகவே குழந்தையின் நடத்தைக் கோலம் (Behavioural pattern) உருவாகின்றதெனவும் உளவியலாளர்கள் கண்டுள்ளார்கள். அதாவது ஒருவரின் உளவியற் பண்புகளும், நடத்தைகளும், பரம்பரைக் காரணிகளினாலும், சூழற் காரணிகளினாலுமே உருவாக்கம் பெறுகின்றன என்பதேயாகும்.

புறச் சூழல்களில் பாடசாலைச் சூழலும் மிக முக்கிய பங்கை வகிக்கின்றதென்றே கூற வேண்டும். புலம் பெயர்ந்து வாழும் எம் சமூகத்து மாணவர்களின் நடத்தைப் போக்கிற்கு இச் சூழலே முக்கிய காரணமாகின்றது. இங்கேயுள்ள பாடசாலைச் சூழலில் மாணவர்களுக்கு அதிகளவு சுதந்திரமும் சுயாதீனமும் இருப்பதினாலும், பாடசாலையின் அதிகாரமும், கட்டுப்பாடும் குறைவாக இருப்பதனாலும், இந் நிலைமை எமது மாணவர்களின் வீட்டுச் சூழலுக்கு மாறாக இருப்பதனாலும், அவர்களின் போக்கு எமக்கு வித்தியாசமாகவே படுகின்றது.

மாணவர்களின் கற்றலிலும், கற்றற் சூழல் சுதந்திரமானதொன்றாகவே காணப்படுகின்றது. கற்றலில் மாணவர்கள் தூண்டப் படுகின்றார்களேயல்லாமல், கட்டாயப்படுத்தப்படுவதோ அல்லது நிர்ப்பந்திக்கப்படுவதோ அல்லது பலவந்தப்படுத்தப்படுவதோ இல்லை. கற்பதற்கான பௌதிகச் சூழலும், தூண்டலுமிருந்தால், மாணவர்கள் ஆசிரியரின் வழிகாட்டற் துணையுடன் தாமாகவே கற்பார்கள் என்ற கற்றற் கொள்கைக்கு அமையவே இங்கேயுள்ள பாடசாலைகளில் கற்றலும் கற்பித்தலும் இடம்பெறுகின்றன. தகுந்த, பொருத்தமான கற்றற் சூழல் கொண்டு, எந்த மாணவரையும் கற்கத் தூண்டலாம் என்பது கல்வியல் உளவியலாளர்களின் முடிபு. இத் தூண்டல் சுதந்திரமான ஒரு சூழலிலேயே இடம்பெற்றாற் தான் கற்றல் தானாகவே இடம்பெறும்.

எனவே தான் இங்கே பாடசாலைகளில் அளிக்கப்படும் கல்வி பிள்ளை மையக்கல்வி (Child centered education) என அழைக்கப்படுகின்றது. அதாவது பிள்ளையின் இயல்பூக்கத்தையும், மனப் பாங்கையும், ஆற்றலையும், திறனையும் அடிப்படையாக வைத்து அதற்கேற்றவாறு கற்குஞ் சூழலை அமைத்து அளிக்கப்படும் கல்வி என்பதேயாகும். இம்முறைக் கல்வி ஆரம்ப இரண்டாம் நிலை மாணவர்களுக்கே உகந்ததென்பது கல்வியியலாளர்களின் முடிபு.

வகுப்பறைக் கற்றலைப் பொறுத்த வரையில், கற்குஞ் சூழலை வகுப்பில் ஏற்படுத்தி, வழிகாட்டித் தூண்டும் பொறுப்பு ஆசிரியரையே சார்ந்தது. அதற்கேற்றவாறே வகுப்பறைகளும் ஆய்வுகூடங்களும் இங்கேயுள்ள பாடசாலைகளில் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றிற்காதாரமாக கற்றல் வள நிலையங்களும் ஒவ்வொரு பாடசாலையிலும் அமைந்துள்ளன. அத்துடன் விஞ்ஞான கழகம் (Science club),

(82ம் பக்கம் பார்க்க)

புலம்பெயர் வாழ்வும் பெண்ணியமும்

திருமதி
வசந்தா நடராசன்

ர'புதியன புகுதலும் பழையன கழிதலும் வழுவல காலவகையினானே' என்பதற்கமைய புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் வாழ்விலும் பல மாற்றங்கள் நிகழ்ந்து வருவது கண்கூடு. பல மாற்றங்கள் காலத்தின் தேவையை ஒட்டிய தேவைகளாகவும், இன்னும் சில மாற்றங்கள் அத்தியாவசியமற்றவையாகவும் காணப்படுகின்றன.

சமூகத்தின் ஊன்றுகோலாக உயிர்நாடியாக விளங்கும் பெண் அன்றாடம் சந்திக்கும் பல்வேறு பிரச்சனைகளுக்கும் முகம் கொடுத்து நிலைத்து நிற்க முயன்று கொண்டிருக்கின்றாள். சுமைகளைச் சுகங்களாகக் கருதும் பெண்கள் ஒருபுறம்; சுமைகளைத் துறந்து சுதந்திரப் பறவைகளாக வாழ எண்ணும் பெண்கள் ஒருபுறம். அன்பு, பொறுமை, பாசம் என்ற தளைகளால் தன்னைப் பிணைத்துத் தன்னையே தியாகச் சின்னமாக்கி வாழப் பழகிக் கொண்டவள் தமிழ்ப் பெண்.

குடும்பம் சார்ந்த உறவு முறைகள், சமூகம் சார்ந்த செயற்பாடுகள், சட்ட ரீதியற்ற மரபு முறைகள், இன, சமய ரீதியான கட்டுப்பாடுகள் இவற்றால் ஏற்படும் நடைமுறைப் பிரச்சனைகள், பெண் விடுதலை என்ற உணர்வை மேலோங்கச் செய்தது. கவிதைகளிலும், கதைகளிலும் கருக்கொண்ட பெண் விடுதலைக்குப் புதிய பரிமாணம் கொடுத்த மேற்குலக வார்த்தை தான் பெண்ணியம் (Feminism) என்ற பதமாகும். பெண் இயக்கம் (woman movement) என்ற பதம் செயலிழக்க அந்த இடத்தைப் பெண்ணியம் நிரவியுள்ளது.

பெண் உரிமை, பெண்ணின் நலம், பெண்ணின் முன்னேற்றம் போன்றவற்றில் சீர்திருத்தம் ஏற்பட வேண்டும் என்ற நோக்கில் 1880களில் அக்லேட் (Auclert) என்பவரால் 'பெண்ணியம்' (Feminism) என்ற பதம் தோற்றம் பெற்று உறுதியாகவும் செயற்பட்டது. மேலைத் தேசத்திலே தோற்றம் பெற்று உருக் கொண்ட பெண்ணியம், புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களிடையேயும் குறிப்பாகத் தமிழ்ப் பெண்களிடையே ஒரு புத்துணர்வை ஏற்படுத்தியுள்ளது.

உலகெங்குமுள்ள பெண்களின் பொதுப் பிரச்சனையாக விளங்கும் பெண் விடுதலை பற்றிய கருத்துக்கள், நாட்டிற்கு நாடு வித்தியாசமுடையதாகக் காணப்படுகின்றது. ஒவ்வொரு இனத்தவரும் பின்பற்றும், காலசார நிகழ்வுகளின் அடிப்படையில், பெண் விடுதலையைப் பெண்ணியவாதிகள் முன்னெடுத்துச் செல்வதைக் காண முடிகின்றது. பெண்ணிய வாதம்

புலம்பெயர்ந்து வாழும் தமிழ்ப் பெண்களிடையே எழுச்சியை ஊட்டிய போதிலும், கட்டமைப்பற்ற சில சீரழிவுகளுக்கும் வழிகோலியுள்ளதை மறுப்பதற்கில்லை.

மேலைத்தேசப் பெண்கள் வேண்டும் பெண் விடுதலை, பாலியல் தொடர்பானதாகக் காணப்படுகின்றது. ஆனால் கீழைத்தேசப் பெண்கள் அதிலும் குறிப்பாக தமிழீழப் பெண்கள் வேண்டும் விடுதலை இதனின்றும் முற்றிலும் மாறுபட்டதாகவே தோன்றுகின்றது. புலம்பெயர்ந்து வாழும் தமிழ்ப் பெண்களில் அநேகர், மேலைத்தேசப் பெண்களைப் போலத் தமது வாழ்க்கை முறையை மாற்றியமைக்க முயல்கின்றனர். இந்நிலை சாத்தியமாகுமா? இதனால் ஏற்படும் குறுகிய மகிழ்வும், தொடரும் துன்பமும் பெண்களை நிரந்தரமான துயருக்கு இட்டுச் செல்லாதா என்று சிந்திக்க வேண்டும்.

பலதாரத் திருமணம், குறிப்பிட்ட வயதின்பின் தனித்து வாழும் வாழ்க்கை அமைப்பு போன்ற செயல்கள் கீழைத்தேசக் கலாசாரத்தில் ஊறி, ஒருவனுக்கு ஒருத்தி என்றும், சுற்றம் சூழ வாழும் வாழ்க்கை என்றும், பெரியோரைப் பேண வேண்டுமென்ற கொள்கைகளையெல்லாம் கொண்ட எமது சமூகத்திற்கு ஏற்புடையதா? நிச்சயமாக ஏற்புடையதல்ல. தமது குழந்தைகளுக்காக வரும் துயர்களையெல்லாம் சுமைதாங்கியாகச் சுமக்கும் தமிழ்ப் பெண்களிடையே பாலியல் தொடர்பான மாறுதல்களும், மாற்றங்களும் தேவைப்படாத ஒன்று.

குடும்ப உறவுகளில் ஏற்படும் விரிசல்களை சுமுகமாகத் தீர்க்க பெண்ணியம் உதவ வேண்டும். ஒரு பெண் தனித்து வாழ முடியும் என்ற உணர்வை ஊட்டாது குடும்பம் என்ற கட்டுக்கோப்போடு பெண்கள் வாழப் பெண்ணியம் வகை செய்ய வேண்டும். எமது பழமையான, பெரியோர்களால் வரைமுறை செய்யப்பட்ட கட்டுப்பாடுகள் யாவும் பெண்களை இழி நிலைக்குக் கொண்டு செல்வதாகக் காணப்படவில்லை. 'கற்பு' என்பதைக் கடைப்பிடிப்பது உடல், உள ரீதியாகப் பெண்மையை மேம்படுத்துவதாகவே காணப்படுகின்றது. ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்பாட்டினால், உறுதியான எதிர்காலச் சந்ததி உருவாக உதவ முடியும். இன்று தமிழ்ப் பெண்கள் வேண்டி நிற்கும் விடுதலை, மேலைத்தேசப் பெண்கள் நாடி நிற்கும் விடுதலைக்கு முற்றிலும் மாறுபட்டதாகக் காணப்படுகின்றது - சீதனம் என்ற கொடுமையால் தமிழீழப் பெண்கள் பாதிப்படைகின்றனர். வேண்டத் தகாத காலத்திற் கொவ்வாத சடங்குகள் கட்டுப்பாடுகள் பெண்களை இழிநிலைக்கு இட்டுச் செல்கின்றது. இவ்வாறான செயல்களிலிருந்து தமிழ்ப் பெண் இனம் மீள, பெண்ணியம் உதவ வேண்டும்.

மேலைத்தேச வாழ்க்கை முறை, குடும்ப உறவுகளை மேன்மைப்படுத்துவதாகக் கருத முடியாது. எமது கலாசாரத்தோடிணைந்த பொருத்தமானவற்றை ஏற்று வேண்டத்தகாத பிணைப்புக்களை அறுத்தெறிந்து, பெண்விடுதலையைப் பெண்ணியவாதிகள் முன்னெடுத்துச் செல்வது, புலம்பெயர்ந்த நாட்டில் வாழும் தமிழ்ப் பெண்கள் நெறி தவறாது வாழ உதவும்.

அன்றி, மேலைத்தேசப் பெண்களைப் போல, நமது வாழ்க்கை முறை அமைய வேண்டும் என முனைந்தால், எஞ்சுவது ஏமாற்றமும் துயரமுமே என்பதை அனைவரும் உணர்ந்து செயற்பட வேண்டும்.

எங்களின் விழாக்களில்...

இருந்து காப்பாற்ற கனடிய Police Officers தேவைப்படுகின்றனர். இது கடந்த 10 வருட காலமாக நடைபெறுகிறது. இரண்டு தொடக்கம் ஆறு உத்தியோகத்தர்கள் வரை பார்வையாளர் எண்ணிக்கைக்கு ஏற்ப அமர்த்த வேண்டும். ஒரு மணிக்கு 40 டாலர் படி நிகழ்ச்சி முடிவில் பணமாகக் கொடுக்க வேண்டும். சென்ற 4 வருடமாக இவர்கள் போதாது என்று தமிழர்களை தமிழர்களிடமிருந்து காப்பாற்ற தமிழர் ஐக்கிய அமைப்பு உருவாகி அவர்களும் பெரும் சேவை செய்கிறார்கள். இந்த தமிழ் அமைப்பு எந்தவித ஊதியமும் பெறாமல் தமிழர்களுக்குச் சேவை செய்கிறார்கள் என்று அண்மையில் நடந்த கூட்டம் ஒன்றில் பிரமுகர் ஒருவர் கூறியதைக் கேட்டேன். ஊதியமின்றி தமிழ் ஐக்கிய அமைப்பு கஷ்டப்பட்டு சேவை செய்யும் அதே வேளையில் Police Officers நிகழ்ச்சி முடியும் வரை கதிரையில் இருந்து விட்டு ஊதியம் பெற்றுச் செல்கிறார்கள். இந்த நிலை மாற வேண்டும். Scarborough கல்விச் சபை என்று இப்பொழுது இல்லை. Toronto பெருநகர் கல்விச் சேவையாக எல்லாம் சேர்ந்து இயங்குகின்றது. North York இல் உள்ள பாடசால மண்டபத்திற்கு Police தேவையில்லை. Scarborough பாடசாலை மண்டபத்திற்கு Police தேவை. எம்மவர் கஷ்டப்பட்டுச் சேர்க்கும் பணம் இப்படி Police சேவைக்கு செல்வது நியாயமாக தெரியவில்லை.

தமிழர் ஐக்கிய அமைப்பு தமது அமைப்பை உத்தரவு பெற்ற பாதுகாப்பு முகவராகப் பதிவு செய்தல் வேண்டும். அதில் தொழில் புரிபவர்கள் உத்தரவு பெற்ற ஊதியம் பெறும் உத்தியோகத்தர்களாக மாறவேண்டும். கலைநிகழ்ச்சி நடத்துபவர்கள் Policeக்கு கொடுக்கும் தொகையில் ஒரு பங்கை ஐக்கிய அமைப்புக்கு கொடுத்தால் போதும். இதுபற்றி தமிழ் மக்கள் சார்ந்த அமைப்புகள் Toronto கல்விச் சபையுடன் தொடர்பு கொண்டு Scarborough பாடசாலை மண்டபங்களில் நடைபெறும் எம்மவரின் கலை நிகழ்ச்சிகளுக்கு பொலிஸ் தேவை என்ற நிலையை ரத்து செய்ய வேண்டும். ஐக்கிய அமைப்புக்கு முடியாத சந்தர்ப்பங்களில் கூப்பிட்ட குரலுக்கு இருக்கவே இருக்கிறது 911.

Real Estate Market is fairly 'hot'

Gary S. Anandasangaree

The real estate market in the Greater Toronto Area has seen phenomenal growth in 1999 and this trend is likely to continue for the next two if not three years. This increased demand for houses has resulted in price increases and at times multiple offers on properties. This trend towards multiple offers is also likely to continue as more people contemplate a move this year. With this high demand, potential purchasers need to be wiry when they buy their house. Here are some tips that may be helpful for first time buyers as they contemplate their next move:

Budget and Location

The two most important factors to consider are budget and location. Before setting out to buy a house, you need to work out a line item budget so that you can afford to carry the house you buy. Be diligent and account for all costs including property taxes, heating, hydro, general upkeep and closing costs.

Don't rely on family or friends to help you pay your mortgage. Although you may rent a portion of your home to a third party, don't expect that someone who may be temporarily residing with you to live with you forever. Think of their contribution as temporary and make sure that you can pay for the houses even if they move out.

Just as important as budget is the location of the house. Location is important because the house you buy should be sellable if your circumstances change. Although these are debatable issues, be cautious if you are considering purchasing houses that about onto a main street, a railway track, highway, commercial strip, or hydro fields. These properties generally tend to have limited resalabilty.

At times you may find your self at odds with the budget and the location. You may be able to get a house within your budget at an inferior neighborhood. Don't be dazzled by the lower prices because you always get what you pay for. You are far better off buying a smaller house in a good location rather than a bigger house in a poor location.

Competitive Buying

The real estate market is fairly "hot" these days because there are more buyers than places to buy. There is nothing wrong with buying a house under these conditions if you are prepared. However, you have to be very careful and plan before putting an Offer on a house in a multiple offer situation. Multiple offers come about when there are two or more parties vying to buy the same house. The house will generally go to the purchaser willing to pay the most. Other factors the seller will consider are the conditions contained in the offer and the closing date.

The most common condition that is used in Offers is to arrange satisfactory financing for the house (mortgage). In the event you are unable to qualify for a mortgage, this condition allows you to walk away from the house you purchased without any penalty. For most sellers this condition is not desirable and may like your offer more if you don't have this condition on it. However, the only way you can take this condition out is if you are pre-qualified at the bank or through a mortgage broker before looking for a house. Once you are pre-qualified, then you know that you will get the mortgage even if you don't have a mortgage condition on your offer.

The second common condition that is used is for a home to be inspected by a qualified home inspector. This is important because you will have a better understanding of the house you are buying and any deficiencies that may be associated with the house. When you agree to pay a price for a house, it is under the assumption that the structure of the house is in fine order. So it is always wise to have an inspection before finalizing the Offer.

The third issue is the price that you end up paying for the house. Generally speaking there are market value ranges for any house that you see. Your realtor should give the facts before you sign the Offer. Have a bottom line figure that you will pay for the house and stick to it. It is likely that it may be higher than the asking price, and sometimes it is worth it.

Buying a house in any situation is stressful. However, multiple offer situations exasperate this stress. If you have an unscrupulous realtor, then you can be pressured into terms, conditions and price that you may not be comfortable with. You must plan for these ahead of time and make sure that you are not pressured into signing something that you are not happy with. Remember you are signing a contract and are bound by its terms. You cannot back out of it if you reconsider a day or two after the fact.

Regardless of the situation you may confront as you buy your first home, keep these ideas in mind. Location and budget are the key to successful home buying. And most importantly, be prepared before you start looking for a house. This will save you time, money and many sleepless nights.

ரொறன்ரோ நகரசபையின் இறுதி முடிவு - 44 புதிய வட்டாரங்களுக்கு 44 உறுப்பினர்கள் இரட்டை அங்கத்தவர் முறை இனி இல்லை!

ரொறன்ரோ நகரசபையின் உறுப்பினர்களது தற்போதைய பதவிக்காலம் இந்த வருடம் டிசம்பர் மாதம் 31ம் திகதியுடன் முடிவடைகின்றது. அடுத்த முன்றாண்டுகளுக்கான உறுப்பினர்களையும் மேயரையும் தெரிவதற்கான தேர்தல் இந்த வருட நவம்பரில் நடைபெறுமம். முன்றாண்டுகளுக்கு முன்னர் அப்போதைய ஆறு நகரசபைகளையும் இணைத்து, புதிய ரொறன்ரோ நகரசபை உருவாக்கப்பட்டது. இதன் அடிப்பிடையில் 57 உறுப்பினர்களும் மேயரும் தெரிவாகினர். சில மாதங்களுக்கு முன்னர் ஒன்ராறியோவின் மைக் ஹரிஸ் அரசு புதிய அறிவிப்பொன்றினை வெளியிட்டது. ரொறன்ரோ நகரசபையின் பிரதேசத்துக்குள் எம். பிக்களினதும், எம். பி. பிக்களினதும் தொகை தலா 22 ஆகவிருப்பதால், அதோ தொகுதி எல்லையுள் புதிய தேர்தலின் போது நகரசபை உறுப்பினர்களது வட்டாரங்களும் 22 ஆகக் குறைக்கப்படுமென்பதே அந்த அறிவிப்பு. இதன்படி நகர சபை உறுப்பினர்கள் தொகை 22 ஆக்கப்படலாம்; அல்லது ஒரு வட்டாரத்துக்கு இரண்டு உறுப்பினர்கள் வீதம் 44 பேர் தெரிவாகலாம் என்றும் ஆலோசனை வழங்கப்பட்டது. தற்போது நகரசபை ஒவ்வொரு வட்டாரத்தையும் இரண்டாகப் பிரித்து, 44 உறுப்பினரகளைத் தனித்தனியாகத் தெரிவுசெய்வதற்கு ஆதரவாக முடிவெடுத்துள்ளது. இதனால், தற்போதிருக்கும் இரட்டை அங்கத்தவர் முறை ஒழிக்கப்படுகிறது. நகரசபையின் அங்கத்தவர் தொகையும் பதின்முன்றினால் குறைக்கப்படுகின்றது.

கணனி உலகின் ஊடாக அடையாளம் இடலாம்!

பொன். சிவகுமாரன்

இருபதாம் நூற்றாண்டிற்கு முற்றுப் புள்ளியிட்டு இருபத்தியோராம் நூற்றாண்டிற்கு முகவுரை எழுதும் ஈழத் தமிழர்களின் இரண்டாவது தாயகம் கனடாவென்பதில் யாருக்கும் சந்தேகமே தோன்றுவதில்லை. இருபதாம் நூற்றாண்டின் முன் அரைப் பகுதியை ஐக்கிய இலங்கையின் சுதந்திரத்திற்காக அயலவரான சிங்களவர்களுடன் இணைந்து அந்நிய வெள்ளையர்களுக்கெதிராக போர்க் கொடி உயர்த்திய ஈழத் தமிழர்களாகிய நாம் நூற்றாண்டின் 75% மான பகுதியை வெள்ளையர்களுக்கெதிராகவும் பின்னர் சிங்கள பேரினவாதத்திற் கெதிராகவும் அகிம்சைப் போரில் கழித்த பின் எமது மண்ணில் எமது உயிர் வாழும் உரிமையும் மறுக்கப்பட்ட போது தமிழன் ஆண்ட மண்ணை தமிழனே ஆள வேண்டும் எனப்போர் தொடுத்து தமிழீழப் போரானது பெரும் பிரவாகமாகி புதுவெள்ளமாகிப் பாய்ந்த போது, ஈழத் தமிழரின் கணிசமான தொகையினராகிய நாம் அன்று ஆட்சி புரிந்த வெள்ளையரை வெளியேற்றிவிட்டு இன்று அந்த வெள்ளைமுக மண்ணிலேயே அகதியாக இடம் தேடினோம். இந்த வகையில் அகதியாக இடம்தேடிய எம்மை வா என வரவேற்று அகதியாகவன்றி மிக விரைவிலேயே இந்த மண்ணின் மைந்தர்களாக தத்தெடுத்ததன் மூலம் இரண்டாவது தாயகமாக மாறியுள்ளது கனடா.

கனடா, உலகின் அனைத்து இன மக்களையும் தாங்கிய ஒரு புண்ணிய பூமி. வெள்ளை நிற மண்ணென நினைத்துக் குடியேறிய எங்களுக்கு வெள்ளை, கறுப்பு, மஞ்சள், சிவப்பு என நிறபேதம் பார்க்காமல் மனிதத்தை முன்னிறுத்திய மகத்துவமான மண். 1950 களில் விரல்விட்டு எண்ணிவிடக் கூடியதாக இருந்த ஈழத் தமிழர்களின் திருமுகங்கள் 1980 களின் பிற்பகுதியில் சிறிது சிறிதாக அதிகரித்து...
இருபத்தியோராம் நூற்றாண்டின் ஆரம்பமாகிய இன்று 150 இற்கும் அதிகமான இன மக்களிடையேயும் தனித்துவமான முகம் காட்டியவர்களாக ஈழத் தமிழர்கள் இந்தக் கனடா மண்ணில் நிலைபெற்றோம். அதிலும் குறிப்பாக உலகக் கிராமம் (Global Village) என வர்ணிக்கப்படும் கனடாவின் ரொறன்ரோ மாநகரில் திரும்பிய இடமெங்கும் எங்களின் திருமுகங்களைக் காணக்கூடியதாக இருக்கின்றது. படிப்பு, விளையாட்டு, கலை, விஞ்ஞானம், கணனி எனப் பல்வேறு துறைகளிலும் அவை சார்ந்த ஏனைய இடங்களிலும் ஈழத் தமிழன் தனித்துவமாக நிலைபெற்று புதிய நூற்றாண்டில் எமது பயணத்தைத் தொடங்கிவிட்டோம்.

ஏன்? எப்படி? என்னும் கேள்விகளை மனிதன் தனக்குத்தானே கேட்க ஆரம்பித்த போதே விலங்குடன் விலங்காக வாழ்ந்த மனிதன் விண்ணில் பறக்க ஆரம்பித்தான். அது போல் ஏன் இங்கு வந்தோம் என்பதை மனதில் இருத்தி இனி எப்படி இங்கு வாழப் போகின்றோம் என வினாவினை எழுப்பும் போது தமிழனாகவா இங்கு முகம் காட்டப் போகின்றோம்? அல்லது கனடியனாகவா இந்த நீரோட்டத்தில் மறைந்து விடப் போகின்றோம்? அல்லது தமிழ் கனடியன் ஆக தனித்துவத்தைப் பேணப் போகின்றோமா?

புலம்பெயர்ந்த பல நாட்டினரும் இரண்டு மூன்று தலைமுறைகளில், தமது தனித்துவத்தைத் தொலைத்து விட்டு இடம்தேடிய மண்ணில் இரண்டறக் கலந்து விடுவது இயல்பான ஒன்று. எனினும் விதிவிலக்காக சீன இன மக்கள் தங்கள் முகம் தொலைந்து விடாமல் இந்த பூமிப் பரப்பெங்கும் பயணம் வருகின்றார்கள். அதுபோல் ஈழத் தமிழராகிய நாம் தாம் புலம்பெயர்ந்த மண்ணில், எமது இனம் தொலைந்து விடாமல் தமிழின் இருப்பை உலகெங்கும் இன்று முரசறைந்து வருகின்றோம். இந்நிலை தொடருமா? இதற்கு நாம் என்ன செய்ய வேண்டும். இதுவே இன்று எமக்கு முன்னாலுள்ள கேள்வியாகும்.

நடை, உடை, பாவனை, உணவு, கலை, கலாசாரம் என்பவற்றின் மூலமே ஒவ்வொரு இனமும் தனித்தனியே இனங் காட்டப்படுகின்றன. எனினும் நாம் என்னும் உணர்வே மனிதனின் தனித்துவத்தைப் பேண இன்றியமையாததாகின்றது. விளக்கமாகக் கூறினால், நாம் தமிழர் என்னும் உணர்வுடன் வாழ்ந்தால் தான் எமது இனம் தனித்துவமாக விளங்கும். அதைவிட மேற்கூறிய கலை, கலாசாரம், நடை, உடை, பாவனை, பண்பாடு என்பன இரண்டாம் பட்சமே. அதனால் தான் பல்லின கலாசார நாட்டில் நாம் எமது தனித்துவத்தைப் பாதுகாக்க "நாம் தமிழராகவே" வாழவேண்டும். எங்கும் நாம் தமிழர் என்பதை முன்னிருத்த வேண்டும். கனடியத் தமிழனாக இருப்பதை விட தமிழ்க் கனடியனாக வாழவேண்டும். எங்களுள் தமிழராகவும் வேறிடத்தில் கனடியனாகவும் வாழும் மனநிலை முற்றாக நீங்க வேண்டும். கனடாவின் தேசிய விளையாட்டு வீராங்கனையாக டென்னிஸ் விளையாட்டில் புகழ்கொடி நாட்டிய சோனியா ஜெயசீலனையும், ஜ°னியர் பிரிவில் முன்னேறும் கவிதா கிருஷ்ணமூர்த்தியையும் நாம் இனம் காணவே எமக்குச் சில வருடங்கள் பிடித்தன. கிராண்ட் சலாம் போட்டிகளான அமெரிக்க, மற்றும் விம்பிள்டன் எனும் பெரிய உலகளாவிய போட்டிகளில் பங்குபற்றியதும் அல்லாமல் பல வெற்றிகளையும் தட்டி வந்த தங்க நங்கையர் இவர்கள். இனத்தால் தமிழர், இடத்தால் கனடியர் என்பதே உண்மையானது.

எதிர்காலம் எமக்கு ஒளிமயமானது தான். ஆனால் அதுவே எமது முகமிழப்பதற்கு நாம் ஆளாகக் கூடாது. கணனித்துறை விரல் நுனியில் உலகத்தையே அளப்பதோடல்லாமல் ஆட்டிப் படைக்கக் கூடிய அற்புதமானது. இன்று கனடாவில் எமது இளைஞர்களின் முன்னேற்றம் இந்தத் துறையில் அபரிமிதமானது. உலகின் தனிப்பெரும் வல்லரசான அமெரிக்காவின் கணனித் துறையை தமது கைப்பிடிக்குள் வைத்திருப்பவர்கள் இந்தியர்கள் என்பது பட்டவர்த்தனமானது. அது போல் எதிர்காலத்தில் கனடாவின் கணனித் துறையும் எமது கைகளுக்குள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அப்போதும் நாம் தமிழராகவே எம்மை இனங்காட்ட வேண்டும்.

கனடாவில் வாழும் இந்தியப் பஞ்சாபியர்கள் தமது தாடிக்கும் தொப்பிக்கும் போராடும் போது அவர்களுடன் சரிசமமாக வாழும் நாம் தமிழர் என்பதை மறக்கலாமா, "தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா" இது தரணியெல்லாம் பொருந்தும். அவுஸ்திரேலியாவின் பிஜித் தீவிலும், தென்னமெரிக்காவின் கயானாவிலும் றினிடார் தீவிலும் தொலைந்து விட்ட இந்தியத் தமிழர் போல் கனடாவில் தொலைந்துவிட்ட ஈழத் தமிழனை எதிர்கால தமிழீழ மக்கள் தேடும் நிலையைத் தடுக்க இன்றே நான் தமிழனாவேன். நாம் தமிழ்க் கனடியர் ஆவோம்!

சூழல்...

கணித கழகம் (Math club) போன்ற பாடஞ் சார்ந்த கழகங்கள் (student clubs) மூலமாகவும், பாடங்களைக் கற்பதில் ஆர்வமும் ஊக்கமும் அளிக்கப்பட்டு வருவதை நாம் காணலாம்.

மாணவர்களின் கல்வி வளர்ச்சியும், நடத்தைப் போக்கும் ,மேம்பாடும் அவர்களின் வீட்டுச் சூழல், பாடசாலைச் சூழல், கூட்டுச் சூழல், சமூகச் சூழல் ஆகியவற்றையே சாரும். இவை தகுந்த முறையில் அமைந்தால் ஒருவர் தகுந்த கல்வி பெற்று பொறுப்புடைய ஒழுக்கசீலராக குடும்பத்திலும், சமூகத்திலும், நாட்டிலும், இறுதியாக உலகத்திலும் மேம்பாடடைந்து மிளிரலாம். இந்த வகையில் எமது இளந் தலைமுறையினர் கற்று பொறுப்புள்ளவர்களாக சமூகத்தில் மேம்பாடடைந்து மிளிர்வதற்கான கற்றற் சூழலை வீட்டிலும், சமூகத்திலும் ஏற்படுத்தும் பொறுப்பு பெற்றோரையும் சமூகத்தையும் சாரும் என்பதை உணர்ந்து வாழ்வோமாக!

மலரின் எழுத்தாளர்கள்
Our Contributors



செ. இலங்கையன்
ஆசிரியர்
முன்னாள் இலங்கை கல்வி அதிகாரி



கதிர் துரைசிங்கம்
சமூக சேவையாளர்
ஓய்வுபெற்ற அரச மருத்துவ அதிகாரி



ஹரி ஆனந்தசங்கரி
வீடு விற்பனை ஆலோசகர்



வசந்தா நடராஜன்
எழுத்தாளர், ஒலிபரப்பாளர்



எஸ்.ரி. சிங்கம்
பொது முகாமையாளர்
'தமிழர் தகவல்' வெளியீட்டகம்



பொன். சிவகுமாரன்
கவிஞர், கட்டுரையாளர்
'தமிழர் தகவல்' குழு உறுப்பினர்

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு

வெளிநாட்டில் குடி புகுந்த இலங்கைத் தமிழர் தமது வாழ்க்கை முறைகளை இந் நாட்டின் வித்தியாசமான சூழலுக்கு ஏற்ப மாற்றியமைத்துக் கொள்வதில் பின்தங்கி விட்டார்கள் என்றே கருதத் தோன்றுகின்றது. நேரத்துக்கு உணவு உண்ணாமல் விடுவது, இறைச்சி வகைகளையும், மேலைத்தேய உணவு வகைகளையும் கூடுதலாக உண்பது, மரக்கறி வகைகளைக் குறைத்துண்பது, மதுபானத்தைக் கூடுதலாகப் பயன்படுத்துவது, தேக அப்பியாசம் இன்மை, போதிய தூக்கமின்மை, மன உளைச்சல் போன்ற பல்வேறு காரணிகளால் எம்மவரது உடல்நிலை பாதிக்கப்படுகிறது.

நோய் வந்த பின் அதற்கு மருந்து தேடுவதிலும் நோயே வராமல் தடுக்கும் வழிமுறைகளை அறிந்து அதன்படி செயற்படுவதே சிறந்தது என்பதை இன்று நேற்றல்ல இற்றைக்குப் பல நூறு வருடங்களுக்கு முன்பிருந்தே நம் ஆன்றோர்கள் வலியுறுத்தி வந்துள்ளனர். அதற்கான வழிமுறைகளையும் விளக்கியுள்ளனர். உணவுக் கட்டுப்பாடு, உணவு முறை என்பன அவற்றுள் முக்கியமானவையாகும்.
'மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின்' என்று வலியுறுத்திச் சென்றார் வள்ளுவப் பெருந்தகை. தேரையர் என்ற மாபெரும் வைத்தியர் 'நோய் அணுகா விதி' என்ற ஒரு நூலையே எமக்காக எழுதி வைத்துள்ளார்.

"பகல் துயிலோம் புகற் புணரோம் பருவமுத்த
வேலஞ் சேர் குழலியரோடு இளவெயிலும்
விரும்போம்
ஞாலந்தான் மடைத்திடினும் பசித்தொழிய
உண்ணோம்
நமனார்க் கிங் கேது வகை நாமிருக்கும்
இடத்தே."

"பகலில் நித்திரை செய்யக்கூடாது; பகலில் புணர்ச்சி செய்தல் கூடாது, வயதுக்கு மூத்த பெண்களுடன் உறவு வைத்துக் கொள்ளக் கூடாது; உலகம் முழுவதும் அன்னதானம் இடம்பெற்றாலும் பசித்தால் ஒழிய உணவு உண்ணக் கூடாது" என்று பல்வேறு ஆரோக்கிய வழிமுறைகளை விரிவாக அறிவுறுத்தியுள்ளார் தமிழ் மருத்துவ நூலோரில் தலைசிறந்தவரெனக் கணிக்கப்படும் தேரையர்.

உடலில் இருந்து கழிவுப் பொருட்கள் ஒழுங்காக வெளியேற வேண்டியதன் அவசியத்தை இன்றைய மருத்துவர்கள் வலியுறுத்தி வருகின்றனர். நீரைக் கொதிக்க வைத்து ஆறிய பின் குடிப்பது பல்வேறு நோய்களைத் தவிர்க்கக் கூடிய ஒரு வழிமுறையாகும்.

"தின்னம் இரண்டுள்ளே சிக்க அடக்காமல்
பெண்ணின் பாலொன்றைப் பெருக்காமல் -
உண்ணுங்கால்
நீர்கருக்கி மோர் பெருக்கி நெய்யுருக்கி
உண்பவர்தம்
பேர் உரைக்கிற் போமே பிணி."
என்பதையும் கூறிவைத்த தேரையர் ஒரு தலைசிறந்த மருத்துவர் என்பதில் ஐயமில்லை.

'மருந்தே உணவு; உணவே மருந்து' என்று கூறி வைத்தார் மேனாட்டு "மருத்துவத்தின் தந்தை" என்று போற்றப் பெறும் "ஹிப்போக்கிறற்றீஸ்" என்ற கிரேக்க அறிஞர். கொலெஸ்ரெறோல், உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு போன்ற பல வியாதிகளுக்கு உணவுக் கட்டுப்பாடே மருந்தாக அமைகிறது. பாகல், சிறு குறிஞ்சா போன்ற உணவுகளை நீரிழிவு நோயாளர் மருந்தாக உண்பதையும், வாழைப் பொத்தி, இலைக்கறி போன்றவை மலச் சிக்கலுக்கு மருந்தாகச் செயல்படுவதும், கரணைக் கிழங்கு மூல வியாதிக்கு மருந்தாவதையும் நாம் அறிவோம். அவ்வாறே மருந்துப் பொருள்களான உள்ளி, பெருங்காயம், சீரகம், கொத்தமல்லி, கடுகு, கறுவா, ஏலம், கராம்பு போன்ற பலவற்றையும் சுவையூட்டிகளாக எமது உணவில் சேர்த்துக் கொள்கிறோம். இந்தச் சுவையூட்டிகளின் மருத்துவப் பயன்பாடு குறித்துப் பல்வேறு ஆய்வுகள் விஞ்ஞான ரீதியாக இன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கலாநிதி
பால சிவகடாட்சம்

'வல்லாரை' 'கொட்டுகோலா' (Gotukola) என்ற சிங்களப் பெயருடன் இன்று அமெரிக்காவில் நன்கு பிரபலமாகி வருகிறது. சுளுக்கு, அடிகாயம், நோவு, தீப்புண் போன்றவற்றுக்குப் பயன்பட்டு வந்த நம்மூர்க் 'கற்றாழை' இன்று அலோ கிறீம், அலோ ஜெல், அலோ ஷம்பூ போன்ற பெயர்களில் பிரபல மருந்துக் கடைகளின் தட்டுக்களில் புது வடிவம் பெற்றுத் திகழ்கிறது. கல்லில் வளரும் தாழை என்று பெயர் பெற்ற கற்றாழை (கல்+தாழை) இன்று வீடுகளில் பூச்சாடிகளில் வளருகின்றது.

இந்தக் கற்றாழையைப் போலவே வல்லாரை, வேம்பு, உள்ளி, மஞ்சள் போன்ற பல்வேறு மருந்து 'மூலிகை'களின் பயன்பாடுகளை நம்மவரிடமிருந்து கற்றுக் கொண்டு அவற்றை ஆராய்ந்து உறுதி செய்த பின்னர் பயன்படுத்தி வருகிறார்கள். இந்த மூலிகைகளின் பயன்பாடு பற்றி நாம் அறிந்திருந்தும் அவற்றில் நாம் நம்பிக்கை வைப்பதில்லை. தேரையர் எழுதி வைத்துள்ள 'நோய் அணுகா விதி' பற்றி அறிந்து வைத்திருக்கும் நம்மவரை விரல் விட்டு எண்ணிவிடலாம். பழையன எல்லாம் பலன் அற்றவை அல்ல; புதியன எல்லாம் பலன் தருபவையும் அல்ல.

பாமர மக்களும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டிய மருத்துவ உண்மைகளைப் பழமொழியாகவே விட்டுச் சென்றுள்ளனர் நம் முன்னோர்.

"இலைக்கறி இன்றேல் மலச்சிக்கல் ஒழியா"
"சீரகம் தின்னச் சீரணம் யாவும்"
"பத்து மிளகு கையில் இருந்தால் பகைவன் வீட்டிலும் சாப்பிடலாம்"
"கொத்தமல்லி பித்தம் போக்கும்"
"அகத்திக் கீரை அகற்றிடும் மருந்தை"
"ஆலும் வேலும் பல்லுக்குறுதி"
"நொந்த உடம்புக்கு வெந்த அமுதிடு"
"ஊதாரிப் பிள்ளைக்கு ஓமந்தான் கதி"

இப்படி எத்தனையோ மருத்துவப் பழமொழிகள்.

இவற்றில் உண்மை இல்லாமல் இல்லை.

இலைக்கறி நார்ப்பொருள் உடையது. மலம் ஒழுங்காகக் கழிவதற்கு இந்த நார் (fibre) அவசியம். மலம் ஒழுங்காகக் கழியாவிடின் மூலவியாதி, கோலோன் கான்சர் போன்ற வியாதிகள் ஏற்பட இடமுண்டு. "இலைக்கறி இன்றேல் மலச்சிக்கல் ஒழியா" என்ற பழமொழி இந்த உண்மையை உணர்த்துகிறது.

'ஊதாரிப் பிள்ளைக்கு ஓமந்தான் கதி' என்ற பழமொழியில் ஊதாரிப் பிள்ளை என்பது 'வயிற்றோட்டம்' உள்ள குழந்தையைக் குறிக்கிறது. வயிற்றோட்டத்தின் போது அவசியமான நீரும் கனியுப்புகளும் உடலில் இருந்து விரயமாகின்றன. அதனையே வயிற்றோட்டமுள்ள பிள்ளையை 'ஊதாரிப் பிள்ளை' என்று குறிப்பிட்டுள்ளனர். இவ்வாறு ஒவ்வொரு மருத்துவப் பழமொழியையும் நாம் ஆராய முடியும். பழமொழிகள் ஆனாலும் பயனுள்ள மொழிகள் இவை.

எமது சமையல் அறையே ஒரு மருந்துப் பெட்டகம். சாதாரண தடுமல், இருமல், தலையிடி போன்ற பல வியாதிகளுக்கு மருந்தை இந்த அறையில் இருந்தே பெற்றுக் கொள்ளலாம். குறைந்தது டாக்டரிடம் செல்லும் வரையிலாவது ஓரளவு நிவாரணம் அளிக்கக் கூடியனவாக இந்த மருந்துகள் உள்ளன. உதாரணத்திற்குச் சில:

1. ஒரு தேக்கரண்டி மிளகுத் தூளை 4 கோப்பை நீருடன் கலந்து கொதிக்க வைத்து நான்கில் ஒன்றாக வற்றும் வரை காய்ச்சிக் குடித்தால் தடுமலுக்கு நிவாரணம் கிடைக்கும் (ஒரு நாளைக்கு மூன்று தடவைகள்).

2. 10 கிராம் துளசி இலைகளுடன் சம அளவு சுக்குச் சேர்த்து 250 மில்லி லீட்டர் தண்ணீரில் கொதிக்க வைத்து அருந்தினாலும் தடுமல் தீரும்.

3. அதிமதுரத்தை (licotice) நீரில் கொதிக்க வைத்து அதனுடன் தேன் அல்லது சீனி கலந்து இந்தக் குடி நீரைத் தொண்டையில் விட்டுக் கொப்பளிக்க வரட்டு இருமல் தீரும். (நல்ல அதிமதுரத்தை ஆங்கில மூலிகைக் கடைகளில் லிக்கறைஸ் (licorice) என்று கேட்டு வாங்கவும்) உயர் இரத்த அழுத்தம் உடையவர்கள் இந்தக் கஷாயத்தைக் குடித்தல் கூடாது.

(88ம் பக்கம் பார்க்க)

Urgent Need for History Books on Eelam

Culture and mother tongue are the first casualties when people forget their roots and their heritage. Trying to find out which goes down the drain first is like asking which came first - the chicken or the egg. But that is not the point here. The point is, once the roots and heritage are forgotten, it can be said with certainty that one will follow the other in a downward spiral till both of them disappear completely in the vortex. When people lose their culture, they cease to be a people. Expatriate populations all over the world, irrespective of where they came from, are faced with this terrible and tragic possibility of cultural and linguistic oblivion.

Cultural transformation takes place through a sort of osmosis, a process triggered by the visual media. Peer pressure in schools and workplaces completes the job. Caterpillars change into beautiful butterflies through metamorphosis. But the process of transformation from one culture to another has the opposite effect. It ends up in a "neither here nor there" situation, and it benefits neither. Most of the time, these copies are of very poor taste and quality. At times, they look plain stupid and ridiculous. What should be born in mind is that mimicking other cultures will not make anyone a member of the culture they try to ape.

That there are exceptions to every rule is universally accepted. In this country, the Chinese community seems to be that exception. The extent to which they have succeeded in preserving their culture and their mother tongue is just amazing. Even without engaging in elaborate scientific research, simple empirical observation will show that even third generation Chinese in Canada continue to speak their mother tongue, not only in their homes but also with other members of their community whenever they happen to meet anywhere. But we are in a pathetic situation of forgetting our root and culture, together with our mother tongue, within such a short period of not even a decade.

K. Jawaharlal Nehru

It is a common fallacy among our people that one has to do away with their mother tongue and cleanse them of their original culture in order to integrate into mainstream Canadian society. The fact that the Chinese community is not considered as a "visible minority" in Canada - (the only non-white race to gain this distinction) -will serve as ample proof that it is not the case. With the appointment of Adrienne Clarkson as the Governor General of Canada, the Chinese community has reached the pinnacle of recognition in this country. She was not even born in Canada! The reason for that is quite simple. They are proud of their identity and culture, and they make this fact known to the wider community and the whole world. Even after the phenomenal success they enjoy in this adopted country of theirs, they have not forgotten their mother tongue, culture, or their mother country. But what is our position?

The umbilical cord of love that connects us to our great mother Eelam is fraying right in the middle. It is in imminent danger of being severed completely, that too at a time when we really need this connection the most. It definitely will, if immediate action is not taken and a concerted effort made to put a stop to this downward trend now before it is too late. Teaching of and learning about our glorious past is the only way we can save ourselves from oblivion. The need to learn the glorious past history of Eelam Tamils had never been more urgent than as at present.

Material on Eelam history is scarce, and difficult to find. Not enough material is available for teaching purposes. Material on Eelam history that are available at present are all interspersed with other histories. As there are no separate and individualized records on Elamites available at present, research scholars and others are having difficulty in finding source material. It does not mean that such materials do not exist. They are out there somewhere. Only thing, we have to find them, collect them and publish them in book form. The responsibility to do it rests squarely on the shoulders of our Tamil scholars.

Another important thing we should bear in mind is that every such book written in Tamil must be translated into other languages as well. Translations should not be confined to English alone. Tamil scholars living in France can attend to French translations; those living in Denmark can do the Danish translation, and so on. Failing to do so, and confining ourselves to Tamil - writing alone will be like covering candlelight with a coconut shell. We should not be satisfied with nor confine ourselves to only teaching our own future generation. We should also make the outside world know who we are, and what our heritage is.

For example, there are about 10,000 originals as well as English taranslations on Chinese topics in the York University library, the only place I have opportunity for extensive access. There is also a separate Chair and Department of Chinese Studies at this university. But there is not even a single book on Tamil, Tamil literature or Tamil history available here. The fault is not with the university. There is simply not enough source material in English originals or translations on our subject.

Some authors have already undertaken - and very successfully too - this task of gathering information about our early history and putting them together in book form. Members of the Tamil community should not only be grateful to these authors but are also obliged to extend their support to them in every way possible. This present genre meets our requirements for information, which is no doubt our urgent need. But that is not enough. We need something more.

We need writings to meet academic standards so that they could be used by future students, historians and researchers. For that, we need quotations from and references to primary or secondary sources that should not only be authoritative but also quoted in the proper format acceptable to the academic world. The sources of information need to be stated clearly. This involves the use of footnotes, endnotes and a bibliography. Without them, books do not receive academic recognition.

The purpose of a footnote is either to mention the authority for some fact stated or to develop some point referred to in the body of the book. It is not only a matter of courtesy to previous authors but also a matter of intellectual integrity and indebtedness that every source is acknowledged, even when no direct quotation is used. Systems for footnoting are numerous, but whichever method the author may choose, it should be used consistently throughout the book and be immediately clear to any intelligent reader. The most common and popular form of referring to source material is given below:

For quotations from books, the standard form is: (1) author's first name or initials followed by surname; (2) title of book (in italics) and number of edition; (3) place of publication; (4) name of publisher, which is optional; (5) date of publication; (6) volume and page reference. For example:

- Charles Dickens, *Hard Times*, 18th ed., London (UK), Penguin Classics, 1984, 77
- Raymond Chandler, *The Big Sleep*, New York, Vintage Publications, 1986, 93
- Arthur Hailey, *The Wheels,* Toronto, Dell Publishing, 1980, 64

If the need arises to use more than one quotation from the same book on the same page of the book being written, the footnote need not be repeated in detail. The word *"Ibid"* can be used to cover all the details except the page number. *Ibid* is derived from the Latin work *Ibidem*, meaning "in the same place." For example:

- Charles Dickens, *Hard Times*, 18th ed., London (UK), Penguin Classics, 1984, 77
- *Ibid*, 79

For materials quoted from periodicals, magazines, and newspapers, the procedure is slightly different. The title of the article or story should appear after the author's name and before the name of the magazine in italic. The volume number to appear in Roman numerals, immediately after the name of the magazine or journal, and Arabic numerals for the page number. For example:

- Alice Alldredge, "Appendicularians," *Scientific American*, vol.XXV (July 1976), 98
- A.T. Seaman, "Fiction in Atlantic Canada," *Canadian Literature*, 68-69 (Summer 1976), 33
- K. Jawaharlal Nehru, "Terrorism in Canadian Schools", *Tamils' Information*, vol. CXVI (November 1999), 10

Using footnotes whilst word-processing on computers using Word Program has become so simple these days. Just place the cursor at the point where reference to footnote has to be made, go to "insert" and click "footnote." A drop menu will appear. In that menu, just click "OK." The footnote number will appear at the point you had earmarked, and you will be brought down to the bottom of the page with the same number appearing there. All you have to do is to type the details of the source material. Whilst revising or editing your draft, if a need arises for another footnote to be made in between the ones you had already made, yo don't have to panic. You have only to repeat the process described above with the cursor at the new location. You will see the footnote reference number appearing there will be in sequence with the one appearing just before the new one made, and all subsequent numbers will change automatically.

Every serious book written must contain a Bibliography, and these bibliographical items should be arranged correctly and consistently. The standard form is: (1) Arrange items alphabetically by the last names of the authors. Each surname should be followed by a comma, then by the author's given name(s) or initials. (2) If more than one book by the same author is cited, list titles by the same author alphabetically, using a blank line about 1.5 cm long in place of the author's name after the first appearance. (3) The author's complete name is followed by a period. (4) A period follows the title of a book. Citing the publisher's name is optional. (5) Place and date of publication are separated by a comma and are not to be put in parentheses. Examples:

- Dickens, Charles. *Hard Times*. London (UK): Penguin Classics, 1984.
- Chandler, Raymond. *The Big Sleep*. New York: Vintage Publications, 1986.
- Hailey, Arthur. *The Wheel*. Toronto: Dell Publications, 1980.

Whilst being eternally grateful to scholars who have spent their time and money in this pursuit of writing Eelam History, we will have to find a way to collect and exchange all future information gathered on this very important topic. A centre for that purpose or a data bank will not be a bad idea.

Exchange of information on the History of Eelam Tamils.

References to Eelam, Eelam Tamils, Tamil language, and so on, are found in numerous English books and texts. Apart from feeling a momentary sense of pride while reading them, most Tamil readers do not seem to have taken any other action on or about such references. This statement of mine should not be construed as blaming anyone. If that is an offense, I am myself guilty of the same offense. In my case, it will be like the pot calling the kettle black. The point I am trying to stress here is that the time has now come not only to take a serious note of such references but also to share them with the community.

Deciding on how this could be done seems to be rather difficult. Passing such information to each and every writer individually in humanly impossible. The only other alternative is to organise a centre for that purpose or a data bank to which such information could be forwarded where writers and other people who are interested in the subject could easily access them. How and where to establish such a centre raises other difficulties. Feasibility studies take time, and organising a centre will take even longer. So, why not start it here in Toronto with **"Tamils' Information"** as the centre - atleast for the time being, till a permanent centre for Eelam Tamil Research could be established. It can first be published in the magazine and then saved for posterity. For starters, I am herewith sending a few of such references I came across. The first one was found on a topic of Chinese maritime activities, and the second one dealing with European overseas trade during feudal times. They are reproduced exactly as they appear on the text. Some of the spellings may differ from modern usage, but that is how they appear in the text. And that is how passages got to be quoted. All future usage and/or interpretations will be the responsibility of individual reader or author. But quotations should be used exactly as they appear in the original text, and acknowledgement made to the original author, and not to me.

Found in the book, "The Discovers" by Daniel J. Boorstin.

> "The Chinese had quite another view of religion, a tradition of live-and-let-live. Tolerance is too weak a word for their complaisant pluralism. Cheng Ho's forces were not only unwilling to persecute for God's sake, but wherever they went they actually spent their resources to support whatever religions the people there professed.
>
> Visible witness of this generous spirit survives in the town of Galle on the southwestern coast of Ceylon on the Indian Ocean. There an upright stone slab, inscribed in three languages - Chinese, Tamil, and Persian - and dated 1409, records a visit by Cheng Ho's fleet. The Chinese version is translated as follows:
>
> > **His imperial Majesty, Emperor of the Great Ming, has dispatched the Grand Eunuchs Cheng Ho, Wang Chhing-Lion and others, to set forth his utterances before the Lord Buddha, the World- Honoured One, as herein follows.**
> >
> > **Deeply do we reverence Thee, Merciful and Honoured One, of Bright perfection, wide-embracing, whose Way and virtue passes all understanding, whose Law pervades all human relations, and the years of whose great *kalpa* rival the river-sands in number; Thou whose controlling influence enno bles and converts, inspiring acts of love and giving intelligent insight (into the nature of this vale of tears); Thou whose mysterious response is limitless! The temples and monasteries of Ceylon's moun tainous isle, lying in the southern oceana far, are imbued and enlightened by Thy miraculously responsive power.**

Of late we have dispatched missions to announce our Mandate to foreign nations, and during their journeys over the oceans they have escaped disaster or misfortune, journeying in safety to and fro, ever guided by Thy great virtue.

Wherefore according to the Rites we bestow offerings in recompense, and do now reverently present before the Lord Buddha, the World-Honoured One, oblations of gold and silver, gold-embroidered jewelled banners of variegated silk, incense-burners and flower-vases, silks of many colours in lining and exterior, lamps and candles, with other gifts, in order to manifest the high honour of the Lord Buddha. May His light shine upon the donors.

To prove that Cheng Ho's tribute had substances, the inscription then itemizes the presents he offered to the Lord Buddha: 1,000 pieces of gold, 5,000 pieces of silver, 100 rolls of silk, 2,500 catties (1 catty equals 1.3 pounds) of perfumed oil, and various gilded nd lacquered bronze ecclesiastical ornaments.

Since this same slab also bore inscriptions in Tamil, the language of south India and Ceylon, and in Persian, historians long assumed that, as on the Rosetta Stone, all versions carried the same message. The surprising facts proved this was only a provincial Western assumption. For the Tamil version, in its turn, used phrases no less extravagant than those lavished on the Lord Buddha, to proclaim the Chinese emperor's adoration of the god *Tenavarai-nayanar*, an incarnation of the Hindu god Vishnu, and then in turn the Persian version similarly glorified Allah and the Muslim saints. Each of these indiscriminate paeans appended a list of the lavish presents for whatever God they named. And all sets of presents were quite the same as those offered to the Lord Buddha. Cheng Ho's fleet, bringing this stele with them from China, came well equipped to smother with equally extravagant generosity each of the three competing religions of Ceylon."

[The most important information in the above quotation is about the "stele." Stele is an upright pillar or slab of stone with carved inscriptions. The fact that it was not made in Ceylon, but brought all the way from China shows that Tamil language had spread even to China in the 1400s. Do not know whether the stele mentioned is still there or not. Most probably, the Sinhalese would have destroyed it by now. But, we now have an authoritative source in this book]

- **Boorstin, Daniel J., *The Discoverers*, Vintage Book, New York, 1985, p193-94**

Found in the book, "The Making of Economic Society" by Robert L. Heilbroner.

"Records of an order for goods placed on the occasion of a funeral of a Swedish nobleman in 1328 include saffron from Spain or Italy, caraway seed from the Mediterranean, ginger from India, cinnamon from Ceylon, pepper from Malabar, anise from southern Europe, and Rhine and Bordeaux wines. The order was placed for immediate delivery from one local merchant, despite the fact that Sweden was then a laggard and even primitive land. (Cf. Fritz Rorig, Mittelalterliche Weltwirtschaft (Jena: 1933) p. 17)"

[The important thing to be noted here is that the above quotation by Heilbroner is an English translation of a passage from another book, written in German by Fritz Rorig.]

- **Heilbroner, Robert L. The Making of Economic Society, Prentice-Hall. Inc. 1962, p.47**

The Quotations appearing below are from **"Legacy: The Search for Ancient Cultures,"** by Michael Wood. Sterling Publishing Co. of New York in 1994 published the American edition of this book, and there is also a British edition published by BBC Enterprises Ltd., of London in 1992. The texts are exactly the same, as such, there will be no confusion about page numbers. These quotations have already appeared in **Ahilan's Sixth Year Memorial Issue** of 10.05.1995, and they are reproduced here for the sake of people who missed them, and also for storing at the Data Bank at **"Tamils' Information."**

"With no natural frontiers, Mesopotamia was always at risk from its neighbours, especially from the east from the Elamites and, later, the Persians." (p.14)

"In the area called Sumer, covering almost the whole of the Tigris and Euphrates valley, appeared the first permanent human settlement. "But, who the Sumerians were is still one of the archaeology's great mysteries. Their language has no known affinities with any language, living or dead. But new discoveries concerning Elamite, the ancient language of Persia, may hold the key to Sumerian origins." (p.18)

"The end of the Third Dynasty of Ur was one of the greatest events in the history of Sumer. Around 2000 BC the land was devastated by a coalition of its enemies, Elamites from what is now Iran, and their nomadic allies from the desert. All the main cities of Sumer were sacked, their temples destroyed, their culture plundered, and their popul ation killed, enslaved or forced to flee. Finally Ur, itself was wrecked and burned, and Ibbi Sin carried off to Elam as prisoner." (p.34)

"New discoveries make it absolutely certain that the Indus civilization was an Indian phenomenon, growing out of the native prehistoric cultures of its region, and not, as was thought in some quarters, stimulated by diffusion of cultural ideas from Iraq. But who were the people of the Indus civilization, if they were not Ariyan Indo-Europeans? Were they the "Dasas" of the Rig Veda? A new picture has begun to emerge, only since 1980s. The crucial discovery has been the proving beyond any doubt, that the ancient pre-Aryan language of Iran, Elamite, is cognate with the ancient Dravidian languages still spoken in Southern India, best known of which is Tamil. These languages descend from the prehistoric speech spoken in Iran and northwestern India, and doubtless in the early villages like Mehragh; indeed a pocket of a relative language, Brahui, is still spoken today in a small area of West Pakistan on the Iranian border. The original proto-language split up around 5000 BC, at a guess, after the invention of agriculture, to judge by its common terminology in Elamite and Dravidian. The Elamite branch was spoken in the early urban societies in Iran contemporary with Sumer around 3000 BC, and ceased to be spoken in the tenth century AD. Dravidian is still spoken now by over 200 million South Indians.

This has tremendous implication for the whole history of early India. For it suggests that Dravidian languages are not native to the south, but moved from Baluchistan through Gujarat and into southern India only after about 5000 BC. Once rooted in the south, the Dravidians developed towns and rediscovered writing only in the late first millennium BC.

The proving of these linguistic links transforms our understanding of th Indus civilizations, for it makes it virtually certain that an early form of Dravidian, related to modern Tamil, was spoken in the Indus valley at the time of Mohenjo-Daro and Harappa. Hence, most probably, the undeciphered inscriptions

on the seals are Dravidian, as scholars have long suspected. Other fascinating piece of evidence back this up, from the survival of Dravidian kinship terminology in today's Gujarat to the continued presence of Dravidian-derived custom in the Indus region. One tiny detail will serve as an example: on Hindu pilgrim stalls in Madurai, South India, the symbol of the town's goddess Minakshi is a fish with stars. Her name comes from the most ancient stratum of Tamil: 'min' means both 'fish' and 'stars', ancient symbols of divinity. This connection is depicted in Harappan pottery and seals: but it is also found in Muslim pilgrim stalls in Sind where fish is carved with the Muslim creed - an amazing testimony to the tenacity of religious symbols over time.

Seventy years after the discovery of Harappa, the strands are beginning to come together. The Indus civilization was almost certainly Dravidian, its culture clearly related to the Elamite world of Iran, and distantly related to today's culture in South India." (pp.58-60)

"Tamil and Sanskrit loan-words in the Hebrew Bible suggest tradition could be right: they were certainly here by Roman times." (p.71)

"Dravidian language and culture had spread into South India where we can trace continuity back to 3000 BC.(pp.60-61)

"Until that point it was generally believed that Indian classical culture, and the Hindu religion, were Aryan in origin: a belief no doubt strongly coloured by the pervasive influence of Western theories about the racial and cultural superiority of the Indo-Europeans. Until then it was simply unbelievable that Aryan civilizations had been preceded by a much earlier one, contemporary with those of ancient Iraq and Egypt. But this is precisely what was discovered in 1921-2, pushing back the frontiers of India's history by several thousand years, and making it the oldest known civilization." (pp.53-54)

மருந்தென...

4. கற்றாழைச் சாறு ஒரு தேக்கரண்டி எடுத்து அதில் சிறிதளவு உப்புச் சேர்த்து அருந்த மலச்சிக்கல் தீரும். (ஒரு நாளைக்கு மூன்று தடவைகள்)

5. பாகல் இலை அல்லது காயின் சாறு 30 மில்லி லீட்டர் ஒரு நாளைக்குக் குடித்து வருவது நீரிழிவு நோயாளர்களுக்கு (இன்சுலின் மருந்து பயன்படுத்தாதவர்களுக்கு) பயனளிக்கும்.

6. செமியாக் குணத்தினால் ஏற்படும் வயிற்றுப் பொருமலுக்கு சுக்கும் மிளகும் ஒவ்வொரு தேக்கரண்டி எடுத்து 250 மில்லி லீட்டர் தண்ணீரில் கொதிக்க வைத்து நான்கில் ஒன்றாக வற்றிய பின் குடிக்கவும். (45 மில்லி லீட்டர் அளவான குடிநீர் ஒரு நாளைக்கு 3 தடவைகள்)

7. நெஞ்செரிவுக்கு முழு நெல்லிக்காய் சிறந்தது என்கிறார்கள் தமிழ் வைத்தியர்கள். அதே சமயம் 1 மேசைக் கரண்டி அப்பிள் சைடர் வினிகரை (Apple cider vinegar) அரைக் கிளாஸ் தண்ணீருடன் சேர்த்து சாப்பாட்டின் போது அருந்துவது நல்ல பயனளிக்கும் என்கிறார்கள் மேலைத்தேய மூலிகை மருத்துவர்கள்.

8. ஒரு தேக்கரண்டி அல்லது ஒரு மேசைக் கரண்டி சீனியை வெறுமனே வாயில் போட்டு விழுங்குவது விக்கலுக்குச் சிறந்த மருந்தாகும்.

9. பல்லுக் கொதி உடையவர்கள் சாப்பாட்டுக்குப் பின்னரும் படுக்கைக்குப் போக முன்னரும் ஒரு தேக்கரண்டி உப்பை 8 அவுன்ஸ் கிளாஸ் இளஞ் சூடான நீரில் கரைத்து நன்றாக வாய் கொப்பளிக்கவும். (கராம்புத் தைலத்தில் ஒரு துளி கொதிக்கும் பல் மீது விடலாம்).

நகர கவுன்ஸிலர் பாம் மக்கொனாலுக்கு தமிழர்கள் பாராட்டு!

ரொறன்ரோ நகர சபையின் 'டொன் றிவர்' வட்டார உறுப்பினர் பாம் மக்கொனாலுக்கு தமிழர் அமைப்புகள் பலவும், தமிழர்கள் பிரதிநிதிகள் பலரும் தங்கள் பாராட்டுதலைத் தெரிவித்துள்ளனர். இந்த வருடப் பிற்பகுதியில் நடைபெறவிருக்கும் ரொறன்ரோ நகரசபையின் தேர்தல் சம்பந்தமான விபரக்கொத்து பல சிறுபான்மையினர் மொழிகளில் வெளியிடப்படுகின்ற போதிலும், தமிழ் நீக்கப்பட்டிருந்தது. இவ்விடயத்தைத் தமிழர் தகவலை வெளியிடுகின்ற ஈழத்தமிழர் தகவல் நிலையம் உடனடியாக பாம் மக்கொனாலின் கவனத்துக்குக் கொண்டு வந்ததுடன், தமிழிலும் தேர்தல் விபரக் கொத்தினை வெளியிட நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டிருந்தது. தமிழர்கள் செறிந்து வாழுகின்ற பார்லிமென்ட்-வெலஸ்லி, றிஜன்ட் பார்க் ஆகிய மகுதிகளின் பிரதிநிதியாக இருக்கும் பாம் மக்கொனால் தமிழுக்கு வழங்கும் பாரபட்சத்தைச் சுட்டிக்காட்டி வாதாடியதையடுத்து, தமிழிலும் இவைகளைப் பிரசுரிக்க இறுதியாக முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதற்காகவே தமிழர் அமைப்புகளும், பிரதிநிதிகளும் தங்கள் பாராட்டுகளை அவருக்கு வழங்கியுள்ளனர்.

மாகாணங்களின் வைத்திய கல்வி வசதிகளுக்கு ஒரு பில்லியன் டாலர்களை மத்திய அரசு வழங்கும்!

மாகாணங்களின் வைத்திய வசதி, பல்கலைக் கழக கல்விச் சேவை ஆகியவைகளுக்கு கனடிய மத்திய அரசாங்கம் ஒரு பில்லியன் டாலர்களை உதவியாக வழங்க முன்வந்துள்ளது. அண்மைக் காலங்களில் ஒன்ராறியோ அரசின் வைத்தியசாலைகள் வெட்டினால் பொதுமக்களின் பலத்த கண்டனத்துக்குள்ளாகி வருவதுடன், ஒன்ராறியோ உயர்கல்விக்கான கட்டணத்திலும் அதிகரிப்புக் கொண்டுவரப்பட்டுப் பலருக்குக் கல்விக் கதவுகள் மூடப்பட்டு வருவதும் தெரிந்ததே. இவ்வாறான ஒரு நெருக்கடி நிலையில் பொதுமக்களின் பலமான வரவேற்புடன் மத்திய அரசாங்கம் ஒரு பில்லியன் நிதியுதவித் திட்டத்தை அறிவித்துள்ளது. இதில் சுமார் முன்னூறு மில்லியன் டாலர்கள ஒன்ராறியோ மாகாணத்துக்கு வழங்குவது தொடர்பான அறிவித்தலை நிதியமைச்சர் போல் மார்ட்டின் இந்த மாதம் அறிவிப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் நிதி சேகரிப்புக்கு பலத்த கண்டனம்

ரொறன்ரோ பொலிஸ் சங்கம் என்ற பெயரிலான பொலிஸாரின் தொழிற் சங்கம் 'True Blue' என்ற பெயரில் மேற்கொண்டிருக்கும் நிதி சேகரிப்பு நடவடிக்கை பலத்த கண்டனத்துக்குள்ளாகியுள்ளது. ரொறன்ரோ பொலிஸ் சங்கத்துக்கான நிதி சேகரிப்புக்காக இந்த True Blue என்ற பெயரில் நிதி சேகரிக்கப்படுகின்றது. வழங்கப்படும் பணத்தொகைக்காக 'ஸ்டிக்கர்' வழங்கப்படுகின்றது. அவைகளை விதியுதவி வழங்கியவர்கள் தங்கள் வாகனங்களில் ஒட்டலாம். இவர்களுக்கு ஏதாவது சலுகையைப் பொலிஸார் வழங்குகின்றார்களா என்ற கேள்வியைப் பலரும் எழுப்பியுள்ளனர். இது விடயத்தில் பல சந்தேகங்களும் கிளப்பப்பட்டுள்ளது. பொலிஸ்மா அதிபர் டேவிட் பூத்பி, ரொறன்ரோ நகர மேயர் மெல் லாஸ்ட்மன் ஆகியோர் 'இந்த நிதி சேகரிப்பினை உடனடியாக நிறுத்த வேண்டும்' என்று குரல் கொடுத்துள்ளனர் ஜனவரி 31ம் திகதிய நிலைவரத்தின்படி, தங்களின் நிதி சேகரிப்பு நடவடிக்கை சட்டப்படி முறையானது என்று சங்கத்தின் தலைவர் கிறேக் புறோமெல் வாதாடி வருகின்றார்.

இயூறோ நாணயம்

உங்களுக்கு ஒரு இரகசியம் சொல்லப்போகிறேன். உலக நாடுகள் பலவற்றின் நாணயத்திற்கு ஒரு தகுதியை ஈந்தது நமது இலங்கை தான். எப்படி என்று கேட்கிறீர்களா? இதோ ஒரு கவிஞர் பாடுகிறார்:

'ஊரும் சதமல்ல உற்றார் சதமல்ல
உற்றுப் பெற்றபேரும் சதமல்ல
பெண்டிர் சதமல்ல-பிள்ளைகளும்
சீரும் சதமல்ல செல்வம் சதமல்ல
தேசத்திலே யாரும் சதமல்ல
இலங்கையில் உள்ள சதமே சதம்!'

இது இன்று நேற்றல்ல பல ஆண்டுகளுக்கு முன்னர் பாடப்பட்டது. பட்டினத்து அடிகளின் பாடலொன்றின் ஈற்று அடியினைக் கவிஞர் சற்று மாற்றி விட்டார் அவ்வளவே! அப்போது ஏனைய நாடுகளிலே நாணயத்தில் தசம முறைப் பிரிவு கையாளப்படாத நிலை! இந்தியாவில் ரூபாய் அணா, இங்கிலாந்தும் ஏனைய சாம்ராஜ்ய நாடுகளும் பவுண்ட், பென்னி, அமெரிக்கா கனடா போன்றவை டாலர், பென்னி என்றும் நாணயங்களைப் பாகுபடுத்த நமது இலங்கைதான் ரூபா, சதம் என்று நாணயத்தைக் கையாள இப்போது எமது நாட்டினைப் பின்பற்றி ஏனைய நாடுகளும் தமது நாணயத்தின் சிறு அலகுகளைச் சதம் என்று உபயோகிப்பதையிட்டுப் பெருமை தானே. கடைசியாக இலங்கை நாணயத்தின் சதத்தை தமது நாணயத்திலும் கொண்டு வந்துள்ளவர்கள் ஐரோப்பிய பொருளாதார சமூகத்தவர்கள்.

இப்போது நாங்கள் விஷயத்திற்கு வருவோம். விடுமுறைக் காலம் என்றால் நீங்கள் சும்மா இருக்க மாட்டீர்களே! அப்படியே இங்கிலாந்து போய் இயூறோ புகையிரதம் மூலம் பிரான்ஸ் போய் அங்கிருந்து ஜெர்மனிக்குப் போய் இயூறோ டிஸ்னி பார்த்த பின் சுவிஸில் இளைப்பாறி வருவீர்களே. ஒவ்வொரு நாட்டிற்குப் போகும் போதும் உங்களை எதிர்நோக்கும் ஒரு முக்கிய பிரச்சனை அந்தந்த நாட்டு நாணயமாற்று முறையே. கொஞ்சம் பொறுமை பேணுங்கள்! இன்னும் இரு வருடங்களில் எவ்வித பிச்சல் பிடுங்கல்களும் இல்லாமல் இலகுவாக ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு வந்து விடலாம். எப்படி? சென்ற ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் ஐரோப்பிய பொருளாதார, பணம் சார்பு கூட்டமைப்பின் பதினொரு நாடுகள் (ஆஸ்திரியா, பெல்ஜியம், பின்லாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, அயர்லாந்து, இத்தாலி, லக்ஸம்பேர்க், நெதர்லாந்து, போத்துக்கல், ஸ்பெயின்) நிலுவையில் உள்ள தமது நாணயங்களைக் கைவிட்டுப் புதியதான இயூறோ நாணயத்தை அங்கீகரித்தன. ஆனால் இயூறோ நாணயத்திற்குரிய காசுத் தாள்களோ, உலோக நாணயங்களோ அச்சேற்றிப் பாவனைக்கு வர 2002ம் ஆண்டுவரை செல்லுமென்பதால், பங்குபற்றும் நாடுகள் யாவும் அதுவரை தங்கள் புழக்கத்தில் இருக்கும் நாணயத்தையே உபயோகப்படுத்த உள்ளன. ஆகவே ஒவ்வொரு நாட்டினதும் சொந்த நாணயத்திற்கு இயூறோ நாணயத்துக்கு ஈடான மாற்று வீதம் அதிகார பூர்வமாக நிரந்தரமாகவே நிறுவப்பட்டுள்ளது.

நான் ஏற்கனவே கூறியபடி இயூறோ நாணயத்தின் இறுதி அலகு சதம் என்றே வழங்கப்படும். நாணயம் 'இயூறோ' என அழைக்கப்படும்.

இயூறோவின் புதிய அதிகார பூர்வமான மாற்று வீதம் கீழே உள்ளது.

பங்குபற்றும் நாடுகளுக்குரிய உத்தியோகபூர்வ இயூறோ மாற்றுவீதம்

இதில் இரண்டு முக்கிய அம்சங்கள் கூர்ந்து கவனிப்போருக்குப் புலனாகும்.

இங்கிலாந்து இந்த நாணயக் கூட்டமைப்பில் இதுவரை சேரவில்லை. பிரித்து ஆள்வதிலே வல்லுனர்கள் என்று பெயர் பெற்ற பிரித்தானியா இங்கும் பிரிந்து நின்று தன் ஆதிக்கத்தைப் புலப்படுத்துகின்றது. தருணம் பார்த்து நிற்கின்றது. தகுந்த நேரம் வந்ததும் தானும் குதிக்கும். பிரித்தானியா ஐரோப்பிய கூட்டமைப்பில் (E.U) பிரதான அங்கத்தவர். இதே போன்று டென்மார்க்கும் தற்காலிகமாக இந்த அமைப்பில் சேரவில்லை. கிரீஸ், சுவீடன் ஆகிய நாடுகளின் அடிப்படைத் தகுதிகள் பற்றிய சர்ச்சைகள் இன்னமும் தீர்க்கப்படாமையால் இன்னும் அங்கத்துவம் பெறவில்லை. இரண்டாவது அம்சம் 'இயூறோ' என்பது இன்றைய காலக் கட்டத்திலே அருவமாய் நிற்கிறது. இதைப் பார்ப்பதற்கு 2002 ஜனவரி முதலாம் திகதி வரை பொறுமையாய் இருக்க வேண்டும். இயூறோ புழக்கத்தில் உள்ளதா என்றால் ஆம் 1999 ஜனவரி மாதம் தொடக்கம் அது பாவனையில் இருக்கின்றது. இயூறோ காசோலைகள் பாவனைக்கு வந்துவிட்டன. இயூறோ நம்பக அட்டைகளும் (Credit Card) நடைமுறைக்கு வந்துவிட்டன. இவற்றைப் பரிவர்த்தனை செய்யலாமே அன்றிக் காசு எடுக்க முடியாது. மேற்படி பரிவர்த்தனைகளை நடத்துவதற்கு கேந்திரமாக அமையும் ஐரோப்பிய மத்திய வங்கி (European Central Bank) 1998ம் ஆண்டிலே நிர்மாணிக்கப்பட்டது. உலக நாடுகளிடையே வியாபாரம் இப்போது மிகச் சுலபமாக நடக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் ஏற்படுகின்றன. பதினொரு வெவ்வேறு நாணயங்களுக்குப் பதிலாக ஒரு இயூறோவில் வியாபாரம் செய்வது எத்தனை இலகுவானது. விரைவிலே அமெரிக்க டாலருடன் இயூறோ போட்டி போடும் அளவிற்குச் செல்வாக்குப் பெறும் என ஆரூடம் சொல்லப்படுகின்றது. எனவே 2002ம் ஆண்டிலே மேற்படி நாடுகளின் பிரத்தியேக நாணயங்கள் சிறிது சிறிதாகப் பாவனையில் இருந்து நீக்கப்பட்டுவிட இயூறோ மாத்திரம் கோலோச்சத் தொடங்கும்.

இரண்டாவது உலக மகாயுத்தம் பல நாடுகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தியதில் ஆச்சரியமில்லை. 'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என்று சொல்லப்பட்டு வந்தாலும் இங்கே பல அடம்பன் கொடிகள் ஒன்று திரள முன்வரவில்லை. ஒரு சிறு நாடு பலம்வாய்ந்த ஏகாதிபத்தியத்தால் கபளீகரம் செய்யப்படுவதை தவிர்க்க வேண்டுமாயின் அவை ஒருங்கிணைந்து கூட்டமைப்பு ஒன்றினை உருவாக்க வேண்டும் என்ற சித்தாந்தம் ஐரோப்பிய, ஆபிரிக்க நாடுகளிடையே சுடர்விட்டது. 1957ம் ஆண்டிலே நடைபெற்ற ரோமாபுரி உடன்படிக்கைப்படி ஆறு அங்கத்துவ நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய பொருளாதார சமூகம் (European Economic Community E.C.U) என்னும் அமைப்பு முதலில் உருவாக்கப்பட்டது. இதுவே தான் தனது வியாபகத்தைப் பரப்பி இன்று 15 அங்கத்துவ நாடுகளுடன் ஒரு கூட்டமைப்பாக வியாபித்து ஐரோப்பிய பொது பாராளுமன்றத்தையும் கொண்டுள்ளது.

இந்த அமைப்பு வலுப்பெறுவதைக் கண்ட முன்னைய அமெரிக்க நீகன் அரசு பீதியடைந்து வட அமெரிக்க சுயாதீன வியாபாரம் (North American Free Trade) என்ற அமைப்பை மல்றோனியின் ஆசியுடன் ஆரம்பித்தார். அதைக் கிழித்தெறிவேன் என்று ஜீன் கிரட்சியன் வாய்கிழியக் கத்தியும் எந்தப் பலனும் ஏற்படவில்லை. பதிலாக அது மெக்சிக்கோவிற்கும்

Official Fixed Euro Rates for Participating Countries
These are the exact official rates used in conversion.

Old "Legacy" Currency	Conversion to Euro	Conversion from Euro
ATS Austria, Schilling	ATS / 13.7603 = EUR	EUR * 13.7603 = ATS
BEF Belgium, Franc	BEF / 40.3399 = EUR	EUR * 40.3399 = BEF
FIM Finland, Markka	FIM / 5.94573 = EUR	EUR * 5.94573 = FIM
DEM Germany, Deutsche Mark	DEM / 1.95583 = EUR	EUR * 1.95583 = DEM
FRF France, Franc	FRF / 6.55957 = EUR	EUR * 6.55957 = FRF
IEP Ireland, Punt	IEP / 0.787564 = EUR	EUR * 0.787564 = IEP
ITL Italy, Lira	ITL / 1936.27 = EUR	EUR * 1936.27 = ITL
LUF Luxembourg, Franc	LUF / 40.3399 = EUR	EUR * 40.3399 = LUF
NLG The Netherlands, Dutch Guilder	NLG / 2.20371 = EUR	EUR * 2.20371 - NLG
PTE Portugal Escudo	PTE / 200.482 = EUR	EUR * 200.482 = PTE
ESP Spain, Peseta	ESP / 166.386 = EUR	EUR * 166.386 = ESP

(94ம் பக்கம் பார்க்க)

உதைபந்தாட்டத்தில் எமது இளைஞர் எதிர்காலம்; முன்னேற்றத்திலும் பின்னடைவு தெரிகிறது!

விளையாட்டுத்துறை சமுதாய வாழ்வில் பெரும் சீர்திருத்தங்களை ஏற்படுத்த வல்லது. புலம்பெயர்ந்த நாடுகளில் விளையாட்டு (Sports) எமது இளைஞர்களின் புரிந்துணர்விற்கு ஒரு வடிகாலாக உள்ளது. இன்று பலவகைப்பட்ட விளையாட்டுத்துறைகளில் எமது தமிழ் வீரர்கள் தமது பிறந்தகத்தின் புகழையும் புகுந்தகத்தின் புகழையும் எடுத்தியம்பி வருகின்றனர்.

இன்று ரொறன்ரோவில் பல சங்கங்கள் வெவ்வேறு துறைகளில் இருந்தாலும், எமது இளம் சந்ததியினரை அதிகளவில் ஒன்று சேர்ப்பது உதைபந்தாட்டமாகும். எமது தமிழர் சமூகத்தில் உதைபந்தாட்டம் ஒரு புகழ் பெற்ற ஒரு விளையாட்டாகும். ஒவ்வொரு கிழமையும் இளைஞர்கள், பார்வையாளர்கள், ரசிகர்கள் எனப் பலவகைப்பட்டவர்களையும் ஆயிரக் கணக்கில் ரொறன்ரோவில் ஒன்று சேர்ப்பது உதைபந்தாட்டமே. இன்று ரொறன்ரோவில் எமது சமுதாயத்தில் முதியவர்களிலும் பார்க்க அதிகளவு காணப்படுவது இளைய தலைமுறைதான். இளைய தலைமுறை எமது சமுதாயத்தின் மூல கருக்கள் ஆவர். இவர்களை நன்னெறிப்படுத்துவது மற்றைய துறைகளிலும் பார்க்க விளையாட்டுத் துறைகள் மூலமே என்பது கண்கூடு.

ஒரு விளையாட்டு வீரன் தன்னுடைய விளையாட்டு அனுபவத்தின் மூலம் தனக்கென்று ஒழுக்கத்தையும் கட்டுக்கோப்பையும் தானாகவே வளர்த்துக் கொள்கின்றார். இவ்வகையான கட்டுக்கோப்பையும் ஒழுக்கத்தையும் வளர்த்துக் கொள்வதன் மூலம் தனது கல்வி அறிவையும், தேக ஆரோக்கியத்தையும் மிகவும் சுலபமாக மற்றவர்களிலும் பார்க்கச் சிறப்பாக வளர்த்துக் கொள்கிறார். இதனால் பல நோய் நொடிகளிலும் இருந்து கூட பல வயதினராலும் தப்பித்துக் கொள்ள முடிகின்றது. ஆகவே சமூகத்தில் ஒரு விளையாட்டு வீரர் தன்னை வளர்த்துக் கொள்வதன் மூலம் எமது சமூகத்திற்கும் பெருமை தேடித் தருகின்றார்.

எஸ். கணேஷ்

ரொறன்ரோவில் மற்றைய விளையாட்டுத்துறைகளுடன் ஒப்பிடும் போது உதைபந்தாட்டத்திற்கே அதிகளவு ரசிகர்களையும் அதிகளவு கழகங்களையும், வீரர்களையும் இங்கு காணலாம். ஆனால் எமது இளம் உதைபந்தாட்ட வீரர்களின் எதிர்காலத்தை நோக்கும் போது இதில் எந்த அளவு முன்னடைவோ அல்லது முன்னேற்பாடோ காணமுடியாதவாறு உள்ளது. இதற்குக் காரணம் யாது என்பதை இங்கு பார்ப்போம்.

பின்னடைவுக்கு காரணமாயிருக்கும் காரணங்களை ஆராயும் முன்பு எமது வீரர்களின் முன்னேற்றங்களை முதலில் பார்ப்போம்.

கடந்த பதினான்கு வருடங்களாக எம்மவர் மத்தியில் ரொறன்ரோவில் பல உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெற்று வருவது யாவரும் அறிந்ததே. முதன் முதலில் 1992ம் ஆண்டு பதினெட்டு கழகங்கள் ஒன்று சேர்ந்து இலங்கை உதைபந்தாட்டச் சங்கத்தை அமைத்தனர். இதன் யாப்பு விதிகளுக்கு அமைய ஆட்டங்கள் யாவும் திறமையாக நடைபெற்று 1996ம் ஆண்டு கனடிய தமிழர் உதைபந்தாட்ட சங்கம் என பெயர் மாற்றப்பட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. ரொறன்ரோவில் உதைபந்தாட்டம் என்றால் "சண்டை சச்சரவு" என்ற நிலைமாறி மிகவும் அமைதியாகவும் ஒழுக்கமாகவும் தற்போது போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இது இச்சங்கத்தின் முயற்சிகளுக்குக் கிடைத்த பெரும் வெற்றி என்றே கருத வேண்டும்.

இதில் முக்கியமாக ஒரு உதாரணத்தைக் குறிப்பிட வேண்டும். ஏனெனில் உதைபந்தாட்டம், எவ்வளவு தூரம் எமது சமூகத்தில் தாக்கங்களை ஏற்படுத்துகின்றது என்பதை! 1995ம்/1996ம் ஆண்டுகளில் உதைபந்தாட்டங்களில் எமது இளைஞர்களின் வன்செயல்கள் காரணமாக இவ்விரண்டு ஆண்டுகளும் போட்டிகள் திறம்பட நடைபெறவில்லை. இவ்விரு ஆண்டுப் பகுதிகளிலேயே எமது இளம் சமுதாயத்தின் மத்தியில் குற்றவியல் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்பட்டன. உதைபந்தாட்டப் போட்டிகள் ஒழுங்காக நடைபெறும் போது இக் குற்றவியல் சம்பவங்கள் குறைந்தே காணப்பட்டன. காரணம் யாதெனில் கிழமை நாட்களில் பாடசாலைக்கு பின்பு அல்லது வேலைத் தளத்தில் இருந்து வந்தவுடன் இளைஞர்கள் தத்தமது கழகங்களில் உதைபந்தாட்ட பயிற்சிகளில் (Practice) கலந்து கொள்கிறார்கள். வார இறுதி நாட்களில் சுற்றுப் போட்டிகளில் கலந்து கொள்கிறார்கள். ஆதலால் இவர்களின் பொழுது போக்கு நேரங்கள் விளையாட்டுக்குச் செலவிடப்படுகின்றன. இதனால் இவர்கள் பலவிதமான பிரச்சனைகளிலோ அல்லது வன்முறை சம்பவங்களிலோ அக்கறை காட்டுவதற்கு நேரம் கிடையாது. அதுமட்டுமல்லாமல் இவ்வகையான பிரச்சனைகளில் இருந்து நம்மை விடுவித்துக் கொள்வதற்கு இவர்களுக்குத் தேவையான பக்குவமும் விளையாட்டு மூலம் கிடைக்கின்றது.

சில வருடங்களுக்கு முன்பு செஞ்சிலுவைச் சங்கம் ரொறன்ரோவில் பல இளைஞர்களின் சார்பாக நடைபெற்ற சுற்றுப்போட்டிகளில் நல்லொழுக்க (Discipline) விருது தமிழர் அணிக்குக் கிடைக்கப் பெற்றது. 1997ம் ஆண்டு T&D பிரிவில் எமது United தமிழர் அணி Runners -up விருது பெற்றுக் கொண்டது. 1998ம் ஆண்டில் தமிழர் கழகமான ஸ்காபரோ றேஞ்சர்ஸ் கழகம் (Rangers) T&D Multi பிரிவில் Runners-up விருதைப் பெற்றுக் கொண்டது. 1999ம் ஆண்டு சகல கழகங்களிலும் இருந்து ஒன்று திரட்டிய வீரர்களைக் கொண்டு முதன் முதலில் Indoor Soccer (உள்ளக அரங்கு) ஆட்டங்களில் வேறு இன கழகங்களுடன் மோதி League இன் Champion விருதுகளையும் தட்டிச் சென்றுள்ளது. இதற்கு மேலும் சிகரம் வைத்தாற்போல் League இன் முதல் இரண்டு இடங்களையும் (அதிகூடிய கோல்களை போட்டவர்கள்) இரு தமிழ் வீரர்களே பெற்றுக் கொண்டனர். மில்லேனியம் வருடத்தில் எமது தமிழர் அணி Indoor இலும், Outdoor இலும் மேல் பிரிவுகளுக்குப் பதவி உயர்த்தப்பட்டுள்ளது. "அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு" என்பது போல் எமது இளைஞர்கள் ஒற்றுமையாக ஒன்று திரண்டால் யாருமே எம்மை அழிக்க முடியாது என்பதை நிரூபித்துள்ளார்கள்.

அடுத்து, பின்னடைவுக்கான காரணங்களைப் பார்ப்போம். இவ்வளவு சாதனைகளை நிகழ்த்தியும் எமது தமிழ்ச் சமூகத்தில் இருந்து ஒரு தமிழ் வீரன் தானும் கனடிய தேசிய அணிக்கோ அல்லது மாகாண அணிக்கோ பங்குபெறுவதற்கு தகுதி பெறவில்லை. இதற்குக் காரணம் எம் இளைஞர்களுக்கிடையிலான சுற்றுப் போட்டிகள் அதிகரித்துக் காணப்படுவதே. அத்துடன் இப் போட்டிகள் 7 பேர் கொண்ட 9 பேர் கொண்ட அடிப்படையில் நடத்தப்படுகின்றது. எமது வீரர்கள் கனடிய மண்ணில் இனம் காணப்பட வேண்டுமானால் இந்த 7 பேர் கொண்ட போட்டிகள் நிறுத்தப்பட்டு 11 பேர் கொண்ட போட்டிகளை அதிகரிக்கச் செய்தல் வேண்டும். அத்துடன் Mens சுற்றுப் போட்டிகள் நடைபெறுவதுடன் மட்டும் நில்லாமல் ஒவ்வொரு வயதுக்குட்பட்ட (Under 15, Under 17 & 19) ஆகிய பிரிவுகள் ஏற்படுத்தப்படல் வேண்டும். ஒவ்வொரு வருடமும் கனடிய Leagueஇல் பல வயதுக்குட்பட்ட பிரிவுகளும் விளையாட அனுப்பப்படல் வேண்டும். Youth League/Toronto District League ஆகியவற்றில் ஒன்றுக்கு மேற்பட்ட கழகங்கள் பங்குபெறல் வேண்டும். இதன் மூலமே எமது வீரர்கள் கனடிய சமுதாயத்தில் அடையாளம் காணப்பட முடியும்.

இங்கு எவ்வளவோ திறமையான தமிழ் வீரர்கள் இருந்தும் அவர்களுக்குப் போதிய தகவல்கள் தரப்படாமல் உள்ளது. உதாரணமாக Education Scholorship, Ontario இலும் அமெரிக்க மாநிலங்களிலும் உதைபந்தாட்ட வீரர்களுக்கு Colleges உம், Universities உம் பலவகைப்பட்ட மேற்படிப்பிற்கான புலமைப் பரிசுத் திட்டங்கள் வழங்கப்படுகின்றது. (100ம் பக்கம் பார்க்க)

மலரின் எழுத்தாளர்கள்
Our Contributors



கலாநிதி பால சிவகடாட்சம்
B.Sc.Hon.(Cey),
Ph.D(London): B.Ed(Toronto)



ரி. கே. தேவராஜா
மூத்த காப்புறுதி ஆலோசகர்



மாலினி அரவிந்தன்
கட்டுரையாளர்
நிதித்துறை ஆலோசகர்



கே. ஜவஹர்லால் நேரு
அரசியல் விமர்சகர்,
முன்னாள் அரச உத்தியோகத்தர்



எஸ். கணேஷ்
உதைபந்தாட்ட மத்தியஸ்தர்
சிறந்த விளையாட்டு வீரர்



வள்ளிநாயகி இராமலிங்கம்
எழுத்தாளர்,
முன்னாள் விரிவுரையாளர்

ஆயுள் காப்புறுதி - Life Insurance

காப்புறுதித் திட்டங்கள் உலக அரங்கில் அறிமுகமாகி இற்றைக்கு சுமார் 350 ஆண்டுகளுக்கு மேலான போதும் இன்றும் கூட ஆயுள் காப்புறுதி ஒரு சிக்கலான (Complicated) விடயமாகவே இருக்கின்றது என்பது பலரது அபிப்பிராயமாகும். ஆயுள் காப்புறுதியானது தவிர்க்கப்பட வேண்டிய தவறுகளில் ஒன்றாகச் சிலரால் கருதப்பட்ட போதிலும், அனேகரின் அபிப்பிராயப்படி அது தவிர்க்க முடியாத அத்தியாவசியமான பாதுகாப்புத் திட்டமாக விளங்குகின்றது.

காப்புறுதி என்பது உயிரிழப்புகளாலும், எதிர்பாராத அழிவுகளாலும், மக்களுக்கும், தனியார் மற்றும் அரசாங்க நிறுவனங்களுக்கும் ஏற்படும் இழப்புகளுக்கு நஷ்டஈடாக முன்கூட்டியே ஏற்படுத்தப்படும் ஒரு உத்தரவாதமான பாதுகாப்புத் திட்டமாகும். விலைமதிக்க முடியாத மனித இனம் என்றோ ஒரு நாள் இறப்பது நிச்சயம். அநேகர் தாங்கள் இறக்க நேரிடும் பட்சத்தில் தங்களது முக்கிய உறுப்புகளான கண், இருதயம், சிறுநீரகம் போன்றவற்றை மற்றவர்களுக்குத் தானமாகக் கொடுப்பதற்கு பெருந்தன்மையோடு முன்வந்திருப்பதை வாகன அத்தாட்சிப் பத்திரக் குறிப்பில் இருந்து தெரிந்து கொள்ள முடிகின்றது.

"நான் உயிருடன் இருக்கும் போது என் குடும்பத்தின் சகல பொருளாதாரத் தேவைகளையும் நான் பூர்த்தி செய்கின்றேன். ஒருவேளை எதிர்பாராத விதமாக எனக்கு மரணம் ஏற்படின் என் குடும்பத்தை துன்பத்தில் ஆழ்ந்து போக விடமாட்டேன்" என்று கூறும் இன்னொருவர் தனக்கு ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்கின்றார். இது தவிர்க்கப்பட வேண்டிய தவறா? உதாரணமாக ஒரு குடும்பத் தலைவன் தனது வருமானத்தைக் கொண்டு தன் குடும்பத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டு இன்புற வாழ்கின்ற வேளையில், அவருக்கு எதிர்பாராத வகையில் மரணம் சம்பவிக்குமானால் அவருக்கு இழந்த வருமானத்தை (Replace of Income) ஈடுசெய்ய எவராவது முன்வருவார்களா? அல்லது அக் குடும்பத்தின் முழுத் தேவைகளையும் எவராவது முன்னின்று கவனிப்பது இலகுவான காரியமா? அக் குடும்பத் தலைவியும், அவரது பிள்ளைகளும் மற்றவர்களுக்குக் கஷ்டத்தைக் கொடுக்காமல் பிள்ளைகளின் தொடரும் கல்விச் செலவு, வீட்டு அடமானம், அந்திமகாலச் செலவு (Education cost, Mortgage, Payments, Last expenses) போன்ற சகல தேவைகளையும் நிறைவு செய்யக்கூடியது கணவனின் காப்புறுதித் தொகையேயாகும். காப்புறுதித் தொகைக்கு Death Benefits, வருமான வரி (No Tax) கிடையாது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ஆயுள் காப்புறுதியின் தேவையும், முக்கியத்துவமும் அவரவர் பொருளாதார நிலைமைக்கும், வசதிக்கும் ஏற்ப மாறுபடும்.

ஏறத்தாழ 100க்கு மேற்பட்ட காப்புறுதி நிறுவனங்கள் வட அமெரிக்காவில் பல தரப்பட்ட காப்புறுதித் திட்டங்களைச் சந்தைப்படுத்துகின்றன. கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக இங்கு வாழும் எம் தமிழ் மக்களுக்கு காப்புறுதித் திட்டங்கள் நன்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன என்றே கூற வேண்டும். இதே வேளை, குறிப்பாக ஆயுள் காப்புறுதியை எம் மக்களின் தேவைகளைப் பொறுத்து சிறந்த முறையில் விற்பனை செய்து அவர்களின் நன்மதிப்பைப் பெறுவது எம் போன்ற காப்புறுதி ஆலோசகர்களின் தலையாய பணியாகும். "கற்கக் கசடற கற்றவை கற்ற பின் நிற்க அதற்குத் தக" என்ற வள்ளுவரின் திருவாக்கும், "கற்றது கை மண்ணளவு கல்லாதது உலகளவு" என்ற அவ்வையாரின் அருள்மொழியும் நாம் செய்கின்ற தொழிலுக்கு மேற்கோள்களாக அமையும் என்பதால் இதைப் பற்றி சற்று விளக்கமாக கூற விரும்புகின்றேன்.

த. க. தேவராஜா

ஐரோப்பிய நாடுகளிலும் வட அமெரிக்காவிலும் குறிப்பாக கனடாவில் ஒரு தொழிலைச் செய்வதற்கு முன்பு அத் தொழிலுக்குரிய பயிற்சி நெறி, தொழிற்கல்வி போன்றவற்றை நன்றாகக் கற்றபின் அதில் தேர்ச்சியடைய வேண்டும். பொதுவாக எந்த ஒரு தொழிலை செய்யும் முன்பும் அத்தொழிலை நன்றாகக் கற்று அத் தொழிலைச் செய்வதற்கு வேண்டிய வழிமுறைகளை ஆக்கபூர்வமாகக் கையாள வேண்டும். ஒரு மருத்துவர் கூட காப்புறுதி ஆலோசகராக தொழில் புரிய வேண்டுமாயின் அதற்குரிய பயிற்சி நெறி, பரீட்சை (Examinations) ஆகியவற்றில் சித்தியடைந்ததோடு நின்று விடாமல் அத் தொழிலை ஏனோ தானோ என்று செய்யாமல் முழுச் சிரத்தையுடன் பணிபுரிய வேண்டும். எனவே ஒருவர் முன்பு என்ன தொழில் செய்தவர், அவர் என்ன படித்தவர் என்பது முக்கியமல்ல. அவர் செய்கின்ற தொழிலை எப்படிச் செய்கின்றார் என்பது தான் முக்கியம். முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியாகவிருந்த (Abraham Lingan) ஆபிரகாம் லிங்கனின் ஒரு கூற்றை கூற விரும்புகின்றேன். இவர் தந்தையார் ஒரு விறகுவெட்டி தொழில் புரிந்தவர் என்பதும் ஆபிரகாம் லிங்கனின் குடும்பம் ஒரு சாதாரண குடும்பம் என்பதும் எல்லோருக்கும் தெரிந்ததே. இவரிடம் ஒருவர் உனக்கு ஒரு மரத்தை வெட்டுவதற்கு 8 மணித்தியாலமும் ஒரு கோடரியும் தரப்படுமாயின் அந்த மரத்தை வெட்டி துண்டாட முடியுமா என்று கேட்டார். அதற்கு லிங்கனுடைய பதில் இந்த 8 மணித்தியாலத்தில் 6 மணித்தியாலத்தை என் கோடரியை கூராக்குவதிலேயே என் நேரத்தைச் செலவழிப்பேன்" என்றார். இதில் ஒன்றைக் கவனிக்க வேண்டும். தன் தொழிலுக்கு ஆதாரமாக இருந்த கோடரிக்கு அவர் கொடுத்த முக்கியத்துவம் என்னைப் பெரிதும் கவர்ந்துள்ளது. "செய்யும் தொழிலே தெய்வம்" என்பார்கள். அவரவர் செய்கின்ற தொழில் மூலம் தான் அவர்களுக்கு வருமானம் கிடைக்கின்றது.

ஒரு காப்புறுதி ஆலோசகரது கடமை. காப்புறுதியை விற்பதோடு நின்றுவிடுவதில்லை. அவருடைய சேவை அப்பொழுது தான் ஆரம்பமாகின்றது. ஆயுள் காப்புறுதி செய்து கொண்ட ஒருவர் இறக்கும் போது அக் காப்புறுதித் தொகை (Death Benefits) அக்குடும்பத்திற்கு எந்தவித பிரச்சனைகளும் இல்லாமல் கொடுக்கப்படும் போது தான் எங்கள் சேவை நிறைவு பெறுகின்றது என்பது என் கருத்து. இத் தொழிலால் கிடைக்கும் ஆத்ம திருப்தியும் அதுதான். சில சந்தர்ப்பங்களில் ஆயுள் காப்புறுதி செய்து கொண்ட ஒருவர் இறக்கும் போது அவருக்குரிய காப்புறுதிப் பணத்தை சம்பந்தப்பட்ட காப்புறுதி நிறுவனம் கொடுக்க மறுப்பதும், இதனால் அக் குடும்பம் பெரும் கஷ்டத்திற்கு உள்ளாவதையும் நாம் அனுபவ ரீதியாகக் காண்கின்றோம். இப்படியான சந்தர்ப்பங்களில் நாம் அக் காப்புறுதி நிறுவனத்தைப் பற்றியும், தொடர்புடைய காப்புறுதி ஆலோசகர் பற்றியும் பலவிதமாக விமர்சிப்பதுண்டு.

காப்புறுதி ஆலோசகருக்கும், ஆயுள் காப்புறுதியைப் பெற்றுக் கொள்பவருக்குமிடையில் பரஸ்பர நம்பிக்கை இருக்க வேண்டும். காப்புறுதி ஆலோசகர்கள் காப்புறுதி நிறுவனத்தின் விற்பனை பிரதிநிதியாகவும் அதேவேளை காப்புறுதியைப் பெற்றுக் கொள்ளும் மக்களின் சார்பாகவும் கடமையாற்ற வேண்டிய நிலையில் இருப்பதால் இவர்கள் மிகவும் பொறுமையாகவும், திறமையாகவும், பொறுப்பாகவும் கடமையாற்ற வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். காப்புறுதிக் கொடுப்பனவுகளில் ஏதாவது பிரச்சனைகள் வரும் போதெல்லாம் மக்களும் காப்புறுதி நிறுவனங்களும் காப்புறுதி ஆலோசகர் மீதே பழி போட்டு விடுகிறார்கள். மிகவும் தர்மசங்கடமான இத் தொழிலைச் செய்வதற்கு அனேகர் முன்வராதிருப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும். காப்புறுதி ஆலோசகர்கள் நம்பத் தகுந்தவர்களாகவும், நாணயம் உடையவர்களாகவும், உத்தரவாதத்துடன் செயற்படுபவர்களாகவும் இருக்க வேண்டுமென மக்கள் எதிர்பார்ப்பது இயல்பான தன்மையாகும்.

(100ம் பக்கம் பார்க்க)

முதியோருக்கான சேவைகள் - சகோதரித்துவம்

Service to Seniors - Sistering

'தமிழர் தகவல்' 1999 பெப்ரவரி மாத (எட்டாவது ஆண்டு மலரின்) கட்டுரையில் சகோதரித்துவம் பற்றிச் சுட்டிக்காட்டித் தொட்டுச் சென்றிருக்கின்றோம். "ஆதரவற்ற பெண்களுக்கு நாம் சகோதரிகளாகக் கை கொடுப்போம்" எனும் அர்த்தத்தில் முகிழ்த்தது தான் இந்த 'சகோதரித்துவம்' எனும் அமைப்பு. செயல்கள் மூலமாகவும், உணர்வு ரீதியாகவும் பெண்களுக்கு ஆதரவு கொடுக்கும் வண்ணம் சில செயற்பாடுகளைத் தயாரித்து, அவர்களுடைய வாழ்க்கையைக் கட்டுக்கோப்புடன் ஆர்வமுடையதாக்க முயல்வதும்; ஆபத்து விளைவிக்கக் கூடிய அல்லது விளையக் கூடிய சூழலில் வசிப்பவராயின் அதை வேறுவகையில் அமைத்துக் கொடுப்பதும் இவர்களது கோட்பாடு ஆகும். "பெண்களால் பெண்களுக்கு ஆற்றப்படும் சேவைகள், பெண்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாக்கப்படுகின்றனவா எனக் கவனித்து செயற்படுதலிலேயே தங்கியுள்ளது" என்பது அவர்களது நோக்கம் ஆகும்.

அன்று அந்த நிலையத்திற்கு நாம் சென்ற போது எம்மைப் போல பலர் அங்கே கூடியிருந்தனர். இவர்கள் பல இனங்களையும் சேர்ந்தவர்கள். நெற்றியிலும், முகத்திலும் ஏன் கண்ணிமைகளிலும் சுருக்கக் கோடுகள் வயதின் வரிகளைக் கீறியிருந்தன. கண்ணிமைகள் கூட நரைத்திருந்தன. கை, கால்களில் தோல் எலும்பை விட்டுக் கீழே தொங்கிக் கொண்டிருந்தன. இந்த வயது அச்சு வெள்ளைத் தோல்களிலே 'பளிச்' என விழுந்திருந்தது. ஆனால் தென்னாசியர் கறுப்பினத்தவரிடம் இந்த மாற்றம் கூர்மையாகத் தென்படவில்லை.

சிறிய மண்டபத்தை ஒரே பார்வையில் அளவெடுத்தேன். என்ன அழகு! என்ன கம்பீரம்! வெள்ளிப் பஞ்சுப் பொதி போன்ற நெளிந்து சுருண்ட கிறில் வெட்டுத் தலைகள், வெள்ளை நிறத்துக்கு ஏற்று ஜொலிக்க மதிப்புக் கொடுத்து வணங்க வேண்டும் போல். லிப்ஸ்ரிக் பூசிய அதரங்கள் சிறிதாக வளைந்து நாகரீகமாக அளவளாவிக் கொண்டிருந்தன. நடுங்குங் கரங்களால் ஸ்வெட்டர் பின்னிக் கொண்டும் பிஸ்கட் கொறித்துக் கொண்டும் சிறுசிறு கைவேலைகள் செய்து கொண்டும் இருந்தனர்.

உடன் எழுந்த உணர்வு, ஓ! எனக்கு வயது போகவில்லை எனும் ஆறுதல். நிறபேதமில்லாத வரவேற்பு. இளமையில் கேட்ட அதே வார்த்தைகள் இந்த முதிய பெண்கள் வாயிலிருந்து. "நீ அழகாக இருக்கிறாய்" இந்தக் கருநீல விழிகள் உனக்கு எப்படி வந்தன? (விழிகளின் புற அமைப்புகளையும் பார்வையின் வீச்சுக்களையும் வைத்து மான்விழி கயல்விழி என இலக்கியம் கண்ட நமக்கு கருவிழியின் நிறத்தை வைத்து பச்சைக் கண் பிறவுண் கண் என்னும் மேல்நாட்டார் நயப்பு விசித்திரமாயிருந்தது) அன்பான ஆதரவான கேள்விகள் பிறக்கின்றன. இது அவர்களின் கொள்கைகளுள் ஒன்றான 'பாதுகாப்பும் பரஸ்பர மதிப்புக் கொடுத்தலும்' என உணர்ந்து கொண்டோம்.

தெருவோர வாசிகளால் நிறைந்திருக்கின்றது ரொறன்ரோ நகரம். இவர்களுள் குறிப்பிடத்தக்க அளவில் பெண்களும் இருக்கிறார்கள். இந்த வாழ்க்கை முறையில் இருப்பவர்களுக்கு வீடு வாசல் இல்லை. நிரந்தர முகவரி இல்லை. எனவே சமூக நலப்படி பெறவோ அல்லது வாக்களிக்கும் உரிமை பெறவோ அருகதையற்றவர்களாகி அலைந்து திரிகிறார்கள். குளிக்க முழுக காலைக் கடன் கழிக்க எனப் பல இடைஞ்சல்கள். இத்தகைய பெண்களின் நிலைபற்றிச் சிந்திக்க செயலாற்ற எழுந்தது ஒரு கற்றோர் குழாத்துப் பெண்கள் குழு. சரியான நிதியுதவி பெறும் வரை 12 வருடங்களுக்கு இக்குழு ஓரளவு சமாளித்துக் கொண்டு வந்தது. றில்லியம்

வள்ளிநாயகி இராமலிங்கம்
(குறமகள்)

நிதியுதவியுடன் 1993ம் ஆண்டில் 523 கல்லூரி வீதியில் சகோதரித்துவ அலுவலகம் நிரந்தரமாகத் திறக்கப்பட்டது.

இவர்களுக்குத் தேவையான தொண்டர் சேவையினரையும் அலுவலகப் பணியாளர்களையும், தொழிலில் சம வாய்ப்பு எனும் கொள்கைப்படி பல நிறத்தவர், பல குழுமத்தவர், வலது குறைந்தோர், பூர்வீகக் குடியினர் ஆகிய பெண்களிடையிலேயே தெரிவு செய்தனர். தனிமைப்படுத்தப்பட்ட ஆதரவற்ற பெண்களுக்கு அவர்களுக்கு ஏற்ற சூழலில் அவர்களை வாழ வைத்து மற்றும் மக்களிடமும் பழகும் வாய்ப்பையும் தருகிறார்கள். தமது நிலையத்துக்கு, யாருடனும் பேசிப் பழக, சிறுசிறு தேவைகளை நிவர்த்தி செய்ய, உபயோகமுள்ளதான பொருள்களைச் செய்ய ஊக்கமும் அளிக்கிறார்கள். பல்வேறுபட்ட குழுமப் பெண்களுக்கு இனவேறுபாடற்று இச் சேவைகள் நடக்கின்றன. இவர்களது கடும் முயற்சி மேலும் மேலும் பெண்களை இழுக்கவே இவர்களது செயற்பாடுகளும் விரிந்து செல்கின்றன.

சகோதரித்துவம், தமது வெளிக்கள வேலைகளுக்காகவும் உணவு வழங்கல், சுகநலச் சேவைகள் காரணமாகவும் பாக்டேலில் உள்ள (Masaryk Cowan) சனசமூக நிலையத்தின் கட்டடங்களை உபயோகப்படுத்துகின்றது. இந்த Drop in Centre இல் தற்போது ஏராளமான பெண்கள் வந்து நன்மையடைந்து போகிறார்கள். 1981ம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தக் கைங்கரியம் தெருவோரப் பெண்களுக்கு நல்வழிகாட்டி அவர்களை அழைத்து குளிக்க முழுகப் பண்ணி உடைகள் கொடுத்து உணவு கொடுத்துச் செல்ல விடுவார்கள். இரவில் தங்க வைக்கக் கூடிய விடுதி வசதியில்லாத போதும் சில சில உதவிகளைச் செய்வார்கள். இவர்களுள் அனேகர் உளநலம் இல்லாத பனாதைகள். சமூகத்தினால் பிழையாக உபயோகப்படுத்தப்பட்டவர்கள். 1985 இல் ஆரம்பிக்கப்பட்ட வெளிக்கள நிலையம் மெசாறிக் கோவன் இல் அமைந்தது.

1970ம் ஆண்டில் அரசு வைத்தியசாலைகளில் உளநலம் கெட்டவர்களில் பலரை தமது கவனிப்பிலிருந்து வெளியேற்றி சமூகத்துடன் இணைந்து வாழும்படி அனுப்பியது. அப்படி வெளியேற்றப்பட்டவர்களைக் கவனிக்கும் சமூக நிறுவனங்களுக்கு உதவியும் வழங்கியது. இப்படி அனுப்பப்பட்ட ஏராளமான உள நலங்குன்றியோருக்குப் போதுமான தங்குமிட வசதிகள் இல்லை. இத்தகைய பெண்களின் அவல நிலையும் தெருவோர வாழ்வும் மேலும் அவர்கள் காமுகர்களால் படும் அவஸ்தையுமே சிஸ்டரிங் எனப்படும் சகோதரித்துவம் தோன்றுவதற்குக் காரணமாயிற்று.

முதலில் இவர்களது அடிப்படைத் தேவைகளான வெந்நீர்க் குளிப்பு, உடை கழுவும் யந்திரங்கள், உணவு, உடை, தொலைபேசி வசதி, வேறும் தகவல்களும் ஆதரவுகளும் கொடுக்கப்பட்டு வந்தன. இது சமூகத்திலிருந்து தனிமைப்படுத்தப்பட்ட வறுமைக் கோட்டுக்கும் கீழே உள்ளவர்களுக்கென ஆரம்பித்துப் பின்னர் ஒரு பெரிய சமூகத்துக்கு விரிவடைந்து செல்கின்றது. இதன் முடிவு எங்கே எனும் கேள்விக்கு இத்தகைய சேவைகள் மூலம் சுய முயற்சிகளுக்கான கைவேலைகள் போன்ற பயிற்சிகளினால் தன்னம்பிக்கை பெறுதலும் சுயமாகத் தம் காலில் நிற்க ஆதரவும் பாதுகாப்பும் அளித்து 'என்னாலும் முடியும்' என்பதை ஏற்றலும் ஆம்.

சேவைகளையாற்றும் பிரதேசம் முன்பு பாக்டேல் பிரதேசத்தை அடக்கியதாக இருந்து பின்னர் புளோர் வீதிவரை நீட்டப்பட்டு இப்போது எங்கிருந்தும் தமது ஆதரவைத் தேடலாம் என

புதியோருக்கான...

விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இதனால் முதியோர் நலம் பேணப்படுகின்றது. முதிய பெண்களுக்கான பல திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. Seniors Independance program என முதியோர்களே தமக்குத் தேவையானவை எவை என்பதைச் சுதந்திரமாகத் தெரிவித்து ஆலோசித்து முடிவு எடுக்கப்படும்.

ஏராளமான முதியோர்கள் வருவதனால் அவர்களுக்கு முழுமையான சேவை ஏழு நாட்களும் வழங்க முடியாதாகையால் ஒவ்வொருவருக்கும் இரு நாட்கள் கொடுக்கப்பட்டுள்ளன. காலையில் வரும் போது பிஸ்கட்ஸ், சீஸ், நிலக்கடலைப் பட்டர், பாண், ஜாம், கோப்பி, தேநீர் என்பன வைக்கப்பட்டிருக்கும். பின்னர் பத்திரங்கள் நிரப்புதல், TTC பயணச்சீட்டுகள் கொடுத்தல். மாதத்துக்கு மூன்று உடைகள் வழங்குதல். கைவேலைகள் செய்தல். கிறிஸ்மஸ் விருந்து, பரிசு என்பன.

தொண்டர் சேவையினர் வர்த்தக நிலையங்களிலிருந்து பெற்று வந்த பொருள்களைக் கொண்டு அல்லது நிதியுதவிகளைக் கொண்டு கைவேலைகள் காட்டிக் கொடுப்பர். மதிய உணவு தயாராகும் போது தொண்டர் சேவையினருடன் விருப்பமான இரு முதியவர்கள் உதவி செய்ய; மண்டபத்தில் பல்வேறு கைவேலைகள் நடைபெறும். வழங்கப்பட்ட மூலப் பொருட்களைக் கொண்டு அலங்காரங்கள் பதித்து சுவர், மேசைக் கடிகாரங்களைச் செய்தல், தலையணை மேசைச் சீலை முதலியவற்றை பூக்கள் தைத்தோ அச்சுகள் பதித்தோ, பற்றிக் அச்சுகள் செய்தோ, நூலிழுத்துப் பல்வேறு கோலங்கள் செய்தோ தைப்பர். சாடிகளுக்கு வர்ணம் பூசி அலங்காரம் செய்வர். கம்பளி நூலில் காலுறை, தொப்பி, ஸ்வெட்டர் போன்றன பின்னுவர். அவ்வத்துறை வல்லுநர்கள் தொண்டர்களாக உதவி செய்ய வருவர். இவ்வாறு முடிந்த பொருட்கள் சந்தைகளில் பரப்பப்பட்டு விற்பனைக்கு விட்டு வருகின்ற பணம் அதனைச் செய்தவர்களுக்கே வழங்கப்படும். விற்க விருப்பமில்லாவிட்டால் தாமே எடுத்துச் செல்லலாம். பாதுகாத்து வைக்கக்கூடிய ஊறுகாய், சட்னி, அச்சாறு, தக்காளி Sauce போன்றன செய்தலும் நடைபெறும். அப் போத்தல்களைச் சீல் செய்யும் முறை என்பனவும் நடைபெறும்.

மதிய உணவு முடிந்ததும் சிறிதுநேர ஓய்வின் பின் பிங்கோ போன்ற விளையாட்டுகள், தனி வரிகளுக்கு இரண்டு டாலருக்குட்பட்ட பொருட்கள் பரிசுகளாகக் காத்திருக்கும். அதற்குக் கூட அவர்களது மகிழ்ச்சியும் புகழ்ச்சியும் அளவிறந்தன. குறையே கண்டுபிடிக்காத ஒரு சமுதாயமோ! நாம் தமிழர் தாம் ஏதாவது குறைகள் கண்டு தமிழில் சொல்லிக் கொள்வோம். போத்துக்கேய, போலிஷ், ஸ்பானிஷ் முதிய மகளிர் நிறைய நாட்டுப் பாடல் பாடுவார்கள். நிறைய நகைச்சுவை சொல்லி எமக்கும் விளக்கி ஒரே சிரிப்பும் கும்மாளமும் தான்.

சில நாட்களில் துறைபோகிய பெண்களை அழைத்து வந்து முதியோருக்குத் தேவையான சுகநலம் பற்றிய நோய்கள், மருந்துகள், உரிமைகள், சலுகைகள், அவற்றைப் பெறும் வழி வகைகள் எல்லாம் விளக்கப்படும். பல்வைத்தியர், மூலிகை வைத்தியர், தடுப்பூசி போடும் தாதிகள் என வந்து போவர். பிரதான விழாக்கள் கொண்டாடப்படும். அத்தோடு அந்தந்தச் சமூகத்தினர் தமது விழாக்களை அதன் வரலாறு, நோக்கம், கொண்டாடும் முறை என்பவற்றைக் கூறியும் படங்களையும் பொருட்களையும் காட்சிக்கு வைத்தும் தமக்கேயுரிய விசேட மதிய உணவு, சிற்றுண்டி வகை, பானம் முதலியவற்றை மற்றவர்களுக்கு வழங்கியும், ஆடலும் பாடலும் நிகழ்த்துவர். எம்மவர் 4, 5 பேர் தான் வருவார்கள். தைப் பொங்கல் கொண்டாடுவர். பாடத் தெரியாது என்று விடுவர். மொழி புரியாது தானே பாலர் பாடல்கள் அல்லது தேவாரத்தையாகினும் பண்ணோடு பாடுங்கள் என்று சொல்ல "கை வீசம்மா கைவீசு" பாட அவர்கள் தாளம் போட்டு ரசிப்பர். வீட்டோடு அடைந்து கிடந்து சகோதரித்துவ சேவைகள் பெற முடியாத - நடக்க இயலாத பெண்களுக்காக ஒரு வாகனம் வைத்திருக்கிறார்கள். வான் ஓடத் தெரிந்த தொண்டர் சேவையாளர் அந்த வானில் சென்று ஏற்றி இறக்குவர். வலது குறைந்தோருக்கான ஏற்றி இறக்கும் யந்திரம் பூட்டப்பட்ட வான் அது. முதியோரை ரொறன்ரோவின் பிரதான இடங்களுக்கும் 'ரைட்டானிக்' போன்ற படங்களுக்கும் அழைத்துச் செல்வதும், கோடைகாலத்தில் 'நயாகரா' போன்ற இடங்களுக்குக் கூட்டிச் செல்வதும் வழக்கம்.

"நானும் சிலவேளை தகுதியானவளாகலாம்"

கூடாத பெண்கள் கூட உணர்ச்சிகள் உள்ளவர்கள் தான். ஆனால்அடிக்கடி நிகழும் பல வீழ்ச்சிகளிலிருந்து மீள வழியில்லாத காரணத்தால் அதற்கே அடிமையாகி எல்லாம் இழந்து தெருவழியே சுற்றித் திரிந்தாலும் இடைக்கிடை மீட்சியில்லையா எனும் கேள்வி எழும். "இங்கே இருக்க முடியாது போ போ" "திரும்பிப் பார்க்காதே வெளியே போ" என்பது தான் நான் அன்றாடம் கேட்கும் வார்த்தைகள். இவை நான் உயிர் வாழத் தகுதியற்றவள் எனும் மனப்பாங்கை வளர்த்து விட்டது. இச்சகோதரிகளின் கண்ணில் பட்டேன். எனக்கு மதிப்பும் மரியாதையும் கிடைத்தது. நாங்களும் முக்கியமானவர்கள் தாம் என உணர வைக்கப்பட்டது. எதிர்காலம் பற்றிய நம்பிக்கையைத் தந்து எனது ஆத்மாவை இழந்து விட்டேன் எனத் தவித்த போது நீயும் தகுதி வாய்ந்த ஒருத்தி தான் என உறுத்தி உணர வைக்கப்பட்டேன். இவர்கள் எல்லோரும் இப்படி என்னை மதிக்கிறார்களே எனவே நானும் ஏதோ வகையில் தகுதியுடையவள் தான் எனும் மனப்பாங்கை வளர்த்து விட்டது இந்தச் சகோதரித்துவம். - றீசா லியோ.

சகோதரித்துவம் செய்யும் இதர பணிகள் இவற்றில் அடங்கும்.

சகோதரித்துவ இயக்குநர் சபை இடைவிடா முயற்சிகள் எடுத்து இந்த நிலையத்தை விஸ்தரித்துக் கொண்டே வருகிறது. பல இடங்களிலிருந்தும் நிதியுதவி பெறுகின்றது. யுனைட்டட் வேயில் மெம்பர் Agency ஆகவும் இருக்கிறது. காலத்துக்குக் காலம் ட்ரில்லியம் பவுண்டேசன் யூனைட்டெட் வே, மெற்றோ ரொறன்ரோ சமூக சேவைகள், ஒன்ராறியோ சுகாதார அமைச்சு போன்ற பல ஸ்தாபனங்கள் நிதியுதவி புரிவதோடு சில தேவாலயக் குழுக்களும் வர்த்தக நிலையங்களும் வாரி வழங்குகின்றன. பல அயலவர் சேவை நிலையம், சனசமூக நிலையங்கள், சென்ற் ஜோசப் சுகாதார நிலையம் என்பன சகோதரித்துவத்துடன் இணைந்தும் பங்காளர்களாகப் பங்கேற்றும் வருகின்றன. ஏறக்குறைய பத்து நிலையங்களுடன் பங்களிப்பு நடைபெறுகிறது. வல்லமையுள்ள - தமது விவேகத்தை முழு அளவில் உபயோகிக்கின்ற ஒரு இயக்குநர் சபை; நேரகாலம் தவறாது கடின உழைப்பை நல்கும் அலுவலர்கள்; அதனிலும் மேலாக பிரதிபலன் எதையும் எதிர்பாராது ஒவ்வொருவரையும் தனித் தனியாகக் கவனித்து முதிய பெண்களை திருப்தி செய்து மகிழ்விக்கும் யுவதிகளும் பெரிய பெண்களுமான தொண்டர் சேவையாளர்; இம் முவரது கூட்டுறவாலும் ஒத்துழைப்பாலும் இன்று சகோதரித்துவம் தமது குறிக்கோள்களை நிறைவேற்றி வைத்து தமது ஸ்தாபனத்தை மேலும் விசாலித்துக் கொண்டு செல்கின்றது.

பங்காளர் பலரதும் உதவியோடு நலிவுற்ற பெண்களுக்குப் பாதுகாப்பாய் ஆதரவு கொடுக்கும் சகோதரித்துவமாக அமைந்திருக்கும் ஸ்தாபனம் ரொறன்ரோவில் இது ஒன்றே எனும் புகழையும் தட்டிச் செல்கின்றது.

இயூறோ...

சென்றுவிட்டது. வட அமெரிக்காவில் உள்ள பிரச்சனை என்னவென்றால் எத்தனை நாடுகள் ஒன்று சேர்ந்தாலும் நாட்டாண்மை U.S.A கையில் தான் இருக்கும்.

'இயூறோ'வின் முதலாவது பிறந்த தினம் கொண்டாடப்பட்டுள்ளது. ஆனால் எதிர்பார்ப்புக்கு மாறாக அது அமெரிக்க (U.S) டாலரிலும் பார்க்க .13 சதம் கீழே போய்விட்டது. $1.16675 ஆகவிருந்த ஆரம்பப் பெறுமானம் இப்படிக் கீழே விழுந்ததற்கு இயூறோப்பியன் மத்திய வங்கித் தலைவர் Wim Dvisenberg Kosovo போர் ஒரு காரணமாகக் கருதுகிறார்.

'இயூறோ' உபயோகத்தில் வந்ததால் உல்லாசமாக இருப்பவர்கள் ஐரோப்பிய ஏற்றுமதியாளர்களே. ஏற்கனவே கூறியவாறு 13 வெவ்வேறு வகையான நாணய மாற்றுக்குப் பதிலாக இப்பொழுது இயூறோ மாத்திரம் என்பது அவர்களுக்கு பெரும் அளவில் பண விரயத்தைத் தவிர்த்து விட்டது. 'இயூறோ' வீழ்ச்சியுற்றதால் அவர்களுக்கு மேலும் அதிக லாபம். இயூறோவின் வீழ்ச்சி அவர்களுடைய பொருட்களின் விலையை மலிவாக்கியது. இலாபத்தை மீண்டும் இயூறோவில் மாற்றிய பொழுது அபரிமிதமான இலாபம் காட்டியதாம். சுவாமி விட்டாலும் பூசாரி கொடாது என்பது போல இங்கிலாந்தின் நிலை. பிரதம மந்திரி ரொனி பிளேயர் 'இயூறோ'வை அங்கீகரிக்க விரும்புகிறார். மக்கள் வேண்டாம் என்கிறார்கள். காலம் கனியட்டும் எனக் காத்திருக்க வேண்டியது தான். உங்கள் பயணத்தை அதுவரைக்கும் பிரான்ஸ் ஊடாக Reroote பண்ணுங்களேன்.

கனடாவில் ஏழாவது உலக சைவ மாநாடு

த. ஸ்ரீபதி

வண்ணத்தமிழ் வளர்ந்துவரும்
வெள்ளிப்பனிநாடு - இங்கு
பண்ணோடு வருகுதையா ஒரு மாநாடு
எண்திசையும் நிறைந்திடுமே
தெய்வமணத்தோடு - அது
கனடாவில் 7ம் உலகச் சைவ மாநாடு.

என்று கலைமாமணி சீர்காழி சிவசிதம்பரம் அவர்களின் கணீரென்ற குரலில் இசை வடிவத்தோடு கட்டியம் கூறி 1999ன் ஆடித் திங்களில் கால்கோளிடப்பட்டு 99ன் ஜூலை 30, 31, ஆகஸ்ட் 1ம் திகதிகளில் இம் மாநாடு சிறப்பாக கனடாவின் ரொறன்ரோ மாநகரில் நடந்து முடிந்தது. இம் மாநாட்டினை ரொறன்ரோ மாநகரின் நகரபிதா அவர்கள் சம்பிரதாய பூர்வமாக, ஆரம்பித்து வைத்ததுடன், கனடிய, ஒன்ராறியோ மாகாண கொடிகளுடன் இம் மாநாட்டின் கொடியினையும் சரிசமமாக ஸ்காபரோ (முன்னாள்) மாநகர முன்றலில் ஏற்றி வைத்து சைவத்தினையும், தமிழினையும் பெருமைப்படுத்தி வைத்தார். மூன்று தினங்கள் நந்திச் சின்னம் பொறிக்கப்பட்ட அக்கொடி உயர்ந்த வானில் பட்டொளி வீசிப் பறந்தது எமக்கெல்லாம் பெருமையாக இருந்தது என்றால் மறுப்பதற்கில்லை.

இம்மாநாடு லண்டனில் தலைமையகத்தினைக் கொண்டுள்ள உலக சைவப் பேரவையுடன் இணைந்து கனடாவில் இயங்கும் பல சமய ஸ்தாபனங்களின் அரவணைப்புடன் கனடா இந்துமா மன்றம் நடத்தி வைத்தது. இம் மாநாடு 3 நாட்களும் காலை மாலை நிகழ்ச்சிகள் எனப் பிரிக்கப்பட்டு ஸ்காபரோ நகர மண்டபத்திலும், மிஸிஸாகாவிலும், ஸ்காபரோவிலும் அமைந்துள்ள பாடசாலைக் கலையரங்குகளிலும் நடத்தப்பட்டது.

காலை நிகழ்ச்சிகள் யாவும் சைவ மதத்தின் பெருமை பேணும் ஆராய்ச்சிகள், கட்டுரை வாசித்தல், சொற்பெருக்குகள் என்பனவற்றைக் கொண்டதாக அமைந்திருந்தது. இதன் ஒரு நாள் நிகழ்ச்சி இளைஞர்களுக்கென ஒதுக்கப்பட்டு, கணனியல் மூலம் சைவ சமயத்தின் பெருமைகளைப் பேணும் விடயங்களைப் பற்றி ஆராயப்பட்டது. காலை நிகழ்ச்சிகளின் போது மக்கள் தொகை மிகப் பெரிதாக இருந்தமையால் அதே மண்டபத்தில் 4 இடங்களில் வெவ்வேறாகப் பிரித்து சொற்பெருக்குகள் நடந்தன. இதனால் ஒரு சிலர் சில நிகழ்ச்சிகளைக் கேட்க முடியாமல் போனதாக மனவருத்தப்பட்டுக் கொண்டார்கள்.

இம் மாநாட்டில் உலகின் பல பாகங்களிலும் வாழும் சைவமக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். கனடா, தமிழீழம், இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, ஜேர்மனி, பிரான்ஸ், லண்டன், அமெரிக்கா, தென் ஆபிரிக்கா போன்ற நாடுகளில் இருந்து ஏறத்தாழ 150 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். ஆதீன முதல்வர்கள், விஞ்ஞானிகள், அறஞானிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் என்றும் கிட்டத்தட்ட பதினைந்துக்கும் மேற்பட்டோர் கலந்து, உரையாற்றிச் சிறப்பித்தனர். இவர்களின் சைவசமயப் பேச்சுக்கள் சைவமக்களின் மனதினை எவ்வளவு கவர்ந்தன என்பதனை மூன்று நாட்களிலும் நடந்த நிகழ்ச்சிகளின் போது காணக்கூடியதாக இருந்தது. ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு பௌதீக விஞ்ஞானி அவர்கள் தொடர்ந்து மூன்று மணித்தியாலங்கள் சைவத்தையும் விஞ்ஞானத்தினையும் இணைத்துப் பேசி முடித்த போதும் இன்னும் தொடர்ந்து அவரைப் பேசுமாறு அங்கிருந்த பார்வையாளர்கள் கேட்டுக் கொண்டது பேச்சாளர்களின் சொற்பெருக்கு எந்த அளவு மக்கள் மனதினைக் கவர்ந்திருந்தது என்பதனை காணக்கூடியதாக இருந்தது.

மாநாட்டில் சிறப்பு அம்சங்களில் ஒன்றாக இரு மலர்கள், ஒரு நூல் என்பன வெளியிடப்பட்டன. சிறப்பு மலர், சிவஞான மலர், ஔவையார் மதியும் பிள்ளையார் துதியும் என்ற பெயர்களைத் தாங்கி இவை வந்தன. பொருளாதார வசதியின்மை காரணமாக குறைந்த அளவிலான பிரதிகளே அச்சிடப்பட்டமையால் இம் மலர்கள் யாவும் அநேகமாக விற்பனையாகிவிட்டன. இம் மலர்கள் சைவ சமயத்தின் தகைமைகளைத் தாங்கிய பல கட்டுரைகளைக் கொண்டு அமைந்தன. இதில் உலகின் பல பாகங்களிலும் இருந்து சைவசமய அறிஞர்களிடமிருந்து தரப்பட்ட அரிய, பெரிய கருத்துக்களைக் கொண்ட கட்டுரைகள் இடம்பெற்றிருந்தன. சிறப்பாக சிறப்பு மலர் எந்தவித விளம்பரங்களையும் கொண்டிராது தனியே விடயதானங்களை மட்டும் கொண்டிருந்தது பலரின் பாராட்டுகளையும் பெற்றுக் கொண்டது.

மாலை நேர நிகழ்ச்சிகள் எமது உள்ளூர் கலைஞர்களுடன் மட்டும் அமைந்து விடாது தமிழீழம், அமெரிக்கா, இந்தியாவில் இருந்து வந்த கலைஞர்களின் பங்களிப்பினாலும் மெருகூட்டப்பட்டு சிறப்பாக நடந்தேறியது. இம்மூன்று நாள் நிகழ்ச்சிகளும் இலவசமாக நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. மூன்று நாட்களும் அரங்குகள் நிரம்பி வழிந்ததுடன், நிகழ்ச்சிகள் யாவும் மனதுக்கு நிறைவையும் சுகத்தையும் தந்தன என்றால் மிகையாகாது. மாலை நிகழ்ச்சிகள் முற்று முழுதாக கலை நிகழ்ச்சிகளாகவே அமைந்தன. கண்ணுக்கும் செவிக்கும், கருத்துக்கும் இசைவாக சிறுவர்களின் நடனங்கள், பேச்சுக்கள், நாடகங்கள் என்பன அமைந்தன இங்கு விசேடமாகக் குறிப்பிட வேண்டியதொன்றாகும். புலம்பெயர்ந்தாலும், புகுந்த வீட்டிற்கும் தமது தாய்மண்ணின் பெருமைகளை எடுத்துக் காட்டுவதாக மழலைகளின் நிகழ்ச்சிகள் அமைந்தது குறிப்பாக வெளிநாட்டுப் பார்வையாளர்களின் இதயங்களில் புத்துணர்வையூட்டியது.

மாநாட்டின் ஒரு அம்சமாக பாலகர்களில் இருந்து முதியவர்கள் வரை கலந்து கொண்ட சைவசமயப் போட்டிகள் நடத்தப்பட்டன. சைவ வினா விடை, பேச்சுகள், திருமுறை ஓதுதல் என்பன இவற்றில் அடங்கும். பல நூற்றுக்கணக்கானவர்கள் பங்குபற்றியதுடன் பரிசுகளும் பெற்றுக் கொண்டார்கள். கிட்டத்தட்ட 25 தங்கப்பதக்கங்கள் முதற் பரிசில்களைப் பெற்றவர்களுக்கு வழங்கப்பட்டதுடன், போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் பரிசுகள் அவரவர் திறமைகளுக்கு ஏற்ப வழங்கப்பட்டது.

இம் மாநாடு வெற்றி பெற உழைத்தவர்கள் பலர். நிதியிருந்தவர், நிதி குறைந்தவர், ஆர்வலர் எனப் பலர் தத்தம் வசதிக்கு ஏற்ப தமது பங்களிப்பினைச் செய்தனர். ஆர்வ மிகுதியால் பல ஸ்தாபனங்கள் போட்டி போட்டு இறுதி நேரத்தில் உதவிகளைச் செய்ய முன்வந்தன. இம் மாநாடு நடக்குமா என்ற கேள்வி பலரின் உள்ளத்திலும் இருந்தமையால் ஆரம்பத்தில் இம் மாநாட்டுக்கு ஆதரவு குறைவாகவே இருந்தது என்ற உண்மையை ஒப்புக் கொண்டாக வேண்டும். ஆனால் காலம் கடந்தே பலர் தாங்களும் தங்களது பங்களிப்பினைச் செய்திருக்கலாமே என்று துக்கப்பட்டுக் கொண்டதை நானறிவேன். பரவாயில்லை இன்னோர் சைவ மாநாட்டினை இதைவிடச் சிறப்பாக இங்கு நடத்தினால் போயிற்று.

இது தமிழ் மணம் பரப்பும் ஒரு நிகழ்ச்சியாக கருதப்பட்டமையால், இங்கு வருகை தந்த வெளிநாட்டு அன்பர்கள் பலரும் ஒவ்வொரு தமிழ் அன்பர்களின் இல்லத்திலும் தங்கி எமது தமிழீழ மண்ணின் விருந்தோம்பலையும் பெற்றுக் கொண்டதும் ஒரு சிறப்பு அம்சமாகக் கருத வேண்டும். வந்திருந்த அன்பர்களில் பலர் எந்தவித பந்தாவும் இல்லாமல் எளிமையாக நடந்து கொண்டதும் எமக்கு ஒரு பெரிய ஆறுதலைத் தந்தது.

ஏறத்தாழ 50 ஆயிரம் டாலர்கள் மட்டில் இம் மாநாட்டிற்காக செலவு செய்யப்பட்டது என்பதுடன் பல தொண்டர்களின் உடல் உழைப்பும், பொது ஸ்தாபனங்களின் பண உதவியும், கலைஞர்களின் பங்களிப்பும், தனிப்பட்ட ஸ்தாபனங்களின் அரவணைப்பும், தனிப்பட்ட அன்பர்களின் ஆதரவும், வர்த்தக ஸ்தாபனங்களின் உதவியும், பத்திரிகை, வானொலி என்பனவற்றின் தோழமையும் எனப் பலர் இணைந்தே இந்த மாநாட்டினை சிறப்பாகச் செய்ய உதவினர். இம் மாநாட்டில் பங்கு கொண்ட, ஆதரவு தந்த, யாரையும் பெயர் கூறி இங்கு குறிப்பிடவில்லை அதற்கு காரணம் பங்களித்தோரின் மிக நீண்ட

(100ம் பக்கம் பார்க்க)

சகாப்தத்தை நோக்கி வாகனப் பயணம்

இந்த மாதம் டிற்றொய்ரில் (Detroit) நடத்தப்படும் வாகன அறிமுகம் எதிர்வரும் காலங்களில் எப்படியான வாகனங்களை எதிர்பார்க்க முடியும் என்பதனைக் காட்டி நிற்கின்றது. Chrysler, GM, Ford ஆகிய மூன்று நிறுவனங்களும் முற்றிலும் மாறுபட்ட கொள்கைகளை வெளிப்படுத்தி வருகிறது. Audi உருவமைப்புகளை மாற்றி பல சிறப்பு அம்சங்களை வெளிப்படுத்தி நிற்கிறது. Toyota தனது Lexus வாகனத்தை மாற்றி அமைத்துள்ளது.

சுருங்கக் கூறின்:-

1. இளைஞருக்கான Sport Utiliy Trucks, மென்பார வாகனங்கள், பொதி ஏற்றும் இடவசதிகளை குறைத்துள்ளன. Dodge Maxx வாகனங்களில் காணமுடிகிறது. அத்துடன் ஐந்து பயணிகளை ஏற்றக்கூடிய முறையில், கால் நீட்டி வைக்கப் போதுமான இடவசதிகளைக் கொண்டதாக அமைத்துள்ளனர். அண்மைக் காலங்களில் Pick Up Truck பொதி ஏற்றப் பாவிப்பது குறைவு. தனி மனிதன் வேலைக்கென அமைக்கப்பட்ட இந்த வானே தற்போது குடும்பத்தினருடன் பயணம் பண்ணும் இடவசதியுள்ள வாகனமாக, பொதி ஏற்றும் வசதியைக் குறைத்து அமைக்கப்படுகிறது. இதே அடிப்படையில் GM, தனது Silverado Pick Up Truck இன் உருவ அமைப்பை மாற்றி அமைத்து Avalanche Equator என நாமம் அமைத்து வருகின்றது.

Blazer, Jeep ஆகிய பிரத்தியேக பாவனை வண்டிகளும் மாறுபட்ட உருவமைப்பில் வரும் என எதிர்பார்க்கலாம். இவை யுத்தங்களுக்குப் பாவிக்கும் வண்டிகளைப் போன்று, அழுத்தமான பார்வையாக இல்லாமல் கரடு முரடாகவும், வெளிப்புற நிறங்கள், கடுஞ் சாயங்கள் போல அமைக்கப்படுகிறது.

Mazda, Ford கொம்பனியுடன் இணைந்து ஒரு சிறிய CRV, Tracker போன்ற வாகனத்தை வெளிப்படுத்துகிறது. இது Tribute என அழைக்கப்படும். 200 குதிரை வேகம் கொண்ட V6 எஞ்சினுடன் வருகிறது.

2. வயது வந்தோர்க்கென வாகனங்களிலும் பல மாற்றங்களைக் காண முடிகிறது. 353 குதிரை வேகமுடைய 5.7 லிட்டர் V8 எஞ்சினுடன் Chrysler, 300 Hemic வாகனம் அமைகிறது. Lexus தனது வாகனத்தை 215 குதிரை வேகமுடைய 3 Litre எஞ்சினுடன் வருகிறது. Nisan Sentra 126, 140 குதிரை வேகத்துடனும், புதிதாக வரும் 242/200 குதிரை வேகம் கொண்ட Volvo 70 வருகிறது.

3. மினிவான்கள் அறிமுகத்தில் BMW முன் நிற்கிறது. பல முக்கிய மாற்றங்கள் காணப்படும். இரண்டு பக்க Sliding Doors, மின்சார இயக்கம் கொண்டு காணப்படும். பின் கதவு கையால் திறக்காமல் அமுக்கி மூலம் திறக்கப்படும்.

இவற்றினை விட சிறப்பு அம்சங்களாக, GM, Chrysler, Ford ஆகிய உற்பத்தியாளர்கள் கணனிகளை உட்படுத்த முனைகின்றனர். இதன் மூலம் பயணிகள் Internet, E-mail ஆகியவற்றினை வாகனத்தில் இருந்த வண்ணமே பாவிக்கக் கூடியதாக இருக்கும். ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்ட Voice Activated Systems இன்னமும் காணப்படும். இவற்றின் மூலம் பல விஷயங்களை எம்மால் அறிய முடிகிறது. அண்மையில் உள்ள வசதிகள், பாதையோர உதவிகளை அறிய முடிகிறது.

எரிபொருள் பாவனையினால் நச்சுவாயு சுற்றாடலை அசுத்தப்படுத்துகிறது. இதனை முற்றிலும் குறைப்பதே முக்கிய மாற்றமாக இந்த சகாப்தத்தின் இலக்கு. பலவிதமான முறைகளை விஞ்ஞானிகள் கையாள முயல்கின்றனர். ஆயினும் இன்னும் தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படவில்லை.

கணேஷ் ரட்ணம்

Nisan முதன் முதலாக பரீட்சார்த்த ரீதியில் ஒரு மின்கலன் மூலம் செயற்படும் வாகன-மொன்றை அறிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வன்கூவரில் உள்ள Billard Power Systems என்னும் ஸ்தாபனம் Fuel Cell ஐ அறிமுகமாக்குகிறது. இந்த ஸ்தாபனத்தின் மூலதனம் Chrysler, Ford ஆகியவற்றினால் உருவானதாகும். GM தனியாகச் செயற்படுகிறது. பலவிதமான இடையூறுகளை Fuel Cell எதிர்நோக்கி செயற்பட வேண்டியுள்ளது. தற்போது காணப்படும் எஞ்சினளவு பரிமாணம் தேவையாகிறது. பரவலாக எங்கும் தேவையான (Hydrgen) ஹைட்ரஜன் பெறக் கூடியதாக இருக்க வேண்டும். அதற்குப் பெற்றோல் குதம் போன்ற விநியோகம் தேவைப்படுகிறது. அத்துடன் பரந்த அளவில் ஹைட்ரஜன் உற்பத்தி செய்தல் வேண்டும்.

Fuel Cell என்பது ஒரு இராசாயன மின் கருவி. இதன் மூலம் சக்தி வெளியாகி வாகனத்தை ஓட்டும். ஹைட்ரஜனும், பிராண வாயுவும் இராசாயன ரீதியாக ஒன்று சேர்ந்து மின்சாரமாக வெளிவருகிறது. இதனால் நச்சு வாயு வெளிவராது. நீர் மட்டுமே உருவாகிறது. தற்போது உருவாக்கப்பட்ட எஞ்சின் நிறை 90kg மட்டுமே. அத்துடன் தொகையாக உற்பத்தியாக்க முடிகிறது. அத்துடன் இந்த Fuel Cell தற்போது எஞ்சின் பொருத்தப்படும் இடத்தில் காணப்பட மாட்டாது. இது பின் ஆசனத்தில் அல்லது பொதி வைக்கும் (Truck) இடத்திற்கடியில் அமைக்கப்படலாம். இது 2003ம் ஆண்டு மக்கள் பாவனைக்காக வெளிவரலாம். இதற்கான ஆயத்தங்கள் தொடங்கியுள்ளன. பல வாகன உற்பத்தியாளர்களும் இதைப் பரீட்சார்த்த ரீதியாகச் செய்கின்றனர்.

புதிய சட்டமுறைகள் தேவையாக வரலாம் எனவும் எதிர்பார்க்கப் படுகிறது. பல பிரச்சனைகள் இன்னும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. பாதுகாப்பு சட்டமுறைகள் புதிதாக ஏற்படுத்த வேண்டியுள்ளன. Methanol அல்லது பெற்றோலினால் ஹைட்ரஜனை (Hydrogen) உருவாக்க வேண்டியுள்ளது. இதனை சிறிய பெற்றோல் குதங்கள் போன்ற இடங்களில் உற்பத்தி செய்யும் ஒரு முறையை கையாள வேண்டியுள்ளது. இவற்றினால் வெளிவரக் கூடிய நச்சுவாயு சுற்றாடலை அசுத்தம் செய்ய முடியும்.

ஒருவேளை வாகனத்திற்குள்ளேயே இந்த இயந்திரத்தை பொருத்த வேண்டி கூட வரலாம். இந்த முறை ஒருவேளை வாகனத்தின் சக்தியைக் குறைக்கலாம்.

இவை எதுவாயினும் சுற்றாடல் அசுத்தப்படாது இருக்க வேண்டும் என்பதற்காகவே இந்த முறை அணுகப்படுகிறது. ஆனால் மீண்டும் பெற்றோலை மூலகமாக ஹைட்ரஜன் உற்பத்தி செய்வதற்காகப் பாவிப்பதனால் நச்சுவாயு உற்பத்தியாகிறது. இதனை எப்படிக் குறைப்பது என்பதே முக்கிய பிரச்சனையாகிறது. வேறு பல முறைகளை தற்போது ஆராய்கிறார்கள். ஆயின் ஹைட்ரஜன் உற்பத்தியாக்கப் பாரிய செலவு, மொத்த விநியோகம் ஆகியவை இடைஞ்சலாகக் காணப்படுகிறது.

Nisan பரீட்சார்த்த ரீதியாகச் சில கைத்தொழில் நிறுவனங்களில் வாகனங்களை அறிமுகப்படுத்தியுள்ளன. பல நல்ல விஷயங்களை அவதானிக்க முடிகிறது. வாகனத்தில் தற்போதைய எஞ்சினைப் போன்று சத்தமில்லை. சுழல்விசை குறைந்து கூடுவதில்லை. இதனால் வாகனத்தை தொடங்கும் போது இதமாக ஒரே விசையில் ஓட்ட முடிகிறது. எஞ்சின் நிறை குறைவு. இந்த வாகனம் ஒரு மின்கலன் மூலம் செயலாகிறது. இக் கலனை அடிக்கடி மாற்ற வேண்டியுள்ளது. இதைத் தொகையாகவும், பரவலாகவும் செயற்படுத்த ஒரு முறையை உண்டாக்கும் வரை இவையெல்லாம் ஒரு பிரச்சனை தான். 2003ம் ஆண்டுவரையில் புதிய வேறுபட்ட சக்தி உண்டாக்கும் முறை மக்கள் மத்தியில் வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. கனடாவைப் பொறுத்த மட்டில் வன்கூவரில்

(104ம் பக்கம் பார்க்க)

21ம் நூற்றாண்டில் தமிழ்மொழி: தமிழர் புலம்பெயர்ந்த நாடுகளில் கற்றல், கற்பித்தலில் புரட்சி - இதை நம்பலாமா!

ம.செ. அலெக்ஸ்சாந்தர்

பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல - கால வகையினானே.
நன்னூலார் கூறிய இக்கருத்து, பழமைக்கும் புதுமைக்கும் பாலம் அமைத்துச் சிந்தனைக்குப் பெருவிருந்து என்பதை எப்பொழுதும் - இந்த "மிலேனிய" ஆரம்பத்திலும் கூறலாம்.
தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில், ஈடுபடுபவர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சனைகளுக்கு இது ஒரு திருவிருந்து.
தமிழ்மொழி இன்று உலகிலே 146 நாடுகளிலே பேசப்படுகிறது. அன்றேல் தமிழர்கள் பண்டும் இன்றும் பல்வேறு காரணங்களால் புலம்பெயர்ந்து வாழ்கின்றனர். புலம்பெயர்ந்து வாழும் இடங்களிலே தமிழறிஞர்கள் தமிழைத் தழைக்க வைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் முயற்சிகள் பல எடுக்கின்றனர். தமிழைத் தமிழர் மத்தியிலே தக்க வைக்க முடியுமா முடியாதா என்ற எண்ணம் கேள்விக் குறியாக இருக்கின்ற நிலையும் உண்டு. இன்று தமிழ்மொழிக்கான மூலவளம் தமிழீழத்தில் போர்க் காரணங்களாலும், பொருளாதாரக் குறைவாலும் அருகி விட்டது.
அறிஞர்களிடத்தே அறிவிருந்தும் அதனை அச்சிட்டு வெளியிட முடியாத நிலையில் ஈழத் தமிழர்கள் இருக்கிறார்கள். புலம்பெயர்ந்த நாடுகளில் வெளியிட வசதிகள் பல இருந்தாலும், வெளியீடுகள் எந்தவித கட்டுப்பாடின்றியும், ஆதாரங்கள் இன்றியும் புனையப்படுகின்றன. புலம்பெயர்ந்த நாடுகளில் புனையப்படுவன. வாழும் பிரதேசத் தாக்கங்கள் பெறுகின்றன. இதனை வாசிக்கின்ற தமிழீழத் தமிழருக்கோ, அன்றேல் தமிழ்நாட்டுத் தமிழருக்கோ புலம்பெயர்ந்த நாட்டுத் தமிழர் வாழ்வின் பின்புலம் அறிதல் வேண்டும். தமிழீழத் தமிழரும், தமிழ்நாட்டுத் தமிழரும் தமிழையும், தமிழ்தரு விழுமியங்களையும், தத்தமது சூழ்நிலை ஆதிக்கக் காரணிகள் கொண்டு பார்த்துத் தீர்ப்புக் கூறுவது அவ்வளவு ஏற்புடைத்தாகாது.

இந்த 21ம் நூற்றாண்டிலே தமிழராகிய நாம் எதிர்வு கொள்ள வேண்டிய சவால்களிலே எண்ணக்கரு முரண் என்பதும் முக்கியமானவைகளில் ஒன்று. தமிழீழத்திலே தமிழின் புனிதம் பேண வேண்டும் என்று விழையும் வேளையிலே, புலம்பெயர்ந்த நாடுகளிலே பல்வேறு புதுச் சொற்களைத் தமிழில் பயன்படுத்தி எழுதும் நிலையும் உண்டு. இதற்கு மாறாகத் தனித்தமிழே வேண்டும் எனக் கருதி எழுதும் கனடியத் தமிழ் எழுத்தாளர்களும் உளர். இவை எல்லாம் எப்படித் தமிழ் கற்றல் கற்பித்தலில் புரட்சியாகும் எனச் சிந்திப்பார்க்கு, பல்வேறுபட்ட இடைத்தாக்க விளைவே, மொழியின் கருத்துப் பரிமாற்றத்தின் சொன்மையும் பொருண்மையுமாகும் என்றால் மிகையாகாது.

பிரபல தமிழ் நாட்டுக் கவிஞர் கனடாவிற்கு வந்திருந்தார். அவர் இங்கு அன்னையர் தினமா! தந்தையர் தினமா! என அங்கலாய்த்து, அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் எனப் போற்ற வேண்டிய நாம், அவர்களுக்கென்றோர் தினம் வைத்து, அவர்களை அன்று மட்டும் மரியாதை செய்ய நினைப்பதை எண்ணவே முடியாது என்றார். அவர் தனது சூழ்நிலை கொண்டு கூறியது அவர் மட்டில் சரி; ஆனால் கனடாவின் பின்புலம், வரலாறு, நடைமுறை அறிந்தவர்களுக்கு இங்குள்ள அமைப்பு முறை சரியாகும். ஏனெனில் இங்குள்ள கடந்த கால வரலாறு, சூழ்நிலைகள், அன்னையர் பிரச்சனைகள், தந்தையர் பிரச்சனைகள், ஒரே தாய் பெற்ற பிள்ளைகள் பிரச்சனைகள், ஒருவர் பன்முறை மணம் செய்தல் என்பன அன்னையர், தந்தையர் தினங்களை, பிள்ளைகள் (911) க்கு (பொலிஸ் உதவி நாடல்) தொலைபேசி மூலம் அழைக்கும் பிரச்சனைகளை ஏற்படுத்தியுள்ளன. அவைகள் சுயாதீனமாய் வாழும் கனடிய வாழ்க்கை முறைக்கு மிக உகந்தவை என்பதால் பாடசாலைக் கல்வி முறைகள் மூலமும் இங்கு படிப்பிக்கப்படுகின்றன. எண்ணக் கரு முரண் இப்படிப் பல்வேறுபட்ட விடயங்களில், பின்புலம் அறிந்தாலே தீர்வுகாண முடியும். மகாஜனாக் கல்லூரி அதிபர் திரு.பொ. கனகசபாபதி அவர்கள் எழுதிய "பிள்ளைகள் - பெற்றோர் - உளவியல்" என்ற கல்வி உளவியல் வழிகாட்டு நூல் கீழைத்தேய எண்ணக் கருக்களுக்கும், கனடிய பாடசாலை வாழ்வியல் முறைக்கும் பாலம் அமைக்க முனைந்தாலும், அந்நூல் கூறும் கருத்துக்கள் முடிந்த முடிபல்ல; அது ஒரு வளரும் கலை; தமிழியம், கனடிய கல்வி முறையோடு பொருத்திப் பார்க்க விழைந்த அணுகுமுறை எனலாம். 21ம் நூற்றாண்டில் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் புலம்பெயர்ந்த நாடுகளில் ஈடுபடுவோர் எதிர்கொள்ளும் சவால்களில் எண்ணக்கரு முரணும் முக்கியமானதாகும். இதற்கென அடிக்குறிப்புகள் விளக்கங்கள் உலகளாவிய ரீதியில் தமிழ்மொழி நூல்கள் எழுதுவோர் தொழினுணுக்க மூலம் தீர்க்க வேண்டிய பிரச்சனையாகும்.

எந்தச் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கும் ஊக்கல் அல்லது ஊக்கி வேண்டும். "சும்மா" (எவ்வித தேவையுமின்றி) அதனைச் செய்தேன் என்று எவரும் சொல்ல முடியாது. ஏதோ ஒரு தேவை அகக் காரணிகளாகவோ, புறக் காரணிகளாகவோ ஏற்பட்டாலே ஒரு செயல் நிகழும். ஒரு தேவையை நிறைவேற்றவே செயல் ஏற்படுகிறது. புலம்பெயர்ந்த நாடுகளிலே தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் மாணவருடைய ஊக்கிகளாக மொழிப்பற்றோ, பெற்றோரின் தூண்டுதலோ, பல்கலைக்கழக அனுமதிக்கான விசேட சித்தி, தாய் நாட்டுப் பற்றோ, இவை போன்ற வேறு ஊக்கிகளோ உண்டு. இதே போன்று கற்பிப்போர் மத்தியிலே வேதனம், மொழிப்பற்று, ஆசிரியர் என்ற அந்தஸ்து அல்லது ஒன்ராறியோ கற்பிக்கும் தராதரம் போன்றவை போன்ற ஊக்கிகளால் கற்பிக்கலாம். மேலும் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் இருக்க வேண்டிய கல்வி உளவியலறிவு அற்றவர்கள் தமிழ்மொழி கற்றல் கற்பித்தல் உத்திகளைத் தீர்மானிப்பது, தனியத் தமிழ்மொழி அறிந்தோர் மட்டும் புள்ளிவிபரவியல், பாடத்திட்டம், கலைத்திட்டம் பொதுமை காண நினைத்து, தங்களது தமிழ்மொழி அறிவுக்கேற்ப எழுத நினைப்பது எந்தளவு சாலும்! இவற்றை விட வேற்று மொழி வல்லுனர்கள் பாடசாலை அதிபர்களாகி, தத்தம் நோக்கில் ஆசிரியர்களைத் தெரிந்து தாம் நினைப்பவற்றை, தம் மொழியில் உள்ளது போல் வினாக்களைப் பொறிக்குக, கற்பிக்குக என வேண்டுவது 21ம் நூற்றாண்டில் தீர்வு காணவேண்டிய சவால்களாகும்.
தமிழ்மொழியின் அமைப்பு, தொடரியலறிவு போல்வன நன்கறிய வேண்டும். ஆங்கில மொழியுடன் ஒப்பிட்டு, மொழி அமைப்பு வாக்கிய அமைப்பு, ஒலியமைப்பு, வரிவடிவத் தொடர்பு என்பன தெளிவு பெறக் கற்றல் கற்பித்தல் நிகழ வேண்டும். கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல், மீளநோக்குதல் ஆகிய மொழித் திறன்கள் வேற்று மொழிகளில் உள்ளது போல் ஆக்குக என்றோ, அன்றேல் பண்டு உள்ளது போல் இன்றும் ஆக்குக என்று கேட்பதும் மொழியியல்பு அறிந்தோர்க்கு, கல்வி உளவியல் அறிந்தோர்க்கு எந்தளவிற்குச் சாலும் என்பது வினாக்குறி!

கனடியக் கல்விச்சபைகள் தொடர்கல்வியில் தரும் கனடிய சர்வதேச மொழி கற்பித்தலுக்கான கலைத்திட்ட அலகுகளுடன், தமிழியம் தரும் விழுமிய எண்ணக் கருக்கள் ஒன்றிணைக்கப்பட்டு, கலைத் திட்டக் குறிக்கோள்கள், அலகுகள், எதிர்பார்ப்புகள் போன்றன நெகிழ்ச்சியுடையனவாக நிர்ணயிக்கப்பட வேண்டும். வகுப்புக் கற்றல் கற்பித்தலில் ஈடுபட்ட அனுபவ செயற்பாடுகள் கருத்திற் கொள்ளப்பட்டுச் சேர்க்கப்படல் வேண்டும். தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் செயற்றிட்டம் என்ற அலகுண்டு; ஒரே அலகை மீண்டும் மீண்டும் கொடுப்பதால், ஒவ்வொரு மாணவர் செயற்றிட்டமும் கை மாறும் வழியேற்படும். செயற்றிட்டம் என்றால் என்ன? அவைகளின் வகைகள், அவை செய்யப்படும் முறை, அவற்றை மதிப்பீடு செய்யும் வழிகள், அவற்றைச் செய்யும் முறை வழிகாட்டு, பதிதல என்பன உகந்த வழிகளில் காட்டி தமிழ்மொழியில் செயற்றிட்டம் சிறக்க வேண்டிய சவாலும் 21ம் நூற்றாண்டில் சந்தித்துத் தீர்க்க வேண்டிய சவாலாகும்.

தமிழர்கள் புலம்பெயர்ந்த நாடுகள் பலவாக இருப்பதால், அந்தந்த நாட்டு சமூக, மொழி,

21ஆம்...

கலாசார இடைத்தாக்கங்கள் தமிழ் மொழியிற் புகுதலைத் தடுத்தல் கடினம். பண்டு பிறமொழிக் கலப்பு ஏற்பட்டதை விட இன்று மேலும் அதிகரிக்க வாய்ப்புண்டு. இன்று நாம் புலம்பெயர்ந்து வாழும் கனடாவில் வாழும் தமிழறிஞர்கள் எழுதும் தமிழில் "மோல், சப்வே, ஜொப், அப்டேற்" போன்ற சொற்கள் ஏராளமாகப் பயன்படுத்தப்படுகின்றன. அவர்கள் எழுதும் அறிவியல் நூல்கள் ஆராய்ச்சிக்கு மிக உகந்தவை. தமிழீழ வரலாறு, தமிழர் புலம்பெயர்ந்த நாடுகள், உளவியல் நூல்கள், மரபுக் கவிதைகள், புதுக் கவிதைகள் வானொலியில் கேட்கும் மனவெழுச்சித் தமிழ், கம்பீரத் தமிழ், தகவல் தரும் ஆற்றலுள்ள மொழி போன்றன எல்லாம் ஆராயப்பட வேண்டும். இவையின் ஆய்வு செய்யப்பட வேண்டிய அவசியம், எம் தமிழ்மொழியை வளர்க்க தமிழில் உலகத் தமிழினம் ஒன்றே தமிழர் என்று கூற வழிவகுக்கும். எம்மவரில் சிலர் தமிழ்ச் சொற்களில் பொதுமை காண, தமிழருக்கான பாடசாலை நிறுவ, தமிழர் தம் வரலாறு பேண விழையும் வேளையிலே, அதன் ஆய்வும் முடிவும் 21ம் நூற்றாண்டில் காண வேண்டிய, தீர்க்க வேண்டிய சவால்களில் ஒன்றாகும்.

21ம் நூற்றாண்டிலே தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் புரட்சி என்ற தலையங்கத்திற்கான இசைவு இன்னும் தொடங்கவில்லையே என வாசகர்கள் எண்ணலாம். நாம் வாழும் தகவல் யுகத்திலே, தொழினுட்பத்தின் இடைத்தாக்கம் எந்தளவு பேறுகளை ஏற்படுத்துகிறது என்ற அடிப்படையிலும், மற்றைய வாழும் மொழிகள் கற்றல் கற்பித்தலில் தொழினுணுக்க இடைத் தாக்கங்களையும், தமிழ்மொழி கற்றல் கற்பித்தலை கடந்த 45 ஆண்டுகளாக பல்வேறு இடங்களிலும், பல்வேறு நிலைகளுக்கும் எமது தாய்நாட்டிலும் இங்கும் கற்றல் கற்பித்தலில் பெற்ற அனுபவ அடிப்படையில் அனைவரது சிந்தனைக்கும் நான் அளிக்கின்ற பெருவிருந்தோ, சிறு விருந்தோ என்பதை வாசகர்களாகிய நீங்களே ஓர்ந்து உணர வேண்டும். தமிழ்மொழியைத் தமிழர் மத்தியிலே தக்க வைக்க வேண்டும் என்ற ஆதங்கம் தமிழ் தரும் நல்லறிஞர் மத்தியிலே இன்று ஏற்பட்டு வரும் பேரெண்ணம். இதனைத் தமிழர் இன்று புலம்பெயர்ந்துள்ள நாடுகளிலே தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் புதிய உத்திகள் கையாள வேண்டும். இன்று உலகத் தமிழரை ஒன்றுபடுத்தும் பாசவிலங்கு தமிழ்மொழி. இதனைக் கைவிட்டால் தலப்பற்று மிகுந்து தங்களை இந்தியத் தமிழன், ஈழத் தமிழன், கனடியத் தமிழன், இலண்டன் தமிழன், அவுஸ்திரேலியத் தமிழன் என அழைக்கத் தொடங்கி விடுவான். அப்படியே தமிழன் என்பதும் காலப் போக்கில் விடுபட்டுவிடும். ஆதலின் முதற் புரட்சி தொழினுணுக்கம் தரும் உந்து சக்திகளைப் பயன்படுத்தி உலகத் தமிழரை ஒன்றிணைக்கும் நம் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலை நவீனப்படுத்துவோம். இப்படி நான் கூறும் போது அதனை இலகுபடுத்தினாலே தமிழ்மொழியைத் தக்க வைக்கலாம், வருங்காலத்தில் உலகளாவிய ரீதியில் தக்க வைக்கலாம்.

இன்று எமது மொழியைக் கற்கும் எவரும் கூறும் ஒரு குறைபாடு, எமது தமிழ்மொழியில் 247 எழுத்துக்கள் என்பதாகும். ஆங்கிலத்தில் 26 எழுத்துக்கள், மற்ற மொழிகளில் 50க்கு உட்பட்ட எழுத்துக்கள். வேறு சில மொழிகளில் மிக மிகக் கூடிய எழுத்துக்கள் உண்டு. ஏன் எமது தமிழ்மொழி வரிவடிவத்தில், மாற்றம் பலமுறை செய்தவர்கள், குறைந்த எழுத்துக்கள் மூலம் நிறைந்த ஒலிகளை ஏற்படுத்த முயலவில்லை என்பது, பண்டுள்ளதை மாற்றாது புதுமை காண விழைவது எந்தளவு சாலும். இது பற்றிய எனது சிந்தனைப் போக்குகளை தமிழ் விழுமியம் காண்போராகிய உங்கள் முன் சமர்ப்பித்து, இவ்வழிகள் மூலமோ அன்றேல் வேறு வழிகளிலோ, குறைந்த எழுத்தொலிகள் மூலம் கூடிய ஒலியன்கள், உருபன்கள் ஏற்படுத்த வழிகாண வேண்டும். இன்றைய தொழினுணுக்கம் இவற்றுக்கு வழிகாணும். தமிழ்மொழியில் கணனி உபயோகம், இன்று தமிழ்நாட்டுக் கணனியாளர்களின் கண்டுபிடிப்புகளால் மிகவும் உத்வேகம் அடைந்து வருகிறது. உயிர் எழுத்துக்கள் 12 ஒருபுறமும், மெய்யெழுத்துக்கள் 18 மறுபுறமும் ஆயுத எழுத்தையும் சேர்த்து தட்டச்சில் பொறித்து எல்லாச் சொற்களையும் ஆக்க முடியும் என்கின்றனர். மேலும் தமிழ்மொழியிலேயே நேரடியாக ஆணைகளைக் கொடுத்து, கணனி மூலம் செயற்படுத்தலாம் என்கின்றனர்.

சில கணனி அறிந்தோரோடு பேசும் போது, தமிழ் நன்கு தெரிந்தாலே இது பொருந்தும் என்கின்றனர். உடனே எனது சிந்தனையில் மொழித் திறன்களிலே மிக முக்கியமான பேச்சு மொழியின் முக்கியத்துவம் விளங்கியது. எதனைக் கற்பிக்கவும் பேச்சுமொழி என்ற வாகனம் வேண்டும். பேச்சுமொழிக்கு இலக்கணம்வேண்டுமா? என்ற வினா எழுப்பினால், பல்வேறு விடைகள் வரும். பேச்சுமொழிக்கும் இலக்கணம் உண்டு. அவன் போகிறாள் என்றோ அது வருகின்றான் என்றோ, நான் பேசுது என்றோ எவரும் மொழிவதில்லை. அப்படி மொழிந்தால், அதன் வழுநிலை உடனேயே சூழ இருப்பவர்களாலோ, அன்றேல் சூழ்நிலையோ திருந்தக் கூறிவிடும். குழந்தை மொழியில் ஏற்படும் ஒப்புமையாக்கம் (Analogy) கூடக் காலப்போக்கில் திருத்தப்படுகிறது. கனடாவில் அல்லது வேறெந்தப் புலம்பெயர்ந்த நாட்டிலோ அன்றேல் ஆங்கிலம் கலந்து பேசுகின்ற நாடுகளிலோ தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் ஈடுபடுவோர், பேச்சுத் தமிழை மாதிரித் தமிழாகக் கேட்க, பேச வாய்ப்பளிக்க வேண்டும். அதன் பின்பே பிள்ளை விசைப்பலகை தமிழைத் தட்டச்சுச் செய்து வெளியிட வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும். முதல் எழுத்துக்கள், ஆயுத எழுத்துகளைப் பிள்ளை இனங்காண, ஒலிக்க வழி செய்ய வேண்டும். உயிர்மெய் எழுத்துக்கள் எப்படி ஏற்படுகின்றன என்பது, நன்கறியப் பயிற்றி, உச்சரித்து விசைப்பலகையில் பொறிக்கப் பயிற்றுதல் வேண்டும். பேச்சுமொழி நன்கு தெரிந்தால், எந்தெந்த உயிர் எழுத்தும், மெய்யெழுத்தும் சேர்ந்து எந்தெந்த ஒலி வரும் என்பது, மடக்கை வாய்ப்பாட்டைப் பார்ப்பது போல் ஆரம்பத்தில் செய்தாலும், பின்பு எவ்வித இடக்கும் இன்றி விசைப்பலகை செய்யலாம்.

விசைப் பலகை செய்த பின் வழுக்கள் உண்டா எனச் சீர்தூக்கிப் பார்க்கவும் வழியுண்டு. எழுத்துப் பிழைகள், இலக்கணப் பிழையா, சொற் பிழையா என்பதையும் கணனியே காட்டும். கற்றல் கொள்கையில் உடனேயே பின்னூட்டல் செய்வது (Feed back) மீளவலியுறுத்தலைக் கூட்டும். (Reinforcement) இதனால் கற்றல் மேம்படுகின்றது எனக் கல்வியுளவியலாளர் கூறுவர். பின்னூட்டல் மாணவன் அதே சொல்லை வேறு சந்தர்ப்பத்தில் பயன்படுத்தும் போது மீளவலியுறுத்தப்படுகிறது. பல்வேறு மீளவலியுறுத்தல்கள் மொழியைத் தன்மயமாகப் பயன்படுத்தும் ஆற்றலைக் கூட்டி மொழிப் பயன்பாட்டைப் பன்முகப்படுத்தும். இன்று மொழி கற்பித்தலில் கணனி தகவல்களை, கருத்துப் பரிமாற்றத்தைக் களஞ்சியப்படுத்தலை செய்கிறது. உலகத் தமிழினத்தை ஒன்றுபடுத்த தகவல் யுகம் தரும் கணனியின் பயன்பாட்டிற்குத் தக எமது தமிழ்மொழி கற்பித்தலின் உத்திகள் மாறவேண்டும். பாவிலே புரட்சி செய்த பாரதி போல், பாரதி தாசன் போல், ஈழத்து மகாகவி போல், சிறுகதையிலே பல்வேறு உத்திகளைக் கையாண்ட எஸ்.பொ, கே.டானியல், செம்பியன் செல்வன் போல் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலிலும் புத்தம் புது உத்திகளைச் சிந்தித்துக் கருத்துக்கள் பரிமாறினால், தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் பொன்னான யுகம் காணலாம். இதனால் உலகத் தமிழினம் மொழியால் ஒன்றுபட்டுத் தமிழ் கூறும் நல் விழுமியமான ஒன்றே தமிழன், ஒருவனே தேவன் என்ற வழி காணலாம். இன்று சொற்களில் பொதுமை காண கனடாவில் தமிழறிஞர்கள், பத்திரிகையாளர்கள் முனைகிறார்கள். தமிழின் பல்வேறு பகுதிகள் உள. இக்கட்டுரை எழுத்து, கணனி மொழிக்குத் தரக்கூடிய சில செயற்பாடுகளே ஆராயப்பட்டன. பல்வேறு மொழியின் கூறுகள் காலத்துக்கேற்ப ஆராயப்படின், புதுவழி நல்வழியாகும். அதில் தமிழினமும், அவர் தம் மொழியும் பொலிவு பெறும்.

வாழ்க தமிழ்; வளர்க தமிழியம்.

வெண்பா

இருபத்தோர் நூற்றாண்டில் இன்றமிழைக் கற்றல்
கருப்பொருளாய்க் கற்க கணனி - தருநுட்பம்
நம்தமிழர் நன்கு நமக்காக்கி நற்றமிழே
எம்மினத்தின் பாசவிலங் காக்கு.

எழுத்துப் புரட்சி இலகுவாக்கி ஏற்று
பழுத்த தமிழைப் படிக்க - எழுதுமொழி.
இன்றமிழில் என்றும் இசைபடவே எல்லோரும்
நன்றாயே கற்க நயந்து.

மலரின் எழுத்தாளர்கள்
Our Contributors



'தீவகம்' வே. இராஜலிங்கம்
பிரதம ஆசிரியர்
'நம்நாடு'



ரட்ணம் கணேஷ்
வாகன விற்பனைப் பிரதிநிதி
வாகனசேவை ஆலோசகர்



விஜய் ஆனந்த்
சஞ்சிகை ஆசிரியர்,
ஒலிபரப்பாளர்



ஆர்.என். லோகேந்திரலிங்கம்
பிரதம ஆசிரியர்
'உதயன்'



ம.செ. அலெக்ஸ்சாந்தர்
முன்னாள் விரிவுரையாளர்
ஆசிரியர்



த. ஸ்ரீபதி
சட்டத்தரணி -இலங்கை
சமூகசேவையாளர்

ஆயுள் காப்புறுதி...

காப்புறுதி ஆலோசகர்கள் ஒரு குடும்பத்துக்கு காப்புறுதி செய்ய முற்படும் போது கணவன் மனைவி இருவரும் ஒன்றாகச் சேர்ந்து விளக்கங்களை பெற்றுக் கொள்வது கூடிய நன்மை பயக்கும். அத்துடன் காப்புறுதி ஆலோசகரும் சிரமம் பாராது சற்று விளக்கமாகக் கேட்கும் கேள்விகளுக்கு தகுந்த முறையில் பதிலளிக்க வேண்டும். ஆயுள் காப்புறுதி பற்றிய நன்மைகள், தீமைகள், சட்ட நுணுக்கங்கள், (Features & Benefits & Legal facts) ஆகியவற்றை வலியுறுத்த வேண்டும். அதே நேரம் காப்புறுதியை பெற்றுக் கொள்பவன் ஒளிவு மறைவின்றி காப்புறுதிப் பத்திரத்தில் உள்ள சகல கேள்விகளுக்கும் தெரிந்தவரை (Basic Disclosure) உண்மையான தகவல்களைத் தெரிவிக்க வேண்டும். பொய்யான தகவல்களுக்கும் தில்லுமுல்லுகளுக்கும் கால எல்லை கிடையாது. இப்படியானவை கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் காப்புறுதிக் கொடுப்பனவு எந்த வேளையிலும் மறுக்கப்படுவதற்கு சட்டத்தில் இடமுண்டு. இந்த விபரங்களைக் காப்புறுதி ஆலோசகர் வலியுறுத்த வேண்டும். சில சந்தர்ப்பங்களில் காப்புறுதி ஆலோசகரின் கவனயீனத்தாலும், ஒவ்வொரு கேள்விக்கும் தகுந்த விளக்கத்தையும், அதன் தாக்கத்தையும் தெளிவாக விளக்க முற்படாததாலும் காப்புறுதி பெற்றுக் கொள்பவர் சில உண்மைகளை மறைப்பதால் ஏற்படும் பிரச்சனைகளைப் புரிந்து கொள்ளாமல் அசட்டையீனமாக மறைப்பதாலும் காப்புறுதிக் கொடுப்பனவு (Death Benefit) மறுக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட விளக்கத்திற்கு ஒரு உதாரணத்தைக் கூற விரும்புகின்றேன். பொதுவாக புகைபிடிக்கும் பழக்கமுள்ள ஒருவர் ஆயுட் காப்புறுதி பெற்றுக் கொள்ளும் போது அவருடைய கட்டுப் பணம் (Premium) சற்றுக் கூடுதலாக இருக்குமென்பது தெரிந்ததே. இவர் ஆயுள் காப்புறுதி செய்து கொண்டபின் புகைப் பிடித்தலை நிறுத்தும் போது அவருடைய கட்டுப் பணம் குறைய வாய்ப்புண்டு. காப்புறுதி நிறுவனத்தின் சட்டப்படி இவர் 12 மாதங்கள் புகைப்பிடித்தலை முற்றாகக் கை விட்டவராக இருக்க வேண்டும். எனவே இவருக்கு மீண்டும் 12 மாதங்களின் பின் சிறுநீர் பரிசோதனை (Urine test) நடைபெறும். பெறுபேறுகள் திருப்திகரமாக இருப்பின் இவரது ஆயுள் காப்புறுதிக்குரிய கட்டுப் பணம் குறையும். சில மாதங்களின் பின்போ அல்லது மீண்டும் இவர் புகை பிடிப்பாராயின் இதைக் காப்புறுதி நிறுவனத்துக்குத் தெரிவிக்க வேண்டும். மீண்டும் கட்டுப் பணம் (Premium) கூடும். இதை அவர் செய்யத் தவறும் பட்சத்தில், இறப்பு சம்பவிக்கும் போது பிரேத பரிசோதனை மூலமோ அல்லது வேறு ஆதாரங்களைக் கொண்டோ காப்புறுதி நிறுவனம் இவருடைய கொடுப்பனவை (Death Benefit) மறுப்பதற்கு இடமுண்டு.

இறுதியாக Norwich Union காப்புறுதி நிறுவனம் T.V. விளம்பரம் மூலம் சந்தைப்படுத்தும் மருத்துவ பரிசோதனையற்ற ஆயுள் காப்புறுதி பற்றி (Guaranteed Non Medical Insurance) சில முக்கிய தகவல்களை இங்கு கூற விரும்புகின்றேன்.
முதலாவதாக இத் திட்டம் மருத்துவ பரிசோதனையற்றதால் இலாபகரமானதல்ல. நீங்கள் கூடுதலான கட்டுப் பணம் (Much Premium) செலுத்த வேண்டும். இரண்டாவதாக இத் திட்டத்தில் சேரும் ஒருவருக்கு 24 மாதங்களுக்குள் இறப்பு ஏற்படுமாயின் காப்புறுதிக் கொடுப்பனவு (Death Benefit) வழங்கப்பட மாட்டாது. பதிலாக அவருடைய கட்டுப் பணத்தில் 1½ மடங்கு மட்டும் மீளளிக்கப்படும். ஒருவர் இத் திட்டத்தில் சேர்ந்து 24 மாதங்களின் பின்னரே அவர் காப்புறுதிக் கொடுப்பனவிற்கு (Death Benefit) தகுதி உடையவராவார். மேலும் இத் திட்டம் இருதய வியாதி, மாற்ற முடியாத நீரிழிவு வியாதி (Insulin பாவிப்பவர்கள்), ஈரல், சிறுநீரக வியாதி உடையவர்கள் போன்றோருக்குக் குறிப்பாக முதியோர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட திட்டமாகும். இத் திட்டத்தில் ஒருவர் ஆகக் கூடியது $25,000 வரை மட்டுமே காப்புறுதி செய்து கொள்ள முடியும். இத் திட்டத்தை கைவிடும் பட்சத்தில் அவருடைய கட்டுப் பணம் எந்த வகையிலும் மீளளிக்கப்பட மாட்டாது. (There is no cash value and it is a term insurance.)

சுகயீனமில்லாதவர்களும், கட்டுப் படுத்தக்கூடிய நீரிழிவு உள்ளவர்களும் (Taking pills) இத் திட்டத்தில் சேர வேண்டிய அவசியமில்லை. நேரடியாகக் காப்புறுதி ஆலோசகர் மூலம் குறைந்த கட்டுப் பணத்துடன் கூடிய காப்புறுதியைப் பெற்றுக் கொள்ள வாய்ப்புண்டு. எனவே நீங்கள் இத் திட்டத்தில் சேருவதற்கு முன்பாக என்னுடன் தொடர்பு கொண்டு கூடிய விளக்கங்களை பெற்றுக் கொண்டு அதன் பின் முடிவு செய்வது உங்களுக்குக் கூடிய நன்மை தரும்.

உதைபந்தாட்டம்...

இது மட்டுமல்லாமல் உதைபந்தாட்ட வீரர்களுக்கு IBM, Bell Canada, Insurance Companies போன்ற பல முன்னணி தொழில் நிறுவனங்கள் வேலைவாய்ப்புகளை வழங்குகின்றன. இங்கு எமது வீரர்களிலும் திறமை குறைந்த வேறு சமூகத்தவர்கள் இவ்வகையான வசதிகளைப் பயன்படுத்தும் போது எமது சமூகத்து வீரர்கள் பயன்படுத்தத் தவறி விடுகின்றார்கள்.

இவ் உதைபந்தாட்ட வீரர்களின் பின்னடைவுக்கு முக்கிய ஒரு காரணம் எமது சமுதாய அமைப்புகளும், போதிய பயிற்சி இன்மையுமேயாகும். இவர்களுக்குப் போதிய பயிற்சி கொடுக்கப்பட்டு கனடிய சமூகத்தில் இவர்கள் நன்கு அறிமுகப்படும் போது எமது வீரர்கள் நிச்சயமாக இனம் காணப்படுவார்கள். இவர்களின் திறமை இனம் காணப்படும் போது இவர்களின் எதிர்காலம் நிச்சயமாகப் பிரகாசமாகும்.

சங்கங்களே, அமைப்புகளே சற்றுச் சிந்தியுங்கள்! எமக்குள் மட்டும் சுற்றுப் போட்டிகளையோ, விழாக்களையோ நடத்தி எவ்வித பிரயோசனமும் இல்லை. எமது வீரர்களின் திறமைகளை கனடிய உலகு அறிந்து கொள்ள வேண்டும். இதற்கு Sports ஒரு முக்கிய ஊடகமாகும். ஆகவே எமது இளைஞர்களை கவரக் கூடிய விளையாட்டுத் துறைமூலம் எம் இளைய சந்ததியின் உயர்விற்கு மாற்று சிந்தனைகள் வைக்கப்படுவதன் மூலமும், கல்வி அறிவு மூலமும், விளையாட்டுத் துறை மூலமும் வருங்காலத்தில் இவ் இளைய சந்ததியினரின் பின்னடைவுகளை முன்னணிகளாக மாற்ற ஒன்றாக பாடுபடுவோமாக!

கனடாவில்...

பட்டியலும், யாரையாவது தவறவிட்டால் பண்பாடாகாது என்ற பயமுமேயாகும்.
இறுதியாக, தெய்வீக மணங்கமழும் இச் சைவமாநாடு ஒரு தெய்வ சந்நிதானத்தில் தொடங்கி வைக்கப்படல் வேண்டும், அங்கேயே இறுதியாக முடித்தும் வைக்கப்படல் வேண்டும் என்ற நியதிக்கு அமைய, இந்த 7ம் உலகச் சைவமாநாடு வட அமெரிக்காவின் மிகப்பெரிய ஆலயங்களுள் ஒன்று எனக் கருதப்படும் றிச்மண்ட் ஹில் பிள்ளையார் ஆலயத்தில் தேவார, வேத பாராயண ஓதுதல்களுடன் முதலாம் நாள் ஆரம்பிக்கப்பட்டு மீண்டும் அதே தேவார வேத பாராயண ஓதுதல்களுடன் நான்காம் நாள் அங்கு முடித்து வைக்கப்பட்டது என்பதும் இங்கு நிச்சயம் குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும். மாநாட்டின் 3 நாள் நிகழ்ச்சிகளும், நாங்கள் அனைவரும் கனடாவில் இருந்தாலும் தமிழீழத்திலோ அன்றித் தமிழகத்திலோ நின்ற உணர்வினை எங்கள் ஒவ்வொருவர் நெஞ்சத்திலும் ஊட்டியது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

இந்தக் கட்டுரை மாநாட்டின் மூன்று நாள் நிகழ்ச்சிகளையும், தொகுத்துக் கூறும் ஒரு சிறு துளியேயன்றி, முழு நிறைவான கட்டுரையல்ல. இது உலகின் பல பாகங்களுக்கும் இன்று எடுத்துச் செல்லப்படும் ஒன்பதாவது ஆண்டு 'தமிழர் தகவல்' பூர்த்தி மலரில் ஏழாவது உலகச் சைவ மாநாட்டின் தகவலையும் சுமந்து செல்லட்டும், புலம் பெயர்ந்த தமிழீழ மக்கள் தம் சமயத்தின் மீதும், மொழியின் மீதும் கொண்டுள்ள அடங்காத ஆர்வத்தினைக் கூறட்டும் என்பதற்காக மாநாடென்னும் மாபெரும் சமுத்திரத்தில் என் உள்ளங்கைக்கு அகப்பட்டதனை எடுத்து இங்கு மெல்லத் தெளித்துள்ளேன். அவ்வளவே! வாழ்க சீரடியாரெல்லாம்!!

கனடிய தமிழர் அமைப்புகளின் செயற்பாடுகளும் அவற்றின் பலாபலன்களும்..

ஆர். என். லோகேந்திரலிங்கம்

இந்தக் கனடிய மண்ணில் ஈழத் தமிழர்களாகிய நாம் கால் பதித்து எமது வாழ்வைத் தொடருகின்ற கடந்த நூற்றாண்டையும் இந்த புதிய நூற்றாண்டையும் எமது ஈழமக்கள் இந்த உலகம் உள்ளவரை மறக்க மாட்டார்கள். கடந்த இருபதாம் நூற்றாண்டில் ஆரம்பித்த எம் மக்களின் புலப்பெயர்வு, இந்தப் புதிய நூற்றாண்டில் பல்வேறு சாதனைகளையும், நோக்கங்களையும், வெற்றிகளையும் தமிழர்களுக்குத் தந்து தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

இச் சந்தர்ப்பத்தில் கனடிய மண்ணில் தங்கள் வாழ்வியல் நடவடிக்கைகளோடு பல ஸ்தாபனங்களையும்,அமைப்புகளையும் நிறுவிய, இயங்கி வருகின்ற சேவையாளர்களையும், பணியாளர்களையும் பற்றி ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

பல்வேறு சிரமங்கள், அபாயங்கள் காரணமாக தாயகத்தை விட்டு நீங்கி இந்த மண்ணில் வாழ்ந்தாலே போதும் என்ற எண்ணத்தோடு வந்தவர்கள் தங்கள் அபிலாஷைகளையும், ஆற்றல்களையும் பயன்படுத்த முன்வந்துள்ளார்கள். தாம் பிறந்த ஊரின் பெயரால், அல்லது தாம் கல்வி கற்ற கல்விக் கூடங்களின் பெயரால், அல்லது தாம் பணியாற்றிய அரச அல்லது வங்கி மற்றும் தனியார் ஸ்தாபனங்களின் பெயரால் ஒன்றிணைந்து தங்கள் நேரங்களையும் பயனுள்ளதாக்கி அதன் மூலம் கனடிய மண்ணில் தம்மைப் பற்றிய விபரங்களையும், மற்றவர்கள் அறியச் செய்கின்ற அதே வேளையில் பல்வேறு கலை மற்றும் நிர்வாகத் திறமைகளை செயற்பாடுகள் மூலம் மற்றவர்களுக்குக் காட்டி வருகின்றனர். ஒரு புதிய மாற்றத்தை எமது தமிழர் அமைப்புகள் காட்டி வருகின்றனர்.

ஒரு பத்திரிகையாளன் என்ற வகையில் இங்கு இயங்கி வருகின்ற பழைய மாணவர் சங்கங்கள், கிராமங்கள், நகரங்கள் சார்ந்த நலன்புரி அமைப்புகள் இலங்கையில் உள்ள திணைக்களங்கள், வங்கிகள் மற்றும் கூட்டுத் தாபனங்கள் சார்ந்த உத்தியோகத்தர், ஊழியர், சங்கங்கள், கலை சார்ந்த அமைப்புகள், விளையாட்டுகள் சார்ந்த அமைப்புகள் முதலானவற்றோடு நெருங்கிய தொடர்பை கடந்த ஆறு ஆண்டுகளுக்கு மேலாக நான் பேணி வந்திருக்கிறேன். இச் சந்தர்ப்பத்தில் மேற்படி தமிழர் அமைப்புகளின் வளர்ச்சி மற்றும் சேவைத் திறன் என்பவற்றை கூர்ந்து அவதானித்தவன் என்ற வகையில் இக் கட்டுரை மூலம் சில தகவல்களைத் தெரிவிக்கலாம் என்பது எனது கருத்தாகும்.

இவ்வாறான அமைப்புகளின் தோற்றத்தை நாம் ஒரு "எழுச்சி" என்று துணிந்து கூறலாம். ஏனென்றால் பல்வேறு மனக் கவலைகள், ஏக்கங்கள் ஆகியன நிறைந்திருந்தும் சிலர் ஏதோ ஒரு அடிப்படையில் ஒன்றுசேர்ந்து காரியங்கள் ஆற்றுவோம் என்று முன்வந்ததை "எழுச்சி" என்று கூறுவது நியாயமானது. இந்த எழுச்சியானது கனடிய தமிழர் மத்தியில் பல சமூக மாற்றங்களையும் ஏற்படுத்தி இருக்கின்றது என்று கூறினால் மிகையாகாது.

நான் திரட்டிய தகவல்களின் அடிப்படையில் ஆராய்ந்தால் கனடாவில் பழைய மாணவர் சங்கம் அமைக்கப்பட்டு மிகவும் வெற்றிகரமாக வருடா வருடம் விழாக்களை நடத்திக் கொண்டு வருவது உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியின் பழைய மாணவர்கள். கனடாவில் இயங்கி வரும் பழைய மாணவர் சங்கங்களுள் இச் சங்கமே மிகப் பழையதுமாகும். பழைய மாணவர் சங்கங்கள் இங்கு ஒன்றிணைந்து பல காரியங்களை ஆற்றுகின்றார்கள். முதலாவது தங்கள் ஒற்றுமையை மற்றைய இன மக்களுக்கு காட்டுகின்றார்கள். அடுத்து தங்களுக்குக் கல்விச் செல்வத்தையூட்டி சமூகத்தில் அந்தஸ்தோடு வாழ உறுதுணை புரிந்த கல்லூரிக்கு நன்றிக்கடன் ஆற்ற அந்த அமைப்பு உதவி நிற்கிறது. தற்போதைய அரசியல் சூழ்நிலையில் அரசாங்க உதவிகள் எதுவும் கிடைக்காமல் நிர்வாகச் சிரமங்கள், இட வசதியின்மை போன்ற பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கும் தங்கள் கல்லூரி அதிபருக்கு இங்கு இயங்கும் சங்கம் கை கொடுத்து நிற்கின்றது.

கனடாவில் இயங்கும் சில பழைய மாணவர் சங்கங்கள் சேகரித்து அனுப்பிய நிதியின் மூலம் சில வடபகுதி கல்லூரிகளில் காணிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. கட்டடங்கள் எழுந்துள்ளன. விளையாட்டு மைதானங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. தற்காலிக ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு அவர்களுக்கான ஊதியத்தை பழைய மாணவர் சங்கங்கள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நான் இதை ஏன் இங்கு குறிப்பிடுகிறேன் என்றால் இங்குள்ள பழைய மாணவர் சங்கங்களினால் இலங்கை அரசாங்கம் செய்ய வேண்டிய எத்தனையோ பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. பழைய மாணவர்கள் கனடாவில் தாமுண்டு தமது வேலையுண்டு என்று இருந்து விட்டால் இவ்வாறான சேவைகளை எமது கல்லூரிகள் பெற்றிருக்குமா என்ன!

பழைய மாணவர் சங்கங்கள் மேலும் பல நற்காரியங்களில் ஈடுபடுகின்றன. இவை கலை சார்ந்த நற்பணிகளுக்கும் ஆதரவுக் கரம் நீட்டுகின்றன. அந்தந்த சங்கங்களைச் சார்ந்த உறுப்பினர்களின் திறமைக்கேற்ப பல நல்ல கலை வடிவங்கள் மேடையேறுகின்றன. சில வேளைகளில் சங்க உறுப்பினர்களின் பிள்ளைகளின் கலைப்படைப்புகள் மேடையேற்றப்பட்டு அவர்களது திறமைகள் வெளிப்படுகின்றன.

இன்னுமொன்று, இங்கு இயங்கி வரும் பழைய மாணவர் சங்கங்களில் பெரும்பாலானவைகளில் வருடா வருடம் பேச்சுப் போட்டி போன்ற சிறுவர் சிறுமியர்களுக்கான போட்டிகள் நடத்தப்பட்டு திறன் ஊக்குவிக்கப்படுகின்றது. அவர்கள் ஊக்கம் பெற்று தமிழ் மொழியில் பற்று வைக்கத் தொடங்குகின்றனர்.

நான் மேற்குறிப்பிட்ட விடயங்களிலிருந்து இங்குள்ள பழைய மாணவர் சங்கங்களினால் எவ்வளவு விடயங்களைச் சாதிக்க முடியும் என்று உணர்ந்து கொள்ளலாம்.

இதானல் தானே என்னவோ! இங்கு பல பழைய மாணவர் சங்கங்கள் கடந்த இரண்டு, மூன்று வருடங்களில் தோற்றம் பெற்றிருக்கின்றன. இவை ஒவ்வொன்றும் வேறுபட்ட ஆக்க முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன. பார்க்கின்ற போது, இதனால் கனடிய தமிழர்கள் மத்தியில் பல நல்ல விடயங்களைச் சாதிக்க முடியும் என நம்பிக்கையோடு எதிர்பார்க்க முடிகின்றது.

அடுத்து நகரங்கள், கிராமங்கள் ரீதியாகவும் கனடாவில் தமிழ் மக்கள் ஒன்று சேர்ந்து அமைப்புகளை நிறுவி பணியாற்றி வருகின்றார்கள். ஆரம்பத்தில் பரந்ததோர் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்படும் சங்கங்கள் காலப்போக்கில் சிறிய பிரிவுகளை அடிப்படையாக வைத்து இரண்டு பிரிவுகளாக செயலாற்றத் தொடங்குகின்றன. இவ்வாறான மாற்றங்களை பிரிவுகள் என்று நோக்காமல் தங்கள் பணிகளை இலகுவாக்க இவர்கள் செய்த சில மாற்றங்கள் என்று முடிவு செய்கின்றோம்.

உதாரணமாக, கொக்குவில் ஒன்றியம் என்று ஆரம்பிக்கப்படும் அமைப்பு காலப்போக்கில் அந்த உறுப்பினர்களின் விருப்பத்திற்கேற்ப கொக்குவில் மேற்கு ஒன்றியம், கொக்குவில் கிழக்கு நலன்புரிச் சங்கம் என்ற பெயர்களில் இயங்கத் தொடங்குகின்றன. இதன் மூலம் பல விடயங்களில் இலகுவாகச் செயற்படலாம் என்பது அவர்களின் நோக்கமாக இருப்பதை நாம் காணக்கூடியதாக உள்ளது.

(104ம் பக்கம் பார்க்க)

குமார் பொன்னம்பலம் மறைந்து விட்டார். அவர் விடுதலைப் புலிகளுக்காகக் குரல் கொடுத்தவர் என்பதாகப் பலர் எண்ணுகிறார்கள். உண்மை அது இல்லை. அல்லலுறும் தமிழ் இனத்திற்காகக் குரல் கொடுத்தார். கொழும்பிலே சட்டத்தின் இறுக்கத்தில் அல்லற்பட்ட பல தமிழர்களுக்குக் கைகொடுக்க முதலிலே அவர் முற்பட்டார். கைது செய்யப்பட்டவர்களும், காணாமல் போனவர்களும் அவர்களைத் தேடிக் களைத்தவர்களும் குமாரிடம் வந்த போது அதைத் தன் சீரிய பணியாகக் கொண்டிருந்தார். சிறீலங்கா இராணுவத்தின் மனித உரிமை மீறல்களால் கற்பழிக்கப்பட்டவர்களுக்கும் கொலை செய்யப்பட்டவர்களுக்குமாக நீதிமன்றத்திலே நெருப்பாக நின்றார். இவைகளெல்லாம் இராணுவ மதுபோதைகளால் தமிழினம் கற்பழிக்கப்படுவதையும், கொலை செய்யப்படுவதையும் தமிழினப் புத்திமானாக நின்று சந்திக்க வெளிக்கிட்டார். அதுவே சிங்களக் கொடுங்கோன்மை அரசையும் நீதிக்காக - நிலத்திற்காகப் போராடுகின்ற புலிகளின் நிலைப்பாடும் குமாரை புதிய யதார்த்த உலகிற்குக் கொண்டு வந்தது.

சமாதானம் என்பது போலியாகவும், விமானங்களாலே போடும் குண்டுகளால் அப்பாவித் தமிழினம் கொலையுறுவதையும் அவர் அப்பட்டமாகவே வெளிக் கொணர்ந்தார். அதைவிட, சந்திரிகா தமிழினத்திற்கு ஒரு முகமும் சிங்கள இனவாதியாக அதே சிங்கள மக்களிடம் இன்னொரு முகத்தையும் கொண்டிருப்பதை தகவல் ஊடகங்களுக்குக் கொண்டு வந்தவர் குமார் பொன்னம்பலத்தைத் தவிர இன்னொருவர் இருக்க முடியாது. அநுராதபுரத்திலே சந்திரிகாவின் பேச்சு - சாமதவள. தென்னாபிரிக்காவிலே தொலைக்காட்சிப் பேட்டி - தமிழன் வந்தேறு குடி - சமீபத்திலே சந்திரிகாவின் தேர்தல் வெற்றிப் பேச்சு - புலிகள் ஆதரவாளர்கள் நாட்கள் எண்ணப்படுகின்றன - சந்திரிகாவின் ரூபவாகினிப் பேச்சு - என் எதிரிகள் யார் என்று எனக்குத் தெரியும். இப்படியாக சந்திரிகா பண்டாரநாயக்கா குடும்பத்துப் பண்பாடுகளை வெளியே தள்ளிப் பார்த்த போதும் குமார் பின்வருமாறு தான் தன் கடிதத்தை எழுதுகிறார். உங்கள் பயமுறுத்தல்களுக்கு அஞ்சாத ஒரு ஈழவனாகத் தான் நான் எனது கடிதத்தை எழுதுகிறேன் என்ற முகவுரையோடு கடைசியாக சந்திரிகாவுக்கு குமார் எழுதிய கடிதம் இருந்தது.

ஆக மொத்தம் ஒரு சனாதிபதியாக இருக்கும் சந்திரிகாவின் பேச்சுக்களில் எல்லாம் இனம் காணப்பட்ட ஆத்திர மேலீடுகளை கொழும்புப் பத்திரிகைகளும் கொண்டு வந்தன. குமாரும் பகிரங்கக் கடிதமாகக் கொண்டு வந்தார். அது மட்டுமல்ல இன்றைய நாளிலும் கூட சண்டேலீடர் ஆசிரியர், ராவய ஆசிரியர், எதிர்கட்சித் தலைவர் ரணில், கொழும்புத் தனவந்தப் பெண்மணி ரேணுகா நடேசன்

இங்கு எமது பணி எது?

இவர்களையெல்லாம் சந்திரிகாவின் அரசுக்கு எதிரான இராணுவப் புரட்சியிலே திட்டம் தீட்டியதாக அரச சார்பான செய்தி ஊடகங்கள் வெளியிடுகின்றன. இப்படியான செய்திகளில் சுதந்திர தகவல் தொடர்பு இயக்கம் குரல் கொடுத்திருக்கிறது. சந்திரிகாவின் வெறுப்புணர்வும் தனக்குப் போட்டியாக - பிரச்சாரக் கருவிகளாக - மக்கள் செல்வாக்குள்ளவர்களாக நிற்கும் அனைவரையும் துரத்தும் அல்லது முடிக்கும் வெறித்தனப் பேச்சுகளை மையமாக வைத்து - இராணுவப் புரட்சியிலே நாட்டின் அரசைக் கவிழ்த்து ஆட்சியைக் கைப்பற்ற முனைந்திருக்கிறார்கள் என்ற அவரது முனைகளை கூர்மைப்படுத்தும் அரச ஊடக இயந்திரங்களை இந்தச் சுதந்திர தகவல் இயக்கம் வெகு கடுமையாக கண்டித்ததைக் கடந்த நாட்களில் பார்த்தோம்.

இனிமேல் தான் எனது உள்ளார்ந்த நோக்கத்திற்கு வருகின்றேன். குமாரின் மறைவு உலகத் தமிழரிடையே பெரும் தாக்கத்தை உண்டு பண்ணியதை இங்குள்ள தமிழர் ஊடகங்களில் மட்டுமே பார்த்தோம்.

'தீவகம்'
வே. இராஜலிங்கம்

தமிழ்க் கனடியன் மின்கணனித் தொடர் வலையத்தில் குமாரின் அஞ்சலிக் கூடமாக திறந்த கருத்துப் பக்கத்தில் உலகம் பூராவும் உள்ள தமிழர்கள் எழுதினார்கள். வன்னித் தமிழர்கள் எழுதினார்கள். யாழ்ப்பாணத்தில் இருந்து எழுதினார்கள். கோலாலம்பூரிலிருந்து எழுதினார்கள். அமெரிக்கா, ஐரோப்பா ஏன் சிங்கள சிறீலங்காவில் இருந்து கூட குமாரின் கொலையாளி சந்திரிகாவின் பேச்சுக்குப் பின்னாலேயே உள்ளான் என்றவாறும் எழுதினார்கள். புலிகளுக்கு எதிரான நிலைப்பாடு உள்ளவர்களும் எழுதினார்கள். இந்த வலையாக்கக் கருத்துக் கணிப்பீட்டை சென்னை இந்து எப்படி எழுதியது தெரியுமா? உலகம் பூராவும் உள்ள புலிகள் இந்த கணனிப் பதிவேட்டகத்தில் பதிந்தார்கள் என எழுதுகிறது. தனக்குப் பிடிக்காத எதையும் அதை புலிகள் என முத்திரை குத்தும் தமிழின விரோதிகள் - தமிழ்ச் சமூக விரோதிகள் தகவல் ஊடகங்கள் சிலவற்றின் தன்மைகளாகக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். அதையே இந்தக் கனடாவில் கூற விரும்புகின்றேன். அமெரிக்காவில் மழை பெய்தால் கனடாவில் தடுமன் பிடிக்கும் என ஒரு பத்திரிகையாளர் ஒருமுறை சொன்னார். ஆம் அந்த அமெரிக்காவில் புலிகளை பயங்கரவாதிகள் என அறிவித்த பின்னர் அதையே கனடியப் பெரும்பான்மைத் தகவல் தொடர்பு ஸ்தாபனங்களும் கைக் கொள்வதைப் பார்க்க முடிகிறது. பிளவர் வீதியில் நடந்த குண்டுவெடிப்பை கொடுத்த ரொறன்ரோ பெரும் பத்திரிகைகள் குமாரின் மறைவைக் கொடுக்க மறந்திருந்தன. அல்லது மறுத்திருந்தன.

தனியே தமிழீழச் சங்கமும், தமிழர் சம்மேளனங்களும், உலகத் தமிழரும் நடத்துகின்ற உண்மையான அஞ்சலிகளை புலிகளின் போர்வைகளில் போர்த்துவிடும் தன்மை பெரும்பாக கனடிய ஆங்கில - பிரெஞ் பத்திரிகை ஊடகங்களுக்குள் இருக்கிறது.

நான் கேட்பது என்னவென்றால் பிறீ மீடியா மூவ்மென்ற் என்று சொல்லப்படுகின்ற சுதந்திர தகவல் இயக்கம் போல் ஒரு அமைப்பு கனடாவில் உருவாக வேண்டும். அந்த அமைப்பில் வர்த்தகர்கள், வைத்தியர்கள், சட்ட வல்லுனர்கள், தமிழ்த் தகவல் தொடர்புப் பத்திரிகையாளர்கள், சங்கங்களின் சம்மேளனங்கள், சங்கங்கள், பழைய மாணவர் சங்கங்கள், கோவில்களைச் சார்ந்தவர்கள் என ஒரு அமைப்பு உண்மையான தமிழர் நோக்கமாகக் கொண்டு உதயமாக வேண்டும்.

உலகம் சமாதானம் வேண்டும் எனக் கேட்கிறது. சிங்கள மக்கள் சமாதானம் எனப் பிரகடனம் செய்திருக்கிறார்கள். நாற்பத்து மூன்று வீத வாக்கு எதிர்க் கட்சித் தலைவருக்குக் கிடைத்ததென்றால் உண்மையாக அவைகள் சமாதானத்தின் வாக்குகள். அதையே ரணில் கடந்த தேர்தலில் பிரகடனப்படுத்தியிருந்தார். விடுதலைப் புலிகளுடன் பேசுங்கள் என்ற குரல்கள் உலகம் பூராவுமே உரசிப் பாய்கின்றன. அரசின் செயற்பாடுகளை விமர்சித்து புலியே சரி - பேசு என்ற குமாரை மட்டும் சரித்துக் கட்டிவிட்டார்கள்.

இங்குள்ள தகவல் சாதனங்களுடன் நாங்கள் பேச வேண்டும். நமது அமைப்புகள் பேச வேண்டும். மேற்குறிப்பிட்ட சுதந்திரத் தமிழ் அமைப்பாக ஒன்றை நாம் உருவாக்க வேண்டும். ஒரு பத்திரிகையாளனாக - தாயகப் பண்பில் இம்மியும் மாறுபடாதவனாக - ஆயிரமாயிரம் குமாராகப் பல அமல குமார்கள் உருவாக வேண்டும். அதே நேரம் நாம் நமது விற்பன்னர்களைக் கொண்ட - தமிழர் சங்கங்கள், சம்மேளனங்கள் உள்ளிட்ட சுதந்திரத் தமிழர் ஊடக இயக்கம் ஒன்றை உருவாக்க வேண்டும் எனக் கேட்டு உலகத்தின் தகவல் சஞ்சிகையாக விளங்கும் ஒரே ஒரு தரமான சஞ்சிகையான 'தமிழர் தகவல்' தொடர்ந்தும் மக்கள் தேவைகள் கருதி குடிவரவு - குடியகல்வு சம்பந்தமான அறிவித்தல் அறிக்கைகளை மேலும் மேலும் கொடுத்து தொடர என் நல்வாழ்த்துகளை புதிய புத்தாண்டில் - அதன் புதிய ஆண்டுப் பிறந்த நாளில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி.

அனுபவம் புதுமை

விஜய் ஆனந்த்

ஆசை கொண்டதால்
அனுபவம் உண்டானது.
அந்த அனுபவம் இனிப்பானது
என்றால் சுகமாகும்.
கசப்பானது என்றால் சுமையாகும்.

"ஆசைப்படு மனிதா.... ஆசைப்படு...." - இது கவிஞர் வைரமுத்து அடிக்கடி கூறும் எளிமையான வார்த்தைகள்.

இந்த ஆசையில் பெறும் அனுபவம் சுகமானதோ சுமையானதோ எதுவாக இருந்தாலும் அது நல்ல படிபினையைத் தருகின்றதென்றே கூறலாம்.

சுமையாக வரும்போதுதான் மனிதன் ஆராய்வதற்கு முற்படுகின்றான். அவனுள் எழும் கேள்விகளுக்கு விடைகாண முயல்கிறான்.

ஒரு ஆசையாக இருக்கலாம்; அல்லது ஆர்வமாக இருக்கலாம் அதனால் கிடைத்த அனுபவத்தின் வெளிப்பாடே இந்தக் கட்டுரை.

'சங்கவி' முதல் 'முகவரி தருவாயா' வரை...

புலம்பெயர்ந்த தமிழர்களின் - குறிப்பாக கனடிய தமிழர்களின் இசை மெட்டுக்களால் உருவான இசைத்தட்டுகளில் (CD) 'சங்கவி' முதல் 'முகவரி தருவாயா' வரை வெளியீட்டாளர்களுக்கோ பங்கெடுத்துக் கொண்டவர்களுக்கோ வியாபார ரீதியாக பெரிய வெற்றி கிடைக்கவில்லையென்றே கூறவேண்டும்.

வியாபார ரீதியாக வெற்றி பெறவில்லையென்பதால் அந்த இசைத்தட்டுக்கள் தரம் குன்றியவைகள் அல்ல. ஒவ்வொன்றும் ஒவ்வொரு சிறப்பைக் கொண்டவை. கவி வரிகளாக இருக்கலாம்; இசை மெட்டுக்களாக இருக்கலாம்; பாடகர்களின் திறமையாக இருக்கலாம் அல்லது இவைகள் ஒன்றிணைந்த சிறப்பினைக் கூட சில இசைத்தட்டுக்கள் பெறலாம்.

"அப்படியென்றால் ஏன் புலம்பெயர்ந்த தமிழர்களின் இந்த இசைத்தட்டுக்கள் வியாபார ரீதியில் வெற்றிபெறவில்லை?" என்று நீங்கள் கேட்பது புரிகிறது. இதற்குரிய முதற் காரணத்தைத் தேடுவோமானால்.... பதில்...
"நாங்கள்தான்"

உண்மையைக் கூற கசப்பாக இருந்தாலும் நாங்கள் தான் இந்த இசைத்தட்டுக்கள் வியாபார ரீதியாக தோல்வியடைவதற்குக் காரணமானவர்கள். (குறிப்பு: தலைக்கு அளவானால் போட்டுக் கொள்க)

எம்மவர்கள் மத்தியில் உள்ளூர் தயாரிப்புகளுக்கு மவுசு குறைவாக இருப்பதுவும், அவைகளை அலட்சியப்படுத்துவதையும் நேரிலேயே கண்டிருக்கிறோம். இதேவேளை, உள்ளூர் தயாரிப்புக்களை விற்பனை செய்யும் வியாபார நிலையங்களும் இவைக்கு முக்கியத்துவம் வழங்குவதில்லை (ஒருசில வியாபார நிலையங்கள் விதிவிலக்கு). இந்த நிலைமை மாறும்போது புலம்பெயர்ந்த தமிழர்களின் வெளியீடுகள் வியாபார ரீதியில் வெற்றிபெறும்.

அவ்வாறு வெற்றி பெறும்போதுதான் வெளியீட்டாளர்களும் புதிய தயாரிப்புகளைத் தர முயல்வார்கள். அது மட்டுமல்லாமல் எம்மத்தியில் இலைமறை காய்களாக வாழ்ந்துவரும் கலைஞர்களும் வெளிக்கொணரப்படுவார்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் எம்மவர்களின் குற்றச்சாட்டுகளையும் கொஞ்சம் கவனிப்போம்.

புலம்பெயர்ந்த தமிழர்களின் இசை மெட்டுகளில் உருவான இந்த இசைத்தட்டுகள் தரம் குறைந்தவை;

மக்களின் ரசனையைக் கொண்டவைகள் அல்ல என்பது சிலரின் குற்றச்சாட்டு.

இந்தக் குற்றச்சாட்டை முழுமையாக ஏற்றுக்கொள்ளமுடியாது. அதிக செலவு காரணமாக சில தவறுகள் இருந்தாலும் அதனைத் திருத்தியமைக்க முடியாமல் போய்விடுவது என்பது உண்மைதான். ஆனால், இந்த இசைத்தட்டுக்களில் எதுவும் ரசனையில் குறைந்ததாகவோ, தரம் குறைந்ததாகவோ மதிப்பிட முடியாது.

இந்திய சினிமாப் பாடல்களோடு இந்தத் தயாரிப்புகளை ஒப்பிட்டுப் பார்ப்பதனாலேயே இவ்வாறான குற்றச்சாட்டை எம்மவரின் தயாரிப்புக்களின் மீது சிந்திக்காமல் சுமத்துகிறார்கள் என்றே கூறலாம்.

எம்மவர்கள் ஒரு விடயத்தை முதலில் புரிந்து கொள்ளவேண்டும். எமது கலைஞர்கள் முழுநேர கலைஞர்கள் இல்லை என்பதையும், அரும்பாக வளரும் இவர்களை நல் உரமாக இருந்து வளர்க்க வேண்டியவர்கள் நாங்கள்தான் என்பதையும் உணர்ந்து கொள்ளவேண்டும். அவர்களின் திறமைகளைப் பாராட்டி ஊக்கம் கொடுத்து உயர்த்த வேண்டும்.

இதைச் செயற்படுத்துவோமேயானால் கலைஞர்கள் மட்டுமல்ல எழுத்தாளர்களும் வளர்வார்கள், எமது தயாரிப்புகள் அனைத்தும் உயர்ச்சி பெறும்.

இதேவேளையில் தயாரிப்பாளர்கள், வெளியீட்டாளர்கள் அனைவரும் கூட்டு முயற்சியில் ஈடுபடவேண்டும்.

ஒரு இசைத்தட்டைத் தயாரிப்பதற்கு ஒலிப்பதிவுக் கூடத்திற்கே அதிக பணம் விரயமாகிறது. ஒரு வெளியீட்டாளர் கலைக்கூடத்திற்கு மட்டும் (Recording Studio) பதினையாயிரம் டொலர்களுக்குமேல் செலவு செய்திருக்கிறார். இதனால் பெரும் நஷ்டத்தை அடைந்திருக்கிறார்.

இந்தச் சூழ்நிலையில் அவரால் இன்னொரு இசைத்தட்டை வெளியிடுவதை எண்ணிப்பார்க்க முடியாது.

இதற்கு சிறந்த வழியொன்றை கூட்டு முயற்சியாக ஏற்படுத்திக் கொண்டால் தயாரிப்புக்களில் ஏற்படும் செலவைக் குறைக்க முடியும்.

என்ன வழி?

ஒற்றுமை.
"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு"

அனைத்துத் தயாரிப்பாளர்களும், வெளியீட்டாளர்களும் ஒன்றிணைந்து ஒலிப்பதிவுக் கூடத்தை அமைப்பது அவசியம். இதனால் அதிக பணத்தை ஒலிப்பதிவுக் கூடங்களுக்கு செலவு செய்வதைக் குறைக்க முடியும்.

இதேவேளை, அதிக வசதியையும் ஏற்படுத்திக் கொள்ளமுடியும்.

அத்துடன் சரியான சந்தைப்படுத்தும் நிறுவனம் ஒன்றை நிறுவி எமது தயாரிப்புகளையும் வெளியீடுகளையும் சரியான முறையில் விற்பனை செய்து வெற்றிபெற முடியும்.

அதுமட்டுமல்லாமல், தொழில்நுட்பத் துறையில் எம்மவர்கள் வளர்ச்சியடைய முடியும். இந்த முயற்சிக்கு சில வர்த்தக நிறுவனங்கள்கூட உதவி வழங்க முன்வரலாம்.

இந்த முயற்சியில் இப்பொழுதே சில தயாரிப்பு நிறுவனங்கள் இணைந்து செயற்பட முனைந்துள்ளன. இந்த நோக்கங்கள் சரியானவையானால் ஒன்றிணையுங்கள்!
உயர்ச்சி பெறுங்கள்!
வெற்றியடையுங்கள்!
அனுபவத்தைப் புதுமையாக்குங்கள்!

சகாப்தத்தை...

முதலாவதாக GM இனால் வெளிவரும் எனவும் கூறப்படுகிறது.

புதிய சகாப்தத்தின் இரண்டாவது முக்கிய அறிமுகம் கணனி (Computer) Internet, E-mail இனி முக்கியமாக அமைகிறது. தொடர்புகள், சொந்தத் தேவைகள் எல்லாம் இதன் மூலம் செய்யத் தொடங்கியுள்ளோம். தற்போது Cell phone ஒரு முக்கிய கருவியாக பலரும் பாவிக்கின்றனர். ஆயின் இதனால் சில விபத்துகள் நிகழலாம் என அபிப்பிராயப்படுகின்றனர். இதனை குறைத்து கணனி மூலம் செயற்படுத்த முனைகின்றனர். இக் கம்பியூட்டரின் திரை முன் கண்ணாடியே தான். Key board முன் Dash board ஆகும். Grand Prix போன்ற சில வாகனங்களில் ஓட்டும் வாகனத்தின் வேகம் தற்போது கண்ணாடியில் பார்க்க முடிகிறது. இதே போன்ற ஒரு திரை உருவாக்கப்பட்டுள்ளது. இப்படியான முறைகள் ஏற்கனவே சில வாகனங்களில் உள்ளன. நாளடைவில் இவை பரவலாகும்.

முக்கியமான இன்னுமொரு மின்கருவி வரலாம் என ஆய்வுகள் நடைபெறுகிறது. விபத்துக்களைக் குறைப்பதற்காக, முன் பின் பக்கங்களில் செல்லும் வாகனங்கள் ஒன்றோடு ஒன்று உராயாமல், வீதிகளில் ஒரு கருவியைப் பொருத்த முனைகிறார்கள். இதனால் அண்மையில் செல்லும் வாகனம் உராய்வதற்கு முன்னதாக ஒரு சமிக்ஞையை சாரதிக்கு உணர்த்தும் போது அவர் பாதுகாப்பு நடவடிக்கையை மேற்கொள்ள முடியும்.

காலப் போக்கில் நான் மேற்கூறிய விடயங்கள் அமல்படுத்தப் படலாம். முக்கிய பிரச்சனைகள் ஆய்வுக்குத் தேவையான நிதி; செயற்படுத்தப்படும் போது எழும் சட்டப் பிரச்சனைகள்; பரவலாக்கம், தொழில்நுட்பம் ஆகியவையே. அரசின் விழிப்புணர்ச்சி, ஸ்தாபனங்களின் பணவிரயம் ஆகியவையும் கணிப்பில் மேற்கொள்ள வேண்டும்.

இதுவரை காலம் பெற்றோல் மலிவாக மத்திய கிழக்கு நாடுகளில் பெறப்பட்டது. தற்போதைய அரசியல் சூழ்நிலைகள் விலையைக் கூட்டுகிறது. எனவே உள்நாட்டு பெற்றோல் கூடிய விலையில் வெளிவருகிறது. உலக சந்தை இதனையும் கணிப்பில் கொண்டு அதற்கு மாற்று முறைகளைக் கையாள முனைகிறது.

கனடிய தமிழர்கள்...

இக் கட்டுரையின் ஆரம்பத்தில் இங்கு இயங்கிவரும் பல தமிழர் அமைப்புகள் சமூக மாற்றங்களையும் ஏற்படுத்தியிருக்கின்றன என்பதை குறிப்பிட்டிருந்தேன் அல்லவா. இதற்கு உதாரணமாக நான் இரண்டு அமைப்புகளை குறிப்பிடுவேன். முதலாவது முது தமிழர் மன்றம், அடுத்தது கனடா முன்னாள் இலங்கை தபால் திணைக்கள உத்தியோகத்தர் சங்கம்.

முதலில் முது தமிழர் மன்றத்தின் ஸ்தாபகரும், அதன் செயற்பாடுகளும் இங்கு தமிழ் பேசும் முதியோர் பெருமக்களின் வாழ்வில் ஒரு அந்தஸ்தையும், அவர்கள் மத்தியில் ஒரு நம்பிக்கையையும் ஏற்படுத் தியிருக்கின்றது என்று துணிந்து கூறலாம். இங்கு முது தமிழர் என்ற பதமே அவர்களுக்கு ஒரு மரியாதையை தோற்றுவித்திருக்கிறது.

தமிழ் சினிமாக்களில் நகைச்சுவையாக கருதப்படும் "பழசு", "Ninety", "eighty" என்ற சொற்பதங்கள் எம்மத்தியில் கடந்த காலங்களில் முதியவர்களான பெரியோர்களை கேவலப்படுத்தி வந்த காலம் மாறி, இப்போது கனடாவில் அவர்களுக்கு ஒரு கௌரவத்தைத் தோற்றுவித்திருக்கின்றது. இதற்குக் காரணம் இந்த கனடிய சமூகத்தில் முதிய மக்களை மதிக்கின்ற சில சட்டங்கள் மற்றும் ஒழுங்குகள் என்பனவே என்பது உண்மை.

முது தமிழ் மன்றத்தின் செயற்பாடுகள் இங்கு வாழும் தமிழ் பேசும் முதியவர்களின் வாழ்வில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றன. சுற்றுலாக்கள், கல்வி கருத்தரங்குகள், ஆங்கில பாட போதனைகள், கம்பியூட்டர் வகுப்புகள், பொழுது போக்கும் உள்ளக விளையாட்டுகள் ஆகியன இந்த அமைப்பினால் சிறந்த முறையில் நடத்தப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக முது தமிழர் மன்றத்தின் அங்கத்தவர் தொகையும் பெருகி வருவதாக அறிகின்றோம்.

அடுத்து நாம் குறிப்பிடுவது இலங்கை தபால் திணைக்கள முன்னாள் உத்தியோகத்தர் சங்கம். இந்தச் சங்கமானது வேறு எவையும் ஆற்றிவிடாத பணியொன்றில் ஈடுபட்டு வருவதை நாம் கண்டு பூரிப்படைகின்றோம். இச் சங்கம் தபால்கள் தரம் பிரிக்கும் பணியகம் ஒன்றை நிறுவி பல கனடிய தனியார் நிறுவனங்களில் தபால் தரம் பிரிக்கும் வேலைகளைச் செய்து வருகின்றது.

இதன் மூலம் சங்க உறுப்பினர்களின் உறவினர்கள், மற்றும் நண்பர்களின் வேலையில்லாப் பிரச்சனை ஓரளவு நீங்குகின்றது. இச் சங்கத்தின் முன்மாதிரியை இங்குள்ள ஏனைய தமிழர் அமைப்புகளும் பின்பற்ற வேண்டும் என்பதே அனைவரது அவாவாகும்.

மேலும் கலை, இலக்கியம் சார்ந்த அமைப்புகளும் இங்கு பல நல்ல முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன. இசைக் கலாமன்றம், கனடா தமிழ் எழுத்தாளர் இணையம்ஆகியன இவற்றுள் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவையாகும். இசைக் கலாமன்றம், இசைக் கலைஞர்களின் கூட்டமைப்பாக ஆரம்பத்தில் இயங்கி வந்தாலும் தற்போது அது இசைப் பரீட்சைகளை நடத்தி வருவது கனடிய தமிழ்ச் சமூகத்திற்கு ஒரு தலை சார்ந்த பலம் என்றே கூறலாம்.

இதைப் போன்று உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கம், கனடாவிலும் மகாநாட்டை நடத்தி அதில் வெற்றி கண்டு, காலப்போக்கில் கனடாக் கிளையின் சிறந்த பணியை உலக ரீதியாக இயங்கிவரும் கிளைகள் கவனத்திற் கொண்டு கனடாக் கிளையின் தலைவரையே முழு உலகத்திற்கும் பொதுவாக இயங்கும் உலகத் தமிழர் பண்பாட்டு இயக்க தலைமை அமைப்பின் தலைவராகத் தெரிவு செய்துள்ளது. இவற்றையெல்லாம் நாம் நன்கு கவனிக்கும் போது எமது கனடிய தமிழர் அமைப்புகள் தங்கள் நோக்கங்களில் வெற்றி பெற்றுள்ளன என்றே கூறவேண்டும்.

நான் இக் கட்டுரையில் சில அமைப்புகளின் பெயர்களைக் குறிப்பிட்டுக் கூறியதன் காரணம் அவைகளின் செயற்பாடுகளை மக்கள் நன்கு அறிந்துள்ளார்கள் என்பதற்காகவே.....எனினும் இங்கு இயங்கி வரும் அனைத்து அமைப்புகளையும் பற்றி விபரமாக எழுதுவது இக் கட்டுரையின் அளவை நீட்டிக் கொண்டே போகும். தொடர்ந்து வரும் எனது இவ்வாறான கட்டுரைகளில் மேலும் பல தமிழர் அமைப்புகளின் பெயர்களையும் அவைகளின் செயற்பாடுகளையும் குறிப்பிட்டு எழுதுவேன் என்று கூறி இக் கட்டுரையை நிறைவு செய்கின்றேன்.

ரொறன்ரோ பொலிஸ் பிரிவுகளின் எல்லைகள் மாற்றப்படுகின்றன

ரொறன்ரோ பொலிஸ் நிலையங்களது பிரிவுகளின் எல்லைகளை மீளமைப்பது தொடர்பான சகல நடவடிக்கைகளும் முடிவு பெற்று அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தற்போதைய பொலிஸ் நிலையங்களின் பிரிவுகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாகப் பொதுமக்களின் கருத்துகள் இந்த மாதம் 24ம் திகதியன்று கேட்கப்படவுள்ளது. அக்கறையுள்ள பொதுமக்களும் தனியாட்களும் ரொறன்ரோ பொலிஸ் சேவைச் சபையுடன் தொடர்பு கொண்டு இது பற்றிய தகவல்களைப் பெறமுடியும். பொலிஸ் சேவைச் சபையின் Web பக்கத்தில், www.torontopolice.on.ca வில் தொடர்பு கொண்டு இந்த அறிக்கையின் பிரதியைப் பெறலாம். இந்த மாதம் 24ம் திகதியன்று நேரடியாக கமிட்டி முன்னால் ஆஜராகிக் கருத்து வழங்க விரும்புபவர்கள் 808-8094 இலக்கத்தில் Ms. Deidre Williams அவர்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

ஒரு வரி தருவீர்களா?

அமல்குமார் சின்னத்தம்பி

சிலேடையில் சிங்காரிக்கும் சிறப்பு வரியல்ல இது. ஒருமித்த உள்ளத்தில் ஓங்காரமாய் நிற்கும் ஒரு விதை தான் இது. ஆயினும் இதையொரு பெரிய ஆலமரமாக்கிட என் இருகரம் ஏந்துகின்றேன். வாழ்க்கைப் பயணத்தில் வசந்தம் வீசிய இனிமையான நாட்களை எங்களில் எத்தனை பேர் சந்தித்திருக்கின்றோம்?

ஒரு மனிதனது நிறைவான வாழ்வு அவன் தான் பிறந்து, தவழ்ந்து, நடை பயின்று, வளர்ந்து ஆளான மண்ணில் தன் தாய் மண்ணின் காற்றைச் சுவாசித்து அந்த மண்ணினிலே இறுதி நாள் வரை வாழ்கின்றானோ அதுதான் மகிழ்வான, நிறைவான, முழுமையான வாழ்வு எனலாம். ஆனால் காலம் செய்த கோலத்தினால் கடல் கடந்து புலம்பெயர்ந்து வாழும் எம் வாழ்க்கைக்கும் ஒரு அர்த்தம் உண்டு என்று கூறுவதற்கு நாம் செய்ய வேண்டிய கட்டாய கடமைகள் இருக்கத்தான் செய்கின்றன. அதில் இலகுவாக செய்யக்கூடியது என்னவெனில் இடைமறித்து "இது எதற்காக?" என்ற வினா உலா வரும் என்பதை நான் அறிவேன். அதனால் தான் புலம்பெயர்ந்த நாம் எம் தாய்மண்ணிற்கு மீண்டும் புலம்பெயர வேண்டும். இது முடிந்த காரியமா என்றால்... முடியாதது ஒன்றுமில்லை என்று தான் சொல்லுவேன்.

மீண்டும் ஒருதரம் மேலிருந்து வருகின்றேன். இலகுவாகச் செய்யக்கூடிய கடமையைப் பற்றி நோக்கினால்.... புலம்பெயர்ந்த எம் மக்களிடையே எழுச்சியை உண்டாக்குவது! எப்படி உண்டாக்குவது? இதற்கு ஒரு கரம் தட்டிச் சத்தம் வராது. எல்லோருடைய கரங்களும் தட்ட வேண்டும். அப்போது அடைபட்ட இரும்புக் கதவுகள் கூட திறக்கப்படும். இரும்புக் கதவுகள் கூட திறக்கும் என்று உறுதியாகக் கூறிடும் என்னால் எம் மக்களின் அடைபட்ட இதயக் கதவுகள் மிக மிக இலகுவாகத் திறந்து கொள்ளும் என்பதைத் திட்டவட்டமாகக் கூறுவது தப்பில்லையென்று தாழ்மையுடன் தெரிவிக்கின்றேன்.

உதாரணமாக நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் கனடிய மண்ணில் இலட்சத்துக்கும் அதிகமான ஈழத் தமிழ் மக்கள் இருக்கின்றார்கள். எமது அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்ய எல்லாத் துறைகளிலும் இன்று எம்மவர்கள் இருக்கின்றார்கள் என்றால் நாம் திறமை மிக்க, பெருமை மிக்க, சிறப்பு மிக்க, ஆற்றல் மிக்கவர்கள் என்பதை மேற்குறிப்பிட்டவை புடம் போட்டுக் காட்டுகின்றன. இருப்பினும் நாம் ஒரு பக்கச் சார்பாகப் போய்க் கொண்டிருக்கின்றோம் என்றுதான் எண்ணத் தோன்றுகின்றது.

செய்தி ஊடகங்களான பத்திரிகைகள், வானொலிகள், தொடர்ச்சியான கலைவிழாக்கள் இவற்றின் பக்கம் எம் பக்கத்தைத் திருப்பினாலும் பத்திரிகைகள், வானொலிகள் மக்கள் எழுச்சிக்கு மகத்தான பங்காற்றுகின்றன. கலைவிழாக்கள் ஒவ்வொரு பழைய மாணவர் சங்கத்தினாலும் ஒவ்வொரு வாரமும் மிகத் திறமையாக நடத்தப்படுகின்றன. ஆனால் எத்தனை விழாக்களில் எமது தமிழீழப் பாடல்களிற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள் என்றால் பதில் மிகுந்த வேதனையைத் தருகின்றது. இவ்வளவு நடந்தும் இன்னும் சினிமா மோகத்திலிருந்து நாம் விடுபடவில்லை என்று தான் கூறவேண்டும். உலகம் என்னும் அதிசய விருட்சம் அதன் பொலிவை இழந்ததற்கு இந்த சினிமா தான் காரணம் என்று அறிஞர்களும் மேதைகளும் தான் கூறி நாம் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. சினிமாவிற்கு கொடுக்கும் ஆதரவை, சினிமாப் பாடல்களிற்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை ஓரளவிற்காவது எம் பாடல்களிற்கு நாம் ஒவ்வொருவரும் கொடுப்போமாக இருந்தால் நாம் பனிக் காட்டிற்குள் படும் அவஸ்தையிலிருந்து விடுபடலாம். ஏனென்றால் முழு உணர்வுடன் எமது பாடல்களை முணுமுணுப்போமாக இருந்தால் எங்கள் தாய் மண்ணின் முக்கியத்துவத்தை முழுமையாகவே மனதில் இருத்தி விடுவோம்.

ஒரு திரைப்படம் வெளியாகப் போகின்றது என்றால் எத்தனை ஆயிரம் துண்டுப் பிரசுரங்கள் அச்சிட்டு வெளியிடுகின்றோம். இதில் ஒவ்வொன்றின் அடிப்பாகத்திலும் எமது தாயகப் பாடல்களின் ஒவ்வொரு வரியை பிரசுரிப்போமாக இருந்தால் எமது தமிழீழப் பாடல்களின் முழு வரிகளையும் வரியின்றித் தரமுடியுமல்லவா?

ஒவ்வொரு பழைய மாணவர் சங்கங்களும் தங்கள் கலைவிழாக்கள் பற்றிய செய்திகளை மக்களுக்குத் தெரியப்படுத்த தினம் தினம் பல்லாயிரக்கணக்கான துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டு வெளியிடுகின்றார்கள் என்பதை நாம் யாவரும் நன்கறிவோம். இந்தப் பிரசுரங்கள் மூலம் இந்த மண்ணில் வாழும் ஈழத் தமிழ் மக்களனைவரையும் சென்றடையும் விதத்தில் எம் தாய் மண்ணின் பாடல்களிற்கு எழுத்து வடிவம் கொடுக்கலாம். திருக்குறளைப் போல உலகம் உள்ளவரை எமது பாடல்கள் வாழ வேண்டும் என்றால் இது முடியாது என்று கூறி ஒதுங்கிவிட முடியுமா? நாங்கள் புதுமைத் தமிழர்கள் என்றால் புதுமைகள் செய்யத்தானே வேண்டும். எம் புலம்பெயர்ந்தாலும் ஐம்புலனும் எமது தான் என்பதை யார் மறுப்பார்கள்.

உதாரணமாக ஒரு துண்டுப் பிரசுரத்தில் "உலகத் தமிழினமே எண்ணிப் பார் - நீ உறங்கினால் வரலாற்றில் யார் உன்னை மன்னிப்பார்" இந்த வரிகள் அடிப்பகுதியில் இருப்பதை உற்று நோக்கும் உன் கண்கள் உன் மனதிற்கு தந்தி கொடுக்கும். மனம் மறுகணம் நான் உறங்கி விட்டால்.... இல்லை....இல்லை....உறங்கக் கூடாது என்று சொல்லி உன்னை தட்டிவிடும்.

"சின்ன சின்ன கூடு கட்டி நாமிருந்த ஊர்
பிரிந்தோம்
தென்னிலங்கைப் பேய்களினால் நாமிருந்த
வீடிழந்தோம்"
என்பதை மேற்குறிப்பிட்ட வரிகள் கூறி நிற்கும்.

"பிரபாகரன் எங்கள் வழிகாட்டி - தமிழர் தாய்மண்ணைக் காக்கின்றான் தமிழ் மானம் நிலைநாட்டி"
உன்னை அழைத்துச் செல்ல, வழிநடத்திச் செல்ல நல்லதொரு தலைவன் இருக்கின்றான் என்பதை நீ மட்டுமல்ல ஒவ்வொரு தமிழனும் உணர்ந்து கொள்ளுவான்.

நாளை நாளை என்று நாட்களை கடத்திக் கொண்டு போவதை விட இன்று என்று எண்ணிக் கொண்டு செயற்படத் தொடங்குவோம் என்றால் விரைவில் புதிய ஆதவன் உதிப்பான் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை.

ஆயுதம் மட்டும் ஒருபோதும் விடுதலையைப் பெற்றுத் தராது என்று நான் கூறவில்லை. ஆயுதத்துடன், மக்கள் எழுச்சி முக்கியமாக சேர வேண்டும். இந்த எழுச்சியை மிகத் துல்லியமாக எமது தமிழீழப் பாடல்கள் எடுத்தியம்புகின்றன. எனவே தான் நாம் செய்ய வேண்டியதை அந்த நேரத்தில் செய்ய முன்வருவோம்.

"உலகே உனக்குக் கண்ணில்லையா - எங்கள்
தமிழீழ மண் என்ன மண் இல்லையா?
உலக மக்கள் தான் மக்களா - எங்கள்
தமிழீழ மக்கள் என்ன கற்களா?

இத்தகைய வரிகள் தொடர் தொடராக வரவேண்டும். வந்து எம் மக்களை அடைய வேண்டும். எழுத்து வடிவம் என்றும் உயிர் உள்ளது. அதனால் தான் எழுதுங்கள். வரியில்லாத வரிகளை தர வருவீர்களா? இது ஒரு வரலாற்றுக் கடமை தான். பங்கெடுக்க முன் வாருங்கள்.

2000 - International Year of Thanksgiving

இந்த வருடம், 2000ம் ஆண்டு - "சர்வதேச நன்றி தெரிவிக்கும் ஆண்டு"

மனிதப் பிறவியின் பெரும் சிறப்புகளில் மிக முக்கியமான ஒன்று பிறருக்கு உதவியாக வாழும் தன்மையாகும். ஒவ்வொருவரும் தாம் வாழும் காலத்தில் தம்மாலியன்ற வழிகளில் மற்றவர்களுக்கு உதவிகளைப் புரிந்து வருகின்றார்கள். ஏழைகளுக்கு உணவு, கல்வி வழங்கல், பண உதவி, சரீர உதவி செய்தல், நோயாளர்களுக்கும், முதியோர்களுக்கும் தொண்டுகள் செய்தல், ஆபத்திலிருப்பவரைக் காப்பாற்றுதல், விபத்து போன்ற சமயங்களில் உதவுதல் , இன்னும் பலவும் இதில் அடங்கும். பலன் எதிர்பாராது செய்வது உதவி.

இவற்றில் இன்னும் ஒருபடி மேலே போய், தம் வாழ்வு முடியும் காலத்திலும் மற்றவர்களுக்கு எந்த வகையிலாவது உபயோகப்பட வேண்டும் என எண்ணுபவர்கள் உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டியவர்கள். இவர்கள் தம் உயிர் பிரிந்த பின் தம் உடல் உறுப்புகளையும் கூட தானமாகப் பிறருக்கு வழங்குவதன் மூலம் இன்னொருவரின் வாழ்வில் ஒளியேற்றிச் செல்கின்றனர். அப்படிப் பட்ட ஒரு சிறந்த காரியத்துக்குக் கனடாவில் தாராளமாக இடமுண்டு.

ஒன்ராறியோ சுகாதாரத் திணைக்களத்தில் அங்கதானத்துக்கான விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்த பின் அவர்கள் உங்களுக்கு ஒரு அங்கதான ஒப்புதல் அட்டையை தபாலில் அனுப்பி வைப்பார்கள். அல்லது உங்கள் வைத்தியத்துக்கான சுகாதார அட்டையில் (Health Card) ஒரு குறிப்பை வைப்பார்கள். தேவையான நேரத்தில் அது கம்பியூட்டர் மூலம் மீளப் பெறப்படும், அத்துடன் நீங்கள் வாகன சாரதி அனுமதிப் பத்திரம் (Driver's Licence) வைத்திருப்பவராயிருந்தால் அடுத்த தடவை அதை புதுப்பிக்கும் சமயத்தில் தனியான ஒரு அங்கதான அட்டையும் புதிய சாரதி அனுமதிப் பத்திரத்துடன் உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். அதனை நீங்கள் எப்பொழுதும் உங்களுடனேயே வைத்திருத்தல் அவசியம். உங்கள் குடும்பத்தினருக்கும், உங்களுடன் நெருக்கமானவர்களுக்கும் உங்கள் விருப்பத்தைத் தெரிவித்து வையுங்கள். அங்கதான அட்டையில் கையொப்பமிடுகையில் நீங்கள் முக்கியமாக கவனிக்க வேண்டிய விடயங்களாவன:

1. உங்கள் தீர்மானத்தைப் பற்றி உங்கள் குடும்பத்தவர், நண்பர்கள், வைத்தியர் ஆகியோருடன் உரையாடி அவர்களுக்குத் தெரிவித்தல்.
2. நீங்கள் தொண்டின் அடிப்படையில் (Volunteer) இக் காரியத்தைச் செய்ய முன் வந்திருக்கிறீர்கள் என்பதை அவர்களுக்கு விளக்கல்.

அங்க தானம் Organ Donation

3. உங்கள் விருப்பங்களை மதித்து அதனை நிறைவேற்றும்படி உங்கள் குடும்பத்தினரைக் கேட்டுக் கொள்ளல்.

நீங்கள் உங்கள் இதயம், ஈரல், சிறுநீரகங்கள் போன்ற அங்கங்களையும், இருதய வால்வுகள், கண்கள், எலும்புகள், தோல் போன்ற இழையங்களையும் தான-மாக வழங்கலாம். இவற்றில் சிலவற்றை மாத்திரம் அல்லது எல்லாவற்றையும் வழங்கலாம். அல்லது ஏதாவது ஒரு அங்கத்தை மட்டும் குறிப்பிட்டு உங்கள் அனுமதியை விண்ணப்பத்தில் தெரிவிக்கலாம். அங்கதானம் செய்வதற்கு வயதெல்லை கிடையாது. அங்கத்தின் ஆரோக்கியமே கவனத்தில் கொள்ளப்படும். ஒன்ராறியோவில் மிகக் கூடிய வயதுடைய அங்கதானம் செய்தவரின் வயது 92 ஆகும்.

அங்கதானத்தை அனுமதிக்கும் அங்கதான அட்டையானது ஒரு சட்டபூர்வமான

பூரதி

ஆவணம். இதன் மூலம் வைத்தியர்கள் உங்கள் விருப்பத்தை அறிந்து செயற்படுவார்கள். ஆனால் உங்கள் குடும்பத்தினர் ஆட்சேபித்தால், அவர்கள் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்து உங்கள் அங்கங்களைப் பெற்றுக் கொள்ள மாட்டார்கள். உங்கள் விருப்பத்தை நீங்கள் உயிலில் தெரிவிக்க முடியாது. ஏனெனில் உயில் சிறிது காலத்தின் பின்பே உங்கள் குடும்பத்தவரால் வாசிக்கப்படும். அந்த சமயத்தில் உங்கள் அங்கங்களைப் பாவிக்க முடியாது. பழுதடைந்து விடும் அல்லது கிடைக்காமல் போய்விடும். அங்கதான விண்ணப்பத்தை நிரப்புவதன் மூலமே இக் காரியத்தில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளலாம்.

இவ்வட்டையில் அனுமதியளித்ததன் காரணத்தினால் உங்கள் உயிருக்கு ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் போது வைத்தியர்கள் தகுந்த சிகிச்சை அளிக்க மாட்டார்கள், உங்களை இறக்க விட்டு விடுவார்கள் என்று அஞ்சத் தேவையில்லை. உங்களுக்கு அளிக்க வேண்டிய சகல சிகிச்சைகளையும் அவர்கள் அளிப்பார்கள். நீங்கள் அங்கதானம் செய்ய முன்வந்திருப்பதனால் உங்களைப் பிரத்தியேக மரியாதையுடனும், மதிப்புடனும் நடத்துவார்கள். இறப்பு நிகழும் பட்சத்தில், அதனை 2 டாக்டர்கள் உறுதி செய்ததன் பின்பே, உங்கள் குடும்பத்தினரும் ஆட்சேபம் தெரிவிக்காதவிடத்து 24 மணிநேரத்திற்குள் அங்க மாற்றுச் சத்திர சிகிச்சையை நடத்துவார்கள். உங்கள் அங்கங்கள் உடனடியாக வேறொரு அங்கம் பழுதடைந்த/ செயலிழந்த நோயாளிக்கு சத்திர சிகிச்சை மூலம் பொருத்தப்படும். ஈமக் கிரியைகளை முறைப்படி மேற்கொள்ள வேண்டுமென்ற உங்கள் குடும்பத்தவர்களின் விருப்பத்தை உணர்ந்து வைத்தியர்கள் மிக விரைவாகச் செயற்படுவார்கள். எந்தவித அநாவசிய தாமதமுமின்றி குடும்பத்தவரிடம் உடல் ஒப்படைக்கப்படும்.

நீங்கள் அங்கதானம் செய்ய ஒப்புக் கொண்டபின், உங்கள் உடல் மருத்துவக் கல்லூரிகளின் ஆராய்ச்சிகளுக்காகப் பயன்படுத்தப்பட முடியாது. ஏனெனில் அவர்களுக்குப் பரிசோதனைகள் செய்வதற்கு முழுமையான உடல் தேவை. நீங்கள் ஒன்றில் அங்கதானம் அல்லது மருத்துவ ஆராய்ச்சிக்கு உங்கள் விருப்பப்படி, உங்கள் உடல் எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை முடிவு செய்து விண்ணப்பிக்கலாம். ஆனால் இரண்டையும் செய்ய முடியாது. மருத்துவ ஆராய்ச்சிகளுக்கு உங்கள் உடல் வழங்கப்படின் குடும்பத்தவர் உங்கள் ஈமக் கிரியைகளைச் செய்ய முடியாது. ஆனால் அங்கதானம் செய்தால் வழமையான சடங்குகளை மேற்கொள்ளலாம். நீங்கள் விரும்பாவிடின் உங்கள் குடும்பத்தினர் தவிர்ந்த ஏனைய உறவினர்கள் கூட உங்கள் அங்கதானம் பற்றி அறியத் தேவையில்லை.

அங்கமாற்றுச் சத்திர சிகிச்சை நடவடிக்கைகளை ஒழுங்கு செய்வதற்கென ஒன்ராறியோ அரசினால் அமைக்கப்பட்ட அமைப்பின் பெயர் Organ Donation Ontario (ODO) ஆகும். இது முன்பு The Multiple Organ Retrieval and Exchange (MORE) Program of Ontario என அழைக்கப்பட்டது. இது 1988இல் ஆரம்பிக்கப்பட்டது. மாகாண ரீதியில் கம்பியூட்டர் பதிவுகளின் மூலம் இத் திட்டத்தை நிர்வகித்து வருகின்றது. அங்க மாற்றீடு செய்யும் நிபுணர்கள், எல்லா நோயாளிகளுக்கும் சம சந்தர்ப்பத்தை வழங்குவதற்காக இக் கம்பியூட்டர் நிர்வாக அமைப்பை உருவாக்கினர். மிகத் துரிதமாக அங்கங்களை ஒருவரின் உடலிலிருந்து பெற்று மிக அவசர தேவையுள்ள ஒருவரைத் தெரிந்தெடுத்து அவருக்கு மாற்றீடு செய்வதற்கான சகல ஒழுங்குகளையும் இந்த அமைப்பே செய்கின்றது. தெரிந்தெடுத்த நோயாளிக்கு ஏதாவதொரு தவிர்க்க முடியாத காரணத்தினால் சத்திர சிகிச்சை செய்ய

(110ம் பக்கம் பார்க்க)

மலரின் எழுத்தாளர்கள்
Our Contributors

சொரும்பூர் தமிழ்ச் சங்கம்
நூலகம்



அமல்குமார் சின்னத்தம்பி
கவிஞர், கலைஞர்



சிவா சின்னத்தம்பி
கவிஞர், எழுத்தாளர்



பார்வதி கந்தசாமி
சமூக உத்தியோகத்தர்
முன்னாள் விரிவுரையாளர்



பரமு சிவசுப்பிரமணியம்
வெளியீட்டாளர்
'தமிழ் காடியன்'-கனடா பதிப்பு



நவராஜகுலம் முத்துகுமாரசாமி
சங்கீத ஆசிரியர்,
முன்னாள் இசைக் கட்டுப்பாட்டாளர்



றஞ்சி திரு
ஆசிரியர்
'தமிழர் தகவல்' இணையாசிரியர்

உலகத் தலைவர்கள் உணர்ந்து கொள்ள ஒரு கடிதம்!

உயர் மாண்புமிகு தலைவர்களே:
உலகத்தின் மீதும், அனைத்து உயிர்களின் மீதும், அக்கறையும் அன்பும் கொண்டிருப்பது உண்மையென்றால், எங்கும் அன்பும் அமைதியும் சமாதானமும் நிலைக்க உழைப்பது என்று கூறி வருவது ஒவ்வொருவரும் உள்ளார்ந்த விருப்பம் என்பது உண்மையென்றால், அழிவுகளும் அனர்த்தங்களும் நிகழ்வதை அறவே வெறுப்பது உண்மையென்றால், எந்தவொரு மனிதனுக்கும் இவ்வுலகில் அனைத்து உரிமைகளோடும் வாழும் உரிமை உண்டென்பதை மதிப்பதும் உண்மையென்றால், ஜனநாயக ஆட்சி முறைதான் சர்வதேசத்துக்கும் உகந்தது என்று கருதி உழைப்பதும் உறுதியென்றால், முதலில் நீங்கள் ஒன்றை மட்டும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

உங்களுக்குள் நாடு, மக்கள், மொழி, மதம் என்று உங்களை உயர்த்திக் கொள்ளப் பாடுபடுவதை நீங்கள் முதலில் நிறுத்திக்கொள்ள வேண்டும். அதெப்படி முடியுமென்று அடம் பிடிப்பீர்களானால், அங்கேதான் பிரச்சனைகள் ஆரம்பமாகின்றன. பிரச்சனைகளுக்குக் காரணகர்த்தாக்களே நீங்கள்தான்! உங்களுங்களை வளர்த்துக் கொள்ள, அனைத்து உரிமைகளையும் அடக்கும் நோக்கில் எடுக்கும் முயற்சிகளும் மற்றும் நடவடிக்கைளும்தான் பிரச்சனைகளைத் தோற்றுவிக்கின்றன. உங்களைப் போன்றே உலகில் எல்லோரும் சிந்திக்கிறார்கள், செயற்படுகின்றார்கள் என்பதனால்தான் உலகெங்கும் அமைதிக்கும் பங்கம் ஏற்படுகின்றது.

பிறப்புரிமை என்பது ஒருவரின் சிறப்புரிமைத் தகமையென்றால், பிறப்பால், மொழியால், மதத்தால், இனத்தால், நிறத்தால் ஒருவன் வேறுபட்டிருந்தாலும், அவன் மனதினால் பாதிக்கப்படுகையில் அவனவன் தனது இனத்துக்காக உழைக்க, சேர உளம் மாறுவது தவிர்க்க முடியாதது. இந்நிலையில் இன மொழி மத பாகுபாடின்றியே உலகம் இயங்க ஒருவரைச் சட்ட விதிகள் என்ற மாயை இருந்தாலும், இனம்தான் இனத்தைப் பாதுகாக்கும் என்ற நம்பிக்கை இன்னமும் அற்றுவிடவில்லை என்பதாலும், பெரும்பான்மை இனத்துக்கும் மதத்துக்கும் மொழிக்கும் தாம் வாழ ஆளும் உரிமையும் நினைவுகளும் தகமையாய் இன்று கொடி கட்டிப் பறக்க அவரவர் தாமாக மட்டும் தலைநிமிர்ந்து வாழும்போது, இல்லாரும் அல்லாருமாய் எவ்வளவோ இனமும் சனமும் இன்று அழித்தொழிக்கப்பட்டு வருவது, ஒடுக்கப்பட்ட இனங்களால் பொறுக்க முடியாத நிகழ்வாகி வருகின்றது. எந்தவொரு தனி மனிதனுக்கும் உலகினில் வாழும் உரிமை உண்டென்றால், அதன் அர்த்தம் என்ன? வாழும் உரிமை மட்டும்தான் என்று சொல்வதா? அல்லது ஆளும் இனத்துக்கோ அல்லது அண்டை நாடுகளுக்கோ அடங்கி வாழ்ந்திருத்தல் என்பதா? இல்லை.

ஜனநாயக உரிமையை, அதற்கான வழிமுறைகளைப் பேணுவதும் காப்பதும் என்பதுகூட ஒரு வகையில் சிறுபான்மையினருக்கு எதிரான நடவடிக்கைகள் என்று தான் கருத்தில் கொள்ள வேண்டும். ஜனநாயகம் என்பதன் தனித்துவமே 'பெரும்பான்மை' என்னும் ஆயுதம்தான். மக்கள் மக்களை ஆளுவதற்கும் பெரும்பான்மை என்பதுதான் பெரும் பங்கு வகிக்கின்றது. இந்தப் பெரும்பான்மை எவ்வாறு சிறுபான்மை இனத்துக்குக் கிடைக்க முடியும். சிறுபான்மை இனத்துக்குள்ளிருக்கும் பெரும்பான்மையும் எதனைச் செய்ய முடியும்? இந்த அடிப்படையில் ஒரு நாட்டின் பெரும்பான்மையையும் பெரும்பான்மை இனமே தீர்மானிக்க முடிகின்றது; தீர்மானித்தும் வருகின்றது. இதற்காக முடுக்கி விடப்பட்ட அனைத்தும், வளர்ந்து மாறி மாறிப் பெரும்பான்மைக்கு அணி சேர்க்கும் வகையில் அமைந்து வந்துள்ள போதிலும், மக்களோ நாடுகளோ உறுதியான உண்மையான உளமாற்றம் பெறாமையினால் உலகின் எந்த மூலையிலும் முரண்பாடுகள் பிரச்சனைகளாகி உரிமைக்கான போரட்டங்களாக உருமாறக் காரணங்களாகின்றன.

நம்பிக்கை என்பது மோசமாகிவிட்ட நிலை, வாழ்க்கை என்பதில் ஒரு போலித்தனம், உறவு என்பதில் ஒரு முறுகல் நிலை, அரசியல் என்பது அநியாயத்தின் சின்னம் என்றாகி விட்டது இன்றைய உலகில். இனி இறைவன் வந்தாலும் உலகினைக் காப்பாற்ற முடியுமோ தெரியாது. அரசியல் என்கின்ற அநியாயத்தோடு இயற்கை என்னும் இறைவன் வந்து எதிர்த்துப் போராடுகின்ற ஒரு நூற்றாண்டு புதிய 'மில்லேனியம்'.

பெரும்பான்மையைத் தேடிப் பாரெங்கும் அலைகின்ற பெரும்பான்மையினப் பெருந் தலைவர்களே கேளீர்! தமிழில் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்றொரு வரியுண்டு. இது எதனை அறிவுறுத்து வருகின்றது. மக்களுக்காக மட்டுமன்றி, மக்களை ஆளும் தலைவர்களுக்காகவுமே கூறப்பட்டது. எந்த நாட்டையும், எந்த மக்களையும் படையெடுத்து அழித்து வீடாதீர்கள்; எல்லோரையும் சகோதரர்களாக மதித்து நடத்துங்கள் என்ற கருத்தில்தான் இது கூறப்பட்டது. ஜனநாயகம் வாழ வேண்டும்; இது நியாயம் தான். அதற்காகச் சிறுபான்மையை அழித்துப் பெரும்பான்மையுடன் ஒட்ட வைப்பதென்பதே இன்றுள்ள பெரும் பிரச்சனைக்குக் காரணம் என்பதில் எள்ளளவும் சந்தேகமிருக்க முடியாது.

சாதகமான மக்களாக, சாதகமான மதமாக, சாதகமான நாடாக இல்லாதவரை பெரும்பான்மை அவர்களுக்குச் சாதகமாக நடந்து கொள்ளாது என்பது ஒரு புறமிருக்க, உலகில் ஒற்றுமையான ராஜ்யமாக வளர்ந்து வருகின்ற முஸ்லிம் நாடுகள் பலத்த எதிர்ப்புகளையும் நெருக்கடிகளையும் சந்தித்து வருகின்றன.
பெரும்பான்மையினராய் பக்குவமாக வளர்ந்து வருகின்ற சீன தேசம், பக்கச் சார்பின்றி இருப்பதுபோன்று, பல எதிர்ப்புகளையும் சந்தித்து வருகின்றது. ஆசிய நாடுகள் அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருக்கையில், இந்தியா தனது பெரும்பான்மைக்கு ஊடாக, தன்னை யாரென்று தரணிக்கு அறிமுகம் செய்து வருகின்றது. தலையெடுத்த பல பெரும்பான்மைகள், சிறுபான்மைகளைத் தலைதூக்க விடாது நசுக்கி வருகின்றன. இதனாற்தான் இன்று உலகெங்கும் போரினால் நாடு நாடாக அழிவு என்பவை இடம்பெற்று வருகின்றன போலும்.

தலைவர்களே!
நாடுநாடாக நாம் என்றிருப்பது நல்லதல்ல என்றாக வேண்டிய நிலையில், நீங்கள் நான் நான் என்று நிமிர்ந்து நடந்து கொள்ள முயற்சிக்கின்றீர்கள். சற்று நிதானமாகச் சிந்தித்து ஜனநாயகத்துக்கு மதிப்பளிப்பது உண்மையென்றால, சர்வநாட்டுச் சகல இன மக்களுக்கும் சகல உரிமைகள் என்றில்லாவிட்டாலும், சம உரிமை, சமத்துவம் அளியுங்கள். சர்வதேச சட்டங்களைப் பெரும்பான்மைக்கு மட்டும் சாதகமாக்காதீர்கள். அனைத்து நாடுகளிலும் அமைதி நிலவ நடவடிக்கை எடுங்கள். இவற்றுக்காக உழைக்க ஒவ்வொருவரிடமும் சத்தியப் பிரமாணம் வாங்குங்கள். சிறுபான்மையினங்களின் பெரும்பான்மையினர் விரும்பும் கோட்பாடுகளுக்கு மதிப்பளித்து அவரவரைத் தனித்துவமாக வாழ அனுமதியுங்கள். உலக மக்கள் தொகை ஆறு பில்லியனைத் தாண்டிவிட்ட போதிலும், அனைத்தையும் ஒருவர் கைக்குள் செல்ல அனுமதியாதீர்கள். இவைகளை ஏற்காத நாடுகளில் நசுக்கப்பட்டுள்ள சிறுபான்மை இனங்கள் பிரிந்துபோக விரும்பினால், அதற்கு அவை தகுதி பெற்றிருப்பின் அதற்கு ஆதரவு வழங்குங்கள். சிறுபான்மை இனங்கள் தத்தமது உரிமை பெற்றுச் சமத்துவம் பேணி வாழ அனுமதியுங் கள்.

தலைவர்களே!
தமிழனைப் பற்றியும் ஒரு கணம் சிந்தியுங்கள். செயற்படுங்கள். நாங்களும் ஜனநாயகவாதிகள் தான்!

என்றும் உண்மையுள்ள

சிவா சின்னத்தம்பி

பரமு சிவசுப்பிரமணியம்

அங்கா? இங்கா? எங்கு தேவை?

இருக்க வீடில்லை; உண்ண உணவில்லை; நோய்க்கு மருந்தில்லை; யாருக்கு? எல்லாமே கனடிய வாழ் மக்களாகிய எமக்குண்டு. அப்படியானால் எதுவுமின்றி அல்லலுறுபவர்கள் யார்? எமது சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள் தமிழீழத்தின் யுத்தபூமியில் வாழ்ந்து கொண்டிருக்கும் இம் இன மக்களே. அவர்களுக்கு நாம் கடந்த காலங்களில் பலவழிகளில் உதவியுள்ளோம். இன்றும் உதவி வருகின்றோம். ஆயினும் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் மக்கள் தொகையில் இந்தியாவைத் தவிர்த்துப் பார்த்தால் கனடாவில் தான் லட்சத்தைத் தாண்டி வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இங்கு வாழும் மக்கள் தொகையில் நமது பங்களிப்பு சொற்பமே.

இங்கு எமக்கு சொந்த வீடு, சொந்த வாகனம், வீட்டிலே கணனி முதல் அத்தனை பொருட்களும் உண்டு. அங்கே எந்தவிதமான வசதிகளும் அற்ற மனிதர்களாக தாய் தந்தையை இழந்த குழந்தைகள், கணவனை இழந்த மனைவி, மனைவியை இழந்த கணவன், சொந்தங்களையும் சகங்களையும் இழந்து அந்த மண்ணின் விடியலுக்காகப் போராடும் போராளிகளுடன் அவர்களும் நிலத்தின் காவலர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

நாங்கள் என்ன செய்கிறோம்? ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து பணத்தைக் கரைக்கின்றோம். திருமண விழா, பிறந்தநாள் விழா, பூப்புனித நீராட்டு விழா போன்ற வைபங்களை எப்படி நடத்துகின்றோம். நான்கு டாலர்களுக்குச் செய்ய வேண்டியதற்கு இருபது டாலர் செலவு செய்கின்றோம். வெறும் மெழுகுதிரிக்கும் பூவாணத்துக்கும் பணத்தை எரிக்கின்றோமே, ஏன்? மேற்குறிப்பிட்ட வைபவங்கள் நடத்தக் கூடாது என்று சொல்லவில்லை. செய்ய வேண்டியவை தான். வீணாகச் செலவு செய்வதால் இங்கே தனிமனிதனைத் தான் வளர்க்கின்றீர்கள். அந்தப் பணத்தை அங்கே அனுப்பினால் எத்தனை ஆயிரம் மக்களின் பசியைப் போக்கலாம்.

அதே போல் சில ஆலயங்கள் வாராவாரம் அன்னதானம் செய்வதைப் பார்க்கின்றோம். இந்த கனடிய நாட்டில் உண்ண உணவின்றி கஷ்டப்படுபவர்கள் யார் இருக்கின்றார்கள்? யாருமே இல்லை, அப்படியானால் ஏன் அன்னதானம். பசி பட்டினியோடு வாடும் மக்களுக்குக் கொடுப்பது தான் புண்ணியம். எல்லாமே இருப்பவனுக்குக் கொடுப்பதால் பாவத்தைத் தான் தேடுகின்றோம். அந்தப் பணத்தை வன்னியில் வாடும் மக்களுக்கு அனுப்பினால் கோடி புண்ணியம் கிடைக்குமல்லவா? ஆயிரக் கணக்கான மக்கள் பசியாறுவார்கள். இப்படியான செலவுகளை எம் மண் மீட்கும்வரை சேமித்து எமது பங்களிப்பை அந்த மண்ணில் வாழும் மக்களுக்கு அனுப்புவது சாலச் சிறந்தது.

ஈழப் போராட்டம் இன்று இறுதிக் கட்டத்தில் நிற்கின்றது. பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மாவீரர்களின் தியாகத்தினால் உறுதியாக்கப்பட்ட ஈழம் பிறக்கப் போகும் திசை தெரிகின்றது. இந்தக் கட்டத்தில் போராளிகளின் இழப்பைக் குறைப்பதற்கு வெளிநாடுகளில் வாழும் எம்மால் முடியும். போராட்டக் களத்தில் காயமுறும் போராளிகளுக்கு உடனுக்குடன் மருத்துவ உதவி செய்வதனால் அவர்களைக் காப்பாற்றலாம். கடந்த கால போராட்டக் களங்களில் அங்கு வாழும் மக்களின் பங்களிப்பைக் கேள்வியுற்றோம். அவர்களுக்கு அவசரமாகத் தேவை மருத்துவ உதவி.

இறுதிக் கட்டத்தில் இருக்கும் எம் தாயக விடுதலைக்கு முழுமையாக எம்மை அர்ப்பணிப்போம். அநாவசிய ஆடம்பர செலவுகள் செய்வதைக் குறைத்து அந்த மக்களையும் போராளிகளையும் காப்பாற்ற தமிழர் புனர் வாழ்வுக் கழகத்திற்கும், மருத்துவ நிதிக்கும் பங்களிப்போம்.

'தமிழன் வழிகாட்டி' வெளியீட்டு வைபவம்

செந்தியின் 'தமிழன் வழிகாட்டி' 2000ம் ஆண்டுப் பதிப்பின் வெளியீட்டு வைபவம் கடந்த வருடத்தின் கடைசி நாளான டிசம்பர் 31ம் திகதி, ஸ்காபரோ சங்கமம் வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது. திரு. ஜிம் ஹரியானிஸ் எம். பி பிரதம விருந்தினராகப் பங்குபற்றிய இவ்வைபவம் 'தமிழர் தகவல்' ஆசிரியர் திரு. எஸ் திருச்செல்வம் தலைமையில் நடைபெற்றது. 'கீதவாணி' நடா ஆர். ராஜ்குமார், 'உதயன்' ஆர். என். லோகேந்திரலிங்கம், வழக்கறிஞர் பொ. கயிலாசநாதன் உட்படப் பலர் இங்கு உரையாற்றினர். செந்தியும் அவரது பாரியாரும் விழாவில் வந்திருந்தவர்கள் சார்பில் பிரதம விருந்தினரால் பாராட்டுப் பத்திரம் வழங்கிக் கௌரவம் செய்யப்பட்டனர் விழாவின் சில காட்சிகளைப் படங்களின் வழியாகக் கீழே பார்க்கவும்.





இசை - தெய்வீகக் கலை

மனித முயற்சியின்றி இயற்கையிலேயே கேட்கும் நாதமான "அனாஹத நாதம்" சிற்றம்பலத்தில் என்றும் ஒலித்துக் கொண்டிருக்கும் இனிய நாதமாகும். ஆகாயத்தில் ஆன்மாவின் சுகரூபம் பிரகாசிப்பதே அனாஹத நாதத்தின் இனிமைக்குக் காரணமாகும். மனிதன் தனது ஐம்புலன்களையும் அடக்கி, இந்த இனிய நாதத்திற்குச் செவி மடுப்பானாயின் அவனால் ஆத்மானந்தத்தை அனுபவிக்க முடியும் என்பது தெய்வீகத் தன்மை வாய்ந்த பெரியோர்கள் அனுபவ வாயிலாக அறிந்த உண்மையாகும். இதனாலேயே இறைவனை வழிபடும் முறைகளில், இசையோடிணைந்த வழிபாடு சிறந்ததெனக் கருதப்படுகிறது. அத்துடன் அனாஹத நாதத்தினை அனுபவிப்பதற்காகவே சங்கீதத்தினை முறையாகப் பயில வேண்டியதன் அவசியமும் தெளிவாகின்றது.

சமயக் குரவர்கள், சங்கீத மகான்கள் ஆகியோர் அருளிய திருப்பதிகங்கள், பாடல்கள் இறைவன் நாத வடிவாகவும், பாட்டகத்து இசையாகவும் விளங்குகின்றான் என்னும் உண்மையை உறுதிப்படுத்துகின்றன.

இறைவனையும், அடியாரையும் ஒன்றிணைக்கும் இசையின் நோக்கம், அறிவிற்கும் இதயத்திற்கும் இன்பமூட்டுவதாகும். இவ்விரு இன்பத்தையும் ஒருங்கே அளிப்பது மிடற்றிசை (Vocal) அல்லது வாய்ப்பாட்டிசையே. ஏனெனில் இசைக் கருவிகளை இசைக்கும் போது பாடல்களின் பொருளை அவற்றின் சுவையை மிடற்றிசையில் வெளிக் கொணருமாற் போன்று, இயல்பாக வெளிப்படுத்துவது இயலாது என்பது வெள்ளிடைமலை.

இம்மைச் செல்வங்கள் அனைத்தையும் அனுபவிப்பதால் மட்டும் மனிதன் பூரண திருப்தி அடைவதில்லை. அவனுடைய மனத்திற்கு இன்பத்தை அளிப்பவை சித்திரம், சிற்பம், சங்கீதம், நடனம் ஆகிய அழகுக் கலைகள் அல்லது நுண்கலைகளாகும். இவற்றுள், எவரையும் எளிதில் மனம் நெகிழ வைக்கும் இசைக் கலையே மேன்மையானதாக விளங்குகின்றது. "Music is the finest of fine arts" என்றார் Herbert Spencer. ஏனெனில் இசையானது சகல உயிரினங்களையும் உள்ளியக்கவல்ல ஒரு உணர்ச்சி (Language of feeling) மொழியாகும். அத்துடன் மொழி, மத, இன வேறுபாட்டினைக் கடந்து நிற்கும் ஒரு சிறந்த கலை இசைக் கலையே. நாம் சொல்ல இயலாத கருத்துகளை, உணர்ச்சிகளை, ரஸங்களைக் கேட்ட

நவராஜகுலம் முத்துக்குமாரசாமி

மாத்திரத்தில் புரிய வைக்கும் ஒரு உன்னதமான கலை இசைக் கலை. மனிதனுடைய தீய குணங்களைப் போக்கி, நல்ல குணங்களைப் பெருக்கி, அவனை நல்வழிப்படுத்தும் சக்தி இசைக்கே உண்டு. இசைப் பயிற்சி "நோய்க்கு இடங் கொடேல்" என்ற ஆன்றோர் வாக்கிற்கேற்ப நோயற்ற திடகாத்திரமான உடலை அளிக்க வல்லது. மனக் கவலைகளை மறக்க வைத்து, ஆறுதல் அளிக்கும் சக்தி இசைக்கே உரித்தானது. இசைப் பயிற்சி, நுண்ணறிவு, மன ஒருமைப்பாடு, கற்பனா சக்தி, ஞாபக சக்தி ஆகியவற்றை வளர்ப்பதுடன், அறிவில் முறையாக நாடும் (Methodical Approach) தன்மையை வளர்க்கின்றது. அத்துடன் மனத்தில் அன்பு, அடக்கம், பக்தி ஆகிய நற்பண்புகள் வளர உதவுகின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக, இறைவனிடம் பக்தி செலுத்தி இம்மையில் இன்பமும் மறுமையில் மோட்சமும் அடைய இசை வழி கோலுகின்றது.

சங்கீதத்தில் தேர்ச்சி பெறுவதற்கு அதனது வழிமுறைகளையும், நுட்பங்களையும் அறிந்து கொள்வது அத்தியாவசியமாகும். அத்துடன் பாடகன் பிரபல்யமான சகல வகையான இசை பற்றிய ஞானமும், பாடுந் திறனும் பெற்றிருத்தல் அவசியமாகும். ஒழுங்காகச் சாதகம் செய்வதுடன், முன்னோர்களின் சம்பிரதாயங்களினின்றும் வழுவாது பின்பற்றுதல் பாடகனின் தலையாய கடனாகும். இனிய குரலுடன், முறையாக உச்சரித்துப் பாட்டின் பொருளையும் பாவத்தையும் (Bhava) வெளிப்படுத்துவதே இசையில் இரு சிறந்த அம்சங்கள் என்பதைக் கருத்திற் கொண்டு பயில வேண்டும். முதலில் நன்கு சாதகம் செய்து, குரலை வளமாக்கி, தனது குரல் மீது முழு ஆதிக்கத்தையும் பெற்றுக் கொள்ளல் இன்றியமையாததாகும். பண்படுத்தப்பட்ட குரலினால் மட்டுமே, பல் வகைச் சுவைகளையும், உணர்ச்சிகளையும் இயல்பாக வெளிக் கொணர்ந்து, கேட்போரின் மனதைக் கவர்ந்து, அனைவரையும் மெய்மறக்கச் செய்ய முடியும் என்பதில் சந்தேகமில்லை. நல்ல சாரீரம் இல்லையெனில், இசைப் பயிற்சியில் ஈடுபடுவதில் அர்த்தமில்லை. ஏனெனில் இசையானது இறைவனால் அளிக்கப்பட்ட கலையாதலில் அது அவனது பிறப்போடு இணைந்து வளரும் கலையாகும். இயற்கையிலேயே இசையைப் பெறாத ஒருவர் இசையைத் தொழிலாக ஏற்றுக்கொள்ளவே கூடாது. இறையருளால் இசை ஞானம் பெற்றவன், குரல் வளம், இனிமை, இன்பம், மென்மை, குழைவு, மெருகு, கவர்ச்சி ஆகியவற்றுடன் பாடிக் கேட்ட மாத்திரத்தில் அனைவரின் உள்ளங்களையும் கவர்வதுடன் ஆத்மாவினையும் ஈர்க்கும் முழுமையான கலைஞன் ஆவான்.

நல்லதோர் கலைஞன் அங்க சேஷ்டைகளின்றி, அவைக் கூச்சம், நடுக்கம் ஆகியவற்றைத் தவிர்த்து, மலர்ச்சியுடன் மக்களை மகிழ்விக்கும் வகையில் பாடி, பலரின் பாராட்டுக்களையும் பெறுவான். அத்துடன் தன்னம்பிக்கையுடன் பாடி, தொடர்ந்து தனது கலையினை வளர்ப்பதில் அக்கறை காட்டி மேன்மேலும் திறமை பெற வேண்டும். அத்தகைய கலைஞனே, தனது கலையைத் தானும் அனுபவித்துப் பிறரையும் அனுபவிக்க வைத்து, ஆனந்தக் கடலில் மூழ்குவான்.

சங்கீதத்தின் ஜீவனை முழுமையாக மிளிர வைப்பது மிடற்றிசையே. இசையென்பது யோக மார்க்கம். ஆன்மீக வளர்ச்சிக்கு நிலைக்களனான ஒரு தெய்வீகக் கலை. ஒருமை மனத்துடன் நாத உலகில் ஒன்றியவர் இறைவனின் திருப்பாதங்களை அடைவர் என்பதில் ஐயமில்லை.

ஆகவே, மேன்மை மிக்க இசைக் கலையின் சிறப்பினைப் போற்றிப் பேணிப் பாதுகாத்து வளர்ப்போமாக!

அங்கதானம்....

முடியாவிடின், கம்பியூட்டர் பதிவு வரிசையில் அடுத்ததாக இருக்கும் நோயாளிக்கு இம் மாற்றீடு செய்யப்படும். எந்தவிதப் பாகுபாடுமின்றி தேவையின் அடிப்படையிலும் மற்றைய பொருந்தும் விதங்களின் அடிப்படையிலும் மாத்திரமே நோயாளிகள் தெரிவு செய்யப்படுவர். இந்த அமைப்பின் மூலம் எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் வழங்கப்படுவதுடன், கிடைக்கக் கூடிய எல்லா அங்கங்களும் தேவையானவர்களுக்குப் பயன்படுத்தப்படும். ஒருபொழுதும் வீணாக மாட்டாது. ஒருவரின் பல அங்கங்கள் பலருக்கு பலவிதத்தில் சிகிச்சையளிக்கப் பயன்படுத்தப்படும். அங்கதானத்தின் மற்றொரு வகையான இழையங்களைத் தானம் செய்வதன் மூலமும் உதவி செய்யலாம். இந்த வகையில் சிலவகை இழையங்களை யாரும், எப்பொழுதும் தாம் உயிருடன் இருக்கும் பொழுதே செய்யலாம். இரத்த தானம், என்புமச்சை தானம் (Bone Marrow) என்பவற்றை இதில் குறிப்பிடலாம். ஒன்ராறியோவில் 1997ம் ஆண்டில் அங்கதானத்தினால் மறுவாழ்வு பெற்றவர்களின் எண்ணிக்கை 628 ஆகும். அத்துடன் அங்கதான அட்டையில் நீங்கள் கையெழுத்திடுவது, நீங்கள் மற்றவர்களுக்கு உதவி செய்ய விரும்புகின்றீர்கள் என்பதைக் குறிக்கும். இன்றைய உங்கள் தீர்மானம் யாரோ ஒருவரின் எதிர்காலமாக அமையும். மேலதிக விபரங்களுக்கு நீங்கள் தொடர்பு கொள்ள விரும்பின்: 1-800-263-2833 or, in Toronto (416) 351-7328 http://www.transplant-ontario.org

வசந்தம் - ஒரு தமிழ் முதியோர் நிறுவனம்

தமிழ் முதியோர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்குமான சேவை நிறுவனம். உள நலனை நன்கு பேணுவதற்கான வழிவகைகளை மக்களுக்குக் காட்டுவதற்கு உதவும் நிறுவனமாக வசந்தம் உருவாகியுள்ளது.

1998ம் ஆண்டு வைகாசி மாதம் 17ம் திகதி வசந்தம் என்ற நிறுவனம் தமிழ் முறையைக் கையாண்டு பால் காய்ச்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது. ரொறன்ரோ தமிழ் முதியோர் நிறுவனங்களின் நிர்வாக அங்கத்தவர்கள் அடங்கிய இன-இனக் குழுமத் திட்டச் செயற்பணிக் குழுவின் திட்ட நடவடிக்கைகளில் முதலாவது நடவடிக்கையாக வசந்தம், சீன முதியோர் நலன்பேண் நிறுவனம் ஆகியவை உருவாக்கப்பட்டுள்ளன.

இன இனக் குழுமத் திட்டம் 1992ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இத் திட்டத்தில் இனக் குழும முதியோர் உளநலச் சேவைகள் பெறுவதில் உள்ள தடைகள் பற்றிய ஆய்வு தமிழ், சீன முதியோர்களை அடிப்படையாக வைத்து ஆரம்பிக்கப்பட்டது. இன இனக் குழுமத் திட்டம் ரொறன்ரோ பல்கலைக் கழகத்தின் மவுன்ற் சினாய் வைத்தியசாலை, சென்ற் மைக்கல் வைத்தியசாலையின் உளநலத் துறைகளால் நடத்தப்பட்டது. இத் திட்டம் சீன, தமிழ்ச் சமூகத்தின் அனுசரணையுடன் விருத்தி செய்யப்பட்டது. இத் திட்டம் கனடா நலன்பேண் துறை, முதியோர் திட்டம், குடிசன ரீதியான நல நிதியம், கனடிய பாரம்பரியம், ஒன்ராறியோ நலன்பேண் அமைச்சு, ரொறன்ரோ நலன்பேண் நிதியம் ஆகியவற்றின் நிதி உதவிகள் பெறப்பட்டு செயற்படுத்தப்பட்டது.

இத் திட்டம் இரு நோக்குகளைக் கொண்டது.
1. இன இனக் குழும முதியோர்கள் உளநல சேவைகளைச் சம வாய்ப்பு அடிப்படையில் பெறுவதற்கான தடைகள் பற்றி ஆராய்வது; குறிப்பாகத் தமிழ், சீன முதியோர் பற்றி ஆராய்வது.
2. இன இனக் குழும முதியோர் உளநலம் தொடர்பாக எதிர்நோக்கும் இன்னல்கள் பற்றிச் சமூகம் அக்கறைப்படுவதற்கும் குரல் கொடுப்பதற்குமான தளத்தை ஏற்படுத்தல்.

சமூக மாநாடுகள், கல்வியூட்டல், கலா-சாரக் கல்வியூட்டல், வசந்தம், சீன முதியோர் நலநிலையம் ஆகியவை இன இனக் குழுமத் திட்டத்தின் முன்னெடுப்புக்களாகும்.

வசந்தம் தமிழ் முதியோர்களுக்கான உளநல நிறுவனமாகும். இந் நிறுவனம் முதியோர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்குமான சேவை நிறுவனமாகும். இந் நிறுவனத்தில் பலவித சேவைகள் வழங்கப்படும். வழங்கப்படாத சேவைகளுக்கு இணைப்புக்கள் எடுத்துக் கொடுக்கப்படும். சமூகத்தில் நலனைப் பேணுவதும், நலனைப் பேணுவதற்கான வழிவகைகள் பற்றிய கருத்தரங்குகள் ஒழுங்கு செய்வதும், உளநலனைப் பேணுவது தொடர்பான ஒழுங்குகளை நடைமுறைப்படுத்துவதும் வசந்தத்தின் நோக்கமாகும்.

வசந்தத்தில் கொடுக்கப்படும் சேவைகள்

பார்வதி கந்தசாமி


தமிழ்ப் பண்பாட்டைக் கருத்தில் கொண்டு வழங்கப்படும். சேவைகள் தமிழில் வழங்கப்படும். தமிழ் மொழிபெயர்ப்பு உதவியுடனான சேவைகளைப் பெறுவதற்கான வாய்ப்புகள் வசந்தத்தில் உண்டு. பல தொண்டர்களும் வசந்தத்தில் சேவைகள் வழங்குகின்றனர். சமூகத்தில் உள்ள பிற நிறுவனங்களை இணைத்து அவற்றுடன் இணைந்து கருத்தரங்குகள் முதலானவற்றை வசந்தம் நடைமுறைப்படுத்தும். வசந்தம் முதியோர்களும் அவர்களது குடும்பத்தினரும் தங்களது பிரச்சனைகளை மனம் விட்டுப் பேசி ஆறுதல் தேடி வந்து, ஆறுதல் பெறும் ஒரு நிறுவனமாக இயங்கும். வசந்தத்தின் நோக்குகள்:
* முஸ்லிம் தமிழர்கள் உட்பட்ட சகல தமிழ் முதியோர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்குமான நிறுவனமாக இயங்கும். பிற சமூக நிறுவனங்களுடன் தனிப்பட்ட நிறுவனங்களும் இணைந்து சேவைகள் வழங்கும்.
* முதியோர்கள் சுயமாக தமது உரிமைகளைக் கேட்கும் சக்தியை ஏற்படுத்தல்.
* சமூகத்திற்குக் கல்வியூட்டல்.
* பண்பாடு அறிய வைத்தல்.
* சமூகம் சூடிய சேவைகளைப் பெறுவதற்குத் தொண்டர்களைப் பயிற்றுதல்

வசந்தத்தில் கீழே காணப்படும் சேவைகள் வழங்கப்படக் கூடியதாக இருக்கும்.
* தகவல் கொடுத்தலும் சேவை இணைப்புகள் ஏற்படுத்தலும்.
* ஆலோசனை வழங்குதல்.
* வாதாடி உரிமைகள் பெற வழிவகுத்தல்.
* மொழிபெயர்ப்பு
* தமிழிலும் ஆங்கிலத்திலும் சேவைகள்
* ஆலோசித்தல்
* பண்பாடு - துவேஷ எதிர்ப்பு தொடர்பான கல்வியூட்டல்
* சமூக மாநாடும் கல்வியூட்டலும்
* உளநலன் தொடர்பான சேவைகள் - இணைப்பு ஏற்பாடு
* வெவ்வேறு பரம்பரையினருக்கான உறவை வளர்க்கும் திட்டங்கள்
* பண்பாட்டுக்கு உகந்த வைத்திய சேவைகள்
* இன்ரநெற் பயிற்சி
* ஆராய்ச்சிகள்

முது தமிழர் மன்றம், ஸ்ரீலங்கா தமிழ் முதியோர் மன்றம், ரொறன்ரோ தமிழ் முதியோர் மன்றம், செயற்பாட்டுக் குழு, இன இனக் குழுமத் திட்டம் ஆகியவை அங்கத்துவம் வகிக்கின்றன. வசந்தத்தின் சேவைகள் பாகுபாடின்றி எல்லா முதியோர்களுக்கும் அவர்களது குடும்பத்திற்கும் உண்டு. அங்கத்தவர்கள் மாத்திரம் வசந்தத்தின் சேவையைப் பெறுபவர்களாக இருக்க மாட்டாது. குடும்ப சேவைகள் சங்கம், சென்ற் மைக்கல் வைத்தியசாலையின் நகர்ப்புறத் திட்டம், நுட்பம், சென் ஜோசப் பெண்கள் நிலையம், சென்ற் கிறிஸ்தோபர் இல்லம், எல்லைகளுக்கு அப்பால் சேவை, தெற்காசியப் பெண்கள் நிறுவனம் ஆகியவை சேவைகளை வசந்தத்தில் வழங்கும். பல்வேறு நிறுவனங்கள் தமிழ் மக்களுக்கான கல்வியூட்டலைச் செய்யவுள்ளன.

கனடியத் தமிழர் புடவை விற்பனையாளர் சங்கம்

ஒன்ராறியோவில் புடவை வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கும் ஈழத்தமிழர்கள் ஒன்றுசூடி 'கனடிய தமிழர் புடவை விற்பனையாளர் சங்கம்' அமைத்துள்ளனர். சங்கத்தின் முதல் நடவடிக்கைகளில் ஒன்றாக, ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும் சகல புடவை விற்பனை நிலையங்களையும் மூடுவது என்று முடிவெடுக்கப்பட்டதுடன், பெப்ரவரி முதலாம் திகதியிலிருந்து இது நடைமுறைக்கும் வந்துள்ளது. சங்கத்தின் தலைவராக திரு ஐ. உதயனும் (கௌரி சில்க்ஸ்), உபதலைவராக திரு. கே. மகேந்திரனும் (மஞ்சுளா பாஷன்ஸ்), செயலாளராக திரு. எஸ் செந்தில்வேலும் (நல்லி சில்க்ஸ்), உபசெயலாளராக திரு. பி. ஜெயகுமாரும் (6 குமார்ஸ்), பொருளாளராக திரு. பி. இந்திரகுமாரும் (நீலம் சில்க்), உபபொருளாளராக திரு. வி. சிவபாதமும் (ராதிகா ரேட்ஸ்) தெரிவாகினர். திருவாளர்கள் ஐ. இராசேந்திரம் (விஜயா சில்க்), திரு. ரிஷிகேசன் (நல்லூர் குமரன்), திரு. கே. சுந்தரலிங்கம் (சாமி அன் சன்ஸ்) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.



Dr. Shan A. Shanmugavadivel & Associates

இருபத்தைந்து வருடங்களுக்கு மேலான
பல்வைத்திய அனுபவம் பெற்றவர்.

டாக்டர் அ. சண்முகவடிவேல்

குடும்ப பல்வைத்தியர்

• General Dentistry • Orthodontics • Implants

சகல பல் வைத்திய சேவைகளும், கிளிப் போடுதல் ஆகியனவும்.

RAINBOW VILLAGE DENTAL OFFICE

2466 Eglinton Avenue East, Unit:7
Scarborough, Ontario. MIK 5J8

திங்கள், செவ்வாய், புதன்(காலை), வியாழன், வெள்ளி, சனி
Near Kennedy Subway (Rainbow Village கட்டடத்தில்)

(416) 266 5161

Main Square Dental Office

Main Square Medical & Dental Office
2575 Danforth Avenue, Toronto, ON. M4C 1L5
(திங்கள் முதல் சனி வரை)

(416) 690 0121

DR. SHAN - புதன் (மாலை)

Associates:

DR. S. THAVAMANY - செவ்வாய், சனி

DR. LI (திங்கள்) **DR. ASHRAF** (புதன், வியாழன்) **Dr. Karimi** (வெள்ளி)

Why do other driving courses say they're *just like* YOUNG DRIVERS®?

மற்றைய வாகன சாரதிப் பயிற்சியாளர்கள் தாங்களும் 'யங் ட்றைவர்ஸ்' போன்றவர்கள் என்று ஏன் கூறுகின்றனர்?

Maybe it's because YOUNG DRIVERS® has *thirty years* of experience teaching collision avoidance.

And over *half a million graduates,* coast to coast.

And *more than a million dollars* invested in driver training research, plus *another million* invested in annual recertification programs for our instructors over the past 10 years.

And has achieved Registration to the coveted *ISO 9001 Quality Assurance Management Standard.*

No matter *what* they say, no one else is *anything* like YOUNG DRIVERS®!



வாகன விபத்துத் தவிர்ப்புப் போதனையில், யங் ட்றைவர்ஸ்க்கு முப்பது வருட அனுபவம் இருப்பது காரணமாக இருக்கலாம்.

அத்துடன் அரை மில்லியன் பேர் நாடு முழுவதும் பயிற்சி பெற்றுள்ளனர்.

வாகன பயிற்சி ஆய்வுக்காக ஒரு மில்லியன் டாலருக்கும் மேலான பணத்தை முதலீடு செய்துள்ளோம்; மேலும், எங்கள் போதனாசிரியர்கள் தங்கள் சான்றிதழ்களை மீண்டும் புதுப்பிக்கும் வருடாந்த நெறிக்காக மேலும் ஒரு மில்லியன் டாலர்களைக் கடந்த பத்தாண்டுகளில் முதலீடு செய்துள்ளோம்.

அத்துடன் *தராதர உத்தரவாத முகாமைத்துவ* தகுதியான ISO 9001 பதிவினையையும் பெற்றுள்ளோம்.

மற்றையவர்கள் என்ன சொன்னாலும், யங் ட்றைவர்ஸ்க்கு நிகராக எவருமே இல்லை!

YOUNG DRIVERS® of Canada

That's what parents are *for.* ISO 9001 REGISTERED

An Enterprise of

Ford

Ford Motor Company of Canada, Limited

www.youngdrivers.com

Call your local Centre for information on the YD program, course dates, our free co-driver program and a video brochure.

30 Convenient Classrooms in the G.T.A.

Agincourt 322-7000
3430 Finch E./Warden

Ajax 426-9362
Baywood Centre

Bolton 857-2295
6 Queen St. N./King

Brampton 459-0413
71 Rosedale Ave. W./Main
Bramalea Civic Centre

Etobicoke 322-7000
3084 A Bloor W./Royal York
1500 Royal York/Eglinton

Georgetown 877-0751
16 Mountainview Rd.S./Hwy 7

Markham 944-0478
4560 HWY. 7/W. of Kennedy

Milton 875-0480
243 Main St. E./Martin

Mississauga 821-0781
93 Dundas St. E./Hurontario
2155 Leanne Blvd./Erin Mills
1965 Britannia Rd. W./Queen

North York 733-8208
5460 Yonge St./Finch Ave.
Fairview Mall

Oakville 845-7200
235 Lakeshore Rd. E./Dunn

Oshawa 426-9362
38 Simcoe St. N./Bond

Pickering 426-9362
1885 Glenanna Rd./Hwy 2

Richmond Hill 737-0452
10330 Yonge St

Scarborough 733-8208
2300 Lawrence Ave. E./Kennedy
Morningside Mall

Stouffville 640-1229
20 Freel Lane/at the GO Station

Thornhill (416) 733-8208
Promenade Shopping Centre

Toronto 322-7000
36 Eglinton Ave. W./Yonge
180 Bloor St. W./Avenue Rd.
Yorkdale Shopping Centre

Toronto East 733-8208
2615 Danforth Ave./Main St.

Uxbridge 1-888-932-3748
15 Brock St. W./Main

Whitby 426-9362
101 Dundas St. W./Brock

Woodbridge (416) 733-8208
7730 Islington Ave./Hwy 7

Gift Certificates Available

VISA MasterCard AMERICAN EXPRESS



LAW OFFICES

யசோ சின்னத்துரை
பரிஸ்டர், சொலிசிற்றர் & நொத்தாரிஸ்

- வீடு கொள்முதல், விற்பனை - உறுதி எழுதுதல்
- வர்த்தக ஸ்தாபனங்கள் கொள்முதல், விற்பனை, பதிவு
- சிவில் வழக்குகள், முக்கியமாக சமரச வழியில் பிணக்குகளைத் தீர்த்தல்
- குடிவரவு அகதி விசாரணை
- குடும்ப விவகார சட்ட உதவி, பிரதிநிதித்துவம்
- உயில் தத்துவப் பத்திரங்கள் தயாரித்து அத்தாட்சிப்படுத்துதல்
- சத்தியப் பத்திரம் தயாரித்து அத்தாட்சிப்படுத்துதல்
- மற்றும் பொதுத் தேவைகளுக்கான சட்ட ஆலோசனைகளும் வழங்கப்படும்

அலுவலகங்களில் நேரடியாகச் சந்திப்பதற்கு தயவுசெய்து
முன்கூட்டியே நேரம் ஒழுங்கு செய்து கொள்ளவும்.
வீடு உறுதி எழுதுவதற்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

YASO SINNADURAI
Barrister & Solicitor, Notary Public


2555 Eglinton Ave. E., Suite 204
Scarborough ON M1K 5J1
Tel: (416) 265-3456
Fax: (416) 265-2770

Mississauga Branch Office:
3038 Hurontario St., Suite 203
Tel: (905) 306-1100

மிசிசாகா, ஒக்வில், பிறாம்ரன், எற்றபிக்கோ ஆகிய நகரங்களில் இருந்து எமது சேவையை நாடுபவர்கள் எமது மிசிசாகா அலுவலகத்தின் ஊடாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.

ஒன்ராறியோ நுண்கலைக் கூடம்
Ontario Academy of Fine Arts





Ontario Academy of Fine Arts

வாய்ப்பாட்டு	Vocal
வீணை	Veena
புல்லாங்குழல்	Flute
வயலின்	Violin
மிருதங்கம்	Mrudhangam
கடம்	Ghatam
தபேலா	Tabla
பரதநாட்டியம்	Bharathanatyam
கிற்றார்	Key Boarding
	Piano
	Guitar
	Drum

Ontario Academy of Science

- Tamil (Free)
- Math (All)
- Science
- English (E.S.L.)
- English (Regular)
- Physics
- Biology
- Chemistry
- Accounting
- French

தொடர்புகளுக்கு: சங்கர் அல்லது மோகன்

Tel: (416) 609 - 8314 / (905) 294-5887

1240 Ellesmere Road, #209, Scarborough, Ont. M1P 2X4



unisource

With our comprehensive range of products, programs, and services, Unisource Canada, Inc. offers you the key to all your paper requirements.

Tap into our extraordinary abundance of textured, coated, and uncoated grades.

Show your true colours with our enticing lines of recycled and environmentally friendly stocks. With Unisource your choices are endless.

UNISOURCE CANADA, INC.

Unisource is Canada's largest single source distributor of fine paper, graphic supplies, specialty packaging, and supply systems. Our level of expertise, range of products, delivery capability and depth of inventory is unequal in Canada. We can provide value added solutions to your greatest challenges, and everyday business needs - all through a single, reliable source.

East Office
50 East Wilmot Steet
Richmond Hill, ON. L4B 3Z3
Tel: 905-771-4000
Fax: 905-771-4241
Out of Town: 1-800-268-6700

West Office
560 Hensall Circle
Mississauga, ON. L5A 3S7
Tel: 905-276-8400
Fax: 905-276-8583
Out of Town: 1-800-268-2906

PORTELLO

(416) 293 6555

போர்ட்டலோ

127 வருட வரலாறு கொண்டது.
கனடிய சுகாதார சட்டங்களுக்கு
அமைய, சுத்தமான ஊற்று நீர்
பயன்படுத்தப்படுகின்றது.
கபெயின் கிடையாது.



BAY HILL IMPEX LTD.

70 WEYBRIGHT COURT, UNIT# 6
SCARBOROUGH, ON. M1S 4E4
tel: (416) 293 6555 fax: (416) 293 6459
e-mail: info@portello.com

Get linked FREE @ **www.portello.com**

We guide your future...



Computek

INSTITUTE OF TECHNOLOGY

Information Technology Training begins with us...

Scarborough Campus

2390 Eglinton Ave. East Suite 248
(Just above the Kennedy & Eglinton Public Library,
3 minutes walking distance from Kennedy Subway)
Tel: (416) 285 9941

Etobicoke Campus

222 Dixon Rd. Suite 306
Bank of Montreal Bldg.
(Dixon & Islington)
Tel: (416) 244 2278

Toronto Campus

203 College St. Suite 201 - 205
walking distance from Queens Park Subway
Tel: (416) 585 9880

Pickering Campus

1550 Kingston Road, Suite 19
Pickering
Tel: (905) 831-8888



கலைமகள் புத்தக நிலையம்

இலங்கை, இந்திய பத்திரிகைகள்,
சஞ்சிகைகள் விற்பனையாளர்.

தரித பணமாற்றுச் சேவை

நம்பிக்கை
நாணயம்
உத்தரவாதம்

TORONTO
Parliament & Wellesley
595 Parliament Street
Tel: (416) 944-1818
Fax: (416) 944-3424

SCARBOROUGH
Eglinton & Markham
3238 Eglinton Ave. East
Tel: (416) 265-3605

SCARBOROUGH
Kennedy & Finch
3852 Finch Ave. East
Tel: (416) 292-9319

MISSISSAUGA
Dundas & Hwy 10
2580 Shepard Ave. #9
Newin Centre Mall
Tel: (905) 306-0494



Yogi Tambiraja
Financial Consultant
Merrill Lynch Canada Inc.

Who can you turn to for solid financial advice?

As a Financial Consultant with Merrill Lynch Canada Inc., **Yogi Tambiraja** brings to his clients more than **30 years of experience** in the financial and investment industries. A very strong background in accounting and international finance, means that all of Yogi's clients have the power of experience on their side. This experience includes his tenure as Controller for two U.S. multi-national companies, and his position as Auditor for World Bank funded projects in West Africa.

For the past 10 years, Yogi has established an enviable track record **administering in excess of $40 million in assets for his over 400 clients.** The skills and insights gained during the challenging economies of the 1980s and early 1990s, add to the value that Yogi brings to his clients.

Specific services offered include:
- Retirement Planning
- Tax Advantaged Investments
- Estate Planning
- Education Planning
- Employee Benefit Plans
- Defined Contribution Pension Plans
- Insurance Planning

Merrill Lynch

For a FREE consultation call: (416) 496-6509

2005 Sheppard Ave. E., Suite 500, Willowdale, ON, M2J 5B4. Merrill Lynch Canada Inc. is a member of CIPF.
(Minimum $50,000 in investable assets.)

VIJAYA'S SILK

- மங்கையர் மனம் கவரும் நவநாகரிக பட்டாடைகள்
- பஞ்சாபி உடைகள்
- கூறைப் புடவைகள்
- ஆண்களுக்கான பட்டு வேட்டிகள்
- சிறுவர், சிறுமியருக்கான ரெடிமேட் உடைகள்
- எந்த நிறமானாலும் ஏற்ற சாறிபிளவுஸ் துணிவகைகள்
- பரத நாட்டியத்திற்குத் தேவையான உடைகள்
- அன்பளிப்பு அழகுசாதனப் பொருட்கள்
- எவர் சில்வர் பாத்திரங்கள்

Tel: (905) 273-7997
Fax:(905) 273-7323

27 Dundas Street East, Mississauga

அம்பாள் ரேடிங் கம்பனி

தரமான பொருட்கள்!
நியாயமான விலை!
கனிவான உபசரிப்பு!

வாடிக்கையாளர்களின் வரவேற்பைப் பெற்ற வர்த்தக நிலையம்

சகல தானிய வகைகள், மரக்கறி வகைகள்
இலங்கை, கனடிய குளிர் பானங்ககள்
கோழி இறைச்சி, ஆட்டிறைச்சி
கடலுணவு வகைகள்
பத்திரிகைகள்

யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப்பட்ட
இடியப்ப உரல், புட்டுப் பானை
ஆகிய அனைத்தையும்
எம்மிடம் மலிவாகப் பெறலாம்.

AMBAL TRADING CO
483 பார்லிமென்ட் வீதி, ரொறன்ரோ
(416) 928-6665

Tel: (416) 499-9596
Fax: (416) 499-9382
Pgr: (416) 541-0464



2190 Warden Ave.,
Suite# 203
Scarborough, On M1T 1V6
(Warden / Sheppard)

A. VELUPPILLAI

" VEL "

WE ARRANGE ALL INSURANCE & INVESTMENT

LIFE	AUTO	HOME
STORE	DISABILITY	MEDICAL
TRAVEL	MORTGAGE	EDUCATION
MUTUAL FUND	R.R.S.P	INVESTMENT
COMMERCIAL	CLAIMS	INDUSTRIAL


15TH YEAR IN CANADIAN INSURANCE & INVESTMENT

INTERNATIONAL
INSURANCE
FINANCIAL - SERVICE
BROKERS

எமது இலாபம் தமிழ் வளர்ச்சிக்கு'


புதிய நூற்றாண்டின் கல்விச் சவாலைத் துணிவுடன் எதிர்நோக்க

V V TUTORING CENTRE ஐ



நாடுவோம்

புதிய கற்கை நெறிகளாக



தரம் 03, 06க்கான மாகாணப் பரீட்சைக்குரிய துரித மீட்டல் வகுப்புகள் 22-01-2000ல் ஆரம்பமாகின்றன.

WATERLOO பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் GAUSS CONTEST (Gr 7 & 8 க்கான கணிதப் போட்டி) பயிற்சி வகுப்புகள் 15-01-2000ல் ஆரம்பமாகின்றன. இப்போட்டிக்கு எங்கள் ஊடாகவும் மாணவர்கள் தோற்ற முடியும்.

மாணவர்களுக்கான Computer வகுப்புகள் 22-01-2000ல் ஆரம்பமாகின்றன.

இத்துடன்

சகல தரத்தினருக்குமான எல்லாப் பாடங்களும் வார நாட்களில் பிற்பகலிலும், வார இறுதியிலும் ஒன்ராரியோவில் கற்பிப்பதற்கான தகமை பெற்ற, பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர் குழுவினால்

Bellamy/Ellesmere **Kennedy/Eglinton**

ஆகிய இடங்களில் நடாத்தப்படுகின்றன.

உயர் வகுப்பு மாணவர்களுக்கான புதிய செமஸ்டர் வகுப்புகள் 05-02-2000ல் ஆரம்பமாகின்றன






தொடர்புகட்கு:

வீ வீ ரியூரறிங் சென்ரர்

Tel: (416) 759-5172 / (416) 701-1763

கட்டணம் குறைந்தது! சேவை உயர்ந்தது! மாணவர் முன்னணியில்!


Royal Grocery



இலங்கை - இந்திய - கனடிய
உணவுப் பொருட்களுக்கும்

தமிழ் ஒடியோ
வீடியோ கஸட்டுகளுக்கும்
பெயர்பெற்ற வர்த்தக நிலையம்

We specialst in Tamil Audio & Video
and East & West Indian Groceries





றோயல் குறோஸரி

653 Victoria Park Av., Scarborough, ON M4C 5P1


Tel: (416) 693 8078 Fax: (416) 693 8209

கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா?

துரித பணமாற்று சேவை

43 ஆண்டுகள் வர்த்தகத்துறையின் முன்னோடிகளும் கடந்த 10 ஆண்டுகள்
கனடாவில் துரித பணமாற்று சேவையில் தமிழ் மக்கள் மத்தியில் புகழ் பெற்றவர்கள்


நீங்கள் அனுப்பும் பணம் பாதுகாப்பாகவும்
விரைவாகவும் சென்றடைய நாடுங்கள்






மு. காசிப்பிள்ளை
சக புத்திரர்கள்

எமது புதிய அறிமுகம்




வாடிக்கையாளர்களின் வசதி கருதி
வங்கி அட்டை (Bank Client Card) மூலம்
எமது காரியாலயத்தில்
பணம் அனுப்ப முடியும் என்பதையும்
அறியத்தருகின்றோம்



தொலைபேசி தொடர்புகளுக்கு

(416) 267-8221



இளைய தலைமுறையின்
நேரடி நிர்வாகத்தில் நம்பிக்கை, நன்மதிப்பு,
நாணயம், தேவைகளுக்கு எங்களுடன் தொடர்பு
கொள்ளுங்கள்.


M. Kasippillai & Sons Inc.


3228 Eglinton Ave. East, Suite #3 Scarborough, Ont. M1J 2 H6

HOGAN

வாகனம் என்றதும் நினைவுக்கு வரும் பெயர்

புதிய, பழைய
வாகனங்களை
உத்தரவாதத்துடன்
குறைந்த வட்டி வீதத்தில் பெற்று
தொடர்ந்தும் நம்பிக்கையான
பராமரிப்புச் சேவைக்கு
நாடுங்கள்





ரட்ணம் கணேஷ்

for Great Savings
and personal Satisfaction

HOGAN CHEV OLDS LTD

5000 Sheppard Av. East, Scarborough, ON

Tel: (416) 291-5054

Cell: (416) 937-5985

உலகின் மிகப்பெரும்
தமிழ் லேசர் இசைக் களஞ்சியமான

JEYA AND BROTHERS LTD.

வழங்கும் மாபெரும் மலிவு விற்பனை
இப்போது நடைபெறுகிறது!



ஒடியோ சீ.டீ

3.50 முதல்

வீடியோ சீ.டீ

4.99 முதல்

ஜெயா அன்ட் பிரதர்ஸ்

HEAD OFFICE
2396c Eglinton Ave. East
Scarborough, ON
Canada
M4X 1P8
Tel: (416) 759-9540
Fax: (416) 759-4819

Mississuaga (Branch)
40d Dundas St. East
Mississuaga
Tel: (416) 272-8828

Scarborough East (Brach)
5633 Finch ave. East, Unit-5
Scarborough
Tel: (416) 332-0961
Fax: (416) 332-8959

Vancouver(Branch)
404, 8 Ave East #104
Vancouver. B.C.
Tel: (604) 871-0564

www.jeyaandbrothers.com

P. KAYILASANATHAN B.A (CEY) LLB (CEY)


BARRISTER & SOLICITOR

- குற்றவியல் வழக்குகள்
- அகதிநிலை விசாரணைகள்
- மனிதாபிமான விண்ணப்பங்கள்
- வீடு, வியாபார ஸ்தாபனங்கள் வாங்குதல் - விற்றல்
- குடும்ப வழக்குகள்
- வாகன விபத்து
- நஷ்டஈடு கோருதல்



பொ. கயிலாசநாதன்


கனடிய பாரிஸ்டர்



2401 Eglinton Av. East, Suite. 302 (Eglinton/Kennedy)
Scarborough, ON M1R 2M5
Tel: (416) 752 9561 Fax: (416) 752 7262

உங்கள் நலன் கருதி,
சகல பல்வைத்திய சேவை வசதிகளுடன்
எமது புதிய அலுவலகம் KENNEDY & FINCH இல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்பதை
மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

பற்களை ஒழுங்குபடுத்துவதில் பட்டம் பெற்ற ஒரேயொரு தமிழ் பல் வைத்தியர்



டாக்டர். இளங்கோ முத்துக்குமாரு
DR. M. ILLANGO B.D.S,D.ORTH
GENERAL PRACTITIONER - Mainly ORTHODONTICS.

சகல பல் வைத்தியத்துக்கும் ஆலோசனைக்கும்

FAMILY DENTIST குடும்ப பல் வைத்தியர்

DR. JANAKI ILLANGO
டாக்டர். ஜானகி இளங்கோ

தமிழில் தொடர்புகொண்டு பல்வைத்திய சேவையை பெற்றுக்கொள்ள


ILLANGO & ASSOCIATES
3852 Finch Ave. East Unite 303, Scarborough, ON.
Tel: (416) 292 7004, Fax: (416) 292 7006

SCARBOROUGH
செவ்வாய், வியாழன், சனி,
EllesmereProf.Budg.
919 Ellesmere Rd. Suite 102
Tel: (416) 752 3455

எமது மற்றய அலுவலகங்களிலும்
வழமைபோல் எமது சேவைகளைப் பெற்றுக்
கொள்ள முடியும்.

MISSISSAUGA
வெள்ளி, சனி
3660 Hurontario St. 2nd Fl
(Hurontario/ Burnenthope)
Tel: (905) 272 3455

EDUCATION FUND
SERVICES INC



SIVA KANAPATHYPILLAI
Associate Director

Bus : (416) 279-0777
Fax : (416) 279-0008
Dir : (416) 279-1953
Res : (416) 412-1987

80 Corporate Drive, Suite 309
Scarborough, Ontario, M1H 3G5

THE CHILDREN'S EDUCATION TRUST OF CANADA


24 Hrs. சேவை

- ❑ அகதிக்கோரிக்கை
- ❑ ஸ்பொன்சர்
- ❑ லாண்டட்

மற்றும்

- ❑ களவு / மோசடி
- ❑ அடிதடி
- ❑ வாகன வீதி விதிகள் மீறிய குற்றங்கள்

தமிழ் மக்களின் நன்மதிப்பைப் பெற்ற சிறந்த
கனேடிய சட்டத்தரணிகளின் இலவச ஆலோசனைக்கும்



பல ஆண்டுகள் வெற்றியின் அனுபவங்கள்

TRAFFIC TICKET SPECIALIST

646 Oakwood Ave. Unit# 2 (at Eglinton)

- ☞ SPEEDING
- ☞ RED LIGHT
- ☞ STOP SIGN
- ☞ SEAT BELT

எதுவானாலும் $150.00 மட்டுமே
முற்பணம் தேவையில்லை
தேவை உங்கள் ரிக்கட் மட்டுமே.

நேரத்தையும்
பணத்தையும்
சேமியுங்கள்

- ☞ CARELESS
- ☞ ACCIDENT
- ☞ FAIL TO REMAIN
- ☞ FAIL TO REPORT
- ☞ IMPAIRED
- ☞ OVER 80



தொடர்புகளுக்கு

பீற்றர் யோசப்

Tel: (416) 537-7737
Fax: (416) 537-9035

குவாலிற்றி பூக்கடை



ரொறன்ரோ நகரில் முதன் முதலாக ஈழத்தமிழர்களின் நிர்வாகத்தின் கீழ்
25 வருட அனுபவத்தின் கை வண்ணம், அழகான பூ வண்ண மாலைகள்
சோலைகளாய் சோபிக்கும் தமிழ் மலர்த்தோட்டம்

உங்கள் மங்களகரமான
அனைத்து தேவைகளுக்கும்
பிள்ளையின் சிறந்த சேவையைப் பெற்றிட
நாடுங்கள்
குவாலிற்றி பூக்கடையை!
மற்றும் மரணச்சடங்குகளுக்கு
தேவையான மலர்வளையம், பூச்சோடனைகள்,
Casket, Spray Casket அலங்காரம்
போன்ற அனைத்து
தேவைகளையும்
நியாய விலையில் பெற்றிட அழையுங்கள்.

உங்களுக்கு பணிவன்புடன்
சேவை செய்யக் காத்திருக்கும்

மாஸ்டர் அல்லது பிள்ளை

TEL: 416-288-9848 HOME: 416-759-7360
CELL: 416-723-4230

1662 VICTORIA PARK AVE.
(ஸ்ரீவள்ளி ரெக்ஸ்ரைல்ஸ் இன் கீழ்ப்பாகத்தில்)
தொடர்புகளுக்கு பிள்ளை அல்லது மாஸ்டர்

1662 விக்ரோறியா பார்க் ஸ்ரீவள்ளி புடவைக் கடையினுள்ளே குவாலிற்றி பூக்கடை

விருந்து என்றதும் எல்லோர் மனதிலும் நினைவிற்கு வருவது கிராமத்து விருந்து



கிராமத்து விருந்து

கனடாவில் முதல் முதலில்
தலைவாழையிலையில்
விருந்து படைத்தவர்கள்



பாரம்பரிய தமிழர்
கலாசாரத்துடன்
இனிதான
விருந்தோம்பலுடன்
அறுசுவை
உணவுகளை
உண்டு மகிழ்ந்திட

Sri Lankan and South Indian Restaurant

Kiramathoo Virunthoo

Tel: (416) 266-4240 / (416) 424-2164

603 Kennedy Road, Scarborough, Ont.

GET E-COMMERCE CERTIFIED

Microsoft Windows 2000 Server

- **E-Commerce, Web & ASP Application**
  Web Design, VB Script, Active Web Database, TCP/IP, Front Page 2000, Visual Basic Web Database, Internet Connectivity
- **OOP, ActiveX, COM,ADO Programming**
  Visual Basic 6
  C++ / Visual C++ 6
  Java / Visual J++
- **Database & Client / Server Programming**
  Oracle Developer 2000 with SQL, PL-SQL, DBA
  Visual Basic 6 Client / Server
- **CISCO CERTIFICATION COURSE**
  CCNA - Cisco Certified Network Associate
- **ALL MICROSOFT CERTIFIED COURSES**
  MCSE, MCSD, MCDBA, MOUSE, SQL, Exchange Server

Microsoft Certified Professional

A+

Authorized
PROMETRIC
TESTING CENTER™

Open 7 days a week
9.00 am to 6.00 pm

Visit our web - www.netcom-technology.com

416 438 3737
416 265 2750

NetCom
TRAINING & TECHNOLOGY INC.

Email: netcom@interlog.com

Head Office: 1200 Markhan Road # 525
Branch : 3150 Eglinton Ave., E. Suite 06

கணபதி கிரியா பவனம்

சிவஸ்ரீ சிவசுப்பிரமணிய ஐயர்
(மறுவன்புலோ சாவகச்சேரி)
வள்ளக்குளம் பிள்ளையார் கோவில்
(நானாட்டான்)
செல்வமுத்து மாரியம்மன் கோவில்

சிவஸ்ரீ சிவ ஜெயகாந்த குருக்கள்
(Hindu Priest)
(Marriage Registrar)
(மறுவன்புலோ சாவகச்சேரி)
வள்ளக்குளம் பிள்ளையார் கோவில்



திருமணம், பதிவுத்திருமணம், ருதுசாந்தி மற்றும் அனைத்து இந்துமத கிரிகைகளும்
திருமணத்துக்குத் தேவையான பூ மணவறை, முத்து மணவறை, சோடனை,
Scarborough, Toronto, Etobicoke ஆகிய இடங்களில் மண்டப ஒழுங்குகளும்
குறைந்த செலவில் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு

(416) 695-0666 / (416) 917-7717

NORWICH UNION

Leading Insurance Company



T. K. THEVARAJAH
Sale's Excellence
Award Winner

- ஆயுள் காப்புறுதி
- ஸ்கொலர்ஷிப்
- வைத்தியம்
- வலது குறைந்தோர்
- பிரயாணம்
- முதலீட்டுத் திட்டங்கள்
- வியாபாரம்

அனைத்திலும் நீண்ட கால அனுபவமுடையவர்

த. க. தேவராஜா

'நோர்விச் யூனியன்' அதிசிறந்த விற்பனையாளர் விருது பெற்றவர்
(இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன முன்னாள் உத்தியோகத்தர்)

உங்கள் தேவைகளுக்கு தமிழில் பேசி
இவருடன் உரையாடலாம்

Tel: (416) 321-8744

எஸ்.கே.சுப்பர் மார்க்கட்

உங்களுக்குத்
தேவையான இலங்கை,
இந்திய, கனேடிய
உணவுப் பொருட்களுக்கு
நம்பிக்கையான
ஸ்தாபனம்

உடன் மரக்கறி
வகைகளையும்,
இறைச்சி, மீன்
வகைகளையும்
பெற்றுக்கொள்ள
இன்றே நீங்கள்
நாடவேண்டிய
ஸ்தாபனம்

ASKAI
SUPER MARKET

வீடியோ கசற்றுகள் வாடகைக்கு விடப்படும்

1230 KING ST. WEST, TORONTO, ONT. M6K 1G4

TEL: (416) 538-7400

ஓம்
ஸ்ரீ ஐயப்பன் துணை


சங்கர் அன் கம்பனி

இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்

Audio, Video, CDs, Video CD, D.V.D

'தமிழர் தகவல்' ஆண்டு மலர் சிறப்புற அமைய எங்களது வாழ்த்துகள்!

திருமணம், பரத நாட்டியம்
பூப்புனித நீராட்டு வைபவம்
புதுமனை புகுவிழா,
மற்றும் அனைத்து வைபவங்களுக்கும்
தேவையான பொருட்களுக்கு இன்றே நாடுங்கள்.
உங்கள் நண்பன்
சங்கர் அன் கோ



Rice Cookers
Coffee Grinders
Blendes
Sumeet Asia
Kitchen Machine

Caram Boards
Cricket Bats
Wickets
Veena, Thabela
Flutes Ano

other Gift Items

கலை, கலாசாரப் பொருட்கள்
சுவாமிச் சிலைகள்
பூஜைப் பொருட்கள், அலங்காரப் பொருட்கள்
மற்றும் அனைத்துக்கும்

Shankar International

Importers - Wholesalers - Retailers

2425 Eglinton Ave. East, Unit 6, Scarborough, Ontario M1K 5G8

இப்பொழுது
பன்னிரண்டாவது
ஆண்டு

VASANTHA
JEWELLERY

வசந்தா
நகைமாளிகை



மிசிசாகாவில்

வசந்த மாளிகை

வசந்தன் பத்மநாதன் பத்தர்

1230 Bloor Street West
Toronto, ON. M6H 1N3

(905) 712-0312

(416) 536-3956

ஸ்ரீ வித்யா பீடம்

அனைத்து இந்து மத கிரியைகள் சேவை

சிவஸ்ரீ தியாக முருகானந்த குருக்கள்

இந்து மத குரு, திருமணப் பதிவு அதிகாரி (நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி)

(416) 299-4957



(416) 299-4957

திருமணம், பதிவுத்திருமணம் மற்றும்
அனைத்து இந்துமத கிரியைகளும்
நிறைவேற்றி வைக்கப்படுவதுடன்
மங்கள வைபவங்களுக்குத் தேவையான
மண்டப ஒழுங்குகளும் செய்து தரப்படும்.

30 Dundalk Dr., Unit. 88, Scarborough, ON M1P 4W1

யாழ்ஸ் சுப்பர் ஸ்டோர்

பார்லிமென்ட் - வெலஸ்லி சந்திப்பின்
முன்னணி வர்த்தக நிறுவனம்

கனடிய, மேற்கிந்திய, இலங்கை உணவுப் பொருட்கள்
உடன் மீன் வகைகள், இறைச்சி வகைகள்
மரக்கறி வகைகள், பழ வகைகள், சிற்றுண்டி வகைகள்
மற்றும் வீடியோ, ஓடியோ, லேஸர் இசைத்தட்டுக்கள்
அனைத்தையும் ஒரேயிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.



YARL'S SUPER STORE

607, பார்லிமென்ட் வீதி, ரொறன்ரோ

தொலைபேசி:
(416) 923-9806

மிஸிஸாகா நகரில்!!!

தர்ஷனாஸ்

சுப்பர்மார்க்கட்

**Fresh Tropical Fine Food, Fish & Meat,
Milk, Vegetables, Fruits, Etc.**

இலங்கை, இந்திய, கனேடிய உணவுப் பொருட்கள்
உடன் மீன், இறைச்சி, மரக்கறி வகைகள்
தரமான வீடியோ, ஓடியோ அனைத்தும் ஒரே இடத்தில்..

THARSHANAS SUPERMARKET

2706 Kipling Ave
Kipling & Steel

(416) 745- 3317

3413 Fieldgate Dr.
(Near Fieldgate & Bloor)
Mississauga, Ontario

(905) 625-8152

27 Dundas St.East
(Near Dundas &
Hurontario)
Mississauga, Ontario

(905) 270-7576

முருகன் புத்தகசாலை







MURUGAN BOOK DEPOT

1241'A Ellesmere Road, Scarborough, ON

Tel: (416) 285-9118


ஸ்ரீ கரன் மங்கள பவனம்

சோதிடம் மற்றும் அனைத்து இந்துமத கிரியைகளுக்கும்

சிவஸ்ரீ பொன் - பஞ்சாட்சரக் குருக்கள்

(தங்கோடை காரைநகர்)

(416) 289 9384



(416) 289 9384

திருமணம், பதிவுத் திருமணம் மற்றும் அனைத்து இந்துமத கிரியைகளுக்கும்
வண்ணமிகு அழகுக் கோலங்கள், அழகிய சடைநாகம், பூமாலைகள்
குறைந்த வாடகையில் மண்படங்கள், பூ மணவறை
போன்ற அனைத்து ஒழுங்குகளுக்கும்

Tel: (416) 289 9384

399 Markham Rd, # 517, Scarborough, M1J 3C9

யாழ் கேக் ஹவுஸ்

YAARL CAKE HOUSE



கனடாவில் 13 வருட அனுபவமும், அரச அங்கீகாரமும், பல்லின மக்களின் பாராட்டையும் பெற்றவர்கள்

உங்கள்
திருமணம்,
பிறந்த நாள்,
ஆண்டு பூர்த்தி
மற்றும் சகல
வைபவங்களுக்கும்
தேவையான கேக், சைவக்
கேக், றிச் கேக்
போன்றவற்றுக்கும்
அழையுங்கள்.

உயர்ந்த தரம்! நிறைந்த சுவை!!



from
$9.99

T. Chandra
Tel: (416) 431-6874
(416) 266-4716
Fax: (416) 264-0948

555 Markham Road, Scarborough, ON. M1H 2A3

அபிராமி அச்சகம்

திருமண அழைப்பிதழ்
அன்பளிப்பு உறைகள்
கேக் பெட்டிகள்
சகலவற்றையும்
எம்மிடம் பெறும்போது
விசேட கழிவு வழங்கப்படும்.

உங்கள் திருமணம்,
பூப்புனித நீராட்டு விழா
அழைப்பிதழ்கள்,
அரங்கேற்ற விழா மலர்கள்,
நினைவு மலர்கள்,
தேவாரப் புத்தகங்கள்
அனைத்தையும்
நியாயமானவிலையிலும்
தரமாகவும் செய்து
பெற்றுக்கொள்ள
அழையுங்கள்

Tel: (416) 431-6604
(416) 266-4716
Fax: (416) 264-0948


ஆர் ஜி கல்வி நிலையம்
RG Education Centers

- கணித, விஞ்ஞானப் பாடங்கள்
- ஆங்கிலம், பிரெஞ்சு, தமிழ்
- Basic Programming, Data Entry முதல் பலவித கொம்பியுட்டர் கல்விநெறிகள்
- பியானோ, வயலின், மிருதங்கம், கர்நாடக சங்கீதம்
- கராத்தே, பரதநாட்டியம்

விபரங்களுக்கு:

S. SELVARETNEM
3852 Finch Ave. E, Suite 401
Scarborough, Ont., M1T 3T9

(416) 609-9508



Top Sales Award Winner

A. (Caru) Carunakaran

Sales Representative

240 Alton Towers Cir., Suite. 300
Scarborough, ON. M1V 4P2

Bus: (416) 321-2999
Fax: 321-1838
Res: (905) 472-1163
Cell: (416) 418-2736

LIVING

REALTY INC. • REALTOR

வீடுகள் விற்பதற்கும் வாங்குவதற்கும் எம்மை நாடுங்கள்.

டாக்டர் புஷ்பா வன்னித்தம்பி


குடும்ப பல் வைத்தியர்

சகல பல் வைத்திய சேவைகளுக்கும்




Scarborough

Tues, Wed, Fri, Sat & Sun
1200 Markham Rd.
Suite #119
Scarborough
(Markham & Ellesmere)
Tel: (416) 289-7187



Toronto

Mon, Thurs & Sat
397 Dawes Rd.
Toronto, Ont.
M4B 2E6
(416) 752-1221
(416) 693-9202



Cellular
416-727-4317

நான் ஒரு வழக்கறிஞர் இல்லை

எஸ்.கே.தீசன்



CRIMINAL கிறிமினல் வழக்குகள்

வாகன விபத்தில் பாதிக்கப்பட்டீர்களா ?



முதலில் வைத்தியசாலைக்குச் செல்லுங்கள்



S.K.THEESAN

எஸ். கே. தீசன்

பின் இவரை அழையுங்கள்




416-631-6322

DOG BITES

SLIP & FALL

LUCKY GROCERY

சகலவிதமான கிழக்கு, மேற்கு, இந்திய-இலங்கை உணவு வகைகளுக்கு நாடுங்கள்



East, West Indian,
Sri Lankan &
Canadian Groceries
Tropical Fine Foods, Milk
Fresh Vegetables, Fruits
Gift Items Etc.

4810 Sheppard Ave. E. Unit 221
Scarborough, ON M1S 4N5

Tel: (416) 321-8310
Fax: (416) 321-5847

Congratulation to
Tamils' Information
Seventh Anniversary!

PETER S. K. CHAN

B.Sc.' M.D.
FAMILY PHYSICIAN

243 Wellesley St.,E
Ground Floor
Toronto, ON. M4X 1G8
Tel: 928-1833

4631 Steeles Ave., East
(Near Kennedy)
Scarborough, ON. M1V 4S5
Tel: 293-6600

நாங்கள் எந்த மலிவு விலைகளையும் சமன் செய்வோம்

இப்பொழுது புதிய முகவரியில்
அருணா கடை


Aruna Food

East West Indian and Canadian Groceries

Video Convert System

அருணா பூ(f)ட்

3585 Keele Street
Unit - 11, North York
ON. M3J 3H5
Tel: (416) 638 9554
Fax: (416) 638 9584



WE WILL MATCH ANY SALES PRICE

சாரதாஸ்



We are Providing services in Converting Video to PAL/SECAM/NTSC Following day services!

- ஆண் பெண் சிறுவர், சிறுமியருக்கான ஆடை வகைகள்
- சிங்கப்பூரில் இருந்து தருவிக்கப்பட்ட தங்க நகைகள்
- வீடியோ பிரதிமாற்றம், NTSC - SECAM - PAL
- பழைய, புதிய திரைப்படங்கள் அனைத்து பொருட்களையும் நியாயமான விலையில் பெற்றுக் கொள்ள ஒரு ஸ்தாபனம் சாரதாஸ்!
- பட்டுவேட்டி, சாறிவகைகள், சாறி பிளவுஸ் மற்றும் எவர்சில்வர் பித்தளை பொருட்கள்

SHHARATHASS
560-C Parliament Str., Toronto, ON
Tel: (416) 934 0133 Fax: (416) 934 0133

DEL RAY
DRY CLEANERS

586-588 Parliament Street - Toronto - Ontario - M4X 1P8
(Just South of Wellesley)

WE DO

-*Expert alterations*
- *Silk & Linen specialist*
- *Invisible mending*
- *Leather & Suede*
- *Carpets & Area Rugs*
- *Drapes & comforts*

Hours: Mon - Fri 7:30 AM - 7:00 PM
Saturday 8:00 AM - 6:00 PM

416-925-7393
Serving the Cabbagetown Community since 1962

Best Wishes to
Tamils' Information

ST. JAMES DRUG MART

ST. JAMES TOWN

RUDY TUNG B.SC. PHM
Your Family Neighbourhood Pharmacist

PRESCRIPTION DELIVERY
Mon-Fri 10-8 PM
Saturday 10-6 PM
Sunday 1-5 PM



240 Wellesley St. East,
Toronto, ON. M4X 1G5
Tel: (416) 966-1028
Fax: (416) 966-1445

ஸ்ரீ விஜயலெட்சுமி வாசா

905 501-0011



905 501-0011

திருமணம், பதிவுத் திருமணம் மற்றும் அனைத்து இந்துமத கிரியைகள் சேவைக்கும், திருமணத்திற்குத் தேவையான அனைத்து தேவைகளுக்கும் எம்முடன் தொடர்பு கொள்ளவும்

மண்டபம், முத்துமணவறை, மண்டப அலங்காரம், பூமாலை, சடைநாகம், தலைப்பாகை, தலைநகை, பூஜைப் பொருட்கள், சுத்த சைவ உணவு ஆகிய அனைத்தையும் ஒரே இடத்தில் பெற எங்களை நாடுங்கள்.

வாகன தரிப்பிட வசதியுடன் கூடிய மரீனா மண்டபம் உட்பட திருமண மண்டபங்களையும் நாங்களே ஒழுங்குசெய்து தருகின்றோம்.

இந்துமத குரு, திருமணப் பதிவு அதிகாரி


சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜ குருக்கள்

(Hindu Priest & Registrar of Marriages)

5576 Cortina Cresent, Mississauga, ON. L4Z 3R2

புதிய தொலைபேசி இல: **905-501-0011**

அபிராமி
கேற்ரரிங்



தாய் நாட்டு மணம் குணம்
அறுசுவை உணவு வகைகள்!

சோறு கறி, கொத்துரொட்டி,
இடியப்பம், புரியாணி, பிட்டு,
தோசை, மசாலா, இட்லி, அப்பம்

தித்திக்கும் சிற்றுண்டி வகைகள்

உழுந்து வடை, கடலை வடை,
கட்லட், றோல்ஸ், Fish Bun, பூந்தி
லட்டு, கேசரி, மஸ்கட், பற்றீஸ்

உங்கள் எந்தவிதமான
கொண்டாட்டங்களுக்கும் விரும்பிய
உணவு வகைகள், சிற்றுண்டி
வகைகள் மணம் குணத்துடன்
சுடச்சுட கேற்றறிங் சேவைகள்
எம்மால் செய்து தரப்படும்.

ABBIRAMI
CATERING


TEL: (416) 266-5372, 266-6480


2619 Eglinton Ave. East, Scarborough, ON

N.K.S.

DRAPERIES & BLINDS

உங்கள் வீடுகளுக்குத் தேவையான
சகலவிதமான ஜன்னல் திரைகளையும்,
கேட்டின் துணிவகைகளையும் மிகவும்
மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்





Free Estimate
Free Installation

65%OFF

CUSTOM MADE

- Vertical Blinds
- Venetian Blinds
- Roller Blinds
- Draperies
- Shutters
- Curtains

Tel: 416-321-6420

3251 KENNEDY RD #2, SCARBOROUGH, ON





தமிழ் மக்கள் மத்தியில் புடவை
வியாபாரத்தில் முன்னோடிகள்

6 Kumars
Silk House

Importers, Wholesalers, Retailers

21ஆம் நூற்றாண்டின்
புத்தம் புதிய வெளியீடுகள்

தங்க நூல் சரிகைகளால் (Pure Gold Zari) இழைக்கப்பட்ட
தூய காஞ்சிபுரம் ரிசு கூறைகள்

தங்கம், வெள்ளி வேலைப்பாட்டுடன் இழைக்கப்பட்ட
தூய பனாரஸ் சற்றின் சில்க் கூறைகள் (Scotch Guard 3m Innovation)

New Designer பனாரஸ் சில்க் சாறிகள் (Scotch Guard 3m Innovation)

New Colors, New Designs, New Spirit and
a New Brand - For the New Millenium.

DAKSHINOTRI - Bridal, Traditionals, Innovation Resham Silk Sarees
ARAKUDI HandWoven Silk Sarees
MINAKARI Tulip Touch Silk Sarees

APEKSHA Exclusive HandWoven Silk Sarees

MINAKARI, ARAKUDI Work மைசூர் சில்க் சாறிகள்

Brush Paintwork, Spray Paint, Reshama Work, Sona Meena Work, Silver Tye &
Dye, Rich Pallu & Blouse Pcs உடன் கூடிய
மைசூர் சில்க் சாறிகள்

New Gm சாறிகள், New Lace அமர்க்களம் சாறிகள், New Samos Satin Shaded
சாறிகள், New மினி அபூர்வா சாறிகள்

அனைத்து வகையான பஞ்சாபி சூட் வகைகள் (சகல வயதினர்க்கும்)
சிம்ரன் சூட், மோனிசா சூட், அமர்க்களம் சூட், தேவயானி சூட்,
ஆஷா பூஷா சூட், லுங்கிசூட் என்னில் அடங்கா தெரிவுகள்

சிறுவர், சிறுமியருக்கான U.K Pants, Shirts, குர்த்தா, பட்டானி சூட், சர்வாணி

2000 ஆண்டு New கோலம், றங்கோலி, அபூர்வா, அனுராகா, ஐஸ்வர்யா, மதுரா காஞ்சி
சாறிகள் புதிய வெளியீடுகள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

1400 Gerrard St. E., Toronto, ON
(416) 465-7131

RAJAH (ROGER) BALENDRA

Your Expert Insurance Broker & Financial Consultant

All Types of Insurance Low Low Rates.

Representing over 100 life Insurance & 15 General Insurance Companies

- **Life**
- **Auto**
- **Home**
- **Business**

உங்கள் இன்சூரன்ஸ் தேவைகள் எதுவானாலும் குறைந்த செலவில் கூடிய பாதுகாப்புப் பெறத் தொடர்பு கொள்ளுங்கள்.

1987-2000


THIRTEENTH YEAR OF CELEBRATION

RAJAH (ROGER) BALENDRA

Insurance Broker

Tel: (416) 750 9450 **Fax: (416) 750 9509**

Hughes & Associates Insurance Brokers
2390 Eglinton Avenue E., Suite 205
(Near Kennedy Subway)
Scarborough, ON. M1K 2P5



பேன்சி பூக்கடை

தமிழ் மக்களின் பூக்கடை

வட்ட மணவறை எடுப்போருக்கு இரண்டு மண மாலைகள் இலவசம்.


ஸ்ரீலங்கா மணவறை எடுப்போருக்கு ஒரு ஆண்டாள் மாலை இலவசம்.

விசேஷம் - SPECIAL

மறுஅறிவித்தல் வரையும் கலியாண மாலை ஒன்று # 26.

காணேஷன் பூ ஒன்று 15 சதம்.

உலகின் எல்லாப்
பாகங்களுக்கும்
அவரவர் தேவை
விருப்பத்திற்கேற்ப
பூமாலைகள்
பூச்செண்டுகள்
போன்றவை
அனுப்பிவைக்க முடியும்.
பூ மணவறைகள்
விதம் விதமான
வடிவங்களில்
வீடியோ படம்
எடுக்கப்பட்டு
பார்வைக்காக
எங்களிடம்
உள்ளன.
பார்வையிட
விரும்புவோர்
நேரில் வந்து
பார்வையிடலாம்.
12 வருட காலமாக
கோவில்களுக்கும்
தமிழ் மக்களுக்கும்
விதம் விதமான
பூ மணவறைகள்



கனடாவில் முதன் முதலாக தமிழ் மக்களால் ஸ்தாபிக்கப்பட்ட பூக்கடை

PRINCESS PLAZA
1668 Victoria Park Av.,
North York, ON

தொடர்புகளுக்கு:
வரதன் P.Eng. அல்லது யோகலிங்கம்

TEL: 416-288-1419
FAX: 416-288-9311

மற்றும்
பூ அலங்காரங்கள்
வழங்கி
வருகின்றார்கள்.
இப்பொழுது
அமெரிக்காவின்
பிரதான நகரங்களான
அட்லான்ரா
(Atlanta)
நியுஜேர்ஸி
(New Jersey)
டிட்றோயிட்
(Detroit)
சிக்காகோ
(Chicago)
பவ(f)லோ
Buffalo
ஆகிய இடங்களுக்கு
எமது கிளைகள்
விஸ்தரிக்கப்பட்டுள்ளன.


ஓம்

ஸ்ரீகௌரி மங்கள சேவை

அனைத்து இந்து மத கிரியைகளுக்கும்
கனடிய திருமணப் பதிவு அதிகாரி, இந்து மதகுரு

சிவஸ்ரீ பஞ்சாட்ச விஜயகுமார குருக்கள்

(ஐயாமணி) புங்குடுதீவு 10
ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய பிரதம குரு



திருமணம், திருமணப் பதிவு
புதுமனை புகுதல்
கடை திறப்பு வைபவம்
புண்யாக வாசகம்
பூப்புனித நீராட்டு விழா
பூமாலை, ஆண்டாள் மாலை

சடைநாகம்
தலைநகை முழுவதும்,
முத்து மணவறை,
தலைப்பாகை
பந்தல் அலங்காரம்,
கல்யாணப் பொருட்கள்

முத்துச் சப்பரம்
ஆலயத் திருவிழா
ஆலய வைபவங்கள்
ஆகிய அனைத்துக்கும்
எப்போதும் எம்முடன்
தொடர்பு கொள்ளுங்கள்.

416-266-3333

628 E Birchmount Road Scarborough, ON. M1K 1P9

ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய தொலைபேசி இலக்கம்: 416-291-8500


WORLD TAMIL RADIO

Toronto GEETHAVAANI Montreal

ஆழமான புலமை

கீதவாணி

உலகத் தமிழ் வானொலி



2800 Eglinton Av. East., Scarborough, ON., M1J 2C9 Canada.
Toronto: 416-267-1100, Fax: 416-267-7707, Talkshow: 416-267-8255
Montreal: 514-497-8002, Talkshow: 514-733-9044

Tamils' Information
ISSN 1206-0585



Sri Sakthi Nakai Malikai

ஸ்ரீ சக்தி நகை மாளிகை

(416) 755-0559

1247 Ellesmere Rd., Scarborough, ON